
6



கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள்



கி.வா.ஜ.

கந்தரலங்காரச் சொற்பொழிவுகள்

பாகம் -6

கி.வா. ஜகந்நாதன்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ்ப் புத்தக நிறுவனம்)

உரிமை பதிவு
அல்லயன்ஸ்
முதற் பதிப்பு : 2003

மொத்த பக்கங்கள் (12+464) = 476

விலை: ரூ. 150.00

அல்லயன்ஸ் கம்பெனி
244, ராமகிருஷ்ணா மடம் சாலை,
தபால் பெட்டி எண்: 617,
மயிலாப்பூர், சென்னை - 600 004.
தொலைபேசி: 2494 1314

Laser Typeset by - **Print Point Graphics,** Chennai - 20.
Printed at - **Kay Em Packaging Industries,** Chennai - 14.

பதிப்புரை

'வாகீச கலாநிதி' கி.வா. ஜகந்நாதன் அவர்கள் எங்கள் குடும்பத்துடன் நெருங்கிப் பழகிய எழுத்தாளர்களுள் ஒருவர். எங்கள் நிறுவனர் வி. குப்புஸ்வாமி ஐயருக்கு, மூத்த குமாரர் போல் பழகி வந்தவர். அவருடைய நூல்கள் நமது நிறுவனத்தின் மூலம் மூன்று தலைமுறையினரால் தொடர்ந்து வெளியிடப்பட்டு வருகின்றன. இவர் தமிழ் இலக்கியத்தில் கரை கடந்தவர்; ஆன்மிகத்தில் பரம்பொருளைக் கண்ட ஞானி. எனவே இவரை 'ஞானப் புலவர்' என்று கூறினால், அது மிகையாகாது. இப்புவியில் அவ்வப்போது இப்படிப் பல 'ஞானப்புலவர்'கள் தோன்றிக் கொண்டே இருப்பதால்தான், நமது மொழிச் செல்வமும், ஞானச் செல்வமும், இறைவனது கட்டளைப்படி காப்பாற்றப்பட்டு வருகின்றது எனலாம். இப்போதும் நம்மிடையே திரு. சுகி சிவம், திரு. பி.என். பரசுராமன் போன்ற பல 'ஞானப்புலவர்கள்' இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் எல்லாம் சாதாரண மனித சக்தியை மீறி, இறைவன் திருவருளால், ஏராளமான சொற்பொழிவுகளையும்; நூல் களையும் இயற்றிக் கொண்டிருக்கிறார்கள். பிறவிப் பெருங்கடலை நீந்த நமக்கு வழிகாட்டியாக விளங்குகிறார்கள். இவர்களுடைய பேச்சுக் களையும், எழுத்துக்களையும் நாம் பின்பற்றி வந்தாலே போதும். அதுதான் அவர்கள் எல்லாம் பாமரராகிய நமக்குக் காட்டும் வழி.

சற்றேறக்குறைய 600 ஆண்டுகளுக்கு முன்பு இப்படி ஒரு 'ஞானப் புலவர்' இருந்தார். அவர்தான் அருணகிரிநாதர். இறைவனை நேரில் தரிசித்து அருளைப் பெற்றவர். இவர் அருளிய நூல்கள் எல்லாம் நமக்கு, பரப்பிரம்மத்தை உணரவைக்கும் வழிகாட்டிகள். இப்படி இவர் அருளிய நூல்களுள் 'கந்தர் அலங்கார'த்திற்கு விரிவான, அழகான, தெளிவான – தொடர் சொற்பொழிவை, ஒரு சமயம் கி.வா.ஜ. அவர்கள் நிகழ்த்தி னார்கள். அந்தச் சொற்பொழிவின் தொகுப்புதான் இந்நூல். இதைப் பற்றி அவரே, தனது முன்னுரையில் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார்கள்.

1986 வாக்கில் ஒரு நாள், அடியேன், கி.வா.ஜ. அவர்களுடன் 'புரூஃப்' பார்த்துக் கொண்டிருக்கும்போது, அவர் என்னிடம், ''நீ

என்னுடைய அலங்காரப் புத்தகங்களைப் போடுகிறாயா?'' என்று கேட்டார். ஒரு தெய்வப் புலவர் எழுதியதை மற்றொரு தெய்வப் புலவர் விளக்கமாகக் கூறிய நூலை 'வெளியிடுகிறாயா?' என்று கேட்கப்பட்ட வுடன் அதிர்ச்சி அடைந்தேன்; இவ்வளவு பெரிய பாக்கியம் நமக்கு உள்ளதா? என்று எண்ணி வியந்தேன். அன்று அவர் போட்ட பிள்ளையார் சுழி இன்றும் தொடர்ந்துகொண்டே போகிறது. எல்லாம் அவன் அருள்! 2005–ம் வருடம் கி.வா.ஜ. அவர்களின் நூற்றாண்டு வருகிறது. இந்தச் சமயத்தில் அவருடைய அனைத்து நூல்களையும், ஒன்றன்பின் ஒன்றாக வெளியிட, இறைவனைப் பிரார்த்திக்கிறோம். நல்லதையே எண்ணி னால், நல்லவைகளே நடைபெறும் என்பது ஞான வாக்கு. அதேபோல, இப்படிப்பட்ட நல்ல நூல்களை வெளியிட எண்ணி, அதன்படி நாங்கள் நடந்து வருவதால், இதைப் படிக்கும் வாசகர்களுக்கும் நல்லவைகளே சித்தி பெறும்.

இந்நூல் இப்போது நமது நிறுவனத்தின் மூலம் ஒரே தொகுப்பாக (6 பாகங்களாக) முதல் பதிப்பாக வெளிவந்தாலும், 1956 வாக்கிலிருந்து சிறுசிறு நூல்களாக, அவ்வப்போது வெளியிடப்பட்டதுதான்.

வாசகர்களே! கி.வா.ஜ. அவர்களின் ஞானப் பெருக்கையும், அவர் கையாண்ட தமிழ் அழகையும் நீங்களே படித்து ரஸியுங்கள்; சுவையுங்கள்; போற்றிப் பாதுகாத்து பயன்பெறுங்கள்.

– 'அல்லயன்ஸ்' **ஸ்ரீநிவாஸன்**

உள்ளுறை

1. மன மலர்

மன மலர் (11 – 30)

கடலின் மேல்மட்டமும் கீழ்மட்டமும் (11), நீர்மட்டமும் கரையும் (12), நான்கு படிகள் (13), ஞானியர் நிலை (15), பூசை (16), அருச்சனை (17), கையும் வாயும் (18), மூன்று கரணங்கள் (19), கடம்ப மலர் (20), அவன் அருளால் (21), திருவடிப் பூசை (21), அடையாளம் (22), வீமன் செய்த பூசை (23), முழுப் பூசை (24), மென்மை பெறல் (26), முருகன் (26), சூரன் வளர்தல் (27), சூரன் கொடுமை (28), சூர பயங்கரன் (29)

கலாபப் புரவியும் தனிவேலும் (31 – 41)

கற்பனைக் காட்சி (31), வீரர்களின் உறுதி (32), இராமன் செயல் (33), கழல்கட்டும் பெருமாள் (33), தேக்கம் (35), கலாபப் புரவி (36), இருவகைக் கோலம் (36), மயிலின் மிடுக்கு (37), எளிதில் முடித்தல் (38), வேலின் செயல் (39), வேலும் மயிலும் (40)

கைவரும் தொண்டு (42 – 67)

மரண பயம் (42), மன உறுதி (42), உறுதிக்கு ஏற்ற துணை (44), அமெரிக்காவில் கடவுள் நம்பிக்கை (45), வக்கீலின் அநுபவம் (46), திருவிளையாடற் கதை (47), புதிய கதை (49), பெண்மணியின் அநுபவம் (51), உறுதியான நம்பிக்கை (52), கைமேல் பலன் (52), முயற்சியும் பயனும் (53), எளிதிலே பயன் (54), வாழ்த்தும் தொண்டு (55), செல்வர்களின் நிலை (56), தேவர்களின் அச்சம் (57), கந்தன் (58), விண்ணப்பம் (59), துணையால் வரும் உறுதி (59), பயமற்ற நிலை (61), கல்வியால் பயன் இல்லை (63), உறவினரும் ஊராரும் (63), ஐவர் (64), மெய்விடும்போது (65)

எளிய வழி (68 – 84)

இரக்கம் (68), யோகம் (68), நீண்ட பயிற்சி (69), இயமம் (69), நியமம் (70), ஆசனம் (71), பிராணாயாமம் (71), மூன்று நாடிகள் (72), ஆறு

ஆதாரம் (73), யோகமும் அன்பும் (74), ஹடயோகம் (75), குழந்தையும் தாயும் (75), யோகிகளே! (77), யோகம் சாதனம் (78), எளிய வழி (78), குறத்தி பிரான் (79), உட்கருத்து (81), மிக எளிது (83)

அருட்கவசம் (85 – 98)

ஆயுதமயம் (85), அஸ்திரமும் சஸ்திரமும் (86), தெய்வங்களின் ஆயுதங்கள் (87), வேலின் பெருமை (88), முருகனது வேல் (89), யமன் (90), ஆயுதங்கள் (91), சங்கு ஆயுதமா? (92), கொடி (93), அருள் என்னும் கவசம் (94), வசிட்டர் கதை (95), எங்கே அணிவது? (96), கவலையும் யோசனையும் (97)

எமராசன் கடை ஏடு (99 – 109)

தனிச் சிறப்பா? (99), பொது உரிமை (100), தேவர்களும் மக்களும் (100), தேவர் வணங்குதல் (101), ஷடக்ஷரம் (102), அமராவதியிற் பெருமாள் (104), தேவர்கள் பெற்றது (105), ஆறுமுகம் (105), திருமுகம் ஆறும் காணுதல் (106), ஞான தபோதனர் (107), யமன் சீட்டு (108)

இணக்கமும் வணக்கமும் (110 – 118)

சேர்ந்து வாழ்தல் (110), நல்ல இனம் (111), நல்லன நினைத்தல் முதலியன (111), பெற்ற கருவிகள் (112), தீயோர் இணக்கம் (113), சிறிய ஊதியம் (114), பெரிய பயன் (114), நிர்மலன் (115), வேல் கண்ட வெற்றி (116)

2. இரு விலங்கு

இரு விலங்கு (133 – 146)

பிறப்பும் இறப்பும் (133), அதிகாரிகள் (134), பிரமன் (135), சிவபெருமான் இரண்டையும் போக்குதல் (136), வகுப்பவன் (137), வரலாறு (139), கதையின் கருத்து (139), கணக்கு (140), பங்கேருகன் (141), பழைய அநுபவம் (142), எம் கோன் (142), கடுமையான தண்டனை (144)

நாலாயிரம் கண் (147 – 165)

எண்ணைத் தொடர்ச்சி (147), பால் வாங்கிய கணவன் (147), திருச்செங்கோடு (148), ஆலய தரிசனம் (149), கண்ணாற் காணுதல் (150), குறியும் குணமும் (151), படமும் மங்கையும் (152), விக்கிரகங்கள் (152), பேரழகன் (153), உணர்ச்சியும் இன்பமும் (153), கண் போதாமை (155), மாலோன் மருகன் (156), மன்றாடி மைந்தன் (158), மேலான தேவன் (159), மெய்ஞ்ஞான தெய்வம் (160), மேதினியில் (160), அடையாளம் (161), காணும் காட்சி (162), நாலாயிரம் கண்கள் (163)

சால நன்று (166 – 182)

நினைத்தல் (166), திருநாமத்தின் பெருமை (167), வாழ்த்துதல் (168), கருமால் மருகன் (169), வள்ளியைக் களவு கொண்டவன் (169), குரங்கும் பூனையும் (170), முருகன் கவலை (170), களவும் கற்பும் (171), வள்ளி மணம் களவு மணம் (172), நல்ல களவு (174), சேவற் கொடியோன் (176), வேலன் (176), செங்கோட்டு வளம் (177), நயம் (178), சாதிப் பிரிவு (179)

தண்டையம் புண்டரிகம் (183 – 200)

நீர்வேட்டவன் (183), பொய்கை நீர் (184), பழைய அநுபவம் (184), அமுதப் பொய்கை (185), திருவடிச் சிறப்பு (186), தொண்டர் காணும் முறை (187), சுந்தரர் அநுபவம் (189), கண்டு அண்டி மொண்டு உண்ணுதல் (191), புண்டரிகம் (192), தண்டையம் புண்டரிகம் (192), ஞானமெனும் தண்டையம் புண்டரிகம் (193), ஞான விளக்கு (194), படிப்படியாக ஏறுதல் (194), முருகன் வீரம் (197), இருவகை அமைதி (197), குருசங்காரம் (199)

வலம்புரியும் கிண்கிணியும் (201 – 215)

இளமைத் திருவிளையாடல்கள் (201), ஒப்பு நோக்குதல் (202), ஊடலும் கூடலும் (203), நாரதர் செய்த கலகம் (204), பாரிசாதப் போர் (206), அந்த ஓசையும் இந்த ஓசையும் (208), முருகன் திருவிளையாடல்கள் (209), அருள் விளையாடல் (211), அறுமுகன் ஆடல் (213), விளையாட்டின் பயன் (214)

நல்ல வேட்கை (216 – 234)

தாயும் குழந்தைகளும் (216), பெரிய நோய் (216), காலநிலை (217), வேட்டல் (218), ஆசையும் மனநிறைவும் (219), புறக்காட்சி (220), இளமை மணம் (221), புறமும் அகமும் (223), புறங்காணுதலும் அகங்காணுதலும் (223), தூய நோக்கும் மாய நோக்கும் (225), காளையின் கதை (226), விரும்புவதற்கு உரியது (229), தடுத்தாட் கொள்பவன் (229), கள்ளச் சிறுமி (230), வள்ளியை வேட்டவன் (232)

3. தனி வெளி

தனி வெளி (243 – 268)

வாழ்க்கையின் தொடர்ச்சி (243), இப்போதே வீடு (245), அருணகிரியார் அறிவுரை (246), சிறிது நேரக் கிளுகிளுப்பு (247), நல்லோர் கூட்டுறவு (248), பருவத்துக்கு முன்னும் பின்னும் (249), முயற்சியும் அநுபவமும் (250), கல்வி (251), கேள்வியின் சிறப்பு (251), கேள்வியின் வகை (253), சிந்தித்தலும் தெளிதலும் (254), முயற்சியின் அவசியம் (255), சார்பின் பயன் (256), தனிமை (257), தனிமைக்குத் தடை (259), தனி வெளி (260), யான் – தான் (261), சொல் இறந்த நிலை (263), தனி வெளியில் சந்தித்தல் (263), கிருபாகரன் (264), திருமால் மருகன் (264), அடிமுடி தேடிய கதை (265), கதையின் கருத்து (266), பொருத்தம் (267)

இடம் கடந்த மயில் (269 – 279)

அங்கங்கள் (269), வாகனம் (269), இருவகைப் புகழ் (270), மயிற்பாட்டு (270), கொற்றவேள் மயில் (271), சேவல் (271), வீர நடையும் ஈர நடையும் (272), மேருவுக்கும் அப்பால் (273), சக்கரவாளம் (274), திசைக்கு அப்புறம் (276), இடம் கடந்த இடம் (276), இருவகை எல்லை (276), எல்லை கடந்த இன்பம் (277), கருத்து (278)

சேடன் பட்ட பாடு (280 – 295)

புராண வரலாறு (280), குணசீலர் வரலாறு (281), ஆதிசேடன் கர்வம் (286), மயிலின் கோபம் (286), வாகனத்தின் பெருமை (287), ஆசாரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தது (287), வாகன அடையாளம் (289), மயிலின் சிறப்பு (290), மயிலின் செயல் (290), செங்கோட்டு வளம் (291), சேடன் பட்ட பாடு (292), சார்பினால் வந்த தீங்கு (293)

கதியும் விதியும் (296 – 309)

கணியன் பூங்குன்றனார் பாட்டு (296), உயிரும் விதியும் (297), ஆற்றில் மிதப்பவன் (299), நதிதனை அன்ன வாழ்வு (300), உடம்புப் பொதி (302), வாழ்க்கையில் பற்று (302), உடம்பில் அருவருப்பு (303), திண்டாட்டம் (304), விதியை நோதல் (305), புகலிடம் (306), கந்தா (307), வேல் முருகா (307)

கொழுகொம்பு (310 – 322)

கூடி வாழ்தல் (310), பிறர் உதவி (310), ஆன்ம நெறி (311), பெரிய துணை (311), ஆதாரமும் ஆதேயமும் (312), பக்தர்கள் (312), அருணகிரியார் விண்ணப்பம் (313), கொடியும் பந்தரும் (313), மனம் உயர்தல் (314), உள்ளத்துக்கும் உயிருக்கும் உள்ள ஒற்றுமை (315), திருவடி (315), பிரபஞ்சச் சேறு (317), அவன் திருவுள்ளம் (319), மயில்வாகனன் (320)

விடுதலை (323 – 349)

எடுப்பும் முடிப்பும் (323), அருணகிரியார் கருணை (324), அநுபூதி அடையாளம் (325), அநுபவாதிசயம் (326), மூன்று நிலை (328), தொண்டரோடு சேர்தல் (329), செல்வத்தைப் பற்றுதல் (329), தியாகம் (330), பற்றுப் போகும் வழி (330), ஈகை (331), ஈகையின் வகை (333), போதம் இன்மை (334), முருகன் செய்த தந்திரம் (335), ஆச்சரியம் (336), வலியதும் எளியதும் (337), தொண்டர்களின் இயல்பு (338), கிரௌஞ்ச சங்காரம் (339), சத்சங்கம் (340), சிறையினின்றும் விடுதலை (341), சொல்லும் முறை (342), வினை நீக்கம் (343), தேகம் என்னும் சிறை (344), பிறவி அறுதல் (345), இலக்கண சமாதானம் (346), ஜீவன் முக்தி (346), சத்சங்கமும் ஜீவன் முக்தியும் (347), நிறைவு (348)

4. உள்ளம் குளிர்ந்தது

உள்ளம் குளிர்ந்தது (359 – 375)

உண்முக தரிசனம் (359), உருவமும் பாடலும் (360), குருவின் பெருமை (361), அநுபவமும் குருவும் (362), தெய்விகக் குருநாதர் (363), குமர குருபரன் (364), உள்ளம் குளிர்தல் (365), திருவடி (365), தண்டையும் சிலம்பும் (366), வடிவேல் (367), கிரௌஞ்ச வதம் (368), பழைய வரலாறு (370), கடம்பும் தடம்புயமும் (371), ஆறுமுகம் (373), கண்கள் (373), குருவடிவு (374)

இராப்பகல் அற்ற இடம் (376 – 394)

அநுபவமும் கருணையும் (376), தராசின் நிலை (377), சுவரும் சித்திரமும் (377), சுகமும் துக்கமும் (378), நடுநிலை (379), அக இருளும் புற இருளும் (380), மூன்று மனநிலை (381), சினிமாவும் மனநிலையும் (382), கானல் உவமை (382), மெய்யும் பொய்யும் (383), அறிவும் அறியாமையும் (383), இரண்டு விதத் தடை (384), தூக்கம் (385), சகல கேவலம் அற்ற நிலை (385), துதித்தல் (386), பற்றுக்கோடு (386), தாள் அருளாய் (388), திருமால் முருகனைப் புகழ்தல் (389), திருமாலின் பெருமை (390), கசேந்திரன் வரலாறு (391), படியின்மேற் படி (391), பராக்கிரமம் (392), நிருத சங்கார பயங்கரன் (393)

கண்ணாரக் காணும் காட்சி (395 – 408)

புறத்தோற்றமும் அகத்தோற்றமும் (395), உருவெளித் தோற்றம் (396), மனோபாவம் (397), இராமாயணக் காட்சி (398), அருணகிரியார் அநுபவம் (398), மூன்று நிலை (399), கனவுக் காட்சி (400), லிங்கமும் வேலும் (401), திருமுகம் முதலியன (402), செங்கோட்டு வேலன் (402), கவிஞர் கற்பனை (404), அபிராமிபட்டர் அநுபவம் (404), அநுபவம் வர வழி (405), பிடித்த படமும் காட்டும் படமும் (407)

பயபக்தி (409 – 418)

பயம் ஓரிடம் பக்தி வேறு இடம் (409), மரண பயம் (410), அறிவும் உணர்வும் (411), என்று வருமோ? (413), ஆவிக்கு மோசம் (414), முன்னை வினை (415), திருத்தணி (416), துவஜம் கட்டினவன் (417)

இருதலைக் கொள்ளி எறும்பு (419 – 432)

வாழ்க்கைச் சித்திரம் (419), நட்பும் பகையும் (419), பற்றின்றி வாழ்தல் (420), பற்றினால் அமைதியின்மை (421), இருதலைக் கொள்ளி எறும்பு (422), முத்தொள்ளாயிரப் பாடல் (423), மணிவாசகர் வாக்கு (423), அருணகிரியார் பாடல் (424), இருதலை (424), தர்ம சங்கடங்கள் (426), பல இரட்டைகள் (427), பற்று நீங்க வழி (428), திருச்செந்தூர் (429), சேவகன் (430), மாணிக்கம் (431)

மெய்த்துணை (433 – 441)

அஞ்சாமையும் அச்சமும் (433), மரணம் (434), அஞ்சாமைப் பயிற்சி (435), அருணகிரியார் செய்த உபகாரம் (435), மன இயல் அறிஞர் கருத்து (436), காலன் (437), அஞ்சாமைக்குக் காரணம் (438), ஆலம் குடித்த பெருமான் (439), அறுமுகவன் (439), வேலும் கையும் (440)

பயன் (442 – 464)

வாக்கினால் வரும் குற்றம் (442), வாக்கின் பெருமை (442), பெரியவர்கள் திருவாக்கு (443), திருவாக்கின் பயன் (444), அலங்காரத்தின் பயன் (445), மூன்றுவகைப் பயன் (446), நமக்குப் பயன் (446), அருணகிரியார் கால நிலை (447), வேந்தரால் வரும் அச்சம் (448), மரண பயம் (449), நரகத் துன்பம் (449), நோயால் வரும் துன்பம் (450), விலங்கின் அச்சம் (451), கற்று அறிந்தவர் (452), ஒரு கவி (453), முடிந்த பயன் (454), அபய வரதம் (455), உண்மை நிகழ்ச்சி (456), வாழ்வில் அமையும் பயன் (463)



'தமிழ்க்கவி பூஷணம்'
'திருமுருகாற்றுப்படை அரசு'
'வாகீச கலாநிதி'

கி.வா. ஜகந்நாதன்

எழுதிய
அனைத்து நூல்களும் -
அவரது பேச்சுக்களின்
ஒலி நாடா
மற்றும்
குருந்தகடுகள் (பல)
வெளிவர
உள்ளது
என்பதை
மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக்
கொள்கிறோம்

- பதிப்பகத்தார்



முகவுரை

அருணகிரிநாதப் பெருமானுடைய அருள்வாக்கில் ஈடுபட ஈடுபட அவர் சிறந்த அநுபூதிமான் என்பது நமக்கே புலனாகும். அவருடைய திருவாக்கு உள்ளத்திலே ஊறஊற ஏதோ ஒன்று உள்ளத்தைக் கிளுகிளுக்கச் செய்கிறது. முருகனுடைய திருவருள் அநுபவத்தை, முயன்றால் நாமும் பெறலாம் என்ற நம்பிக்கை உண்டாகிறது. நம்முடைய நிலைக்கு இறங்கி வந்து அந்தப் பேராளர் முருகனை இறைஞ்சி உருகி வேண்டிக்கொள்ளும் பாடல்களில் ஒன்றிவிட்டால் நமக்காகவே அந்தப் பாடல்கள் அமைந்தனவோ என்று தோன்றுகிறது.

அருணகிரிநாதர் அநுபவம் பெற்ற காலம் வேறு, நிலை வேறு, நம்முடைய காலம் வேறு, நிலை வேறு என்ற எண்ணம் சிறிதும் தோன்றுவதில்லை. அந்தப் பெரியார் நம்முடன் இருந்து நம்மையும் முருகன் சந்நிதிக்கு அழைத்துச் சென்று நம்மையே வேண்டிக் கொள்ளச் சொன்னால் எப்படி இருக்கும்? அப்படி ஓர் உணர்ச்சி எழுகிறது, ஆம்; அவர் எல்லாக் காலத்துக்கும் பொது வாகவே பாடி வைத்திருக்கிறார். நமக்குக் காமம் இல்லையா? பொருளாசை இல்லையா? மனம் போன போக்கிலே செல்லும் இயல்பு இல்லையா? இவை மனிதன் உள்ள அளவும் இருப் பவை; உள்ள இடங்களிலெல்லாம் இருப்பவை. ஆதலால் நமக்கும் இந்த விண்ணப்பப் பாடல்கள் பொருத்தமாகவே இருக்கின்றன.

இறைவனைப் பற்றிய பெருமையை எடுத்துச் சொல்லி அவன்பால் மதிப்பு உண்டாகும்படி சில பாடல்களை அருளியிருக் கிறார் அருணை முனிவர். குற்றங்களை எடுத்துச் சொல்லி, அவற்றைப் போக்கி ஆட்கொண்டருள வேண்டும் என்று சில பாடல்களில் விண்ணப்பம் செய்து கொள்கிறார். அவனுடைய திருவடிகளே புகலாகப் புகுகின்றார். அவனுடைய அருளினால் யமபயம் இல்லாமல் போகும் உண்மையைச் சொல்கிறார். மனிதன் இறைவனை அணுகிப் பக்தி செய்து மயல் நீங்கி மெய்யறிவு

பெற்று அவன் அருளில் ஆழ்ந்து இன்புறும் அருள் நெறியில் பல பல நிலைகள் உண்டு. தனித்தனியான அந்த நிலைகளில் உள்ள வெவ்வேறு பக்குவத்தினருக்கும் ஏற்ற வகையில் வெவ்வேறு பாடல்களை அருளியிருக்கிறார்.

அலங்காரப் பாடல்கள் மிகப் பெரிய திருப்புகழ்ப் பாடல் களைப் போலின்றியும் மிகச் சிறிய அநுபூதிப் பாடல்களைப் போலின்றியும் நடுநிலையில் இருக்கின்றன. மனத்தில் தரிக்க எளியனவாய்ப் பொருள் விளங்குபவையாய் உள்ளன. ஆதலின் ஆண்டவன் சந்நிதியில் சென்று நின்றால் பொருளுணர்ந்து பாடி உருகலாம். பயன் பெறலாம். வீட்டிலிருந்து பாராயணம் செய்தும் நலம் பெறலாம். நம்முடைய மன இயல்புக்கு ஏற்றவண்ணம் சில பாடல்கள் மிக மிகச் சுவையாகத் தோற்றும். இலக்கியச் சுவையைச் சொல்லவில்லை. நம்முடைய பக்குவம் அறிந்து நமக் காகவே அமைந்தவை போல இருப்பதனால் நம் உணர்ச்சியை எளிதிலே கிளரச் செய்யும் இயல்பையே சொல்கிறேன்.

முருகன் அடியாராகிய ஓர் அன்பர் ஒரு நாள் என்னிடம் திருப் புகழ் முதலியவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். நானும் அவற்றைப் பற்றிய என் கருத்துக்களைச் சொல்லிக் கொண் டிருந்தேன். அப்போது அவர் என்னை ஒரு கேள்வி கேட்டார்: ''திருப் புகழில் உயிர்நிலையான பாட்டு எது?'' என்றார். அவருடைய கேள்விக்கு உடனே விடை சொல்லவில்லை. சிறிது யோசித்தேன். ''உயிர்நிலைப் பாட்டு இன்னது என்பதை நம்மால் எப்படிச் சொல்ல முடியும்? அருணகிரிநாதரோ, ஆண்டவனே அல்லவா சொல்ல வேண்டும்?'' என்று கூறினேன்.

''உங்களுக்கு எந்தப் பாடல் மிகவும் பிடித்தது? அதைத்தான் கேட்கிறேன்'' என்றார்.

நான் சொன்னேன். அலங்காரம், அநுபூதி ஆகியவற்றிலும் எது எது அத்தகையது என்று கேட்டார். என் கருத்தைச் சொன் னேன். அந்தக் கேள்விகளையே அவரிடம் கேட்டேன். அவர் தமக்கு விருப்பமான பாடல்களைக் கூறினார்: அந்தப் பாடல் களைச் சொல்லும்போது ஒரு தனியான இன்பம் உண்டாவதாகச் சொன்னார். நான் சொன்ன பாடல்கள் அல்ல அவை. அவர் சொன்ன அத்தனையும் வேறு.

இதிலிருந்து ஓர் உண்மை எனக்குத் தெளிவாயிற்று. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு பாடலில் மனம் கரைகிறது என்றும், அது அவரவர் மனப்பாங்கைப் பொறுத்தது என்றும் அறிந்து கொண்டேன்.

இப்படிப் பார்த்தால் ஒவ்வொரு பாட்டும் ஒவ்வொரு மனப் பாங்குடையவருக்கு உகந்ததாக இருக்கும். அதனால், எல்லாப் பாடல்களுமே பயனுள்ளவை, உணர்ச்சியை ஊட்டுபவை என்று தெளிய வேண்டும்.

மனித மன இயல்புகள் கணக்கில் அடங்காதவை. அவ் வியல்புகளை உணர்ந்தவர் அருணகிரிநாதர். அவர் பாடிய பாடல் கள் அந்த வெவ்வேறு இயல்புகளுக்கு ஒத்தனவாக அமைந் துள்ளன. எல்லாப் பாடல்களையும் யாவரும் பாடலாம்; பாராயணம் செய்யலாம். ஆனால் சில பாடல்களைச் சொல்லும்போது உள்ளம் உருகும். அவற்றை அடிக்கடி சொல்லிப் பழக வேண்டும். அவற்றிலும் ஏதாவது ஒரு பாட்டு இன்னதென்று சொல்ல முடியாத உணர்ச்சியை உண்டாக்கும். அதை நன்றாக மனத்தில் எழுதிக் கொண்டு சமயம் நேரும்போதெல்லாம் பாட வேண்டும; சிந்திக்க வேண்டும். அப்படிச் செய்வதே ஒருவகை யோகம். மனம் கரைந்து ஒருமைப்பட இப்பழக்கம் வழி செய்வதனால் யோகம் என்று சொல்லலாம். முருகன் அடியார்கள் தம் அநுபவத்தில் உணரும் செயல் இது.

தமிழில் எத்தனையோ பிரபந்தங்களைப் பல புலவர்கள் பாடியிருக்கிறார்கள். மிகவும் சுவையான, சொற்பொருள் இன்பங் களை நல்குவனவான பாடல்கள் பல அவற்றில் உண்டு. அவற்றைப் படிப்பதனாலும் பக்தி வளரலாம். ஆனால் அருளாளர் கள் பாடிய பாடல்களில் உள்ளம் தோய்ந்தால் விளையும் பயன் மிகப் பெரிது. அருணகிரிநாதர் அருளிய பாடல்களில் தோயத் தோய உள்ளத்திலே தோன்றும் உணர்ச்சியை இத்தகையதென்று சொல்லிக் காட்ட முடியாது. அதுவே ஒரு வழிபாடாக, அநுபவத் துறையிலே செலுத்தும் சாதனமாக மேற்கொள்வதற்குரியது.

★ ★ ★

இந்தப் புத்தகம் அலங்காரவரிசையில் 16-ஆவது வெளியீடு. இதில் கந்தர் அலங்காரத்தில் உள்ள 82-ஆம் பாடல் முதல் 88-

ஆம் பாடல் வரையில் உள்ள ஏழு பாடல்களுக்கு விளக்கத்தைக் காணலாம்.

சமீபத்தில் ஒரு வடமொழிப் புலவர் முருகனைப் பற்றிப் பேசினார். அப்போது அவர் சிலேடையாக ஒன்றைச் சொன்னார். 'நம்முடைய மனத்தை முருகன் திருவடியில் அர்ப்பணம் செய்ய வேண்டும். அவன் பாதங்களில் மலரை இட்டு அர்ச்சனை செய் வதற்கு அதுதான் தாத்பர்யம். ஸுமனஸ் என்பதற்கு நல்ல மனம் என்றும் மலர் என்றும் இரண்டு பொருள்கள் உண்டு. பகவான் பாதத்தில் ஸுமனஸை வைக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். மனசையும் வைக்க வேண்டும், மலரையும் இட வேண்டும் என்று அந்த வார்த்தைக்கு அர்த்தம் சொல்லலாம்'' என்றார்.

அந்த வடமொழி வித்துவானுக்குக் கந்தர் அலங்காரம் தெரியாது. அவர் இந்தக் கருத்தை எந்த வடமொழி நூலிலிருந்து தெரிந்து சொன்னாரோ அறியேன். ஆனால் அவர் சொற் பொழிவைக் கேட்டபோது எனக்குக் கந்தர் அலங்காரச் செய்யுள் தான் நினைவுக்கு வந்தது.

''தகட்டில் சிவந்த கடம்பையும்
நெஞ்சையும் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தருளாய்''

என்பதில் அருணகிரியார் அந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார். மணமலரை ஆண்டவன் அடியில் இடும் அன்பர்கள் மன மலரையும் இட்டால்தான் அருள் கிடைக்கும் என்பதை அப்பாட்டில் சொல்லுகிறார். இந்தப் பகுதியைத் தொடக்கமாக உடைய பாட்டின் விளக்கம் **'மனமலர்'** என்ற பெயரோடு இந்த நூலின் முதல் கட்டுரையாக இருக்கிறது.

நெஞ்சை முருகன் தாளிணையில் புகட்டிப் பணி செய்ய வேண்டும் என்ற கருத்தை,

''காட்டில் குறத்தி பிரான்பதத்தே கருத்
தைப் புகட்டில்
வீட்டில் புகுத மிக எளிதே'' *(85)*

என்ற பாட்டிலும் உணர்த்துகிறார். அந்தப் பாட்டின் விளக்கம் **''எளிய வழி''** என்னும் தலைப்பில் வருகிறது.

இரண்டாவது பாட்டு முருகன் சூரசங்காரம் செய்த வரலாற்றை உணர்த்துகிறது. அந்தப் பாட்டில் மயிலும் வேலும் வருகின்றன.

மூன்றாவது மிகவும் பயனுள்ள பாட்டு. தம்முடைய உயிர் உடம்பினின்றும் பிரியும் வேளையில் தடுமாற்றமின்றி இறைவன் திருவருள் நினைவோடு உயிர் விடவேண்டுமென்று பெரியோர் விரும்புவர். வாழ்நாள் முழுவதும் அன்பு செய்ததன் பயன் அப்போது தெரியும். உண்மை அன்பா, போலி அன்பா என்பதைத் தெரிந்து கொள்ளும் சமயமும் அதுவே. ''இறைவனே, உன் சரணமல்லால் எனக்குப் புகல் இல்லை. உயிர் விடும்போது என்னை ஆண்டு கொள்ள வேண்டும்'' என்பதை அப்போதைக்கு இப்போதே சொல்லிவைப்பது அருளாளர்களின் வழக்கம். அந்த முறையில் அருணகிரியார் பாடும் பாட்டு இது:

''மைவரும் கண்டத்தர் மைந்தகந் தாஎன்று
வாழ்த்தும் இந்தக்
கைவரும் தொண்டன்றி மற்றறி யேன்கற்ற
கல்வியும் போய்ப்
பைவரும் கேளும் பதியும் கதறப்
பழக நிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும் போதுன்
அடைக்கலமே.'' *(84)*

இப்பாடலை நாம் ஒவ்வொரு நாளும் பாராயணம் செய்தால் இறைவன் அருள்வான் என்ற நம்பிக்கை ஏற்படும். இது உயிரைக் காத்துக்கொள்ள உதவும் பாட்டு.

நான்காவது பாடல் யோகிகளை விளித்துச் சொல்வது. ''ஏன் நீங்கள் மிகவும் வருத்தமுற்று மூச்சை அடக்கித் துன்புறுகிறீர்கள்? முருகன் திருவடியில் உள்ளத்தைச் செலுத்தி அன்பு செய்யுங்கள். வீடு எளிதிலே கிடைக்கும்'' என்று எளிய வழியைக் காட்டுகிறார் இந்தப் பாட்டில். அருணகிரியார் தம் நூல்களில் பல இடங்களில் யோகிகளைக் கண்டு இரங்கும் முறையில் பாடியிருக்கிறார். வேறு பெரியவர்களும் பாடியதுண்டு. தமிழில் கலம்பகம் என்று ஒருவகைப் பிரபந்தம் உண்டு. அதில் **'தவம்'** என்பது ஓர் உறுப்பு. அது, உடம்பை ஒறுத்துத் தவமும் யோகமும் செய்பவர்களைக்

கண்டு, "ஏன் இப்படிச் செய்கிறீர்கள்? இதனாற் பயன் ஒன்றும் இல்லையே! இறைவன்பால் அன்பு செய்யுங்கள்" என்று சொல் வதாக அமைந்திருக்கும்.

"காயிலை தின்றும் கானில் உறைந்தும்
கதிதேடித்
தீயிடைநின்றும் பூவலம் வந்தும்
திரிவீர்காள்
தாயினும் அன்பன் பூமகள் நண்பன்
தடநாகப்
பாயல் முகுந்தன் கோயில் அரங்கம்
பணியீரே"

என்பது **திருவரங்கக் கலம்பகம்.** இப்படியே பிற கலம்பகங் களிலும் வருவதைக் காணலாம்.

இந்தப் பாட்டைக் கொண்டு யோகம் என்பதே வெறுப்பதற் குரியது என்று கொள்ளக்கூடாது. யோகம் புரிவது மிகவும் அருமை யான செயல். அதில் ஈடுபட்டு வெற்றி பெற்றவர் மிகமிகச் சிலர். வெற்றி பெறாது தடுமாறினவர்களே பலர். ஆதலின் அந்தப் பெரும்பான்மையினரின் நிலையைக் கண்டு இரங்கிச் சொன்ன பாடல்கள் இவை போன்றவை.

ஐந்தாவது பாடலும் ஆறாவது பாடலும், முருகனை நம்பி வழிபட்டவர்களுக்கு யமபயம் இல்லை என்பதை உணர்த்துபவை. முதற்பாட்டில் தமக்கு யமபயம் இல்லையென்று சொன்னவர், அடுத்த பாட்டில் முருகனுடைய தரிசனத்தைப் பெற்ற அன்பர்கள் அனைவருக்குமே அப்பயம் இராதென்று கூறுகிறார்.

ஏழாவது பாடல் **'குணம் கெட்ட துட்டனை ஈடேற்றுவாய்'** என்று வேண்டிக்கொள்ளும் உருவத்தில் இருப்பது. குணம் கெட்ட துட்டர்களாகிய நமக்காக அருணை வள்ளல் தம்மை அப்படிக் கூறிக் கொள்கிறார்.

இந்த ஏழு பாடல்களில் முருகனைப் பற்றிய செய்திகள் பல வருகின்றன. அவன் தாளிணையும், அச்சிற்றடியில் பூங்கழலும், அங்கே இடும் கடம்ப மலரும், அவனுடைய திருமுகம் ஆறும் காட்சி தருகின்றன. அவனுடைய கலாபப் புரவியையும், தனி வேலையும், சுடர்க்குடுமிக் காலாயுதக் கொடியையும் காண்கிறோம்.

அவன் சூரசங்காரம் செய்த வீரச் செயலை வருணிக்கிறார் அருணகிரியார். அண்டமுகட்டைப் பிளந்து வளர்ந்து இந்திர லோகத்தையும் எட்டிப் பொருதான் சூரன்; அவனை அஞ்சச் செய்தான் முருகன். முருகன் மயிலின் மேல் ஏறின அளவிலே சூரன் தளம் முறிந்ததாம். வேலை வாங்கி விட்டவுடன் எட்டு மலைகளும் வழிவிட்டனவாம். காக்கையும் கழுகும் போட்டி போட்டுக் கொத்த, பேய்கள் கூத்தாட அசுரர்களைக் கொன்றது, அவன் விட்ட விக்ரம வேலாயுதம்.

அவனுடைய வீரச் செயலால் அண்டர் சிறை மீள்கின்றனர்: குமரா சரணம் சரணம் என்று துதிக்கின்றனர்.

சூரபயங்கரன், இமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே பூங்கழல் கட்டும் பெருமாள், மைவரும் கண்டத்தர் மைந்தன், கந்தன், குறத்திபிரான், வேலாயுதன், கந்தச்சுவாமி, காலாயுதக் கொடியோன், குமரன், அமராவதியிற் பெருமாள், நிர்மலன் என்று முருகனைச் சொல்கிறார்.

★ ★ ★

தேனாம்பேட்டை முருகன் திருக்கோயிலில் வாரந்தோறும் வியாழனன்று கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள் செய்து வந்தேன். அந்நூல் நிறைவுபெற்று அப்பால் கந்தர் அநுபூதிக்கு விளக்கவுரை சொல்லி வந்தேன். அந்த நூலும் நிறைவேறியது. என் சொற்பொழிவுகளைப் பொறுமையுடன் சுருக்கெழுத்தில் எடுத்து உதவியிருக்கிறார் என் உழுவலன்பர் **சிரஞ்சீவி அனந்தன்**. அவர் பின்பு தட்டெழுத்தில் மாற்றித் தந்த அந்தச் சொற்பொழிவுகளை ஒரு முறை பார்த்துச் செப்பஞ் செய்து புத்தக வடிவில் வெளியிடத் தொடங்கினேன். சொற்பொழிவுகள் முடிந்தும் இந்த நூல்வரிசை இன்னும் நிறைவுறாமல் இருப்பதற்கு என் குறையே காரணம்.

பல அன்பர்கள் இந்த அலங்கார மாலை எப்போது நிறைவெய்தும் என்ற ஆவலோடு இருக்கிறார்கள் என்பதை எளியேன் அறிவேன். சிற்றறிவும் வரம்பிலடங்கிய சிறிய ஆற்றலுமுடையவன் ஏழையேன் என்பதை ஒவ்வொரு கணமும் உணர்கிறேன். முருகன் திருவருள் துணை நின்று இந்த மாலையை நிறைவேற்றுவிக்க வேண்டும்.

முற்றாற்றல் உடையபிரான் திருமுருகன்
திருவடியை முன்னி ஏழை
சிற்றாற்றல் உடையேனிவ் வலங்கார
விளக்கவுரை செய்யப் புக்கேன்;
வற்றாக்கல் யாணகுணத் தொடுகருணை
யுடைய அன்னான் வழங்கும் ஆற்றல்
உற்றால்இம் மாலைநனி முடியுமென
மிகநம்பி உள்ளே னம்மா.

கி.வா. ஜகந்நாதன்

மனமலர்

மன மலர்

1

ஆண்டவனை அணுகி அவனுடைய அருளைப் பெற்று என்றும் மாறாத இன்பக் கடலில் ஆழ வேண்டும். இது இந்த நாட்டுச் சமயங்களின் லட்சியம். இந்த லட்சியம் எளிதில் கை கூடாது. அநாதி காலமாகப் பிறவியில் உழன்று வருகிற உயிர்களுக்குப் படலம் படலமாக அழுக்கேறிக் கிடக்கிறது. அந்த அழுக்கின் கனத்தினால் உயிர் எங்கோ ஆழ்கடலின் அடித்தளத்தில் கிடக்கிறது. அந்த அழுக்குப்படலம் சிறிது போனால் உயிர் சற்றே மேலே வருகிறது. மறுபடியும் அழுக்குப் படிந்தால் மறுபடியும் கீழே போய்விடுகிறது. இந்தப் போரில் அழுக்குக் கரைவது மிகுதியாக இருந்தால் அது மெல்ல மெல்ல மேலே வருகிறது. அது முன்பு இருந்த நிலையைவிட மேலே வருகிறதென்று சொல்லலாமேயன்றி, ஆழம் முழுவதும் கடந்து நீர்மட்டத்துக்கு வந்துவிட்டதாக எண்ணக்கூடாது. இன்னும் நீர்மட்டத்துக்கும் அதற்கும் எவ்வளவோ தூரம் இடையே இருக்கிறது.

கடலின் மேல்மட்டமும் கீழ்மட்டமும்

மேலே வரும் பான்மை தொடர்ந்து இருந்தால் கீழ் மட்டத்திற்கும் அதற்கும் உள்ள தூரம் மிகுதியாகிக் கொண்டே வரும்; மேல் மட்டத்திற்கும் அதற்கும் உள்ள தூரம் குறைந்து கொண்டே வரும்.

உயிர் ஆரோகண கதியில் சென்று கொண்டேயிருந்தால் அதன் நிலை உயர்ந்துகொண்டே வரும். ஓரறிவுயிராக இருந்த நிலை மாறி அடுத்த படியை அடையும்; ஈரறிவுயிரில் சற்றே இழிந்தவையாக உயரும்; பின்பு அந்த இனத்தில் சிறந்ததாக உயரும். இந்தப் போக்கிலே தடையின்றி அது வளருமானால்,

மறுபடியும் சறுக்கி விழும் நிலை வராமல் இருந்தால், அது மூவறிவுயிராகி நாலறிவுயிராகி ஐந்தறிவுயிராகிக் கடைசியில் ஆறறிவுயிராகிய மனிதப் பிறவியை எடுக்கும். அப்போதுதான் அது நீர்மட்டத்தை அடைந்ததாகும்.

கடலின் ஆயிரக்கணக்கான மைல் ஆழத்திலிருந்து மெல்ல மெல்ல அழுக்குக் குறைவதனால் மேல் ஏறி வந்து மேல் மட்டத்தை அடைவதற்கு எத்தனையோ பிறவிகள் எடுத்திருக்க வேண்டும். அவ்வளவையும் எடுத்து எடுத்து வளர்ந்து வந்தாலும் மனிதப் பிறவி கிடைத்ததேயன்றி இன்னும் லட்சியத்தை அடையவில்லை. பிறவியென்னும் கடலைத் தாண்டி முத்தி என்னும் கரையை அடைய வேண்டும்.

நீர்மட்டமும் கரையும்

நீர்ப் பரப்பின் மேல் மிதப்பதனால் மனிதன் உயர்ந்தவன் என்று சொல்லலாம். மற்றப் பிறவிகளை நினைத்தால் அவன் உயர்ந்தவன்தான். ஆனால் அவன் அடைய வேண்டிய கரையை நினைத்தால் அவன் தாழ்ந்தவனாகவே தோற்றுகிறான். ஆழ் கடலின் அடித்தளத்திலே இருந்த உயிருக்கு நீர்மட்டம் எங்கே இருக்கிறது என்று தெரியாது; அதை அளந்தறியும் ஆற்றல் அதற்கு இல்லை. மனத்தாலும் கற்பனை செய்ய முடியாது. கீழ்மட்டத்துக்கும் மேல் மட்டத்துக்கும் எத்தனை தூரமோ அதைவிடப் பன்மடங்கு தூரம், இப்போது மனிதன் மேல் வந்து மிதக்கும் இடத்துக்கும் கரைக்கும் இடையே இருக்கிறது. ஆதலின், 'மேலே வந்துவிட்டோம்; இனிக் கரையை அடைந்து விடலாம்' என்று எளிதாக நினைத்துவிட முடியாது. கரை எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை. எப்படி இருக்கும் என்றும் தெரியவில்லை. எந்தத் திக்கிலே இருக்கிறதென்பதுகூடத் தெரியாத நிலையில் மனிதன் இருக்கிறான். நீர் மட்டத்தின்மேல் மிதப்பது தான் அவன் விருப்பம் என்றால் அவன் இதோடு திருப்தியுறலாம்.

ஆனால் அந்தத் திருப்தியும் நெடுநேரம் நில்லாது. கரையை நோக்கிச் செல்ல முயலாமல் சும்மா இருந்தால் அவன் மீண்டும் கீழே ஆழ வேண்டியதுதான்; மறுபடியும் விலங்காகப் பிறக்க வேண்டியதுதான். ஆதலால் கரை தெரிகிறதோ இல்லையோ, கரை உண்டென்ற நம்பிக்கையுடன் முயற்சி செய்ய வேண்டும்.

அப்படிச் செய்யும்போது அவன் கை சோரலாம்; இடையிலே பல தடைகள் உண்டாகலாம். அவற்றைப் போக்கும் உரன் வேண்டும். மெல்ல மெல்ல முன்னேற வேண்டும். சிறிதும் சலிக்காமல் சளைக்காமல் முன்னேறினால், சரியான நெறியில் முன்னேறினால், அவனுக்குக் கரை புலனாகும். வெறும் கற்பனையாகக் கரையைப் பற்றி எண்ணமிட்ட அவனுக்கு அதன் உண்மை தெளிவாகும். அது கண்களில் பட்டுவிட்டால் பின்பு அவனுடைய ஆர்வமும் ஊக்கமும் பல பல மடங்கு மிகுதி யாகும்; முயற்சியும் உரனும் பெருகும். கடைசியில் கரையையே அடைந்துவிடுவான்.

இப்போது நாம் நடுக்கடலில் இருக்கிறோம். முத்திக் கரையைச் சேர வழி தெரியாமல் திகைக்கிறோம். இறைவனை அணுக வேண்டும் என்று பெரியோர்கள் சொல்லியிருக்கிறார்கள். நமக்கும் அவனுக்கும் நெடுந்தூரம் என்று தெரிகிறது. மெல்ல மெல்ல முயன்றால் எதையும் சாதித்துவிடலாம். இன்ன இன்ன படி முயல வேண்டும் என்றும் ஆன்றோர்கள் அறிவுறுத்தியிருக் கிறார்கள்.

நான்கு படிகள்

இறைவனை அடைவதற்கு நான்கு படிகள் உண்டு. ஒவ்வொன்றாகத் தாண்டி முடிவில் இறைவனென்னும் பொருளை – இன்பமயமாக அவன் இருக்கும் இடத்தை – அடைய வேண்டும். படியை வடமொழியில் சோபானம் என்பார்கள். பரமபத சோபான படம் என்ற ஒரு படத்தை வைத்து விளையாடு கிறோம் அல்லவா? அந்தப் படத்தில் கொஞ்சம் கொஞ்சமாக ஏணிகளில் ஏற வேண்டும். நடுவிலே பாம்பின் வாயிலே விழுந் தாலும் மறுபடியும் முயன்று மெல்லச் சென்று ஏணிப் படிகளில் ஏறிப் பரமபதத்தை அடைய வேண்டும்.

அதுபோலவே நான்கு பெரிய சோபானங்களை ஏறி இறை வனாகிய லட்சியத்தை நாம் அடைய வேண்டும். நாம் இருக்கும் நிலையைவிட அந்த இன்ப நிலை உயர்ந்தது. உயரமான இடத் துக்குப் படி கட்டி ஏறிப் போவது உலக வழக்கம். அதனால் முத்தியின்ப நிலையை அடையும் வழிகளைச் சோபானம் என்றார்கள்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பவைகளே அந்தப் படிகள். சரியை என்பது ஒழுக்கம் அல்லது நடத்தைக்குப் பெயர். கிரியை என்பது தொழில் அல்லது செய்கை. யோகம் என்பது இரண்டு ஒன்றாக இணைவது. ஞானம் என்பது அறிவது. நல்லொழுக்கம், நற்செய்கை, நல்லிணைப்பு, நல்லறிவு என்று ஒருவாறு இவற்றைத் தமிழில் சொல்லலாம்.

இறைவனை அணுகுவதற்குரிய படிகள் இவை என்பதை நினைவுபடுத்திக் கொண்டால் இந்த ஒழுக்கம் முதலியன யாவும் இறைவனோடு தொடர்புடையனவாக இருக்க வேண்டும் என்ற உண்மை தெளிவாகும்.

பொதுவாக இறைவனிடம் அன்பு பூண்டவர்களை நாம் பக்தர்கள் என்று சொல்கிறோம். பக்தர்களின் செயல்களும் வழி பாட்டு முறைகளும் பலவேறு வகையாக இருக்கின்றன. ஒருவன் தலங்களுக்குச் சென்று தரிசனம் செய்து வருகிறான். ஒருவன் வேறு தலங்களுக்குச் செல்லா விட்டாலும் தன் ஊரிலுள்ள கோயிலுக்கு ஒரு நாளேனும் தவறாமல் போய்த் தரிசித்து வருகிறான். ஒருவன் நந்தவனம் வைக்கிறான். ஒருவன் குளம் வெட்டுகிறான். இவர்கள் யாவரும் பக்தர்களே.

ஒருவன் இறைவன் திருநாமத்தைப் பலமுறை சொல்கிறான். அவன் புகழைப் பாடுகிறான். அவனும் பக்தன்தான்.

ஒருவன் விக்கிரகத்தை வைத்துப் பால் முதலியவற்றால் அபிஷேகம் செய்கிறான். ஆடை புனைந்து அணியணிந்து மாலை சாத்தி அலங்கரிக்கிறான். நறுமலரால் அருச்சனை செய்கிறான். தூபதீபம் காட்டுகிறான். உணவை நிவேதனம் செய்கிறான். கற்பூர தீபம் காட்டுகிறான். வலம் வந்து பணிகிறான். அவனும் பக்தியுடையவனே.

பின்னும் ஒருவன் கண்ணை மூடிக் கொண்டு கண்ணீர் வார இறைவனைத் தியானம் செய்கிறான். முதலில் சில நிமிஷங்கள் இப்படி இருந்தவன் நாளடைவில் மணிக்கணக்காக அப்படியே அமர்கிறான். அவனும் பக்தனே.

நின்றாலும் நடந்தாலும் உண்டாலும் படுத்தாலும் இறைவன் நினைவு மாறாமல், எந்தப் பொருளிலும் ஆசை வைக்காமல், எதற்கும் அஞ்சாமல், நான் என்ற அகந்தையும் எனது என்ற

மமதையும் இல்லாமல் இருக்கிறான் ஒருவன். அவனும் பக்தன் தான்.

ஆனாலும் எல்லோரும் ஒரே நிலையை உடையவர்கள் அல்லர். பிறர் பூசை செய்கிறதைப் பார்த்து இறைவனை வழிபடும் பக்தனைவிடத் தானே பூசை செய்கிறவன் சிறந்தவன். அவனை விடக் கண்மூடி அமர்பவன் உயர்ந்தவன். அவனைவிட எப்போதும் இறையுணர்வு மாறாமல் இருப்பவன் மிகச் சிறந்தவன்.

இந்த நால்வர் நிலைகளில் முதல் நிலை சரியை; இரண்டாவது நிலை கிரியை; மூன்றாவது நிலை யோகம்; நான்காவது நிலை ஞானம். இந்த நான்கும் படிப்படியாக எய்துவதற்குரியவை.

ஞானியர் நிலை

சிலர் கிரியையாளர்க்குச் சரியை வேண்டாம் என்றும், யோகிகளுக்குக் கிரியையும் சரியையும் வேண்டாம் என்றும், ஞானிகளுக்கு ஒன்றுமே வேண்டாம் என்றும் சொல்வார்கள். அது தவறு.

ஒருவன் சிறுகச் சிறுகச் சம்பாதித்து வீடு கட்டுகிறான். முதலில் கீழே பல அறைகளை உடைய வீட்டைக் கட்டிக் கொள்கிறான். பிறகு பொருள் ஈட்டி மேல் மாடி கட்டுகிறான். அப்பாலும் அவனுக்குப் பொருள் வந்தது; இரண்டாவது மாடி கட்டுகிறான். மறுபடியும் பணம் வந்து குவியவே, மூன்றாவது மாடியும் கட்டிக் கொள்கிறான். இப்போது அவனுடைய வீடு நாலடுக்கு மாளிகையாகப் பொலிகிறது. அவன் எப்போதும் நாலாவது அடுக்கில் உயர்ந்த பஞ்சணையில் இருக்கிறான். அப்படியானால் அவனுக்கும் மூன்றாவதடுக்குக்கும் தொடர்பு இல்லையா? மற்ற அடுக்குகளுக்கு அவன் வருவதே இல்லையா? அவன் இருப்பது நாலாவது அடுக்கானாலும் மற்ற அடுக்குகளுக்கும் அவன் வருவான். ஓரடுக்கு மாத்திரம் கட்டிக் கொண்டவனுக்கு அந்த ஒன்றுதான் சொந்தம். இரண்டடுக்கை உடையவனுக்கு இரண்டும் சொந்தம். மூன்றடுக்கு மாளிகைக்காரனுக்கோ மூன்றுமே சொந்தந்தான். நாலடுக்கு மாளிகைக்காரன் மற்ற மூவரைவிட உயர்ந்த இடத்தில் இருப்பவன்தான். ஆனாலும் எல்லா அடுக்குகளிலும் அவன் உலாவி வருவான்.

அது போலத்தான் ஞானிகளாக இருப்பவர்கள் மற்ற மூன்று திறத்தினிலும் ஈடுபடுவதுண்டு. ஞானசம்பந்தப் பெருமான் இணையில்லாத ஞானம் பெற்றவர். அவர் தல தரிசனம் செய்தார்; அது சரியை. ''ஞானம் கை வந்தவருக்கு இது எதற்கு?'' என்று கேட்கலாமா? அவர் பூசை செய்தார். சில நேரம் நிட்டையில் இருந்தார். ஆதலின் நான்காம் பாதத்தை அடைந்தவர் நான்கு நிலையிலும் இருப்பார்கள் என்று தெரிந்துகொள்ள வேண்டும்.

சிவஞான சித்தியார் இந்த உண்மையைச் சொல்கிறது:

''ஞானயோ கக்கிரியா சரியை நாலும்
நாதன்தன் பணிஞானி நாலினுக்கும் உரியன்;
ஊனமிலா யோகமுதல் மூன்றினுக்கும் உரியன்
யோகி;கிரி யாவான்தான் ஒண்கிரியை யாதி
ஆனஇரண் டினுக்குரியன்; சரியையினில் நின்றோன்
அச்சரியைக் கேஉரியன்.''

ஆதலின் மெய்ஞ்ஞானம் பெற்றவர்களானாலும் இறைவன் அடியார்களைத் தொழுதலும் ஆலயங்களைத் தொழுதலும் ஆடுதலும் பாடுதலுமாகியவற்றை இடைவிடாமல் செய்வார்கள். சீவன் முத்தராக இருப்பவர்களும் தம்மை வாசனா மலம் தாக்காமல் இருக்கவேண்டி இவ்வாறு செய்வர்.

''செங்கமலத் தாளிணைகள் சேரல் ஒட்டாத்
திரிமலங்கள் அறுத்தீசன் நேசரொடும் செறிந்திட்
டங்கவர்தம் திருவேடம் ஆலயங்க ளெல்லாம்
அரனெனவே தொழுதிறைஞ்சி ஆடிப் பாடி
எங்குமியாம் ஒருவர்க்கும் எளியோ மல்லோம்,
யாவர்க்கும் மேலானோம், என்றிறுமாப் பெய்தித்
திங்கள்முடி யார்அடியார் அடியோ மென்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தியுடை யோரே''

என்பது சிவஞான சித்தியார்.

2

பூசை

மேலே சொன்ன நாலு சோபானங்களில் இரண்டாவது கிரியை. இறைவனுடைய திருவுருவைத் தானே பூசிப்பது அது.

இறைவனை ஒரு பிம்பத்திலே ஆவாகனம் செய்து அதனையே இறைவனாக மதித்துப் பக்தியுடன் மலரிட்டுப் பூசை செய்ய வேண்டும். இவ்வாறு பூசை செய்யும் முறை பாரத நாட்டுக்கே சிறப்பாக அமைந்தது. பூசை செய்வதற்கு அமைந்த முறைகள் பல.

சிவ பூசைக்கு உரிய விதிகள் பல. அந்த முறை விரிவானது. குருவினிடத்தில் தீட்சை பெற்றுக்கொண்டு முறையாகப் பூசை செய்யப் புகுந்தால் நெடுநேரம் செல்லும். அப்படியே அம்பிகையின் பூசையும் மிக விரிவாக அமைந்தது. நவாவரணங்களுக்கிடையே திரிபுர சுந்தரியாகிய பராசக்தி எழுந்தருளியிருக்கிறாள். பரிவார தேவதைகளைப் பூசித்து அம்பிகையைப் பூசிக்கும் முறை தந்திர சாத்திரங்களில் மிக விரிவாகச் சொல்லப் பெற்றிருக்கிறது. முருகனை முதற் கடவுளாக வைத்துப் பூசிக்கும் முறையும் தனியே உண்டு. இப்படியே ஒவ்வொரு மூர்த்திக்கும் உரியதாகப் பூசாவிதானம் வெவ்வேறாக அமைந்திருக்கிறது. அந்த முறைகளைக் குருவின் மூலமாக உபதேசம் பெற்றுச் செய்ய வேண்டும்.

ஆயினும் யாவருக்கும் இந்த வசதியும் பக்குவமும் கிடைப்பதில்லை. அவர்களும் ஒருவாறு பூசை செய்யலாம். மலரிட்டு இறைவனை வழிபடலாம். யாவரும் சிரியையாகிய பூசையைச் செய்யலாம் என்ற உரிமையைத் திருமூலர் சொல்கிறார்.

"யாவர்க்கு மாம்இறை வார்க்கொரு பச்சிலை"

என்று சொல்லும்போது பூசை யாவரும் செய்யலாம் என்று தெளிய வைக்கிறார்.

அருச்சனை

பூசையில் முக்கியமானது அருச்சனை. அபிடேகம், அருச்சனை, தூபதீபம், நிவேதனம் ஆகியவற்றில் அருச்சனை சிறந்தது. ஆதலின் அருச்சித்தார் என்றாலே பூசை செய்தார் என்று பொருள் கொள்கிறோம். திருவிளையாடற் புராணத்தின் இறுதிப் படலம் அருச்சனைப் படலம் என்பது. ஆலவாய் இறைவனுடைய திருவிளையாடல்களைக் கேட்ட முனிவர்கள் மதுரை சென்று சொக்கலிங்கத்தைப் பூசை செய்த வரலாற்றை அப்படலம் சொல்கிறது. பூசனைப் படலம் என்று தலைப்பிட்டிருக்கலாம். ஆயினும் பூசையில் அருச்சனை சிறந்ததாகையால் அருச்சனைப்

படலம் என்றே அப்படலத்திற்குப் பெயர் வைத்தார், ஆசிரியர் பரஞ்சோதி முனிவர்.

முதலில் அந்த முனிவர்கள் திருவிளையாடல்களைச் சொன்ன அகத்திய முனிவனைப் பூசித்தார்களாம். அந்தச் செய்தியை,

''போதஆ னந்தத் தனிக்கடல் பருகும்
புயல்புரை முனிவனை வசிட்ட
மாதவன் ஆதி முனிவரும் உலோபா
முத்திரை தன்னொடும் வரித்துப்
போதொடு சாந்தம் மான்மதம் தீபம்
புகைமுதற் கருவிகைக் கொண்டு
மேதகு சிறப்பால் அருச்சனை செய்து
பின்னும்ஓர் வினாவுரை செய்வார்!''*

என்று பாடுகிறார் பரஞ்சோதியார்.

இங்கே முனிவர் பூசை செய்ததையே, 'அருச்சனை செய்து' என்று சொன்னார். மனிதனை அவனுக்குச் சிறப்பான அங்கமாகிய தலையைச் சுட்டி, ''தலைக்கு ஒரு பணம் கொடு'' என்று ஆகு பெயர் வகையில் சொல்வது போலவும், சோற்றோடு கறி முதலி யன உண்டாலும் தலைமையான சோற்றைச் சுட்டி, ''சோறு தின்றான்'' என்று உபலட்சண வகையில் சொல்வது போலவும் பூசையில் சிறந்த அங்கமாகிய அருச்சனையால் பூசையையே குறிக்கும் மரபு அமைந்தது என்பதை இவற்றால் உணரலாம்.

கையும் வாயும்

இறைவனை அருச்சனை செய்யும்போது கை மலரை எடுத்து அவன் திருவடியில் தூவ, வாய் அவன் திருநாமங்களைச் சொல்ல வேண்டும். சும்மா மலர்களை மாத்திரம் இடுவதாற் சிறந்த பயன் இல்லை. அப்படி இட்டால் ஓரளவு பயன் உண்டா கலாம். ஆயினும் வாயினால் அவன் திருநாமத்தைச் சொல்லி அருச்சனை செய்ய வேண்டும் என்பதற்காகவே இறைவன் பெயர்

★ போதஆனந்தம் – ஞானானந்தம். புயல்புரை – மேகத்தை ஒத்த, முனிவனை – அகத்தியனை. உலோபா முத்திரை: அகத்தியர் மனைவி, வரித்து – பூசைக்குரியவர்களாக அமைத்து. போது – மலர். மான்மதம் – கத்தூரி

வரிசைகளாகிய நாமாவளியைப் பெரியோர்கள் அமைத்திருக் கிறார்கள். பதினாறு நாமங்களைக் கொண்ட ஷோடச நாமாவளி, நூற்றெட்டுத் திருப்பெயர்களைக் கொண்ட அஷ்டோத்தர சத நாமாவளி, முந்நூறு நாமங்களைக் கொண்ட திரிசதி, ஆயிர நாமங்களைக் கொண்ட சகசிர நாமாவளி என்று அருச்சனை செய் வதற்காகவே பலவகை நாமாவளிகள் உள்ளன.

ஒரு நாமத்துக்கு ஒரு மலராக இட்டு அருச்சிப்பது வழக்கம். இந்த வழக்கத்தைச் சிவபுராணக் கதை ஒன்றினாலும் உணரலாம். திருமால் சிவபெருமானை அருச்சனை செய்யப் புகுந்தார். சகசிர நாமார்ச்சனை செய்ய வேண்டுமென்று சங்கற்பித்துக் கொண்டு ஆயிரம் தாமரை மலர்களைக் கொணர்ந்து வைத்துக் கொண்டு அருச்சனையைத் தொடங்கினார். ஒவ்வொரு நாமத்துக்கும் ஒவ்வொரு பூவாகப் போட்டு வந்தார். கடைசியில் ஒரு பூக் குறைந்தது. கடைசி நாமத்துக்குப் பூ இல்லை. ''அடடா! நம் முடைய கணக்குச் சரியாக இல்லாமற் போய்விட்டதே!'' என்று சிறிது வருந்தினார். அடுத்த கணமே தாமரை மலரைப் போன்ற தம் கண்ணையே பிடுங்கிக் கடைசி மலராக இறைவன் திருவடி யில் அருச்சித்தார். அதனால் மகிழ்ந்த இறைவன் திருமாலுக்குச் சக்கராயுதத்தை வழங்கியருளினானாம்.

மலர் ஒன்று நாமம் ஒன்றாக அருச்சனை செய்வது விதி என்பதை இந்த வரலாறு உணர்த்துகிறது.

''பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலர்''

என்று அப்பர் சுவாமிகள் கூறுவார்.

மூன்று கரணங்கள்

பூவை மாத்திரம் இறைவன் திருவடியில் தூவுவதால் பயனில்லை என்று இறைவன் நாமத்தையும் சொல்ல வைத்ததில் ஒரு சிறப்பு இருக்கிறது. மனிதனுடைய மூன்று கரணங்களில் கை உடம்போடு சார்ந்தது; அது ஒரு கரணம். வாய் ஒரு கரணம். மற்றொன்று மனம். திரிகரணமும் ஒன்றிச் செய்யும் செயலுக்குத் தான் பயன் உண்டு. கையால் பூவை இட்டு, நாவால் நாமத்தைச் சொல்லி அருச்சிப்பதால் இரண்டு கரணங்களும் ஒன்றுகின்றன. அது மட்டும் போதாது. மூன்றாவது கரணமாகிய மனமும் அருச்சனையில் ஒன்ற வேண்டும். அப்போதுதான் முழுப்பயனும்

உண்டாகும். மூன்று கரணங்களாலும் செய்யும் அருச்சனையே சிறந்தது; முழுமையானது.

மனம் எங்கோ அலைய, கை மலரை எடுத்துத் தூவ, வாய் பழக்கத்தால் நாமத்தைச் சொல்வதும் உண்டு. பலவற்றைப் பேசிக் கொண்டு அருச்சனை செய்வதை மாற்ற ஆண்டவன் திருநாமத்தைச் சொல்லுதலை வைத்திருக்கிறார்கள். மனத்தை அலையவிட்டால் பூவைத் தூவுவதும் நாமஞ் சொல்லுவதும் பயனின்றி ஒழிகின்றன,

"கையொன்று செய்ய விழியொன்று நாடக்
கருத்தொன்றெண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப்
புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க
விரும்புமியான்
செய்கின்ற பூசைஎவ் வாறுகொள் வாய்வினை
தீர்த்தவனே"

என்பது பட்டினத்தார் பாடல். மனம் ஒன்றிச் செய்யாத எந்தச் செயலும் பயனின்றி ஒழியும். அப்படியிருக்க இறைவனிடம் மனம் ஒன்றுபடுவதற்காகவே செய்யும் வழிபாட்டில் அதனை இணைக்காவிட்டால் பூசையினால் என்ன பயன் கிடைக்கும்?

ஆகவே, மலரை எடுத்து இட்டு அருச்சனை செய்யும்போது வெறும் கைமாத்திரம் இயங்கினால் போதாது; வாக்கும் மனமும் ஒன்றுபட வேண்டும். இதனை அறிவுறுத்துவதற்காக அருணகிரியார்,

தகட்டிற் சிறந்த கடம்பையும் நெஞ்சையும்
தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தருளாய்

என்று தம் விண்ணப்பத்தைத் தொடங்குகிறார்.

3

கடம்ப மலர்

முருகனுக்குக் கடம்ப மலரில் விருப்பம் மிகுதி. அதனால் அவனைக் கடம்பன் என்றே சொல்வார்கள்.

''காரலர் கடம்பன்''

என்பது மணிமேகலை. அது சிவந்த நிறமுடையது. மாணிக்கக் கற்களைத் தங்கக் கட்டிடத்தில் பதிக்கும்போது இடையே சிவப்புத் தகட்டை அமைப்பார்கள். அந்தச் சிவப்புத் தகடு போன்ற செம்மையுடையது கடம்ப மலர். அதைக் கொண்டு முருகனுக்குப் பூசை செய்ய வேண்டும்.

இன்ன இன்ன தெய்வத்துக்கு இன்ன இன்ன மலர்கள் சிறப்புடையன என்ற வரையறை உண்டு. 'புட்பவிதி' என்று ஒரு நூலே இருக்கிறது. முருகனுக்குத் தகட்டைப் போலச் சிவந்த கடம்ப மலரால் அருச்சனை புரிய வேண்டும் என்று ஆசைப் படுகிறார் அருணகிரியார். முருகனுடைய திருவடிகள் இரண்டுக்கும் அந்த மலரால் அருச்சனை செய்து வழிபட வேண்டுமாம்.

அவன் அருளால்

நமக்கு இயல்பாக உள்ள பாசம் இத்தகைய நல்ல காரியங்களைச் செய்ய ஒட்டாது. இறைவனைப் பணிந்து அவனுடைய பேரருளைப் பெற வேண்டும். அந்தப் பேரருள் கிடைப்பதற்கு முன்பே அவனுடைய அருள் நமக்கு வேண்டியிருக்கிறது. அவன் திருவடி பணியவும் அவன் திருவருள் துணை செய்தால்தான் முடியும்.

''அவனரு ளாலே அவன்தாள் வணங்கி''

என்று மாணிக்கவாசகர் பாடவில்லையா?

''நின்னைப் பணியுமா பணியே''

என்பது திருவிசைப்பா. அந்த முறையில் அருணகிரியார், ''உன் தாளிணைக்கு மலர் சூட்டிப் பணியும் வண்ணம் நீ பணிக்க வேண்டும்'' என்று கேட்கிறார்.

அவனுடைய தாள்கள் இரண்டு. அவற்றில் ஒரு மலரை மட்டும் இட்டால் போதாதாம். இரண்டு மலர்களை இட வேண்டுமாம். கடம்பம் பூவாகிய மலர் ஒன்று, மனமாகிய மலர் ஒன்று. மணமலரும் மனமலரும் இசைந்தால்தான் அது பூசையாகும்.

திருவடிப் பூசை

அவனுடைய அங்கங்களுக்கெல்லாம் பூசை செய்யலாம். அங்க பூசை என்றே ஒரு முறை உண்டு. இறைவனுடைய அங்கங்

களில் நமக்குச் சிறந்தது அவனுடைய திருவடி. மற்ற அங்கங் களைப் பூசிப்பதைவிடச் சிறந்து நிற்பது திருவடிப் பூசை. பூசையிற் சிறந்தது அருச்சனை என்றால், அங்க அருச்சனையில் சிறந்தது திருவடி அருச்சனை. அதை அன்புடன் செய்ய வேண்டும். அன்பு மனத்திலே நிகழ்வது.

"அருச்சனை வயலுள் அன்புவித் திட்டுத்
தொண்ட உழவர் ஆரத் தந்த
அண்டத் தரும்பெறல் மேகன் வாழி"

என்பது திருவாசகம்.

சரியை செய்து முதிர்ந்து கிரியையிற் புக வேண்டும். கிரியை பழுத்து யோக நெறியிற் செல்ல வேண்டும். யோகம் முற்றி ஞானமாக வேண்டும். கிரியையில் மனம் ஒருமைப்பாட்டை அடைந்தால் பின்பு யோகம் கைவரப் பெறும். தானே தனி நின்று ஒருமைப்பாட்டை அடைய முடியாதாகையால் மலரைத் துணைக் கொள்ள வேண்டும்.

அடையாளம்

எதை நினைக்க வேண்டும் என்று அறியாமல் திண்டாடுகிற மனத்துக்கு இதோ இதைத் தியானிக்க வேண்டும் என்று மலரால் அடையாளம் இட்டுக் கொள்வது போல இருக்கிறது, அருச்சனை யில் மலரை இடுவது. குழந்தைக்குக் காது குத்த வேண்டுமானால் பொற்கொல்லர் முதலில் குங்குமத்தால் குத்தும் இடத்தில் அடை யாளம் செய்து கொள்வார்; பிறகு குத்துவார். அது போன்றது இது. துப்பாக்கி சுடப் பழகிக் கொள்கிறவர்கள் முதலில் ஓர் இலக்கை வைத்துச் சுடுவார்கள். பழக்கமான பிறகு எதையும் குறிவைத்துச் சுடும் ஆற்றல் வந்துவிடும். அதுபோல இறைவன் திருவடியிலே மலரை இட்டு அதுவே அடையாளமாக அவ்விடத் தில் மனத்தை ஈடுபடுத்த வேண்டும். இந்தப் பழக்கம் அதிக மானால் மலர் இல்லாமலே மனம் திருவடித் தியானம் செய்யும் ஆற்றலைப் பெறும்.

மனத்தால் தனித்துச் செய்வதற்கு ஆற்றல் அதிகம் வேண்டும். அதுதான் யோக நெறி.

வீமன் செய்த பூசை

பாரதத்தில் ஒரு கதை வருகிறது. அருச்சுனன் கைலாசத்துக்குப் போனான். தெரு வழியே போய்க் கொண்டிருக்கும்போது சிவபெருமானுக்குப் பூசை செய்த பத்திர புஷ்பங்களாகிய நிர்மாலியத்தை வண்டி வண்டியாக எடுத்துச் சென்று சிவகணத்தினர் ஓரிடத்தில் கொட்டிக் கொண்டிருக்கிறார்கள். முதலில் அது இன்னதென்று அருச்சுனனுக்குத் தெரியவில்லை. ''இவை என்ன?'' என்று கேட்டான்.

''இவை யாவும் நிர்மாலியம். ஒரு பக்தன் சிவபெருமானைப் பூசை செய்தவை'' என்றார்கள்.

'ஒரு பக்தனா இத்தனை பூவையும் பத்திரங்களையும் கொண்டு பூசித்திருக்கிறான்!' என்று வியப்பு அருச்சுனனுக்கு உண்டாயிற்று. அந்தப் பக்தன் யார் என்று தெரிந்துகொள்ளும் ஆவலும் தொடர்ந்து எழுந்தது.

''அந்தப் பக்தர் யார் என்று நான் தெரிந்து கொள்ளலாமோ?'' என்று அருச்சுனன் கேட்டான்.

''பூவுலகில் பஞ்ச பாண்டவர்கள் என்று இருக்கிறார்களாம். அவர்களில் மூத்தவர் தர்மபுத்திரர் என்பவராம். அவருக்கு அடுத்த தம்பியாகிய வீமசேனர் என்ற பக்த சிரோமணியே இத்தனையும் பூசை பண்ணினார்.''

இதைக் கேட்டவுடனே அருச்சுனனுடைய வியப்புப் பன்மடங்கு மிகுதியாகிவிட்டது.

''அவர் பூசை செய்தாரா?''

''ஆம்; அதில் சந்தேகம் இல்லை.''

அருச்சுனனுக்கு யோசனை படர்ந்தது. 'நம்முடைய வீம அண்ணா நிறையச் சாப்பிடுவார். அதில் அவருக்கு நிகர் யாரும் இல்லை. அதை நாம் அறிந்திருக்கிறோம். அவர் பூசை செய்தே நாம் பார்த்ததில்லையே! ஒருகால் பூலோகத்தில் செய்யும் பூசை இங்கே பன்மடங்காக விளையும் போலிருக்கிறது. நம்முடைய அண்ணா எப்போதாவது நாம் ஊரில் இல்லாதபோது அருச்சனை செய்திருக்கலாம். அதுவே இப்படியானால் நாம் நாள்தோறும் விடாமல் சிவபூசை செய்து வருகிறோமே; அந்த நிர்மாலியம்

இங்கே இமாசலம் போலத்தான் குவிந்திருக்க வேண்டும்' என்று எண்ணினான். அதையும் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் பிடர் பிடித்து உந்தியது.

''அவருடைய தம்பி அருச்சுனன் என்று ஒருவன் இருக்கிறானே; அவன் பூசை செய்த நிர்மாலியம் எங்கேயாவது இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''அதுவா? அது ஒரு குடலையில் பாதிக்குக்கூட இல்லை. அதை முன்பே கொண்டுபோய்க் கொட்டிவிட்டோம். இதுதான் எடுக்க எடுக்க மாளவில்லை.''

அருச்சுனனுக்கு ஒரே மயக்கம். 'கைலாச முறையே தனியாக இருக்கிறதே! அண்ணா எப்போது பூசை செய்தார் என்பதை இவர் களிடமே கேட்டுப் பார்க்கலாம்' என்று துணிந்து, ''வீமசேனர் எப்போது பூசை செய்தார், இத்தனை நிர்மாலியம் குவியும்படி?'' என்று கேட்டான்.

''அதை ஏன் கேட்கிறீர்கள்? மற்றவர்கள் எல்லாம் நந்தவனம் தேடி மலர் கொய்து வந்து சிவபெருமானுக்குக் கையால் அருச்சனை செய்வார்கள். மகா சிவபக்தராகிய அவரோ நந்தவனத்தையே அருச்சனை செய்து விடுகிறார்.''

''நீங்கள் சொல்வது எனக்கு விளங்கவில்லையே!''

''நந்தவனத்தில் ஒரு மரத்தில் நிறைய மலர் குலுங்கும். அப்படியே கண்ணை மூடிக் கொண்டு அவ்வளவையும் சிவ பெருமானுக்கு அருச்சனை செய்வதாகப் பாவனை செய்வார். ஒரு கண நேரந்தான். அத்தனை பூவும் அடுத்த கணம் இங்கே நிர்மாலிய மாக வந்து விழும். இப்படி அவர் கண்ணில் பட்டவை எல்லாம் நிர்மாலியமாகி விடும். இந்த மாதிரி மானஸிக பூசை செய்யும் பக்தரைப் பார்ப்பது மிகவும் அருமை.''

இதைக் கேட்டவுடன் அருச்சுனன் குன்றிப் போனான். மனத்தால் செய்கிற காரியத்துக்கு மதிப்பு அதிகம் என்பதை உணர்ந்து கொண்டான்.

முழுப் பூசை

மலரால் அருச்சனை செய்யும்போது அலட்சியமாக வீசி எறிகிறோம். இறைவன் திருவடியைக் கண்ணால் தரிசித்து

மலரை இட்டு அங்கே மனத்தையும் இட வேண்டும் என்று அருணகிரியார் சொல்கிறார்.

''நின் தாளிணைக்கே புகட்டி'' என்றார். மலரையும் சரி, மனத்தையும் சரி வேறு எங்கும் சாத்தக்கூடாது. மலரை யார் குழலில் சூட்டுவது என்ற எண்ணமின்றி, அதைக் கண்டவுடன் இறைவன் தாள் மலர் நினைவுக்கு வரவேண்டும். அதனை இறைவன் தாளில் அணியும்போது நம் மன மலரை இடுவதற்கு அடையாளமாகவே எண்ண வேண்டும். புற மலரை இடுவத னால் பூசை நிரம்பாது; அக மலரையும் இட வேண்டும். புற மலரை மட்டும் இட்டால் அது அரைப் பூசையாகவே முடியும்.

''முருகா, உன் திருவடிக்குச் சிவந்த கடம்ப மலரைச் சூட்டும் போது என் மனத்தையும் உடன் வைக்க வேண்டும். இப்படிப் பணிய நீ என்னைப் பணிகொள்ள வேண்டும்'' என்று வேண்டுகிறார் அருணகிரியார்.

தனியே மனத்தை இறைவன் திருவடி மலரில் வண்டாக நின்று ஊதச் செய்ய வேண்டும்; அதுதான் யோகம். அதற்கு முன்பு செய்யும் பயிற்சி இது. குழந்தைக்கு மனக்கணக்குப் போடும் பிராயம் வருவதற்கு முன் புளியங்கொட்டையை வைத்துக் கணக் கிடச் சொல்லிக் கொடுப்பார்கள். அவ்வாறே இறைவன் திரு நாமத்தையும் மலரையும் கொண்டு அருச்சனை செய்வது, மன மலரையும் இறைவன் தாள் மலரில் இணைக்கும் பயிற்சியாக அமையும். அது முதிர்ந்தால் மனம் தாளைப் பற்றும்.

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது''

என்பதில் சேர்தல் என்பது இடைவிடாது நினைத்தல் என்பதைக் குறிக்கும் என்பர். மனம் இறைவன் திருவடியை இடைவிடாது நினைப்பது எளிதிலே கைகூடும் செயலன்று. நடக்க மாட்டாத குழந்தை நடைவண்டியைக் கொண்டு நடை பழகிக் கொள் வதைப் போல மனம் பூவைக் கொண்டு தியானத்தைப் பழகிக் கொள்ள வேண்டும்.

நெஞ்சு என்பது உள்ளத்தைக் குறிப்பது. மனத்தின் உள்பகுதி அது. அதைக் கடம்போடு முருகன் திருவடியில் புகட்ட வேண்டு மாம்.

தகட்டிற் சிறந்த கடம்பையும் நெஞ்சையும்
தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தருள்வாய்.

மென்மை பெறல்

கடம்பு முருகனுக்கு அருச்சனைப் பொருளானால் சிறந்த பயன் பெறும். மனமும் முருகன் திருவடியைப் பற்றுவதனால் சிறந்த பயனைப் பெறும். கடம்பு மென்மையானது. மனமும் கடம்போடு சேர்ந்து திருவடியிற் கிடக்கத் தொடங்கினால் சார்ந்த பொருளின் மென்மையைப் பெறும்.

வன்மையான மனத்தில் நெகிழ்ச்சி இராது. அன்பு என்பதே நெகிழ்ச்சிதான். வலிய மனத்தில் அன்பு உண்டாகாது. நெகிழ்ந்து உருகினால் மனத்தில் அன்பு உண்டாயிற்று என்பதைத் தெரிந்து கொள்ளலாம். வன்மையான நெஞ்சம் மென்மையான கடம்போடு சேர்ந்தாவது மென்மையை அடையட்டுமே என்று எண்ணிச் சொல்வது போலவும் இருக்கிறது இது.

பூசை செய்வதும் பணிவதும் மனத்தின் நிலையைப் பொறுத்துப் பயன் தருபவை. மனத்தைத் தாளிற் புகட்டினால் அருச்சனையும் பணிதலும் உண்மையாக நிலவும். அந்த வகையில் பணிய வேண்டுமானால் நம்முடைய முயற்சியால் இயலாதென்று கருதி, ''எம்பெருமானே! நீயே இதற்கு வழி செய்ய வேண்டும்'' என்று பிரார்த்திக்கிறார்.

''என் குழந்தை புத்தகத்தோடு பள்ளிக்கூடத்துக்கு வரும்படி ஏதாவது செய்யுங்கள் வாத்தியாரே'' என்று முரட்டுக் குழந்தை யைப் பற்றித் தாய் சொல்வது போல இருக்கிறது இது.

4

முருகன்

இந்த வேண்டுகோளை விடுக்கும்போது முருகனை அருண கிரியார் எப்படி நினைக்கிறார்?

மனம் ஆசையினால் உலகத்தையெல்லாம் சுற்றுகிறது. உலகு முழுவதையும் தன் ஆசைக் கரத்தில் அடக்கப் பார்க்கிறது.

அதை ஆண்டவன் திருவடியில் அடக்கப் பார்க்கிறார் அருணை முனிவர். அதற்கு முருகன் திருவருள் துணையை நாடுகிறார்.

சூரன் வளர்தல்

முருகன், ஆசையை வளர்த்து உடலையும் வளர்த்துப் படையையும் வளர்த்துக் கொடுமையையும் வளர்த்த சூரபன் மனை அடக்கியவன். சூரனுடைய ஆசைக்கு அளவே இல்லை. ஆற்றல் இல்லாத நமக்கே எல்லையில்லாத ஆசைகள் எழு கின்றனவே! அசுரேந்திரனாகிய அவனுடைய ஆசை அசுர ஆசை யாகத்தானே இருக்கும்? அதை அளவிட முடியுமா? ஆனாலும் ஒருவாறு அதன் பரிமாணத்தை அவனுடைய பரிமாணத்தால் சித்தரித்துக் காட்டுகிறார் அருணகிரியார்.

இந்தப் பூவுலகமும் பிறவும் சேர்ந்த பெரிய உருண்டை ஒன்று உண்டு. அதற்குப் பிரம்மாண்டம் என்று பெயர். தான் யாவருக்கும் எப்பொருளுக்கும் தலைவனாக இருக்க வேண்டும் என்ற பதவியாசை சூரனுக்கு உண்டாயிற்று.

நாம் ஒரு காணி நிலம் வாங்குகிறோம். அதில் நாம் வேலி போட்டுக் கொள்கிறோம். பிறகு பக்கத்திலுள்ள வேறொரு காணியை வாங்குகிறோம். அதற்கும் சேர்த்து வேலி போடுகிறோம். இப்படி நம் சொத்து விரிய விரிய வேலியும் விரிவடைகிறது.

சூரனும் தன் சொத்தை விரிவாக்குகிறான். அதற்குத் தனியே வேலி போடவில்லை. தானே வேலியாகப் படர்கிறான்; உயர் கிறான். தானே தன் பொருளுக்கு எல்லை கோலி நிற்கிறான். அசுரனல்லவா? தன் மாயத்தால் எல்லாம் செய்ய வல்லவன் தானே?

இந்தப் பூமியைத் தனதாக்கிக் கொண்டான்; இதைச் சார்ந்த கிரகங்களையும் தன் ஆணைக்குள் அடக்கினான். பிரம்மாண்டம் முழுவதையும் தனக்கு உரியதாக்கி அதன் கீழே காலும் உச்சியில் தலையும் உடையவனாக வளர்ந்து சுற்று முற்றும் தன் அரசின் அளவைப் பார்த்தான். தலைக்குமேல் புண்டரீகன் அண்டத்தின் முகடு இருந்தது. 'இதற்கு மேலே என்ன இருக்கிறது? அதையும் நாம் நமக்குச் சொந்தமாக்கிக் கொண்டால் என்ன?' என்ற

எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று; கடலையும் மலையையும் நாட்டையும் கைப்பற்றிய ருஷியரும் அமெரிக்கரும் இப்போது வானவெளியைத் தாண்டி மேலே பறந்து சந்திரமண்டலத்தில் கொடி கட்டப் பார்க்கிறார்கள் அல்லவா? மனிதர்களுக்கே இந்த ஆசை இருக்குமானால் அசுரர் தலைவனுக்குப் பிரம்மாண்டத் துக்கு மேலே உள்ளவற்றையும் ஆக்கிரமித்துக் கொள்ள வேண்டு மென்ற ஆசை எழுந்தது வியப்பன்று.

அவன் பிரம்மாண்டத்தின் அடிக்கும் முகட்டுக்குமாக அளவுத் தம்பம் போல நின்றவன். அந்த முகட்டை ஒரு முட்டு முட்டினான். அண்ட முகடு பிளந்தது. மேலே ஆசை வளர்ந்தது. அதோடு அவனும் வளர்ந்தான். மேலே எட்டிப் பார்த்தான். அங்கே இந்திரலோகம் இருந்தது. அதன் பொலிவு அவன் கண்ணைக் கவ்வியது. அதன் வளம் அவன் உள்ளத்தை அள்ளியது. அங்கும் தன் ஆசைக் கரத்தை நீட்டினான். பின்னும் உயர்ந்தான். அந்த லோகத்தை முட்டும்படி அவன் எட்டினான்.

புண்டரீகன் அண்ட
முகட்டைப் பிளந்து இந்த்ர லோகத்தை முட்ட எட்டி.

சூரன் கொடுமை

சூரன் தான் பிறந்த இடத்தோடு நில்லாமல் ஒவ்வோரிட மாகச் சென்று மோதித் தன் ஆணையை நிலை நிறுத்தினான். போன இடங்களிலெல்லாம் அவனுடைய கொடுமைக்குப் பயந்து யாவரும் குலைந்தனர். யாருக்கும் அடங்காத எருது – பகடு – வாலைக் குழைத்துக் கொம்புகளை நீட்டிக் கொண்டு பாய்ந்து வரும்போது அதன் முன்னே நிற்க யாவரும் அஞ்சுவார்கள். அது மண்மேட்டைக் குத்தும்; சுவரை முட்டும்; மரத்தை மோதும்; மனிதர்களைக் குத்திக் குலை சாய்க்கும். அது போன இடமெல் லாம் அச்சம்; அலங்கோலம்; நிலை குலைவு; படுநாசம்.

சூரனும் அப்படித்தான் புகுந்தான். தன் கொடுமையினால் யாவரையும் அஞ்சச் செய்தான். போன இடங்களில் அவனை வர வேற்பார் ஏது? அவனே வலியச் சென்று மோதினான்; பொரு தான்; அமைதியைக் குலைத்தான்; வாழ்வைக் கலைத் தான்; மேட்டைப் பள்ளமாக்கினான்; பள்ளத்தை மேடாக்கினான்.

போகிற இடங்களில் யாவர் நெஞ்சிலும் பயத்தை உண்டாக்கினான். போகாத இடங்களில் உள்ளவர்களும், ''ஐயோ! படுபாவி வந்துவிடுவானே!'' என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டு நடுங்கினார்கள்.

அவனோ அச்சம் என்பதை அறியாமல் இருந்தான்; எல்லோரையும் அச்சம் கொள்ளச் செய்தான். எங்கும் கொடுமையைப் பரப்பினான். தேவர்கள், கந்தருவர்கள், வித்தியாதரர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள் – யாவரும் அஞ்சி நடுங்கினர். எங்கும் ஒரே பயம்!

சூர பயங்கரன்

இத்தகைய நிஷ்டூரம் உடையவனை –பகட்டைப் போலப் பொருதவனை – இந்திர லோகத்தை முட்டும்படியாக எட்டினவனை, அழிக்கப் புறப்பட்டான் முருகன். அவன் நெஞ்சில் பயத்தை உண்டாக்கினான். முருகனுடைய வீரச் செயலைக் கண்டு அதுகாறும் அச்சத்தை அறியாத சூரன் அச்சமுற்றான். எல்லாருக்கும் பயங்கரனாக இருந்த சூரனுக்குப் பயங்கரனாக முருகன் விளங்கினான். அவனை விளித்து இந்த விண்ணப்பத்தைச் சொல்கிறார் அருணை முனிவர்.

புண்டரீகன் அண்ட
முகட்டைப் பிளந்து வளர்ந்து
இந்த்ர லோகத்தை முட்ட எட்டிப்
பகட்டிற் பொருதிட்ட நிட்டூர சூர
பயங்கரனே!

அடக்குவார் இல்லாமல் வளர்ந்து கொடுமை செய்த அவனை அடக்கினவன் முருகன். அடக்க முடியாமல் ஓடிக் கொடுமை செய்யும் மனத்தை அடக்க அந்த முருகனே வழி காட்டுவான் என்ற பொருத்தத்தால் அந்த வரலாற்றை இங்கே நினைக்கிறார்.

★

தகட்டிற் சிவந்த கடம்பையும
நெஞ்சையும் தாளிணைக்கே
புகட்டிப் பணியப் பணித்தரு
ளாய்,புண்ட ரீகன் அண்ட

முகட்டைப் பிளந்து வளர்ந்திந்த்ர
லோகத்தை முட்டஎட்டிப்
பகட்டிற் பொருதிட்ட நிட்டூர
சூர பயங்கரனே!

(சிவப்புத் தகட்டைப் போலச் சிவந்த கடம்ப மலரையும் என் நெஞ்சையும் உன்னுடைய இரண்டு திருவடிக்கே செலுத்தி உன்னை வழி படும்படி என்னைப் பணிகொண்டருள்வாய்; பிரமனது அண்டத்தின் உச்சியைப் பிளந்து அதற்கு மேலும் வளர்ந்து இந்திர லோகத்தை முட்டும் படியாக எட்டி எருதைப் போல மோதிய கொடுமையையுடைய சூர னுக்குப் பயத்தை உண்டாக்கிய பெருமானே!

கடம்பும், சூரபயங்கரன் என்பதும் முருகன் என்று அடையாளம் காட்டின.

தகட்டின் – தகட்டைப் போல; தகடு – மாணிக்கத்தைப் பதிக்கும்படி அடியில் வைக்கும் செந்நிறம் பெற்ற வர்ணத் தகடு; 'தகட்டில் அழுத்தின மாணிக்கம் போலே' (ஈடு) என்பது காண்க. செப்புத் தகடு என்றும் சொல்ல லாம். தகடு என்பதற்குப் புற இதழ் என்றும் பொருள் உண்டு. ஆதலின், தகட்டினாற் சிறந்த என்றும் கொள்ளலாம். இங்கே, இன்: சாரியை.

தாளிணைக்கே: ஏகாரம் பிரிநிலை; ''சிந்தனையும் அம்மலர்க்கே யாக்கி'' (திருவாசகம்) என்பது போல. புகட்டி – புகுத்தி; செலுத்தி. பணிய – வணங்கல். பணித்தல் – ஏவல் செய்யும்படி ஆக்குதல்; ஏவுதல். புண்டரீகன் – பிரமன். அவன் அண்டம், பிரமாண்டம். முகடு – உச்சி.

முட்ட – முட்டும்படியாக. பகடு – காளை; பகட்டின் – பகட்டைப் போல. நிட்டூரம் – கொடுமையுடைய; ''சோர நிட்டூரனைச் சூரனை'' என்றும், ''நிட்டூர சூர குலாந்தகனே'' என்றும் முன்னே வந்துள்ளன.

சூர பயங்கரனே – சூரனுக்குப் பயத்தைச் செய்பவனே; பிரதிவாதி பயங்கரன் என்பது போல நின்றது.)

இது கந்தர் அலங்காரத்தில் 82–ஆவது பாட்டு.

கலாபப் புரவியும் தனிவேலும்

முருகப் பெருமானுடைய திருவடியைக் கடம்ப மலரால் அருச்சித்து வழிபடும்போது அத்திருவடியில் மனமலரையும் இட்டு வழிபட வேண்டும் என்பதைச் சென்ற பாட்டில் அருண கிரியார் சொன்னார். மன மலருக்கும், கை மலருக்கும் லட்சிய மாக இருப்பது ஆண்டவனுடைய திருவடி. இந்த எண்ணம் வந்தவுடன் மேலும் அந்தத் திருவடியை நினைக்கிறார். முருகப் பெருமான் அந்தத் திருவடியிலே வீர கண்டையை அணிந்திருக் கிறான்.

கற்பனைக் காட்சி

இங்கே ஒரு கற்பனைக் காட்சியை எண்ணிப் பார்க்கலாம். முருகப் பெருமான் கந்தலோகத்தில் இருக்கிறான். தன் சின்னஞ் சிறு கரத்தில் வேலை வைத்துக் கொண்டு அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருக்கிறான். அருகில் மயில் நிற்கிறது. அப்போது உமா தேவி அங்கே தோன்றி தன் குழந்தையை வா என்று அழைத்து அலங்காரம் பண்ணத் தொடங்குகிறாள்.

"தேட அரிய மணியரைஞாண் சேர்க்க வருக விரற்காழி
செறிக்க வருக திலதநுதல் தீட்ட வருக"

என்று அழைக்கிறான். முருகன் அருகில் சென்று நிற்க, கால் முதல் தலைவரைக்கும் பலவகை அணிகளை அணிந்து கண்ணாரக் காண்கிறாள். அவனுடைய திருவடியில் தண்டையும், சிலம்பும், வெண்டையமும் பூட்டி, அவன் நடைபோடும் போது அவை ஒலிப்பதைக் கேட்டு இன்புறுகிறாள். தன்னுடைய தாய் இத்தனை அணிகளையும் பூட்டி அழகு காண்பதைக் கண்ட குழந்தை தானே ஓர் ஆபரணத்தைப் பூட்டிக் கொள்ள விரும்புகிறான். அதனை அம்பிகை பார்க்கிறாள்.

அவன் எதைப் பூட்டிக் கொள்கிறான்? கழுத்துக்கோ கைக்கோ எந்த அணியையும் அணிந்து கொள்ளவில்லை. வீர

கண்டையை எடுத்துக் காலுக்கு அணிந்து கொள்கிறான். ஒற்றை காலில் முழங்காலுக்குக் கீழே அணிந்து கொள்வது வீர கண்டை. கழல் என்று தமிழில் பெயர் வழங்கும். வளை போன்று இருந்தா லும் அதில் ஒரு மணி தொங்கும். கண்டை என்பது மணி. நடக் கும் போது அந்த மணி ஒலிக்கும். போரில் வெற்றி பெற்றவர்கள் அந்த வெற்றிக்கு அறிகுறியாகக் கழலை அணிந்து கொள்வார்கள். இறுக்கமாக இல்லாமல் கழல்வது ஆதலின் கழல் என்ற பெயர் வந்தது போலும். கழலை அணிந்தமையினால் திருவடியையே கழல் என்று சொல்வது உண்டு. அது ஆகுபெயர்.

இங்கே முருகப் பெருமான் தன்னுடைய திருவடியில் அழகிய கழலைக் கட்டிக் கொள்கிறான். அந்தக் கழலில் பூ வேலை செய்திருக்கிறார்கள். அது பூங்கழல்; அவன் எந்தப் போரை இப் போது செய்திருக்கிறான்? அவனுக்கு வந்த வெற்றி என்ன? இதற்கு முன் செய்த ஒரு வெற்றிக்காக அவன் பூங் கழலைக் கட்டிக் கொள்ளவில்லை. இனிமேல் நிகழப் போகும் போரை எண்ணி இந்தக் கழலைக் கட்டிக் கொள்கிறானாம். அருணகிரியாரின் கற்பனை அப்படி ஓடுகிறது.

வீரர்களின் உறுதி

உலகில் பெரு மன்னர்கள் தம்முடைய எதிரியின் படை களை அழித்து ஒடுக்க வேண்டுமானால் பலகாலம் அதற்கென்று படை தேடிக் கொள்வார்கள். இயற்கையாகத் தமக்குள்ள படை களோடு கூலி கொடுத்துப் புதிய படைகளையும் சேர்ப்பார்கள். வேறு மன்னர்களையும் துணைக்கு அழைத்து, அவர்களுடைய உதவியையும் ஏற்றுக் கொள்வார்கள். படைத் தலைவர்களுக்குச் சிறப்பு செய்து பலவகைப் படைக்கலன்களையும் குவித்துக் கொள்வார்கள்.

இத்தனை ஏற்பாடுகளையும் செய்துகொண்டு அவர்கள் போருக்குப் புறப்பட்டுச் சென்றாலும் இடையில் பல தடங்கல்கள் உண்டாகும். இறுதியாகத் தமக்குத்தான் வெற்றி கிடைக்கும் என்ற எண்ணம் அவர்களுக்கு இருப்பதில்லை. இயல்பாக உள்ள வீரத்தினால் மிடுக்கு இருக்குமேயொழிய, எந்தச் சமயத்தில் வெற்றி யார் பக்கம் சாயும் என்ற நிச்சயம் அவர்களுக்கு இராது.

ஆனால் மிகப் பெரிய வீரம் உடையவனுக்கு 'இறுதியாக நமக்குத்தான் வெற்றி உண்டாகும்' என்ற எண்ணம் உறுதியாகத் தோன்றும். இனிமேல் செய்யப் போகின்ற போருக்குரிய வெற்றி இப்போதே வந்து விட்டதாக எண்ணி உவகை கொள்வான்.

இராமன் செயல்

இராமபிரான் இலங்கையின்மேல் படை எடுத்துச் செல்லப் போகிறான். இக்கரையில் அவனை விபீஷணன் வந்து கண்டான்; புகல் அடைந்தான். இராமன் அப்போது அவனை அடைக்கல மாக ஏற்றுக் கொண்டு இலங்கை அரசு அவனுக்குரியது என்று கூறி முடி கவித்தான். இன்னும் இலங்கையில் இராமன் அடி வைக்கவில்லை. இராவணனோடு போர் செய்யவில்லை. அவனைத் தோல்வியுறச் செய்யவில்லை. அப்படி இருந்தும் இராவணனை வென்றுவிட்டது போல எண்ணி இலங்கை அரசை விபீஷண னுக்குக் கொடுத்தான். இது நிச்சயமாக அவனை வென்றுவிடுவோம் என்ற நம்பிக்கையினால் உண்டான செயல். இதனை, ''கொள் ளார் தேஎம் குறித்த கொற்றம்'' என்று தொல்காப்பியம் கூறும்.

கழல்கட்டும் பெருமான்

நெஞ்சத் திண்மை உடையவர்கள் தாம் எண்ணியவற்றை எண்ணியாங்கு நிறைவேற்றுவார்கள். ஆதலின் இத்தகைய செயல் அவர்களிடத்தில் பொருத்தமாக அமையும். அந்த வகையில் முருகப் பெருமான் சூரபன்மனோடு போர்புரியவேண்டுமென்று எண்ணிப் போரிடுவதற்கு முன்னே, வெற்றி வந்தவுடன் எந்த அடையாளத்தை அணிந்து கொள்வானோ அதனை இப்போதே புனைந்து கொள்கிறான். நாளைக்கு இரண்டாயிரம் ரூபாய் கிடைக்கும் என்ற உறுதி நமக்கு இருக்கிறது. இன்றைக்கே வைரக் கடைக்குச் சென்று நாளைக்குப் பணம் தருவதாக வாக்குறுதி அளித்து வைரக்கம்மலை வாங்கி வந்து மனைவிக்கு அணிகிறோம். நிச்சயமாக அடுத்த நாள் பணம் கிடைக்கும் என்ற உறுதியே இந்தச் செயலுக்குக் காரணம். இன்று நினைப்பது நாளைக்கு நடக்கும் என்ற உறுதி இல்லாத நாமே பணம் கிடைத்துச் செய்யவேண்டியதைப் பணம் கிடைக்காமலே செய்ய முன் வருகிறோம். நமக்கு அவ்வளவு சாமர்த்தியம் இருக்கிறது.

பலவீனர்களாகிய நமக்கே அத்தகைய உறுதிப்பாடு இருக்குமானால் அகடிதகடனா சாமர்த்தியம் உடைய ஆண்டவனுக்கு வெற்றி நிச்சயம் என்பது தெரியாதா?

முருகப் பெருமான் சூரபன்மனோடு போர் செய்ய வேண்டு மென்ற விருப்பத்தைக் கொண்டான். தேவர்களுக்குச் சேனாபதி என்ற பட்டத்தையும் சூட்டிக் கொண்டான். கவசத்தையும், வாளையும், வேலையும் எடுத்துப போர் செய்வதற்கு முன்னாலே எல்லாவற்றுக்கும் பின்னாலே கட்டிக் கொள்வதற்குரிய கழலை இப்போதே கட்டிக் கொள்கிறான். கவசம் கட்டி, தலைப்பாகை கட்டி, கச்சை கட்டி, போர் செய்து வெற்றிபெற்ற பின்பு கழல் கட்டவேண்டும். அதுதான் உலக முறை. ஆனால் தீராதி தீரப் பெருமாளாகிய ஆண்டவன் வீரத் திருக்கழலை முதலில் கட்டிக் கொள்கிறான். அது அவனுடைய வீரச் சிறப்பைக் காட்டுகின்றது.

அருணகிரியாருடைய அகக்கண்ணில் முருகப்பெருமான் பூங்கழல் கட்டும் பெருமாளாகக் காட்சி அளிக்கிறான். அவன் சிறிய அடியை உடைய குழந்தை; தன்னுடைய சிற்றடிக்குப் பூங்கழல் கட்டுகிறான். இப்படித் தன் காலில் கழலை அணிவது எதற்காக? சூரனை வெல்வதற்காக. சூரனுக்கும், முருகனுக்கும் நேர்முகத்தில் பகை ஒன்றும் இல்லை. சூரன் முருகனுக்கு எந்த இடையூறும் செய்யவில்லை; துன்பமும் உண்டாக்கவில்லை. தேவ லோகத்தில் பலவகை இன்பங்களுடனும் வாழ்ந்த இந்திரனைத் துன்புறுத்தினான். இந்திரனுடைய மகனாகிய சயந்தனைச் சிறை யில் அடைத்தான். பல தேவர்களைத் தனக்குரிய ஏவலாளர்களாக வைத்தான். வேறு பலரைச் சிறையில் வைத்தான். இந்திரனும், இந்திராணியும் யாரும் அறியாதபடி ஓடி ஒளிந்து கொண்டிருந்தார்கள்.

தேவர்களுக்குத் தலைவனாகிய முருகப்பெருமான் தன் படைகளைக் காக்கும் கடப்பாடு உடையவன். அவர்களும் முருக னிடத்தில் வந்து இறைஞ்சித் தங்களுடைய பழைய நிலையை மீட்டுத் தரவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். தங்க ளுடைய ஆற்றலை நினைந்து தங்கள் வாழ்வு என்றும் சத்திய மானது என்று நம்பிச் செருக்கோடு வாழ்ந்த அவர்களுக்கு வீழ்ச்சி உண்டாகியது. உண்மையைத் தெரிந்து கொண்டார்கள். தங்க ளுடைய பதவி நிலையாதது என்பதையும், இறைவன் திருவருள்

ஒன்றே நிலைத்து நிற்பது என்பதையும் தெரிந்து கொண்டார்கள். அதனால் சிவபெருமானை முதலில் இறைஞ்சி முருகப் பெருமானுடைய திருஅவதாரம் ஏற்படுவதற்குக் காரணமான விண்ணப்பத்தைச் செய்து கொண்டார்கள். முருகப் பெருமான் திரு அவதாரம் செய்த பிறகு அவனையே அணுகி வழிபட்டுக் கெஞ்சிக் கூத்தாடி நின்றார்கள். அதன் பின்னே இப்போது முருகன் சூரபன்மனோடு போர் செய்யப் புறப்படுகிறான்.

தேக்கம்

சூரன் இமையோர்களுடைய காலில் விலங்கை பூட்டியிருக் கிறான். அவர்களுடைய காலில் பூட்டிய விலங்கைத் தறிப் பதற்காக இங்கே முருகன் தன் சிற்றடியில் பூங்கழலைக் கட்டிக் கொள்கிறான். தேவலோகத்தை அண்டம் என்று சொல்வார்கள். அங்கே வாழும் அமரர்களை அண்டர் என்பர். அவர்கள் இமையா நாட்டம் பெற்றவர்கள். ஆகையால் இமையோர் என்ற பெயர் வந்தது. இமையிலே சிறப்பு உடையவர்கள் என்று பொருள்.

சூரனுடைய கொடுமைக்கு ஆளாவதற்கு முன்பு இமையவர் களாகிய தேவர்கள் தங்கள் தங்கள் செயல்களை முறையாகச் செய்து கொண்டு வந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கை என்னும் ஆறு ஓடிக் கொண்டிருந்தது. வருணன் மழை பெய்வித்தான். வாயு எங்கும் ஓடி உலகத்தவரின் மூச்சாக நின்றான். அக்கினி ஒளியையும், வெப்பத்தையும் கொடுத்துப் பொருள்களை எல்லாம் பக்குவப்படுத்தினான். வெவ்வேறு தேவர்கள் தங்கள் தங்களுக்கு அமைந்த செயல்களை முறையாகத் தவறு இல்லாமல் செய்து கொண்டு வந்தார்கள். இயந்திரத்தின் ஒவ்வோர் உறுப்பும் வேகமாக இயங்குவது போலத் தேவர்களும் அவர்களுடைய தலைவனாகிய இந்திரனும் தங்கள் தங்களுக்குரிய செயல்களை வேகமாகச் செய்து வந்தார்கள். முன்னைப் பிறவிகளில் செய்த புண்ணியவசத்தால் தேவ பதவி பெற்றவர்கள் ஆதலின் அதற் குரிய பயனாகிய போகத்தையும் தடையின்றி அநுபவித்து வந்தார் கள். அவர்களுடைய செயல் ஓட்டத்தில் இன்ப ஓட்டமும் அமைந் திருந்தது.

சூரபன்மன் குறுக்கிட்டான். தேவேந்திரனுக்கு எதிராக அசுரேந்திரனாகிய அவன் வந்து நின்றான். அவனுடைய நிழலில்

கற்பக மரம் வாடியது. காமதேனு ஓடியது. அமரர்கள் செயல் இழந்தார்கள். அவர்களது செயல் ஓட்டம் தடைப்பட்டது; இன்ப ஓட்டம் நின்றுவிட்டது. ஆக்கம் பெற்ற இமையோர் மேன் மேலும் சுறுசுறுப்புடன் வேலை செய்வது மாறித் தேவலோகம் முழுவதும் தேக்கம் அடைந்தது. இமையவர் வாழ்வு தேங்கியது. இந்திரன் ஆணை தேங்கியது. காமதேனுவின் ஓட்டம் தேங்கியது. தேவலோகத்து நடமாட்டம் தேங்கி நின்றது. சுறுசுறுப்புக்கும், பொலிவுக்கும், போகத்திற்கும் இடமாக இருந்த தேவலோகம் இப்போது தேங்கிய குட்டையாக நாற்றம் எடுத்துக் கொண்டிருந்தது.

அவ்வாறு தேங்கிய அண்டத்தில் இருந்த இமையவர்கள் எல்லாம் தம்முடைய இடத்தில் இல்லாமல் சிறையில் காலில் விலங்கு பூட்டப் பெற்றுத் திண்டாடினார்கள். அவர்களுடைய சிறை வாழ்க்கையை நீக்க வேண்டுமென்று கருதி முருகப் பெருமான் புறப்பட்டான். அப்போது தன்னுடைய சிற்றடியில் பூங்கழல் கட்டிக் கொண்டானாம்.

தேங்கிய அண்டத்து இமையோர் சிறை விடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள்.

கலாபப் புரவி

முருகப் பெருமான் தன்னுடைய அருளை ஓடவிடுத்தான். அது தேங்கிக் கிடந்தால் அண்டத்து இமையோர்களுடைய வாழ்வில் தேக்கம் அப்படியே இருந்துவிடும். முருகப் பெருமானின் வேகத்தை என்ன என்று சொல்வது! அவன் பூங்கழலைக் கட்டிக் கொண்டு எதிரே பார்த்தான். பச்சைக் கலாபத்தை வானுற விரித்துக் கொண்டு அவனுடைய ஊர்தியாகிய மயில் வந்து நின்றது. அவனது உள்ளத்தில் இருந்த கருணை வேகத்தை அது நன்றாகத் தெரிந்து கொள்ளும். அது மிகவும் விரைவாகச் செல்லும் ஆற்றல் உடையது.

இருவகைக் கோலம்

முருகப் பெருமான் மயில்மேல் போகும் கோலம் இரண்டு வகைப்படும். ஒன்று அடியார்களுக்கு அருள் செய்வதற்காகப் போகும் கோலம். அப்போது தனியாகப் போகமாட்டான். வள்ளி நாயகியுடன் செல்வான்.

''நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான்''

இது அருள் செய்வதற்காகச் செல்லும் கோலம். அப்போது அவனுடைய மார்பில் கடம்ப மாலை புரளும்; சந்தனம் இலங்கும்; முகத்தில் புன்னகை பொலியும்; உடம்பெல்லாம் பல அணிகள் மிளிரும். வேறு ஒருவகையில் அவன் மயில்மேல் செல்வதும் உண்டு. அது வீரச் செருக்குடன் போருக்குப் புறப்படுவது. அப்போது அவன் காலில் கழல் கட்டியிருப்பான். இடையில் வாள் கட்டியிருப்பான். கையில் வேல் எடுத்திருப்பான். இந்தக் கோலத்தோடு வந்து நின்றால் மயில் மிக வேகமாக மிடுக்குடன் அவனை ஏந்திச் செல்லும். அடியார்களிடத்தில் அவன் எழுந்தருளும்போது அந்த மயில் நடக்கும் நடையே தனி. அப்படியே பகைவர்களை அழிப்பதற்காக முருகப் பெருமான் புறப்படும் போது அவனுக்குள்ள மிடுக்கைப் போலவே மயிலும் மிக மிடுக்கோடு கலாபத்தை வீசி நடக்கும்.

மயிலின் மிடுக்கு

இப்போது மயில் பகைவரை ஒடுக்கும் மிடுக்கோடு நடக்கிறது; தன் கலாபத்தை விரித்து முருகப் பெருமானைத் தன் மிசையே தாங்கி நடக்கிறது. முருகன் அடியார்களுக்கு அருள் செய்ய எழுந்தருளும்போது, அடியார்களுடைய உள்ளத்தில் உள்ள பயத்தைப் போக்கிக் குளிர்ச்சியைத் தந்து அநுகூலமாக நடக்கும் தன்மை வாய்ந்தது அந்த மயில். இப்போதோ உலகம் கிடுகிடு என்று நடுங்கும்படியாக அது நடக்கிறது. முருகப் பெருமானைத் தாங்கிக் கொண்டு சண்டப் பிரசண்ட வேகத்தோடு அது உலகு அதிர நடக்கும்போது, அந்த அதிர்ச்சியைப் பகைவனாகிய சூரனுடைய படைகள் உணருகின்றன. இன்னும் தேவர்களுடைய படை வரவில்லை; முருகப் பெருமானுடைய கணங்கள் வர வில்லை. எங்கோ நெடுந்தூரத்தில் மயில் வருகிறது. அப்படி வந்த அளவில் அதனுடைய அதிர்ச்சியைக் கண்டு சூரனுடைய படையில் உள்ளவர்கள் நடுங்குகிறார்கள். ''படையின் செம்புழுதி இன்னும் தோற்றாமல் இருக்க, படையின் ஒரு முனையும் சிறிதும் கண்ணுக்குப் படாமல் இருக்க, இப்படி உலகம் நடுங்குகிறதே! இனி அந்தப் படை வந்துவிட்டால் எப்படி இருக்கும்!''

என்று சூரனுடைய படை முழுவதும் நடுங்குகின்றது. படை வீரர் களுடைய உள்ளத்தில் உள்ள தைரியம் குலைகிறது. அப்போதே கால்வாங்கிப் பின்னிட்டு ஓடுகிறார்கள்.

எளிதில் முடித்தல்

மிகச் சிறந்த வீரர்கள் பகைவர்களோடு போரிடும் போது மிகவும் முயன்று வெற்றியைப் பெற்றார்கள் என்று சொல்வது வழக்கம் அன்று. பேராற்றல் உடையவர்கள் எளிதிலே ஒரு காரியத்தைச் செய்துவிடுவார்கள். கம்ப ராமாயணத்தில் இதைப் புலப்படுத்தும் காட்சி ஒன்று வருகிறது. இராமன் ஜனகனுடைய சபைக்குப் போயிருக்கிறான். விசுவாமித்திரர் அவனை அழைத்துச் சென்றிருக்கிறார். சீதாபிராட்டிக்குத் திருமணம் ஆகவில்லை. சிவபெருமானுடைய வில்லை வளைப்பார் யாரோ அவருக்கே அந்தப் பிராட்டியைத் திருமணம் செய்து கொடுப்பதாக ஜனகன் உறுதிமொழி சொல்லியிருக்கிறான். அந்த வில்லோ ஆயிரக்கணக் கான மக்கள் எடுத்துவந்து வைப்பதற்குரியது; அவ்வளவு பெரியது; வலியது. அதனை யாராலும் வளைக்க முடியவில்லை. 'இனி, சீதைக்குத் திருமணம் நடக்குமோ, நடக்காதோ' என்று ஐயுற்று ஜனகனும் பிறரும் வருத்தம் அடைந்திருக்கிறார்கள். அத்தகைய சமயத்தில் இராமன் வந்தான். அவனைக் கண்டவுடன் ஜனக னுக்குச் சிறிது நம்பிக்கை தளிர்த்தது. அவனது உள்ளக் குறிப்பை உணர்ந்த விசுவாமித்திரர் தம்முடைய கடைக்கண் பார்வையால் இராமனை ஏவினார். இராமன் வில்லின் அருகே சென்றான்.

''தடுத்து இமையாமல் இருந்தவர் தாளில்
மடுத்ததும் நாண்நுதி வைத்ததும் நோக்கார்;
கடுப்பினில் யாரும் அறிந்திலர்; கையால்
எடுத்தது கண்டனர்; இற்றது கேட்டார்''

என்று இராமன் வில்லை முறித்த காட்சியை வருணிக்கிறான் கம்பன். இராமன் வில்லை மெதுவாக எடுத்து, நேரே நிறுத்தி, நாண் கயிற்றைத் தடவி, ஒரு முனையிலிருந்து மற்றொரு முனை வரைக்கும் மெல்ல அந்த வில்லை வளைத்து, நாணைப் பூட்டினான் என்று சொல்லலாமே; சொல்லவில்லை. எடுத்தது தெரிந்தது; பட்டென்று வில் ஒடிந்த ஒலியை எல்லோரும் கேட்டனராம்.

அதுபோல் அருணகிரியார் இங்கே முருகப் பெருமானுடைய அரிய வீரத்தை எடுத்துச் சொல்கிறார். அவன் கையிலே படை எடுத்துப் போர் செய்ததைக் கண்டு படைகள் நடுங்கவில்லை. அதற்கு முன்பே மயில் நடந்த நடையிலே கதிகலங்கிப் போய் அந்தப் படைகள் குலைந்தனவாம்.

தேங்கிய அண்டத்து இமையோர் சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள், கலாபப் புரவிமிசை
தாங்கி நடப்ப முறிந்தது சூரன் தளம்.

கந்தபுராணத்தில் யுத்த காண்டத்தில் சூரபன்மனுடைய போர் மிக விரிவாகச் சொல்லப்பெற்றிருக்கிறது. அருணகிரிநாதப் பெருமான் இந்த ஒரு பாட்டிலே அதைச் சொல்லிவிடுகிறார். முதலிலே யுத்த சந்நத்தனாக ஆண்டவன் எழுந்தருளுகிறான். பின்பு யுத்த களத்திற்கு வருகிறான். அதன் பின்பு போர் செய்கிறான். அதை இரண்டு வரிகளில் சொல்லிவிடுகிறார்.

வேலின் செயல்

கலாபப் புரவி வந்த பிறகு அவன் தன்னுடைய வேலை எடுத்தான். அதை வாங்கி அனுப்பினான். இடையிலே நின்ற குன்றங்கள் எட்டும் குலைந்து போய் வழிவிட்டனவாம். சூரபன்மன் குன்றங்களைத் தன் ஏவலைச் செய்யும்படி வைத்து, அவற்றையே எல்லைக் கற்களாக அமைத்து, தனக்கு நிகர் யாரும் இல்லை என்று தருக்கி நின்றான். முருகன் தன் ஒப்பற்ற வேலை எடுத்து விட்டான். வேல் அந்தக் குலமலைகள் எட்டையும் இடத்தினின்றும் பெயரச் செய்துவிட்டது. ''முருகன் புரவியின் மேலே வருகிறான். அவனுக்கு நாம் வழிவிடவேண்டும். அவன் வருவதை இந்த வேல் தெரிவிக்கிறது'' என்று நினைத்தது போல, அந்த வேலை அனுப்பியவுடன் குன்றங்கள் எட்டும் வழிவிட்டன என்று சமத்காரமாகச் சொல்கிறார்.

தனிவேல், வாங்கி அனுப்பிடக் குன்றங்கள் எட்டும்
வழிவிட்டவே.

வாங்குதல் – பிரயோகம் செய்தல். தன் கையில் உள்ள ஒப்பற்ற ஞானசக்தியாகிய வேலை முருகன் சூரனை நோக்கி அனுப்பினான். இடையில் உள்ள குன்றங்கள் எல்லாம் பிறழ்ந்து சிதைந்

தன. சூரன் அழிந்தான் என்று சொல்லவில்லை. சூரனுடைய தளம் முறிந்துவிட்டது, மலைகள் எல்லாம் சிதைந்தன என்று சொல்லி, சூரசங்காரத்தைக் குறிப்பினால் பெற வைத்தார்.

வேலும் மயிலும்

இந்தப் பாட்டில் அருணகிரியார் முருகப் பெருமானுடைய பெருமையைத் தலைமையாக வைத்துச் சொல்லவில்லை. அவனுடைய வேல், மயில் என்பவற்றின் பெருமையைச் சொல்லவே இந்தப் பாட்டைப் பாடினார். பெருமாளைப் புரவியானது தன் மிசைத் தாங்கி நடக்கச் சூரன் தளம் முறிந்தது, வேலை வாங்கி அனுப்பக் குன்றங்கள் எட்டும் வழிவிட்டன என்று வருணிக்கிறார். இந்த வருணனை கலாபப் புரவியின் பெருமையையும், தனி வேலின் பெருமையையும் சொல்கிறது. 'வேலும் மயிலும்' என்று அந்த இரண்டையும் ஒருசேரக் கூறுவது முருகன் அடியார்களுக்கு வழக்கம்.

''பயந்ததனி, வழிக்குத் துணை வடிவேலும் செங்கோடன்
மயூரமுமே''

என்றும்,

''என்றும் வாய்த்ததுணை, கிரணக் கலாபியும்
வேலுமுண்டே''

என்றும் முன்னாலே சொன்னதை நாம் பார்த்தோம். தனித்தனியாகவும் வேலின் பெருமையையும், மயிலின் பெருமையையும் சில பாடல்களில் விரிவாகச் சொல்லியிருக்கிறார்.

''ஆடும் பரிவேல்''

என்று கந்தர் அநுபூதியிலும் இவற்றைச் சேர்த்துச் சொல்கிறார். இந்தப் பாட்டில் யுத்த சந்நத்தனாக இருக்கும் முருகனைக் காட்டி அப்போது மயிலும் வேலும் என்ன என்ன செய்கின்றன என்பதைச் சொன்னார்.

★

தேங்கிய அண்டத்து இமையோர்
சிறைவிடச் சிற்றடிக்கே
பூங்கழல் கட்டும் பெருமாள்
கலாபப் புரவிமிசை

தாங்கி நடப்ப முறிந்தது
சூரன் தளம்;தனிவேல்
வாங்கி அனுப்பிடக் குன்றங்கள்
எட்டும் வழிவிட்டவே.

(இயக்கம் இன்றித் தேக்கத்தைப் பெற்ற தேவலோகத்தில் இருந்த தேவர்கள் சிறையை விட்டு விடுதலை பெறும்படியாகத் தன் சிறிய அடியில் பூவேலை செய்த வீரக்கழலைக் கட்டும் பெருமாளாகிய முருகனது வாகனமாகிய மயில் தன்மேலே அவனைச் சுமந்து நடைபோட, சூரனுடைய படை குலைந்தது; முருகன் தன் ஒப்பற்ற வேலை எடுத்து விட எட்டுக் குலாசலங்களும் வழிவிட்டன.

தேங்கிய – ஓடாமல் நின்ற, தேங்கிய இமையோர் என்றும் கூட்டலாம். அண்டம் – தேவருலகம். பெருமாளுடைய கலாபப் புரவி; கலாபம் – தோகை, மிசை – தன்மேலே. அவனைத் தாங்கி என்று செய்யப்படு பொருளை வருவித்துப் பொருள் கொள்ள வேண்டும். முறிந்தது – கட்டுக் குலைந்தது. தளம் – படை. தனி – ஒப்பற்ற. வாங்கி – எடுத்து; பிரயோகம் செய்து என்றும் பொருள் கொள்ளலாம்; வேல் வாங்குதல் என்றும் கூறுதல் மரபு; ''வேல் வாங்கி பூங்கழல் நோக்குநெஞ்சே'' என்று அலங்காரத்தில் முன்னே வந்திருக்கிறது.

அனுப்பிட: அனுப்புதல் என்னும் சொல் புதிதாக வந்தது. அதை அருணகிரியார் ஆள்கிறார். ''அப்பாலோர் வண்டை அனுப்பின் அவர் காமம், செப்பாதே என்றால் திகைக்குமே'' என்பது தமிழ்விடு தூது.

குன்றங்கள் எட்டும் பிறழ்ந்து சிதைந்து வழிவிட்டன.

புரவி நடப்பத் தளம் முறிந்தது; வேல் அனுப்ப எட்டும் வழி விட்டவே என்று வினைமுடிவு செய்க.)

இது கந்தர் அலங்காரத்தில் 83 – ஆம் பாடல்.

கைவரும் தொண்டு

1

அச்சம் உடையவனுக்கு இன்பந் தரும் பொருள்கள் கிட்டினும் அவற்றை நுகர்ந்து மகிழும் மனநிலை இராது. மறுநாள் தூக்கிலிட வேண்டிய குற்றவாளிக்கு அறுசுவை யுண்டியை அளித்தால் அதை அவன் தக்க வண்ணம் சுவைத்து உண்ண முடியாது; அடுத்த நாள் உயிரை இழக்கப் போகிறோம் என்ற அச்சமே அவனுடைய உள்ளத்தில் இருந்து கொண்டிருக் கும். அச்சம் உண்டாவதற்குக் காரணமான நிகழ்ச்சியை மாற்றும் வலிமை அமைந்தால் அச்சம் நீங்கும்.

மரண பயம்

மரணம் வரும் என்ற எண்ணம் நம் உள்ளத்தில் அழுத்த மாகப் பதியும்போது நமக்கு அச்சம் உண்டாகும். அது இடை விடாமல் இருக்கும். அதனை மாற்றிக் கொள்ள, அச்சத்துக்குக் காரணமான செயலை மாற்றும் வலிமை நமக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை எழவேண்டும். மரண பயத்தை நீக்கும் முருகப் பெருமானுடைய துணை நமக்கு உண்டு என்று உறுதியான மன நிலை வேண்டும். அந்த உறுதி எளிதில் வராது. பல பெரியோர்கள், ''மரணத்துக்கு அஞ்ச வேண்டாம்; இறைவன் காப்பாற்றுவான்'' என்று சொன்னவற்றைப் படித்துச் சிந்தித்து நம்பிக்கை கொள்ள வேண்டும். அந்தப் பெரியோர்களுடைய வரலாற்றையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

மன உறுதி

துன்பம் வந்தால் அதை வென்றுவிடலாம் என்று உறுதியாக இருப்பதே ஒரு வலிமை. நெஞ்சத்திண்மையே அதற்குக் காரணம்.

அதற்கு மாறாகத் துன்பம் வருவதற்கு முன்பே, ''ஐயோ, வந்து விடுமே!'' என்று அச்சத்தில் ஆழ்ந்திருப்பதே ஒரு பலவீனம். வியாதி இல்லாதவன் தனக்கு வியாதி வந்துவிட்டதாக எண்ணினால் அவனுக்குச் சோர்வு தட்டும். அப்படிப் பலர் உலகில் இருக்கிறார்கள். அதை 'ஹைபோகாண்ட்ரியா' (Hypochondria) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அது ஒருவகைக் கிலியாகும். தனக்கு நோய் இருப்பதாகப் பல தடவை எண்ணுவதனால் வரும் நிலை அது.

நெஞ்சத் திண்மை உள்ளவன் இத்தகைய சோர்வுக்கு ஆளாக மாட்டான். நமக்கு வரும் துன்பத்தை நிச்சயம் போக்கிக் கொள்ளலாம் என்று உறுதியாக நம்பினால் தளர்ச்சி நீங்கும்; மேன்மேல் வேண்டியதைச் செய்யும் கிளர்ச்சி எழும். ''நமக்கு நோய் இல்லை; துன்பம் இல்லை'' என்று இடைவிடாமல் எண்ணுவதே ஒரு வகையான பரிகாரம். இதை ''ஆட்டோ ஸஜ்ஜெஷன்'' (Auto suggestion) என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். அந்த இயல்புடையவர்களுக்குத் துன்பத்தை வெல்லும் உறுதி உண்டாகும் என்று மன இயல்பை அறிந்தவர்கள் சொல்வார்கள். மேனாட்டு அறிஞர்கள் அதுபற்றிப் புத்தகங்கள் சில எழுதியிருக்கிறார்கள்.

திருவள்ளுவர் இதைச் சொல்கிறார். மனத்திண்மை உடையவர்களுக்குத் துன்பத்தை அலட்சியம் செய்யும் நிலை உண்டாகும் என்கிறார். துன்பம் அத்தகையவர்களைத் துன்புறுத்தாமல், தானே துன்பத்தை அடையுமாம்.

''இடும்பைக் கிடும்பைப் படுப்பர் இடும்பைக்
கிடும்பைப் படாஅ தவர்''

இயற்கையாகவே மனம் திண்மையாக இருந்து, ''நமக்குத் துன்பம் இல்லை; நம்மைத் துன்பம் ஒன்றும் செய்யாது'' என்று எப்போதும் உறுதியாக எண்ணுகிறவர்களுக்கு நன்மை உண்டாகும் என்பதைப் பலர் உணர்கிறார்கள். அந்தத் திண்மையோடு ஒரு பற்றுக்கோடும் இடைத்துவிட்டால் துன்பத்தைத் திண்ணமாகப் புறங்கண்டுவிடலாம். எல்லோருமே தம்முடைய பாவனையினால் உறுதியான நெஞ்சைப் பெறுவது அருமை. ஆனால் உறுதியை உண்டாக்கும் துணையைப் பற்றிக் கொண்டால் நெஞ்சத் திண்மை உண்டாகும்.

உறுதிக்கு ஏற்ற துணை

தளர்ந்துபோன கிழவனுக்கு உதவியாகக் கோல் இருக்கிறது. தானே நடக்க முடியாத குழந்தை அன்னையின் கையைப் பற்றிக் கொண்டு நடக்கிறது. இருவருக்கும் தாமே நடக்கும் வன்மை இல்லை. கிழவனும் குழந்தையைப் போல் யாரையாவது பற்றிக் கொண்டு நடக்கலாம். ஆனால் அவனை அணுகுவார் யாரும் இல்லை. அவனைக் கண்டாலே மக்கள் அருவருக்கிறார்கள். அதனால் உயிரில்லாத கோலை ஊன்றி நடக்க வேண்டியிருக் கிறது. குழந்தை இன்னும் நடக்கவே ஆரம்பிக்கவில்லை. கிழவனோ எத்தனையோ வகைகளில் நடந்து தளர்ந்து போய் விட்டான்; அதுபோல் மனம் நடக்கத் தெரியாமல் இருக்கலாம். அல்லது பொல்லாத நடை நடந்து தளர்ந்திருக்கலாம். அது இப் போது நிமிர்ந்து நடக்க வேண்டும். அவ்வாறு நடந்தால் துன்ப மின்றி இருக்கும். அதற்கு ஒரு தக்க பற்றுக்கோடு வேண்டும். அது இருந்துவிட்டால், நமக்கு எத்தகைய தீங்கும் வராது என்ற உறுதியோடு இருக்கலாம். அப்படித் தீங்கு வந்தாலும் அதனால் துன்பம் உண்டாகாது என்ற தைரியம் வரும். அந்தப் பற்றுக்கோடு எது? ஆண்டவன்தான்.

''சிற்றம்பலம் மேய
முற்றா வெண்திங்கள் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே''

என்று திருஞானசம்பந்தர் பாடியிருக்கிறார்.

நம்முடைய நாட்டில் இருந்த பெரியோர்கள் இறைவனிடம் உறுதியான நம்பிக்கை வைத்து நலம் பெற்றார்கள் என்பதை வரலாறுகளிலிருந்து உணர்கிறோம். அவர்கள் வரலாறுகள் இருக் கட்டும். மேல்நாட்டில் இன்று விஞ்ஞானம் பல வகையில் முன் னேறியிருக்கிறது. மனிதன் ஐந்து பூதங்களையும் தன் மனம் போல ஏவல் செய்யும்படி ஆக்குவதற்கு விஞ்ஞானம் துணை புரிகிறது. ஒரே கணத்தில் பல லட்சம் பேர்களைக் கொல்லும் அணுகுண்டை விஞ்ஞானத்தின் உதவியால் கண்டுபிடித்திருக் கிறார்கள். அதை முதலில் கண்டுபிடித்து ஜப்பான் நாட்டில் வீசியவர்கள் அமெரிக்க நாட்டினரே. அமெரிக்க நாகரிகத்தையும், விஞ்ஞான முன்னேற்றத்தையும் பார்த்தால் கடவுளையே மறந்து

விட்டு வாழ்கிறவர்கள் என்று நினைக்கத் தோன்றுகிறது. இந்த நாட்டில் பழைய வழிபாட்டு முறைகளை எள்ளி நகையாடும் சிலர், விஞ்ஞானத்தைப் பாராட்டியும், மெய்ஞ்ஞானம் என்று நாம் கூறுவதை இகழ்ந்தும் பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். விஞ்ஞானத்தைப் பற்றி ஒன்றும் தெரியாத அவர்களே கடவுள் நம்பிக்கை இல்லாதவர்களாக இருக்கும்போது, விஞ்ஞானத்தால் அற்புதச் செயல்களைச் செய்யும் அமெரிக்க நாட்டினருக்குக் கடவுளைப் பற்றி என்ன அக்கறை?

அமெரிக்காவில் கடவுள் நம்பிக்கை

உண்மை அது அன்று. அமெரிக்காவில் உள்ள மக்களில் யாரேனும் சிலர் கடவுளைப் பற்றிக் கவலைப் படாதவர்களாக இருக்கலாம். விஞ்ஞானிகள் கடவுள் உண்மையை மறுத்துப் பேசுவதில்லை. தெய்வபக்தியும், தெய்வத்தினிடம் திண்ணமான நம்பிக்கையும் உள்ள பலர் அந்த நாட்டில் வாழ்கிறார்கள். நம்மைக் காட்டிலும் அதிகமாக இறைவனிடம் இந்த நூற்றாண்டில் நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் அவர்கள் என்றுகூடச் சொல்லலாம்.

அண்மையில் நான் ஒரு புத்தகம் படித்தேன்.[1] கடவுளிடம் நம்பிக்கை கொண்டு வாழ்ந்து அதனால் நன்மை பெற்றவர்கள் பலர் எழுதிய கட்டுரைகளின் தொகுதி அது. அதன் முகவுரையில், ''சரியாக ஆறு ஆண்டுகளுக்கு முன்பு 1945-இல் அறிவுக் கொள்கைகளும் உலகாயதக் கொள்கைகளும் நிறைந்த உலகத்தில் அணுகுண்டு உற்பத்தியாயிற்று. அதனால் மனிதன் தன்னைத் தானே அழித்துக் கொள்ளும் வழியைப் பெற்றுவிட்டான். அந்த ஆறு ஆண்டுகளுக்கு முன்புதான் நியூயார்க்கில் ஒரு சிறிய நகரத்தில் பலசரக்குக் கடையில் ஒரு சிறிய அறையில் 'கைட்போஸ்ட்ஸ்' என்ற மாத வெளியீடு ஆரம்பமாயிற்று. உலகத்தின் இருள் படர்ந்த பகுதிக்கு ஒளியைக் கொணர்வது அதன் நோக்கம். அணுகுண்டு உலகத்தில் பயத்தை நிரப்பியது. ஆனால் இந்த வெளியீடோ நம்பிக்கை ஒளியைப் பரப்பியது. இரண்டுக்கும் மாறுபாடு மிகப் பெரிது. ஆனால் இரண்டும் உலகத்தின் தோற்றத்தை மாற்றுவதற்குரிய அடிப்படையான நோக்கத்தை உடையவை. ஒன்று அபார

1. 'New Guide Posts' - Edited by Norman Vincent Peale, Prentice Hall. Inc. New York, 3rd printing, January, 1954.

மான பௌதிக வலிமை. மற்றொன்று ஆன்மிக சக்தியின் பலம்''[2] என்று எழுதியிருக்கிறார்கள். அந்தப் புத்தகத்தில் வாழ்க்கையில் பல பல துறைகளில் ஈடுபட்டிருக்கும் பெரியவர்கள், ஆண்டவன் பால் கொண்ட நம்பிக்கையால் தமக்குக் கிடைத்த அநுபவங் களைச் சொல்லியிருக்கிறார்கள். மிகவும் சுருக்கமாகவும், ஆனால் தெளிவாகவும் எழுதியிருக்கிறார்கள். சினிமா நடிகர்கள், நகர சபைத் தலைவர்கள், உயர்தர நீதிமன்ற நீதிபதிகள் முதலிய பலர் எழுதியிருப்பதனால் அவற்றை நாம் நம்பலாம். இறைவனை நம்பியமையினால் எதிர்பாராத வகையில் தங்களுக்கு நலம் கிடைத்ததைப் பற்றிய நிகழ்ச்சிகளை அவர்கள் எழுதியவற்றில் காணலாம். சில உதாரணங்களைச் சொல்லுகிறேன்.

வக்கீலின் அநுபவம்

ஹைக்கோர்ட் ஜட்ஜாக இப்போது இருக்கிறவர் ஒருவர் தாம் வக்கீலாக இருந்தபோது நடந்த சம்பவம் ஒன்றைச் சொல் கிறார். அவர் வக்கீலாக இருந்தபோது அவரது குடும்பத்திற்கு மிகவும் உதவியாய் இருந்த நீக்ரோக்களின் வழி வந்த இரண்டு சிறுவர்கள் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டதாம். வக்கீலின் உறவினர் ஒருவர், ''அப்பா, இவர்கள் நம் குடும்பத்திற்கு மிகவும் உதவியாக இருந்தவர்கள். எந்தத் தவறான வழிக்கும் போக மாட்டார்கள். இவர்களுக்குப் பிரதிகூலமான சூழ்நிலையை வைத்துக் கொண்டு இவர்கள் மேல் கொலைக் குற்றம் சாட்டி யிருக்கிறார்கள். இவர்கள் கொலை செய்யவில்லை. இதை நிரூ பிக்கப் போதுமான சாட்சி இல்லை. ஆனாலும் இவர்கள் நிர பராதிகள். இந்த வழக்கை நீ நடத்தி இவர்களைக் குற்றத்தினின்

---

2. It was just six years ago, in a world of intellectual and materialistic 'isms' back in 1945, that the atom bomb was produced. With it, man had achieved a way of destroying himself.

   Also six years ago, in a little room over a small - town grocery store in upstate New York, a small monthly publication was born called GUIDE POSTS. Its purpose - to bring light to drakened areas of the world. The bomb filled the world with fear, while the publication from its inconspicuous inception was a voice of hope.

   - Foreword to New Guide Posts.

றும் விடுதலை பெறும்படி செய்வது உன் கடமை'' என்று கேட்டுக் கொண்டாராம்.

வக்கீலுக்கு ஒன்றும் புரியவில்லை. வழக்கு நீதி மன்றத்தில் நடந்தது. எதிர்க்கட்சி வக்கீல், அவர்களே கொலை செய்தார்கள் என்பதை உறுதிப்படுத்தப் பலவிதமான சாட்சிகளைக் கொண்டு வந்து நிறுத்தினார். அதற்கு எதிராகத் தக்க சாட்சிகள், தெய்வ நம்பிக்கை உள்ள வக்கீலுக்குக் கிடைக்கவில்லை. அவர் மிகவும் கவலைப்பட்டார். ஆண்டவனைப் பிரார்த்திப்பது அவருடைய வழக்கம். ஆகையால் அவர், ''இறைவனே, இந்த நிரபராதி களைக் காப்பாற்றுவதற்குரிய வழியை எனக்கு காட்ட மாட் டாயா?'' என்று பிரார்த்தித்துக் கொண்டார். வழக்கு முடிகிற தருணத்தில் இருந்தது. இன்னும் ஒருநாள்தான் வழக்கு நடக்க வேண்டும். அதற்குப் பிறகு வழக்கின் முடிவு கூறப்படும். ஆகவே அந்த வக்கீல் மிகவும் மனக் கலக்கத்துடன் ஆண்டவன் தான் வழிகாட்ட வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்.

திருவிளையாடற் கதை

இந்த நிகழ்ச்சியை நான் படித்தபோது பழைய கதை ஒன்று நினைவுக்கு வந்தது. பழங்காலத்தில் பாண்டியன் ஒருவன் ஒருவழக்கில் நீதி வழங்க முடியாமல் திண்டாடினான். அப்போது மதுரையில் உள்ள சோமசுந்தரக் கடவுளிடம் சென்று, ''எம் பெருமானே, இந்த வழக்கின் முடிவை நீதான் எனக்குத் தெளிவு படுத்த வேண்டும்'' என்று பிரார்த்தித்துக் கொண்டானாம்; இந்தக் கதை திருவிளையாடல் புராணத்தில் வருகிறது. திருப்புத்தூரில் இருந்து ஓர் அந்தணன் தன் மனைவி, குழந்தை ஆகிய இரு வரோடு மதுரைமாநகரை நோக்கி வந்து கொண்டிருந்தான். நடுவில் ஒரு காடு இருந்தது. அந்தப் பெண்மணிக்குத் தாகம் ஏற்பட்டமையினால் பருகுவதற்கு நீர் கொணர்வதற்காக அவன் சென்றான். அந்தப் பெண் தன்னுடைய குழந்தையோடு ஓர் ஆலமரத்தின் நிழலில் படுத்துக் குழந்தைக்குப் பால் கொடுத்துக் கொண்டிருந்தாள். அப்போது பெரிய பேய்க் காற்று வீசியது. மழையும் வரும் போல இருந்தது. அந்தக் காட்டிலே சுற்றிக் கொண்டிருந்த வேடன் ஒருவன் காற்று மழைக்காகச் சற்று ஒதுங்கலாம் என்று அந்த ஆலமரத்தின் மற்றொரு பக்கம் வந்து

தங்கினான். அவனுக்கு இந்தத் தாயும் குழந்தையும் இங்கே தங்கியிருப்பது தெரியாது.

சிறிது நேரத்திற்கெல்லாம் கையில் நீரை எடுத்துக் கொண்டு அந்தணன் வந்தான். மரத்தடியை அடைந்தான். அங்கே அவன் எதிர்பாராத ஒன்று நிகழ்ந்திருந்தது. அவன் மனைவி பிணமாகக் கிடந்தாள். அவள் மார்பிலே ஓர் அம்பு குத்தியிருந்தது. அவள் உடம்பிலிருந்து பெருகிய இரத்த வெள்ளத்தில் குழந்தை கிடந்து கதறியது. இதைக் கண்ட அந்தணன் மிகவும் துடித்தான். ''யார் என் மனைவியைக் கொன்றார்கள்?'' என்று கூவினான். பின்பு அந்த மரத்தைச் சுற்றிப் பார்த்த போது மரத்தின் மற்றொரு பக்கத்தில் வில்லும் அம்புமாக வேடன் நின்று கொண்டிருப் பதைக் கண்டான். இவன்தான் என் மனைவியைக் கொன்றிருக்க வேண்டுமென்று எண்ணி அவனை வையத் தொடங்கினான். வேடன், ''நான் ஒரு பாவத்தையும் அறியேன்'' என்று சொன் னான். அந்தணனுக்கு நம்பிக்கை இல்லை, ''வா, அரசனிடம் போகலாம்'' என்று தன் மனைவியின் பிணத்தைத் தோளிலும், குழந்தையைக் கையிலும் எடுத்துக் கொண்டு, வேடனை மற் றொரு கையால் பற்றி இழுத்துக் கொண்டு மதுரையை அடைந் தான்; பாண்டியனிடம் வந்து தன் வழக்கைச் சொன்னான். பாண்டியன் அந்த வேடனை விசாரித்தான். அவனோ தான் எந்தப் பாவமும் அறியாதவன் என்று சொன்னான். அவனை வற்புறுத்திக் கேட்டார்கள்; அடித்துக் கேட்டார்கள். மீண்டும் மீண்டும் தான் அந்தக் குற்றத்தைச் செய்யவில்லையென்றே அவன் சொன்னான். அந்த நிலையில் பாண்டியனுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் கலக்கம் உண்டாயிற்று. அப்போது தான் மதுரையில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சோமசுந்தரப் பெரு மானிடத்தில் சென்று, வேண்டிக் கொண்டான்.

''மன்றாடும் மணியேஇம் மறவன்றான் பார்ப்பணியைக்
கொன்றானோ, பிறர் பிறிதாற் கொன்றதோ? இதுஅற நூல்
ஒன்றாலும் அளப்பரிதாக் கிடந்ததால்; உன்னருளால்
என்தாழ்வு கெடத்தேற்றாய் என்றிரந்தான் அவ்வேலை.''

அப்போது இறைவன் அசரீரியாக, ''இந்த ஊருக்குப் புறம்பே வணிகர் தெரு ஒன்று இருக்கிறது; அங்கே செல். அங்கே ஒரு வீட்டில் திருமணம் நடக்க இருக்கிறது. அங்கே போனால் உனக்கு

உண்மை விளங்கும்'' என்று திருவாய் மலர்ந்தருளினான். அரசன் அந்தணனையும் அழைத்துக் கொண்டு அந்த வீட்டுக்குச் சென்று தனியே மறைவாக நின்றிருந்தான். அவர்களுடைய கண்ணுக்கு அப்போது ஒரு தோற்றம் உண்டாயிற்று. அங்கே திருமணக் கோலத்துடன் மனையில் உட்கார்ந்திருந்த மணப் பிள்ளையின் உயிரைக் கொண்டு போவதற்காக இரண்டு எம தூதர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் தமக்குள் பேசிக் கொண்டிருப்பது அரசனுக்கும், அந்தணனுக்கும் புலனாயிற்று. ''இவன் கட்டிளங் காளையாக இருக்கிறான். ஒருநோயும் இல்லை. இவன் உயிரை எப்படிக் கொண்டு போவது?'' என்று ஒருவன் கேட்டான். அதற்கு மற்றொருவன், ''இது ஒரு பிரமாதமா? அன்றைக்கு அந்தப் பிராமணப் பெண்ணினுடைய உயிரை நாம் கொண்டு போக வில்லையா? மரத்தின்மீது தொத்திக் கொண்டிருந்த அம்பைக் காற்றினாலே அவள்மீது பாயச் செய்து அவள் உயிரைப் போக்க வில்லையா? அத்தகைய தந்திரத்தை இங்கேயும் செய்தால் போகிறது. அதோ ஒரு மாடு கட்டியிருக்கிறதே; அந்தப் பசுமாடு தாலி கட்டும் போது அடிக்கிற வாத்திய முழக்கத்தில் மிரண்டு, கயிற்றை அறுத்துக் கொண்டு ஓடிவந்து, இந்த மணமகனை முட்டித் தள்ளிவிடும். அவனைக் சொல்வதற்கு இதுதான் தந்திரம்'' என்று சொன்னான். அரசன் காதில் இந்தப் பேச்சு விழுந்தது. உடனே அந்தணனை நோக்கி, ''பார்த்தாயா? உன் மனைவியை வேடன் கொல்லவில்லை. காற்றாலே விடுபட்ட அம்பு செய்த காரியம் அது'' என்று சொன்னான். அந்தணன் அந்தப் பேச்சை நம்பவில்லை. ''இங்கே நாம் கேட்ட வார்த்தைகளின்படி நடக்குமானால் அதை யும் நான் நம்புவேன்'' என்று சொல்லி, ''இன்னும் கொஞ்சம் காத்திருக்கலாம்'' என்றானாம். அவர்கள் இரண்டு பேரும் அங்கே தங்கியிருந்தார்கள். காலதூதர்கள் பேசினபடியே நிகழ்ச்சி நடந்தது. பின்பு அரசன் வேடனை விடுதலை செய்தான்.

புதிய கதை

முடிவு காண இயலாத வழக்குக்கு ஆண்டவனுடைய திருவருளால் முடிவு கண்டான் பாண்டியன். அது ஏதோ பழங் கதை என்று நாம் நினைக்கிறோம். ஆனால் அதைப் போலத்தான் இந்த அமெரிக்க வக்கீல் சொல்கிற உண்மை நிகழ்ச்சியும் இருக்

கிறது. அவர் இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டார். அன்று கோர்ட்டுக் கலைந்து வெளியே வந்தார். அப்போது யாரோ ஒருவர் ஒரு துண்டுக் கடுதாசைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தார்; ''இதைப் பாருங்கள்'' என்று சொல்விட்டுப் போய் விட்டார். அவர் இன்னார் என்று தெரியவில்லை. அது தினசரிப் பத்திரிகையில் வந்து கிழிக்கப்பட்ட ஒரு துண்டு விளம்பரம். ''துப்பறிபவருக்குரிய சான்றிதழைக் கொடுப்போம். அதற்கு இரண்டு டாலர் விலை'' என்று ஒரு விளம்பரத்தை யாரோ செய்திருந்தார்கள். அதுதான் அந்தத் துண்டு. கோர்ட்டில் இருந்து வெளியே வரும்போது அந்தத் துண்டு கிடைத்தது. அதைப் பார்த்துவிட்டுப் பையில் போட்டுக் கொண்டு வீட்டுக்கு வந்தார். அவருக்குக் கலவரமாக இருந்தது. ''எதற்காக அதை அவர் கொடுத்தார்?'' என்று யோசனை செய்து கொண்டிருந்தார்.

'சில பேர்கள் பொய்யாக அதிகாரம் இல்லாமல் துப்பு அறி பவர்களாக நற்சாட்சிப் பத்திரத்துடன் வருவார்கள் போலும்! இந்த வழக்கில் அப்படி யாராவது உண்டோ?' என்று யோசித் தார். அதைத் தொடர்ந்து மற்றொரு நினைவும் அவருக்குத் தோற்றியது. அவர் மேற்கொண்டிருந்த வழக்கில் குற்றவாளிகள் குற்றம் செய்தார்கள் என்று நிரூபிப்பதற்குத் துப்பறிபவர் ஒருவர் முக்கியமான சாட்சியாக இருந்தார். ஒருகால் அவர் முறையான நற்சாட்சிப் பத்திரம் பெறாதவராக இருக்கலாமோ என்ற சந்தேகம் அந்த வக்கீலுக்கு உண்டாயிற்று. அதோடு மற்றொரு விஷயமும் ஞாபகம் வந்தது. துப்பறிபவர் வெளியே வரும் போது, ''எங்கே எனக்குப் பணம்?'' என்று ஒருவர் கேட்டது காதில் விழுந்தது. அந்த நினைவையும் இந்த விளம்பரத்தோடு இணைத்துப் பார்த்தார் வக்கீல். ஒருகால் அவர் முறையாகச் 'சர்ட்டிபிகேட்' வாங்காத துப்பறிபவராக இருந்தால் அவருடைய சாட்சியும் செல்லாதே என்ற எண்ணமும் வந்தது. இறைவ னுடைய திருவருளால் அப்படியும் இருக்கலாம் என்று நினைத்தார்.

மறுநாள் வழக்காடத் தொடங்கும்போது அந்தத் துப்பறி பவரை மீட்டும் கூண்டில் நிறுத்தி, ''நீர் எங்கே படித்தீர்? உம் முடைய நற்சாட்சிப் பத்திரம் எங்கே?'' என்று கேட்டார். அவர் உண்மையில் போலித் துப்பறிபவர்; அதனால் நடு நடுங்கிவிட்டார். பிறகு அவர் சொன்ன சாட்சியம் பயன் இல்லாமல் போயிற்று.

குற்றவாளிகள் விடுதலை பெற்றனர். முன்பின் தெரியாத ஒருவர் அந்த விளம்பரத் துண்டைக் கொடுத்ததுதான் உண்மையான நிரபராதிகள் தண்டனை பெறாமல் விடுதலை பெற்றதற்குக் காரணம். அப்படி அது கிடைக்கும்படியாக இறைவன்தான் தூண்டினான் என்பதை அந்த வக்கீல் நம்பினார். இது ஒரு நிகழ்ச்சி.

பெண்மணியின் அநுபவம்

பின்னும் ஓர் உதாரணம். சினிமாவில் இருப்பவர்களுக்குத் தெய்வ நம்பிக்கை இராது என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் ஒரு பெண்மணி தன்னுடைய அநுபவத்தைச் சொல்கிறாள். அவளுக்கு அலங்காரம் நடந்து கொண்டிருந்தது. அலங்கரிப்பவர் பஞ்சை வைத்து அழகு செய்து கொண்டிருந்தார். அப்போது ஏதோ ஒரு மின்கருவியிலிருந்து பஞ்சில் நெருப்புப் பற்றிக் கொண்டுவிட்டதாம். அதனால் கண்ணிமை, புருவம் எல்லாம் நெருப்பினால் எரிந்துவிட்டன. உடனே அந்தப் பெண்மணியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனார்கள். கண்ணுக்கு மருந்து போட்டுக் கட்டிவிட்டார்கள். கண் பார்வை வருமோ இல்லையோ என்று டாக்டர்களும், மற்றவர்களும் அஞ்சினார்கள். நிச்சயமாக இந்தப் பெண் கண் பார்வையை இழந்து விடுவாள் என்றே டாக்டர்கள் எண்ணினார்கள். ஒரு வாரம் ஆயிற்று. கண் கட்டை அவிழ்த்தார்கள். கட்டுப் போட்டிருந்த காலம் எல்லாம் அந்தப் பெண்மணி ஆண்டவனையே எண்ணிக் கொண்டிருந்தாள். இளமையில் நடந்த ஒரு சம்பவத்தினால் அவளுக்கு இறைவனிடம் அசையாத நம்பிக்கை இருந்தது. அதனால்தான் அப்போதும் ஆண்டவன் காப்பாற்றுவான் என்ற உறுதியின்மேல் வேறு எதையும் நினைக்காமல் அவனையே பிரார்த்தனை பண்ணிக் கொண்டிருந்தாள். கண் கட்டை அவிழ்த்தார்கள். பார்வை நன்றாகத் தெரிந்தது. விரைவில் இமை மயிரும், மற்றவைகளும் வளர்ந்துவிட்டன. அவள் சொல்கிறாள்; ''கட்டுக்களை அவிழ்த்தேன். இமை பழையபடியே வளர்ந்திருந்தது. என்னுடைய முகத்தில் ஒருவகையான மாசும் இல்லை. என் பார்வை சரியான முறையில் அமைந்திருந்தது. டாக்டர்களுக்கு இது ஒரு பெரிய அதிசயமாக இருந்தது. என்னுடைய பிரார்த்தனையும், நம்பிக்கையும் விளைத்த விளைவு இதுத என்று உறுதியாகக் கருதுகிறேன்''

என்று எழுதியிருக்கிறாள். அந்தப் பெண்மணியின் பெயர் கேட் ஸ்மித் (Kate Smith).

இப்படிப் பலருடைய அநுபவங்களை அந்தப் புத்தகத்தில் பார்க்கலாம். நம்முடைய நாட்டில்தான் இறைவனிடம் நம்பிக்கை வைத்து அதனால் பல நலன்களைப் பெறுகிறார்கள் பக்தர்கள் என்றும் நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். இறைவனுக்கு இந்த நிலந்தான் சொந்தம் என்பதும் இல்லை. எந்த இடத்தில், எந்தக் காலத்தில் அவனை நினைத்தாலும், நம்பினாலும் அப்படி நினைப்பவர்களுக்கு அவன் அருள் செய்யக் காத்திருக்கிறான். இந்த அருமையான உண்மையை அந்தப் புத்தகத்தைப் படித்த போது நான் உணர்ந்து கொண்டேன். ஆகையால் நாம் இறை வனிடம் ஆராத காதலும், ஆழ்ந்த நம்பிக்கையும் வைத்தால், நிச்சயமாக மற்றவர்களால் கிடைக்கும் நன்மையைக் காட்டிலும் அவனாலே பல பெரிய நன்மைகள் கிடைக்கும்.

உறுதியான நம்பிக்கை

நாம் இறைவனிடம் வைக்கிற நம்பிக்கை உறுதியாகவும், உண்மையாகவும் இருக்க வேண்டும். பிறர் கண்டு நம்மைப் பக்தர்கள் என்று சொல்வதற்காக மாத்திரம் நம்பிக்கை உள்ளவர் களைப் போல நடித்தால் ஆண்டவன் நம் உள்ளே நின்று சிரிப்பான். அப்பர் சுவாமிகள் அதை ஒரு பாட்டில் சொல்கிறார்.

"நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும்பொன் னார்சடைப் புண்ணியன்
பொக்க மிக்கவர் பூவும்நீ ரும்கண்டு
நக்கு நிற்பன் அவர்தமை நாணியே."

2

கைமேல் பலன்

அருணகிரியார், முருகப்பெருமானை வாழ்த்தி உண்மை யான நம்பிக்கையோடு இருந்தால் பயன் கைமேல் கிடைக்கும் என்று சொல்கிறார். மறுமை வாழ்விலே அவனுடைய திருவரு ளால் பேரின்பம் கிடைக்கும் என்பது மாத்திரம் அன்று; இம்மை

வாழ்விலேயே நம் கண்முன்னே கைமேல் பலன் கிடைக்கும் என்று அவர் சொல்கிறார்.

மைவரும் கண்டத்தர் மைந்த கந்தா என்று வாழ்த்தும் இந்தக்
கைவரும் தொண்டன்றி மற்று அறியேன்.

மருந்து விரைவில் பலிக்குமானால் கைகண்ட மருந்து என்று சொல்கிறோம். கைகண்ட தெய்வம் என்று சொல்வதும் உண்டு. பலகாலமாகப் பலித்துவருவதை கைவந்தது என்று கூறுவார்கள். கைமேல் பயன் தரும் தொண்டை,

கைவரும் தொண்டு

என்கிறார். கைமேல் பலன் கிடைக்கும் கைங்கரியம் என்பது அதன் பொருள். இப்போது செய்கிற காரியத்திற்குப் பின்னால் பயன் உண்டு என்று நம்பிச் சாத்திரங்களைப் படித்து முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறோம். பயன் நெடுங்காலம் கழித்துக் கிடைப்பதாயிருந்தால் வேலை செய்கிறவர்களுக்கு இப்போது உற்சாகம் இருப்பது இல்லை. செய்கிற வேலைகளுக்கு உடனே பயன் கிடைக்க வேண்டுமென்று நினைக்கிற காலம் இது. ''கையிலே காசு, வாயிலே தோசை'' என்று ஒரு பழமொழி உண்டு. தாம் செய்கிற காரியங்களுக்கு உடனுக்குடன் பலன் கிடைக்க வேண்டுமென்ற ஆசையை இக்காலத்தில் வளர்த்து வருகிறார்கள். அத்தகைய மனப்பாங்கு உடையவர்களுக்கும் நம்பிக்கை ஊட்டும்படி அருணகிரியார் இந்தப் பாட்டைச் சொல்லியிருக்கிறார். 'இறைவனை நம்புங்கள், அவனுடைய திருநாமத்தைச் சொல்லி வாழ்த்துங்கள். அது கைமேல் பலன் தரும். நான் கண்டுகொண்ட கைவரும் தொண்டு இது' என்று உபதேசம் செய்கிறார். அவர் செய்யும் உபதேசம் வெறும் கற்பனை அன்று. உண்மை என்பதைத்தான் நான் முன்னே சொன்ன அமெரிக்க நாட்டு வெளியீடும் உறுதி செய்கிறது.

முயற்சியும் பயனும்

சில காரியங்கள் செய்தால் சில காலம் கழித்தே பயன் உண்டாகும். சாப்பிட்டவுடன் பசி தீருகிறது. அதுபோல் மருந்து உண்டவுடன் நோய் தீராது. சிறிது நாள் ஊறி உடம்பிலுள்ள தீங்குகளை எல்லாம் போக்கின பிறகுதான் மருந்தின் பயன்

வெளிப்படும். தென்னை மரத்தை நட்டுப் பத்து ஆண்டுக்குப் பிறகு பயன் தரத் தொடங்கினால் அது நெடுங்காலம் வாழும். நேற்றுக் காலையில் விதைத்த கீரையை ஒரு மாதத்திற்குள் சமையல் பண்ணிச் சாப்பிடலாம். விரைவிலே பயன் கிடைக்கிற காரியங்கள் நெடுநாள் நில்லா. நமக்குக் கிடைக்கும் பயன்கள் எத்தனைக்கு எத்தனை எளிதில், விரைவில் கிடைக்கின்றனவோ அவ்வளவு எளிதில் விரைவில் அவற்றைத் தரும் பொருள் போய்விடும். நினைத்த மாத்திரத்தில் பலர் எழுதுகிறார்கள்; சிந்திக்காமல் எழுதுகிறார்கள். அந்த எழுத்துப் பலகாலம் நிற்பது இல்லை. ஆனால் திருவள்ளுவர் குறளை இயற்றினார். அவர் நிச்சயமாகப் பலகாலம் சிந்தித்துத்தான் அதை எழுதி இருக்க வேண்டும். அவருடைய சிந்தனையின் உரம் அந்த நூல் நெடுங் காலம் வாழ்வதினின்றும் தெரிகிறது. எளிதில் பயன் தருவன நெடுநாள் நில்லா, அரிதில் பயன்கொடுப்பன நெடுநாள் நிற்கும் என்பது பொது நியதி.

எளிதிலே பயன்

ஆனால் அருணகிரிநாதர் சொல்கிற அற்புதம் வேறு வகையில் இருக்கிறது. ஆண்டவனுடைய திருவருள் எளிதில் கிடைக்கும். அதனை யார் உண்மையாக நம்புகிறார்களோ அவர் களுக்கு எளிதில் கிடைக்கும். அப்படிக் கிடைக்கும் பயன் நெடுங் காலம் நிற்கும்; நித்தியமாகவே நிற்கும். இவ்வளவு எளிதா என்று தோன்றும். அதற்கு முன் அரியது ஒன்று இருக்கிறது. நாம் முருகப் பெருமானை உறுதியாக நம்புவது என்பது எளிதில் உண் டாவதில்லை. அதற்கு எத்தனையோ பிறவிகள் எடுக்கவேண்டு மென்று பெரியவர்கள் சொல்கிறார்கள். இந்தப் பிறவியில் உறுதியாக நம்பிவிட்டால் கைமேல் பலன் கிடைக்கும் என்று சொன்னாலும், அந்த உறுதியான நம்பிக்கைக்குப் பல பிறவி களிலே தொடர்ந்து பயின்றிருக்க வேண்டும். 'பல தடைகளைக் கடந்து தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாக வேண்டும்' என்று மணிவாசகர் பாடுகிறார்.

அவற்றை எல்லாம் நாம் இப்போது பிரத்தியட்சமாகக் காண்பது இல்லை. நாம் காண்பது இப்போது நிகழ்கிற நிகழ்ச்சி தான். ஆகையால் அதைக்கொண்டு பார்த்தால், இறைவனை

முழு மனத்துடன் நம்புகிறவர்களுக்குக் கைமேல் பலன் கிடைக்கிறது என்றே தெரியும்.

எளிதில் கிடைப்பதனால் உண்மையான பொருளுக்கு மதிப்பு கிடையாதா? தெருவில் ஒரு பைசாக் கிடக்கிறது. அதற்குப் பைசா மதிப்புத்தான். அதே இடத்தில் பவுன் கிடக்கிறது. சாலையில் கிடந்ததனால் அது தன் மதிப்பை இழந்துவிடாது. ஆனால் சாதாரணமாகச் சாலையில் பவுன் கிடைப்பதில்லை. கிடப்பதாக இருந்தால் அதனுடைய மதிப்புச் சிறிதும் தாழ்வது இல்லை. பொதுவாக எளிதில் கிடைப்பது விரைவில் போகும் என்றும், நீண்டு முயன்று கிடைப்பது நெடுங்காலம் நிற்கும் என்றும் சொன்னாலும் அந்த விதிக்கு விலக்காகப் பல நிகழ்ச்சிகள் நிகழ்வது உண்டு. ஆண்டவனுடைய திருவருள் அத்தகையது. உண்மையான நம்பிக்கை உள்ளவர்களுக்கு எளிதில் கிடைக்கின்ற அது, எல்லாக் காலத்திற்கும் நலம் செய்வதாக இருக்கிறது. ஆகையால் இறைவனிடத்தில் முழு நம்பிக்கை வைத்து வாழ வேண்டும்.

நாம் மக்களிடத்திலே ஓரளவுதான் நம்பிக்கை வைத்திருக்கிறோம். அவர்களால் நமக்கு நலம் இருக்கும் மட்டும் நம்பிக்கை. சில சமயங்களில் அதுவும் உறுதியாக இருப்பது இல்லை. கண்ணுக்குக் கண்ணாக நம்முடன் வாழ்கிற மக்களிடத்தில்கூட ஆழ்ந்த நம்பிக்கை உண்டாவது அரிதானால், கண்ணால் காணாத பொருளாக உள்ள கடவுளிடம் எளிதில் வந்துவிடுமா? வந்து விட்டாலே அதனுடைய பயன் உடனே கிடைக்கும்; உறுதியாகக் கிடைக்கும்; பல காலத்திற்கும் கிடைக்கும். ஆகையால்தான் அருணகிரியார் முருகப் பெருமானை வாழ்த்துகின்ற தொண்டு கைவரும் தொண்டு என்று உறுதியாகக் கூறுகிறார்.

வாழ்த்தும் தொண்டு

அத்தகைய தொண்டு எவ்வாறு நிகழும் என்பதையும் அருணகிரியார் சொல்கிறார். ''பல இடங்களில் நீங்கள் பெற்ற இன்ப அநுபவத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். உடம்பை மறந்து நிற்கும் நிலை பற்றிச் சொல்லியிருக்கிறீர்கள். இந்த அநுபவங்களை அடைவதற்கு நீங்கள் என்ன தவம் செய்தீர்கள்? என்ன யோகம் செய்தீர்கள்? என்ன ஜபம் செய்தீர்கள்?'' என்று நாம்

அவரைக் கேட்கலாம். அவர் சொல்கிறார்; ''நான் ஒரு தவமும் செய்யவில்லை. யோகமோ இந்திரிய நிக்கிரகமோ நான் செய்ய வில்லை. மிகவும் எளிய காரியம் ஒன்றைச் செய்தேன்.

மைவரும் கண்டத்தர் மைந்த கந்தா

என்று எப்போதும் சொல்லிக் கொண்டிருந்தேன். இதை அன்றி வேறு எதையும் நான் அறியேன். உடம்பை வருத்தியும், உணவைக் குறைத்தும், பேச்சை அடக்கியும் பலர் தவம் செய் கிறார்கள். ஆனால் என்னுடைய மனம் அந்த வகையில் செல்ல வில்லை. நான் அவன் திருநாமத்தைச் சொல்லிச் சொல்லி வாழ்த் தினேன்'' என்கிறார். ''இப்படி வாழ்த்தும் தொண்டன்றி வேறு ஒன்றும் நான் அறியேன்'' என்கிறார்.

முருகனை அவர் வாழ்த்துகின்ற விதத்தைப் பார்க்கலாம்.

மைவரும் கண்டத்தர் மைந்த, கந்தா

'நீலகண்டப் பெருமானுடைய திருக் குமாரனே' என்பது முதல் வாழ்த்து.

செல்வர்களின் நிலை

ஏழைகள் வெளியூருக்குப் போவதற்குப் பயப்படுவதில்லை. பணம் படைத்தவர்களோ வேறு இடங்களுக்குப் போவது என்றால் சற்றே தயங்குகிறார்கள். சுகமாக வீட்டில் படுத்துச் சாப்பிட்டுக் கொண்டிருப்பவர்கள் வெளியில் போனால் உணவுக் கும், உறக்கத்திற்கும் வேண்டிய வசதிகள் இருக்குமோ என்று யோசிப்பார்கள். ''அங்கே தக்க உணவுச் சாலை இருக்குமா? போவதற்கு வண்டியில் முதல் வகுப்பில் இடம் கிடைக்குமா?'' என்றெல்லாம் ஆராய்ச்சி செய்து அவற்றை எல்லாம் தெரிந்து கொண்டபின்தான் போவார்கள். இந்த வசதிகள் கிடைக்கவில்லை என்றால் பிரயாணத்தைக் கைவிடுவார்களே யொழிய, எப்படி இருந்தால் என்ன என்று போக மாட்டார்கள். சுகத்தில் சிறிதளவு கூடக் குறையக் கூடாது என்பது அவர்கள் எண்ணம். ஏழைகளோ எந்தச் சிறிய வசதி இருந்தாலும் போதும் என்று வாழ்கிறார்கள். அவர்களுக்குப் பெரிய துன்பம் வந்தாலும் அதனை ஏற்று நிற்கின்ற தைரியம் இருக்கும். தைரியம் என்பதைவிடப் பழக்கம் என்று சொல்வது சிறப்பு. பணக்காரர்களுக்குச் சிறிய துன்பம் வந்தாலும் மிகப் பெரிதாக இருக்கும்.

தேவர்களின் அச்சம்

எல்லாவகையான போகங்களையும் பெற்று வாழ்கிறார்கள் தேவர்கள். அவர்களுக்குச் சோர்வே இல்லை; துக்கமே இல்லை. எப்போதும் போகத்தை நுகர்ந்து கொண்டிருப்பார்கள். அவர்களுடைய உடம்பு மினுமினு என்று இருக்கும். நோய் சிறிதும் இல்லாத திருமேனி உடையவர்கள் அவர்கள். இத்தகைய போகிகளுக்குப் பெரிய துன்பம் ஒன்று வந்தது. அடுத்த நிமிஷத்தில் நாம் வாழ்வோமோ இல்லையோ என்று அஞ்சும்படியான துன்பம் அது. இறப்பே இல்லாமல் வாழ வேண்டுமென்று எண்ணி அவர்கள் அமுதம் பெறப் பாற்கடலைக் கடைந்தார்கள். அப்போது திடீரென்று ஆலகால விடம் எழுந்தது. அது பரவினால் முப்பத்து முக்கோடி தேவர்களும் அழிந்து போய்விடுவார்கள். எல்லா அண்டங்களும் சர்வநாசம் அடையும். அந்தத் தீங்கிலிருந்து தப்புவதற்கு, அல்லது வேறுவகையில் அதைத் தொலைப்பதற்கு வழியில்லாமல் திண்டாடினார்கள். சிவபெருமானிடம் ஓடிவந்து காலில் வீழ்ந்து கெஞ்சினார்கள். சிவபெருமான் தேவர்களுடைய சங்கடத்தைப் போக்குவதற்கு ஆலகால விடத்தை உண்டு நீலகண்டன் என்ற பெயரைப் பெற்றான். வெளியில் இருந்தால் தேவர்களைக் கொல்லும் என்றும், வயிற்றுக்குள்ளே போனால் அங்குள்ள அண்ட சராசரங்கள் அத்தனையும் அழிந்துவிடும் என்று கருதி அதனைத் தன்னுடைய கண்டத்தில் நிறுத்தினான். கண்டத்திற்குள் இருக்கும் ஆலம் தன்னுடைய கருமை நிறத்தைக் காட்டிக் கொண்டு அங்கே நின்றது. அதனால் சிவபெருமானை நீலகண்டன் என்று சொல்கிறார்கள்.

மைவரும் கண்டத்தர்

என்று அருணகிரியார் சொல்கிறார். மையின் கரிய நிறம் தன்னிடம் வந்து அமைந்த திருக்கழுத்தை உடையவர் என்று பொருள். எவ்வளவு பெரிய செல்வர்களாக இருந்தாலும் அவர்களுக்கும் தீங்கு வரும் என்றும், அப்படி வருங்கால் அவர்கள் தம்முடைய ஆற்றலால் அதனைக் காக்கும் வல்லமை பெறமாட்டார்கள் என்றும், இறைவனை வந்து சரணடைந்தால் எத்தகைய பெரிய தீங்கானாலும் எளிதில் மாற்றி அவன் நலம் செய்வான் என்றும் அடியார்களுக்குக் காட்டிக்கொண்டு நிற்கிறது அது.

பிறருக்கு வரும் தீங்கைத் தன்னைச் சரணாகதி அடைந்த மாத்திரத்தில் போக்குகின்ற கருணாகரன் சிவபெருமான். அவனுடைய பிள்ளை எப்படி இருப்பான்? ''முருகா'' என்று வாழ்த்தினாலே போதும்; தன்னுடைய கருணையை ஈவான். இந்த எண்ணங்களை எல்லாம் வைத்துக் கொண்டு,

மைவரும் கண்டத்தர் மைந்த!

என்று அருணகிரியார் வாழ்த்தினார். பின்பு,

கந்தா!

என்று சொல்கிறார்.

கந்தன்

கந்தன் என்ற திருநாமத்தைப் பற்றி நாம் பலமுறையும் பார்த்து இருக்கிறோம். மிக்க இன்பத்தைத் தருகிறவன் கந்தன் என்று வடமொழியாளர் கூறுவர். உலகத்தில் எப்போதும் கவலையினால் கலக்கம் அடையும் மக்களுக்கு முருகனுடைய நினைவு உண்டானால் கலக்கம் தீர்ந்து துன்பம் நீங்கி அமைதியும் இன்பமும் உண்டாகும். இன்பத்தைத் தரும் காரணத்தினால், மக்களுடைய உள்ளத்தை மகிழ்ச்சி அடையச் செய்யும் காரணத்தினால், கந்தன் என்ற திருநாமத்தைப் பெற்றான் என்று சொல்வார்கள். ''துன்பத்தை நீக்கும் சிவபெருமானுடைய பிள்ளையே, இன்பத்தை ஆக்குபவனே'' என்று முருகப் பெருமானை வாழ்த்தினார் அருணகிரியார்.

மைவரும் கண்டத்தர் மைந்த, கந்தா!

என்ற இரண்டு நாமங்களும் அந்தக் குறிப்புப் புலனாகும்படி செய்கின்றன.

'நான் கைமேல் பலன் அளிக்கும் இந்தத் தொண்டைத் தவிர வேறு ஒன்றையும் செய்து அறியேன். ஆண்டவனே, எனக்கு இது தா, அது தா என்றுகூடக் கேட்கவில்லை. அவனுடைய திருநாமங்களை உறுதியான நம்பிக்கையுடன் நினைந்து வாழ்த்தினேன். அதனால் கைமேல் பலன் கிடைத்தது. மற்றவர்கள் என்ன என்னவோ செய்வதாகச் சொல்லி ஏமாந்து நிற்கிறார்கள். காவி உடுத்தும் தாழ்சடை வைத்தும் காடுகள் புக்கும் தடுமாறுகிறார்

கள். காயம் ஒறுத்தும் காய்கனி துய்த்தும் காசினி முற்றும் திரிகிறார்கள். அவற்றை எல்லாம் நான் செய்யவில்லை. அவனை வாழ்த்துகின்ற ஒன்றை மாத்திரம் விடாப் பிடியாகப் பிடித்துக் கொண்டிருந்தேன். அது எனக்குக் கைவரும் தொண்டாகப் பயன் தந்தது' என்று நாம் விரிவாகப் பொருள் கொள்ளும்படியாக அருணகிரியார் பாடுகிறார்.

1

விண்ணப்பம்

இனி அடுத்தபடியாக முருகப் பெருமானிடத்தில் ஒரு விண்ணப்பத்தைச் செய்து கொள்கிறார்.

கற்ற கல்வியும் போய்ப்
பைவரும் கேளும் பதியும் கதறப் பழகி நிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும்போது உன் அடைக்கலமே.

''ஆண்டவனே, நான் இப்போதே சொல்லி வைக்கிறேன்; 'இன்ஷூரன்ஸ்' செய்கிறேன். என்னுடைய உடம்பை நான் விடும்போது நீதான் அடைக்கலம். இனிமேல் நான் இறந்து பிறக்கிற துன்பம் எனக்கு இல்லை. இப்பொழுதே நான் நல்வாழ்வு வாழ்கிறேன். இப்போது வாழ்கின்ற வாழ்க்கை எப்படி உண்மையோ அதுபோல நான் இறந்துபடும்போது நீ காப்பாற்றுவாய் என்ற நம்பிக்கையும் உண்டு. அதனால் உண்மையாக நீதான் அடைக்கலம் என்று சொல்கிறேன். இம்மையில் உன்னுடைய திருவருளால் பெறுகின்ற இன்ப வாழ்க்கையைப் பார்க்கும்போது நிச்சயமாக மறுமையில் நீ என்னைப் பாதுகாப்பாய் என்ற உறுதிப்பாடு உண்டு'' என்ற எண்ணத்தோடு அவர் பாடுகிறார்.

துணையால் வரும் உறுதி

இந்த வாழ்க்கையில் ஆண்டவனை நினைக்காமல் வேறு பலவற்றை நினைக்கிறவர்கள் தக்கபடி வாழ்வது இல்லை. உடம்போடு உயிர் ஒட்டி இருப்பது வாழ்வு என்று சொல்ல முடியாது. தேகம் உறுதியாக இருந்தால்தான் நன்றாக வாழ முடியும். மனமும் உறுதியாக இருக்க வேண்டும்.

உறுதி இல்லாதவர்கள் எந்தச் சமயத்தில் யாரால் துன்பம் வருமோ என்று அஞ்சுவார்கள். அப்படி அஞ்சும்போது தங்கள் சக்தியை இழக்கிறார்கள். ஆகையால் பயன் பெறுவது இல்லை. கால் இருந்தும் பயன் பெறுவதில்லை. கண் இருந்தும் குருடர் களாக இருக்கிறார்கள். அவர்கள் உடம்போடு உயிர் ஒட்டி வாழ்ந்திருந்தாலும் ஒவ்வொரு நாளும் பலமுறை இறந்தது போன்ற துன்பத்தை அநுபவிக்கிறார்கள். 'கோழைகள் பலமுறை சாகிறார்கள்' என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு கணமும் செத்துக் கொண்டிருக் கும் கோழைகளுக்கு அச்சத்தைப் போக்கிக் கொள்வதற்குரிய துணை கிடைத்தால் அந்த நிலை மாறிவிடும். அந்தத் துணை இறைவன் திருவருள்தான். இறைவன் திருவருள் இல்லாத வரைக்கும் உலகத்தில் எல்லாப் பொருளும் அச்சத்தைத் தந்து கொண்டிருக்கும். நலம் செய்வதென்று சொல்லும் பணம் கூட மிகுதியான கவலையை அளிப்பதாகவும், உயிரை இழப்பதற்குக் காரணமாகவும் இருப்பதை உலக வாழ்வில் நாம் பலமுறை கண்டிருக்கிறோம். மனைவியைக் கணவன் மரணம் அடையச் செய்வதையும், கணவனை மனைவி மரணம் அடையச் செய் வதையும், பிள்ளை தந்தையை மரணம் அடையச் செய்வதையும், இப்படி நெடுங்காலம் ஒட்டி உறவாடிய தோழர்களே பொருள் காரணமாகக் கொலை செய்பவர்களாக மாறுவதையும் பல ருடைய வரலாற்றிலிருந்து நாம் அறிகிறோம்; இன்னும் கேட்க இருக்கிறோம். ஆகையால் பணம் படைத்தவனே பலம் அடை வான் என்று உறுதி உண்டாவதில்லை.

அரசர்களுக்கு எப்போதும் சந்தேகந்தான். ஒற்றின் மேல் ஒற்று வைத்து அவர்கள் ஆராய்ந்து கொண்டே இருப்பார்கள்.

"தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுதகண் ணீரும் அனைத்து"

என்று வள்ளுவர் சொல்கிறார். கும்பிடுபவர்களைக்கூட நம்பக் கூடாதாம். அவர்கள் கும்பிடும் கைக்குள்ளே ஆயுதம் ஒளித்து இருக்குமாம். மகாத்மா காந்தியைக் கொன்றவன் முதலில் கும்பிடத்தானே கும்பிட்டான்? அந்தக் கும்பிட்ட கையிலேதான் அவரைக் கொன்ற ரிவால்வர் இருந்தது.

இப்படி உலக வாழ்வில் துன்பம் எவ்வாறு யாரிடம் இருந்து வருமோ என்று அஞ்சிச் செத்துக் கொண்டிருக்கிறோம். அந்த அச்சம் போகவேண்டுமானால், அத்தகைய பெரிய துன்பத்தை மாற்றிக் காப்பாற்றும் அருளாளன் ஒருவன் நமக்குத் துணை இருக்கிறான் என்ற நம்பிக்கை இருக்க வேண்டும். அப்போது எவ்வளவு கொடிய பிராணியாக இருந்தாலும் அதைக் கண்டு நமக்குத் துன்பம் இல்லை என்ற உறுதி வரும்.

''தின்ன வரும்புலி தன்னையும் அன்புடன்
சிந்தையிற் போற்றிடுவாய்''

என்று பாரதியார் சொல்கிறார். அப்போது அவருடைய மன நிலை பராசக்தியின் திருவருளிலே உறுதியான நம்பிக்கையோடு இருந்தது.

பயமற்ற நிலை

புறநானூறு முதலிய நூல்களிலே இமயத்தில் வாழும் முனிவர்களைப் பற்றிய வருணனை வருகிறது. அவர்கள் அங்கே வேள்வி செய்கிறார்களாம். அந்த வேள்விச் சாலையைச் சுற்றிச் சூழ மான் நிற்குமாம். யானை விறகு கொண்டு வந்து கொடுக்குமாம்.

''களிறுதரு விறகின் வேட்கும்''

என்று வருகிறது. குரங்குகள் முற்றத்தைப் பெருக்குமாம். கண் ணால் கண்டதை அப்படியே செய்கின்ற வழக்கம் உடையவை அல்லவா அவை? அங்குள்ள முனிவர்கள் யாரும் தங்களுக்கு ஊறு செய்ய மாட்டார்கள் என்று எண்ணி அந்த விலங்குகள் அப்படி வாழ்கின்றன. காட்டிலே வாழ்கின்ற மக்களைக் கேட்டால் இந்த உண்மை புலனாகும்.

சமீபத்தில் வேட்டையாடுவதில் வல்ல ஒருவரை நான் கண்டேன். ''புலி சிங்கம் முதலிய கொடிய விலங்குகளும் தம்மை மனிதன் துன்புறுத்துகிறான் என்று நினைத்தால்தான் அவன்மேல் பாய்கின்றன. நாம் ஒன்றும் செய்யாமல் நடமாடிக் கொண்டிருந்தால் அவை சும்மா பார்த்துவிட்டுப் போய்விடும். நம்மை மரங்களைப்போல எண்ணி ஒன்றும் செய்யாமல் விட்டு விட்டுப் போகும்'' என்று சொன்னார். ரமண மகரிஷியிடத்தில் குரங்கும் அணிலும் அருகில் வந்து பழகியதைப் பார்த்தோம்.

நம்மிடம் அவை இப்படிப் பழகுவது இல்லை. நம்முடைய மனத்தில் இறைவன் பாலுள்ள உறுதியானது எல்லா உயிர்களிடத்திலும் உள்ள அன்பாக விரியும்போது அந்த உயிர்கள் நம்மைக் கண்டு அஞ்சாத நிலை உண்டாகும். அவர்கள் சர்வபூத தயாபரர்களாக விளங்குவார்கள். அப்போதுதான் பரமேசுவரனிடத்திலிருந்து இடையறாத பாதுகாப்பு அவர்களுக்குக் கிடைக்கும்.

சுகப் பிரம்மம் பிறந்தவுடன் வெளியே கிளம்பி விட்டாராம். வியாசபகவான், ''குழந்தாய்'' என்று அவரை அழைத்தபோது எல்லா மரங்களும், எல்லாப் பொருள்களும், ''ஏன், ஏன்?'' என்று கேட்டனவாம். சுகமுனிவர் எல்லாம் தாமாகவே இருக்கும் நிலையை உடையவராக இருந்தார். அதனால் மரங்களும் மட்டைகளும் விலங்குகளும் ஏன் என்று கேட்டதாகப் பாகவதம் கூறும்.

யாருக்கு இறைவனிடத்தில் அன்பும், அது காரணமாக எல்லா உயிர்களிடத்தில் தயையும் உண்டாகின்றனவோ அவன் அபயனாக வாழ்வான். அவனுக்குப் பிறன் ஒருவனால் அச்சம் உண்டாக நியாயம் இல்லை. நாம் வேறு, பிறர் வேறு என்று வாழ்கிறவர்களுக்குத்தான் அத்தகைய அச்சம் உண்டாகிறது. நம்முடைய உள்ளத்தில் இருக்கிற பேதமே, உலகம் என்கிற கண்ணாடியில் எதிர் ஒளி காட்டுகிறது. நாம் பல கனவுகளைக் காண்கிறோம். அந்தக் கனவுகள் எல்லாம் நம்முடைய அடி மனத்தில் இருக்கிற ஆசைகளையும், குறைகளையும் நிரப்புகின்ற கனவுகளாக இருக்கும். உண்மையாக இறைவனிடத்தில் பற்றுக் கொண்டு வாழ்ந்திருந்தால் கனவிலும் நனவிலும் தைரியம் ஊட்டுகின்ற நிகழ்ச்சிகளையே காணலாம். எத்தனை கற்றாலும் இந்த மனநிலை நமக்கு வருவது இல்லை. கற்கக் கற்க நம்முடைய சந்தேகங்கள் அதிகமாகின்றன. நம்பிக்கை குறைகிறது. அகங்காரம் மிகுதியாகிறது. இவ்வளவும் இறந்துபோகும்போது நமக்குப் பயன் தருவது இல்லை. ஆகையால் மரண சமயத்தில் நம் முடைய வாழ்வில் அச்சம் இல்லாமல் உறுதி வரவேண்டுமானால் இப்பொழுதிலிருந்தே பழக்கம் செய்துகொள்ள வேண்டும். நாம் கற்ற கல்வி அத்தனையும் அப்போது கை கொடுப்பது இல்லை.

மைவரும் கண்டத்தர் மைந்த கந்தா

என்று சொல்லும் கைவரும் தொண்டே பலிக்கும். இதை அருணகிரியார் சொல்கிறார்.

கல்வியால் பயன் இல்லை

கற்ற கல்வியும் போய்

என்கிறார்.

''நஹி நஹி ரட்சதி டுக்ருங்கரணே''

என்று சங்கராசாரிய சுவாமிகள் சொல்கிறார். இலக்கண சூத்திரத்தை நினைந்து அப்படிப் பாடுகிறார். கல்விக்குள்ளே மிகவும் நுட்ப மானது இலக்கணம். இந்தக் காலத்தில் விஞ்ஞானம் என்று வைத்துக் கொள்ளலாம். பழங்காலத்தில் இலக்கணப் புலவர்களைக் கண்டால் எல்லோருக்கும் அச்சம். அவர்களைப் பெரிய புலவர் கள் என்று சொல்வார்கள். அதுபோல இன்று படிப்புக்குள்ளே விஞ்ஞானப் படிப்பே பெருமை என்று எல்லோரும் கொள்கிறார் கள். பஞ்ச பூதங்களைத் தம் ஆற்றலுக்குள் நிறுத்தி வேலை வாங்கும் சக்தி விஞ்ஞானிகளுக்கு இருக்கிறதென்பதைப் பார்த்துத் தான் அவர்கள் இறைவனைவிடப் பெரியவர்கள் என்று நாம் நம்புகிறோம். அத்தகையவர்களுடைய விஞ்ஞான அறிவுங்கூட மரணம் வருங்காலத்தில் அவர்களுக்குச் சிறிதும் பயன்படாது.

உறவினரும் ஊராரும்

மரண சமயத்தில் நம்முடைய உடம்பும் அறிவும் சரியான நிலையில் இருப்பதில்லை; சோர்வடைகின்றன. ஆதலின் அறி வோடு ஒட்டிய கல்வியும் தளர்ந்து போகிறது. ஆனால் நமக்குப் புறம்பே நின்று நம்முடைய நன்மையில் கண்ணாக இருக்கும் உறவினர்கள் அப்போது தளர்வதில்லையே! அவர்கள் ஏதேனும் உதவி செய்ய முடியுமா?

ஆற்றிலே ஒருவன் கால் நழுவி நீரிலே போனால் கரையில் இருப்பவர்கள் காப்பாற்றுகிறார்கள். ஒருவன் கால் இடறி விழுந் தால் மற்றவர்கள் தூக்கி நிறுத்துகிறார்கள். அதுபோல, மரண காலத்தில் உறவினர்கள் தம்மால் இயன்றதைச் செய்து இறவாமல் காப்பாற்ற முடியுமா? முடியாது. மரண வேதனையையாவது குறைக்க முடியுமா? அதுவும் முடியாது. உறவினர்கள் மட்டும் அன்று; ஊர்க்காரர்கள் எல்லோருமே சேர்ந்து ஒருமுகமாக ஏதாவது செய்து மரணத்துன்பத்தை மாற்றவோ குறைக்கவோ

முடியுமா? அது நடக்காத காரியம். எவ்வளவு அன்பு உடையவர் களாக இருந்தாலும் போகிற உயிரைத் தடுக்க முடியாது. அவர்கள் தம்மால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்று ஏங்கிக் கதறி அழுகிறார்கள். அவர்களால் ஆனது அது ஒன்றுதான்.

பைவரும் கேளும் பதியும் கதற.

(பைவரும் – துன்புறும். கேள் – உறவினர். பதி – ஊரினர்)

ஐவர்

நமக்குச் சுகமும் துக்கமும் இந்திரியங்களின் வாயிலாக வருகின்றன. நல்ல வார்த்தைகள் காதின் வழியே புகுந்து மகிழ்ச்சியைத் தருகின்றன. யாரேனும் வைதால் அதுவும் காதின் வழியே புகுந்து துன்பத்தை உண்டாக்குகிறது. இனிப்பான பொருளை உண்டால் இன்பம் உண்டாகிறது. கசப்பை உண்டால் வெறுப்பு உண்டாகிறது. இப்படியே ஐம்பொறிகளும் உலகத்துப் பொருள் களை நுகரச் செய்து, அதனால் இன்ப துன்பங்களை உண்டாக்கு கின்றன. உடம்பில் இந்த ஐந்து இந்திரியங்களும் இருந்து நம் வாழ்க்கையை நடத்துகின்றன என்றுகூடச் சொல்லலாம். ''எனக்கு நன்றாயிருக்கிறது!'' என்று உண்ணும் உணவைச் சொல்கிறோம். ''என் நாவுக்கு நன்றாக இருக்கிறது'' என்று சொல்லாமல் நாவே நாம் என்று நினைக்கும்படி பேசுகிறோம். அப்படியே, ''எனக்கு இத்தனை சூடு வேண்டாம்'' என்று வெந்நீரில் கை வைத்துப் பார்த்துச் சொல்கிறோம். பரிச இந்திரியமும் நாமும் ஒன்றே என்ற பாவனையில் வருகிற பேச்சு அது. ''நான் பார்த்துச் சகிக்க முடியாது'' என்பது கட்புலனோடு உள்ள ஒற்றுமையில் கூறுவது. இப்படி ஐம்பொறிகளோடும் வேற்றுமையின்றி ஒன்றுபட்டு வாழ்கிறோம். உயிருக்கும் உடலுக்கும் உள்ள ஒட்டுறவு இந்திரி யங்களுக்கும் உண்டு. நம் வாழ்நாள் முழுவதும் வேறுபாடின்றிப் பழகி நிற்கும் அந்த ஐந்து இந்திரியங்கள் மரண சமயத்தில் எப்படி இருக்கின்றன?

சில நண்பர்கள் பொருள் வளம் நமக்கு உள்ள காலத்தில் உடன் இருந்து இன்பம் நுகர்வார்கள். கை சளைப்பது தெரிந்தால் மெல்ல நழுவி விடுவார்கள். அதுபோல நம்முடன் இவ்வளவு பழகி நிற்கும் ஐம்பொறிகளும் மரணம் வருவதற்கு முன்பே

மெல்ல மெல்ல நம்மிடமிருந்து நழுவப் பார்க்கின்றன. மூப்புற்றுச் சாக்காடு வருவது இயற்கை. மூப்பு வரும்போதே சாக்காட்டுக்கு முதல் மணி அடித்தாகி விடுகிறது. அப்பொதுதே காது கேட்ப தில்லை. கண் பார்வையை இழந்துவிடுகிறது. இந்திரியங்கள் ஐந்தும் மெல்ல மெல்லப் பற்றுவிட்டுக் கழலத் தொடங்குகின்றன.

''தொண்டு கிழவன் இவன்ஆர் எனஇருமல்
கிண்கி ணெனம னுரையே குழறவிழி
துஞ்சு குருடு படவே செவிடுபடு – செவியாகி''

என்று திருப்புகழில் இந்த அவல நிலையைப் பாடுவார் அருண கிரியார்.

நம் வாழ்க்கையில் உறவினரும் நண்பரும் மனம் மாறினால் நம்மை விட்டுப் பிரிந்து போகலாம். நம் மனைவி கோபித்துக் கொண்டு பிறந்த வீட்டுக்குப் போகலாம். புதல்வன் நம்மைவிட்டுப் பிரிந்துபோய் வாழலாம். ஆனால் நம் கண் காது முதலியவை அத்தகையன அல்ல. ''இனி உன்னிடம் இருக்க மாட்டேன்; வேறு ஒருவனிடம் போய் விடுகிறேன்'' என்று பிரிந்து போக முடியாது. இப்படிப் பிரிவின்றிப் பழகி நிற்கும் ஐந்து இந்திரியங் களும் உயிர் உடம்பில் இருக்கும்போதே, மரணம் வருவதற்கு முன், கைவிட்டு விடுகின்றன.

பழக நிற்கும், ஐவரும் கைவிட்டு.

மெய்விடும்போது

பிறகு உயிர் உடம்பை விட்டே போய்விடுகிறது. வீட்டைக் காலி பண்ணுகிறவர் தம் பண்டங்களை ஒவ்வொன்றாக வெளி யேற்றி விட்டுக் கடைசியில் தாம் புறப்படுவது போல, ஐந்து இந்திரியங்களும் நழுவிய பிறகு உயிரும் உடம்பை விட்டுப் போய்விடுகிறது.

ஐவரும் கைவிட்டு மெய்விடும்போது.

அந்தச் சமயத்தில் புறத்தே நின்று நமக்கு உதவி செய்த கிளைஞரும் நண்பரும் ஊரினரும் உயிருக்கு ஒன்றும் செய்ய முடியாது; ஐந்து இந்திரியங்களாலும் ஏதும் செய்ய இயலாது. அப்போது ஒரே ஒரு துணைதான் உண்டு. அவன்தான் இறைவன்.

அவனுடைய திருவடியே புகலாகப் புகும் அன்பர்கள் அவனைச் சென்று அடைகிறார்கள். யார் கைவிட்டாலும் அவன் அவர்களைக் கைவிட மாட்டான். போகிற உயிரோடு சென்று நலம் செய்யும் ஆற்றல் உறவினர்களுக்கு இல்லை. கடலின் ஆழத்தில் ஒருவன் ஆழ்ந்துவிட்டால், அவனுடன் செல்லும் ஆற்றல்கூட அவர்களுக்கு இல்லை. அப்படி இருக்க, கண்ணுக்குத் தெரியாத உயிர் எங்கே செல்கிறது, என்ன துன்பம் அடைகிறது என்று தெரிந்து கொள்ளவே முடியாத நிலையில் அவர்களால் என்ன செய்ய முடியும்?

உயிர் எங்கே சென்றாலும் அங்கே இருப்பவன் இறைவன். உயிர் எவ்வளவு நுட்பமாக இருந்தாலும் அதனூடே பின்னும் நுட்பமாக இருப்பவன் இறைவன். ஆதலின் அவன் ஒருவன்தான் உயிர் எங்கே எப்படிச் சென்றாலும் துணையாக நின்று உதவ முடியும். அதனால், ''மற்றவர்களோடு பழகுகிறேன்; இந்திரியங்களோடு வாழ்கிறேன்; ஆனாலும் அவர்கள் உடம்பு இருக்கு மட்டுந்தான் என்னுடைய தொடர்புடையவர்களாக இருக்க முடியும். ஆகவே உடம்பை விடும்போது நீதான் எனக்குத் துணை. அப்போது நான் உன் அடைக்கலம்'' என்று விண்ணப்பித்துக் கொள்கிறார் அருணகிரியார்.

★

மைவரும் கண்டத்தர் மைந்த,கந்
தா,என்று வாழ்த்தும்இந்தக்
கைவரும் தொண்டன்றி மற்றறி
யேன்;கற்ற கல்வியும்போய்ப்
பைவரும் கேளும் பதியும்
கதறப் பழகிநிற்கும்
ஐவரும் கைவிட்டு மெய்விடும்
போதுன் அடைக்கலமே.

[மை போன்ற கரிய நிறம் வந்து அமைந்த திருக்கழுத்தை உடைய சிவபெருமானுடைய புதல்வனே, கந்தா என்று வாழ்த்துகின்ற இந்தக் கைமேல் பயன்வரும் திருத்தொண்டை யன்றி வேறு ஏதும் அறியாதவன் நான்; நான் கற்ற கல்வியும் எனக்குத் துணையாகாமல் அகன்று போக, துன்புறும் உறவினரும் ஊரினரும் அழுது புலம்ப, என்னுடன் ஒட்டி உறவாடிப் பழகி நிற்கும் ஐம்பொறிகளும் என்னை விட்டுவிட, நான்

இந்த உடம்பை விட்டு இறக்கும்போது உன்னுடைய அடைக்கலப் பொருளாவேன்.

கண்டம்–கழுத்து. மற்று–வேறு; தவம் முதலியன. ஐவரும்–ஐந்து இந்திரியங்களும். போய், விட்டு: எச்சத்திரிபு; போக, விட என்று பொருள் கொள்க. அடைக்கலம் – நான் உன் அடைக்கலப் பொருள்.]

இம்மையிலே கைவரும் தொண்டாக உன்னை வாழ்த்துவதை உணர்ந்தேன்; அம்மையில் உன் அடைக்கலப் பொருளாவேன் என்றபடி.

இது கந்தர் அலங்காரத்தில் 84–ஆவது பாட்டு.

எளிய வழி

இரக்கம்

முருகனை வாழ்த்தி வாழ்கின்ற வாழ்வு கைவரும் தொண்டு என்று சொன்ன அருணகிரியார் இப்போது மிகவும் இன்னலைப் பெற்று ஹடயோகம் செய்பவர்களைப் பார்த்து இரங்குகிறார். யாரேனும் ஒருவருக்கு ஒரு காரியம் எளிதில் கைவரப் பெற்றால், அதனை முடிப்பதற்கு மிகவும் தொல்லைப்பட்டுக் கொண்டிருப் பவர்களைப் பார்த்துச் சற்று எள்ளி நகையாடத் தோன்றும். ''ஐயோ! இப்படித் துன்பப்படுகிறீர்களே; நான் செய்த மாதிரி செய்தால் காரியம் எளிதில் கைகூடிவிடுமே'' என்று இரங்கவும் தோன்றும். அந்த வகையில் இறைவன் திருவருளைப் பெறுவதற்கு, யோக மார்க்கத்தைக் கைப்பிடித்து எளிதில் கைகூடாமல் துன்பப் படுகிறவர்களைப் பார்த்து அருணகிரியார், 'இறைவனை எண்ணி உருகி அன்பு செய்யும் வழி இருக்கும்போது இப்படித் துன்பப் படுகிறீர்களே' என்று இந்தப் பாட்டில் இரங்குகிறார். பக்தியில் ஈடுபட்டுப் படிப்படியாகத் தியானம் செய்து அநுபவத்தில் உயர்ந் தவர்கள் யோக மார்க்கத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவது இல்லை. நாயன்மார்களும், ஆழ்வார்களும் யோகத்தைப் பாராட்டு வது வழக்கம் அன்று. கலம்பகம் என்ற தமிழ்ப் பிரபந்தத்தில் யோகிகளைப் பரிகசிப்பதாக ஒரு துறை உண்டு. அதற்குக் காரணம்: யோகம் செய்வதாக எண்ணிக்கொண்டு பலர் இடை யில் சோரம் போய்விடுகிறார்கள். மனத்தை இறைவனுடைய திருவடியில் வைக்காமல், சுவாச பந்தனம் செய்து அதனாலே எல்லாம் அடைந்துவிடலாம் என்று எண்ணுகிறார்கள்.

யோகம்

உண்மையில் இந்த நாட்டில்தான் யோகத்தை நன்றாக உணர்ந்தவர்கள் இருக்கிறார்கள். மற்ற நாட்டில் பக்தி இருக்கும். ஆனால் உடலில் உள்ள நாடி நரம்புகளைச் சுத்தம் செய்து

சுவாசத்தை அடக்கி, குண்டலினி சக்தியை எழுப்பி, ஆறு ஆதாரங்களையும் கடந்து ஸஹஸ்ராரத்தில் முட்டிச் சோதி தரிசனத்தைச் செய்து அநுபவத்தைப் பெற்று இன்புறுகிற வழியை இந்த நாட்டில்தான் சொல்லித் தந்திருக்கிறார்கள். அப்படி யோகம் செய்தவர்களுக்கு உடம்பு பொன்மயமாகும். தளர்ச்சி, மூப்பு ஆகிய துன்பங்கள் வாரா. பலகாலம் இந்த உடம்போடு இருந்து வாழலாம். இவ்வாறு யோக நூல்கள் சொல்கின்றன.

வேறு எந்த நாட்டிலும் இத்தகைய நெறியை யாரும் கடைப் பிடிப்பது இல்லை. அவர்களுக்குத் தெரியாது. பல மகா யோகிகள் வாழ்ந்த நாடு இது. இப்போதும் இலை மறைவு காய் மறைவாகச் சிலர் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

நீண்ட பயிற்சி

யோக முறை நாம் நினைக்கிறது போல அத்தனை எளிதன்று. சிலகாலம் அதனைப் பின்பற்றினால் போதாது. இளமை தொடங்கி அதற்கேற்ற வாய்ப்பு வேண்டும். நேற்று வரையிலும் உலக இயலில் ஈடுபட்டுக் கிடக்கிறவன் தொண்டர் கூட்டத்தில் பயின்று மனம் மாறி நெஞ்சு உருகிப் பக்தனாகிவிடலாம். யோகம் அப்படி வாராது. உடம்பை வளைத்துச் சர்க்கஸ் வித்தை காட்டுகிறவனுக்குக்கூட ஒரு வாரத்தில் அந்தப் பயிற்சி உண்டாகாது. இளமை தொடங்கியே உடம்பை வளைத்தும், நிமிர்த்தியும் உடலுறுப்புகளைத் தான் நினைத்தபடி இயக்கப் பழக்கம் செய்ய வேண்டும். ஒரு வகையில் யோகமும் அத்தகையதுதான்.

யோகத்தை எட்டு நிலைகளாகப் பிரிப்பார்கள். அதனால் அஷ்டாங்க யோகம் என்று பெயர் பெறும். இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்று எட்டாகச் சொல்வார்கள்.

இயமம்

யோக மார்க்கத்தில் முதல் படியாக இருப்பது இயமம். மனிதன் அடிப்படையான பல நல்ல குணங்களோடு இருக்க வேண்டும். பொய் சொல்லக் கூடாது. இன்சொல் பேச வேண்டும். எல்லோருடனும் அன்பாக இருக்க வேண்டும். இம்சை செய்யக் கூடாது. இவை போன்ற குணங்களே இயமம் என்ற பிரிவில் அடங்குவன.

'நான் மூச்சை அடக்கிக் காயசித்தி பெற்று உடம்பைப் பொன் மயமாக வைத்திருக்கிறேன்' என்று விளம்பரப்படுத்திக் கொள்வது யோகத்தின் இலக்கணம் ஆகாது. உடல் பயிற்சி செய்து வித்தை காண்பிக்கிறவர்களைப் போல வேண்டுமானால் ஆசனம் முதலியவைகளைப் போட்டு காட்டிக் கொண்டிருக்க லாம். சில ஆசனங்களைப் பிராணாயாமத்தோடு பழக்கிக் கொள்ள லாம். அதோடு நின்றுவிட்டால் யோகம் கைவரப்பெற்றவர் என்று சொல்ல முடியாது. இறைவனிடத்தில் ஈடுபடுகிற பக்தர்கள் எப்படித் தம்மை மறந்து சமாதி நிலையில் இருக்கிறார்களோ அதுபோல் யோக நிஷ்டர்கள் முடிந்த முடிவில் அந்த அநு பவத்தைப் பெறுகிறார்கள். ஞானியானாலும், பக்தனானாலும், கர்ம யோகியானாலும், அஷ்டாங்க யோகம் பண்ணுகிறவர்கள் ஆனாலும் முடிந்த முடிபாகச் சரீராபிமானத்தை மறந்து மேல் நிலையில் உலவுகிற கதியைப் பெற வேண்டும். அதற்குக் கீழே உள்ள படிக்கட்டுகள் பலவகை. அந்தப் படிக்கட்டுகளில் ஏறு வதற்கு மிகவும் அரிதாக இருப்பது யோகப் படிக்கட்டு. அந்த யோகப் படிக்கட்டில் ஏறுகிறவன் முதலில் நல்லவனாக இருக்க வேண்டும். அவன் குணம் தூயதாக இருக்க வேண்டும். அதைத் தான் இயமம் என்கிறார்கள்.

நியமம்

நியமம் என்பது வரையறை. இன்ன காரியத்தை இப்படிச் செய்ய வேண்டும், இன்ன உணவு சாப்பிட வேண்டும், இப்படி நீராட வேண்டும் என்று யோகம் செய்பவர்களுக்குச் சில நியதி உண்டு. வாழ்க்கையில் நாம் நியமத்துடன் இருக்க வேண்டும். இயமம் நியமம் ஆகிய இரண்டும் யோகிகளுக்கு மாத்திரம் உள்ளன அல்ல; மனிதனாக உள்ள யாவருக்குமே அந்த இரண்டும் வேண்டும். நல்ல குணங்களும், வரையறையான வாழ்க்கையும் மனிதனுக்கு இன்பம் தரும் என்பதை உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளும். உடம்பை வைத்துக் கொண்டு வாழ்கிற நாம் உடம்பை நோய்க்கு உட்படுத்தாமல் இருக்கச் சில நியமங்களுடன் இருக்க வேண்டும். பேச்சில் வரையறை, உணவில் வரையறை, நீராடுவதில் வரையறை ஆகியவை இருந்தால்தான் இந்த உடம்பை வலியதாக வைத்திருக்க முடியும். மனத்தையும் தெளிவு உடையதாக வைத்திருக்கலாம். இத்தகைய நியமங்களைப்

பின்பற்ற வேண்டியது யோகிகளுக்கு மிகவும் அவசியமாகும். தியானம் செய்வதற்கு உட்கார்ந்தால் வயிறு நிரம்பச் சாப்பிட்ட வனுக்குத் தூக்கம் வருமேயன்றித் தியானம் கைகூடாது. பரீட்சைக்கு வாசிக்கும் மாணாக்கன்கூட வயிறு நிரம்பச் சாப்பிட்டு விட்டா னானால் புத்தகத்தைத் தலையணையாக வைத்துத் தூங்கத்தான் தூங்குவான். ஏதேனும் ஒரு காரியத்தில் புகுகின்றவர்களுக்கே உணவில் வரையறை வேண்டுமானால், மூச்சை அடக்கி யோகம் செய்பவர்களுக்கு நிச்சயமாக உணவில் வரையறை வேண்டும். தாமச குணம் இல்லாத உணவை உட்கொள்ள வேண்டும்.

ஆசனம்

நியமத்திற்கு அடுத்த படியாக வருவது ஆசனம். ஆசனம் என்றால் இருக்கை; உட்காருகிற முறை. நாம் ஓரிடத்தில் கொஞ்ச நேரம் உட்கார்ந்திருக்க முடியவில்லை. கால்களைச் சம்மணம் போட்டு உட்காருகிற வழக்கம் வர வர நமக்கு மறந்துவிட்டது. நாற்காலியும், பெஞ்சியும் உபயோகப்படுத்துகிற நாம் தரையில் வெகுநேரம் உட்காரச் சக்தி இல்லாமல் இருக்கிறோம். நாற்காலி யில் உட்காருவதனால் நமக்குச் சில வியாதிகள் வருகின்றன. ஆசனத் துவாரம் அடைபட உட்காருவதனால் மூலம் முதலான வியாதிகள் வருகின்றன. ஆனால் நம் நாட்டுக்கு ஏற்றபடி சம்மணம் போட்டு உட்கார்ந்தால் அத்தகைய வியாதி எதுவும் வருவது இல்லை. இப்போது தரையில் உட்காருவதே கஷ்டமாக இருக்கிற காலம். யோக மார்க்கத்தில் ஆசனங்கள் பலவகையாகச் சொல்லப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் அடிப்படையாக இருப்பது பத்மாசனம். 84 வகையான ஆசனங்களைச் சொல் கிறார்கள். இப்பொழுதெல்லாம் யாரையாவது யோகி என்று சொன்னால் அவருக்கு ஆசனம் போடத் தெரியும் என்றுதான் நாம் நினைக்கிறோம். ஆசனத்தோடு நின்றுவிடுவது யோகம் ஆகாது. பலர் ஆசனப் பயிற்சியைக் காட்டி அதனால் பொருளை ஈட்டு கிறார்கள். உடம்பிலுள்ள உறுப்புகள் சரியான வகையில் இயங்கு வதற்கு ஆசன வகை பயன்படும்.

பிராணாயாமம்

நம்முடைய உள்ளம் இறைவனிடத்தில் ஈடுபடுவதற்குச் சுவாச பந்தனம் செய்ய வேண்டுமென்று யோகிகள் கூறுகிறார்கள்.

மனம் வாயுவின் அம்சம் உடையது. மூச்சைக் கட்டினால் மனம் சங்கடப்படும். மனம் தொழில் செய்யாமல் இருக்கிற மயக்கம், மூச்சிலே மயக்க மருந்தை ஊட்டினால் உண்டாகிறது. மூச்சுக்கும் மனத்திற்கும் தொடர்பு உண்டு. ஆசனத்திற்கு அடுத்தபடி நான்காவதாகப் பிராணாயாமத்தை வைத்திருக்கிறார்கள். ஓரளவு பிராணாயாமம் எல்லோரும் செய்வது நலம். சரியான நிலையில் உட்கார்ந்து பிராணாயாமம் செய்யவேண்டும். சுவாசத்தை உள்ளே இழுத்து நிறுத்தி வெளியில் விடுவதுதான் பிராணாயாமம். நாம் இப்போது உள்ளே இழுத்து வெளியில் விடுவதோடு நிற்கிறோம். அதை உள்ளே கும்பிக்கவேண்டும். எவ்வளவு நேரம் உள்ளே இழுக்க வேண்டும், எவ்வளவு நேரம் அடக்க வேண்டும், எவ்வளவு வெளிவிடவேண்டுமென்று யோகத்தில் கணக்கு உண்டு. பிராணாயாமத்திற்குரிய மந்திரம் நாம் செய்யும் சந்தியாவந்தனத்தில் இருக்கிறது. அதில் முன் பகுதியைச் சொல்லி இழுக்கவேண்டும். அந்த மந்திரத்தின் இடையில் உள்ள காயத்திரியைச் சொல்லிக் கும்பிக்கவேண்டும். பிற்பகுதியைச் சொல்லி வெளிவிடவேண்டும். இந்த அப்பியாசத்தினால் மனம் தூயதாகும். ஓரளவு இந்த பிராணாயாமத்தில் வெற்றி கண்டவனுக்கு நெடு நேரம் இருந்து ஜபம் செய்கிற பயிற்சி உண்டாகும். பிராணாயாமத்தை முறையாகச் சுவாச பந்தனமாக்கி மூலாதாரத்தில் இருக்கும் அக்கினியை மேலே எழுப்புவதற்குரிய வழியில் பயிற்சி செய்பவன் யோகி ஆகிறான்.

மூன்று நாடிகள்

மூலாதாரத்தில் இருந்து சஹஸ்ராரம் வரைக்கும் மூன்று நாடிகள் இருக்கின்றன. இடப்புறம் ஒன்று, வலப்புறம் ஒன்று, இரண்டுக்கும் நடுவில் ஒன்று ஆக மூன்று இருக்கின்றன. இடப்புறம் இருப்பதை இடைகலை என்றும், வலப்புறம் இருப்பதைப் பிங்கலை என்றும், நடுவில் இருப்பதைச் சுஷும்னா அல்லது சுழுமுனை என்றும் சொல்வார்கள். இடைகலையில் ஓடும்போது சுவாசம் இடப்பக்கம் ஓடும். பிங்கலையில் ஓடும்போது வலப்பக்கத்தில் ஓடும். சுழுமுனையில் சுவாசம் ஓடும்போது இரண்டு பக்கத்திற்கும் சமமாக ஓடும். இரண்டு பக்கத்திலும் சமமாக ஓடும்போதுதான் நம் மனத்தில் தெளிவு உண்டாகும். சுழுமுனையில் மூச்சு ஓடவேண்டுமானால், நாம் நினைத்தவுடன் செய்ய

முடியாது. சுவாசத்தை இடைகலை பிங்கலை என்று மாற்றி மாற்றிப் பயிற்சி செய்ய வேண்டும்.

இப்படிச் சுழுமுனையில் மூச்சு ஓடப் பழகி பிறகு சுவாச பந்தனம் செய்தால் மூலாதாரத்தில் சூடு எழும். அங்குள்ள மூலாக்கினியை எழுப்ப வேண்டும். மூலாதாரம் முதல் ஆதாரம். அங்கே அக்கினி எழும்பியவுடன் குண்டலினி சக்தி நீண்டு நமக்கு வழிகாட்டும். இந்த யோக மார்க்கத்தைக் குண்டலினி யோகம் என்றும் சொல்வார்கள்.

ஆறு ஆதாரம்

உடம்பில் ஆறு ஆதாரங்கள் இருக்கின்றன. மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என் பவை அவை. ஒவ்வோர் ஆதாரமும் ஒவ்வொரு கமல வடிவாக இருக்கிறது. மூலாதாரம் நான்கிதழ்க்கமலம்; சுவாதிஷ்டானம் ஆறிதழ்க்கமலம்; மணிபூரகம் பத்து இதழ்களை உடையது; அநாகதம் பன்னிரண்டு இதழ்களையுடையது; விசுத்தி பதினா றிதழ்க் கமலம்; ஆக்ஞை இரண்டிதழ்க்கமலம். மூலாதாரமானது குஹ்யஸ்தானம்; சுவாதிஷ்டானம் என்பது அடிவயிற்றுக்குப் பின்னால் இருப்பது; உந்திக்கமலம் மணிபூரகத்தைச் சார்ந்தது; இதய பீடமே அநாஹதம்; கழுத்து விசுத்தி; புருவநடு ஆஞ்ஞை.

சூரியனைக் கண்ட தாமரை மலர்வது போலக் குண்டலினி சக்தி மேலே எழும்பி வரும்போது ஆதாரக் கமலங்கள் மலர் கின்றன. ஒவ்வோர் ஆதாரத்திலும் ஒவ்வொரு தெய்வம் உண்டு. மூலாதாரத்திற்கு உரியவராக இருப்பவர் கணபதி; பிரமனையும் சொல்வர். திருமால், ருத்திரன், ஈசானன், சதாசிவன், அர்த்த நாரீசன் என்பவர் மற்ற ஆதாரங்களின் தெய்வங்கள். பிராணா யாமம் மூச்சுப் பயிற்சி; உண்மையினின்று மனம் விலகாதிருக்கப் பயிலுவது பிரத்தியாகாரம்; மனத்தை ஒரு பொருளில் நிறுத்தல் தாரணை; அதனின்றும் நழுவாமல் நிற்றல் தியானம்; யாவும் மறந்து இன்புறல் சமாதி.

இடைகலை, பிங்கலை, சுழுமுனை என்னும் மூன்று நாடி களும் நெற்றிப் பொட்டாகிய ஆஞ்ஞையில் இணைகின்றன.

குண்டலினியை அம்பிகையினுடைய சக்தி என்று சொல்லி, பராசக்தியை வழிபட்டு யோகம் கைகூடுகிற மக்கள் இருக்கிறார்

கள். எல்லாவற்றுக்கும் மேலாகப் பிரம்மரந்திரம் என்று சொல் கிற இடத்தில் ஆயிரம் இதழ்களுடைய கமலம் இருக்கிறது என்றும் அங்கேதான் சோதி வடிவமாக அம்பிகை எழுந்தருளி யிருக்கிறாள் என்றும் நூல்கள் கூறும். மூலாக்கினி மெல்ல மெல்லச் சென்று அங்கே முட்டினால் அங்கிருந்து அமுதம் ஒழுகும் என்பார்கள். அந்த இடம் சந்திரமண்டலம் என்று சொல்லப்படும். அந்த அமுதத்தைச் சாப்பிடுகிறவர்களுக்கு நரை திரை மூப்பு ஆகியவை கழன்றுவிடும். இத்தகைய யோக நெறியைப் பற்றிப் பல புத்தகங்கள் வடமொழியில் உள்ளன. ஸர் ஜான் உட்ராப் என்ற ஆங்கிலேயர் இந்த முறையை ஆராய்ந்து புத்தகம் எழுதி யிருக்கிறார்.

யோகமும் அன்பும்

6Tட்டு வகையாகச் செய்கிற அட்டாங்க யோகத்தில் கடைசி நிலை சமாதி. அது கைகூடுகிற வரைக்கும் யோகிகள் பயிற்சி செய்துகொண்டு வரவேண்டும். யோக முறையில் ஈடுபடுகிறவர் களுக்கு அத்தனை தூரம் செல்வதற்குரிய வாய்ப்புக் கிடைப்பது இல்லை. சில சமயங்களில் இடை வழியில் சில அதிசயங்கள் அவர்களுக்குப் புலனாகும். சில அற்புதங்கள் செய்கிற ஆற்றல் வரும். அந்த அளவில் நின்று தாம் பெறவேண்டியவற்றைப் பெற்றுக்கொண்டவர் போல அவர்கள் ஏமாந்து போவார்கள். இப்போதுள்ள யோகிகள் எல்லோரும் பெரும்பாலும் ஆசனத் தோடு நின்று அதைக் காட்டித் தம்மைப் பெரிய சக்தி உள்ளவர் களைப் போல மக்கள் எண்ணிக் கொள்ளும்படி செய்கிறார்கள். எத்தனைதான் யோகம் செய்தாலும் மனம் இறைவனிடத்தில் ுன்பு கொண்டிருந்தாலன்றி அது கைகூடாது.

அடித்துச் சிங்கத்தை மடக்கலாம் என்றால், அந்தச் சிங்கம் ந்தச் சமயத்தில் தப்பலாம் என்றே எண்ணும். தப்புவதற்கு ார்க்கம் இருந்தால் தன்னை அடக்குபவனையும் அது கொன்று விடும். அதுபோலத்தான் யோகத்தினால் மனத்தை அடக்குவது. அப்படியின்றி, இறைவனிடத்தில் பக்தி செய்து மனத்தை உருகச் செய்து நிறுத்தினால் அது என்றும் மாறாமல் ஒரே நிலையில் இருக்கும். இந்த நாட்டில் யோக நெறியில் போகிறவர்கள் மிகச் சிலர். யோகத்தைப் பற்றிப் பேசுகின்ற வர்கள் லட்சக்கணக்கில் உள்ளார்கள். யோக நெறியில் சென்று நோய்வாய்ப்பட்டு

உயிருக்கே ஆபத்தைத் தேடிக் கொண்டு திண்டாடுகிறவர்கள் பலர். யோகம் கைவரப்பெற்றவர்கள் என்று சொல்கிறவர்கள் ஒருவர் இருவர் இருக்கலாம். அவரையும் எளிதில் காண முடியாது. ரமண மகரிஷியைப் போன்றவர்கள் யோகிகளாகத் தங்களுடைய வாழ்க்கையை நடத்தவில்லை. ஆனாலும் அவர்கள் அடையவேண்டியவற்றை அடைந்தவர்கள். விவேகானந்த சுவாமிகள் ராஜயோகம் பற்றிச் சொல்கிறார்.

ஹடயோகம்

அருணகிரிநாத சுவாமிகளைப் போன்றவர்கள் கண்டிப்பது ஹடயோகத்தை. இந்தக் காலத்திலும் யாரேனும் ஒருவன் ஒரு காரியத்தைப் பிடிவாதமாகச் செய்தால் அவனை ஹடம் பிடிக்கிறான் என்று சொல்வது வழக்கம். ஹடயோகத்தைச் சாதிப்பது மிகவும் அரிய காரியம். யோக நெறியின் அங்கமாகிய ஆசனம் செய்கின்ற எல்லோருமே இறைவனிடம் பக்தியோடு இருப்பார்கள் என்று சொல்ல முடியாது. உதாரணமாக நம்முடைய பிரதமராகிய ஜவஹர்லால் நேரு தினந்தோறும் சிரசாசனம் செய்து வருகிறார். அதை ஒரு தேகப் பயிற்சியாகவே எண்ணி அவர் செய்கிறாரேயொழிய, இறைவன் திருவருளைப் பெறுகிற வழி என்று அதைச் செய்கிறது இல்லை. ஆகையால் யோக நெறியில் செல்கிற எல்லோருமே ஆத்ம இன்பத்தைப் பெறுவார்கள் என்று சொல்ல இயலாது. இப்படி உடம்பைப் பலவகையில் சிரமப் படுத்தி மூச்சை அடக்கி ஒடுக்கிக் கோடியில் ஒருவர் இருவர் முடிந்த முடிபாகிய இன்பத்தைப் பெறுகிறார்கள். ''அத்தகைய கடுமையான செயல் எதற்காக? எளிதாக இறைவன் திருவருளைப் பெறலாமே'' என்று அருணகிரியார் சொல்கிறார்.

யோகிகளைப் பார்த்து இப்படிப் பேசுகிற பாட்டை முன்பும் பார்த்திருக்கிறோம்.

குழந்தையும் தாயும்

தாய் மாடியில் நிற்கிறாள். குழந்தை கீழே நிற்கிறது. தாயிடம் செல்ல வேண்டும் என்று எண்ணிச் சின்னக் குழந்தை ஒவ்வொரு படியாக மெல்ல மெல்ல ஏறிச் செல்கிறது. அப்படி ஏறுவதற்குக் காலில் திண்மை வேண்டும்; மனத் திண்மையும் வேண்டும். அந்தக் குழந்தை தன் காலைத் தவறி அவசரப்பட்டுக்

கீழே வைத்துவிட்டால் உருண்டு உருண்டு கீழேதான் வந்து விழ வேண்டும். கால் இல்லாத குழந்தையோ கீழே இருந்தபடியே அம்மா அம்மா என்று அழுது கொண்டிருக்கும். அப்போது குழந்தையின் சத்தம் கேட்டுத் தாய் கீழே இறங்கி வந்து அதை அணைத்துக்கொள்வாள். ''நன்றாக அழு'' என்று தாய் சிறிது நேரம் பிடிவாதமாகக் கீழே இறங்கி வராவிட்டாலும் கீழிருந்து அழும் குழந்தைக்கு ஆபத்து ஒன்றும் இல்லை. குழந்தை அழுகையை நிறுத்திவிட்டு அம்மா வரும்வரை காத்திருக்கலாம். ஆனால் அம்மா இருக்கும் இடத்திற்கே சென்றுவிட வேண்டும் என்று மாடிப்படி ஏற ஆரம்பித்தால் ஒழுங்காக ஏறினால்தான் தாய் உள்ள இடத்தை அடையலாம். பெரும்பாலும் அது முடிவ தில்லை. அது தவறிவிட்டாலோ அதன் உயிருக்கே ஆபத்து நேர்ந்துவிடுகிறது. நம் நாட்டில் படி ஏற முயல்கிற குழந்தைகள் இருக்கின்றன. ஆனால் இன்னும் தாய் இருக்கிற இடத்தை அடைந்த குழந்தைகளைக் காணவில்லை.

''நாமே பலபல படிகளைக் கடந்து ஏறுவது மிகவும் கடினம். அம்மாவைக் கீழே வரும்படியாகச் செய்ய நீ அழு; அழுது புலம்பு'' என்று சொல்வது போல அருணகிரியார் யோகிகளைப் பார்த்து இந்தப் பாட்டைச் சொல்கிறார். இப்படிச் சொல்வதனால் யோகம் செய்வதே தவறு என்று சொல்வதாக நினைக்கக் கூடாது. யோகம், செய்வதற்கு அரிதுதான். அரிதாக இருந்தால் என்ன? செய்து முடிக்கலாம் என்று நினைக்கிறவர்கள் அதற்குரிய தகுதி களை நினைந்து பார்க்க வேண்டும். தகுதியோடு நம்மை வழி காட்டி அழைத்துச செல்லும் குருநாதர் வேண்டும். கரணம் தப்பினால் மரணம் உண்டாகும் ஆபத்து ஒவ்வொரு படியிலும் இருக்கிறது. ஆயிரம் பேர் யோகம் செய்வது என்று ஆரம்பித்தால் 900 பேர் ஆசனத்தில் நின்றுவிடுகிறார்கள். பிரணாயாமம் வரைக் கும் செல்கிறவர் சிலர். அதற்குமேல் உள்ள படியை அடை கிறவர்கள் அநேகமாக இல்லை என்று சொல்ல வேண்டும். மூச்சுத் திணறி வயிறு வெடித்து இறந்து போகிறவர்கள் சிலர். யாரோ இலை மறைவு காய் மறைவு போலச் சித்தி அடை கிறார்கள். அதனால்தான் உயிரின் மீதுள்ள இரக்கத்தால் யோக நெறியைப் பக்தர்கள் எல்லாம் கண்டிக்கிறார்கள். ஆழ்வார்களும் கண்டிக்கிறார்கள். நாயன்மார்களும் கண்டிக்கிறார்கள்.

''துருத்தி எனும்படி கும்பித்து வாயுவைச் சுற்றிமுறித்
தருத்தி உடம்பை ஒறுக்கிலென் னாம்சிவ யோகமென்னும்
குருத்தை அறிந்து முகமா றுடைக்குரு நாதன்சொன்ன
கருத்தை மனத்தில் இருத்துங்கண் டீர்முத்தி கைகண்டதே''

என்று யோகிகளை நோக்கி அருணகிரியார் முன்பு சொன்ன பாட்டைப் பார்த்தோம். இப்போதும் அதே யோகிகளுக்கு மற்றொரு வகையில் சொல்கிறார்.

யோகிகளே!

விழிநாசி வைத்து
மூட்டிக் கபாலம் மூலாதார நேரண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப்பிடித்தெங்கும் ஓடாமற் சாதிக்கும் யோகிகளே

என்று யோகிகளை விளிக்கிறார். ஒரு நிமிஷம் மூச்சை அடக்கினால் நமக்குத் திணறுகிறது. யோகிகளோ எப்போதும் உள்ளும் வெளியும் போய்க்கொண்டிருக்கிற மூச்சைப் பிடித்து எங்கும் ஓடாமல் அப்படியே நிறுத்துகிறார்கள். அதனால் மூலாதாரக் கனலை மூட்டிச் சுழுமுனை வழியே கொண்டு போய்ச் சஹஸ்ராரம் வரைக்கும் எழுப்ப வேண்டுமென்று முயல்கிறார்கள்: அப்படி உள்ளே மூச்சை அடக்கும்போது வயிறு உப்புகிறது. முகம் சிவக்கிறது. கழுத்து வீங்குகிறது. நரம்புகள் புடைத்துக் கொள்கின்றன. அவர்கள் தங்களுடைய விழியை நாசி முனையில் வைத்துத் தியானம் பண்ணுவார்கள். அதற்குத் திராடகம் என்று பெயர். சிலர் புருவத்தின் மத்தியில் பார்வையை அமைத்துத் தியானம் செய்வது வழக்கம். மூக்கின் நுனியில் இரண்டு கண்களின் பார்வையையும் வைத்துத் தியானம் செய்வதை நினைத்தே,

விழி நாசி வைத்து

என்று ஆரம்பிக்கிறார். மூலாதாரத்திலுள்ள அக்கினியைக் கபாலம் வரைக்கும் மூட்டுவதற்காக, மூச்சை உள்ளே ஓட்டிப் பிடித்து எங்கும் ஓடாமல் சாதிக்கிறார்கள் யோகிகள். மூலாதாரம் முதல் பிரம்ம ரந்திரம் வரைக்கும் நேராகச் செல்லும் சுழும்னா நாடி வழியாக மூல அக்கினியானது சென்று கபாலத்தைப் போய்த் தாக்கச் செய்கிறார்கள். கபாலத்திற்கும், மூலாதாரத்திற்கும் நேராகச் சமனாகப் போய்ச் சேருமாறு மூச்சை இயக்குகிறார்கள். வேறு எங்கும் ஓடாமல் பிடித்து நிறுத்துகிறார்கள்.

மூட்டிக் கபால மூலாதார நேர்அண்ட மூச்சை உள்ளே
ஓட்டிப் பிடித்து எங்கும் ஓடாமல் சாதிக்கும் யோகிகளே!

மூச்சை உள்ளே வாங்கி மீட்டும் வெளிவிடுவதனால் பயன் இல்லை. உள்ளே நிறுத்துகிற காலம் அதிகமாக அதிகமாகத்தான் யோகத்தில் வெற்றி உண்டாகும். உள்ளே நிறுத்துவதைக் கும்பகம் என்று சொல்வார்கள். உள் இழுப்பதைப் பூரகம் என்றும், வெளி விடுவதை இரேசகம் என்றும் சொல்வர். இந்தக் கும்பகத்தால் உடம்பில் பலவகையான கிளர்ச்சி உண்டாகும். சாமான்யமாக யோக முறையில் புகுகிறவர்களுக்கு மூக்கின் நுனியில் கண் பார்வையை வைத்து, மெல்லச் சுவாசத்தை நிறுத்திக் கும்பகம் செய்த அளவில் அவர்களுடைய யோகம் நிறைவு பெறாது. அதற்குமேலும் பல படிகளைத் தாண்ட வேண்டும். அத்தகைய அஷ்டாங்க யோகிகளைப் பார்த்து, ''யோகிகளே, இதைச் செய்யுங்கள்'' என்று சொல்ல வருகிறார்.

யோகம் சாதனம்

யோகம் என்பது ஒருவகைச் சாதனந்தான். ஞானத்தை அடைவதற்கு அது வழி. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிகளில் மூன்றாவது படியாக இருப்பது யோகம். யோகத்தின் முடிவில் ஞானம் வர வேண்டும். யோகத்தினால் உடம்பில் உண்டாகிற தடை முறியுமே யொழிய இறைவன் திருவருள் நேராகக் கைகூடாது. அந்த மூன்றாவது படியிலேயே அத்தகைய துன்பம் என்றால் அதற்குமேல் ஞானத்தை எப்படி அடைய முடியும்? ஆகையால் யோகத்தை மாத்திரம் நம்பிக் கொண்டு வாழ்ந்தால் உடம்புக்கும் கேடு; உள்ளத்திற்கும் கேடு. ஓரளவு அதில் வெற்றி பெற்றுவிட்டாலோ அகந்தை தலைக்கேறிப் போய்விடுகிறது. அதற்குப் பின்பும் சஹஸ்ராரத்தில் அம்பிகை இருப்பதாகப் பாவித்து அந்தத் தரிசனத்தை செய்தால் உண்மைக் காட்சி கிடைக்கும். இவ்வளவு கஷ்டப்பட்டு மறுபடியும் இறைவனிடத்தில் அன்பு செய்கின்ற வழிதான் வருகிறது. ஆகையால் இப்போதே அதைச் செய்யலாம் என்று அருணகிரியார் உபதேசிக்கிறார்.

எளிய வழி

''நீங்கள் உங்கள் முயற்சியினால் ஆண்டவன் இருக்கும் இடத்திற்குப் போய் அவன் திருவடியைச் சார்ந்துவிடலாம் என்று

நினைக்கிறீர்கள். காலில் பலமுடைய குழந்தைகளாக எண்ணி இந்த வேலையை ஆரம்பித்துவிடுகிறீர்கள். காலில் திண்மை இல்லாவிட்டாலும், மனத்தில் திண்மை இல்லாவிட்டாலும் தடுக்கி விழ நேரும். அப்போது உயிருக்கே ஆபத்து நேர்ந்துவிடலாம். மிகமிக உயர்ந்த நிலையில் இருக்கும் ஆண்டவனிடத்தில் மிகமிகத் தாழ்ந்த நிலையில் இருக்கும் நாம் போய்ச் சேருவது மிகவும் தொல்லையான காரியம். குழந்தை அழும் சத்தம் கேட்டவுடனே தாய் எத்தனை வேலை இருந்தாலும், தான் எந்த இடத்தில் இருந்தாலும், வேலைகளை எல்லாம் விட்டுவிட்டுக் குழந்தை உள்ள இடத்திற்கு ஓடிவந்து வாரி அணைத்துக் கொள்வாள். அப்படி எம்பெருமான் தன்னை நினைந்து புலம்பு கிற பக்தனைக் காப்பாற்ற வருவான். குழந்தையாகி நாம் அவனை நினைந்து அழுதால் நாம் இருக்கும் இடத்திற்கே அவனை வரவழைத்துவிடலாம். அது எளிய காரியம். அதைச் செய்யுங்கள். அவன் எப்படி எளியவன் என்று கேட்கலாம். தன்னை நினைப்பவர்களுக்கு மிகவும் எளியன் என்பதற்குப் பல எடுத்துக்காட்டுக்கள் உண்டு. இப்போது ஒன்றைச் சொல்கிறேன். காட்டில் வாழ்ந்த வள்ளி நாயகியிடம் அவன் தானே சென்று ஆண்டு கொண்டான்'' என்பது போல அருணகிரியார் இந்தப் பாடலைச் சொல்கிறார்.

"காட்டில் குறத்தி பிரான் பதத்தே கருத்தைப் புகட்டின்
வீட்டிற் புகுதல் மிக எளிதே.

வீட்டில் புக மிகவும் அரிய காரியத்தைச் செய்கின்ற யோகி களைப் பார்த்து, வீட்டில் புக மிகவும் எளிதாகிய இக் காரி யத்தைச் செய்யுங்கள் என்று கருணையினால் உபதேசம் செய் கிறார் அருணை முனிவர். அவன் மிக எளியவன், சிறந்த கருணை வள்ளல் என்பதற்கு ஆதாரம் காட்டுகிறார்.

குறத்தி பிரான்

காட்டில் குறத்தி பிரான்.

காட்டிலே வாழ்ந்திருந்த குறத்தியாகிய வள்ளி தான் வளர்ந்த குறக் குலத்திற்கு ஏற்ற வகையில் முருகனை உள்ளத்தில் வைத்துப் பக்தி பண்ணினாள். அவள் இந்திரிய நிக்கிரகம் செய்ய வில்லை; தவம் செய்யவில்லை. குலத்திற்கு ஏற்ற முறையில்

முருகனை நினைந்து மனத்திற்குள் அன்பை வளர்க்கும் காரியத்தைத் தான் செய்து கொண்டிருந்தாள். அவளுக்கு யோகம் தெரியாது. ஞானம் தெரியாது. தவ முறைகளைத் தெரிந்து கொண்டிருக்கிற குலத்தில் அவள் வளரவில்லை. வேட்டுவ குலத்தைச் சார்ந்து, புன்செய்த் தானியமாகிய தினை முதலியவற்றைக் காப்பாற்று வதற்காகக் குற மாதர்களுடன் சேர்ந்து கிளி ஓட்டிக் கொண் டிருந்தாள். ஆனால் ஒன்று மாத்திரம் அவளுக்குத் தெரியும். தன் குலத்திற்குத் தனித் தெய்வமாக இருப்பவன் முருகன் என்பதை நன்றாக உணர்ந்தும் நம்பியும் இருந்தாள். முருகனை எவ்வாறு வழிபடுவது என்னும் முறை அவளுக்குத் தெரியாது. குழந்தை தன் தாயை நினைந்திருப்பது போல எல்லாக் காலத்தும் முருகனை நினைந்திருக்க அவளுக்குத் தெரியும். கருத்தை முருகனிடத்தில் வைத்தபடி, காட்டில் குறத்தியாகத் தினைக் கொல்லையைக் காவல் செய்து வந்தாள். ஆலோலம் பாடிக் குருவிகளையும், கிளிகளையும் ஓட்டினாள். ஆண்டவன் திருவருளுக்குப் பாத்திர மாவதற்கு என்ன என்ன பயிற்சி வேண்டுமென்று நாம் சொல் கிறோமோ அவற்றில் ஒன்றுகூட இல்லை. உணவில் வரையறை, நீராடுவதில் வரையறை முதலிய வரையறைகள் அவளுக்குத் தெரியா. அவளிடத்தில் இருந்த ஒரே ஒரு சிறப்பு, தன்னுடைய உள்ளத்தை முருகனுக்குரிய சிங்காதனமாக வைத்திருந்தது ஒன்று தான்.

அந்த ஒன்றையே ஆதாரமாகக் கொண்டு முருகப் பெருமான் கருணை மிக்கு அவளைத் தேடிக் கொண்டு ஓடி வந்தான். அவளை மனைவியாக்கிக் கொள்ள வேண்டுமென்பது தலைக் கீடே யொழிய, தன்னை மனத்தில் நினைக்கிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்களுடைய நிலையைப் பாராமல் தானே வலிய வந்து ஆட்கொள்வான் முருகன் என்பதைக் காட்டுவதற்காகவே அந்தத் திருவிளையாடல் நிகழ்ந்தது. இறைவன் செய்கிற திருவிளையாடல் அந்த அந்தக் காலத்தில் செய்ய வேண்டியதைச் செய்வதோடு நிற்பது என்று நினைக்கக் கூடாது. ஒவ்வொரு திரு விளையாடலுக்கும் உட்கருத்து உண்டு. எல்லாக் காலத்திற்கும் பயன்படுகிற உண்மைகளை அந்தத் திருவிளையாடல்களால் உணர்ந்துகொள்ளலாம். தேவசேனை ஆண்டவன் பக்கத்தில் தேவலோகத்தில் உட்கார்ந்திருக்கவும் அவன் பூலோகத்திற்கு வள்ளி நாயகியைத் தேடி ஓடி வந்தான். அவன் எல்லா

வகையிலும் சிறந்தவன். தேவர்களுக்குத் தலைவனாக இருக்கும் இந்திரனுக்கே அருள்பாலித்தவன். அத்தகைய தேவசேனாபதி வள்ளியைத் தேடி வந்தது, வள்ளி நாயகிக்கு மட்டும் நலம் செய்வதற்காக அன்று. வள்ளியின் நிலையில் இருக்கிற நம்மைப் போன்றவர்களுக்கும் அவன் கருணை கிடைக்கும் என்பதைப் புலப்படுத்தவே அந்தத் திருவிளையாடலைப் புரிந்தான். அவனை அன்றி வேறு ஒன்றையும் நினையாமல் இருந்தால், அவன் நம்மையும் வந்து ஆட்கொள்வான் என்பதைத் தெரிந்துகொள்ள அந்தத் திருவிளையாடல் பயன்படுகிறது. காட்டில் இருந்த குறத்தியாகிய வள்ளி நாயகியைப் போல, பெரும் கருணையை உடைய பெருமானாகிய முருகன் பாதத்தில் கருத்தை வைத்தால் அவன் உயர்ந்த இடத்திற்கு நம்மைக் கொண்டு செல்வான்.

காட்டில் குறத்தி பிரான் பதத்தே கருத்தைப் புகட்டின்
வீட்டில் புகுதல் மிக எளிதே.

அவன் பாதம் நாம் இருக்கும் இடத்திற்கு நடந்து வந்துவிடும். முப்பத்து முக்கோடி தேவர்கள் இருக்கும் இடத்தில் கமழும் பதம் அது. ஆனாலும் அடியார்கள் தலையிலும், உள்ளத்திலும் அது வந்துவிடும். அவர்களை ஆட்கொள்வதற்காக அவர்கள் நடமாடும் இடத்தில் வந்து விடும்.

''சுனையோடு அருவித் துறையோடு பசுந்
தினையோடு இதணோடு திரிந்தவனே''

என்று கந்தர் அநுபூதியில் பாடுகிறார். வள்ளி நாயகி சுனைக்குப் பக்கத்தில் இருக்கிறாளா என்று முருகன் அங்கே சென்று பார்த்தான். அருவியில் நீராடுகிறாளா என்று அங்கே சென்று பார்த்தான். தினைக் கொல்லையைக் காவல் புரிகிறாளா என்று அங்கே போய்த் தேடினானாம்.

உட்கருத்து

தன்னை அன்பன் நாடித் தேடித் திரிந்து அலைவதற்குப் பதிலாக அன்பனைத் தானே நாடித் தேடி ஆட்கொள்கின்றவன் முருகன் என்பதை அந்தத் திருவிளையாடல் காட்டுகிறது. 'கருணை மிகுதியினால் எளியவனாக இருக்கிற ஆண்டவனுடைய பாதத்தில் கருத்தைப் புகட்டினால் எளிதில் வீட்டைப் பெற்றுவிடலாம். இந்த வழி நமக்கு இருக்கவும், இதை மறந்துவிட்டு

உடம்பைப் பலவகையிலும் துன்புறுத்திச் சுவாச பந்தனம் செய்து யோகம் கைகூடாமல் திண்டாடுகிற யோகிகளே, நீங்கள் இரங்குவதற்கு உரியவர்கள்' என்று அருணகிரியார் இரங்கிப் பேசுகின்றார்.

காட்டில் குறத்தி பிரான்பதத் தேகருத் தைப்புகட்டின்
வீட்டில் புகுதல் மிகஎளி தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார நேர்அண்ட மூச்சையுள்ளே
ஓட்டிப் பிடித்துஎங்கும் ஓடாமல் சாதிக்கும் யோகிகளே.

யோகிகள் ஞானத்தை அடைய வேண்டியவர்கள். அவர்களைப் பார்த்து இந்தப் பாட்டைச் சொல்கிற அருணகிரியார், ''ஆண்டவன் ஞானபண்டிதசாமி; அவன் ஞானமே உருவாகிய வேலாயுதத்தை வைத்திருக்கிறான். அவனுடைய பாதத்தை அடையுங்கள்'' என்று சொல்லியிருக்கலாம்; அல்லது, ''சித்தர்களுக்கெல்லாம் தலைவனாக இருக்கிறவன் ஆண்டவன். அவன் திருவடியைப் பற்றிக் கொள்ளுங்கள்'' என்று சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்லாமல்,

காட்டில் குறத்தி பிரான் பதத்தே கருத்தைப் புகட்டின்

என்று சொல்கிறார். 'இது அவ்வளவு பொருத்தமாக இல்லையே!' என்று நினைக்கத் தோன்றும்.

ஒருவன் சிவபூசை, பஞ்சாட்சர ஜபம் செய்கின்றவன். அவன் மாமாவின் பெண் கான்வெண்ட் பள்ளியில் படிக்கிறாள். அங்கே பைபிள் சொல்லித் தருகிறார்கள். அவள் நாள்தோறும் பள்ளிக்குப் போகும்போது பாழ் நெற்றியாகப் போவாளே தவிரக் குங்குமம் இட்டுக்கொண்டு போகமாட்டாள். அங்குள்ளவர்கள் பரிகாசம் செய்வார்கள் என்று அவளுக்குப் பயம். அவளுடைய உறவினனாகிய மேலே சொன்னவன் சிவபக்தன். ''நெற்றிக்கு இட்டுக் கொண்டு பள்ளிக்குப் போ'' என்று அவளிடம் அவன் சொல்வதனால் என்ன பயன்? அந்தப் பள்ளியில் அவள் படிக்கிறவரைக்கும் அங்குள்ள சூழ்நிலைதான் அவளை அடிமைப்படுத்தும். ஆகவே அவன், ''உனக்கு அந்தப் பள்ளி வேண்டாம். கற்பகாம்பாள் பள்ளிக்குப் போ'' என்று சொல்வான். இந்தப் பள்ளிக்குப் போக ஆரம்பித்தால் இத்தகைய பழக்கம் தானே வருகிறது. அதனால் அந்த இடத்திற்கு நீ போக வேண்டாமென்று சொல்வதுதான் இயற்கையானது. அதுபோல் யோகிகளைப் பார்த்து, ''யோக

மார்க்கத்தை ஏன் கொண்டாடுகிறீர்கள்? அதுவே வேண்டாம்'' என்று அருணகிரியார் சொல்லுகிறார்; 'இவர்கள் பக்தி நெறிக்கு வந்துவிட்டால் அமைய வேண்டிய குணங்கள் எல்லாம் தாமே வந்துவிடும்' என்ற நினைவினால் இவ்வாறு 'தொல்லை தரும் வழி வேண்டாம்; எளிய வழிக்கு வாருங்கள்' என்கிறார்.

வீட்டில் புகுதல் மிக எளிது.

மிக எளிது

வீடு என்பது எந்த வழியில் சென்றாலும் ஒன்றுதான். அதன் உள்ளே நுழைந்தவர்களுக்குள் வேறுபாடு இல்லை. அந்த வீட்டுக்குள் நுழைவதற்குப் பல மூலைகளிலும் கதவுகள் இருக்கின்றன. ஒவ்வொரு வாசலிலும் கதவு உண்டு. ஆனால் ஒவ்வொரு கதவுக்கும் நேரே ஒவ்வொரு வகையான பாதை இருக்கிறது. மேற்குப் பக்கத்தில் ஒரே காடு; முள்ளும் புதரும் மண்டிக் கிடக்கின்றன. பாம்பும் பூரானும் விஷப் பிராணிகளும் நடமாடிக் கொண்டிருக்கின்றன. செடிகொடிகளை விலக்கிக் கொண்டு பூச்சிகளை நாசம் செய்து வீட்டுக்குள் முடிவாகத் தப்பி வருவது என்றால் எளிய காரியம் அன்று. ''ஏன் அப்பா அந்த வழியாக வருகிறாய்? கிழக்குப் பக்கம் பாதை நன்றாக இருக்கிறதே. இவ்வழியாக வந்துவிட்டால் எளிதில் வீட்டுக்குள் புகலாம்'' என்பாரைப் போல இந்தப் பாட்டைப் பாடுகிறார். 'இங்கே செடிகொடி ஒன்றும் இல்லை. காற்று நன்றாக வீசுகிறது. பாதை தெளிவாக இருக்கிறது. பலர் இந்த வழியில் சென்று வீட்டுக்குள் புகுந்திருக்கிறார்கள்' என்று சொல்வாரைப் போல,

காட்டில் குறத்திபிரான்

என்று நினைப்பூட்டுகிறார்.

உண்மையில் மற்ற நெறிகளை எல்லாம்விடப் பக்தி நெறி, செல்லும்போதே இன்பத்தைத் தருவது. முத்தி என்று தனியே ஓர் இன்பம் இருக்கிறதென்றும், பக்தி நெறியினாலே அடைவதற்கு உரியது அது என்றும் சிலர் சொல்வார்கள். ஆனால் பக்தி நெறியில் சென்றவர்கள் அப்படிச் சொல்வது இல்லை. பக்தியே முத்தி இன்பம் ஆகிவிடும் என்பது அவர்கள் கொள்கை. ''இறவாத இன்ப அன்பு'' என்பர் சேக்கிழார்.

"சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடும் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமும் கமழும் கழலே"

என்று குறத்திக்காக அலைந்த அந்தத் திருப்பாதம் தம்முடைய தலையின் மேலே சூடுவதற்கு உரியதாக வந்தது என்று அருணகிரியார் கந்தர் அநுபூதியில் சொல்கிறார்.

இவ்வளவு எளிதான வழி ஒன்று இருக்கும்போது அரியவற்றுள் எல்லாம் அரிதான யோக நெறியில் சென்று மாட்டிக் கொண்டு ஏன் வாடவேண்டுமென்பதே அருணகிரியாருடைய கருத்து.

★

காட்டில் குறத்தி பிரான்பதத்
தேகருத் தைப்புகட்டின்
வீட்டில் புகுதல் மிகஎளி
தேவிழி நாசிவைத்து
மூட்டிக் கபாலமூ லாதார
நேர்அண்ட மூச்சைஉள்ளே
ஓட்டிப் பிடித்துஎங்கும் ஓடாமல்
சாதிக்கும் யோகிகளே.

[காட்டிலே வாழ்ந்த குறத்தியாகிய வள்ளி நாயகியின் மணாளனாகிய முருகனுடைய திருவடியில் உள்ளத்தைச் செலுத்தி அன்பு செய்தால் பேரின்ப வீடாகிய முத்தியிலே புகுவது மிகவும் எளிய செயல்; விழிப்பார்வையை மூக்கு நுனியிலே வைத்து, மூலாக்கினியை மூட்டி மூச்சைக் கபாலத்துக்கும் மூலாதாரத்துக்கும் உள்ள நேரான வழியில் செல்ல உள்ளே பூரித்துப் பிறகு கும்பித்து எங்கும் ஓடாமல் யோகசாதனம் செய்யும் யோகிகளே!

பிரான் – இங்கே தலைவன். புகட்டுதல் – செலுத்துதல். விழி: ஆகுபெயர்: பார்வையைக் குறித்தது. நாசி – நாசி நுனி. மூட்டி – மூலாதாரத்திலுள்ள தீயை எழுப்பி, கபால மூலாதாரம் நேர் – கபாலம் மூலாதாரம் என்ற இரண்டுக்கும் தொடர்பாக நேரே உள்ள சுழுமுனை நாடி. அண்ட – அதன்வழியே செல்ல. மூட்டி, மூச்சை நேர் அண்ட ஓட்டி என்க. ஓட்டி – சுழும்னா நாடியில் ஓடச் செய்து. பிடித்து – கும்பித்து; மூச்சை நிறுத்தி. யோகிகளே, புகட்டின் எளிது என்று முடிவு செய்க.]

இது கந்தர் அலங்காரத்தில் 85–ஆவது பாட்டு.

அருட் கவசம்

முன்பு பலமுறை அருணகிரியார் யமனை நேரே பார்த்து, ''உன்னுடைய கைவரிசை என்னிடம் பலிக்காது'' என்று கூறினதைப் பார்த்திருக்கிறோம். ''யமனுக்கு நான் அஞ்ச மாட்டேன்'' என்று படர்க்கையாகவும் பல பாடல்களைச் சொல்லி யிருக்கிறார். அப்படிப் பல வகையில் சொன்னவரைப் பார்த்து நமக்கு ஒரு சந்தேகம் வருகிறது. ''இப்படிச் சொல்லுகிறீர்களே; எவ்வளவோ ஆயுதங்களை வைத்துக்கொண்டு யமன் மக்களுடைய உயிரைக் கொள்ள வருபவன் ஆயிற்றே. சாமானிய ஆயுதம் வைத்துக் கொண்டிருப்பவனிடம் போரிடுவதே கடுமையாக இருக்கிறது. சூலம், வாள், பாசம், தண்டு ஆகிய பலவிதமான படைக்கலங்களை வைத்துக்கொண்டிருக்கிறவனை நான் வென்றுவிடுவேன் என்று நீங்கள் மார்தட்டிக் கொண்டிருக்கிறீர்களே. உங்களிடத்தில் என்ன சக்தி இருக்கிறது? உங்களிடம் என்ன படை இருக்கிறது? அவனைப் பகைத்துக் கொள்ளலாமா? அவன் வந்தால் அவனை எதிர்க்க அவன் படைக்கு ஒப்பாக என்ன பலத்தை வைத்துக் கொண்டு இப்படிப் பேசுகிறீர்கள்?'' என்று நாம் கேட்கிறோம். அதற்கு விடையாக, ''எனக்குத் தைரியம் இல்லாமலா சொல்வேன்? எனக்குத் தக்க பாதுகாப்பு இருக்கிறது'' என்று சொல்வாரைப் போல இந்தப் பாட்டைச் சொல்கிறார். ''யமனிடத்தில் மட்டுந்தான் ஆயுதம் இருக்கிறது என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? யமன் ஆயுதம் என்பால் வந்தால் எனக்குத் தீங்கு ஒன்றும் வராமல் காத்துக் கொள்வதற்குரிய ஆயுதம் என்னிடம் இருக்கிறது'' என்று சொல்கிறார். அப்படிச் சொல்லும் பாடலில் பல ஆயுதங்களை நினைப்பூட்டுகிறார்.

ஆயுத மயம்

இப்பொழுது உலகம் முழுவதும் ஆயுதமயமாக இருக்கிறது. பழங்காலத்தில் வாயவாஸ்திரம், ஆக்னேயாஸ்திரம், நாகாஸ்

திரம் முதலிய பல ஆயுதங்களை வைத்துக் கொண்டு போரிட்டார் கள். மந்திரத்தைக் கூறி அவற்றை ஏவினார்கள். தம் நாட்டைக் காப்பாற்றிக்கொள்ளவும் பிற நாடுகளைப் பிடிக்கவும் போர் செய்யும் இந்தக் காலத்திலும் பலவிதமான புதுப்புது ஆயுதங் களை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துக்கொண்டுதான் இருக்கிறார் கள். கத்தி முதல் அணுகுண்டு வரைக்கும் உள்ளன யாவும் ஆயுதங்களே. ஆயுத யுகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று சொல்வது பொருந்தும். இப்போது கண்டுபிடித்துள்ள படைகளில் அழிவுச் சக்தி மிகப் பெரிது. போர் வந்தால் இனி உலகத்தில் யாருமே இல்லாமல் அழிந்துபோகக் கூடிய நிலைமை உண்டாகிவிடும் என்று தோன்றுகிறது. அதனால் உலகப் பேரறி ஞர்கள் இத்தகைய படைகளை உண்டாக்கக் கூடாது என்று அடிக்கடி வற்புறுத்தி வருகிறார்கள்; மகாநாடு கூட்டுகிறார்கள்.

அஸ்திரமும் சஸ்திரமும்

அந்தக் காலத்தில் ஆயுதங்களை இரண்டு வகையாகப் பிரித்திருந்தார்கள்; அஸ்திரம், சஸ்திரம் என்பன அவை. தன் கையிலேயே பிடியை விடாமல் வைத்துக் கொண்டு போரிடும் கருவி சஸ்திரம். கையில் இருப்பதை எதிரிகளின்மேல் வீசி எறிந்து போரிடும் கருவி அஸ்திரம். மனிதன் அறிவுடையவன் ஆகையால் புல்லையும் தனக்கு ஆயுதமாக உபயோகித்துக் கொள்ள முயல்கிறான். குதிரை, யானை முதலிய விலங்கு களையும் தனக்குக் கருவியாகப் பயன்படுத்திக் கொள்கிறான். ஆட்சி புரிந்த மன்னர்கள் மக்கள் நன்றாக வாழவேண்டும் என்று நினைப்பதைக் காட்டிலும் எதிரிகளைப் பூண்டோடு ஒழிப்பது எப்படி, அவர்களுடைய நாட்டைக் கைக்கொள்வது எப்படி என்று சிந்தித்துக் கொண்டிருந்தார்கள். அதற்காகப் பல பல படைக்கலங் களை உண்டாக்கியும், படைகளைக் கூட்டிக் கொண்டும் வாழ்ந் தார்கள். இன்றைக்கும் ஒவ்வொரு நாடும் படைகளைக் கூட்டிக் கொண்டிருக்கிறது. அமெரிக்காவிடம் அணுகுண்டு இருக்கிறது. ரஷ்யாவிடம் ஏவுகணை இருக்கிறது. அந்த அந்த நாட்டு அரசிய லார் தம்மிடம் வேறு யாரிடமும் இல்லாத ஆயுதம் இருப்பதாகப் பெருமைப்பட்டுக் கொள்கிறார்கள். அதைக் கண்டு உலகம் அஞ்சுகிறது. படைகளை ஏவிச் செய்யும் நேர் யுத்தத்தைவிட

இந்தக் கெடுபிடிப் போரினால் எங்கும் ஐயமும், அவ நம்பிக்கை யும் குமுறிக் கொண்டிருக்கின்றன.

தெய்வங்களின் ஆயுதங்கள்

"நம்முடைய தெய்வங்களின் கையில் ஆயுதங்கள் இருக் கின்றனவே; எதற்காக இந்தத் தெய்வங்கள் ஆயுதங்களை வைத்துக் கொண்டிருக்கின்றன? சக்கரபாணி, சூலபாணி, வேலாயுதன் என்று தங்களுக்குப் பெயர் சூட்டிக் கொண்டிருக்கிறார்களே; காரணம் என்ன?" என்று நமக்குச் சந்தேகம் வரும். தன் கையில் ஆயுதங்களை வைத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று ஆண்ட வனுக்கு ஆசை இல்லை. ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு காரியத்திற்கு அவன் ஆயுதம் எடுத்தவனாக இருக்கலாம். இராவணனை அழிக்க இராமன் கோதண்டம் ஏந்தினான். சூரனை அழிக்க முருகன் வேல் பிடித்தான். 'இராவணன்தான் அழிந்து விட்டானே. சூரன்தான் குலைந்துவிட்டானே. இப்போதும் கோதண்டபாணியாக, வேலாயுத பாணியாக அவர்கள் காட்சி அளித்துக் கொண்டிருப்பானேன்?' என்று நமக்குத் தோன்றலாம். நமக்குக் கோதண்டபாணி வேண்டாம், சீதாராமன் இருந்தால் போதும்; வேலாயுதன் வேண்டாம்; வள்ளி மணவாளன் இருந் தால் போதும் என்றுகூடத் தோன்றலாம். அந்த மூர்த்திகள் ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டிருப்பதற்குக் காரணம், யாரோ ஒருவரைக் கொலை செய்வதற்கு அன்று. காலனை எண்ணிப் பயந்துகொண்டிருக்கிற ஆருயிர்களுக்கு, தெய்வம் நமக்குத் துணை யாக இருக்கின்றது என்ற தைரியம் உண்டாக வேண்டுமென்று அப்படி இருக்கிறார்கள். அந்த ஆயுதங்கள் நாம் பயன்படுத்தும் ஆயுதங்களைப் போன்றன அல்ல. அவை சில உண்மைகளைப் புலப்படுத்தும் சின்னங்கள். அதற்காகவே அவற்றை ஏந்திக் கொண்டிருக்கிறார்கள். இராவணன் ஒரு காலத்தில் இருந்தான்; சூரன் ஒரு காலத்தில் இருந்தான் என்பது புராணம். ஆனால் அவர் களுடைய சந்ததிகள் எப்போதும் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு கணமும் அசுர சம்பத்துகள் உள்ளத்தில் தோற்றிக் கொண்டிருக்கின்றன. அவை அகப் பகைகள். புறப்பகைகளை விட அவற்றால் விளையும் தீங்கு மிகுதி. அதனால், "அகப் பகைக்கு அஞ்சி நிலை குலைந்துவிடாதே; நான் இருக்கிறேன்,

காப்பாற்ற'' என்று ஆண்டவன் ஆயுதபாணியாக எப்போதும் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறான். ஆண்டவனுக்கு எதிரி என்று யாரும் இல்லை. அடியார்களுக்கு எதிரியாக இருப்பவர் களை ஒறுத்து, அவர்களுக்கு நலம் செய்யும் பொருட்டே ஆண்டவன் ஆயுதபாணியாக இருக்கிறான்.

வேலின் பெருமை

பலவிதமான ஆயுதங்கள் இருந்தாலும் பழங்காலத்தில் வேல், வாள், வில் ஆகிய மூன்றையும் சிறப்பாகச் சொல்வார்கள். இந்த மூன்றிலும் மிகச் சிறப்பானது வேல். வாள் என்னும் படையைக் கையில் பிடித்துக் கொண்டு பகைவர்களை வெட்ட வேண்டும். கையினின்றும் வாளை விட்டுவிட்டால் பயன் இல்லை. இது சஸ்திரம். அம்பைக் கையில் வைத்துக் கொண்டு போரிட முடியாது. அம்பை வில்லில் ஏற்றிப் பகைவர்களின்மேல் செலுத்தி அவர்களை அழிக்க வேண்டும். இது அஸ்திரம். வாள் கையை விட்டுப் போய்விட்டால் பயன் இல்லை. அம்பு கையில் இருந் தால் பயன் இல்லை. ஆனால் வேலுக்கு இரண்டு வகையிலும் பயன் உண்டு. அஸ்திரத்தின் தன்மையும் சஸ்திரத்தின் தன்மை யும் ஒருங்கே பொருந்தியுள்ளது அது.

வேல் 'வெல்' என்ற சொல்லின் அடியாக வந்தது. வெற்றி தருவது வேல். ஆகவே ஆயுதங்களில் சிறந்தது.

''பெரும்பகை தாங்கும் வேலி னானும்''

என்று வேலால் பெறும் வெற்றியைப் பாராட்டும் புறத்துறை ஒன்றைத் தொல்காப்பியம் கூறுகிறது. அதன் உரையில், 'காத்தல் தொழிலன்றி அழித்தல் தொழில் பூண்ட முக்கட் கடவுட்குச் சூலவேல் படையாதலானும், முருகற்கு வேல் படையாதலானும், ான்றோர் வேற்படையே சிறப்புப் பெரும்பான்மை கூறலானும்' ன்று வேலின் பெருமையை எடுத்துச் சொல்கிறார் நச்சினார்க் கினியர்.

ஒரு பெரும் போருக்குப் பழங்காலத்தில் நான்கு வகையான படைகளைத் திரட்டுவார்கள். இவை இரத-கஜ-துரக-பதாதிகள். இரதம் - தேர். தேரில் ஏறிச் சென்று போரிடுகிற படை ஒரு வகை. கஜம் - யானை. கூட்டம் கூட்டமாகச் சத்துருக்களுடைய

படை வியூகங்களைப் போய்த் தாக்குவதற்காக யானைகளுக்குப் பழக்கம் செய்து வைத்திருப்பார்கள். இது யானைப் படை. துரகம் – குதிரை. குதிரைகளின் மீது ஏறிக்கொண்டு நான்கு பக்கமும் இருக்கும் பகைவர்களைக் கத்தியினால் வீசிக் கொல்வது வழக்கம். இந்தப் படை குதிரைப் படையாகும். பதாதிகள் என்பது காலாட் படை. இந்த நான்கிலும் யானையின் மீது ஏறிக்கொண்டு வேலினால் எதிரிகளின் யானைப் படையை எவன் தாக்கிச் சிதைக்கிறானோ அவனையே பெரிய வீரன் எனச் சங்க நூல்கள் சொல்கின்றன.

''களிறெறிந்து பெயர்தல் காளைக்குப் பயனே.''

மற்றப் படைகளை அம்பினாலும், வாளினாலும் குலைத்து விடலாம். ஆனால் யானையின் மீது அம்பு விட்டால் அதன் கெட்டியான தோலுக்குள் புகாது. வாளினாலும் அருகில் நின்று யானையை வெட்ட முடியாது.

''யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது''

என்று குறள் கூறுகிறது. வேலினால் யானையைக் குத்திக் கொல்பவர்களையே பெரிய வீரர்கள் என்று சொல்வது மரபு. அதனால் வேலுக்கு மற்ற ஆயுதங்களைவிட அதிகப் பெருமை உண்டாயிற்று.

முருகனது வேல்

அஸ்திரமாகவும் சஸ்திரமாகவும் பயன்படுவது, படைகளுக்குள் சிறந்த யானைப் படையைச் சிதற அடித்து வெற்றி கொள்வது ஆதலின் வேல் பெருமை பெற்றது. அது யாருடைய கையில் இருக்கிறது? வீரர்களுக்குள் பெரிய வீரனாகிய முருகன் திருக்கரத்தில் இருக்கிறது. வீரர்களை யாரும் சும்மா இருக்கவிட மாட்டார்கள். ஒரு கிராமத்தில் ஒரு வீரன் இருந்தால் அந்தக் கிராமத்திற்குத் தலைவனாக அவனை வைத்துக் கொண்டாடுவார்கள். கிராமத் தலைவர்களுக்குள் சிறந்த வீரனாக இருப்பவனை நாட்டுக்குத் தலைவனாக எடுத்துக் கொள்வார்கள். அவன் பகைவர்களோடு பொருது தன் நாட்டு மக்களைக் காப்பாற்றுவான். அப்படித் தங்களுக்கு வருகிற துன்பங்களைத் தகர்த்து எறிய, அசுரக் கூட்டங்களின் இன்னல்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள, தங்கள் தலைவனாக வைத்து முருகனைத் தேவர்கள்

கொண்டாடுகிறார்கள். தேவசேனாதிபதியாக எம்பெருமான் விளங்குகிறான். அவனுடைய ஆயுதம் வேல். அந்த வேல் புறத்தில் ஆயுதமாகத் தோற்றுவதோடு, அதுவே அகப்பகையைப் போக்கடிக்கின்ற ஞான சக்தியாகவும் இருக்கிறது. அதை வீரவேல் என்றும், ஞான சக்தி என்றும் சொல்வார்கள். தன் கூர்மையால் பகையையும், ஒளியினால் இருளையும், ஆற்றலால் அறியாமையையும் போக்குவது முருகன் கையில் உள்ள வேல்.

யமன்

''யமனைப் பார்த்து அறைகூவுகிறீர்களே; அவனைப் பகைத்துக் கொள்கிறீர்களே. யமன் பலவிதமான படைக் கலங்களை உடையவனாயிற்றே. அவனை எதிர்த்து வீறு பேசுவதற்கு உங்களிடத்தில் என்ன சக்தி இருக்கிறது?'' என்று கேட்ட கேள்விக்கு விடை சொல்வாரைப் போல அருணகிரியார் இந்தப் பாடலில், ''எனக்கு என்ன பயம்? யமனுடைய ஆயுதம் என்னிடத்தில் வருமா? என்னிடத்தில்தான் கவசம் இருக்கிறதே!'' என்று பாடுகிறார். அப்படிப் பாடும் பாடலில் வரிசையாக ஆறு ஆயுதங்களைச் சொல்கிறார்.

வேலா யுதன்,சங்கு சக்ரா யுதன்,விரிஞ் சன்அறியாச்
சூலா யுதன்தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
கால்ஆ யுதக்கொடி யோன்அரு ளாய கவசம்உண்டு,என்
பால்ஆ யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே!

'யமனோடு பகைக்கினுமே' என்று சொல்கிறார். 'பகைக்கினும்' என்ற சொல் 'பகைக்க மாட்டேன்; ஒருகால் பகைத்தாலும்' என்ற பொருளுடையது. யமன் தர்ம ராஜா. தனக்கு விதித்த கட்டளையை இம்மி அளவும் பிசகாமல் நிறைவேற்றி வைப்பவன். ஆண்டவனுடைய அடியான் என்றால் அவனிடம் போக அவனுக்குப் பயமாக இருக்கும். தெரியாமல் சென்று மார்க்கண்டேயனிடத்தில் பட்ட பாட்டை அவன் மறந்திருப்பானா? அவனைக் கண்டு அஞ்சாதவர்கள் அவனைத் தர்மராஜா என்றே அழைப்பார்கள். அஞ்சுபவர்கள் யமன் என்று சொல்வார்கள். இந்த உலகத்தை அழிக்கும் அணுகுண்டு போன்ற ஆயுதங்களை உற்பத்தி செய்யும் விஞ்ஞானிகளையும் அழிக்கும் சர்வ வல்லமை உடையவன் காலன். அவனை எண்ணி அஞ்சு

பவர்களே பெரும்பான்மையோர், 'யமன் யமன்' என்று வைவதைக் கேட்டிருக்கிறோம். தன் கடமையைச் செய்ய அவன் பிறரிடம் வருகிறான். 'அவனிடத்தில் எனக்கு என்ன கோபம்? என்ன பகை? அவனை நான் பகைத்துக் கொள்ள மாட்டேன். அப்படியே அவன் என்னிடத்தில் தவறாக நடந்து, கோபம் உண்டாகி அவனைப் பகைத்துக் கொண்டாலும் எனக்கு அவனிடத்தில் பயம் ஏதும் இல்லை' என்று சொல்வது போலச் சொல்ல வருகிறார் அருணகிரியார்.

என்பால் ஆயுதம் வருமோ, யமனோடு பகைக்கினுமே?

'யமனோடு பகைத்துக் கொண்டாலும் அவனுடைய ஆயுதம் என்பால் வருமோ? என்னை நெருங்கும் ஆற்றல் அதற்கு இருக்கிறதா? நெருங்கி அந்த ஆயுதத்தினால் என்ன தீங்கை எனக்கு உண்டாக்க முடியும்? என்னிடத்தில்தான் அருளாகிய கவசம் இருக்கிறதே! முருகப் பெருமானுடைய பேரருளாகிய கவசம் இருக்கும்போது எனக்கு என்ன பயம்?' என்று விரிவாகச் சொல்கிறார்.

ஆயுதங்கள்

முருகப்பெருமானைப் பற்றிப் புகழத் தொடங்கும் போது முதல் முதலில்,

வேலாயுதன்

என்று சொல்கிறார். ''எனக்குத் துணை யார் தெரியுமா? வேலாயுதக் கடவுள் துணையாக இருக்கிறான். ஆயுதங்களுக்குள்ளே சிறந்த வெற்றி வேலை, அஞ்ஞான இருளைப் போக்கும் ஞான வேலை, அடியார்களைக் காக்கும் பொருட்டு எப்போதும் தன் திருக்கரத்தில் வைத்திருக்கும் முருகனுடைய துணை எனக்கு இருக்கிறது'' என்று சொல்கிறார்.

அவன் புதிதாக இராணுவத்தில் சேர்ந்த வீரனைப் போன்ற வன் அல்லன். அவன் பரம்பரையே வீர பரம்பரை. வீரர்கள் யாவரும் போற்றும் மாவீர பரம்பரை. அவனைப் பெற்ற பெரு வீரன் சூலாயுதன்.

சங்கு சக்ராயுதன் விரிஞ்சன் அறியாச்
சூலாயுதன் தந்த கந்தச்சுவாமி.

மூன்று தலைகளையுடைய சூலத்தைக் கையில் பிடித்த சிவபெருமானுடைய குழந்தை வேலாயுதக் கந்தசுவாமி. முத்தலைகளை உடைய சூலத்தின் இலைகளைச் சேர்த்தால் அதுவே வேலாகிவிடும். சூலத்தைச் 'சூலவேல்' என்றும் சொல்வார்கள். பிணைக்கப்படாத மூன்று தலைகளை உடைய சூலத்தைப் பிடித்திருக்கும் எம்பெருமான் தந்த கந்தசுவாமி, மூன்று தலைகளும் ஒன்றாகப் பிணைத்திருக்கும் வேலைக் கையில் பிடித்திருக்கிறான். அந்தத் தந்தையின் பெருமை என்ன? சூலாயுதம் தாங்கி நிற்கும் அவன் கோலத்தைப் பார்க்க வேண்டுமென்று இரண்டு மாவீரர்கள் படாத பாடுபட்டு முயற்சி செய்தார்கள். அவர்களால் காண முடியவில்லை.

சங்கு சக்ராயுதன் விரிஞ்சன் அறியாச்
சூலாயுதன்.

சங்கத்தையும் சக்கரத்தையும் ஆயுதமாகக் கொண்டவனாகிய திருமால், விரிஞ்சன் ஆகிய பிரமன் என்னும் இரண்டு பேரும் அறிய முடியாத சூலாயுதக் கடவுள் சிவபெருமான்.

சங்கு ஆயுதமா?

சக்கரத்தை ஆயுதமாகச் சொல்லலாம். சங்கம் வாத்தியம் அல்லவா? கல்யாண கோலத்தில் மங்களச் சங்கு ஊதுகிறது வழக்கமாயிற்றே. அதை ஆயுதமாகச் சொல்லலாமா?

திருமால் திருக்கரத்தில் ஐந்து ஆயுதங்கள் உண்டு. சங்கு, சக்கரம், கதை, அம்பு, வில் ஆகிய ஐந்து ஆயுதங்களில் ஒன்று சங்கம். ஒவ்வொரு காரியத்தைச் செய்கின்றபோது ஒவ்வொரு வகையான கருவி பயன்படுகிறது. திருமாலுக்குச் சங்கம் ஆயுதமாக எவ்வாறு பயன்பட்டது என்பதைப் பின்னால் ஒரு பாட்டில் அருணகிரியார் சொல்லப் போகிறார். பாரிசாத மலர் கொண்டு வரப்போன கண்ணனை எதிர்த்த தேவர்களின் கூட்டம் அந்தச் சங்கத்தின் முழக்கத்தைக் கேட்டுக் கீழே மயங்கி விழுந்ததாம். மோதிப் பகைவர்களைக் கொலை செய்கின்ற ஆயுதம் பல. ஊதிப் பகைவர்களை மாய்க்கின்ற ஆயுதம் சங்கம். மோதி ழிக்கும் படைக்கு எத்தனை பெருமை உண்டோ, அத்தனை பருமை ஊதி அழிக்கும் படைக்கும் உண்டு. அதனால்தான் ங்கத்தையும் சக்கரத்தையும் திருமால் வைத்திருக்கிறார்.

அத்தனை படைகளை வைத்துக்கொண்டுள்ள திருமாலைச் சொல்லிவிட்டுப் பிரமாவைச் சொல்லும்போது அவனுடைய ஆயுதங்கள் அவ்வளவு சிறப்பின்மையால் அவற்றைச் சொல்லாமல் விட்டுவிட்டார்.

சங்கு சக்ராயுதன் விரிஞ்சன் அறியாச்
சூலாயுதன் தந்த கந்தச்சுவாமி.

சங்கு சக்கராயுதத்தையுடைய திருமாலும், பிரமனும் அறியாத சூலாயுதத்தை உடைய கடவுள் அளித்த குழந்தை கந்தசுவாமி. ஆறு குழந்தையாக இருந்தவன் உமாதேவியின் அணைப்பினால் ஒன்றுபட்ட காரணத்தால் கந்தசுவாமி என்று பெயர் வந்தது

கொடி

ஆறு உருவமும் ஒன்றாக இணைந்த கந்தசுவாமி மூன்று தலையும் ஒன்றாக இணைந்த வேலை ஒரு கரத்தில் வைத்திருக்கிறான். வேறு ஒரு கரத்தில் வெற்றிக்கு அடையாள மான கொடியை வைத்திருக்கிறான். அது வெறும் கொடி அன்று. அதுவும் ஆயுதத்தைப் படைத்த கொடி.

சுடர்க்குடுமிக்
கால் ஆயுதக் கொடியோன்

மனிதர்கள் ஒருவருக்கொருவர் பகைகொண்டு பலவிதமான ஆயுதங்களுடன் சண்டை போட்டுக் கொள்வது போலவே, விலங்குகளும், பறவைகளும் சண்டை போடுவது உண்டு. மனிதனே அவற்றுக்குள் சண்டையை மூட்டிக் கண்டு களிப்பது வழக்கம். ஆட்டுச் சண்டை, மாட்டுச் சண்டை, கோழிச் சண்டை என்று கிராமங்களில் இன்றைக்கும் நடந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். இரண்டு ஆடுகள், இரண்டு மாடுகள் சண்டை போடும் போது கொம்பினால் ஒன்றை ஒன்று கடுமையாகத் தாக்கிப் போரிடும். கோழியைச் சண்டைக்கு விட்டால் அதன் காலில் கத்தியைக் கட்டிவிடுவார்கள். மனிதர்கள் தம் கையில் ஆயுதத்தை வைத்துக் கொண்டு சண்டைபோடுவது போல, கோழி காலில் ஆயுதத்தைக் கட்டிக்கொண்டு சண்டை போடுகிறது. ஆகவே கோழிக்குக் ''கால் ஆயுதம்'' என்று பெயர்; காலில் ஆயுதத்தை உடையது என்று பொருள். அது எம்பெருமானுக்குக் கொடியாக இருக்கிறது. அது செக்கச் செவேல் என்று இருக்கும்

கொண்டையை உடையது. பறவைகளில் ஆண் அழகு. மனிதர் களில் பெண் அழகு. ஆண் மயிலுக்கு அழகான தோகை உண்டு. அப்படியே கோழியில் சேவலுக்குத்தான் அழகான கொண்டை உண்டு. செக்கச்செவேல் என்று விளக்கின் ஒளிச் சுடர்போல இருப்பது கோழியின் கொண்டை.

சுடர்க்குடுமிக்
காலாயுதக் கொடியோன்

அந்தச் சேவலின் பெருமையை,

''வாள கிரியைத்தனது காலில் இடியப்பொருது
வாகைபுனை குக்குடபதாகைக்காரனும்''

என்று அருணகிரியார் திருவகுப்பில் சொல்கிறார். அது காலையே ஆயுதமாகக் கொண்டு சக்கரவாளகிரியை இடிக்கிறதாம். இந்தப் பாட்டில் வேல், சங்கு, சக்கரம், காலாயுதம் ஆகியவற்றை வரிசை யாகச் சொன்னார்.

அருள் என்னும் கவசம்

பிறர் தம்மேல் ஆயுதம் எய்தால் அதனால் ஊறுபடாமல் இருப்பதற்குக் கவசம் அணிந்து கொள்வது வழக்கம். கவசமும் ஒருவகை ஆயுதந்தான். பகைவர்கள் எய்கின்ற ஆயுதம் தம்மை வந்து தாக்காமல் இருப்பதற்குப் பாதுகாப்பாக உடம்பெல்லாம் கவசத்தை அணிந்து கொள்வார்கள். தலையின் மேலும் மூடி உண்டு. முகத்துக்கும் மூடி போட்டுக் கொள்வார்கள். யமனுடைய பகை உண்டானால் அவன் ஏவும் ஆயுதங்களினின்றும் நம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்குரிய கவசமாக உதவுவது முருகப் பெருமானுடைய திருவருள். ''வேலாயுதம் உடைய கடவுள் எனக்கு ஒரு கவசம் கொடுத்தான். அதற்கு அருள் என்று பெயர். அது இருக்கும்போது எனக்கு யமனிடத்தில் பயம் இல்லை'' என்று சொல்கிறார்.

என்பால் ஆயுதம் வருமோ யமனோடு பகைக்கினுமே?

யமன் ஆயுதங்களை எய்தால் அருளாகிய கவசம் இருக்கிற தென்று சொல்கிறாரே; அந்தக் கவசம் பெற்றவர்களுக்குப் பிற ஆயுதங்களால் ஊறுபாடு நேராது என்பதற்கு ஏதேனும் சாட்சி உண்டா?

வசிட்டர் கதை

வசிட்ட முனிவரின் கதை உங்களுக்குத் தெரிந்திருக்கும். கௌசிக மன்னனுக்கு வசிட்டர் ஒரு சமயம் பெரிய விருந்து வைத்தார். காமதேனுவை அழைத்து எல்லோருக்கும் அறுசுவை உண்டி பரிமாறும்படி செய்தார். அந்த அதிசயத்தைக் கௌசிக மன்னன் கண்டான். 'காட்டில் வாழும் முனிவர் நம்முடைய படை முழுவதற்கும் இவ்வளவு பெரிய விருந்து வைத்தாரே; இதற் கெல்லாம் காரணமாக இருப்பது அந்தப் பசுமாடு அல்லவா? அது நம்மிடத்தில் இருந்தால் எவ்வளவு சிறப்பு!' என்று நினைத் தான் கௌசிக மன்னன். உடனே வசிட்டரிடம் சென்று, ''அந்த மாட்டை எனக்குக் கொடுத்துவிடுங்கள்'' என்று கேட்டான்.

''அது என்னால் தருவதற்குரியது அன்று'' என்று அவர் சொன்னார். கௌசிக மன்னன் அதைக் கேட்கவில்லை. ''அப்படி யானால் நீயே அதைப் பற்றிக் கொண்டு போ'' என்று முனிவர் சொல்லிவிட்டார். மன்னன் ஆட்களை அனுப்பி அதைப் பிடித்து வரச் சொன்னான். படைவீரர்கள் சென்றார்கள். காமதேனு தன் னுடைய உடம்பைச் சிலிர்த்துக் கொண்டவுடன் ஒவ்வொரு மயிர்க்கால் வழியாகவும் ஒவ்வொரு வீரன் குதிக்கப் பலர் திரண்டு கௌசிக மன்னன் அனுப்பிய படை வீரர்களை மாய்த்து விட்டார்கள். இதைக் கண்ட கௌசிக மன்னனுக்கு மீண்டும் வசிட்டரிடம் கோபம் வந்துவிட்டது. ''இவ்வளவுக்கும் இந்த முனிவன்தானே காரணம்?' என்று சினந்து அவர்மேலே ஆயுதங் களை எய்யத் தொடங்கினான்.

வசிட்டர் தம்முடைய கையில் எந்த ஆயுதத்தையும் எடுக்க வில்லை. தம் தண்டை முன்னால் ஊன்றி, கண்ணை மூடிக் கொண்டு ஆண்டவனைத் தியானம் செய்தார். கௌசிக மன்னன் விடுத்த ஆயுதங்கள் எல்லாம் அந்த யோகத் தண்டின் முன்னால் வந்து விழுந்தன. ஆண்டவனுடைய அருளாகிய கவசத்திற்கு முன்பு ஆயுதங்கள் பயன்படாமல் ஒழிந்தன. இந்த இரண்டாவது அதிசயத்தைக் கௌசிக மன்னன் கண்டான். அப்போது அவனுக்குத் தெளிவு உண்டாயிற்று. எத்தனை செல்வம் வைத்திருந்தாலும், எத்தனை படை வீரர்களைப் பெற்றிருந் தாலும் அவற்றால் தனக்குப் பெருமை இல்லை; தவத்தினாலும் ஆண்டவனுடைய அருள் நலத்தினாலும் கிடைக்கிற பெருமையே பெருமை

என்கிற உண்மை புலனாயிற்று. 'இனி நாமும் தவம் செய்து அருளாகிய கவசத்தைப் பெற வேண்டும். இந்த வசிட்டர் திரு வாக்கினால் பிரம்ம ரிஷி என்ற பட்டத்தைப் பெற வேண்டும்' என்று உறுதிபூண்டு பலகாலம் தவம் செய்தான்; பின்பு வெற்றி பெற்றான். அவனே விசுவாமித்திர முனிவர் ஆனான். எந்தக் படையையும் தம் கையில் வைத்திராத முனிபுங்கவருக்கு ஆண்ட வனுடைய அருளாகிய கவசம் துணைநின்றது. அதுபோல் யமன் விடுகின்ற ஆயுதங்களினின்றும் பாதுகாத்துக்கொள்ள 'அஞ்சேல்' என நமக்கு முருகப் பெருமானின் அருளாகிய கவசம் உதவும் என்று அருணகிரியார் சொல்கிறார்.

எங்கே அணிவது?

'ஆண்டவனது அருளாகிய கவசம் என்னிடத்தில் இருக்கிறது' என்று அருணகிரியார் சொல்கிறாரே; கவசம் என்பது மார்பிலும் உடம்பிலும் அணிவது அல்லவா? அருளாகிய கவசத்தை எங்கே அணிந்திருப்பார்கள்?' என்று கேள்வி போடலாம். பகைவன் வேல் எடுத்துப் போரிடுகிறான்; வில் எடுத்துப் போரிடுகிறான். அந்த வில்லினின்றும், வேலினின்றும் பாதுகாத்துக்கொள்ள இரும்பினால் கவசம் தரித்துக் கொள்கிறார்கள். மார்பிலே குத்துவான் என்றால் மார்பில் கவசம் அணிந்து கொள்வார்கள். எதிரியின் ஆயுதம் எங்கே தாக்குமோ அங்கே கவசத்தை தரித்துக் கொள்வார்கள். யமன் பாசம், அங்குசம் முதலியவற்றைக் கொண்டு வருவானே என்ற பயம் எங்கே தோன்றுகிறது? உள்ளத் தில் தோன்றுகிறது. ஆகவே உள்ளத்தில் ஆண்டவனுடைய அரு ளாகிய கவசத்தைப் போட்டுக் கொள்ள வேண்டும். இறைவன் நமக்குத் துணை இருக்கிறான் என்ற நம்பிக்கை அருளால் உண் டாகும். உள்ளத்தில் உண்டாகிற நம்பிக்கையை அணிந்துகொள்ள வேண்டும். அது கவசமாகப் பயன்படும்.

"அஞ்சுவதும் இல்லை, அஞ்ச வருவதும் இல்லை"

என்று அப்பர் சுவாமிகள் சொன்னார். அப்படிச் சொல்வதற்குரிய திண்மை அவருக்குக் கவசமாக இருந்தது. ஆண்டவனுடைய திருவருளே அந்தத் திண்மையை உண்டாக்கும். இங்கே அருண கிரியார் யமனால் வருகிற துன்பத்தைப் போக்குவதற்குத்தக்க பாதுகாப்பு இறைவனுடைய அருளாகிய கவசம் என்று சொல்கிறார்.

கவலையும் யோசனையும்

இறைவனுடைய திருவருளைப் பெற்றவர்களுக்கு, நாளைக்கு மரணம் வந்து விடுமே என்ற அச்சமில்லை. எந்தக் காலத்தில் ஆயுள் முடிகிறதோ அப்போது இறைவன் தன்னுடைய திருவடியில் சேர்த்துக் கொள்வான் என்ற உறுதியான நம்பிக்கை அவர்களுக்கு இருக்கும். அந்த நம்பிக்கை இல்லாதவர்களே வருத்தப்பட்டுக் கொண்டிருப்பார்கள். ''ஐயோ, யமன் வருவானே'' என்று கவலைப்படுவார்கள்.

கவலை என்பது வேறு, யோசனை என்பது வேறு. ஒரு காரியத்தை முடிக்க வேண்டுமென்றால் அதனை எப்படி முடிப்பது, யாரைக் கொண்டு முடிப்பது என்ற வகையில் ஆராய்ந்து முயற்சி செய்ய வேண்டும். அப்படி ஆராய்வது யோசனை. ''அதைச் செய்ய வேண்டியிருக்கிறதே! என்ன செய்யப் போகிறோம்! தோல்வி அடைந்துவிட்டால் என்ன பண்ணுவது?'' என்று அஞ்சுவது கவலை. இரண்டும் நம் உள்ளத்தில்தான் எழுகின்றன. அறிவாளிகள் நன்றாக யோசனை செய்வார்கள்; ஆனால் கவலைப்படமாட்டார்கள். செய்யக் கூடியதை எப்படிச் செய்ய வேண்டுமோ அப்படிச் செய்வதற்கு யோசனை செய்து திட்டம் வகுத்து முயற்சி செய்வார்கள். முடியாத காரியத்தைப் பற்றி நினைக்கவே மாட்டார்கள்; கைவிட்டுவிடுவார்கள். மனத்திலே திண்மை இல்லாதவர்கள், செயலாற்றல் இல்லாதவர்கள், 'ஐயோ செய்ய வேண்டுமே!' என்று அஞ்சுவார்கள். அவர்கள் கோழைகள்.

முருகப் பெருமானுடைய திருவருளில் ஈடுபாடும், அவன் நம்மைக் காப்பாற்றுவான் என்ற உறுதிப்பாடும் உடையவர்கள் கவலைப்படமாட்டார்கள்.

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது''

என்று வள்ளுவர் சொன்னார். இறைவனுடைய திருவடியை நம்பித் துணையாகப் பெற்றவர்களுக்கு, அவனுடைய அருளாகிய கவசத்தை அணிந்து கொண்டவர்களுக்கு, மனக்கவலை இராது. அவர்கள் யோசனை செய்வார்களேயன்றிக் கவலைப்படமாட்டார்கள். அந்த யோசனையினால் முருகப் பெருமானுடைய பெருமையும் அவனுடைய அருளாணையும் இத்தகையன என்று

உணர்வதற்குரிய தெளிவு உண்டாகும். அதனால் அச்சம் சிறிதும் எழாமல் தொலைந்துவிடும்.

'எனக்கு இறைவனுடைய அருளில் நம்பிக்கை இருக்கிறது. அந்த அருளாகிய கவசம் இருப்பதால் பல ஆயுதங்களைக் கொண்டு யமன் என்பால் வந்தாலும் எனக்கு எந்தவிதமான ஊறுபாடும் நேராது. அவனுடைய ஆயுதங்கள் என்னை ஒன்றும் செய்யா' என்ற உறுதிப்பாட்டுடன் கூறுகிறார் அருணகிரியார்.

★

வேலா யுதன்சங்கு சக்ரா யுதன்விரிஞ் சன்அறியாச்
சூலா யுதன்தந்த கந்தச் சுவாமி சுடர்க்குடுமிக்
கால்ஆயுதக்கொடியோன் அரு ளாய கவசம்உண்டுஎன்
பால்ஆ யுதம்வரு மோயம னோடு பகைக்கினுமே?

[வேற்படையையுடைய பெருமானும், சங்குசக்கரங்களாகிய படைக் கலங்களைக் கொண்ட திருமால், பிரமன் இருவரும் அறியாத சூலா யுதத்தையுடைய சிவபெருமான் அருளிய கந்தச்சுவாமியும், விளக்கு சுடர்போன்ற கொண்டையையும் காலில் ஆயுதத்தையும் உடைய கோழியைக் கொடியாக உடையவனுமாகிய முருகனது அருளாகிய கவசம் என்னிடம் இருக்கிறது; நான் யமனோடு பகை கொண்டாலும் என்னிடம் அவன் விடுக்கும் ஆயுதம் வருமோ?

வேலாயுதன், கந்தச்சுவாமி, கொடியோன் என்று கூட்டுக. சங்கு சக்ராயுதன் – திருமால். விரிஞ்சன் – பிரமன். சுடர் – விளக்கு. குடுமி – கொண்டை. காலாயுதம் – கோழி. ஆயுதம் வருமோ – யமனுடைய ஆயுதம் வருமோ? வராதென்றபடி.]

முருகனை நம்பி அவன் திருவருளைப் பெறுகிறவர்களுக்கு யமபயம் இல்லை என்பது கருத்து.

இது கந்தரலங்காரத்தில் 86–ஆவது பாட்டு.

எமராசன் கடைஏடு

தனிச் சிறப்பா?

ஆயுதக் கூட்டங்களுக்கு நடுவில் வாழ்கின்ற நமக்கு இறைவன் திருவருளாகிய கவசம் இருந்தால் யமனுக்கும் பயப் படாத நிலை வரும் என்று அருணகிரியார் வாய் மலர்ந்தருளி யதைப் பார்த்தோம்.

''என்பால் ஆயுதம் வருமோ யமனோடு பகைக்கினுமே''

என்று அவர் சொன்னவுடன் சிலருக்கு ஓர் எண்ணம் தோன்ற லாம். 'என்பால் ஆயுதம் வருமோ என்றுதானே சொல்கிறார்? அவரிடத்தில் ஏதோ தனிச்சிறப்பு இருக்கும் போல் இருக்கிறது' என்ற எண்ணம் உண்டாவது நியாயமே. ஏதோ லஞ்சம் கொடுத்து ஒருவன் மற்றொருவனிடம் ஒரு காரியத்தைச் சாதித்துக் கொள்கிறான். அவன் தன் ஒருவனால்தான் இந்தக் காரியத்தைச் சாதிக்க முடிந்தது என்று செருக்கோடு இருப்பான். அவனுடைய பேச்சைக் கேட்டவர்கள், 'இவனிடத்தில் உள்ள பணப்பலமோ, செல்வாக்குப் பலமோ அந்தக் காரியத்தை சாதித்துக் கொள்ள உதவிற்று' என்று நினைப்பார்கள். இவ்வாறு, நேர்மையற்ற முறையில் தம் அளவிலே ஊதியம் பெற்று ஒவ்வொரு காரி யத்தையும் நிறைவேற்றிக் கொள்பவர்களிடத்தில் குறைபாடு இருக்கும். காரியம் நிறைவேறின பிறகு அகங்காரம் உண்டாகும். அப்படி அருணகிரியார் சொன்னார் என்று சொல்வது தவறு.

ஆனாலும் அவர், 'அருளாகிய கவசம் என்னிடம் உண்டு. யமன் ஆயுதம் என்பால் வருமோ?' என்று சொல்லும்போது அவருக்கு மாத்திரம் உள்ள தனி நியதி அது என்ற எண்ணம் சிலருக்கு வரலாம். 'அவர் பெரியவர். முருகப்பெருமான் அவருக்கு அருள் செய்தான். ஆதலால் இப்படி வீறு பேசுகிறார். நமக்கும் அந்த அருள் கவசத்திற்கும் நெடுந்தூரம். இனி எத்தனை

பிறவி எடுத்த பிறகு நமக்கு அந்த நிலை வருமோ?' என்று எண்ணவும் தோன்றும்.

பொது உரிமை

அருணகிரியார் தாம் பெற்ற இன்பத்தைப் பிறர் பெற வேண்டுமென்று எண்ணுகிறவர். "கருணைக்கு அருணகிரி" என்று பெயர் வாங்கினவர். ஆகவே, இறைவனுடைய திருவருளால் காலபயம் போகும் என்பதைத் தம்மோடு சார்த்திச் சொன்னவர், அந்த நிலை எல்லோருக்கும் பொது என்பதை உணர வைப்ப தற்கு உடனே இந்தப் பாட்டைச் சொல்கிறார். முருகப் பெருமான் திருவருள் அதைப் பெறுதற்கு முயற்சி செய்கிறவர்கள் எல்லோ ருக்கும் உரியது என்ற எண்ணத்தை உண்டாக்கும் வகையில் இந்தப் பாட்டு அமைந்திருக்கிறது.

குமரா சரணம் சரணம்என்று அண்டர் குழாம்துதிக்கும்
அமரா வதியில் பெருமாள் திருமுகம் ஆறும்கண்ட
தமராகி வைகும் தனியான ஞான தபோதனர்க்குஇங்கு
எமராசன் விட்ட கடையேடு வந்துஇனி என்செயுமே?

என்ற இந்தப் பாட்டு ஒரு கேள்வி உருவத்தில் இருக்கிறது. "கடையேடு வந்து இனி என்செயுமே?" என்று கேட்பதற்கு விடை "ஒன்றும் செய்யாது" என்பதுதான். அந்தக் கேள்வியிலே அதற்குரிய விடையும் குறிப்பாகப் பொருந்தியிருக்கிறது.

தேவர்களும் மக்களும்

அண்டர் குழாம் எப்போதும் முருகப் பெருமானைத் துதித்துக் கொண்டிருக்கிறது. உலகத்தில் உள்ளவர்கள் வாழ வேண்டுமென்று தேவர்கள் நினைக்கிறார்கள். உத்தியோகம் செய்கிறவனுக்குச் சம்பளம் கிடைத்தால்தான் அவன் வாழலாம். அவனுக்குச் சம்பளம் கிடைக்க வேண்டுமானால் மக்கள் வரி செலுத்த வேண்டும். அதனால் உத்தியோகஸ்தன் மற்றவர்கள் நன்றாக வாழவேண்டுமென்று நினைக்கிறான். இன்ஷூரன்ஸ்காரர் கள் இன்ஷூரன்ஸ் செய்தவர்கள் நெடுநாள் வாழ வேண்டு மென்று விரும்புவது இல்லையா? அதுபோல் தேவர்கள், உலகம் எல்லாம் நன்றாக வாழவேண்டுமென்று எண்ணுகிறார்கள். உலகம் வாழ்ந்தால்தான் அவர்களுக்கு அவி உணவும் புகழும்

கிடைக்கும். பெரியவர்கள் செய்கிற வேள்விகள் தேவர்களுக்கு உணவாகின்றன. வானவர்களுக்கு நன்மை உண்டாக வேண்டு மென்றால் உலகத்தில் உள்ள மக்களுக்கு நன்மை உண்டாக வேண்டும்.

அவ்வாறே வானவர்களுடைய வாழ்வு தடைப்பட்டால் அவர்களால் கிடைக்கும் நலங்கள் உலகத்திற்கும் இல்லையாகும். வானவர்களுடைய வாழ்வு தொடர்ந்து நன்றாக நடைபெறா விட்டால் மண்ணவர்களுடைய வாழ்வும் தீங்கு அடையும்.

தேவர் வணங்குதல்

தேவர்களுக்குப் பகைஞர்கள் அசுரர்கள். அசுரர்களில் மிக்க கொடியவனாக இருந்தவன் சூரன். மாயையின் பிள்ளையாகிய அந்தச் சூரன் தேவலோகத்தைத் தன்னுடையதாக்கிக் கொள்ள முயன்றான். அவனால் தேவர்களுக்கு உண்டான துன்பங்களுக்கு அளவு இல்லை. தம்முடைய சொந்த ஆற்றலால் அந்த அசுரனை மாய்ப்பதற்குத் தேவர்களுக்கு வழியில்லை. உலகத்தில் உள்ள மக்களுக்குத் தேவர்கள் பலவகையான அஸ்திரங்களைக் கொடுக் கிறார்கள். அற்புதங்களைச் செய்யும் அந்த அம்புகளை வைத்துக் கொண்டு மக்கள் போரிட்டார்கள். புராணங்களைப் பார்த்தால் தவம் செய்தவர்களுக்குத் தேவர்கள் பலவகையான அஸ்திரங் களை அருளியதாகக் கதை இருப்பதைப் பார்க்கலாம். வல்லமை இல்லாதவர்களுக்கு வல்லமை தரும் பல அஸ்திரங்களை வழங்கக் கூடியவர்களாகத் தேவர்கள் இருந்தாலும் சூரனை எதிர்க்கமாட் டாமல் திண்டாடினார்கள். அவர்கள் சிவபெருமானை அடைந்து தங்கள் தொல்லையைப் போக்க வேண்டுமென்று விண்ணப் பித்துக் கொண்டார்கள். அவர்களுடைய விருப்பத்தின்படி முருகப் பெருமான் திருஅவதாரம் செய்தான். முருகன் தேவர்களுடைய படைக்குத் தலைமை தாங்கினான்.

"வானோர் வணங்குவில் தானைத் தலைவன்"

ஆக நின்றான். அவன் சூரபன்மாவைச் சங்காரம் செய்து தேவர் களைக் காப்பாற்றினான்.

முருகப்பெருமானால் தமக்கு வருகின்ற நன்மையை எண்ணி அவனைத் தோத்திரம் செய்தார்கள் அமரர்கள். சூரபன்மாவை

அவன் அழித்த பிறகு பின்னும் மிகுதியாகத் துதி செய்தார்கள். அவனால் தாங்கள் பெற்ற இன்பத்தை நினைந்து நன்றி அறிவும், பணிவும் மீதூரப் பலவகையில் புகழ்ந்தார்கள்.

குமரா சரணம் சரணம்

என்று துதித்தார்கள்.

ஷடக்ஷரம்

முருகப்பெருமானுடைய மந்திரங்களுள் நமோ குமாராய என்பது ஒன்று. ஆண்டவனை வழிபடுவதற்குப் பல வழிகள் உண்டு. திருக்கோயிலுக்குச் சென்று வழிபடுவது ஒரு முறை. சக்கரத்தைப் பூசிப்பது ஒருவகை. அவன் திருவுருவத்தை வைத்து நாமே மலரால் அருச்சனை செய்வது மற்றொரு வகை. அவனுடைய திருமந்திரத்தை அழகிய செப்பேட்டில் எழுதிப் பூசிப்பார்கள். அதனையே திருக்கோயிலில் விக்கிரகங்களுக்கு அடியில் போடுவதால் சைதன்யம் மிகுதியாகும் என்பது ஒரு நம்பிக்கை. இறைவனுடைய மூல மந்திரத்தை ஜபிப்பதனால் ஒருவனுக்குப் பல வகையான பயன்கள் உண்டாகும் என்பார்கள். அருணகிரிநாதர் திருப்புகழில்,

"மூல மந்திரம் ஓதலிங்கிலை"

என்று இரங்குகிறார்.

முருகனுடைய மந்திரங்கள் பல உண்டு. அவற்றில் சிறந்தது ஷடட்சர மந்திரம். திருமுருகாற்றுப் படையில் முனிவர்கள் அதனைச் சொல்வதாக நக்கீரர் பாடுகிறார். அதன் உரையில் நச்சினார்க்கினியர், "நமோ குமாராய" என்றதை ஆறெழுத்தாகச் சொல்கிறார். இப்போது நாம் பெரும்பாலும் ஜபம் செய்கிற ஷடட்சரம் வேறுவகை. சரவணபவ என்பது அது. பெரும்பாலும் மந்திரங்கள் நம: சப்தத்துடன் இருக்கும். நம: சிவாய என்ற பஞ்சாட்சரத்தில் நம: சப்தம் இருப்பதைக் காணலாம். முருகப் பெருமானுடைய மந்திரங்களில் நம: சப்தத்துடன் கூடியது நம: குமாராய என்பது. கந்தர் அனுபூதியில் அருணகிரியார்,

"நாதா குமரா நமஎன்று அரனார்
ஓதாய் எனஓதியது எப்பொருள்தான்?"

என்னும் பாடலில் அந்த மந்திரத்தைப் பதித்திருக்கிறார். முருகப் பெருமானை ஷடட்சர மந்திரத்தைச் சொல்லிச் சிவபெருமானே வணங்கினார் என்ற காட்சியை அருணகிரியார் நமக்குக் காட்டு கிறார்.

நம: சப்தத்தை முதலில் வைத்துச் சொல்லுவதும், பின்பு வைத்துச் சொல்வதுமாக இரண்டுவகை உண்டு. பஞ்சாட்சரத்தில் நம: சப்தத்தை முன்பு வைத்துச் சொன்னால் தூல பஞ்சாட்சரம் என்று சொல்வார்கள். பின்பு வைத்துச் சொன்னால் ஞான பஞ்சாட்சரம் அல்லது சூட்சும பஞ்சாட்சரம் என்று சொல்வது வழக்கம். அது போலவே நம: குமாராய என்பது ஸ்தூல ஷடட்சரமானால் குமாராய நம: என்பது சூட்சும ஷடட்சரம் என்று கொள்ளலாம். பிரணவத்தின் பொருளைப் பெறுவதற்காக முருகனைப் பணிந்த சிவபெருமான் ஞானோபதேசம் பெறுகின்ற மாணாக்கனது நிலையில் இருந்தார். ஆகையால் அவர் ஞான ஷடட்சரத்தை

"குமரா நம"

என்று ஜபித்துப் பணிந்தார் என்று சொல்வது பொருத்தமாக இருக்கிறது. தேவர்கள் முருகனுடைய திருவருளால் தங்களுக்கு வந்த இடையூறுகள் களையப் பெற்றார்கள். அவர்கள் ஞான ஷடட்சரத்தை எண்ணி,

குமரா சரணம் சரணம்

என்று துதித்தார்கள். குமாராய நம: என்ற தொடருக்குக் குமரனுக்கு வணக்கம் என்று பொருள். அந்த மந்திரப் பொருளுடைய சொற் களைத் தேவர்கள் சொல்கிறார்கள். மகாதேவராகிய சிவ பெருமான் பணிந்து காட்டிய வழி அல்லவா?

குமரா சரணம் சரணம் என்று அண்டர்குழாம் துதிக்கும்

என்று அருணகிரியார் சொல்வதில் ஒரு நயம் இருக்கிறது. ஒரு முறை சரணம் என்று சொன்னால் அவர்கள் உள்ளத்தில் உள்ள உண்மையான மதிப்புப் புலனாகாது. அடுத்து அடுத்துச் சொல் வதனால் நன்றி அறிவும், பக்தியும் அவர்களுடைய உள்ளத்தில் மிகுந்திருக்கின்றன என்பது தெளிவாகும். முப்பத்து முக்கோடி தேவர்களும் ஒரே கூட்டமாகச் சென்று தம்முடைய நாட்டைத்

தமக்கு வாங்கித் தந்த முருகப் பெருமானை வணங்கித் துதிக் கிறார்களாம்.

அண்டர் குழாம் துதிக்கும்
அமராவதியில் பெருமாள்

என்று அருணகிரிநாதர் பாடுகிறார்.

அமராவதியில் பெருமாள்

உலகம் என்றும் காணாத பெரும் போரில் தேவர்களுடைய படை வலியிழந்து நிற்க, அவற்றுக்கு எல்லாம் ஊக்கமூட்டித் தானே தனித் தலைவனாக நின்று போர் செய்து தேவர்களுக்கு வெற்றியை உண்டாக்கினான் முருகன். இந்திரன் பேருக்கு அரசனே யொழிய உண்மையில் எல்லாவற்றிற்கும் தனித் தலைவனாக இருக்கிறவன் முருகன்தான். இந்திர லோகம் முழுவதும் தன் னுடைய ஆணையைச் செல்லவிட்டுப் பாதுகாக்கும் பேரருளாளன் அவன் என்பதை அமரர்கள் உணர்ந்தார்கள். தம்முடைய நன்றி அறிவை வெளியிட்டுக் கொள்ளவேண்டுமென்று தேவசேனையைத் திருமணம் செய்வித்தார்கள். அவனைத் தம்முடைய ஊருக்கு அழைத்து வந்து பலவகையான உபசாரம் செய்து வழிபட்டார் கள். அமராவதியின் தலைவன் இந்திரன் என்று சொன்னது சூரபன்மன் தோன்றுவதற்கு முன்னாலே பொருத்தமாக இருக்க லாம். முருகப் பெருமானின் துணை வலியினால்தான் இன்று இந்திரன் அமரலோகத்தை ஆளுகிறான். உண்மையில் அமர லோகத்திற் கதிபதி முருகன் என்றே சொல்லவேண்டும். அதனை நினைந்து,

அமராவதியில் பெருமாள்

என்று அருணகிரிநாதர் பாடுகிறார். அமராவதி என்பது தேவ லோகத்தின் தலைநகர்

சூரனால் உண்டாகும் பயத்தை மாற்றித் தேவர்களுக்குரிய அரசை வாங்கித் தந்த அமராவதியிற் பெருமாளாகிய முருகன் உலகத்தில் உள்ள மக்களுக்கு வேறு ஓர் அரசை வாங்கித் தருவான். தேவர்களுக்குக் கொடுப்பதற்கு அரியதும், தேவ லோகத்திற்கு அப்பாற்பட்டது என்று பெரியவர்கள் சிறப்பித்துப் பேசுவதுமாகிய மோட்ச லோகத்தைத் தன்னுடைய அடியார்களுக்கு

வாங்கித் தரும் வள்ளல் முருகப் பெருமான். இந்தப் பிறவியிலேயே இன்ப வாழ்வை அருளி, இந்த உடலும் நீங்கினவுடன் மோட்ச சாம்ராஜ்யத்தில் வாழ்வதற்குரிய உரிமையை எம்பெருமான் அருள்வான். இந்த உலகத்தில் வாழும்போது மக்களுக்கு எத்தனையோ வகையான கவலை உண்டு. அவற்றால் துன்பமும் பயமும் உண்டாகும். எல்லாவற்றிலும் மேலானது காலபயம். தன்னுடைய அடியார்களுக்குக் காலபயம் இல்லாமல் செய்பவன் முருகன் என்பதைப் பொதுவகையில் இந்தப் பாட்டில் சொல்ல வருகிறார் அருணகிரியார்.

தேவர்கள் பெற்றது

அண்டர் குழாம் முழுவதும் சேர்ந்து முருகப் பெருமானை, குமரா சரணம் சரணம் என்று துதித்தாலும், பிறவியைப் போக்கிக் கொள்ள வேண்டுமென்ற நினைவு அவர்களுக்கு இருப்பது இல்லை. முருகனுடைய வீரத்தை அவர்கள் பாராட்டுவார்கள். அழகைப் போற்றுவார்கள். கருணையைப் புகழ்வார்கள். குருடர்கள் யானையைப் பார்ப்பது போல அவர்கள் எம்பெருமானின் ஒவ்வொரு குணச் சிறப்பைப் பாராட்டி மகிழ்வார்கள். ஆனால் எல்லாவற்றுக்கும் மேலான பெருமையை அவர்கள் உணரமாட்டார்கள். எம்பெருமான் ஞான உபதேசம் செய்பவன், முத்தி ராஜ்யத்தைத் தருபவன், கால பயத்தை நீக்குபவன் என்ற நுட்பமான உண்மையை அவர்கள் அறிவது இல்லை. அறிந்தாலும் அவற்றைப் பற்றிச் சிந்திப்பது இல்லை. தங்களுடைய பதவி தங்களுக்கு இருந்தால் போதும் என்ற அளவில் திருப்தி அடைகிறவர்கள் அவர்கள். ஆகையால் தமக்கு இடையூறாக வந்த சூரனைச் சங்கரித்ததே முருகப் பெருமான் தங்களுக்குச் செய்த பெரிய உபகாரம் என்று எண்ணி ஆறுதல் பெற்றார்கள்.

ஆறுமுகம்

உலகத்தில் உள்ள பெரியவர்களோ அப்படி இருப்பது இல்லை. முருகப்பெருமானைத் தம்முடைய உள்ளத் தடத்தில் தியானித்து, சோதி வடிவாகக் காணவேண்டுமென்ற ஆர்வம் உள்ளவர்கள் அவர்கள். எம்பெருமானைத் தியானித்துத் தியானித்து அவனுடைய திருமுகம் ஆறும் தமக்குள்ளே கண்டு இன்புறுகிறார்கள் அவர்கள்.

எத்தனை விதமான செல்வங்கள் உலகத்தில் இருந்தாலும் அவை பயன்படுவது இல்லை. எல்லாச் செல்வத்திலும் சிறந்த செல்வம் ஆண்டவனுடைய திருவருள். அதனைப் பெறுவதற்குத் தவம் வேண்டும். ஆகவே அந்தத் தவமும் ஒருவகைச் செல்வந்தான். ''தபோதனம்'' என்று தவத்தைச் சொல்வார்கள்.

''வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம்
ஈண்டு முயலப் படும்''

என்பது திருக்குறள். பெறவேண்டிய செல்வங்கள் எல்லாவற்றையும் அளிப்பது தவம். ஆதலின் தவம் ஈட்டுவதற்குரியது என்று திருவள்ளுவர் சொல்கிறார். அந்தத் தவமாகிய தனத்தைப் பெற்ற ஞானச் செல்வர்கள் முருகப் பெருமானை எண்ணி, தியானித்து அவனுடைய திருமுகம் ஆறையும் கண்டு களிக்கிறார்கள்.

ஆறு ஆதாரங்களிலும் இருக்கிற பெருமான் முருகன் என்பதைக் காட்டுவதற்காக அவன் ஆறுமுகம் படைத்திருக்கிறான். ஆறுவித மான சாஸ்திரங்களுக்கும் அவனே தலைவன். ஆறு மதங்களின் தலைவனாக இருப்பவனும் அவன்தான். வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு, மேல், கீழ் என்றிருக்கிற ஆறு திசைகளுக்கும் தலைவனாக, அந்தத் திசைகளை எல்லாம் பார்க்கின்ற முகங்கள் படைத்தவனாக, முருகன் விளங்குகிறான். சிவபெருமானுக்குரிய ஐந்து முகமும், அம்பிகையின் ஒரு முகமும் சேர்ந்து ஒருருவமாக இணைந்த திருக்கோலத்துடன் ஆறுமுக நாதன் எழுந்தருளுகிறான். இன்னும் அந்த ஆறு முகத்தினுடைய தத்துவத்தைப் பலபடி யாகச் சாத்திரங்கள் கூறுகின்றன. சரவணப் பூம்பொய்கையில் ஆறு குழந்தைகளாக விளையாடிக் கொண்டிருந்த பெருமானை, எம்பெருமாட்டி எழுந்தருளிக் கையினால் சேர்த்து அணைத்த போது ஒருருவமும், ஆறுமுகமும் உடைய குழந்தை ஆனான். அதனால் கந்தன் என்ற திருநாமம் உண்டாயிற்று.

ஆறுமுகநாதனாகிய கந்தனை உள்ளத் தடத்தில் தியானிக்கிற பெரிய தவத்தை உடையவர்கள் அவனால் பெறும் பயன் இன்னது என்று இந்தப் பாட்டில் சொல்கிறார் அருணகிரியார்.

திருமுகம் ஆறும் காணுதல்

ஆண்டவனுடைய திருக்கோயிலுக்குச் சென்று அவன் திருக் கோலத்தைப் புறக்கண்ணால் கண்டு களிக்கின்ற பெருமக்கள்

பலர். ஆனால் அதோடு நின்றுவிட்டால் தரிசனத்தின் பயன் நிறை வேறாது. இறைவனுடைய ஆறுமுகத்தையும் உள்ளத் தடத்தில் தியானித்துக் காண வேண்டும். நிதானமாகக் காண்கின்றவனுக்கு அந்த முகங்கள் ஒளிவிட்டு விளங்கும். உள்ளம் முழுவதும் ஒளி மயமாக இருந்தால் கவலை இராது. மெல்ல மெல்ல உள்ளத்தில் இருந்த பாரம் எல்லாம் போய்விடும்.

திருமுகம் ஆறும் கண்ட, தமராகி வைகும்
தனியான ஞான தபோதனர்க்கு.

ஞானத் தபோதனர்

'முருகப்பெருமானுடைய ஆறுமுக தத்துவத்தையும் நன்கு அறிந்து, அவற்றை உள்ளத் தடத்தில் கண்டு வாழும் பக்தர் களாகிய ஒப்பற்ற சிறப்புடைய ஞானத்தபோதனம் உடையவர் கள்' என்கிறார். ஞானத் தபோதனம் என்று சொல்லுவதில் ஒரு சிறப்பு உண்டு. தவம் இருவகைப்படும். தவம் ஒரு பயனை எண்ணிச் செய்வதும் உண்டு; பயன் இல்லாமல் செய்வதும் உண்டு. இராவணன், சூரபன்மன் முதலியவர்கள் பிறருக்குத் தீங்கு விளைவிக்கின்ற வலிமை தங்களுக்கு வரவேண்டுமென்று தவம் செய்தார்கள். அந்தத் தவம் நல்ல தவம் ஆகாது. இறைவன் அருளைப் பெற்று வாழவேண்டுமென்ற எண்ணத்தோடு செய் கின்ற நிஷ்காம்யமான தவத்தையே நற்றவம் என்று பெரியவர்கள் சொல்வார்கள். அத்தகைய தவம் செய்கிறவர்களே ஞானத் தபோதனர்கள். உலகத்தில் மனைவி, மக்கள், உறவினர்கள் என்று பற்றுக்கொண்டு வாழ்கிறவர்களைப் போல இல்லாமல் முருகப் பெருமானுடைய அடியார்கள் ஒரு குழாமாக இருப்பார்கள்.

அமராவதியில் பெருமாளைக் கண்ட தேவர்கள் குழாமாகக் கூடித் தாம் பெற்ற இன்பங்களுக்காக அவனை வாழ்த்துகிறார் கள். ஆனால் இந்தக் குழாத்தினரோ தமக்குள் ஒற்றுமைகொண்டு முருகனுடைய அடியார்கள் என்ற பொதுமையினால் ஒன்று கூடிச் சிறந்த செல்வர்களைப் போல மிடுக்குடன் இருப்பார்கள். அவர் களுக்கு எவ்விதமான கவலையும் இல்லை. அவர்கள் இங்கே கவலையற்ற நிலையில் இருப்பார்கள் என்பதை 'வைகும்' என்ற சொல் காட்டுகிறது.

''ஏமாப்போம் பிணியறியோம் இனைவோ மல்லோம்''

என்று பெருமிதத்துடன் திருநாவுக்கரசர் பாடினார். அவர் இறை வனுடைய திருவருளில் திளைத்த ஞானத் தபோதனர். உலகம் முழுவதும் இறைவன் திருவருளால் நடைபெறுவது என்று கண்டு உலகத்தில் உள்ள உயிர்களிடத்தில் எல்லாம் தயை உடை யவர்களாக வாழ்பவர்கள் ஞானத் தபோதனர்கள். எம்பெரு மானுடைய ஆறுமுகமும் கண்ட தபோதனர்கள் உயிர்களை எல்லாம் அந்தப் பெருமானுடைய குழந்தைகளாகப் பார்த்து அவற்றின்பால் மாறாத அன்பு செய்வார்கள். திருநீறு இடும்போது கூட ஆறுமுகம் ஆறுமுகம் என்று சொல்வார்கள். ஆறுமுகம் என்று ஆறு முறை சொல்லித் திருநீறு இடுகின்ற இயல்பு முருகன் அடியார்களிடம் இருப்பது என்று ஓரிடத்தில் அருண கிரியார் பாடுகிறார்.

''ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம்
ஆறுமுகம் ஆறுமுகம் ஆறுமுகம் என்றுபூதி
ஆகமணி மாதவர்கள்''

என்பது அந்தப் பாட்டு.

யமன் சீட்டு

ஆண்டவனுடைய ஆறுமுகத் தத்துவத்தை உணர்ந்து தரிசித்த இந்த ஆத்ம பந்துக்கள் காலனைப் பற்றிய அச்சம் சிறிதும் இல்லாதவர்கள். மற்றவர்களுக்குச் சீட்டு அனுப்புவதைப் போல இந்த அடியார்களைக் கொண்டு வருவதற்கு யமன் சீட்டு அனுப்பினால் அது செல்லாது.

எமராசன் விட்ட கடையேடு வந்து இனி என்செயுமே?

யமன் ஒவ்வொருவனுடைய வாழ்க்கைக் கணக்கையும் வைத்திருக்கிறான். எப்போது அவனுடைய ஆயுள் முடிகிறதோ அப்போது ஆளையும் சீட்டையும் அனுப்புவான். அவன் அனுப்பு கிற சீட்டைக் கடையேடு என்று அருணகிரியார் சொல்கிறார். கடைசியில் அனுப்புகிற சீட்டு என்று பொருள். அமராவதியிற் பெருமாளுடைய திருவருளை நம்பி அவனுடைய ஆறுமுகத்தைத் தரிசித்து அவற்றின் தத்துவத்தை உணர்ந்து வாழ்கின்ற தபோ தனம் உடையவர்களிடத்தில், யமன் பெரிய அரசனாக இருந்

தாலும் அவனுடைய சீட்டுச் செல்லாது. யமராசனுடைய சீட்டு அவனுடைய ஆணைக்கு அடங்கி வாழ்கின்ற பிரபஞ்ச சம்பந்தம் உடையவர்களிடத்தில்தான் செல்லும். மற்றவர்களுக்கு எல்லாம் அரசனாக இருக்கலாம். ஆனால் முருகப் பெருமானை நம்பின வர்களுக்கு அமராவதியிற் பெருமாளாகிய அவனே மகாராசன். ஆகையால் இந்தக் கடையேடு அவர்களை ஒன்றும் செய்யாது. இதனை அழுத்தமாக இந்தப் பாட்டில் சொல்கிறார்.

குமரா சரணம் சரணம்என்று அண்டர் குழாம்துதிக்கும்
அமரா வதியில் பெருமாள் திருமுகம் ஆறும்கண்ட
தமராகி வைகும் தனியான ஞான தபோதனர்க்குஇங்கு
எமராசன் விட்ட கடையேடு வந்துஇனி என்செயுமே.

[குமரா சரணம் சரணம் என்று கூறித் தேவர்களின் கூட்டம் துதிபுரியும் அமராவதியில் எழுந்தருளிய பெருமானுடைய திருமுகம் ஆறையும் உள்ளத்தே தரிசித்த அடியார்களாகிய, கவலையற்று உலகில் வாழும் தனிச்சிறப்பையுடைய ஞானத்தோடு அமைந்த தவமாகிய செல்வத்தைப் படைத்தவர்களுக்கு, இவ்வுலகத்தில் யமராசன் அனுப்பிய இறுதிக்காலச் சீட்டு வந்து அவர்களுக்கு என்ன துன்பத்தைச் செய்யும்?

அண்டர் – தேவர். குழாம் – கூட்டம். தமர் – உறவினர்; இங்கே முருகன் அடியார். தனியான ஞானம் – ஒப்பற்ற பேரறிவு. தனியான தபோதனர் என்றும் கூட்டிப் பொருள் கொள்ளலாம். இங்கு – இவ்வுலகத்தில். எமனுக்குப் பல தூதுவர்கள் உண்டு; அவர்களுக்குத் தலைவனாதலின் அவன் எமராசன் ஆனான். கடை ஏடு – வாழ்வின் இறுதியில் உயிர் கொண்டு போவதற்கு யமதூதரிடத்தில் கொடுத்தனுப்பும் ஆணையோலை.]

முருகனை வழிபடுபவர் எவரானாலும் யமபயம் அவருக்கு இல்லை என்பது கருத்து.

இது கந்தர் அலங்காரத்தில் 87–ஆவது பாட்டு.

இணக்கமும் வணக்கமும்

திருமுகம் ஆறும் கண்ட தமர்களைப் பற்றி நினைத்தவுடன் அருணகிரிநாதப் பெருமானுக்கு அத்தகைய கூட்டத்தோடு சேராத வர்களின் நிலை நினைவுக்கு வருகிறது. வேறு யார் யாருடனோ இணங்கித் துன்புற்ற மக்களை எண்ணுகிற கருணையினால், தாமே அந்த நிலையைப் பெற்றவர் போல இரங்குகிறார். ''நான் குணம் கெட்ட துட்டன்'' என்று விண்ணப்பித்துக் கொள்கிறார்.

சேர்ந்து வாழ்தல்

மனிதன் எப்போதும் கூட்டமாக வாழும் தன்மை உடை யவன். தன் உள்ளத்திற்குப் பொருந்திய மக்களோடு சேர்ந்து வாழ்வதற்கு அவனுக்கு வாய்ப்பு உண்டு. தனியாகப் பிறந்த மனிதன் முதலில் தாய் தந்தையுடன் வாழ்கிறான். பின்பு சகோதர சகோதரிகளுடன் வாழ்கிறான். அதன் பின்பு மனைவியைத் திருமணம் செய்துகொண்டு அவளோடு இல்லறம் நடத்துகிறான். அதன் விளைவாகக் குழந்தைகளைப் பெற்றுக் குடும்பத்தை நடத்துகிறான். மனைவி, மக்கள், சுற்றம் ஆகியவர்களோடு பேரன் பேத்திகளைப் பெறுகிறான். அவற்றால் அவனுடைய குடும்பமே பெரியது ஆகிவிடுகிறது. ஊரார், உற்றார் என்று அவன் பிறருடன் சேர்ந்து வாழ்கிறான்.

அவனுடைய நிலைமையும், தலைமையும் பெருகப் பெருக அவன் இணக்கம் கொள்ளும் மனித சமூகம் விரிகிறது. நாட்டில் உள்ள மக்களோடு இணங்கி வாழ்கிறவன் பெரிய தலைவனா கிறான். உலகம் முழுவதும் உள்ள மக்களோடு சேர்ந்து வாழ்கிற வன் மிகமிகப் பெரிய மனிதனாகிறான். சிலருக்குத் தம்முடைய சுற்றத்தார்களை மாத்திரம் தெரிந்துகொள்ளும் வாழ்க்கை இருக்கும். சிலர் உறவினர்களாலும், ஊரவர்களாலும் மதிக்கப்படுகிற நல்ல வர்களாக வாழ்கிறார்கள். அப்படியே நாட்டுக்குத் தலைவராக உள்ளவர்களை உலகத்தவர் பலர் தெரிந்து கொள்ளும் மேன்மை யும் இருக்கிறது.

நல்ல இனம்

"இனம் இனத்தோடு சேரும்" என்று சொல்வார்கள். நம் முடைய பண்புக்கு ஏற்றபடி அந்தப் பண்பை வளர்க்கின்ற மக்க ளோடு சேருவதுதான் நம்முடைய இயல்பு. நமக்கு அறிவைக் கொடுத்திருக்கிறான் ஆண்டவன். நம்மிடத்தில் உள்ள தீங்கை மாற்றுவதற்கு ஏற்பச் சிறந்த மக்களோடு சேருவதற்கும் வாய்ப்பு உண்டு. உடம்பில் அழுக்கு இருக்கும்போது அழுக்கோடு புரண்டு கொண்டிருப்பவன் அறியாதவன். அழுக்கை நீக்குவதற்கு ஆண்டவன் புனலைக் கொடுத்திருக்கிறான். அழுக்கைப் பூசிக் கொண்டு வாழாமல் அதனை மாற்றிக் கொள்வதற்குரிய நீரைப் பயன்படுத்திக் கொள்பவன் அறிவாளி. அதுபோல இந்த உலகத் தில் அழுக்கு நெஞ்சு உடையவர்களும் இருக்கிறார்கள்; தூய நெஞ்சு உடையவர்களும் இருக்கிறார்கள். மனிதன் பிறந்தவுடன் எந்தப் பழக்கத்தையும் கொண்டு வருவது இல்லை. பழைய பிறவியில் இருந்த அவனுடைய சம்ஸ்காரங்கள், சில குணங்கள், இயல்பாக இருக்கின்றன. ஆனாலும் அவற்றை மெல்லப் போக்கிக் கொள்வதற்கு நல்ல குணங்கள் உள்ளவர்களோடு இணங்க வேண்டும். அப்படி இணங்குவதனால் குற்றங்கள் மாய்ந்து, குணங்கள் பெருகும். விலங்குகள்கூட மனிதர்களோடு பழகினால் தம்முடைய குணங்களில் சிலவற்றை மாற்றிக் கொள்கின்றன.

"நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு"

என்பது திருக்குறள்.

நல்லன நினைத்தல் முதலியன

நாம் அறிவு விளக்கம் பெறுவதும், குணம் சிறந்து நிற்பதும் நல்லவர்களுடைய இணக்கத்தினால் அமையும். அல்லாதவர் களுடைய இணக்கத்தால் நம்பாலுள்ள தீய குணங்கள் வளர்வ தன்றி, அவர்களுடைய தீய குணங்களும் நம்மைச் சாரும். மனிதன் வரவர நல்லவற்றை எண்ணவும் நல்லவற்றைப் பேசவும் நல்ல வற்றைச் சிந்திக்கவும் வேண்டும். இவற்றை இயல்பாகப் பெறா விட்டாலும் சிறந்து நிற்பவர்களுடன் இணங்க வேண்டும். நல்லவற்றை நினைக்கவே நமக்குத் தெரிவதில்லை. பெரியவர்

களுடன் பழகினால் எண்ணுதற்குரிய நல்லவைகள் இன்ன என்பது தெரியவரும். நல்லவற்றைச் செய்வதற்கு முன்னால் நல்லவற்றை நினைக்கவும், பேசவும் தெரிந்து கொள்வதே சிறந்த சாதனை. பணத்தை வைத்துக் கொண்டு, உடல் பலத்தை வைத்துக் கொண்டு, மக்கள் துணையை வைத்துக் கொண்டு நல்ல காரியங்கள் செய்ய வேண்டும்; அதற்கு நமக்கு வாய்ப்பு இல்லை யென்று எண்ணிப் பலர் சோர்ந்து போகிறார்கள். எடுத்தவுடன் மனிதன் செயலில் இறங்குவது இல்லை. மனத்திலே எண்ணி, பல காலம் சிந்தித்து, அதனை நிறைவேற்றுவதற்கு என்ன வழி என்று ஆலோசிக்கிறான். அதைப்பற்றி மற்றவர்களுடன் பேசு கிறான். அதன் பின்னே அதனைச் செய்வதற்குரிய கருவிகளைத் தேடுகிறான். மனத்தில் எத்தனை திண்மையான எண்ணம் இருக் கிறதோ அதற்கு ஏற்றபடி செயலை நிறைவேற்றுவதற்குரிய வகை தானே வந்து சேரும்.

''எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்''

என்று வள்ளுவர் கூறுகிறார். எண்ணத்தில் திண்மை இருந்தால் வேண்டிய கருவிகள் தாமே வந்து சேரும்.

பெற்ற கருவிகள்

உண்மையைச் சொல்லப் போனால், நாம் இப்போது எத்தனையோ கருவிகளைப் பெற்றிருக்கிறோம். அவற்றைத் தக்க வண்ணம் பயன்படுத்திக் கொள்ளாமல் போவதனாலேயே நாம் வெற்றி காண்பது இல்லை. கிடைத்த பொருளைக் கொண்டு பெறத்தக்க பெரும் பயன் இருக்கவும் அதனை மறந்துவிட்டுக் கிடைக்காத பொருளுக்கு ஆசைப்பட்டு நிற்கிறோம்; அதற்கேற்ற கருவிகள் இல்லையே என்று வருந்துகிறோம். இறைவன் நமக்குக் கொடுத்திருக்கிற கருவிகளுக்குள் மிகச் சிறந்தது அறிவு. தனுகரண புவன போகங்கள் ஆகியவை விலங்குகளுக்குக் கிடைக்காத வகையில் நமக்குக் கிடைத்திருக்கின்றன. அவற்றை வைத்துக் கொண்டு சரியானபடி முயற்சி செய்து நல்ல பயனை அடைவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

''பெறுதற்கரிய பிறவி''

என்று மனிதப் பிறவியைச் சொல்வதற்குக் காரணம் இதுதான். இவ்வளவு இருந்தும் நாம் அந்தக் கருவிகளைச் சரியானபடி

பயன்படுத்திக்கொள்வதில்லை. பயன்படுத்திக் கொள்ள வழி தெரியாவிட்டாலும் பயன்படுத்திக் கொள்ளும் நல்லவர்களைக் கண்டு நாம் செய்யலாம். சிறு குழந்தை உலகத்தினரைப் பார்த்து ஒவ்வொன்றாகப் பழக்கம் செய்து கொள்கிறது. ஓடுவதும், சாடுவதும், சிரிப்பதும், அழுவதும் ஆகிய எல்லாமே குழந்தை பிறரிடமிருந்து தெரிந்து கொள்பவைகளே. தாய் தந்தை உலகம் ஆகியவற்றோடு கலந்து மெல்ல மெல்லப் புதிய பழக்கங்களை உண்டாக்கிக் கொள்கிறது. ஆகவே அறிவை உடைய மனிதன் தனக்கு தெரியாவிட்டாலும் நல்லவர்களுடன் கலந்து நல்ல எண்ணங்களையும் நல்ல பேச்சையும் நல்ல செயல்களையும் தெரிந்து கொள்ளலாம்.

நல்லவர்களோடு இணங்குவது என்பது எளிதில் வருவது இல்லை. உலகில் பெரும்பாலும் தீயவர்களுடைய அரசாட்சி நிலவுகிறது. ஆகையால் தீயவர்களுடைய கூட்டத்திற்குள் புகுவது மிக எளிதாக இருக்கிறது. நாம் தீயவர்களை ஒதுக்கி, நல்ல வர்களைத் தேட வேண்டும். நன்மை என்பது பலவகைப்படும். அறம் செய்வது நன்மை; பொருள் ஈட்டுவது நன்மை; நல்ல முறையில் இன்பம் பெறுவதும் நன்மைதான். நம் வாழ்நாள் மிகக் குறுகியது என்பதை உணர்ந்து எல்லாவற்றிலும் சிறந்த நன்மை எது, அதனைப் பெறுவதற்குரிய வழி என்ன என்று ஆராய்ச்சி செய்ய வேண்டும். மிகச் சிறந்த நன்மை இறைவன் அருளைப் பெறுவதுதான். அந்த அருளைத் தருவதற்குரிய நாயக னாகிய ஆண்டவன் எப்போதும் இருக்கிறான்; எங்கும் இருக் கிறான். நாம் முயன்றால் அருள் தரமாட்டேன் என்று சொல்ல மாட்டான்.

தீயோர் இணக்கம்

ஆனால் முயல்வதற்குரிய வழி தெரியாமல் நாம் திண்டாடு கிறோம். நம்முடைய இணக்கமெல்லாம் இறைவனைப் பற்றி எண்ணாதவர்களுடைய இணக்கமாக இருக்கிறது. ஏதோ சம்பிர தாயத்திற்காக, நாகரிகத்திற்காகக் கடவுள் என்று சொல்லிவிடு கிறவர்களோடு உறவு வைத்துக் கொண்டு வாழ்வதால் பயன் இல்லை. போகிற போக்கில் சூறைக் காற்று அடித்தது போல உள்ள அவர்களுடைய இணக்கம் நமக்கு நலம் தராது. நம் முடைய இயற்கை மாற வேண்டுமானால், குணங்கள் படிய

வேண்டுமானால், முதலில் நாம் தீயவர்களுடன் இணங்கக் கூடாது. இறைவனை வணங்கித் துதிக்க அறிந்த மனிதர்களுடன் இணங்க வேண்டும். பெரும்பாலோருடைய நிலை அப்படி இல்லை. வணங்கத் தெரியும். துதிக்கத் தெரியும். ஆனால் கைமேல் பலன் தருகிற மக்களைத்தானே வணங்க வேண்டும், துதிக்க வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். எல்லாச் செயலுக்கும் மூலகாரணனாக இருந்து எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றித் தருகிறவன் ஆண்டவன். தம்மால் புகழ்ந்து துதிப் பதற்குரியவன் அவன்தான் என்பதை அறிவாளிகள் எண்ணு கிறார்கள். மற்றவர்கள் எண்ணுவது இல்லை.

சிறிய ஊதியம்

உலகத்தில் சிறுசிறு லாபங்களில் மனத்தைப் போக்கி வாழ்கின்றவர்கள் இறைவனை வணங்குவது இல்லை; துதிப்பது இல்லை. ஓரிடத்தில் ஒரு பெரிய விருந்து நடக்க இருந்தது. விருந்தினர்களுக்குப் பரிமாறுவதற்காகப் பூந்தி பண்ணிக் குவித் திருந்தார்கள். அந்தப் பூந்தியில் எறும்பு வந்து மொய்த்துக் கொள்ளுமோ என்ற ஐயம் விருந்து செய்யும் தலைவருக்கு உண்டாயிற்று. உடனே அங்கே இருந்த ஒரு பெரியவர் ஒரு தந்திரம் செய்தார். இரண்டு வீசைச் சர்க்கரையைக் கொண்டு வந்து பூந்திக் குவியலைச் சுற்றிச் சிறிது தூரம் விட்டு வட்டமாக மதில்போலத் தூவினார். எறும்புகள் வந்தன. அந்தச் சர்க்கரை மதிலிலேயே நின்று மொய்த்திருந்தன. அதைத் தாண்டிப் பூந்திக் குவியலுக்குப் போகவில்லை. பூந்தியாகிய பெரிய பயனைப் பெறாமல் சர்க்கரையாகிய சிறிய பயனைப் பெற்று நின்றுவிட்டன.

பெரிய பயன்

மனிதனும் அப்படித்தான் இருக்கிறான். தான் பெறுகிற புலனுகர்ச்சியைப் பெரிதென்று எண்ணி அதனோடு நின்றுவிடு கிறான். இன்னும் சிலர் அறிவினால் ஆராயும் ஆராய்ச்சியில் ஏற்படுகிற இன்பக் கிளுகிளுப்புக் கண்டு அதோடு நின்றுவிடு கிறார்கள். அவர்கள் எல்லாம் சின்ன எறும்பு இனத்தைச் சேர்ந்த வர்கள். இறைவன் அருள்பெற வேண்டும் என்ற ஆர்வத்துடன் அந்தத் துறையில் எண்ணியும் பேசியும் செயல் செய்தும் வாழ் கிறவர்களே சிறந்த நன்மையை அடைவார்கள். இறைவனை

வணங்கித் துதித்து அவனுடைய திருவருளைப் பெறுகிறவர்களே மனிதப் பிறவியில் பெறும் பெரிய பயனை அடைவார்கள். அத்தகைய மனிதர்களோடு இணங்க வேண்டுமென்று அறியாது, இறைவனை வணங்கித் துதிக்க அறியாதவரோடு இணங்கிப் பயன் இல்லை. இவர்களுடன் இணங்குவதால் நம்முடைய பழைய குணமும் கெட்டு, புதிய தீய குணமும் வந்து சேரும்.

''நான் அத்தகைய துட்டனாக இருக்கிறேன்'' என்று அருணகிரியார் சொல்கிறார்.

வணங்கித் துதிக்க அறியா மனிதருடன் இணங்கிக்
குணங்கெட்ட துட்டனை ஈடேற்றுவாய்.

இறைவனை வணங்காமலும் துதிக்காமலும் இருக்கிறவர்கள் எத்தனை பெரிய மனிதர்களாக இருந்தாலும் அவர்களுடன் இணங்குவது கூடாது என்று குறிப்பாக இந்தப் பாட்டில் சொல்கிறார். நூல்களை எல்லாம் ஆராய்ந்திருந்தாலும், தத்துவங்களை அறிந்திருந்தாலும், பல பெரிய மனிதர்களை அறிந்திருந்தாலும், எத்தனை பண்பாடு இருந்தாலும், இறைவனுடைய அன்புப் பிணைப்பு இல்லாத இடத்து அவர்கள் திருமங்கல்யம் இல்லாத அழகியைப் போன்றோர் என்றே சொல்ல வேண்டும். ''இந்த நிலையில் இருக்கிற என்னைக் காக்க வேண்டும்'' என்று முருகப் பெருமானிடத்தில் விண்ணப்பம் செய்து கொள்கிறார் அருணகிரியார்.

நிர்மலன்

மலத்தின் சம்பந்தத்தினால் பலவிதமான துன்பங்களுக்கு உள்ளாகிறவர்களுடைய இடரைப் போக்குகிறவன் முருகன். அவன் நிர்மலன். ''குணம் கெட்ட துட்டனாகிய என்னை, நிர்மலன் ஆகிய நீ ஈடேற்ற வேண்டும்'' என்று விண்ணப்பம் செய்து கொள்கிறார். முருகப் பெருமான் தன்னுடைய திருக்கரத்தில் வேலாயுதத்தை வைத்திருக்கிறான். அது ஞானத்தின் அடையாளம் என்பதைப் பலமுறை பார்த்திருக்கிறோம். அது வெற்றிவேல்; விக்கிரம வேலாயுதம். வேல் புகுந்த இடத்தில் தோல்வி என்பது சிறிதும் இராது. நிர்மலன் ஆகிய முருகன் வேலாயுதத்தைப் பிரயோகம் செய்தான். அது வெற்றியைத் தந்தது.

விக்ரம வேலாயுதம் தொட்ட நிர்மலனே.

வேல் கண்ட வெற்றி

அசுரர்களைப் போர்க்களத்தில் அந்த வேலாயுதம் கொன்றது. அசுரர்கள் ஊனை உணவாக உடையவர்கள். 'பிசிதர்' என்று அருணகிரியார் சொல்லுகிறார். அவர்கள் ஊனை உண்பவர்கள். ஊனை உண்ணும் வாயிலிருந்து நிணம் கக்குகிறதாம். வேல் அவர்களுடைய வாய்களை இரத்தமும் ஊனும் கக்கும்படி செய்கிறது.

பிசிதர்தம்வாய்

நிணம் கக்க.

ஊன் உணவை உண்ணுகிறவர்களை அசுரர்களாகச் சொல்ல வேண்டும் என்பது அருணகிரியார் கருத்து. அசுரர்களை வேறு சொல்லால் கூறாமல் ''பிசிதர்'' என்று சொல்வதைக் கவனிக்க வேண்டும். தாம் உண்ட ஊன் உணவைக் கக்குவது போல, வேல் வாயைக் கிழித்துப் புண்படுத்தி நிணத்தைக் கக்கும்படி செய் கிறதாம்.

அவர்கள் உடம்பு சிதைந்து, குலைந்து போர்க்களத்தில் வீழ்ந்தமையால் பலருக்குக் கொண்டாட்டம் உண்டாகிறது. பிறரைக் கொன்று அதனால் கொண்டாட்டத்தை நடத்திய அரக்கர் கள் இப்போது உயிர்விட்டுப் போர்க்களத்தில் கிடக்கிறார்கள், அவர்களுடைய திண்ணடாட்டத்தால் உலகில் உள்ள உயிர்கள் கொண்டாட்டம் அடைகின்றன,

அமரர்கள் வெற்றி பெற்றதை இப்போது அருணகிரியார் சொல்லவில்லை. அதற்கு முன்பு சில பிராணிகளுக்கு உண்டான ஆனந்தத்தைச் சொல்ல வருகிறார். போர்க்களத்தில் அசுரர்களுடைய உடல்கள் துண்டு பட்டுக் கிடக்கின்றன, சாமானிய உடல்போல் இல்லாமல் மலைபோல் இருக்கிற அசுரர்கள் பிணமாகக் கிடக் கிறார்கள், சிலருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட தலைகள். யானைத் தலை, சிங்கத்தலை என்று பல்வேறு தலைகளை உடையவகளாக அவர்கள் வீழ்ந்து கிடக்கிறார்கள். மயானத்தில் காக்கையும் கழுகும் வந்து ஊனைக் கொத்தித் தின்னும். பிணம் உள்ள இடத் தில் அவை விருந்தயரும். இங்கும் காக்கையும் கழுகும் பந்த லிட்டுப் பறக்கின்றன. 'நான் முந்தி, நீ முந்தி' என்று பிணங்கு கின்றன, கண்ணுக்கு எட்டிய தூரம் வரை அசுரர் களுடைய

பிணங்கள் கிடப்பதனால் எங்கே பார்த்தாலும் பந்தல் போட்டது போலக் காக்கையும் கழுகும் இணைந்து பறக்கின்றன.

இது மாத்திரமா? பேய்கள் சேர்ந்து கையைக் கோத்துக் கொண்டு ஆடுகின்றன. பேய்கள் வைரவருடைய சாபத்தால் உணவு இல்லாமல் வாடுபவை. உயிரோடு இருப்பவர்கள் உடலை உண்ணக் கூடாது என்பது அவர்களுக்கு இட்ட கட்டளை. ஆகையால் எங்கேனும் போர்க்களம் உண்டானால் அந்தப் போரில் இறந்தவர்களை உண்பதற்காக அவை தேடிக்கொண்டிருக்கும். போர் நடக்கிறது என்றால் பேய்களுக்குத்தான் முதலில் கொண்டாட்டம். போர்க்களத்தில் பேய்கள் நடத்தும் பலவகையான ஆட்டத்தையும், பாட்டத்தையும் அருணகிரியார் முன்பும் சில பாடல்களில் சொல்லியிருக்கிறார்.

''சளத்தில் பிணிபட்டு அசட்டு க்ரியைக்குள் தவிக்கும்என்ற ன்
உளத்தில் ப்ரமத்தைத் தவிர்ப்பாய்; அவுணர் உரத்துஉதிரக்
குளத்தில் குதித்துக் குளித்துக் களித்துக் குடித்துவெற்றிக்
களத்தில் செருக்கிக் கழுதாட வேல்தொட்ட காவலனே''

என்ற பாட்டை முன்பே பார்த்தோம். இங்கே அலகைகள் எல்லாம் துணங்கை ஆடுகின்றனவாம். துணங்கை என்பது கைகளைக் கோத்துக்கொண்டு சுற்றிச் சுற்றி ஆடுகிற ஆட்டம். போர்க்களத்தில் கிடந்த அசுரர்களுடைய உடல்களைத் தின்று வயிறு தடித்து ஆனந்தக் கூத்தாடுகின்றன. பலகாலம் பட்டினி கிடந்த நமக்குப் போதிய உணவு எங்கே கிடைக்கப் போகின்றது என்று வாடி நின்றவை அவை. இப்போது தம் அளவுக்கு மிஞ்சி விருந்து உண்டு துணங்கை ஆடுகின்றன. மேலே கொடியும், கழுகும் இணைந்து பந்தல் போட, அந்தப் பந்தலின் கீழே கைகோத்து நடமாடி முருகனை வாழ்த்துகின்றன அந்தப் பேய்கள்.

திருமுருகாற்றுப் படையில் முருகன் சூரனோடு போர் செய்ததால் பேய்மகள் அடைந்த ஆனந்தத்தைச் சொல்கிறார் நக்கீரர்.

''உருகெழு செலவின் அஞ்சுவரு பேய்மகள்
குருதிய ஆடிய கூர்உகிர்க் கொடுவிரல்
கண்தொட்டு உண்ட கழிமுடைக் கருந்தலை
ஒண்தொடித் தடக்கையின் ஏந்தி வெருவர
வென்றடு விறல்களம் பாடித் தோள்பெயரா
நிணம்தின் வாயள் துணங்கை தூங்க.''

கொடியும் கழுகும் தம்முள் போராடிப் பிணங்கிப் போட்டி போட்டு ஊனை ஈர்க்கின்றன. அலகைகள் தமக்கு வேண்டிய உணவை உண்டு கைகோத்து ஆடுகின்றன. இவ்வாறு அசுரர்கள் போர்க்களத்தில் படும்படியாக வெற்றிவேலைப் பிரயோகம் செய்தான் முருகப் பெருமான். 'துட்டர்களாகிய அசுரக் கூட்டங் களை வேலாயுதத்தால் அழித்து வெற்றி கண்ட நிர்மலனே, துட்டன் ஆகிய என்னை, என்பாலுள்ள தீய பண்புகளை எல்லாம் மாற்றி ஈடேற்ற வேண்டும்' என்று இந்தப் பாட்டில் ஆண்ட வனை வேண்டிக் கொள்கிறார் அருணகிரியார்.

வணங்கித் துதிக்க அறியா
மனித ருடன்இணங்கிக்
குணங்கெட்ட துட்டனை ஈடேற்று
வாய்கொடி யும்கழுகும்
பிணங்கத் துணங்கை அலகைகொண்
டாடப் பிசிதர்தம்வாய்
நிணம்கக்க விக்ரம வேலா
யுதம்தொட்ட நிர்மலனே.

[உன்னை உடம்பால் வணங்கி வாயினால் புகழ அறியாத தீய மக்களுடன் நண்பனாகப் பொருந்திக் குணம் கெட்டுப்போன தீயவனாகிய அடியேனை நற்கதி அடையும்படி செய்தருள்வாய்: காக்கையும் கழுகும் ஒன்றனோடு ஒன்று போட்டி போடவும், பேய்கள் கை கோத்துத் துணங்கைக் கூத்து ஆடவும், ஊனுணவையுடைய அசுரர்களின் வாய்கள் நிணத்தைக் கக்கவும் வெற்றிவேற்படையை வீசிய மலமற்ற தூய பெருமானே!

குணம்கெட்ட – நற்குணம் அழிந்த. ஈடேற்றுதல் – தாழ்ந்த நிலை யினின்றும் உயர்த்துதல். கொடி – காக்கை. பிணங்க – சச்சரவிட; போட்டி போட. துணங்கை – ஒருவகைக் கூத்து; கைகோத்தாடுவது. அலகை – பேய். அலகை துணங்கை கொண்டு ஆட. பிசிதம் – ஊன்; அதை உண்போர் பிசிதர். நிணம் – ஊன். விக்ரமம் – வெற்றி. தொட்ட – வீசிய.]

இது கந்தர் அலங்காரத்தில் 88–ஆவது பாட்டு

இரு விலங்கு

முகவுரை

சேலம் மாவட்டத்தைச் சார்ந்த ஆத்தூருக்கு அருகில் வடகுமரை என்ற சிற்றூர் இருக்கிறது. சில நூறு வீடுகளே உள்ள கிராமம் அது. அங்கே திருமால் கோயிலும் சிவன் கோயிலும் வயல்களை அடுத்து அருகருகே உள்ளன. சிவன் கோயிலுக்குள் ஓலைக் குடிசை ஒன்று இருக்கிறது. அதைக் குடிசை என்றும் சொல்லலாம்; பர்ணசாலை என்றும் சொல்லலாம். இரண்டும் ஒன்றையே குறித்தாலும் உள்ளே உறைபவர்களின் வேறுபாட்டை அவை தனித் தனியே குறிக்கின்றன. உள்ளே இருப்பவர் ஏழையானால் அதைக் குடிசையென்னலாம். முனிவராக இருந்தால் பர்ணசாலை என்று கூறலாம். அப்படிப் பார்த்தால் இது குடிசை அன்று; பர்ணசாலை. இதனுள்ளே ஒரு முனிபுங்கவர் – சுவாமிகள் – வாழ்கின்றார். அவரை வட குமரைச் சுவாமிகள் என்றும், ஸ்ரீ அப்பண்ண சுவாமிகள் என்றும் வழங்குவார்கள்.

சுவாமிகள் என்று சொல்வதற்கு அவரிடம் தனி அடையாளம் ஏதும் இல்லை. கரிய ஒல்லியான திருவுருவம். இடையில் நாலு முழ வெள்ளைக் கதர் வேட்டி; மேலே ஒரு சிறு துண்டு. கிராமவாசிகளோடு சேர்ந்து நின்றிருந்தால் அவரை இனம் கண்டு கொள்ள முடியாது.

ஆனால் அவருடைய கண்களைக் கண்டால் போதும்; ''இந்த மனிதரிடம் ஏதோ இருக்கிறது'' என்ற எண்ணம் உண்டாகும். அந்தக் கண்கள் அசாதாரணமான ஒளியை உடையவை. அவரோடு சிறிதே பேசத் தொடங்கினால் அவர் சிறிதும் 'பிகு' இல்லாமல் எளிய குழந்தை போலப் பேசுவதைக் காணலாம். பேசிக்கொண்டே இருந்தால் அவர் படித்த நூல்களிலிருந்து பல செய்திகள் வரும். பழகின மனிதர்களைப் பற்றிய பேச்சு வரும். இவை முக்கியம் அல்ல; அநுபவமுள்ளவர்களே சொல்லத் தக்க பல மணியான வார்த்தைகள் வரும்.

அவரைப் பார்க்க வந்தவர் பக்திமானாகவோ, ஞான நெறியில் நிற்பவராகவோ இருந்துவிட்டால், அவரிடமிருந்து வரும்

வார்த்தைகளில் எத்தனையோ உண்மைகளைக் காணலாம். வந்தவர் பாரமார்த்திகத் துறையில் அடியெடுத்து வைத்து அநுபவம் சிறிது வாய்ந்தவரானால், வந்தவரிடம் தம்முடைய அநுபவங்களையும் சொல்ல முற்படுவார். அப்போது அவருடைய பேச்சில் உரம் ஏறும்; சாரம் மிகும். அவர் கண்ணின் ஒளி அப்போது விட்டு விளங்கும். திடீர் திடீரென்று சிரிப்பார். சிரிக்கும் போதே கண்ணீர் வரும். கண்ணீரும் களிப்பும் ஒருங்கே பொங்குவதைத் தெளிவாகக் காணலாம்.

அவரைப் பக்தர் என்றும் சொல்லலாம்; ஞானி என்றும் கூறலாம். இரண்டும் ஒன்றுதான் என்பதைக் காட்டும் துறவி அவர். ஆம், அவர் துறவிதான். அவருக்குக் குடும்பம் இல்லை. சாதி இல்லை. குலம் இல்லை. சமயம் இல்லை என்றுகூடச் சொல்லிவிடலாம். அடிக்கடி முருகா என்று சொல்வார். ஆனால் அபிராமி அந்தாதியைப் பாடிக் களிப்பார். திவ்வியப் பிரபந்தத்தைப் பாடி இன்புறுவார். தேவாரத்தில் திளைப்பார். அலங்காரமும் அநுபூதியும் அவருக்கு மிகவும் விருப்பமானவை. நல்ல பாட்டு, நல்ல இயற்கைக் காட்சிகள், நல்ல ஓவியம், நல்ல மனிதர்கள் – அவருக்குப் பிடித்தமானவை இவை.

வெவ்வேறு மூர்த்திகளைப் பற்றிய பாடல்களில் ஒரே மாதிரி உள்ளத்தைப் பதிக்கும் இயல்பு விசித்திரமாகத் தோற்றலாம். ஆனால் அவர் பார்க்கும் பார்வையே வேறு. பாடல் யாரைக் குறிக்கிறது என்று அவர் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. பாடினவர் நிலை என்ன? அவர் தம் அநுபவ நிலையை எவ்வாறு பாட்டில் காட்டியிருக்கிறார் என்பதைப் பார்க்கிறவர் அவர். அதனால் ஆழ்வார் பாடலும், அபிராமிபட்டர் பாடலும், மணிவாசகர் பாடலும், அருணகிரிநாதர் பாடலும் ஒரே அனுபவத்தை வெவ் வேறு வகையாகச் சொல்கின்றன என்ற உண்மையை அவர் உணர்கிறார்.

அவர் இறையருளநுபவத்தில் ஆழ்ந்தவர்; ஆனால் குழந்தை போன்ற எளிமையுள்ளவர். எதிலும் ஒளிவு மறைவின்றிப் பேசு கிறவர். நாம் எதைக் கேட்டாலும் தெரிந்தால் தெளிவாகச் சொல் வார். தெரியாவிட்டால் தெரியாது என்று நேர்மையாகச் சொல்வார். பலகாலம் தவத்தில் ஈடுபட்டு அநுபவம் பெற்று அதனால் தெளிவுடையவராக விளங்குகிறார் அவர்.

அவருக்குப் பெரிய செல்வர்களும் நண்பர்கள்: ஏழைகளும் நண்பர்கள். நன்றாகப் படித்த பேரறிஞர்களும் அவரை மதிப்பார் கள்; கல்வி யறிவில்லாத பாமரரும் அவர்பால் அன்பு பாராட்டு வார்கள். தமிழ்நாட்டில் உள்ள எல்லா ஞானியருக்கும் பெரிய வர்களுக்கும் அவரைத் தெரியும்.

அவருடன் பலகாலமாகப் பழகும் பேறு எளியேனுக்குக் கிடைத்திருக்கிறது. அவரைப் பணிந்து மணிக்கணக்காக அவருடன் அளவளாவியிருக்கிறேன். பழைய பாடல்களானாலும் புதிய பாடல்களானாலும் நல்லனவா இருந்தால் அவற்றில் சொக்கிப் போவார். கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்கள் அவருக்காக இரண்டு கீர்த்தனங்கள் பாடியிருக்கிறார்.

பழைய பாடல்களாகிய தேவார திருவாசகங்களையும் திவ்யப் பிரபந்தத்தையும் கேட்டு இன்புறும் அவர் அருணகிரிநாதர் திருவாக்கில் மிகுதியாக ஈடுபடுவார். அருணகிரியார் பெரிய அநுபூதிமான் என்பதை அடிக்கடி சொல்லிக் காட்டுவார். அநுபவ உலகில் சஞ்சரிப்பவர்களுக்குத்தான் இந்த உண்மை தெரியவரும். இலக்கியக் கண்கொண்டும் சமய நூலறிவுக் கண்கொண்டும் அவர் திருவாக்கைப் பார்ப்பவர்கள் பலர் உண்டு. அந்தத் துறை களில் அருணகிரிநாதரைவிடச் சிறப்பாகப் பாடிய பெரியவர்கள் இருக்கிறார்கள். ஆனால் இறையருளநுபவம் பெற்று அதன் பயனாக உண்டான உள்ளக் களிப்பில் மிதந்து பாடியவர்கள் மிகச் சிலரே. அருணகிரிநாதர் அவ்வாறு பாடியவர்.

அவருடைய அலங்காரப் பாடல்களையும் அநுபூதிப் பாடல் களையும் கேட்டால் சில சமயங்களில் மேலே சொன்ன ஞானச் செல்வர் தம்மை மறந்து பல மணி நேரம் இருந்துவிடுவார். மின்சாரத் தாக்குதலைப் போல அந்தப் பாடல்கள் அவருடைய இதயத்தின் ஆழத்தைப் போய்த் தொட்டுவிடும்.

கந்தர் அலங்கார விரிவுரை நூல்களை ஆழ்ந்து படித்து வாழ்த்தும் அன்பர்கள் பலர் முருகன் திருவருளால் எனக்குக் கிடைத்திருக்கிறார்கள். வடகுமரை ஸ்ரீ அப்பண்ண சுவாமிகளவர் களும் அவற்றைக் கண்டக்கணித்து அவ்வப்போது ஆசி கூறிப் பாராட்டியருளுகிறார். அநுபூதிமான் அருணகிரிநாதர் என்பதைப் பல வகையில் சுட்டிக்காட்டும் பகுதிகளை யெல்லாம் அவர் மிக்க

உவகையுடன் படித்து இன்புற்று ஊக்கமூட்டுவார். 'பாம்பறியும் பாம்பின் கால்' என்பது போல அருளநுபவத் துறையிலே செல்கிறவர்களுக்கல்லவா அவற்றின் அருமைப்பாடு தெரியும்?

முருகனைச் சோதிப்பிழம்பாகக் கண்டவர் அருணகிரிநாதர். கந்தபுராணத்தில் கச்சியப்ப சிவாசாரியார்,

''அருவமும் உருவு மாகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகிக்
கருணைகூர் முகங்க ளாறும்
கரங்கள்பன் னிரண்டும் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
குதித்தனன் உலகம் உய்ய''

என்று பாடுகிறார். சோதிப்பிழம்பு ஓர் மேனியாகி முருகனாக வந்ததாம்.

''சோதி உணர்கின்ற வாழ்வு சிவமென்ற
சோகம் அதுதந்து எனைஆள்வாய்''

என்று அருணகிரியார் வேண்டுகிறார்.

''ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத்
துச்சியின்மேல்
அளியில் விளைந்ததோ ரானந்தத் தேனை''

என்பது அலங்காரம். ஸ்ரீ ராமகிருஷ்ண பரம ஹம்ஸர் முதலிய வர்கள் இந்தச் சோதி வெள்ளத்தில் மூழ்கி உள்ளும் புறம்பும் சோதியுருவைத் தரிசித்து இன்புற்றவர்கள். ஸ்ரீ வடகுமரைச் சுவாமிகளும் சோதி வெள்ளத்திலே மிதப்பவர். அருணகிரியார் வாக்கில்,

''ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே
முருகன் உருவம் கண்டு''

என்று வருவதைக் கேட்டால் அவர் ஆனந்தக் கூத்தாடுவார்.

அநுபூதிமான்களின் அநுபவம் ஒத்திருக்கும் என்பதை அவர்களுடைய வாக்கிலிருந்து காணலாம். ''தூண்டு சுடரனைய சோதி கண்டாய்'' என்று அப்பர் பாடினால், ''சோதியே சுடரே

சூழொளி விளக்கே'' என்று மாணிக்கவாசகர் பாடுவார். ''சோதியுட் சோதியுட் சோதி'' என்பார் இராமலிங்க சுவாமிகள்.

பாட்டைப் படிப்பதும் கேட்பதுங்கூட ஒருவகையான சாதனம் என்பதைப் பலர் கூறியிருக்கிறார்கள். வடகுமரை அண்ணலிடம் அதைக் கண்கூடாகக் காணலாம். அருணகிரிநாதர் பாடலில் அநுபவத் தேக்கமுள்ள இடம் வந்துவிட்டால் அவர் கண்ணில் ஒளியும் புனலும் வெளிப்படும்; உடம்பு புளகம் போர்க்கும். தம்மை மறந்து சில நேரம் இருந்து விடுவார். அத்தகைய இன்ப மயக்கத்தில் ஆழ்த்தும் மருந்தாக அருணகிரியார் வாக்கு விளங்குகிறது.

கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகளில் வரும் பல பகுதி களைக் கண்டு மிகவும் பாராட்டி இன்புறுவார் சுவாமிகள். அநுபூதி மான்கள் பாராட்டினால் அதற்குத் தனிச் சிறப்பு உண்டல்லவா? அதனால் மேலும் மேலும் ஊக்கம் உண்டாகிறது.

★

இந்தப் புத்தகம் கந்தர் அலங்கார வரிசையில் பதினேழாவது நூலாக மலருகிறது. இதில் ஆறு பாடல்களுக்குரிய விளக்கங்கள் உள்ளன.

முதல் பாட்டில், முருகன் திருவருளைப் பெற்றவர்களுக்குப் பிறவிப் பிணி இல்லையென்பதை அழகான முறையில் சொல் கிறார் அருணகிரியார். 'அடியாருக்குப் பிறவியைக் கொடுக்க எண்ணி அவர் பெயரைப் பிறப்போர் பட்டியலில் பிரமன் எழுதினால், அவனுக்கு முருகன் இரு விலங்கைப் போடுவான்' என்று சமற்காரமாகச் சொல்கிறார். அந்தப் பாட்டின் விளக்கம், 'இருவிலங்கு' என்ற தலைப்பில் இருக்கிறது. அதுவே நூலுக்குப் பெயராகவும் அமைகிறது. முருகன் பிரமனைத் தளையிட்டுச் சிறையிட்டான் என்ற கந்தபுராணக் கதை அவன் பிறவியைப் போக்கும் பெருமான் என்ற கருத்தையே விளக்குகிறது என்பதை இந்தப் பாட்டுக் குறிப்பாகப் புலப்படுத்துகிறது.

அடுத்த பாடலிலும் நான்முகன் வருகிறான். ஆனால் அதில் அவன் படைப்புத் தொழில் செய்பவன் என்ற வகையில் ஒரு குற்றச் சாட்டுக்கு ஆளாகிறான். 'செங்கோட்டு வேலவனைத்

தரிசித்து இன்புற நான்முகன் எனக்கு நாலாயிரம் கண்களைப் படைக்கவில்லையே!' என்கிறார் அருணகிரிநாதர். முருகனுடைய பேரெழில் கண்ணினால் அளவிட்டு முடிப்பதற்கு உரியதன்று என்ற கருத்தையே அந்த முறையில் சொல்கிறார். இந்தப் பாட்டில் திருச்செங்கோட்டின் பெருமை வருகிறது.

மூன்றாவது பாடலிலும் தொடர்ந்து திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக்கும் வேலவனை நினைக்கிறார். முன்பாட்டில் அவனைத் தரிசித்ததனால் உண்டான இன்ப உணர்வு பொங்குகிறது. இந்தப் பாட்டில் அவனைத் தியானிப்பதனால் வரும் நலத்தைச் சொல்கிறார். ''கன்னிப் பூகமுடன் தருமா மருவு செங் கோடனை வாழ்த்துகை சால நன்றே'' என்கிறார். இந்தப் பாட்டில் சாதிப் பெயர்கள் பல, தொனியில் அமைந்துள்ளன.

நான்காவது பாடல் முருகனுடைய திருவடிப் பெருமையைக் கூறுவது. இறைவனுடைய அடியார்களின் பக்குவத்துக்கு ஏற்ப அத்திருவடி நிற்பதை அருணகிரிநாதர் இதில் குறிப்பாகப் புலப்படுத்தியிருக்கிறார். உருவ வழிபாடு செய்வாருக்கும் தியானத்தில் ஈடுபடுவாருக்கும் மெல்ல மெல்ல அநுபவத்தில் தலைப்படுவாருக்கும் முடிந்த முடிபாகிய வீட்டின்பத்தை அடைவாருக்கும் தக்க வகையில் அந்தத் தண்டையம் புண்டரிகம் விளங்குவதை இந்தப் பாடல் தெளிவிக்கிறது. தொண்டர் கண்டு இன்புறும் புண்டரிகம் அது; தொண்டர் கண்டு அண்டி இன்புறும் தண்டையம் புண்டரிகம் அது; தொண்டர் கண்டு அண்டி மொண்டு இன்புறும் ஞானம் என்னும் தண்டையம் புண்டரிகம்; தொண்டர் கண்டு அண்டி மொண்டு உண்டிருக்கும் சுத்தஞானம் என்னும் தண்டையம் புண்டரிகம். இவ்வாறு கூட்டிப் பொருள் கொள்ளும்படி அடைகளை அமைத்துப் பாடியிருக்கிறார். அருண கிரிநாதர் சந்தப்பாக்கள் பாடுவதில் மிக வல்லவர். இந்தப் பாட்டில் சந்த நயமும் வழியெதுகை யின்பமும் இணைந்து இன்னோசை ததும்ப நிற்கின்றன.

தொண்டர்கண் டண்டிமொண் டுண்டிருக்
குஞ்சுத்த ஞானமெனும்
தண்டையம் புண்டரி கந்தரு
வாய்தண்ட சண்டவெஞ்சூர்

மண்டலம் கொண்டுபண் டண்டரண்
டங்கொண்டு மண்டிமிண்டக்
கண்டுருண் டண்டர்விண் டோடாமல்
வேல்தொட்ட காவலனே.

என்பது பாட்டு. இதைப் பாடிப் பார்த்தால் இதன் சந்தநயம் நன்கு புலனாகும்.

அடுத்த பாட்டு முருகப் பெருமானது இளமை விளையாட்டை நினைந்து பாடியது. அவனது திருவரையில் அணிந்த கிண்கிணி யோசையின் வலிமையைக் கூற வந்தவர், அது நன்கு தெளிவாகும் பொருட்டுக் கண்ணன் முழக்கிய வலம்புரி யோசையோடு ஒப்புநோக்கும்படி வைத்துக் காட்டுகிறார்.

ஆறாவது பாட்டில் வள்ளி மணாளனை நினைப்பூட்டிக் கொண்டு காமத்தை வெல்ல வழி சொல்லுகிறார். தாயை நினைந்தால் நம்முடைய உள்ளம் குழந்தைத் தன்மை பெறுகிறது. காம உணர்ச்சி காளைப் பருவத்தின் விளைவு. உடம்பால் காளையாக இருந்தாலும் உள்ளத்தால் குழந்தையாக இருக்கப் பழகலாம் அல்லவா? முருகன் வள்ளி மணவாளன். அந்த வள்ளியாகிய தாய் நாம் இருக்கும் நிலவுலகில் வாழ்ந்தவள். அந்தப் பெருமாட்டியையும் அவளுடைய மணாளனாகிய முருகனையும் போற்றினால் காமத்தை வெல்லலாம் என்பதை எதிர்மறை வகையில் இந்தப் பாட்டில் சொல்கிறார். 'நெஞ்சே மோகந்தரும் பெண்களின் அங்க எழிலைக் கண்டு மயங்குகிறாயே! வள்ளிமணவாளன் திருவடியை விரும்பிப் பக்தி பண்ணவில்லையே! என்று சொல்கிறார்.

காமத்தைப் பற்றிச் சொல்லும்போது அருணகிரிநாதர் முருகனை வள்ளிமணவாளனாக நினைக்கும்படி ஒரு தந்திரத்தைச் சொல்லித் தருகிறார். இந்தத் தந்திரத்தை வெளிப்படை யாகச் சொல்லா விட்டாலும் கூர்ந்து நோக்கினால் இது புலப்படும்.

"கடத்தில் குறத்தி பிரான்அரு ளால்கலங்
காதசித்தத்
திடத்தில் புணையென யான்கடந் தேன்சித்ர
மாதரல்குல்

படத்தில் கழுத்தில் பழுத்தசெவ் வாயில்
பணையில்உந்தித்
தடத்தில் தனத்தில் கிடக்கும்வெங் காம
சமுத்திரமே''

என்பது முன்னே நாம் பார்த்த பாட்டு. (19)

வள்ளிநாயகிக்கு மணவாளனாக முருகனைத் தியானிப்பதில் மற்றொரு பயனும் உண்டு. அப்பெருமாட்டியை முருகன் ஆட் கொண்டது, ஆருயிர்களை அவன் வலிய வந்து தடுத்தாட் கொள்ளும் கருணைத் திறத்தைக் காட்டுவது. அந்த வரலாற்றை நினைக்கும்போது நாமும் வள்ளியின் நிலையைப் பெறவேண்டும என்ற **பா**வம் உண்டாக வேண்டும். பக்தர்கள் இராதாகிருஷ் ணனையும் வள்ளிநாயகனையும் பாடிப் பரவிக் கூத்தாடுவது தம்மை இறைவனுடைய நாயகிகளாக எண்ணும் **பா**வம் முறுக வேண்டும் என்பதற்காகத்தான். முருகனடியார்கள் வள்ளி நாயகியை முருகன் எளிவந்து ஆண்ட கருணையைப் பலபல வகையில் பாராட்டியும் பாடியும் இன்புறுவதற்குரிய காரணமும் இதுவே. நாமே வள்ளிநாயகி ஆக வேண்டும். உள்ளத்தாற் பெண்மையை மேற்கொள்ள வேண்டும். இப்படித் தியானம் பண்ணப் பெருந்தவம் செய்திருக்க வேண்டுமாம்.

''காளைக் குமரே சனெனைக் கருதித்
தாளைப் பணியத் தவமெய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே''

என்று கந்தர் அநுபூதியில் அருணகிரியார் பாடுகிறார்.

முருகனை வள்ளிமணாளனாகத் தியானித்துப் பழகினால் நாமும் பதியாகிய அவனை அடையும் காதலி நிலையில் இருக்கிறோம் என்ற நினைவு நம் உள்ளத்தில் படியும். அப்போது நாம் ஆண் என்ற எண்ணமும் அதன் விளைவாகிய காமமும் சுருங்கும். பெண் பெண்ணைப் பார்த்துக் காமம் கொள்வது இயல்பாகாது. ஆதலின் நாம் குமரநாயகனை அடைய வேண்டும் என்ற காதலை வளர்த்துக் கொண்டால் காமம் தோன்றாது. வள்ளிமணவாளனாக முருகனை வணங்குவதனால் வரும் பயன் இது. இது கருதியே, ''தோதகச் சொல்லை நல்ல வெள்ளிய நித்தில

வித்தார மூரலை வேட்ட நெஞ்சை''ப் பார்த்து இந்தப் பாட்டில், ''தெள்ளிய ஏனலில் கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும் வள்ளியை வேட்டவன் தாள் வேட்டிலை'' என்று கூறுகிறார்.

★

இந்த ஆறு பாடல்களில் நான்கு பாடல்கள் (1, 2, 3, 5) முருகனைப் படர்க்கையில் வைத்துப் பரவியவை. ஒன்று (6) நெஞ்சை நோக்கிக் கூறியது. ஒன்று முருகனை முன்னிலையாக வைத்து விண்ணப்பித்துக் கொண்டது (4.)

முருகனுடைய திருவிளையாடல்கள் பலவற்றைச் சொல்லிப் பாராட்டுகிறார் அருணகிரிநாதர். முருகன் திருவவதாரம் செய்த வுடன் பலவகையான திருவிளையாடல்களைச் செய்தான்; திண்ணிய கிரிகள் சிந்தும்படி விளையாடினான் (5); தன்னை மதியாது சென்ற பிரமனைக் காலில் தளையிட்டுச் சிறைப் படுத்தினான் (1); கிரௌஞ்ச மலையின் மேல் வேலைவிட்டுப் பொடியாக்கினான் (1): கடல் சுவற வேல் வாங்கினான் (1); சூரன் மாமரமாக நிற்க, அவன்மேல் வேல் எறிந்து கொன்றான் (3); படைத்தொகுதியுடன் வந்த சூரனை அழித்து அமரரைக் காப்பாற்றினான் (4); வள்ளிநாயகியை வேட்டுச் சென்று அவளைக் களவு கொண்டுவந்தான் (3). இந்த வரலாறுகளை இந்தப் பாடல்கள் நினைப்பூட்டுகின்றன.

அவனுடைய வேலை நான்கு பாடல்களில் (1, 3, 4, 5) எடுத்துச் சொல்கிறார்; அது ஒப்பற்ற தனிவேல் (1); போர்வேல் (3). அவன் கொடியாக விளங்குகிறது சேவல் (3). அவனுடைய திருவடி தண்டையை அணிவது; தாமரை போல விளங்குவது; சுத்த ஞானமே வடிவானது (6). அவன் அழகிய திருவரையில் கிண்கிணியை அணிந்திருக்கிறான்; அது பதினாலுலகமும் கேட்கும்படி ஒலிக்கிறது (5).

அவனுக்குரிய தலமாகிய திருச்செங்கோடு இரண்டு பாடல் களில் இடம்பெறுகிறது. அருணகிரி நாதருக்கு அத்தலத்தில் மிக்க ஈடுபாடு உண்டு. கந்தர் அலங்காரத்தில் பல இடங்களில் அந்தத் தலத்தைப் பாராட்டுகிறார். கந்தர் அநுபூதியில் வேறு எந்தத் தலத்தையும் பாடாமல் நாகாசலமாகிய திருச்செங்கோட்டை

மட்டும் பாடுகிறார். ''தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழும் செழும்சுடரே'' (23) என வரும் பாட்டில் அத்தலத்தின் பெருமையை ஒருவாறு பார்த்தோம். இந்நூலில் வரும் பாடல்களில், ''மேதினி யில் சேலார் வயற்பொழிற் செங்கோடு'' (2) என்றும், ''கன்னிப் பூகமுடன் தருமா மருவு செங்கோடு'' (3) என்றும் பாராட்டுகிறார். வயலும் பொழிலும் வளம் பெற்றிருப்பதை இணைத்துச் சொல் வது அருணகிரியார் இயல்பு. திருச்செந்தூரைப் பற்றிச் சொல் கையில், ''செந்தூர் வயற்பொழில்'' (40) என்று சொன்னார்.

முருகப்பெருமானுடைய சீரையும் சிறப்பையும் உணர்த்தும் திருநாமங்கள் பல இப்பாடல்களில் வருகின்றன. அடிப்பட்டு வழங்கும் திருப்பெயர்களையும் அருணகிரி நாதரே பாட்டுக்கு இயையப் படைத்துக்கொண்ட நாமங்களையும் காணலாம். எம்கோன், கருமால் மருகன், செங்கோடன், செம்மான் மகளைக் களவுகொண்டு வருமாகுலவன், சேவற்கைக் கோளன், போர் வேலன், மன்றாடி மைந்தன், மாலோன் மருகன், மெய்ஞ்ஞான தெய்வம், வள்ளியை வேட்டவன், வானவர்க்கு மேலான தேவன், வேல் எடுத்து விளையாடும் பிள்ளை, வேல் தொட்ட காவலன் என்பன இந்த ஆறுபாடல்களில் வந்துள்ளன.

பிற தெய்வங்களையும் தேவரையும் அங்கங்கே குறித்துச் செல்கிறார். சிவபெருமான் மன்றாடியாகக் காட்சியளிக்கிறான் (2). திருமால் மாலோனாகவும் (2), கருமாலாகவும் (3) நிற்கிறார். அவர் பாரிசாத மலர் கொணர வலம்புரியை முழக்குகிறார்; அதன் ஓசை விண்கமழ் சோலையும் வாவியும் கேட்கிறது (5); அவர் உந்தி மண்கமழ்கிறது (5).

பிரமதேவன் பங்கேருகனாகவும் (1), நான்முகனாகவும் (2) வருகிறான். அவன் படைப்புத் தொழிலுடையவன் (2) தருக் குற்றமையால் முருகனால் தளையிடப்பட்டவன் (1).

வானவர், தங்களுக்கெல்லாம் மேலான தேவனாக முருகனை வைத்து வணங்குகிறார்கள் (2); சூரனைக் கண்டு பயந்து கொண்டு ஓடினார்கள்: முருகன் அவனைச் சங்காரம் செய்தமையால் அச்சத்தினின்றும் நீங்கினார்கள் (4); அவர்கள் வாழும் விண்ணில் கற்பகமரச் சோலையும் வாவியும் உள்ளன (5).

வள்ளி நாயகி செந்நிறம் பெற்ற மானுக்கு மகளாகத் தோன் றினாள் (3); ஆதலின் செம்மான் மகள் என்று அப்பெரு மாட்டியைக் குறிக்கிறார். அவளுக்காக முருகன் ஏங்கினான். தினைப்புனத்தில் கிளிபோல அமர்ந்து காவல் புரிந்தாள் (6); ஆதலின் தெள்ளிய ஏனலிற்கிள்ளை என்றும் கள்ளச் சிறுமி என்றும் வள்ளிநாயகியைக் குறிக்கிறார்.

அடியார்கள் முருகனை நாடி அடைந்து புரியும் தொண்டு வகைகளை இப் பாடல்கள் சில இடங்களில் சொல்கின்றன. அடியார்கள் அவன் உள்ள தலத்துக்குச் சென்று கண்டு தொழுவார்கள்; கண்ணால் அவன் திருவுருவ அழகைக் கண்டு, 'நமக்கு நாலாயிரம் கண் இல்லையே!' என்று வேசாறுவார்கள் (2); அவனை வாழ்த்துவார்கள் (3); அவனுடைய திருவடியை லட்சிய மாகக் கொண்டு அதை வேட்பார்கள் (6); அது புண்டரிக மலரைப் போலப் பொலிவு பெற்றிருப்பதைக் கண்டு இன்புறு வார்கள். பின்னும் அண்டி நெருங்கி அப்புண்டரிகத் தாள் தண்டையை அணிந்து அழகு பெறுவதை உணர்ந்து மகிழ் வார்கள். அதன் அழகை மொண்டு அது ஞானமயமாக இருப்பதை உணர்வார்கள். அப்பால் அதனையே உண்டு சுத்த ஞானமாகிய ஆனந்த நிலையில் ஒன்றுவார்கள்.

முருகனுடைய தாள் வேட்டவருக்குக் காமத்தால் துயரம் இல்லை; பிறவித்துன்பம் அறும்; என்றும் இன்பமயமான வீட்டுலக வாழ்வு கிடைக்கும் என்ற கருத்துக்களையும் இந்தப் பாடல்களில் காணலாம்.

தமிழ்ச் சொற்களோடு வடசொற்களையும் விரவுவித்துப் பாடும் இயல்புடையவர் அருணகிரிநாதர். இப் புத்தகத்தில் வரும் பாடல்களில், அண்டம், ஆகுலம், உலகம், கிரி, சண்டம், சுத்தம், சூர், ஞானம், தண்டம், தரு, தெய்வம், தேவன், நித்திலம், பங்கேருகன், புண்டரிகம், பூகம், மண்டலம், முகன், மேதினி, வாவி, வித்தாரம் என்னும் வடசொற்கள் வந்தது காண்க.

பட்டோலையில் கணக்கு எழுதுதல், குற்றம் செய்தாரை விலங்கு பூட்டித் தண்டித்தல், இரண்டு விலங்கு பூட்டுதல், காதல் மடந்தையைக் களவாக எடுத்து வருதல், கொடியைக் கையிற் பிடித்தல், படைகளால் மண்டலமிட்டுச் சூழ்தல், அச்சத்தால்

உருண்டு ஓடுதல், குழந்தையின் இடையில் கிண்கிணியைக் கட்டுதல், குறமகளிர் தினைக்கொல்லையைக் காத்தல் ஆகிய வழக்கங்கள் பாட்டிலுள்ள செய்திகளால் தெரியவருகின்றன.

இந்தப் புத்தகத்தில் கந்தர் அலங்காரத்தில் வரும் 89–ஆவது பாடல் முதல் 94–ஆவது பாடல் முடிய ஆறு பாடல்களின் விளக்கத்தைக் காணலாம். இந்தச் சொற்பொழிவுகளில் புராணக் கதைகளின் உள்ளுறையை அங்கங்கே விளக்கியிருக்கிறேன். பழைய கதைகளையும் புதிய கதைகளையும் எடுத்துக் காட்டிக் கருத்தைத் தெளிவுபடுத்தியிருக்கிறேன். ஏற்ற உவமைகளால் பொருளைப் புலப்படுத்த முயன்றிருக்கிறேன். பாடல்களில் வரும் வரலாறுகளைச் சற்று விரிவாகச் சொல்லியுள்ளேன். கண்ண பிரான் வலம்புரியோசை செய்த வரலாற்றை ஐயங்கார் பாக வதத்தைக் கொண்டு விளக்கியிருக்கிறேன். கருத்துக்களை விளக்கும்போது திருக்குறளும், பரிபாடலும், தேவாரமும், திருவாச கமும், பெரிய புராணமும் மேற்கோளாக நின்று துணைபுரிகின்றன.

★

இது அலங்கார மாலையில் 17–ஆவது புத்தகம். இன்னும் இரண்டு புத்தகங்களில் அலங்காரப் பாடல்களின் விளக்கத்தை முடித்து 20–ஆவது புத்தகத்தைக் கந்தரலங்காரம் முழுவதற்கும் உரிய ஆராய்ச்சியாக வெளியிடலாம் என்று எண்ணியிருக்கிறேன். இதுவரையில் இந்தத் தொண்டை நிறைவேற்றிய முருகன் திருவருள், எஞ்சிய மூன்று புத்தகங்களையும் நன்கு நிறைவேற்றி வைக்கும் என்றே எண்ணுகிறேன்.

வழக்கம்போல் அன்பர் சிரஞ்சீவி அனந்தன் எனக்கு உறுதுணையாக இருந்து சுருக்கெழுத்தில் சொற்பொழிவை எடுத்துத் தட்டெழுத்தில் உதவிபுரிந்து வருகிறார். என்றும் இளையபிரான் திருவருளால் அவருக்கு எல்லா நலங்களும் மேன்மேலும் பெருக உண்டாக வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

கி.வா. ஜகந்நாதன்

20.03.1962

இரு விலங்கு

பிறப்பும் இறப்பும்

மனிதனுடைய வாழ்வின் எல்லைகள் இரண்டு. ஒன்று பிறப்பு, மற்றொன்று இறப்பு. வாழ்க்கை என்று சொல்வதே பிறப்புக்கும் இறப்புக்கும் இடைப்பட்டது. இறப்பு, பிறப்பு என்பன உடம்பைச் சார்ந்தன. ஆனால் அவற்றால் வரும் துன்பங்கள் உடம்போடு கூடிய உயிரைச் சார்ந்துள்ளன. இந்த இரண்டையும் நோய் என்று சொல்வார்கள். பிறப்பு உண்டானால் இறப்பும் நிச்சயம் உண்டாகும். பிறப்பினால் தோன்றி வளர்கின்ற உடம்பு அழிவது இறப்பாகும். மலபாண்டமாகிய இந்த உடம்பு நெடுங்காலம் இருக்குமென்றும், இதனை வைத்துக்கொண்டு இறவாத வாழ்வு வாழலாம் என்றும் சொல்வது வெறும் கற்பனையே. 'தோற்றம் உண்டேல் ஒடுக்கம் உண்டு' என்பது ஒரு நியதி.

பிறந்தவர்கள் மீட்டும் பிறக்காமல் இருக்கும் நிலையை அடைவதுதான் முத்தி என்பது. சரீரத்தின் தொடர்பு இல்லாமல் இருக்கிற நிலையே முத்தி எனப்படுவது. எப்போதும் உயிரானது உடம்போடு சேர்ந்துதான் இருக்கும்; அல்லது இறைவன் திருவடியில் ஒன்றி இருக்கும். உடம்புகள் மூன்று என்பதும், பிறப்பினால் புற உடம்பாகிய ஊன் உடம்பு உண்டாகிறது என்பதும், எல்லாக் காலத்தும் உயிரானது உடம்போடேயே இருக்கும் என்பதும் முன்னாலே நாம் அறிந்தவை. உடம்பின் தொடர்பு இல்லாமல் விடுபட்டு உயிர் இறைவனோடு ஒன்றுபட்டு வாழ்வதே முத்தியின்பமாகும்.

பிறப்பும், இறப்பும் தொடர்ந்து வருவன. இறப்பு உண்டானவுடன் மீட்டும் அந்த உயிரானது வேறு புற உடலை எடுத்துக் கொள்ளும். இடைப்பட்ட காலத்தில் சூட்சும உடம்போடு நின்று இன்ப துன்பங்களை அநுபவிக்கிறது. அவற்றையே நரக சொர்க்க

என்று சொல்வார்கள். அந்த உடம்பை யாதனா சரீரம் என்று சொல்வது வழக்கம். எப்படியும் உடம்போடு நின்று உயிர் அநுபவத்தைப் பெறுகிறது. பரு உடலோடு இருக்கிற வாழ்வே நமக்குப் பிரத்தியட்சமாகத் தெரிகிறது. இந்த வாழ்வின் தொடக்கத்தைப் பிறப்பு என்றும், முடிவை இறப்பு என்றும் சொல்கிறோம். பிறப்பு, இறப்பு ஆகிய இரண்டும் போக வேண்டுமானால் மெய்ஞ்ஞானம் வரவேண்டும். ஆண்டவனுடைய திருவருளால் பெறுவது அது.

இந்த உலகத்தில் உணவு இன்மை, சுகம் இன்மை முதலியவற்றால் பெறும் துன்பங்களை ஓரளவு நம்முடைய முயற்சியால் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் பிறப்பு இறப்புத் துன்பங்களை மாற்றுவதற்கு இறைவன் திருவருள் அவசியம் வேண்டும். அவனுடைய திருவருளால் மெய்ஞ்ஞானம் உண்டாக, அதன் பயனாகப் பிறப்பு, இறப்பு நீங்க வேண்டும். கடவுளின் பெருமையைச் சொல்லும்போது அவன் பிறப்பையும், இறப்பையும் நீக்குகிறவன் என்பதைப் பல பெரியவர்கள் குறிப்பித்திருக்கிறார்கள்.

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார்''

என்பது திருக்குறள்.

அருணகிரிநாதப் பெருமான், முருகனை வணங்கினால் யம பயம் இல்லாமல் போகும், மரணத்தினால் உண்டாகும் துன்பம் அடியோடு ஒழியும் என்ற உண்மையைப் பலபல உருவங்களில் சொல்லியிருக்கிறார். முன்பு அலங்காரப் பாடல் பலவற்றில் இந்தக் கருத்து அமைந்திருப்பதைப் பார்த்திருக்கிறோம். அவனுடைய திருவருளினால் பிறப்புத் துன்பம் ஒழியும் என்பதை இப்போது சொல்ல வருகிறார். அலங்காரமாக அந்த உண்மையைச் சொல்கிறார்.

அதிகாரிகள்

பிறப்பு, இறப்பு ஆகிய இரண்டு நிகழ்ச்சிகளும் நமக்கு நிகழ்கின்றன. இந்தத் தொழில்களை நடத்துகிறவன் ஆண்டவன். அவன் ஐந்தொழில் உடையவன். படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அளித்தல் என்பவை அந்த ஐந்தொழில்கள். அந்த

ஐந்து தொழில்களும் இறைவனுடைய ஆணையால் நிகழ்கின்றன. அவன் இந்த ஐந்தையும் ஐந்து அதிகாரிகளைக் கொண்டு நிகழ்த்து கிறான் என்பது புராண வரலாறு. மிகச் சிறந்த அதிகாரி ஒருவன் தான் செய்கின்ற காரியங்களைப் பல பணியாளர்களை வைத்துக் கொண்டு செய்வது வழக்கம். எத்தனைக்கு எத்தனை உயர்ந்த நிலையில் அதிகாரி இருக்கிறானோ அத்தனைக்கு அத்தனை அவனுக்குக் கீழே பல துணை அதிகாரிகளும், ஏவலாளர்களும் இருப்பது இயற்கை. அதுபோல மூல சக்தியாக எழுந்திருக்கிற கடவுளுக்குத் துணையாகப் பல சக்திகள் உள்ளன. எல்லாம் ஒருவனாலே நிகழ்வன என்றாலும், உலக இயலை எண்ணி, அவன் ஆணையைச் செயலாற்றுகின்ற சிறுசிறு சக்திகள் இருப்ப தாக நினைந்து, அந்த அந்தச் சக்திகளுக்கு உருவம், பணி, பெயர் முதலியன வைத்துப் போற்றுகிறார்கள். அந்த வகையில் இறப்பைத் தருபவன் யமன் என்றும், பிறப்பைத் தருபவன் பிரமன் என்றும் சொல்வது மரபாக இருக்கிறது. இந்த இரண்டு பேருக்கும் தலை வனாக இருப்பவன் ஆண்டவன். யமன் என்ற கற்பனை எவ்வாறு எழுந்தது என்பதைப் பற்றியும், யமனுடைய இயல்புக்கும் இறப் புக்கும் உள்ள தொடர்பு பற்றியும் பலமுறை சிந்தித்திருக்கிறோம்.

பிரமன்

பிரமன் என்ற வடிவத்தில் பிறப்பைத் தரும் சக்தியை அமைத்திருக்கிறார்கள். படைத்தல் என்பது ஒரு பேராற்றல். அதற்கு இன்றியமையாதது அறிவு. பணம் உள்ளவன் ஏதேனும் ஒன்றைப் படைக்க வேண்டுமானால் அறிவில் வல்லவர்களைக் கொண்டுதான் படைக்க முடியும். அறிவு உள்ளவன் பணத்தைத் திரட்டிக் கொண்டு வேலை செய்ய ஆற்றல் உள்ளவனாக இருக் கிறான். வெறும் பணம் உள்ளவனோ அறிவு இல்லாவிட்டால் ஒன்றும் செய்ய முடிவதில்லை. படைப்புத் தொழிலைக் கொண்ட பிரமன் பேரறிவாளனாக இருக்க வேண்டும். இதனை எண்ணியே அவன் எப்போதும் வேதத்தை ஓதுகிறான், அவன் தன் நாக்கில் கலைமகளை வைத்திருக்கிறான் என்று புராணக் கதை சொல் கிறது. வேதம் என்பது விதிப்பன விதித்து விலக்குவன விலக்கு வது. நம்முடைய நாட்டில் பிற நூல்களுக்குக் கிடைக்காத பெருமை வேதத்திற்குக் கிடைத்திருக்கிறது. அதை அபௌருஷேயம்

என்றும், அநாதி என்றும் போற்றுகிறார்கள். இறைவனுடைய திருவாக்கே வேதம் என்று சொல்வார்கள். பல ஆயிரம் ஆண்டு களாகக் காது வழியாகக் கேட்டு ஸ்வரம் மாறாமல் வேதம் இந்த நாட்டில் நிலவி வந்திருப்பதே ஆச்சரியங்கள் எல்லாவற்றிலும் பெரிய ஆச்சரியம். பிரமன் வேதத்தில் வல்லவன் ஆதலின் அவனை 'வேதியன்' என்றும் சொல்வார்கள். எல்லாப் பொருளை யும் தத்துவத்தையும் உணர்ந்து படைக்க வேண்டி இருப்பதால், அவனுக்கு வேத அறிவு நிரம்ப வேண்டியிருக்கிறது. அதுமாத் திரம் அன்று. எல்லாக் கலைகளுக்கும் தலைவி, எல்லா வித்தை களுக்குமுரிய சக்தி கலைமகள் என்று போற்றுகிறோம். அந்தக் கலைமகள் பிரமனுடைய மனைவி. அவள் அவன் நாவில் இருக்கிறாள். வேத அறிவோடு கலை அறிவும் உடையவன் என்ற குறிப்பைத்தான் இந்த வரலாறு காட்டுகிறது. அறிவுச் செல் வத்தை உடையவன் பிரமன், ஆக்கும் திறத்தை அறிந்தவன், விதிக்கும் முறையை உணர்ந்தவன் என்ற இயல்புகளை அவனைப் பற்றிய வருணனைகள் நமக்கு விளக்குகின்றன.

சிவபெருமான் இரண்டையும் போக்குதல்

இறைவனுடைய திருவருளைப் பெற்றவர்களுக்குப் பிரம னிடத்தில் அச்சம் இராது. யமனிடத்திலும் அச்சம் இராது. பிரமனுக்கு வேலை கொடுப்பதும் அவர்களளவில் நின்றுவிடும். யமனுக்கு வேலை கொடுப்பதும் நின்றுவிடும். பரஞ்சோதியாக இருக்கும் கடவுள் இறப்பும், பிறப்புமாகிய துன்பங்களினின்றும் அடியார்களைக் காப்பாற்றுகிறான் என்ற உண்மையைப் புராணக் கதைகள் வெவ்வேறு வகையில் சொல்கின்றன. சிவபெருமான் ஆருயிர்களுக்கு இறப்பையும், பிறப்பையும் போக்குகிறவன். இந்த உண்மையையே அவனுடைய கையும் காலும் காட்டு கின்றன. சிவபெருமான் தன்னுடைய கையில் பிரம கபாலத்தை வைத்திருக்கிறான். பிரமன் நம்முடைய தலையில் எழுதுகிறான்; நமக்குப் பிறப்புத் துன்பத்தை உண்டாக்குகிறான். ஆனால் சிவ பெருமான் அந்தப் பிரமனுடைய தலையையே திருப்பிக் கையில் வைத்திருக்கிறான். 'பிரமனால் வரும் துன்பம் இப்பெருமானுடைய அடியார்களுக்கு இல்லை' என்று சொல்வது போல அவன் கையில் அந்தக் கபாலம் விளங்குகிறது. கபாலியின் திருவருள்

பெற்றவர்களுக்குப் பிரமனால் உண்டாகிற பிறப்புத் துன்பம் கிடையாது என்கிற உண்மையை அவனுடைய திருக்கரத்தைக் காண்கிறவர்கள் தெரிந்து கொள்வார்கள். இறைவன் திருவடி யமனை உதைத்தது. மார்க்கண்டேயனைக் காப்பாற்றுவதற்கு யமனைத் தன் திருக்காலால் உதைத்து ஒழித்தவன் சிவபெருமான். அந்தக் கதையை நாம் கேட்டிருக்கிறோம். மார்க்கண்டேயனுக்கு மாத்திரம் நிகழ்வது அன்று அது. தன்னை உறுதியாக நம்பினவர் கள் அனைவருக்கும் அருள் செய்யும் திருவடி அது. ஆகவே, சிவபிரான் திருவடியால் கால பயத்தையும் திருக்கரத்தால் பிரமனால் விளையும் அச்சத்தையும் போக்குகிறவன் என்பதை நாம் உணரலாம்.

வகுப்பவன்

முருகப்பெருமான் சிவபெருமானினும் வேறு அல்லாதவன். ஆகவே சிவபெருமானுக்குரிய இயல்புகள் அவனுக்கும் உரியன. முருகனும் இறப்புத் துன்பத்தையும் பிறப்புத் துன்பத்தையும் போக்குகிறவன். பலவிடங்களில் யமனைத் தைரியத்தோடு அறை கூவுகிறார் அருணகிரியார். முருகன் பிரமனைக் குட்டினான் என்பது கந்தபுராண வரலாறு. அது முருகப்பெருமான் பிறவித் துன்பத்தை நீக்குபவன் என்ற குறிப்பைத் தருகிற கதை.

பிரமன் அவரவர்கள் செய்த புண்ணிய பாவங்களுக்கு ஏற்ற வகையில் பிறப்பைத் தருகிறவன். வினையே பிறப்பையும், இறப்பையும் தருவதற்குக் காரணமானாலும் அது ஜடமாதலின் அதுவே இயங்காது. பாங்கில் பணம் இருக்கிறது. அதனை அங்கே பலர் போட்டு வைத்திருக்கிறார்கள். வேண்டியபொழுது வாங்கிக் கொள்கிறார்கள். பணத்தைப் போடுகிறவரும் வாங்குகிறவருமாகப் பலர் இருக்கிறார்கள். ஆனால் அந்தப் பணம் தானே உரியவர்கள் கையில் சேருவது இல்லை. அதனை வாங்கவும், கொடுக்கவும் அதிகாரிகள் அங்கே இருக்கிறார்கள். பணம் ஜடமாதலின் அதுவே இயங்காது. அதுபோல் இந்த உலகத்தில் பிறந்து புண்ணிய பாவ வினைகளை ஈட்டியவர்களுக்கு அடுத்த பிறவிகளில் அவற்றால் வரும் இன்ப துன்பங்களைச் சேர்ப்பதற்குரிய ஆற்றல் அந்த வினை களுக்கு இல்லை. அவை ஜடமாதலின் அவற்றைக் கொண்டு ஆருயிர்களுக்குரிய அநுபவங்களைத் தருவதற்கு ஏதேனும் ஒரு

சக்தி இருக்க வேண்டும். பிரமனே அந்தச் சக்தியாக இருக்கிறான். அந்த வேலையைச் செய்வதற்கு பிரமன் நியமிக்கப்பட்டிருக் கிறான். இன்னாருக்கு இன்னபடி அநுபவத்தைத் தரவேண்டும் என்ற கணக்கு வைத்துச் செய்வதை, அறிவு இல்லாதவன் செய்ய முடியாது. குற்றவாளிகளுக்குரிய தண்டனையைக் கொடுக்கும் நீதிபதிக்குச் சட்டத்தில் நல்ல அறிவு இருக்க வேண்டும். சட்ட அறிவு இல்லாதவன் நடுநிலைமை இல்லாதவன்; நீதிபதி வேலைக்குத் தகுதி அற்றவன். பிரமனும் நடுநிலையில் நின்று அவரவர்களுடைய புண்ணிய பாவங்களின் கணக்கை எடுத்துக் கொண்டு அவற்றுக்கு ஏற்பப் பிறப்பையும், அநுபவங்களையும் விதிக்க வேண்டும். இவ்வாறு விதிப்பதனால் அவனுக்கு விதி என்ற ஒரு பெயர் உண்டு. திருவள்ளுவரும் 'வகுத்தான்', 'உலகியற்றியான்' என்ற பெயரால் அவனைச் சொல்வர்.

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்த லரிது"

என்றும்,

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்றும் கூறுவர். அவரவர்களுக்குரிய அநுபவங்களை வகுக்கும் வேலையைப் பிரமன் செய்கிறான்.

பிரமனுக்கு நான்கு முகங்கள், எட்டுக் கண்கள். அவன் எந்தப் பக்கத்திலும் கோடாமல் வேலை செய்ய வேண்டும். "கோடாத வேதன்" என்று அருணகிரியார் கூறுவர். ஆகையால் எல்லாவற்றை யும் ஒரே சமயத்தில் பார்ப்பதற்குரிய கண்களும், முகங்களும் அவனுக்கு உள்ளன. நாம் முன்னாலே ஒருவன் வருவதைப் பார்த் தால் பின்னாலே வேறு ஒருவன் வருவதைப் பார்க்க முடியாது. ஒரே சமயத்தில் முன்னும் பின்னும் பார்க்கிற காட்சிதான் நடு நிலைக் காட்சியாக இருக்க முடியும். ஆகையால் நான்கு திக்கு களிலும் தலையும், கோணத் திசைகளையும் சேர்த்து எட்டுப் பக்கங்களிலும் பார்க்க எட்டுக் கண்களும் இருக்கின்றன என்று புராணங்கள் கூறுகின்றன. எட்டுக் கண்ணும் விட்டெரிக்கும் அதிகாரம் உடையவன் அவன்தான்.

வேத அறிவும், கலைமகளின் துணையும், திசைதோறும் உள்ள முகங்களும், எல்லாத் திக்குகளிலும் பார்வையைச் செலுத்தும் கண்களும் உடைய பெருமான் பிரமன். அவன் நடுநிலைமை யினின்றும் பிறழலாகாது. அவரவருக்குத் தக்க வண்ணம் அநுபவங் களை ஊட்ட வேண்டும். இதுதான் அவனுடைய கடமையாகும். தவறு செய்கிறவர்களுக்குத் தீங்கும், நலம் செய்பவர்களுக்கு நன்மையும் தருகிற அதிகாரியாகிய அவனே தவறு செய்து நடந்தானானால் அவனை ஒறுப்பதற்கு ஆண்டவன் வருவான்.

வரலாறு

கந்தபுராணத்தில் ஒரு வரலாறு வருகிறது. பிரமன் முருகப் பெருமானைக் கவனிக்கவில்லை. எட்டுக் கண் இருந்தும் சின்னஞ் சிறு குழந்தையாக விளையாடிக்கொண்டிருக்கும் முருகனை அ பன் காணவில்லை. தலை தருக்கி நடந்தான். எல்லா இடங்களை யும் ஒரே சமயத்தில் பார்ப்பதற்குரிய கண்கள் இருந்தும், பாக்க வேண்டியதைப் பார்த்து வணங்காது போனால் அவன் குருடன் அல்லவா? ஆகையால் முருகன் அவனை அழைத்து? ''நீ யார்?'' என்று கேட்டான். அவன், தான் பெரிய அதிகாரம் வகிப்ப வனைப் போல, ''சிருஷ்டி கர்த்தா'' என்று சொன்னான். ''உனக்கு என்ன வரும்?'' என்று முருகன் கேட்க, ''வேதம் வரும்'' என்று அவன் சொன்னான். முருகப் பெருமான், ''வேதத்தைச் சொல்'' என்று கேட்கப் பிரமன், ''ஓம்'' என்று தொடங்கினான். உடனே, ''அதன் பொருள் என்ன?'' என்று முருகன் கேட்க, பிரமன் தெரியாமல் விழித்தான்.

கதையின் கருத்து

இந்தக் கதையில் ஒரு சிறந்த உண்மை புலனாகிறது. கல்வி யிலே முற்ற வல்லவனாக இருப்பவன் பணிவு உடையவனாக இருந்தால்தான் தெளிவு பிறக்கும். நான் என்ற அகந்தை அவனுக்கு இருக்குமானால் அவன் பெற்ற கல்வியில் குழப்பம் உண்டாகும். அதுபோல் இங்கே பிரமன் தனக்குரிய அதிகாரத் தினால் தருக்கிப் பணிவின்றி நின்றான். வணங்குவதற்குரிய முருகனைக் கண்டும் வணங்கர்மல் இருந்தான். அவன் வேதத்தில் வல்லவனானாலும் தருக்கினால் தெளிவு பெறாமல் போனான்

முருகன், ''உலகத்தை எல்லாம் படைக்கின்ற உனக்கு இந்தப் பொருள் தெரியவில்லையே! அறியாதவன் படைத்தால் உலகம் உருப்படுமா?'' என்று அவன் தலையில் குட்டிக் காலில் தளை பூட்டிச் சிறை வைத்தான். இந்தக் கதை, பெரிய அதிகாரியானாலும் அவன் தவறு செய்தால் அவனை அவனுடைய தலைவன் ஒறுப்பான் என்ற முறையை நினைவூட்டுகிறது.

கணக்கு

''எனக்கு முருகப் பெருமான் திருவருள் இருக்கிறது; ஆகையால் பிறப்பு வராது'' என்று உறுதியாக அருணகிரியார் எண்ணி இருந்தார்.

''இல்லை, இல்லை. பிறப்பை உனக்குக் கொடுக்கிறவன் பிரமன் அல்லவா? அவன் உனக்குப் பிறப்பைக் கொடுத்து விட்டால் என்ன செய்வாய்?'' என்று ஒருவர் கேட்கிறார்.

''நிச்சயமாகப் பிரமன் எனக்குப் பிறப்பைக் கொடுக்க மாட்டான்'' என்று அவர் சொல்கிறார்.

பிரமன் ஒவ்வோர் உயிரினுடைய கணக்கையும் வைத்திருக்கிறான். இன்ன காலத்தில் இன்ன உயிர் இப்படிப் பிறக்க வேண்டுமென்று அந்தக் கணக்கை ஓலையில் எழுதி வைத்திருக்கிறானாம். ஒவ்வோர் உயிரின் புண்ணிய பாவங்களையும் கணக்குப் பண்ணி இன்னார் இன்னார் இன்ன சமயத்தில் பிறக்க வேண்டுமென்று முன்கூட்டியே எழுதி வைத்துக்கொள்கிறான். கணக்கோ, குறிப்போ, நூலோ எதை எழுதினாலும் பழங்காலத்தில் ஓலையில் எழுதுவார்கள். அந்த ஓலைக்குப் பட்டோலை என்று பெயர். 'பிரமன் முருகப் பெருமானுடைய அடியார்களை இனிப் பிறப்பதற்குரியவர்கள் என்று வரிசைப்படுத்தும் கணக்கோலையில் எழுதமாட்டான். இன்னாருக்கு இன்னபடி என்று வரையறை செய்யும் அதிகாரியாதலின், அப்படி எழுதுவதற்கு மனம் இடந்தராது. ஒருகால் முருகப் பெருமானுடைய தண்டனையை அவன் ஏற்றுக்கொள்வதற்கு முன்னால் எழுதியிருக்கலாம். அந்தப் பெருமானுடைய கையினால் குட்டுப்பட்ட பிறகு இனி ஜாக்கிரதையாக நடந்துகொள்ள வேண்டுமென்ற அறிவு பிறந்திருப்பதனால், இப்போது அவன் சிறிதும் தவறு செய்யமாட்டான்.

மற்றவர்களிடத்தில் தவறு செய்தாலும் முருகனோடு தொடர்பு உடையவர்களிடத்தில் நிச்சயமாகத் தவறு செய்யமாட்டான்' என்ற எண்ணம் உடையவர் அருணகிரியார்.

''பிரமன் உங்களுடைய தலையில் எழுதியிருக்கிறான். மறுபடியும் உங்களுக்குப் பிறப்பு உண்டென்று தன்னுடைய பட்டோலையில் குறித்திருக்கிறான்'' என்று ஒருவர் சொன்னதாக வைத்துக்கொள்வோம். அவரைப் பார்த்து அருணகிரியார் சொல்கிறார். ''அப்படியா? பிரமன் என் பெயரை எழுதினானா?'' என்று கோபத்துடன் கேட்கிறார். அவருடைய கோபம் பிரமனைச் சுட்டுகின்ற முறையினால் தெரிகிறது.

பங்கேருகன்

யாராவது ஒருவரைப் பற்றிச் சிறப்பாகச் சொல்ல வந்தால் அவருடைய சிறப்புகளையே நாம் சொல்வோம். அவரை இழிவாகச் சொல்ல வேண்டுமானால் அவருடைய இழிவான இயல்புகளையே பெருக்கிப் பேசுவோம். 'அவன் இன்ன இழிவான இடத்தில் பிறந்தவன்; இன்ன இழிவான மனிதனுக்குப் பிறந்தவன்தானே?' என்று பேசுவது உலக வழக்கு. அதுபோலவே முறை அறியாது காரியத்தைச் செய்த பிரமனை இங்கே,

பங்கேருகன்

என்று சொல்கிறார். பங்கேருகன் என்பதற்குத் தாமரையில் உள்ளவன் என்று பொருள். பங்கம் – சேறு. தாமரை சேற்றிலே முளைப்பதாதலின் பங்கேருகம் என்ற பெயரைப் பெற்றது. இங்கே பிரமனை, ''பங்கேருகன்'' என்றது. 'சேற்றிலே பிறந்த தாமரையில் இருக்கிறவன் அல்லவா?' என்று இழிவு தொனிக்கும்படி அமைந்தது. சேற்றில் பிறந்த தாமரையில் இருக்கிறவன் குழம்பிய எண்ணத்துடன் இருப்பது இயல்புதான் என்ற குறிப்பு அந்தப் பெயரில் இருக்கிறது. ''அவன் என் பெயரைப் பட்டோலையில் இடுவானா?'' என்று கேட்கிறார் அருணகிரியார். அப்படி எழுதுவதாக இருந்தால் அவன் ஒழிந்தான் என்ற தைரியத்தோடு பேசுகிறார்.

பங்கேருகன் எனைப் பட்டோலையில் இடப் பண்டு தளை
தன் காலில் இட்டது அறிந்திலனோ?

பழைய அநுபவம்

"ஒருகால் பழைய காலமாக இருந்தால் படைப்புத் தொழில் உடையோம் என்ற செருக்கினால் என்னைப் பட்டோலையில் இடுவதற்கு வாய்ப்பு உண்டு. வேலையில் புதிதாகப் புகுந்தவர்கள் சில தவறுகள் செய்வது இயற்கை. ஆனால் இந்தப் பிரமனோ, பலகாலமாகப் படைப்புத் தொழிலை நடத்தி வருகிறான். அது மட்டுமன்று. தான் செய்த பிழைக்காக முருகப்பெருமானுடைய தண்டனையையும் பெற்றிருக்கிறான். அப்படி இருக்க, அவன் இப்போது மீண்டும் தவறு செய்வானா? செய்யமாட்டான். செய்வதாய் இருந்தால் அவன் பழைய அநுபவத்தை மறந்திருக்க வேண்டும். அந்தச் செயல்தான் நமக்குத் தெரியுமே! தன்னை வணங்காமல் சென்றமையினால் முருகப்பெருமான் பிரமனுக்குக் காலில் தளையிட்டுச் சிறையில் அடைத்தான். அந்த அநுபவம் அவனுக்கு மறந்திருக்காது. ஒருகால் மறந்திருந்து இப்போது என்னைப் பட்டோலையில் இட்டுவிட்டானோ? எழுதிவிட்டானோ?" என்று கேட்கிறார்.

பங்கேருகன் எனைப் பட்டோலையில் இடப் பண்டு தளை தன் காலில் இட்டது அறிந்திலனோ?

'ஒருகால் அதனை மறந்து பட்டோலையில் என் பெயரை இட்டுவிட்டான் என்று வைத்துக்கொள்வோம். அப்படியானாலும் எனக்கு யாதொரு பயமும் இல்லை. நான் முருகப்பெருமானைப் புகல் அடைந்தவன். தன்னுடைய அடியார்களுக்கு இப்படி ஒரு நிலை வரப்போகிறது என்றால், முற்றறிவு உடையவனாகிய அவன் கணத்தில் அறிந்து கொள்வான். நான் அதைப்பற்றிக் கவலைப் பட வேண்டியதில்லை. அவன் பிரமனைச் சும்மா விடமாட்டான்.'

எம்கோன்

எங்கள் பெருமான் எத்தகையவன் தெரியுமா? முப்பத்து முக்கோடி தேவர்களுடைய துன்பங்களைப் போக்கினவன். அவர்கள் அறுபத்தாறுகோடி அசுரர்களாலே துன்புற்றார்கள். அமரர்கள் யாவரும் முருகன் திருவடியைப் புகல் அடைந்து, அடைக்கலம் என்று சொன்னவுடன் அவர்களைக் காப்பாற்று வதற்காக உறுதி கூறினான். அடைக்கலம் அடைந்தவர்களைக்

காப்பாற்றுதல் அவன் இயல்பு ஆதலின் உடனே போரைத் தொடங்கினான். அசுரர்கள் அறுபத்தாறு கோடி பேர்களாயிற்றே என்று அவன் அஞ்சவில்லை. தேவர்களுடைய துணை வலிமையை வைத்துக்கொண்டு போரிடலாம் என்றும் எண்ணவில்லை. வேல் அவன் திருக்கரத்தில் இருக்கிறது. அதைக் கொண்டு எத்தனை பெரிய பகைவர்களாக இருந்தாலும் ஒழித்துவிடலாம். வேறு யாருடைய கையிலும் அத்தகைய வேல் இல்லை. அது ஒப்பற்ற வேல். அவன் அந்த வேலாயுதத்தை எடுத்துக்கொண்டு நடந்த போதே சூரன் மனத்திற்குள் அஞ்சினான். கிரௌஞ்சமலை திடுக் கிட்டது. சூரன் பின்னாலே புகுவதற்கு இருந்த கடலும் அலறி யது. இதை அலங்காரமாக முன்பும் ஒரு பாட்டில் சொன்னார்.

"..... கடலழக் குன்றழச் சூரழ விம்மியழும்
குருந்தைக் குறிஞ்சிக் கிழவன்என்று ஓதும் குவலயமே."

இங்கு வேறு வகையில் அதே கருத்தைச் சொல்கிறார்.

தனிவேல் எடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்ப வரும்
எம்கோன்.

எங்களுடைய கடவுளாகிய முருகப்பெருமான் வேலை எடுத்து நடக்கிறான். அமரர்களுடைய துன்பத்தைப் போக்கவேண்டு மென்ற எண்ணத்தோடு நடைபோடுகிறான். இனிமேல்தான் போர்க் களத்திற்குச் சென்று போரிட வேண்டும். இவன் தன்னுடைய தளத்திலிருந்து நடைபோடும்போதே எதிர்த்தளத்தில் உள்ள பகைவர்களுடைய மனத்தில் அச்சம் குடிகொள்கிறது. பொங்கி வரும் கடல், 'ஐயோ! இந்த வேல் நம்மைச் சுவற அடிக்கும் போல் இருக்கிறதே! இந்தப் படுபாவி சூரன் நம்மிடத்தில் வந்து மறைந்துகொள்ள, அது காரணமாக நம்மை இந்தக் கூர்வேல் சுவற அடித்துவிடப் போகிறதே' என்று வாய்விட்டு அலறு கிறதாம். கடல் எப்போதும் ஒலித்துக் கொண்டிருக்கும். முருகன் வேலைத் தாங்கி நடைபோட்டபோது அந்த ஒலி, 'ஐயோ! எனக்குத் தீங்கு வரப்போகிறதே' என்று வாய்விட்டுப் புலம்புவது போல இருக்கிறதாம். பெரிய மலை உருவத்தில் இருந்த கிரௌஞ்சாசுரன் அந்த வேல் தன்னைப் பொடிப் பொடியாக்கப் போகின்றதே என்று புலம்புகின்றானாம்.

தனிவேல் எடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ் சிலம்பு புலம்ப வரும்
எங்கோன் அறியின் இனி நான்முகனுக்கு இரு விலங்கே.

''முப்பத்து முக்கோடி அமரர்களுக்குப் பகையாக வந்தவர் களையே அழிக்கும் பெருமான் எனக்குத் துணையாக இருக்கும் போது பிரமனால் எனக்கு என்ன தீங்கு நேரப் போகிறது?'' என்று தைரியத்தோடு பேசுகின்றார்.

கடுமையான தண்டனை

அந்தப் பெருமான் இதை அறிந்தால் சும்மா இருப்பானா? முன்னாலே ஒரு முறை பிரமன் தனக்குத் தீங்கு செய்தான் என்று அவனுக்குத் தண்டனை அளித்தான்; செருக்கினால் வணங்காமல் சென்றான் என்பதற்காகத் தலையில் குட்டிக் காலில் தளை யிட்டான். இப்போதோ பழைய தண்டனை மாதிரி அல்ல; இன்னும் கடுமையாகத் தண்டனை தருவான்.

எங்கோன் அறியின் இனி நான்முகனுக்கு இருவிலங்கே.

'முன்பு ஒரு விலங்கு காலில் பூட்டினான்; இப்போது அதே காலில் இரட்டை விலங்கு போடுவான்' என்று பொருள் கொள்ளக்கூடாது. மீண்டும் தவறு செய்தால் அவனுக்குக் கடுமையான தண்டனை விதிக்க வேண்டும். ஆகவே முன்பு ஒரு விலங்கு போட்டான்; இப்போது இருவிலங்கு போடுவான். இங்கே 'இருவிலங்கு' என்றால் காலிலும், கையிலும் போடும் விலங்கு என்று கொள்ள வேண்டும்.

தனக்குத் தவறு செய்தால் ஒரு பங்கு தண்டனை கொடுப் பவன் அடியார்களுக்குச் செய்த பிழைக்காக இரண்டு பங்கு தண்டனை செய்வான். தனக்குச் செய்கிற அபசாரத்தைக் காட்டி லும் தன் அடியார்களுக்குச் செய்கிற அபசாரத்திற்காகப் பின்னும் கடுமையாகத் தண்டிப்பான். ஆதலால் முன்பு பிரமன் தனக்குச் செய்த தீங்கை உணர்ந்தபோது ஒரு விலங்கு போட்டவன்; தன் அடியார்களுக்குச் செய்த தீங்கை உணர்ந்தால் இரட்டை விலங்கு போடுவான். அப்போது தன்னைக் காணாமல் நடந்த காலுக்கு விலங்கு போட்டான். இப்போது அந்த விலங்கோடு பட்டோலை யில் எழுதிய கைக்கும் சேர்த்து இரட்டை விலங்காகப் போடு வான். காலுக்கும் கைக்கும் விலங்கு போடுவது உலக வழக்கம்.

''தொட்டாரைச் சொல்லியழு
தோள்விலங்கு போட்டு வைப்போம்
கண்டாரைச் சொல்லியழு
கால்விலங்கு பூட்டி வைப்போம்''

என்று தாலாட்டுப் பாட்டில் வருகிறது.

பழைய அநுபவத்தை மறந்து பிரமன் தவறு செய்தால் முன்னே கிடைத்த தண்டனையைப் போல இருமடங்கு தண்டனை அவனுக்குக் கிடைக்குமாம். முன்பு அவன் நடக்க முடியாமல் தளையிட்டான்; இப்போதோ நடக்கவும் முடியாமல், வேலை செய்யவும் முடியாமல் காலிலும், கையிலும் முருகன் விலங்கு பூட்டுவானாம்.

நான்முகனுக்கு இருவிலங்கே.

நான்முகனுக்கு என்ற சொல்லில் ஒரு குறிப்பு உண்டு, நான்கு பக்கத்திலும் முகத்தை உடையவனாக இருந்தும், நடு நிலைமையில் நின்று எல்லாவற்றையும் பார்க்க வேண்டியவனாக இருந்தும், இப்படி உண்மையை உணராமல் செய்கிறானே என்ற குறிப்பை உடையது அது. அடுத்த பாட்டிலும்,

''நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே''

என்று பிரமனை நான்முகன் என்று பேசுவார் அருணகிரியார்.

முருகப்பெருமானுடைய திருவருளால் பிறப்பு அற்றுப் போகும் என்பது இந்தப் பாட்டின் கருத்து.

★

பங்கே ருகன்எனைப் பட்டோ
லையில்இடப் பண்டுதளை
தன்காலில் இட்டது அறிந்தில
னோ?தனி வேல்எடுத்துப்
பொங்கோதம் வாய்விடப் பொன்னஞ்
சிலம்பு புலம்பவரும்
எங்கோன் அறியின் இனிநான்
முகனுக்கு இருவிலங்கே.

[தாமரையில் இருக்கும் பிரமன் என்னைப் பிறவி எடுப்பவர்களின் கணக்கில் ஒருவனாக ஓலையில் எழுதுவதற்கு, அவன் பழங்காலத்தில் முருகன் தன் காலில் விலங்கிட்டதை நினைக்கவில்லையோ? அவன் அதை மறந்து பட்டோலையில் இடுவதை, ஒப்பற்ற வேலாயுதத்தை ஏந்திப் பொங்கும் கடல் வாய்விட்டு அரற்றவும் பொலிவுபெற்ற கிரௌஞ்ச மலை புலம்பவும் எழுந்தருளும் எம்முடைய தலைவனாகிய முருகன் அறிந்தால், இனிமேல் பிரமனுக்கு முன்பு போட்ட ஒரு விலங்கன்றி இரண்டு விலங்கு இடப்பெறும்.

பட்டோலை-கணக்கு முதலியன எழுதும் ஓலை. அறிந்திலனோ – எண்ணவில்லையோ. தனி – ஒப்பற்ற. ஓதம் – கடல். வாய்விட – ஒலிக்க. வாய்விட, புலம்ப, எடுத்து, வரும் எங்கோன் என்க.

பட்டோலையில் இட என்பது இடுவதாக இருந்தால் என்னும் பொருளுடையது]

இது கந்தர் அலங்காரத்தில் 89–ஆவது பாட்டு.

நாலாயிரம் கண்

எண்ணத் தொடர்ச்சி

நான்கு பேர்கள் உட்கார்ந்துகொண்டு பேசும்போது ஏதேனும் ஒரு பொருளைப் பற்றிப் பேச்சுத் தொடங்கினால் தொடர்ந்து அந்தப் பொருளின் சார்பாகவே பேச்சு நிகழும். மற்றவர்களும் அதன் சார்பாகவே நினைந்து பேசுவார்கள். ஒருவர் ஒரு கல்யாணத்தைப் பற்றிப் பேசப் புகுந்தால் மற்றவர்களும் தாங்கள் கலந்து கொண்ட கல்யாணங்களைப் பற்றியே பேசுவார்கள். இது மனிதர்களுக்கு இயல்பு. ஒவ்வோர் எண்ணமும் தொடர்ந்து வருவதால் இதை எண்ணத் தொடர்ச்சி (Association of ideas) என்று கூறுவார்கள்.

அருணகிரியார், சென்ற பாட்டில் பிரமனைப் பற்றிச் சொன்னார். 'முருகப் பெருமானை நம்பினவர்களுக்குப் பிறவித்துயர் இல்லை' என்பதைப் புலப்படுத்த, ''பிரமன் என் தலையில் எழுத மாட்டான். எழுதினால் அவனுக்குத் தண்டனை கிடைக்கும்'' என்ற கருத்துள்ள பாடலைப் பாடினார். மறுபடியும் பிரமனுடைய நினைவு அவருக்குத் தொடர்ந்து வந்தது. இந்தப் பாட்டிலும் பிரமனைப் பற்றிப் பேசுகின்றார். ''இனிமேல் பிரமன் என்னைப் பிறப்பவர்களின் வரிசையில் எழுதுவது கிடக்கட்டும். இப்போதே ஒரு பிழையை எனக்குச் செய்திருக்கிறானே!'' என்று சொல்வது போல இந்தப் பாட்டை அமைக்கிறார்.

பால் வாங்கிய கணவன்

ஓரிடத்தில் ஒரு வள்ளல், வந்தவர்களுக்கெல்லாம் பால் வழங்கிக் கொண்டிருக்கிறார் என்று ஒரு தாய் அறிந்தாள். அந்தத் தாய்க்கு நான்கு குழந்தைகள். அவள் ஏழை. ஆதலின் இளம் குழந்தைக்கே பால் பற்றாமல் துன்புற்றாள். அவள் காதில் இந்தச் செய்தி விழுந்தவுடன் தன்னுடைய கணவனை அழைத்து

அவரிடம் ஒரு பாத்திரத்தைக் கொடுத்து, ''நீங்கள் போய்ப் பால் வாங்கி வாருங்கள்'' என்று சொன்னாள். அந்தப் பாத்திரம் சிறிய தாக இருந்தது. 'இதற்குமேலே கொடுக்கப் போகிறாரா?' என்ற எண்ணத்தினால் அதைக் கொடுத்து அனுப்பினாள். அவளுடைய கணவன் குறிப்பிட்ட இடத்தைத் தேடி அந்தச் செல்வரைக் கண்டான். அங்கே பலர் பாலை வாங்கிக் கொண்டிருந்தார்கள். எத்தனை கேட்டாலும் இல்லை என்னாமல் அந்தச் செல்வர் பாலைக் கொடுத்துக் கொண்டிருந்தார். முன்னே போனவர்கள் கூட்டம் கூட்டமாகப் பாலை வாங்கிக் கொண்டிருந்தார்கள். இவனோ கையில் ஒரு சின்னச் செம்பைக் கொண்டுபோய் இருந் தான். அங்கே நிகழும் நிகழ்ச்சியைக் கண்டபோது, ''அடடா! நம்முடைய மனைவி நம்மிடத்தும் ஒரு பெரிய குடத்தைக் கொடுத்து அனுப்பாமல் போனாளே! என்ன பைத்தியக்காரத் தனம்?'' என்ற எண்ணம் உண்டாயிற்று. ''இந்தச் சிறிய செம்பு நிறையத்தானே வாங்கமுடியும்? பெரிய அண்டாவைக் கொண்டு வந்திருக்கலாம் போலே இருக்கிறதே'' என்று அந்த மனிதன் எண்ணினான். அது போன்ற ஓர் எண்ணத்தை இந்தப் பாட்டில் அருணகிரியார் வெளியிடுகிறார்.

திருச்செங்கோடு

பலகாலமாகத் திருச்செங்கோட்டுப் பெருமான் பெருமையைக் காதால் கேட்டு உணர்ந்தவர் அவர். செங்கோடு என்பதற்குச் செங்குத்தான மலை என்று பொருள். கொங்கு நாட்டில் சேலம் மாவட்டத்தில் இருக்கிறது அது. அதைப்பற்றி ஓரளவு முன்பே தெரிந்து கொண்டிருக்கிறோம். அருணகிரிநாதப் பெருமான் அந்தத் தலத்தில் எழுந்தருளியிருக்கும் வடிவேற் பெருமானைப் பற்றிப் பலர் வாயிலாகக் கேட்டிருந்தார். அங்கே முருகப்பெருமான் தன் திருக்கரத்தில் வேலை ஏந்திய கோலத்தில் நிற்கிறான். பெரும்பா லான இடங்களில் முருகனுடைய திருவுருவத்தில் வேலைத் தனியே சாத்துவார்கள். ஆனால் அங்கே மூல உருவத்திலேயே, திருக்கையில் வேலைப் பிடித்த கோலத்தில் ஆண்டவன் எழுந் தருளியிருக்கிறான். ஆகையால் செங்கோட்டு வேலன் என்ற வழக்கு இருக்கிறது. அந்தப் பெருமான் கண்கொள்ளாப் பேரழகன் என்பதைப் பலர் வாயிலாகக் கேட்டு, அங்கே போய் ஆண்டவனைத்

தரிசிக்க வேண்டுமென்ற ஆவலை வளர்த்துக் கொண்டிருந்தார் அருணகிரியார்.

ஒருமுறை அங்கே போய்ச் சேர்ந்தார். ஒரு பொருளிடத்தில் எத்தனைக்கு எத்தனை ஆசை மிகுகிறதோ அத்தனைக்கு அத்தனை அதன் மதிப்பு அதிகமாகும். மெல்ல மெல்லச் செங்குத்தான மலையின்மேல் அவர் ஏறிவிட்டார்; உச்சியை அடைந்தார். ஆண்டவனுடைய திருச்சந்நிதிக்குப் போகும்போது அவருடைய ஆர்வம் மிகுந்து குவிந்திருந்தது. அவருடைய ஆர்வமும், இயற்கையான அன்பும், ஆண்டவனுடைய தோற்றமும் எல்லாம் சேர்ந்து கொள்ளவே, அவருடைய கண்ணுக்கு ஒரு பெரிய பசி உண்டாயிற்று. அதனால் எம்பெருமான் சோதி வடிவினனாகத் தோன்றினான். அந்தக் காட்சியைக் கண்டவுடனே அவருக்கு அதுகாறும் உண்டாகாத பேரானந்தம் உண்டாயிற்று. ''இந்தப் பேரழகைக் காண்பதற்கு நமக்கு இரண்டு கண்கள் தானா இருக்கின்றன? ஆயிரம் கண் இருந்தால் எவ்வளவு நன்றாகக் காணலாம்!'' என்ற எண்ணம் உண்டாயிற்று. உடனே, ''எனக்கு இந்த உடம்பைத் தந்தவன் நான்முகன் அல்லவா? அந்த நான்முகன் எனக்கு நாலாயிரம் கண் படைத்திருக்கலாமே; அவ்வாறு படைக்கவில்லையே!'' என்று இரங்கினார்.

நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே!

என்று பாடினார்.

ஆலய தரிசனம்

இறைவனைத் தரிசனம் செய்ய விரும்புகிறவர்கள் அவனுடைய திருக் கோயிலுக்குச் சென்று, அவனுடைய உருவத்தைக் கண்டு வழிபடுகிறார்கள். கோயிலில் ஐந்து இந்திரியங்களுக்குமுரிய அநுபவப் பொருள்கள் பல உண்டு. இறைவனுடைய திருக் கோலத்தைக் கண்டு, அவனுடைய புகழை அடியார்கள் பாடக் கேட்டு, அங்கே உள்ள தூபப் பொருள்களின் மணத்தையும் அபிடேகச் சந்தன மணத்தையும் நுகர்ந்து, நல்ல நெய்யிட்டுச் செய்த பிரசாதத்தை உண்டு, ஐம்பொறிகளுக்குமுரிய இன்பத்தை அநுபவிக்கலாம். இத்தனையும் ஆண்டவனுடைய வழிபாட்டின் பகுதிகளே. ஆனாலும் ஆண்டவனைத் தரிசித்து வந்தேன் என்று சொல்வதே வழக்கம். மற்ற இந்திரியங்களுக்குரிய நுகர்ச்சியைப்

பெற்றாலும் பெறாவிட்டாலும் கண்ணால் காணும் காட்சி மிகவும் தலைமையானது. கோயிலுக்குச் செல்லாமலே பிரசாதத்தை வாங்கிச் சாப்பிடலாம். தூபப் பொருள்களை நுகரலாம். திருப் புகழைக் கேட்கலாம். ஆண்டவனைக் கண்ணால் காண வேண்டு மென்றால் திருக் கோயிலுக்குச் செல்லத்தான் வேண்டும். ஆண்டவனைத் திருக்கோயிலிலே கண்டு இன்புற்று வருவதுதான் மிகவும் முக்கியமானது. ஆலய வழிபாடு என்பது தரிசனத்தையே தலைமையாகக் கொண்டது.

கண்ணாற் காணுதல்

நம்முடைய உடம்பில் பத்துக் கருவிகள் இருக்கின்றன. செயல் செய்யும் கருவிகள் ஐந்தும், நுகர்ச்சிக்குரிய கருவிகள் ஐந்துமாகும். முன்னவற்றைக் கர்மேந்திரியங்கள் என்றும், பின்ன வற்றை ஞானேந்திரியங்கள் என்றும் சொல்வார்கள். செயல் செய்யும் கருவிகளாகிய கை, கால், நாக்கு, எருவாய், கருவாய் என்னும் ஐந்தையும்விட அறிவுக் கருவிகளாகிய ஞானேந்திரியங்கள் சிறந்தவை. அவை கண், காது, மூக்கு, நாக்கு, தோல் என்பன. இந்த ஐந்திலும் கண் தலைமையானது. **"சர்வேந்திரியாணாம் நயனம் பிரதானம்"** என்று சொல்வார்கள். மனிதனுக்குப் பிற இந்திரியங் கள் அவ்வளவு சிறப்பாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் கண் இல்லாவிட்டால் பயன் இல்லை.

"கண்ணிற் சிறந்த உறுப்பு இல்லை"

என்று பாடுவர் புலவர். திருக்குறளில்,

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்று வருகிறது. இறைவனை உடம்பினால் வழிபாடு செய்ய வேண்டுமென்ற கருத்தை அதில் வள்ளுவர் சொல்கிறார். அதற்கு உரை எழுத வந்த பரிமேலழகர், 'காணாத கண் முதலியன போல வணங்காத தலைகள் பயனிலவெனத் தலைமேல் வைத்துக் கூறினார்' என்று எழுதியுள்ளார். ஆதலின் பொறிகளுக்குள் சிறந்தது கண் என்றும் அதனால் இறைவனைக் காண்பதே பெரும்பயன் என்றும் தெரிய வருகிறது.

ஒருவனுடைய கண் அழகாக இருந்தால் அவனுடைய திருமேனிக்கே அழகு அமையும். பிறர் பார்க்க அழகாக இருக்கும்

கண் வேறு. பிறரைப் பார்க்கும் ஆற்றலையுடைய கண் வேறு. இரண்டையும் படைத்திருந்தால் சிறப்பு உண்டாகும். கண்ணால் பார்க்கின்ற பொருள்களுக்குள்ள சிறப்பை எண்ணி அந்தப் பார்வைக்குச் சிறப்பு அமைகிறது. கண்வலி உடையவர்கள் பச்சை யான பொருள்களைப் பார்க்க வேண்டுமென்று சொல்வார்கள். காணத் தகாத விபரீதமான காட்சியைக் கண்டவர்கள் உடனே பச்சை மரத்தைக் காணவேண்டுமென்று சொல்வது உண்டு. ஆகவே கண்களால் பார்ப்பதற்குச் சிறந்தவை என்று பல பொருள்கள் உண்டு. அவற்றுள் மிகச் சிறந்தது ஆண்டவனுடைய திருவுருவம். இறைவன் தனக்கென்று உருவமும், குணமும் இல்லாதவன். ஆனால் அவன் ஆருயிர்களைக் காப்பாற்ற வேண்டுமென்ற பெரும் கருணை உடையவன். அவர்களை எல்லாம் தீங்கு அகற்றி நல்ல நிலையில் வைக்க வேண்டுமென்ற கருணை அவனுக்கு இருக்கிறது. அவனோடு நாம் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமானால் அவன் நம் கண்ணுக்குப் புலனாகாமல் அறிவுக்குப் புலனாகாமல் இருந்தால் இயலாது. ஆதலின் நமக்கு அருள் செய்ய வேண்டித் திவ்யமங்கள உருவம் படைத்து எழுந்தருளுகிறான். மிகச் சிறந்த அன்பர்களுடைய உள்ளத்திலே தன்னுடைய திருவுருவத்தைத் தோற்றுவிக்கிறான். அருள் கண்ணால் பார்க்கின்ற அந்தப் பெரியவர்கள் தாம் கண்டவற்றை மற்றவர்களுக்குச் சொல்கிறார்கள்.

குறியும் குணமும்

ஆகமங்களும், சாத்திரங்களும் அந்தப் பெருமானுடைய திருவுருவத்தைச் சொல்கின்றன. அவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு இறைவனுடைய திருக்கோலங்களைக் கல்லாலும் செம்பாலும் செய்து வைத்துக் கோயிலில் பூசிக்கிறார்கள். மந்திரங்களால் அவற்றுக்குத் தெய்வத் தன்மையை ஏற்றுகிறார் கள். பலவகை வழிபாடுகளைச் செய்கிறார்கள். மூலமூர்த்தி யோடு பல்வேறு மூர்த்திகளையும் திருவிழாவுக்குரிய உற்சவ மூர்த்திகளாக அமைக்கிறார்கள். மனிதன் கண்ணுடையவனாக இருப்பதால் அந்தக் கண்ணால் காண்பதற்காக இத்தனை கோலங் களையும் அமைத்திருக்கிறார்கள். தனக்கென்று குணம் இல்லாத ஆண்டவன் மூன்று குணங்களின் வசப்பட்ட ஆத்மாக்களைக்

காப்பாற்றவேண்டி எட்டுக் குணங்களை உடையவனாக எழுந் தருளியிருக்கிறான். கூட்டில் அடைபட்டிருக்கிற கிளியைக் காப் பாற்ற மற்றொரு கிளி கூட்டிலே அடைபட்டு வருவது போல, முக்குணங்களினாலான கூண்டில் அடைபட்டிருக்கிற நம்மை உய்விக்க ஆண்டவன் எண்குண பஞ்சரத்துள் அடைபட்டவனைப் போல வருகிறான்.

"என்குண பஞ்சரனே"

என்று கந்தர் அநுபூதியில் பாடுவார்.

படமும் மங்கையும்

ஒரு பையன் திருநெல்வேலியில் இருக்கிறான். அவனுக்குக் கல்கத்தாவில் இருக்கிற பெண்ணைத் திருமணம் செய்து வைக்க வேண்டுமென்று பெரியவர்கள் முயற்சி செய்கிறார்கள். கல்கத்தா விற்குச் சென்று பெண்ணைப் பார்ப்பதற்கு ஓய்வு கிடைக்கவில்லை. ஆகையால் முதலில் பெண்ணைப் பெற்றவர்கள் அந்தப் பெண் ணின் படத்தை அவனுக்கு அனுப்புகிறார்கள். அந்தப் படத்தைக் கண்டு அவள் குட்டையும் அல்ல, நெட்டையும் அல்ல; நடு உயரம்; மூக்கும், விழியும் எடுப்பாக இருக்கின்றன என்று தெரிந்துகொண்டு, ஓரளவு மனத்தில் விருப்பத்தைக் கொள்வான். அதனை அடுத்து அந்தப் பெண்ணைத் தானே நேரில் போய்ப் பார்க்க வேண்டுமென்று ஆசைப்படுகிற நிலை வரும். படத்தைப் பார்க்கிறபோது அந்தப் பையனுக்குப் பெண்ணின் உருவம் ஒருவாறு உள்ளத்தில் பதிகிறது. அப்படிப் பதிந்தாலும் பெண் ணின் உருவம் உள்ளது உள்ளபடியே பதிவது இல்லை. ஆனா லும் அது அவன் உள்ளத்தில் காதலை விளையச் செய்கிறது. ஆகவே பெண்ணை நேரில் பாராவிட்டாலும் அவளுடைய படத் திற்கும் ஒரு பயன் இருக்கிறது. அதுவே முடிந்த பயன் அல்லா விட்டாலும் தொடக்கத்தில் அது பயனுள்ளதாகவே இருக்கிறது. மூலப் பொருளாகிய பெண்ணைக் காண்பதற்கு அடையாளப் பொருளாகப் படம் உதவுகிறது.

விக்கிரகங்கள்

அதுபோல் சோதிமயமாக இருக்கும் ஆண்டவனுடைய திரு வுருவத்தை அகக் கண்ணினாலே பார்ப்பதற்குமுன் திருக்கோயில்

களில் உள்ள திருவுருவத்தைக் கண்டால் சிறிதே உள்ளத்தில் பக்தி எழுகிறது. அந்தப் பக்தி வளர வளர, அகக் கண்ணில் தியானம் செய்யத் தொடங்குகிறான். அது வளர்ந்தால் இறைவனை உண்முகக் காட்சியில் பார்க்கிற நிலை உண்டாகும். கோயிலில் காணும் திருவுருவத்தைப் புறக் கண்ணால் கண்டதோடு நிற்காமல் அகக் கண்ணில் வைத்துத் தியானம் செய்து பழக வேண்டும். அதுதான் அநுபவம் வளர்வதற்குரிய வழி. மன ஒருமைப்பாட்டோடு புறத்தில் கண்ட உருவத்தை மெல்ல மெல்லத் தியானம் செய்தால் அதுவே சோதி வடிவமாகக் காணுகின்ற இன்ப அநுபவத்தைப் பெறுவ தற்குத் துணையாக இருக்கும். இந்தத் தியானத்தைப் பெரியவர் கள் பழகுவதனால், அவர்களுக்கு ஆண்டவன் உருவம் உடைய வனாக இருப்பதால் உண்டாகிற பலன் நன்றாகத் தெரிகிறது.

பேரழகன்

முருகப்பெருமான் அழகே திருவுருவமாக அமைந்திருக்கிற வன். கண்ணைக் கவ்வும் பேரழகன். கண்வழியாகக் கருத்தைக் கொள்ளை கொள்ளும் மோகன சொரூபன். சூரபன்மன்கூட அவனுடைய திருவுருவத்தைக் கண்டு,

"ஆயிரம் கோடி காமர் அழகெலாந் திரண்டொன் றாகி
மேயின எனினுஞ் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்
தூயநல் லெழிலுக் காற்றா தென்றிடின் இனைய தொல்லோன்
மாயிரு வடிவிற் கெல்லாம் உவமையார் வகுக்க வல்லார்"

என்று வியந்து கூறியதாகக் கந்தபுராணம் கூறுகிறது.

அத்தகைய பெருமானுடைய திருக்கோலத்தைக் கோயில் களில் அலங்கரித்துப் பார்க்கும்போது நம்மை அறியாமல் பக்தி விளைகிறது. அருணகிரிநாதப் பெருமான் பெரும் காதலுடன் திருச்செங்கோட்டு முருகனுடைய அழகுத் திருக்கோலத்தைக் கண்டார். கண்டவுடன் அவருக்கு எல்லையில்லாத ஆனந்தம் உண்டாயிற்று.

உணர்ச்சியும் இன்பமும்

ஒரு பெண்ணுக்குக் காதலன் கடிதம் எழுதுகிறான். அந்தக் கடிதத்தை அவள் காணும்போது அடைகிற உணர்ச்சி வேறு.

அதையே வெறும் காகிதமாகக் கடைக்காரன் வாங்கிச் செல்கிற போது அவன் அதைக் காணுகிற நிலை வேறு. இரண்டு பேருக்கும் காகிதமும், எழுத்தும் ஒன்று. ஆனாலும் எழுத்தை எழுதின வனுடைய நினைவும், அவன்பால் அவள் கொண்ட அன்பும் அந்தப் பெண்ணுக்குக் காதல் உணர்ச்சியை மிகுதிப்படுத்து கின்றன. அப்பர் சுவாமிகள் நடராசப் பெருமானைக் கண்டு,

"குனித்த புருவமும் கொவ்வைச்செவ் வாயில் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியில் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேஇந்த மாநிலத்தே."

என்ற அற்புதமான பாடலைப் பாடினார். நாமும் அதே நடராசப் பெருமானைக் காண்கிறோம். ஆனாலும் நமக்கு அத்தகைய உணர்ச்சி உண்டாவதில்லை. அந்தப் பெருமானிடத்தில் உள்ள காதல் முதிர்ச்சி அடையவில்லை. அவனது திருவுருவத்தைக் கண்ணால் காணும்போது நம்முடைய உள்ளத்தில் ஆர்வமும், பக்தியும் நிறைந்திருக்வில்லை என்பதுதான் காரணம்.

வெடி மருந்தைக் கெட்டித்திருக்கிற குழாயில் ஒரு திரி இருக்கும். அந்தத் திரியில் நெருப்பை வைத்துவிட்டால் உடனே காது செவிடுபடும்படி வெடிக்கும். வெடிக்க வேண்டுமானால் அந்தக் குழாயில் வெடி மருந்தைக் கெட்டித்திருக்க வேண்டும். பின்பு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் திரியில் தீ வைக்க வேண்டும். மருந்து அடைத்திருந்தாலும் தீ வைக்காவிட்டால் வெடிக்காது. தீயும் அவசியம்; வெடிமருந்தும் அவசியம். தீப்போல இருப்பதுதான் ஆண்டவனுடைய திருக்கோலம். வெடி மருந்து பக்தர்களுடைய நிலை. நம்மிடத்தில் பக்தி என்ற வெடி மருந்து இருந்தால்தான் ஆண்டவன் தரிசனம் ஆனந்த உணர்ச்சியை உண்டாக்கும். அது இல்லாதபோது நம்முடைய மனம் கட்டை யாக, கல்லாய் இருக்கும்.

மணிவாசகர் அப்படியே சொல்கிறார். ''உன்னுடைய திரு வருளால் நான் பெற்ற அநுபவம் பல. உன்னுடைய அருளைப் பெறாமல் வாடுகின்றவர்கள் பலர்; பலபடியாகத் தவம் செய்து கொண்டு வாடுகிறார்கள். அப்படி இருக்கும் நீ எனக்கு எளியவனாக வந்து அருள் செய்தாய். உன்னுடைய அருளைப்

பெறுவதற்கு முன்பாக நான் நைந்து உருகி இருக்க வேண்டும். அப்படிச் செய்யவில்லை. உன் திருவருளைப் பெற்ற பிறகும், அந்த அருள் எளிதில் கிடைப்பதன்று என்று உணர்ந்த பிறகும், நான் உருகாமல் இருக்கிறேன். உடம்பெல்லாம் கண்ணாக, அடிமுதல் தலை வரையிலும் நெஞ்சாக இருந்து உருகிக் கண்ணீர்விட வேண்டும். அப்படி இல்லாமல் இப்போதுள்ள ஒரு நெஞ்சமும் கல்லாக இருக்கிறது. இரண்டு கண்ணும் மரமாக இருக்கின்றன'' என்று புலம்புகிறார்.

''வெள்ளம்தாழ் விரிசடையாய் விடையாய் விண்ணோர்
பெருமானே எனக்கேட்டு வேட்ட நெஞ்சாய்
பள்ளம்தாழ் உறுபுனலில் கீழ்மே லாகப்
பதைத்துருகும் அவர்நிற்க என்னை ஆண்டாய்க்கு
உள்ளந்தாள் நின்றுஉச்சி அளவும் நெஞ்சாய்
உருகாதால் உடம்புளல்லாம் கண்ணாய் அண்ணா
வெள்ளந்தான் பாயாதால்; நெஞ்சம் கல்ஆம்;
கண்இணையும் மரம்ஆம்தீ வினையி னேற்கே.''

ஆகவே, நமக்குக் கண் இருந்தாலும், கருத்திருந்தாலும், ஆண்டவனது அழகுத் திருக்கோலம் கண்டிருந்தாலும் நம்முடைய உள்ளத்தில் பக்தி நிறைவு இருக்க வேண்டும். அது இல்லாத வரையில் ஆண்டவன் நேரே வந்து நின்றாலும் நாம் கண்ணெடுத்தும் பார்க்கமாட்டோம்; கை குவித்து நின்று உருக மாட்டோம்.

அருணகிரிநாதப் பெருமானுக்குத் திருச்செங்கோட்டுக்குப் போய்த் தரிசனம் செய்யும்போது உள்ளம் நன்றாகக் கெட்டித்த வெடி மருந்துக் குழாய் போல இருந்தது. திரியில் நெருப்பு வைப்பது போல அவருடைய கண்கள் அழகுத் திருக்கோலத்தைப் பார்த்தன. உடனே அவர் உள்ளத்தில் ஆனந்தம் பொங்கியது. அப்போது பாடிய பாட்டுத்தான் இது. அந்த ஆனந்தத்தில் அவர் சிறிது குறையைக் கண்டார். அது குறையன்று. அவருடைய உணர்ச்சி அந்தக் குறையைச் சொல்லும் வகையினால் புலனாகிறது.

கண் போதாமை

கம்பராமாயணத்தில் இப்படி ஓர் இடம் வருகிறது. சீதா பிராட்டியின் அழகைக் கம்பர் வருணிக்கிறார். அவளைக் கண்ட

வர்கள் கண்ணை வாங்காமல் பார்த்துக்கொண்டே இருந்தார் களாம். அந்தக் காட்சிக்குக் கரை காணாமல் திணறினார்களாம். இரண்டு கண்ணுடைய மக்கள் அவளுடைய பேரழகைக் கண்ட போது, ''ஐயோ, இடையிடையே கண்ணை இமைத்து அல்லவா காணவேண்டியிருக்கிறது? நமக்கு இமையா நாட்டம் இல்லையே!'' என்று வருந்தினார்களாம். இமையாத கண்ணைப் பெற்றவர் களாகிய தேவர்களாவது சீதையைப் பார்த்துத் திருப்தி அடைந் தார்களா? அவர்களுக்கும் ஒரு குறை இருந்தது. அவர்கள் தம்முடைய இமையா நாட்டத்தை உடைய கண்ணால் சீதையைக் கண்டார்கள் என்பது உண்மை. ஆனால், ''இந்தப் பேரழகைக் காண்பதற்கு நமக்கு ஆயிரம் கண் இல்லையே!'' என்று ஒரு குறையைச் சொல்லிக் கொண்டார்களாம். இரண்டு வகையினரும் தம் குறையை உணரச் செய்தது அந்தப் பேரழகு.

''உமையா ளொக்கும் மங்கையர் உச்சிக் கரம்வைக்கும்
கமையாள் மேனி கண்டவர் காட்சிக் கரைகாணார்
இமையா நாட்டம் பெற்றில மென்றார் இருகண்ணால்
அமையா தென்றார் அந்தர வானத் தவரெல்லாம்.''

அப்படியே இங்கே அருணகிரியார்,

நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே

என்று சொன்னார். எதற்காக நாலாயிரம் கண்கள் வேண்டும்? தாம் பார்க்கும் பொருளின் பெருமைகளை அடுக்குகிறார். ''இவ்வளவு சிறந்த பொருளைக் காண்பதற்கு எனக்கு வாய்ப்பு இருந்தது. நான் கண்டேன். ஆனால் அங்கே என்னிடத்தில இருந்த கருவி சிறியது என்பதைக் கண்டு கொண்டு வருந்தினேன்'' என்பது போலச் சொல்கிறார். சிறிய செம்பைக் கொண்டு போன கணவன் பெரிய அண்டாவைத் தன் மனைவி கொடுத்து அனுப்பாது போனாளே என்று இரங்கினானே, அது போல இருக்கிறது அல்லவா? இனி, செங்கோட்டுப் பெருமானை அவர் எப்படிச் சொல்கிறார் என்று பார்க்கலாம்.

மாலோன் மருகன்

செங்கோடன் பேரழகு உடையவன். அவனுக்கு எத்தனையோ பெருமை இருக்கிறது. இருந்தும் எடுத்தவுடன்,

மாலோன் மருகனை

என்று தொடங்குகிறார் அருணகிரியார். மக்களில் அழகு நிரம்பி யவர்கள் இருக்கிறார்கள். இயற்கையாக அழகு உடையவர்கள் ஆடையும் அணியும் புனைந்து கொண்டால் பின்னும் அழகாகத் தோற்றுவார்கள். எவ்வளவு அழகு உடையவர்களாக இருந்தாலும் தங்களை அலங்கரித்துக் கொள்ள வேண்டுமென்ற ஆசை யாரை யும் விடுவது இல்லை. அழகுமிக்க பெண்கள் தாம் மேலும் மேலும் பல பண்டங்களால் அழகை மிகுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென்ற ஆசையைப் பெற்றிருக்கிறார்கள். இந்த நவீன நாகரிக காலத்தில் எங்கே பார்த்தாலும் அழகு செய்யும் கருவிகள் மலிந்திருக்கின்றன.

ஒரு மனிதன் தன்னைப் பல்வேறு சமயங்களில் பல்வேறு வகையில் அலங்கரித்துக் கொள்வான். அவனுடைய அலங்காரத் தில் மிகவும் சிறந்தது அவன் திருமணக் கோலத்தில் இருக்கும் போது அமைகிறது. ஒருவன் அலங்காரம் செய்து கொண்டிருந் தால், ''மாப்பிள்ளை மாதிரி இருக்கிறது'' என்று சொல்வது உலக வழக்கம். திருமணக் கோலத்தில் மாப்பிள்ளையாக இருக்கும் போது இயற்கை அழகும், செயற்கை அழகும் பொருந்தி விளங்குவது ஆண்மகன் இயல்பு.

முருகன் பேரழகன் என்பதைச் சொல்ல வருகிறார் அருண கிரியார். அவன் மாப்பிள்ளைத் துரை என்று சொல்கிறார். யாருக்கு மாப்பிள்ளை? அழகுக்குச் சிறந்த பெருமானாகிய திரு மாலின் மாப்பிள்ளை அவன். திருமாலும், திருமகளும் அழகுத் திருவுருவங்கள். அழகான மாமனாருக்கும், அழகான மாமியாருக் கும் மாப்பிள்ளையாக வந்தவன் முருகன். மாப்பிள்ளைக்கும், பிள்ளைக்கும் ஒரு வேறுபாடு உண்டு. தகப்பன் அழகாக இருந் தால் பிள்ளையும் அழகாகத்தான் இருக்க வேண்டுமென்ற வரை யறை இல்லை. இயற்கையிலே அமைவது உரு; ஆகையால் அழகான பிள்ளையைத்தான் பெறவேண்டுமென்று நினைத்துப் பெற முடியாது. ஆனால் பெண்ணைப் பெற்றவர்கள் தம்முடைய முயற்சியினால் அழகான மாப்பிள்ளையைத் தேடிக்கொள்ளலாம். ஆகவே அழகான மாமியாரும், அழகான மாமனாருமாகிய திரு மகளும் திருமாலும் தம்முடைய அழகான குழந்தைகளான

தேவசேனைக்கும், வள்ளிக்கும் அழகான மாப்பிள்ளையாகிய ஒருத்தனைத் தேடிக் கொண்டார்கள். அவன்தான் முருகன். அவன் உரிமையுள்ள மாப்பிள்ளை, திருமாலுக்கு மருகன். உரிமையும், அழகுப் பெருமையும் உடைய மாப்பிள்ளை என்பதை,

மாலோன் மருகனை

என்பதனால் நினைவூட்டுகிறார் அருணகிரியார். அழகான மாமனாருக்கு மருமகப் பிள்ளையாக இருக்கிற அழகன் திருச்செங்கோட்டில் இருக்கிறான். அவன் கண்ணாலே காண்பதற்குரிய திருக்கோலம் படைத்திருக்கிறான் என்பதைச் சொல்ல வருகிறார். ஆகையால் இங்கே சூரசங்காரம் செய்த பெருமான் என்றோ, ஞான பண்டிதசாமி என்றோ சொல்லவில்லை. அவன் அழகன் என்பதைத் தெரிந்து கொள்ளக்கூடிய வகையில் வருணனை செய்யத் தொடங்கினார்.

மன்றாடி மைந்தன்

இனி அடுத்தபடி சிவபெருமானுடைய பிள்ளை என்று சொல்ல வருகிறார். பல இடங்களில் சிவபெருமானுடைய மைந்தன் முருகன் என்பதைப் புலப்படுத்தியிருக்கிறார். முதல் பாட்டிலேயே,

செஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன்.''

என்றார். அப்படிச் சொல்லும்போதெல்லாம் ஏதாவது குறிப்பை வைத்தே சிவபெருமானை அவர் வருணிப்பார். இங்கே முருகன் கண்ணுக்கு அடங்காத பேரழகன் என்பதை வற்புறுத்த வருகிறவர், அதற்கு ஏற்ற வகையில் அவன் திருமாலுக்கு மாப்பிள்ளைத் துரை என்று தொடங்கினவர், சிவபெருமானுடைய பிள்ளை என்பதை,

மன்றாடி மைந்தனை

என்று சொல்கிறார். நடராசப் பெருமானுக்குக் குழந்தை என்று இங்கே சொல்வதற்கு என்ன காரணம்? நடராசப் பெருமான் கூத்தாடும் பெருமான். எல்லாக் கலைகளும் சேர்ந்த கலை நடனக்

கலை. நடனம் செய்கிறவர்கள் தம்மை அழகுபெற அலங்கரித்துக் கொண்டிருப்பார்கள். கலைச் செல்வர்களிடத்தில் அழகு நிரம்பி யிருப்பதை இன்றும் நாம் பார்க்கிறோம். இயற்கை அழகு நிரம்பிய மாமியார் மாமனாருக்கு மாப்பிள்ளையாக இருக்கிற முருகனை, பல அலங்காரங்கள் செய்து கொண்டிருக்கிற கலைச் செல்வருக்குப் பிள்ளை என்று சொல்வதனால் அவனுடைய அழகுப் பெருமை பின்னும் நிரம்புகிறது.

மேலான தேவன்

இப்படியுள்ள பெருமான் மிகச் சிறந்தவன் என்பதை அடுத்த படி சொல்ல வருகிறார். அவன் தேவர்களுக்குள் ஒரு தேவன் அல்ல.

வானவர்க்கும் மேலான தேவனை.

சைவம், வைஷ்ணவம் என்ற இரண்டு சமயத்தினரும் முரு கனைக் கொண்டாடுவதற்கு உரிமை இருக்கிறது. வைஷ்ண வர்கள் தங்கள் வீட்டு மாப்பிள்ளை என்று கொண்டாடலாம். சைவர்கள் தங்கள் வீட்டுப் பிள்ளை என்று கொண்டாடலாம். வானவர்களுக்கோ அந்த இரண்டு மூர்த்திகளும் தலைவர்கள். ஆகையால் இரண்டு வீட்டுக்கும் உரிமை உடைய பெருமானை, 'எங்கள் அனைவருக்கும் மேலான தலைவனாக இருக்கிறவன்' என்று வானவர்கள் கொண்டாடுகிறார்கள். ஆகையால் வானவர் களுக்கும் மேலான தேவன் என்று சொன்னார். சிவபெருமானுக்கு மகாதேவன் என்று ஒரு பெயர்.

''தேவர்கோ அறியாத தேவ தேவன்''

என்று மணிவாசகர் பாடுகிறார். அவன் தேவர்களில் ஒருவனாக வைத்து எண்ணப்படுபவன் அல்லன். அவர்களால் அறியப்படாமல், அவர்களுக்கு மேலே அவர்களுடைய தலைவனே அறிய முடி யாதவனாம். முருகனும் அத்தகையவனே.

அவர்களுடைய சேனைத் தலைவனாக, அவர்களில் ஒருவ னாக, ஆண்டவன் இருந்தான். அந்தக் கதையைக் கொண்டு யாரா வது முருகன் தேவர்களுக்குள் ஒருவன் என்று எண்ணிவிட்டால் என்ன செய்வது என்ற நினைப்பினால், 'அவனை வானவர் களுக்கும் மேலான தேவன்' என்று இங்கே சொன்னார்.

மெய்ஞ்ஞான தெய்வம்

ஆண்டவன் அழகுத் தெய்வம். அழகு பொருந்தியவர் களோடு உறவு உடைய தெய்வம். தேசு பொருந்திய திருமேனி படைத்த தேவர்களுக்குத் தலைவன் என்று சொன்ன பிறகு,

மெய்ஞ்ஞான தெய்வத்தை

என்று சொல்கிறார். வெறும் புறக்கோலம் மாத்திரம் இருந்தால் சிறப்பு அமையாது. ஆண்டவன் ஞான சொரூபமாக இருக்கிறவன். தன் புறக்கோலத்தைக் கண்டு இன்புறுகிறவர்களுக்கு அகத்து ஒளியாகிய ஞானம் புலனாகும்படி செய்கிறவன் முருகன். ஞானத் தில் பலவகை உண்டு. பொதுவாக அறிவு என்று சொல்வதையே ஞானம் என்று சொல்வார்கள். பாஷா ஞானம் என்று சொல் கிறோம்; சங்கீத ஞானம் என்று சொல்கிறோம். இவை எல்லாம் உலகத்தோடு பொருந்திய கல்வியறிவு. இந்த ஞானங்கள் எல்லாம் நிலையாக நிற்பது இல்லை. ஆன்ம அநுபவத்திற்கு உதவும் ஞானம் எதுவோ அதுதான் மெய்ஞ்ஞானம். அதனை மெய்யறிவு என்று சொல்வார்கள். இந்த அறிவே வடிவமாக, மெய்ஞ்ஞானம் தரும் வள்ளலாக விளங்குகிறவன் முருகன். ஆதலின் அவனிடம் புற அழகோடு அக அழகும் சிறந்து நிற் கின்றது. அவனுடைய புற அழகைக் கண்டார்களுக்கு மோகம் பிறவாது; ஞானம் உண்டாகும். ஆதலின் முன்னே அவனுடைய அழகின் பெருமையைச் சொன்னவர், அதன் விளைவாக வரும் ஞானத்தை இங்கே சொல்கிறார். இவ்வளவும் சொன்ன பிறகு முருகனுடைய பெருமை தெரிகிறது. அதோடு அவனுடைய அருமையும் தெரிகிறது.

மேதினியில்

திருமால் மிகப் பெரியவர். வைகுண்டத்தில் இருப்பவர். சிவபெருமானோ கைலாயத்தில் இருப்பவர். அந்த இரண்டு பேரும் மிகவும் எளியவர்களாக வருபவர்கள் அல்ல. அவர் களுக்கு உறவினன் முருகன். தேவர்கள் நம்மைக் காட்டிலும் பெரியவர்கள். மேலுலகத்தில் இருப்பவர்கள். அவர்களுக்கு எல்லாம் மேலானவனாக உயர்ந்த நிலையில் இருப்பவன் அவன். அப்படியாயின், அவ்வளவு உயர்ந்த நிலையில் இருப்பவனுக்கும்

நமக்கும் என்ன தொடர்பு? அவனை நாம் காண முடியுமா? – இப்போது சொன்னவற்றோடு நிறுத்திவிட்டால் இத்தகைய ஐயங்கள் நிகழும். அதைப் போக்கத் தொடங்குகிறார் அருணகிரியார். அவன் திருச்செங்கோட்டில் வந்து எழுந்தருளியிருக்கிறான். கிடைத்தற்கரிய ஒரு பொருள் – மிக மிகச் சிறந்த பொருள் – நாம் சென்று அடைவதற்குரிய ஓர் இடத்தில் இருக்கிறதென்றால் யார்தாம் அதைப் பெற முயற்சி செய்ய மாட்டார்கள்?

இந்த அரிய பெரும்பொருள் நாம் வாழும் உலகத்தில், நாம் அடையாளம் கண்டுகொள்ளும் ஊரில் இருக்கிறது. அந்த அடையாளத்தைப் பின்னே சொல்கிறார். முதலில்,

மேதினியில்

என்கிறார். நாம் வாழ்கிற இதே பூமியில்தான் இவ்வளவு பேரழகுடைய பெருமான் எழுந்தருளியிருக்கிறான் என்று தொடங்குகிறார்.

அடையாளம்

திருச்செங்கோட்டை அடையாளத்தோடு சொல்கிறார்.

சேலார் வயற்பொழில் செங்கோடனை.

அந்த ஊருக்குள் போகும்போது அவனுடைய அருளினால் எங்கும் பச்சைப் பசேல் என்று வயல்கள் பரந்திருப்பதைக் காணலாம். இது அருணகிரியார் கண்ட திருச்செங்கோடு. வயல் வளம் உண்டாவதற்குக் காரணம் நீர்வளம் நிரம்பியிருந்ததுதான். அங்கே சேல் மீன்கள் உலாவுகின்றன. பொழில்களும் அங்கங்கே இலங்குகின்றன.

சேலார் வயற்பொழில்

சேல் மீன்கள் நிறைந்திருக்கிற வயல்களும் பொழில்களும் நீர் வளத்தையும் மக்களுடைய நீர்மை வளத்தையும் காட்டுகின்றன. அங்கே உள்ளவர்கள் வயல்களில் உள்ள மீன்களைக் கண்டு இன்புறுகிறார்களேயன்றி உண்டு துன்புறுத்த மாட்டார்கள். ஆதலின் வயல்களில் சேல்கள் நிரம்பியிருக்கின்றன. அகத்து நீர்மையும் புறத்து நீரும் பொருந்திய அந்த ஊரில் மலையின் மேலே செங்கோட்டு வேலன் எழுந்தருளியிருக்கிறான். எங்கே

இருக்கிறவன் நமக்கு அருள் செய்வதற்கு, நாம் காலால் நடந்து சென்று அடைவதற்குரிய ஊரில், கண்ணாலே காணுகின்ற நிலையில், கையால் தொழுகின்ற திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கிறான். இந்த வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கும்போது நாம் அங்கே போகவேண்டாமா? இத்தகைய எண்ணம் வரவே அருணகிரியார்,

சென்று கண்டு தொழ

என்கிறார்.

காணும் காட்சி

இங்கே செல்வதும், காண்பதும், தொழுதலும் ஆகிய செயல் களைச் சொல்கிறார். செல்வதற்குரியன கால்கள். காண்பதற் குரியன கண்கள். தொழுவதற்குரியன கைகள். திருச்செங்கோடு சென்று, மலையின் மேலே ஏறி, திருக்கோலத்தைக் கண்டு, கை கூப்பித் தொழ வேண்டும், அப்படித் தொழும்போது தமக்குள்ள குறை இன்னது என்று தெரிந்துகொண்டு வருந்துகிறார் அருண கிரியார்.

சென்று கண்டு தொழ
நாலாயிரம் கண் படைத்திலனே!

செல்வதற்கு நாலாயிரம் கால்களும், காண்பதற்கு நாலாயிரம் கண்களும், தொழுவதற்கு நாலாயிரம் கைகளும் பிரமன் படைக்கவில்லையே என்று சொல்லியிருக்கலாம். ஆனால் இங்கே ஆண்டவனைக் காண்பது தலைமையான செயல். அது மாத்திரம் அன்று. கால் உடையவன் நடந்து செல்கிறான். நடந்து செல்வதற்கு உறுதுணையாகக் கண் பார்க்க வேண்டும். ஆகவே வழி தெரிந்து நடப்பதற்குக் கால் மாத்திரம் இருந்தால் போதாது; கண்ணும் வேண்டும். இறைவனைத் தரிசனம் செய்து கையி னாலே தொழ வேண்டுமானாலும் அதற்கும் கண் வேண்டும். நடத்தல், காணுதல், தொழுதல் ஆகிய மூன்று காரியங்களுக்கும் கண்கள் இன்றியமையாதன. ஆதலின் அவற்றை வற்புறுத்தினார்.

மேதினியில் நாம் சென்று அடையும் எல்லையில் இருக்கும் திருச்செங்கோட்டுக்குப் போக இரண்டு கால்கள் போதும். இரண்டு கால்களால் நடக்கும் அளவுக்குள் அகப்பட்டவை அத்தலமும்

மலையும். இறைவனைத் தொழும்போது, எனக்கு வேறு செய லில்லை என்பதற்கு அடையாளமாக இரண்டு கைகளையும் குவிக்கிறோம். அந்த இரண்டுமே செயலின்றிக் குவியும்போது வேறு கைகள் எதற்கு? ஆனால் முருகனுடைய அழகோ காணக் காண விரிவது; எல்லை காண ஒண்ணாதது.

''அண்ணலார் குமரன் மேனி அடிமுதல் முடியின் காறும்
எண்ணிலா ஊழி காலம் எத்திறம் நோக்கி னாலும்
கண்ணினால் அடங்காது''

என்பது கந்தபுராணம். ஆகவேதான், ''நாலாயிரம் கண் படைத் திலனே'' என்று கண்ணை மாத்திரம் சொன்னார்.

நாலாயிரம் கண்கள்

பொதுவாக எதைப்பற்றிச் சொன்னாலும் ஆயிரம் என்று சொல்வது வழக்கு. அவ்வாறு இங்கே ஆயிரம் கண் படைத் திலனே என்று சொல்லியிருக்கலாம். ஆனால்,

நாலாயிரம் கண் படைத்திலனே

என்று சொல்கிறார் அருணகிரியார். அதற்கு என்ன பொருத்தம் என்பதைப் பார்க்கலாம். கண்களைப் படைகிறவன் பிரமன். அவனை,

நான்முகன்

என்று சொல்கிறார் அருணகிரியார். 'இவர் திருச் செங்கோட்டுக்குச் செல்வார். அங்கே முருகப்பெருமானைக் காண்பார். அவன் பேரழகில் ஈடுபடுவார். அப்போது இவர் முகத்தில் ஆயிரம் கண்கள் இருந்தால் நன்றாக இருக்கும்,' என்று முன்பே எண்ணிப் பிரமன் படைத்திருக்கலாம். இந்த எண்ணத்துடன் அவன் விரிவாகப் படைக்கப் புகுந்தால் ஒவ்வொரு முகமும் அதற்கேற்ற இரண்டு கண்களும் வேலை செய்யத் தொடங்கும். ஒவ்வொரு முகப் பக்கமும் ஆயிரம் கண்களைப் படைத்தால் நான்முகங்களி னாலும் விரைவாகப் படைக்கின்ற அவன் நாலாயிரம் கண் களைப் படைத்திருக்கலாமே என்ற நினைவோடு சொல்கிறார். ஒரு முகம் இரண்டு கைகளோடு அவன் படைப்பதாக இருந்தால் ஆயிரம் கண் வைக்க முடியும்; நான்கு முகத்தையும், எட்டுக் கரங்களையும் கொண்டு விரைவாக அவன் படைக்கப் புகுந்தால்

நான்கு பக்கத்திற்கும் நாலாயிரம் கண் படைத்திருக்கலாம் என்ற எண்ணத்தோடு அவர் பேசுகிறார் என்று தோன்றுகிறது. 'நான்கு முகம் உடையவன் ஆதலின் நாலாயிரம் கண் படைத்திருக் கலாமே' என்ற எண்ணம் எழுந்தது என்பது,

நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே

என்று பிரமனை முகத்தின் எண்ணிக்கை கொண்டு சுட்டுவதால் தெரிய வருகிறது.

பேரழகை உடைய ஆண்டவன், தேவர்களுக்குத் தலைவன், மேலானவனாகிய முருகன், சிவபெருமானுக்கு மைந்தன், மெய்ஞ் ஞான தெய்வம் ஆகிய அவன் மிகப் பெரியவனாக இருந்தாலும் அவன் அகத்தும் புறத்தும் ஈரம் மிக்க திருச்செங்கோட்டில் எழுந் தருளியிருக்கிறான். அவன் இயற்கையாக உள்ள இடத்திற்குச் சென்று கண்டு தொழுவது நமக்கு அரிதாகையினால் அவன் நம்மை நோக்கி இந்த மேதினிக்கே வந்திருக்கிறான். ஆனாலும் ஓரளவு முயற்சி செய்தால்தான் பெறுகின்ற பொருளின் பெருமை யும் மதிப்பும் தெரியும். அவன் இயல்பாக இருக்கும் இடத் திற்குச் சென்று காண்பதற்கு நமக்கு ஆற்றல் இல்லாவிட்டாலும், அவன் பாளையம் இறங்கிய இடத்திலாவது சென்று காணலாம். அதற்குரிய முயற்சி நமக்கு வேண்டும். அந்த முயற்சிக்கு ஏற்ற கருவிகள் நம்மிடத்தில் இருக்கின்றன. அவன் உள்ள தலத்திற்குச் செல்வதற்குக் காலும், அவன் திருக்கோலத்தைக் காண்பதற்குக் கண்களும், தொழுவதற்குக் கையும் இருக்கின்றன என்ற எண்ணங்கள் இந்தப் பாட்டினால் நமக்கு உண்டாகின்றன.

★

மாலோன் மருகனை மன்றாடி
மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான
தெய்வத்தை மேதினியில்
சேல்ஆர் வயற்பொழிற் செங்கோ
டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரம்கண் படைத்தில
னேஅந்த நான்முகனே!

[திருமாலுக்கு மருமகனை, அம்பலத்தில் ஆடுகின்ற சிவ பெருமானுக்கு மகனை, தேவர்களுக்கெல்லாம் மேம்பட்டு விளங்கும் தேவனை, மெய்யறிவே வடிவான கடவுளை, இந்த உலகில் சேல்மீன்கள் நிறைந்த வயல்களையும், சோலைகளையும் உடைய திருச்செங்கோட்டில் உள்ள முருகனைச் சென்று தரிசித்துத் தொழுவதற்கு ஏற்றபடி நாலாயிரம் கண்களை அந்தப் பிரமன் படைத்தானில்லையே!

மாலோன் – பெருமையையுடையோன்; கரியவன் என்றும் சொல்லலாம். வயலையும் பொழிலையும் உடைய செங்கோடு. செல்லுதலும் காணுதலும் தொழுதலும் அடுத்தடுத்து நிகழ்தலின் அம்முறையிற் சொன்னார். அந்த : உலகறி சுட்டு. அடியேன் என்ற எழுவாய் எஞ்சி நின்றது. அடியேன் தொழ, நான்முகன் படைத்திலனே].

முருகன் பேரழகுடையவன் என்பது இப்பாட்டின் கருத்து. இது கந்தர் அலங்காரத்தில் 90–ஆவது பாடல்.

சால நன்று

திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக்கும் முருகனுடைய பேரழகைக் கண்டு அதில் ஈடுபட்ட அருணகிரிநாதர்,

"நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே"

என்று சென்ற பாட்டில் குறைபட்டுக் கொண்டதைக் கண்டோம். இன்னும் அவருக்குத் திருச்செங்கோட்டின் நினைவு போக வில்லை. தொடர்ந்து அங்குள்ள பெருமானையே நினைக்கிறார். நாலாயிரம் கண் இல்லை என்பதற்காக அவனுடைய அழகைக் காணாது வந்துவிடுவாரா? கிடைத்ததைக் கொண்டு முழுப் பயன் பெறுவதுதான் அறிவாளியின் இயற்கை. ஆதலின் செங்கோடனை நன்றாகக் கண்டு இன்புற்றார். அவனுடைய திருவுருவம் அவரது உள்ளத்தில் பதிந்தது.

நினைத்தல்

நமக்கும் இறைவனைத் தரிசிக்க வேண்டுமென்ற ஆவல் இருக்கிறது. ஏதேனும் ஒரு தலத்திற்குச் செல்கிறோம். சென்று அவனைக் காண்கிறோம். அவனுடைய அற்புதமான கோலத்தில் மனத்தை ஈடுபடுத்துகிறோம். உலக வாழ்வில் பல முயற்சி களைக் கவனிக்க வேண்டி இருப்பதனால் எப்போதுமே அவனுடைய திருச்சந்நிதானத்தில் இருக்க நம்மால் முடியாது. ஆதலின் கோயிலுக்குக் குறிப்பிட்ட நேரங்களில் சென்று தரிசித்து வருவதே பக்தர்களுடைய வழக்கமாக இருக்கிறது. ஆனாலும் அப்படித் தரிசித்த பெருமானை நாம் எப்போது வேண்டுமா னாலும், எந்த இடத்திலும் மனத்தில் நினைக்கலாம். பலகாலும் தரிசித்த பழக்கத்தால் நம்முடைய உள்ளத்தையே கோயிலாக அமைத்துக் கொண்டுவிடலாம்.

"செங்கோடைக் குமரன்என
எங்கே நினைப்பினும் அங்கே என் முன்வந்து
எதிர்நிற்பனே"

என்று அருணகிரியார் சொல்வார். செங்கோட்டு வேலவனை எங்கே நினைத்தாலும் அங்கே வந்து அவன் தோன்றுவானாம். அவருடைய தியான நிலை அப்படிச் சிறந்து நின்றது.

"பதுமமலர்க்
கொங்கே தரளம் சொரியும் செங்கோடைக் குமரன்என
எங்கே நினைப்பினும் அங்கேஎன் முன்வந்து எதிர்நிற்பனே."

என்று பாடினார். நமக்கு அத்தகைய தகுதி இல்லை. அவனுடைய காட்சியை மனத்திலே காண முடிவதில்லை. அகத்திலே கண்ட பிறகல்லவா புறத்திலே காண முடியும்? ஆனாலும் எந்த இடத்திலும் ஆண்டவனை வாழ்த்தலாம். அவனுடைய புகழை எல்லா இடங்களிலும் சொல்லிக் கொண்டிருக்கலாம்.

திருநாமத்தின் பெருமை

அவனுடைய நாமத்தையும் சொல்லலாம். அவனுடைய உருவத்தைக் கோயிலுக்குச் சென்றால்தான் கண்ணால் காண முடியும். நாமத்தையோ எங்கும் சொல்லலாம்; எப்போதும் சொல்லலாம். ஆகவேதான் இறைவனுடைய உருவத்தைக் காட்டிலும் நாமம் சிறந்தது என்று சொல்வார்கள். இன்று நாம் உலகத்தில் தரிசிக்கின்ற உருவங்கள் ஆண்டவனுடைய நேரான உருவம் அல்ல. அவனைத் தம்முடைய அருள் கண்ணால் கண்ட பெரியவர்கள் அவன் இப்படித்தான் இருப்பான் என்று சொல்லி அடையாளமாக அமைத்துக் காட்டிய திருவுருவங்கள் அவை. ஒருவனுடைய போட்டோப் படத்தைப் பார்ப்பது போலத்தான் அந்தத் திருவுருவங்களைக் கண்டு நாம் பூசை செய்கிறோம். அவனுடைய திருநாமம் அத்தகையது அன்று. அவனுடைய நாமம் வேறொரு நாமத்தின் அடையாளம் அன்று. சாக்ஷாத் நாமமே அது. உலகத்தில் உள்ள சமயங்களில் சிலவற்றைச் சார்ந்தவர்கள் அவனுக்கு உருவம் இல்லையென்று சொல்வார்களேயன்றிப் பெயர் இல்லையென்று சொல்வதில்லை. அல்லா, பரமபிதா என்று சொல்லாமல் இருக்க இயலாது. இந்த வகையிலும் ஆண்டவனுடைய உருவத்தைக் காட்டிலும் திருநாமம் சிறந்தது என்று தெரிந்துகொள்ளலாம்.

மற்றொன்று: நாம் வணங்கும் ஆண்டவனுடைய திருவுருவங்களைக் குறிப்பிட்ட இடத்தில் வைத்துக் கோயில் கட்டியிருக்

கிறார்கள். அந்தக் கோயில் சில சில காலங்களில்தான் சென்று வழிபடுவதற்குரியது. அதற்கென்று ஒரு காலமும், இடமும் அமைந் திருக்கின்றன. எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் அவன் திரு வுருவத்தைக் கண்ணால் கண்டு தரிசிப்பது இயலாது. நம்முடைய வீட்டில் பூசை செய்வதற்கு வைத்திருந்தாலும் அதையும் ஒரு குறிப்பிட்ட இடத்தில்தான் வைத்துக்கொள்ள முடியும். நாம் வேறு இடங்களுக்குச் சென்றிருந்தால் அந்த இடங்களில் அதைக் காண்பதற்கு வாய்ப்பு இராது. இறைவனுடைய திருநாமம் அத்தகையது அன்று. எல்லா இடத்திலும், எல்லாக் காலத்திலும் அதைச் சொல்லலாம்; அவன் புகழை வாழ்த்தலாம். எப்போது எப்போது நமக்கு ஓய்வு இருக்கிறதோ அப்போதெல்லாம் திரு நாமத்தைச் சொல்லலாம்; திருப்புகழைப் பாடலாம். ஆகையால் அவனுடைய திருவுருவத்தைத் தரிசிப்பதைவிட அவன் புகழை வாழ்த்துவது எளிதானது; பயனும் உடையது.

வாழ்த்துதல்

''நாலாயிரம் கண் இருந்தால் ஒருவாறு திருச்செங்கோட்டுப் பெருமானுடைய பேரழகைக் கண்டு இன்புற்றிருக்கலாமே. எனக்கு இருப்பவை இரண்டு கண்கள் தாமே!'' என்று இரங்கினார் அருணகிரியார். ஆயினும் நன்றாகத் தரிசித்து இன்புற்றார். நாமோ அவனைச் சென்று பார்க்கவில்லை. எல்லாருக்கும் அடிக்கடி சென்று பார்க்க இயலாது. கோயிலுக்குச் சென்று பார்க்க முயற்சியும், வாய்ப்பும் இல்லாதவர்களுக்கு எளிதாக ஒரு காரியம் இருக்கிறது. அவனை வாழ்த்தலாம். திருச்செங்கோட்டி லுள்ள ஆண்டவனைத் தரிசித்த அருணகிரியார், யாவர்க்கும் எளியதாக, ஆனால் அரிய பயனை உடையதாக ஓர் உபாயத்தைச் சொல்கிறார். அவர் பாடிய பாடலைக் கேட்டுவிட்டு, 'நாலாயிரங் கண் இல்லையே என்று இப்பெருமான் இரங்குகிறாரே! அத்தகைய மூர்த்தியை நாம் பார்க்க வேண்டும். பார்க்க வாய்ப்பு இல்லையே!' என்று எண்ணி ஏங்குவாருக்கு ஆறுதலாக, ''அவனை வாழ்த்திக் கொண்டிருக்கலாம். அது மிகவும் நல்லது'' என்று அடுத்த பாட்டில் சொல்கிறார்.

செங்கோடனை வாழ்த்துகை சால நன்றே.

கருமால் மருகன்

செங்கோடனை மீட்டும் நினைக்கும்போது சென்ற பாட்டில் முதலில் சொன்னதுபோலத் திருமால் மருகன் என்று மறுபடியும் நினைவு கொள்கிறார். அங்கே 'மாலோன் மருகனை' என்று எடுத்தார். இங்கே,

கருமான் மருகனை

என்று தொடங்குகிறார். திருமால் கரிய நிறம் உடையவர். அவருக்கு மருகன் முருகப்பெருமான்.

வள்ளிநாயகியை அவன் திருமணம் செய்துகொண்டான். அப் பெருமாட்டி ஒரு மானுக்கு மகளாகத் திரு அவதாரம் செய்தாள். செம்மான் மகளாகத் திகழ்ந்தாள். திருமகள் அம்சம் பெற்றது அந்தச் சிவந்த மான். கரிய திருமாலினுடைய மருமகனாக இருக் கிறவன் சிவந்த திருமகளாகிய மானின் மகளைக் கல்யாணம் செய்து கொண்டான். அவன் எப்படி வள்ளியைத் திருமணம் செய்து கொண்டான் என்பதை இதில் சொல்கிறார்.

வள்ளியைக் களவு கொண்டவன்

கருமால் மருகனைச் செம்மான் மகளைக் களவுகொண்டு வரும் ஆகுலவனை.

ஆகுலம் – கவலை. 'வள்ளி நாயகியைத் திருட்டுத்தனமாக வாவது எடுத்துச் செல்ல வேண்டும்!' என்ற கவலை முருகனுக்கு இருந்தது. நேர்மையாக அவனுடைய தந்தையை அணுகி, ''எனக்குத் திருமணம் செய்து கொடு'' என்று ஆண்டவன் கேட்க வில்லை. தினைப் புனத்தில் தினை காத்துக் கொண்டிருந்த வள்ளி நாயகியிடம் தன்னை மறைத்துக் கொண்டு சென்றான். திருடர்கள் எப்போதும் தம்முடைய உருவத்தை வெளிப்படையாகக் காட்டிக் கொள்ள மாட்டார்கள். முருகன் வேடனாகவும், கிழவனாகவும், வேங்கை மரமாகவும் தன்னுடைய கோலத்தை மாற்றிக் கொண் டான். திருடன் செய்கிற காரியம் இது. பொருளுக்குரியோர் அறியாமல் அந்தப் பொருளை எடுத்துச் செல்வதுதான் களவு. வள்ளிநாயகியை வள்ளி மலைக்கு அரசனாகிய நம்பி ராஜன் வளர்த்து வந்தான். கண்ணை இமை காப்பது போல அவளைக் காப்பாற்றினான். தன்னுடைய மகள் என்று எண்ணி நலங்கள்

செய்தான். அவனையும் அறியாமல் திருட்டுத்தனமாக முருகப் பெருமான் வள்ளியெம்பெருமாட்டியை எடுத்துச் சென்றான். ஆகையால் அது திருட்டு ஆயிற்று. அப்போது வள்ளிநாயகியை எப்படியாவது அடைய வேண்டுமென்ற வியாகுலம் அவனுக்கு இருந்ததாம்.

''வேடுவர் புனத்திலுரு மாறிமுனி சொற்படி
வியாகுல மனத்தினொடு போம்விற்காரனும்''

என்று திருவகுப்பில் வருகிறது. நாரதர் கூறிய சொற்படியே வள்ளி நாயகியை அடைய வேண்டும் என்ற வியாகுல மனத்தோடு உருமாறிப் போனானாம். வள்ளி நாயகியை ஆட்கொள்வதற்காகச் செய்த திருவிளையாடல் இது. அந்தப் பிராட்டிக்கு முருகனை அடையவேண்டுமென்ற காதல் இருந்திருக்கலாம். அது வெளிப் படையாகத் தெரியவில்லை. அவளை ஆட்கொள்ள வேண்டுமென்ற கவலை மிகுதியாக முருகனுக்கு இருந்தது. முருகனுடைய பெருங் கருணையை இந்தத் திருவிளையாடல் காட்டுகிறதென்பதைப் பலமுறை பார்த்திருக்கிறோம். இறைவனே வலியவந்து தன்னை ஆட்கொள்ளும் பேறு வள்ளியெம்பெருமாட்டிக்குக் கிடைத்தது.

குரங்கும் பூனையும்

குரங்குக்கும் பூனைக்கும் ஒரு வகையில் வித்தியாசம் உண்டு. குரங்கு தன் குட்டியைப் பற்றிக்கொள்ளாது. குட்டியே தாய்க் குரங்கைப் பற்றிக்கொள்ள வேண்டும். மரத்திற்கு மரம் தாய் தாவும்போது குட்டி சிறிதும் சோர்வில்லாமல் தாயைப் பற்றிக் கொண்டிருக்கும். பற்றிக் கொள்ளாமல் பிடியை விட்டுவிட்டால் அந்தக் குட்டியையே கொன்றுவிடும் என்று சொல்வார்கள். ஆனால் பூனையோ அப்படி அன்று. பூனைக் குட்டிக்குக் கவலை சிறிதும் கிடையாது. தாய் எங்கே போனாலும் தன்னுடைய குட்டியைத் தன் வாயில் கௌவிக் கொண்டு எடுத்துச் செல்லும். குரங்கினத்தில் குட்டிக்குக் கவலை. பூனை இனத்தில் தாய்க்குக் கவலை.

முருகன் கவலை

உலகத்தில் உள்ள ஆருயிர்கள் எல்லாம் குழந்தைகள். அந்தக் குழந்தைகளுக்குத் தாயாக இருப்பவன் இறைவன்.

ஆருயிர்கள் தம்முடைய முயற்சியினால் இறைவனை அடைய வேண்டுமென்று பல வகையான சாதனங்களை மேற்கொண்டு உயர்ந்து நின்று இறைவனை அடைய வேண்டும். இதுதான் இயற்கை. ஆனால் உயிர்களை ஆள வேண்டும் என்ற கவலை முருகனுக்கு உண்டாயிற்று. தாய்ப் பூனையைப் போல அவன் பேரருளுடையவனாக இருக்கிறான். சிறந்த வள்ளல்கள் தம்மிடம் உள்ள பொருளை வாங்கிக்கொள்ள இரவலர்கள் வரவேண்டுமே என்று கவலைப்பட்டுக் கொண்டிருப்பார்கள். தலையில் சுமையை வைத்திருக்கும் ஒருவன் அந்தச் சுமையை இறக்கும் இடம் எங்கே என்று தேடுவது போல, தம்முடைய பொருளை இரவலர் கள் வாங்கிக் கொள்ள வேண்டுமே என்று மிக்க ஆர்வத்துடன் அவர்களை நாடி இருப்பார்கள். இரவலர்களுக்கு, 'நமக்குப் பணம் கொடுப்பார் யார்?' என்று கவலை இருப்பது போலவே, நல்ல வள்ளலுக்கு, 'நம்மிடம் வந்து வாங்குவது யார்?' எ ன்ற கவலை இருக்கும். முருகப்பெருமானாகிய வள்ளல் தன்னுடைய பேரருளை வள்ளி நாச்சியாருக்கு வழங்க வேண்டுமே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தான். ஆகையால் அவளைத் திருடிச் செல்ல வேண்டுமே என்று கவலைப்பட்டான் என இந்தப் பாட்டில் கூறுகிறார்.

செம்மான் மகளைக் களவுகொண்டு
வரும் ஆகுலவனை.

ஆகுலவன் – கவலை உள்ளவன்.

களவும் கற்பும்

வள்ளிநாயகியை முருகன் யாரும் அறியாமல் எடுத்துச் சென்றான். தமிழில் இரண்டு வகை மணம் உண்டு. களவு, கற்பு என்று அவற்றைச் சொல்வார்கள். இவற்றைக் கைகோள் என்று கூறுவர். கைகோள் – ஒழுக்கம்.

பல பிறவிகள் தோறும் தொடர்ந்து வந்த தொடர்பு காரண மாக ஆடவனும் மகளிரும் தனியே ஒருவரை ஒருவர் காண் பார்கள்.

நல்ல ஊழின் தூண்டுதலால் இந்தச் சந்திப்பு நிகழும். அவர்கள் பல பிறவிகளில் காதலர்களாக இருந்தமையின் கண்ட

பொழுதே அவர்களிடையே காதல் தோன்றும். பின்பு அவர்கள் அடுப்பாரும் கொடுப்பாரும் இல்லாமல் அந்தக் காதலை வளர்த்துக் கொண்டு வருவார்கள். அதன் பிறகே காதலன் முயற்சி செய்து யாவரும் அறியக் காதலியைத் திருமணம் செய்துகொள்வான். திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு அவர்கள் ஒழுகும் ஒழுக்கத்தைக் களவொழுக்கம் என்று சொல்வர். அந்தக் களவுக் காதல் தமிழ் நூல்களில் சிறப்பாகப் பேசப்பெறும். மதுரையில் எழுந்தருளியிருக்கும் ஆலவாய்ப் பெருமான் களவியல் என்று அறுபது சூத்திரங்களால் ஓர் இலக்கண நூலை அளித்திருக்கிறான். களவுக் காதலைப் பற்றிய இலக்கணம் அதில் இருக்கிறது. கல்யாணம் ஆன பிறகு வாழும் வாழ்வு கற்பொழுக்கம் ஆகும். களவின் வழியே வந்த கற்பு என்றும், களவின்வழி வாராக் கற்பு என்றும் இரண்டு வகை உண்டு. அவற்றில் களவின் வழி வந்த கற்பே சிறந்தது. அதாவது, யாரும் அறியாமல் தனியே காதலர்கள் ஒன்றுபட்டு அப்பால் திருமணம் செய்துகொள்வதே சிறப்புடையதென்பது தமிழ் மரபு.

முருகப்பெருமான் தமிழ்நாட்டினரால் போற்றப்படும் தெய்வம்; தமிழர் வாழ்விற்குச் சிறப்பு அருளும் பெருமான். அவன் களவு மணம், கற்பு மணம் ஆகிய இரண்டையும் செய்து கொண்டருளினான். தேவயானையைக் களவின் வழி வாராத கற்புத் திருமணம் செய்து கொண்டான். இந்திரனும் தேவர்களும் தேவயானையை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று ஆண்டவனிடம் வேண்டிக்கொள்ள, அவன் அந்தப் பெருமாட்டியைத் திருப்பரங்குன்றத்தில் திருமணம் செய்து கொண்டான். இந்த வரலாறு கந்த புராணத்தில் வருகிறது. இந்த மணம் கற்பு மணம்.

வள்ளி மணம் களவு மணம்

தமிழ்ப் பெருமாட்டியாகிய வள்ளிநாயகியை மணம் செய்து கொண்டது களவுக் காதல் முறை. அடுப்பாரும், கொடுப்பாரும் இல்லாமல் தானே வலிந்து சென்று அந்தப் பெருமாட்டியிடம் முருகன் காதல் செய்தான். ஆதலின் தமிழ் மரபுக்கேற்ற வகையில் அது அமைந்தது. தந்தையார் இலக்கணம் செய்யப் பிள்ளையாகிய முருகன் இலக்கியமாக நின்றான். இந்தச் செய்தியைப் பழைய சங்க நூலாகிய பரிபாடலில் உள்ள ஒரு பாட்டிலே காணுகிறோம்.

பரிபாடலில் முருகனைப் பற்றிய பல பாடல்கள் உண்டு. திருப்பரங்குன்றத்தில் எழுந்தருளியிருக்கும் பெருமான் பெருமையைச் சொல்கிற பாடல்களில் ஒன்று, வள்ளி நாயகியின் திருமணப் பெருமையைச் சொல்கிறது. அது இப்போதுள்ள பரிபாடல் பதிப்பில் 9-ஆவது பாடலாக அமைந்திருக்கிறது. அந்தப் பாடலில் ஒரு காட்சி வருகிறது. பரிபாடலுக்கு உரை வகுத்த பரிமேலழகர் அங்கே, 'கைகோள் இரண்டிற்கும் உரிய தேவியார் காதலிக்கப் பாடு கூறி வாழ்த்தி, மேல் வள்ளியது சிறப்பும் அவன் பரங்குன்று அவட்கு ஒத்தவாறும் கூறலுறுவார், நான்மறைப் புலவரை நோக்கித் தமிழது சிறப்புக் கூறுவாராய்ப் பொதுவகையான் அவற்றிற்குக் காரணம் கூறுகின்றார்' என்று முன்னுரை எழுதுகிறார்.

நான்மறை வல்ல புலவருக்குப் பிரமம் முதலிய எட்டுவகைத் திருமணங்கள் தெரியும். அவற்றில் ஒன்று காந்தர்வ விவாகம். அது போன்றது களவு மணம் என்று சொல்வார்கள். காந்தர்வ மணத்தைவிடக் களவு மணம் பலவகையில் சிறந்தது. களவு மணத்தின் சிறப்பை உணராத நான்மறைப் புலவர்களுக்கு அதன் பெருமையை உணர்த்தும் வகையில் பரிபாடற் பாட்டு இருக்கிறது.

களவு மணம் செய்து கொள்பவர்கள் பின்பு நாடறிய வரைந்து கொண்டு கற்பு வாழ்க்கை வாழ்வார்கள். அதைக் களவின் வழிவந்த கற்பு என்பார்கள். அவ்வாறு இன்றி நேரே திருமணம் செய்து கொள்வதைக் களவின் வழி வாராக் கற்பு என்பர். இவ்விரண்டினும் முன்னையது சிறந்தது என்பது தமிழ் மரபு. இதை முதலில் புலவர் சொல்கிறார்.

"நான்மறை விரித்து நல்லிசை விளக்கும்
வாய்மொழிப் புலவீர், கேண்மின்; சிறந்தது
காதற் காமம்; காமத்துச் சிறந்தது,
விருப்போர் ஒத்து மெய்யுறு புணர்ச்சி."

'நான்கு வேதங்களை விரித்து அதன் நல்ல இசையை விளக்குகின்ற வாய்மொழியை உடைய புலவர்களே, கேளுங்கள்; இருவகைக் காமத்திற் சிறந்தது களவுக் காதலாகிய காதற் காமம். அது காதலர்கள் தம்முள் உள்ளம் ஒத்து ஒன்றுபடுவது' என்பது இதன் பொருள்.

மேலும் அந்தக் களவுக் காமத்தின் சிறப்பைச் சொன்னவர்,

"தள்ளாப் பொருள்இயல்பில் தண்டமிழாய் வந்திலார்
கொள்ளார்இக் குன்று பயன்"[1]

என்று கூறிப் பின்பு வள்ளி நாயகி களவுக் காதலால் சிறப்புப் பெற்றதைப் பாடுகிறார். 'இனி, அக்களவிற் புணர்ச்சியை உடைமையான் வள்ளி சிறந்தவாறும், அத் தமிழை ஆய்ந்தமையான் முருகன் சிறந்தவாறும் கூறுகின்றார்' என்று பரிமேலழகர் இங்கே எழுதுகிறார்.

இந்தச் சிறப்பான களவு மணத்தால் வள்ளிநாயகியை மணந்தமையால் இங்கே அருணகிரி நாதர்

செம்மான் மகளைக் களவுகொண்டு
வருமாகுலவனை

என்றார்.

நல்ல களவு

களவு கொண்டு வரும் செயல் பொதுவாகத் தவறுதான். ஐம்பெரும் பாதகங்களில் ஒன்று அது. ஆயினும் பிறர் பொருளை அவர் அறியாமல் கைக்கொள்ளும் களவுக்கும் இந்தக் களவுக்கும் வேறுபாடு உண்டு. களவில் நல்ல களவும் உண்டு. ஒருத்தி தன் கணவனோடு கோபித்துக் கொண்டு உயிரை விட்டுவிடத் துணிந்தாள். அதற்காக நஞ்சை வாங்கிப் பின்பு உண்போமென்று ஓரிடத்தில் மறைவாக வைத்திருந்தாள். அதனை அறிந்த அவள் தோழி அவள் அறியாமல் அதைக் களவில் எடுத்துச் சென்று கொட்டிவிட்டாள். அவள் செய்தது களவுதான். ஆனால் அதனால் நன்மைதான் விளைந்தது. நஞ்சுண்டு சாக எண்ணியிருந்த பெண்மணி அதை உண்டிருந்தால் உயிர் போயிருக்கும். ஆனால் அதனைக் காணாமல் வருந்திப் பிறகு சினம் ஆறி, ஆண்டவனே தன்னைக் காப்பாற்றினான் என்று ஆறுதல் பெற்றாள்.

இந்தக் களவினால் நன்மையே விளைந்தது. திருவள்ளுவர் வாய்மையைப் பற்றிச் சொல்லும்போது,

---

1. இப்புணர்ச்சியை வேண்டுகின்ற பொருள் இலக்கணத்தையுடைய தமிழை ஆராயாத தலைவர் களவொழுக்கத்தைக் கொள்ளமாட்டார்.

''பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்''

என்று சொல்கிறார். குற்றமற்ற நன்மையை விளைவித்தால் பொய்யையும் மெய்யாகவே எண்ணவேண்டும் என்பது அந்தக் குறளால் தெரியவருகிறது. அதுபோலவே களவும் நன்மை பயப் பதனால் ஏற்றுக்கொள்வதற்குரியது என்று சொல்லலாம் அல்லவா?

இறைவனையே கள்வன் என்று சொல்வார்கள். அன்பர்களின் அறியாமையை அவர்கள் அறியாமலே களவு கொள்ளும் கருணை உடையவன் அவன். குழந்தையின் கையில் கத்தியிருக்கிறது. அது தன் கையையோ காலையோ வெட்டிக்கொள்ளுமே என்று அஞ்சு கிறாள் தாய். நல்ல வேளையாக அது சோர்ந்து போய்த் தூங்கத் தொடங்குகிறது. அந்தச் சமயத்தில் அந்தக் குழந்தை அறியாமல் அன்னை அதை எடுத்துக் கொள்கிறாள். அது ஒரு வகையில் களவுதான். ஆனால் அந்தக் களவினால் குழந்தைக்கு நன்மையே விளைகிறது. இறைவன் அந்த வகையில்தான் நலம் செய்கிறான்.

ஸ்ரீ ருத்திரம் இறைவனைக் கள்வனென்றே சொல்கிறது; சாதாரணக் கள்வன் அன்று; கள்வர் தலைவன் என்று சொல்கிறது.

''தஸ்கராணாம் பதயே நமோநம''

என்பது ருத்திரம். திருஞான சம்பந்தப் பெருமான் சிவபிரானை,

''உள்ளம்கவர் கள்வன்''

என்று பாடினார்.

வள்ளிநாயகியைத் தடுத்தாட்கொண்ட முருகன் அப்பிராட்டி தன்னை இன்னானென்று அறியாதிருந்தும் அவளுக்கு அருள் செய்ய முந்தினான். அவளை யாரும் அறியாமல் எடுத்துச் சென்று திருத்தணிக்குச் சென்றான். அவளைக் களவிலே மணக்க வேண்டுமே யென்ற கவலையோடு இருந்தான். உயிர்கள் உய்ய வேண்டுமென்ற கவலை இறைவனுக்கு இருக்கிறது. தன் மகன் படித்து முன் னுக்கு வர வேண்டுமே என்ற கவலை தந்தைக்கு இருக்கிறது. ஆனால் அந்தப் பிள்ளைக்கு அவ்வளவு கவலை இருப்பதில்லை.

வள்ளி நாயகியைத் தன்னிடத்தைச் சார்ந்து வாழும்படி அருள் செய்ய வேண்டுமென்ற கவலை முருகனுக்கு இருந்தது. திருமாலுக்கு மருமகனாக உள்ள அப்பெருமான் திருமகளாகிய

சிவந்த மான் ஈன்ற மகளைக் களவில் எடுத்துக் கொண்டு வர வேண்டுமென்ற கவலையோடு இருந்தவன் என்று அருணகிரி நாதர் சொல்கிறார்.

கருமால் மருகனைச் செம்மான் மகளைக்
களவுகொண்டு
வரும் ஆகுலவனை.

சேவற் கொடியோன்

ஆண்டவன் வெற்றியை உடையவன். வெற்றிக்கு அறிகுறி யாக அவன் திருக்கரத்தில் சேவல் கொடியிருக்கிறது. சேவலைக் கையிலே கொண்டவன் என்ற பொருளில்,

சேவற் கைகோளனை

என்கிறார் அருணகிரியார்.

சேவல் முருகப் பெருமானுடைய தனிப் பெருமையைக் காட்டுகிறது. பகைவரை அழித்துக் கொல்லுதல் உலகத்து மன்னர்களுக்கு இயல்பு. ஆனால் இங்கே முருகப்பெருமான் தன்னை எதிர்த்த சூரபன்மனை அடியோடு அழிக்கவில்லை. அவனுடைய உடம்பு இரண்டு பகுதியாகப் பிரிய ஒரு பகுதியை மயிலாகவும், மற்றொரு பகுதியைக் கொடியாகவும் மாற்றி ஏற்றுக் கொண்டான். அவன் திருக்கரத்திலுள்ள சேவல் முருகப் பெருமானுடைய வீரத்தைக் காட்டி, அவனைச் சேர்ந்த பகைவர் கள்கூட நன்மை பெறுவார்கள் என்பதைப் புலப்படுத்துகிறது. சேவலைக் கையில் கொண்டமையால் அவன் பெருவீரன், பெருங்கருணையாளன் என்பதை உணர்கிறோம்.

வேலன்

அவன் திருக்கரத்தில் ஏந்தியுள்ள படைக்கலம் வேல். அந்த வேல் போரில் புகுந்தால் வெற்றியைத் தரும் தன்மை உடையது. மாமரமாக நின்ற சூரனைச் செற்றது அது. அவன் முருகப் பெருமானை எதிர்த்து நின்றான். தேவலோகத்திலுள்ள அமரர்கள் மீண்டும் பழைய வாழ்வு பெற்று உய்யவேண்டுமென்று கருதியே வடிவேற்பெருமான் சூரனோடு போரிட்டான். அவனுக்கும் சூரனுக்கும் நேரே பகை ஒன்றும் இல்லை. தன்னிடத்தில் வந்து

முறையிட்ட தேவர்கள் பழைய வாழ்வு பெறவேண்டுமென்ற கருணையினால் தன்னோடு பொருத சூரனாகிய மாமரத்தைச் செற்றான். அப்படிச் செற்றதற்குக் கருவியாக இருந்தது அவன் கையில் உள்ள வேல். அது ஞான சக்தி என்பதைப் பலமுறையும் பார்த்து வந்திருக்கிறோம். சேவலைக் கையிலே வெற்றிக் கொடியாக உயர்த்திய எம்பெருமான் பெரிய போரைச் செய்து அந்த வெற்றியை வாங்கித் தந்த வேலாயுதத்தை ஒரு திருக்கரத்தில் ஏந்தியிருக்கிறான்.

வானம்உய்யப் பொருமாவினைச் செற்ற போர் வேலனை.

செங்கோட்டு வளம்

இத்தகைய முருகன் திருச்செங்கோட்டில் எழுந்தருளியிருக் கிறான். நீர்வளமும், நிலவளமும் பொருந்தியது திருச் செங்கோடு. அருணகிரியார் காலத்தில் அது அப்படி இருந்தது போலும்.

மரங்களில் அடிக்கடி நீர் வேண்டியிருப்பது கமுக மரம். பனை மரத்திற்குச் சிறியதாக இருக்கும்போது தண்ணீர் விட்டால் போதும். வளர்ந்த பிறகு விட வேண்டாம். தென்னை மரத்திற்குச் சிறிதாக இருக்கும் போது நன்றாகத் தண்ணீர் விட்டு வளர்க்க வேண்டும். வளர்ந்த பிறகு அவ்வப்போது தண்ணீர் விட வேண்டும். கமுக மரத்திற்கு எப்போதும் தண்ணீர் விட்டுக் கொண்டே இருக்க வேண்டும். ''கை காய்த்தால் கமுகு காய்க்கும்'' என்பது ஒரு பழமொழி. தண்ணீர் விட்டுவிட்டுக் கை காய்ப்புப் பெற வேண்டுமாம். அடிக்கடி மழை பெய்யும் இடத்தில்தான் கமுக மரம் வளர்ந்துவரும். இன்னும் காய்க்காத பல கமுக மரங்கள் திருச்செங்கோட்டில் நிறைய வளர்ந்திருக்கின்றன. அது மாத்திரம் அன்று. பல பழங்களைத் தரும் மாமரங்களும் வளர்ந்திருக்கின்றன. முருகப் பெருமான் இருக்கும் இடத்தில் மாமரங்கள் வளர்வதற்கு ஒரு பொருத்தம் உண்டு. அப்பெருமான் ஒரு மாம்பழத்தைப் பெற வேண்டுமென்று எண்ணி உலகத்தை வலம் வந்தான். அது கிடைக்காமையினால் பழனி மலை ஏறி நின்று தவக்கோலத்துடன் விளங்குகிறான். அத்தகைய முருகப் பெருமானுக்கு எப்பொழுதுமே நிவேதனம் பண்ணும்படி கனிகளைத் தருகிற மாமரங்கள் திருச் செங்கோட்டில் இருக்கின்றனவாம். நீர் வளத்தை நன்கு தெரி

விக்கும் சிறந்த கமுக மரங்களும், முருகப் பெருமானுக்கு உகந்த பழங்களைத் தரும் மாமரங்களும் இணைந்து பொழிலாக நிறைந்திருக்கிற திருச்செங்கோட்டில் அவன் எழுந்தருளியிருக் கிறான். அவனை வாழ்த்துவது மிகவும் நல்லது.

கன்னிப்பூகமுடன்
தருமா மருவு செங்கோடனை வாழ்த்துகை சால நன்றே.

'நாலாயிரம் கண் படைத்திலனே என்று நான் இரங்கினேனே! அப்படி இரங்கி என்ன பயன்? இருப்பதைக் கொண்டு திருப்தி யுறலாமே. கண்கள் பல இல்லாவிட்டாலும் எங்கே சென்றாலும், எல்லாக் காலத்திலும் அவன் புகழை வாழ்த்தலாமே. ஒரு வாயாக இருந்தாலும் அவன் புகழ் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் மெல்ல மெல்லச் சொல்லலாம்; நிறையச் சொல்வதற்கு ஏற்ற கருவி வாய். ஆகையால் அது இல்லையே, இது இல்லையே என்று குறைபடுவதைவிட நமக்குள்ள ஒன்றைக் கொண்டு பெரும் பயன் ஈட்டலாம்' என்று சமாதானம் செய்து கொள்வாரைப் போல இந்தப் பாட்டைப் பாடுகிறார்.

கருமான் மருகனைச் செம்மான் மகளைக் களவு கொண்டு
வரும்ஆ குலவனைச் சேவல்கைக் கோளனை வானம்உய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வே லனைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை வாழ்த்துகை சாலநன்றே.

நயம்

இந்தப் பாட்டில் ஒரு நயம் இருக்கிறது. தமிழில் சொற் களைக் கொண்டு சில வகையான நயங்களைப் புலவர்கள் காட்டு வார்கள். பொருளின் அருமைப்பாட்டைப் பொருள் நயம் என்றும், சொற்களின் அருமையைச் சொல் நயம் என்றும் சொல்வது வழக்கம். பொருளாலும் சொல்லாலும் பெரும் புலவர்கள் தம் முடைய பாடல்களின் சுவையை மிகுதியாகும்படி செய்வார்கள். இந்தப் பாட்டில் சொல் நயம் ஒன்று அமைந்திருக்கிறது. மேலாகப் பார்க்கும்போது ஒருவகையான பொருளும், உள்ளே புகுந்து பார்க்கும்போது இயல்பான பொருளும் புலப்படச் சொல்வது ஒரு வழக்கம். இங்கே சாதிப் பெயர்கள் சொல்லளவில் தோற்றும் படியாக அருணகிரியார் பாடியிருக்கிறார். இதைத் தொனி என்று

சொல்வதும் உண்டு. சாதிப் பெயர்கள் இந்தப் பாட்டில் தொனிக் கின்றன. ஆனால் இயல்பான பொருளுக்கும் இந்தத் தொனிக்கும் சம்பந்தம் இல்லை. முதலில்,

கருமான் மருகனை

என்றார். கருமான் என்பது இரும்பு வேலை செய்கின்ற தொழி லாளிக்குப் பெயர்.

செம்மான் மகளை.

செம்மான் என்பது தோல்வேலை செய்கிறவர்களுக்குப் பெயர். திருநெல்வேலிப் பக்கத்தில் இன்றும் அந்தப் பெயரால் அழைக் கிறார்கள். சர்மகாரர் என்பதன் திரிபாக இருக்கலாம். கருமா னுடைய மருகனை, ஒரு செம்மானுக்கு மாப்பிள்ளையை என்று தொனிக்கும்படி பாடினார் . மேலே,

களவுகொண்டு வரும் ஆகுலவனை

என்றார். ஆகுலவன் என்பது ஒருவகை வேடனுக்குப் பெயர்.

சேவல் கைக்கோளனை.

கைக்கோளர் என்பது செங்குந்தர் குலப்பெயர். வேலன் என்பது மலைவாழ் சாதியாரில் ஒருவகையினருடைய பெயர். கருமான், செம்மான், ஆகுலவன், கைக்கோளன், வேலன் என்ற சாதிப் பெயர்கள் இந்தப் பாட்டில் தொனிக்கின்றன.

சாதிப்பிரிவு

இப்போது சாதிப் பிரிவை ஒழிக்கவேண்டுமென்ற முயற்சி தலைப்பட்டிருக்கிறது. சாதி அபிமானம் இருப்பது நல்லதுதான்; ஆனால் சாதிப் பகை இருத்தல் கூடாது என்பது நம்முடைய தலைவர்களின் கருத்து. பழங்காலத்தில் சாதிப் பிரிவினை ஒருவர் மீது ஒருவர் பகை கொள்வதற்காக அமையவில்லை. பெரும் கூட்டமாக இருந்தால் ஒரு காரியத்தைச் சாதிக்க முடியாது என்று கருதிச் சிறுசிறு குழுக்களாக அமைத்து வேலை செய்வது எல்லாக் காலத்திலும் வழக்கம். எப்போதும் ஓரிடத்தில் சக்தி குவிந்திருப்பதைவிடப் பரவலாக இருப்பது நல்லது என்று சொல்கிறார்கள். அந்தப் பரவல் முறையை மக்கள் சமுதாயத்தில் மேற்கொண்டு வகுப்பு வகுப்பாகப் பிரித்துக் கொண்டார்கள்.

அந்தக் காலத்தில் அது ஆக்கத்தைத் தந்தது. இப்போதோ ஒரு சாதி மற்றொரு சாதியைப் பகைக்கிற அழிவு முறை வந்துவிட்டது. பழங்காலத்தில் அந்த அந்தச் சாதிக் கூட்டத்துக்கு என்றே தனி வீதிகள் அமைந்திருக்கும். தொழிலாளியின் மகன் தொழிலாளி யாக இருந்ததனால் அவனுடைய வாழ்க்கையில் மாற்றங்கள் அமைவது இல்லை. பரம்பரை பரம்பரையாக அவனுக்கு என்று தொழிலும், அந்தத் தொழிலுக்குரிய நன்மைகளை அநுபவிக்கின்ற உரிமையும் இருந்தன. பொதுவான காரியங்களில் எல்லாச் சாதியினரும் பங்கு கொண்டு உழைத்தார்கள். ஊரிலுள்ள கோயி லில் விழா எடுக்க வேண்டுமானால் ஒவ்வொரு சாதியினருக்கும் வரையறையாக ஒரு தொண்டு இருக்கும். அதனை அவர்கள் பரம்பரை பரம்பரையாகச் செய்து கொண்டு வருவார்கள். வெவ் வேறு சாதியாக இருந்தாலும் எல்லோருக்கும் கோயிலில் உரிமை யுண்டு என்ற பெருமையுடன் வாழ்ந்தார்கள். வேற்றுமையில் ஒற்றுமை (Unity in diversity) என்ற இந்த முறை அந்தக் காலத்துச் சமுதாயத்தில் இருந்து வந்தது.

உடம்பில் வெவ்வேறு அவயவங்கள் இருப்பதனால் பல வகையான தொழில்களைச் செய்வதற்குரிய வாய்ப்பு நமக்குக் கிடைப்பது போல, சமுதாயத்தில் வெவ்வேறு பிரிவுகள் ஒற்றுமை யோடு வாழ்கின்ற வாழ்வு இருந்தமையினால் நல்ல காரியங் களைச் செய்ய முடிந்தது. இப்போது ஓர் உறுப்புக்கும், மற்றோர் உறுப்புக்கும் சண்டை வந்ததுபோலச் சாதிக்குச் சாதி பகை தோன்றினமையின் சாதியே வேண்டாம் என்ற எண்ணம் தோன்று கிறது. மேல் சாதி, கீழ்ச்சாதி என்ற வேறுபாடு வந்ததே இதற்கு முக்கியமான காரணம்.

பழங்காலத்தில் நான் இன்ன வகுப்பு என்று எண்ணுவதில் எல்லோரும் பெருமை கொண்டிருந்தார்கள். ஒவ்வொரு வகுப் பினரும் தம் வகுப்புக்கு மூலமாக ஏதாவது ஒரு கடவுளைச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். பழங்காலத்தில் ஒவ்வொரு வகுப்புக்கும் தனிச் சங்கம் இருந்தது. ஒவ்வொரு வகுப்புக்கும் தனியே ஒரு பெயர் உண்டு. கைக்கோளர்கள் என்னும் சாதியினர் முருகப் பெருமானுடைய தம்பியாகிய வீரபாகுவின் குலத்தவர் என்று சொல்லிக் கொள்வார்கள். தோல் தைப்பவர்கள் தங்களை அருந்ததியின் குலத்தவர்கள் என்று சொல்லிக் கொள்வார்கள்.

உலோக வேலை செய்கிறவர்கள் விசுவகர்மாவினுடைய பரம்பரை என்று சொல்லிக் கொள்வார்கள். இப்படி எல்லாச் சாதிகளுக்கும் இறைவனோடு தொடர்புடைய வரலாறுகள் உண்டு. சமுதாயத்திலுள்ள சாதிகள் எல்லாம் இறைவனோடு தொடர்புடையன என்ற எண்ணமும், அதனால் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் பெருமிதமும், எல்லோரும் சேர்ந்து சமுதாயத்தை வளர்க்க வேண்டுமென்ற ஒற்றுமை நோக்கும் இருந்தன.

அந்தக் காலத்தில் தோன்றினவர் அருணகிரியார். சாதிப் பெயர்களைத் தொனிக்கும்படி வைத்து இந்தப் பாட்டைப் பாடினார். கொல்லனாகிய கருமானையும், தோல் தைக்கும் தொழிலாளியாகிய செம்மானையும், வேடனையும், நெய்தல் வேலையை உடைய கைக்கோளனையும், மலைவாசியாகிய வேலனையும் இந்தப் பாட்டில் நினைப்பூட்டுகிறார்.

இறைவனை வாயார வாழ்த்துவது எல்லோருக்கும் எளிய காரியம். அதைச் செய்துகொண்டு வாழவது எல்லோருக்கும் நல்ல செயல் என்பது இந்தப் பாட்டின் கருத்து.

★

கருமான் மருகனைச் செம்மான்
மகளைக் களவுகொண்டு
வரும்ஆ குலவனைச் சேவல்கைக்
கோளனை வானம்உய்யப்
பொருமா வினைச்செற்ற போர்வே
லனைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை
வாழ்த்துகை சாலநன்றே.

(கரிய நிறம் பெற்ற திருமாலின் மருகனை, செந்நிறம் பெற்ற மான் உருவில் வந்த திருமகளுடைய மகளாகிய வள்ளி நாயகியைப் பிறர் அறியாமல் எடுத்து வரும் கவலையை உடையவனை, சேவலாகிய கொடியைக் கையிலே கொண்டவனை, தேவலோகத்திலுள்ள அமரர்கள் உயிர் பிழைக்கும் வண்ணம் அவர்களோடு பொருத சூரபதுமனாகிய மாமரத்தை அழித்த போரில் சிறந்த வேலாயுதமுடைய கடவுளை, குலை ஈனாத கமுகமரங்களுடன் பழங்களைத் தருகின்ற மாமரங்கள் பொருந்திய திருச்செங்கோட்டில் எழுந்தருளியுள்ள முருகனை வாழ்த்துதல் வாழ்த்துபவருக்கு மிகவும் நன்றாகும்.

திருமகள் மானாக வள்ளிமலையில் உலவ, திருமால் சிவமுனிவராக இருந்து தவஞ் செய்தவர் அந்த மானைக் கண்டு காமுற்று நோக்க, அதனால் அம்மான் கருவுற்று வள்ளிநாயகியை ஈன்றது. அதனால், 'செம்மான் மகள்' என்றார்.

கோள் – கொள்ளுதல். கைக்கோளனை – கையிலே கொள்ளுதலை உடையவனை. வானம் – தேவர்; ஆகுபெயர். பொருமா என்றாலும் மாவாய் நின்ற சூரன் அப்படி நிற்பதற்கு முன்பு பொருததையே குறித்தது. தரு மா – கனிகளைத் தரும் மாமரம்; தருவாகிய மாமரம் என்றும் கொள்ளலாம். வாழ்த்துகை நாவின் செயல்; அது மனிதன் பெற்ற சிறப்பான கரணமாதலின் அதன் செயல் சால நன்றாயிற்று. நன்று – நன்மை தருவது.)

இது கந்தர் அலங்காரத்தில் வரும் 91–ஆம் பாட்டு.

தண்டையம் புண்டரிகம்

1

நீர் வேட்டவன்

நெடுநாள் பல இடங்களுக்கும் அலைந்து விடாய்த்தவன் ஒருவன் போன இடங்களிலெல்லாம் நல்ல தண்ணீர் கிடைக்காமல் மிகவும் துன்புற்றான். அழுக்கான புனலும், உப்பான புனலும், நாற்றமான புனலும் அவனுக்கு அகப்பட்டனவேயன்றி, தூய தண்ணீர் அவனுக்குக் கிடைக்கவே இல்லை. நல்ல தண்ணீர் எங்கே கிடைக்கும் என்று அவன் நாடித் தேடிக் கொண்டே இருந்தான். யாரோ ஒருவன் அந்தப் பக்கத்திலே நல்ல தண்ணீர் இல்லையென்றும், நெடுந்தூரம் சென்றால் குறிப்பிட்ட ஓரிடத்தில் தெளிவான பொய்கையில் நல்ல தண்ணீர் கிடைக்கும் என்றும் சொன்னான். உணவு கிடைப்பதைவிட நீர் கிடைப்பது அவனுக்கு அரிதாக இருந்தது. அதனால் எப்படியாவது அந்தப் பொய்கையை அடைந்துவிட வேண்டுமென்று அவன் முயற்சி செய்தான். அந்தப் பொய்கை இருக்கும் இடத்தைத் தேடிச் சென்றான். அதைப் பற்றிச் சொல்வார்கள் யாரேனும் இருந்தால் இன்னும் விளக்கமாக அவர்களிடம் அந்த வழியைக் கேட்டுத் தேடிச் சென்றான். அவன் தன் எண்ணத்தில் அந்தப் பொய்கையைப் பற்றிய கற்பனைகளை எல்லாம் சேர்த்துக் கொண்டான். யாரேனும் அங்கே போய்த் தண்ணீர் கொண்டு வந்திருந்தால் அவரிடம் சில மணி நேரம் உட்கார்ந்து அந்தப் பொய்கையைப் பற்றிய வருணனைகளைக் கேட்டான். அந்தத் தண்ணீர் தேன்போல இருக்கும் என்றும், மிகவும் குளிர்ந்து இருக்கும் என்றும், உண்டால் பல காலம் தாகமே எடுக்காத வகையில் அது நலம் செய்யும் என்றும் அவர்கள் சொன்னார்கள். இப்படி அன்பர்கள் சொல்லச் சொல்ல அவனுக்கு மேலும் ஆசை வளர்ந்துகொண்டே வந்தது. முயற்சியும் அதிகமாயிற்று.

பொய்கை நீர்

கடைசியில் அந்தப் பொய்கையை அவன் அடைந்தான். அவனைப் போலவே வேறு சிலரும் நல்ல தண்ணீர் கிடைக்காத தொல்லையினால் பல இடங்களுக்குச் சென்று அலைந்து கடைசியில் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். நெடுந் தூரத்தில் வரும்போதே அந்தப் பொய்கையிலிருந்து தண்மை யான காற்று வீசியது. பல காலமாகக் காணவேண்டுமென்ற ஆசை இருந்தமை யினால் தெளிவாகத் தெரிந்த அந்தப் பொய்கையை நெடுந்தூரத் தில் காணும்போதே அவன் உள்ளத்தில் உவகை உண்டாயிற்று. நல்ல தண்ணீர் கிடைக்குமா என்று ஏங்கி இருந்தவனுக்கு இப் போது அதனைக் காணுகின்ற பேறு கிடைத்தது. ஓடி வந்தான். அதனை நெருங்கிவிட்டான். அதன் அருகில் சென்று படியில் இறங்கினான். இரண்டு கையினாலும் மொண்டான். காணும் போதே கண் குளிர்ந்தது. இப்போது அதை மொள்ளும் போது கையும் குளிர்ந்தது. இரண்டு கையினாலும் மொண்டவன் அப்படியே உண்டான். அவன் இன்பத்தை என்னவென்று சொல்வது! அவனுடைய ஆயுளில் இதுவரையிலும் அத்தகைய தண்ணீரை அவன் உண்டதே இல்லை. உணவு கொள்ளவும் வேண்டாமல் இந்தத் தண்ணீரையே பருகிக் கொண்டிருக்கலாம் போல் இருக் கிறதே என்று அவன் எண்ணினான். மறுபடியும் கை நிறைய எடுத்து உண்டான். பலமுறை உண்ட பிறகு வயிறு நிரம்பிவிட்டது. அந்தப் பொய்கையின் கரையிலே உட்கார்ந்து கொண்டான். அவன் நல்ல தண்ணீருக்கு ஏங்கி எங்கெங்கோ அலைந்தானே, அந்தப் பழைய வரலாறுகள் எல்லாம் இப்போது நினைவுக்கு வந்தன.

பழைய அநுபவம்

மிகவும் ஆழமாகக் கிணற்றைத் தோண்டிப் பாதாளத்தி லிருந்து இப்போதும் பலவிடங்களில் தண்ணீரை எடுக்கிறார்கள். அப்படி ஆழமான கிணறுகளை வெட்டினாலும் சில சமயங்கள் மழை இன்மையினால் அந்தக் கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் போய்விடுகிறது. பதிற்றுப் பத்து என்ற நூலில் கொங்கு நாட்டி லுள்ள சிலவகைக் கிணறுகளைப் பற்றிய செய்தி வருகிறது.

அங்கே மிகவும் ஆழமான கிணறுகள் இருக்கின்றன. கிணற்றில் கயிற்றை விட்டுத் தண்ணீரை மொண்டு இழுக்க வேண்டும். இழுக்க இழுக்க மேலே கயிறு வந்துகொண்டிருக்குமேயன்றித் தண்ணீரைக் காண்பது எளிதன்று. ஆகையால் அதைக் 'கயிறு குறுமுகவை' என்று ஒரு புலவர் சொல்கிறார்.

இப்படியுள்ள கிணறுகளில் தண்ணீரை எடுத்துப் பார்த்துக் கிடைக்காமல் துன்புற்றவன் அவன். இப்போது கண்ணுக்கு முன்னாலே மிக விரிவாகப் பெரிய பொய்கை தண்ணீர் நிரம்பிக் காட்சி அளித்தது. இத்தகைய நீர் நிலையை அவன் கண்டதே இல்லை. யாரும் தடுத்து நிறுத்தவில்லை. சுதந்தரத்துடன் பொய்கையில் இறங்கிக் கை நிறைய மொண்டு, வாய் நிறையக் கொண்டு, வயிறு நிறைய உண்டான். இப்போது, இன்னும் கொஞ்சம் வயிறு குறைந்தால் தண்ணீரை எடுத்துப் பருகலாமே என்று அமர்ந்திருக்கிறான். இனிமேல் அவனுக்குத் தாகத்தைப் பற்றிக் கவலையில்லை. வெப்பத்தைப் பற்றிய துன்பம் இல்லை. அவனைப் போலவே பல பேர் அந்தப் பொய்கையை அண்டி வந்து, நீரை மொண்டு உண்டு இருக்கிறார்கள்.

அமுதப் பொய்கை

இது வெறும் பொய்கையைப் பற்றிய கதை. ஆனால் அந்தப் பொய்கை அமுதமாக இருந்தால் எப்படி இருக்கும்? நீர் வெறும் தாகத்தை மாத்திரம் தீர்க்கிறது. அமுதமோ பிறவிப் பிணியையும், பெருந்துன்பமாகிய இறப்பையும் போக்குவது. அது அமுதத்தினாலே நிறைந்த பொய்கை. சுவை பொருந்திய அமுதம் பெற்ற பொய்கை இதுபோலக் கிடைப்பது அரிதுதான். தேவர்கள் பாற் கடலைக் கடைந்து கிடைத்த அமுதங்கூடப் பொய்கையாக இருக்கவில்லை; குடத்தில்தான் கிடைத்தது.

அமுதப் பெருங்கடல் என்று சொல்வதற்குரியது அது. அது தான் இறைவன் திருவடி. அதனை அடைந்து அமுத பானம் பண்ண வேண்டுமென்று தொண்டர்கள் மிகவும் முயற்சி செய்கிறார்கள். அவர்களுடைய லட்சியம் இறைவன் திருவடியைப் பற்றிக் கொள்ள வேண்டுமென்பதே. அந்த அடியோடு அன்பர்களுக்கு உள்ள தொடர்பு பல வகையானது.

திருவடிச் சிறப்பு

இறைவன் திருவடியை வெவ்வேறு வகையில் பல பெரியவர்கள் பாராட்டியிருக்கிறார்கள். அது தேன்சொரியும் மலர் என்றும், ஞானமே திருவுருவமானது என்றும், மோட்சமே உருவாக இருப்பது என்றும் சொல்வார்கள். ஞானம் என்பது அறிவு; இறைவனைத் தெளிவிக்கும் அறிவு. இறைவன் திருவடியை நம்பினவர்களுக்கு முதலில் ஞானம் உண்டாகும். பின்பு அதன் பயனாகப் பேரின்ப அநுபவம் உண்டாகும். அறிவை உண்டாக்கத் துணை நிற்பது போலவே அநுபவத்தை உண்டாக்குவதற்கும் துணையாக இருப்பது அது. சாதனமாக இருக்கும்போது ஞானமாகவும், சாத்தியமாக இருக்கும்போது பேரின்ப அநுபவமாகவும் அது இருக்கும். ஒரு கம்பளியை வைத்துக் கொண்டிருக்கிறவன் வீட்டுக்குப் போகும்போது குளிருக்கு அதைப் போர்த்திக் கொண்டு போகிறான். வீட்டுக்குப் போனவுடன் அதையே படுக்கையாக விரித்துப் படுத்துக் கொள்கிறான். வழியில் துணை செய்ததும் அதுதான். வீட்டில் துணையாக இருப்பதும் அதுதான். அந்த வகையில் எம் பெருமான் திருவடி அன்பர்களுக்கு ஞானமாக முதலில் தோன்றி, பின்பு ஆனந்தமாக நிற்கும். இந்த இரண்டையும் அருணகிரிநாதர் சொல்கிறார். இப்போது பார்க்கப் போகும் பாடலில் அவன் திருவடி சுத்த ஞானமாக இருக்கும் என்று சொல்லப் போகிறார். வேறு ஓரிடத்தில்,

"பொக்கக் குடிலில் புகுதாவகை புண்டரிகத்தினும்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள்"

என்று அந்தக் திருவடியையே வீடாகச் சொன்னார். எம் பெருமானே ஞானத் திருவுருக் கொண்டவன்.

'நீயான ஞான வினோதந்தனை என்று நீயருள்வாய்
சேயான வேல் கந்தனே"

என்று முன்பு ஒரு பாடலில் அருணகிரி நாதர் சொன்னதைப் பார்த்தோம். முருகனை, "ஞான பண்டித சாமி" என்று திருப்புகழில் பாடுவார்.

முருகன் ஞானமே உருவானவன் என்றால் அவன் திருவடி ஞானம் என்பதில் தவறு என்ன? கற்கண்டுக் கட்டியில் எந்தப் பகுதியும் இனிப்புடையதுதானே?

இறைவனுடைய திருஉருவம் எல்லை கடந்தது. அதனை முழுவதும் காண்பதற்கு நம்மால் முடியாது. ஆனால் அவனுடைய திருவடி நாம் காணும் வகையில் நிலத்தில் நடப்பது; நாம் இருக்கும் பூமியில் படர்ந்து நலம் செய்வது. ஆதலின் நாம் அவனோடு தொடர்பு உடையவர் ஆகவேண்டுமானால் அவன் திருவடியைப் பற்றிக் கொள்ள வேண்டும். மெல்ல நடந்து பழகுகிற குழந்தை தாய் நடக்கும்போது அவள் முழங்காலைக் கட்டிக் கொள்கிறது. அந்தக் குழந்தை தாயின் முழங்காலுக்குத்தான் வரும். ஆகையால்தான் முழங்காலைப் பற்றிக் கொள்கிறது. நாமோ ஆண்டவனுடைய திருவடி அளவிற்குக்கூட வரமாட்டோம். அவன் உருவத்தை எப்படி முற்றும் பற்றிக் கொள்ள இயலும்?

இறைவன் திருவடி எல்லாத் தத்துவங்களுக்கும் அடிப்படையானது. எம்பெருமான் திருவுருவத்துடன் எழுந்தருளும் போது பலவகை உறுப்புகளுடன் வருகிறான். அந்தத் திருவுருவத்தில் திருவடியை நாம் காணவேண்டுமென்று அதனை வெளிப்படையாகக் காட்டி அலங்காரம் செய்வார்கள்; மறைக்கிற வழக்கம் இல்லை. நடராசப் பெருமான் தன்னுடைய திருவடிகளுள் ஒன்றை மேலே தூக்கிக் காட்டுகிறான். அதைக் குஞ்சித பாதம் என்பார்கள். அதனையே முத்தி என்று சொல்வது வழக்கம். எல்லோரும் காண எடுத்துக் காட்டிய திருவடி அது. எல்லோருக்கும் லட்சியப் பொருளாக நிலவுகிறது அது.

தொண்டர் காணும் முறை

அருணகிரியார் முருகப் பெருமானுடைய திருவடித் தொடர்பை இரந்து வேண்டுகிறார். அந்தத் திருவடி ஞான சொரூபமாக இருக்கிறது என்று சொல்கிறார். அது தத்துவத்தில் ஞானமாகவும், உருவத்தில் தண்டையம் புண்டரிகமாகவும், பயனில் தொண்டர் கண்டு அண்டி மொண்டு ஆழ்ந்து விடுவதாகவும் விளங்குகிறது. ஞானம் பெற்று இறைவனை அடையவேண்டுமென்று சிலர் சொல்வார்கள். ஆனால் எம்பெருமானுடைய திருத்தொண்டைச் செய்வதே தம்முடைய செயலாக வாழ்கின்ற பக்தர்களுக்கு இறைவனுடைய திருவடியே ஞானமாக வந்து அமையும். மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று கரணங்களினாலும் அவனுக்குத் தொண்டு புரிபவர்கள் தொண்டர்கள். மனத்தால் அவனைத்

தியானித்து, வாயினால் அவன் திருப்புகழை ஓதி, உடம்பினால் அவன் திருக்கோயிலை வலம் செய்து வாழ்க்கை நடத்துகிறவர் கள் அவர்கள். அவர்கள் அங்கங்கள் எல்லாம் பயன்படும்படி ஆண்டவன் அங்கங்களை மேற்கொண்டு வருகிறான். அவர்கள் கண் காணத் திருவுருவத்தை எடுத்துக் கொண்டு வருகிறான். கோயில்களிலுள்ள மூர்த்தியாக அவன் எழுந்தருளியிருக்கிறான். அந்தக் கோயிலைச் சென்று அடைந்து அவனுடைய திரு வுருவத்தை ஆசையோடு காண்கிறார்கள் தொண்டர்கள். அப்படிக் காணும் திருவுருவத்தில் அவர்கள் மிக்க காதலோடு காணுகின்ற பகுதி அவனுடைய திருவடி. அதைக் கண்டு கண்டு மெல்ல மெல்ல நெருங்குகிறார்கள்.

நெடுந்தூரத்திலே முருகப் பெருமானுடைய திருவுருவப் பேரெழிலைக் கண்டு பின்பு அவனை அணுகி, அவனுடைய திருவடியை நன்கு கண்டு மொள்ளுகிறார்கள். அவன் எழிலை மொண்டு இன்புறுகிறார்கள். அநுபவத்தைப் பெறுகிறார்கள். கண் காண்பதற்கும், ஆவல் அண்டுவதற்கும், கருத்து மொள்ளு வதற்கும், உயிர் உண்பதற்கும் கருவியாக விளங்குகின்றன. நாம் ஆண்டவனுடைய கோயிலுக்குச் சென்று காணும் அளவில் நிற் கிறோம். நெருங்குவதும் இல்லை. உடம்பினால் நெருங்குவது அன்று; மனத்தினால் நெருங்குவது. ஒரு பொருளை நாம் நெருங்கி விட்டால் அதையன்றி வேறு எதனிடமும் சாரமாட்டோம். வேறு ஒன்றும் நம்மை அண்டாது. பிறவற்றில் நம் காட்சியோ ஆசையோ செல்லாது. காணுவது முதல் படி. அணுகுவது இரண்டாவது படி. இலையில் உட்காராமல் சுற்றிக் கொண்டிருந்தால் அதில் உள்ள உணவை உண்ண முடியாது. அந்த இலைக்கு அருகில் உட்கார வேண்டும்.

இறைவன் திருவடியைக் கண்டு மகிழ்வது வேறு. அண்டி மகிழ்வது வேறு. மற்றவற்றையெல்லாம் மறந்து அந்தத் திருவடி யின் பேரெழிலில் மனத்தை லயிக்க விட்டுப் பிறிதொன்றையும் காணாத நிலையில் நிற்பதுதான் அண்டி நிற்றல். பின்பு அதனை மொண்டு நிற்க வேண்டும். மொள்ளுவது என்றால் எந்தப் பொரு ளால் மொள்ளுகிறோமோ அது நிரம்புவது. கண்ணும் கருத்தும் நிரம்பும்படியாக நம்முடைய பக்தி இருந்தால் அப்போது மொண்டவர்கள் ஆவோம். குடத்திலே பொய்கை நீரை எடுத்து

விடுவது வேறு. குடத்தில் நீரை விட்டால் குடம் நிரம்பியும் இருக்கலாம்; அரைகுறையாகவும் இருக்கலாம். மொண்டால் நிச்சயமாகக் குடம் நிரம்பிவிடும். அப்படி இறைவனுடைய திருவடிப் பேரெழிலில் கண்ணையும் கருத்தையும் மூழ்க அடிக்க வேண்டும். வேறு ஒன்றுக்கும் அவற்றில் இடம் இருக்கக்கூடாது. அந்தப் பெருமானுடைய திருவடியை மொண்ட பிறகு அநுபவம் உண்டாகும். கண்ணினாலே கண்டு, கருத்தினாலே உணர்வதனால் அந்த அநுபவம் ஏற்படும்.

சுந்தரர் அநுபவம்

சுந்தரமூர்த்தி நாயனாருக்கு இறைவனுடைய காட்சியைக் கண்டவுடன் பேரானந்தப் பெருக்கு விளைந்ததாம். அந்த நாயனார் தில்லையில் திருக்கூத்தாடும் நடராசப் பெருமானைத் தரிசித்தார். கண்ணாலே கண்டு அண்டிமொண்டார். பின்பு ஆனந்தத்தை உண்டார். இதனைச் சேக்கிழார் பெருமான் சொல்கிறார்.

"ஐந்துபேர் அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம்ஒரு மூன்றும்
திருந்துசாத் துவிகமே ஆக
இந்துவாழ் சடையான் ஆடும்ஆ னந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்தபேர் இன்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

மாறிலாத மகிழ்ச்சியில், பேரின்ப அநுபவ வெள்ளத்தில், திளைத்து இன்புற்ற சுந்தரருக்கு இந்திரியங்களை அடக்கிய சமாதி நிலையில் எத்தகைய இன்பம் உண்டாகுமோ அத்தகைய இன்பம் உண்டாயிற்று. இது வருவதற்குத் தொடக்கமாக இருந்தது காட்சி.

காது கேளாமல் இருந்தால் செவிடு என்று சொல்கிறோம். அவனைக் காதில்லாதவன் என்றும் சொல்வதுண்டு. தோலினால் அமைந்த காது இருந்தாலும் கேட்கின்ற தன்மை இல்லாவிட்டால் காது இல்லாதவன் என்று சொல்லும் வழக்கம் இருக்கிறது. காதென்னும் உறுப்பு இருந்தாலும் கேளாத நிலை இரண்டு விதத்தில் வரும். இயற்கையாகச் செவிடாக இருப்பவனுக்குக்

காது கேட்பது இல்லை. சில சமயங்களில் நாம் எங்காவது பாராக்குப் பார்த்துக் கொண்டிருந்தால் பிறர் சொல்வது காதில் விழுகிறது இல்லை. தூங்கும் பொழுதும் காது கேட்கிறது இல்லை; இயல்பாகக் காது கேட்கும் உணர்வு போக, ஒருவகைச் செவிட்டு நிலை வந்துவிடுகிறது. ஒன்றிலே மனம் லயித்துவிட்டபோது காது கேளாத நிலை இருப்பதைப் பார்க்கிறோம். புத்தகத்தை ஒருவன் படித்துக் கொண்டிருக்கிறான். பக்கத்திலிருந்து யாரேனும் ஒருவன் மெல்லக் கூப்பிட்டால் அவன் காதில் விழாது. காற்று அடித்தாலும் தெரியாது. அவனுக்குப் புத்தகத்தின்மேலே கண். மற்றவற்றை எல்லாம் மறந்துவிடுகிறான். ஏதேனும் ஒரு பொறி தீவிரமாக இருக்கிற போது மற்றவை எல்லாம் தம் வலுவை இழந்து நிற்கிறது இயல்பு. அந்தப் பொறியினிடத்தில் எத்தனைக்கு எத்தனை ஈடுபாடு மிகுதியாக இருக்கிறதோ அத்தனைக்கு அத்தனை மற்றப் பொறிகள் தம் ஆற்றலை இழந்து நிற்கும்.

முதலில் சுந்தரமூர்த்தி நாயனாருடைய கண் தில்லைச் சிற்றம்பலத்தில் இறைவனுடைய திருவுருவத்தைப் பார்க்கத் தொடங்கியது. அந்தக் காட்சி வர வர உரம் பெற்றது. மற்றப் பொறிகள் எல்லாம் தம்முடைய ஆற்றலை இழந்தன. ஒலி எதுவும் அவர் காதில் விழவில்லை. மெல்ல வீசிய காற்றை அவர் உணரவில்லை. அவர் வாயிலே தேன் சொட்டினாலும் அப்போது அவருக்குச் சுவை தெரியாது. மணத்தை அவருடைய நாசி தெரிந்து கொள்ளவில்லை. ஐந்து சன்னல்கள் உள்ள ஓர் அறையில் மற்ற நான்கு சன்னல்களை அடைத்துவிட்டால் எப்படி ஒரு சன்னல் வழியாக அதிகக் காற்று வருமோ அப்படிக் கண் ஒன்று மாத்திரம் வேலை செய்ய மற்றப் பொறிகளெல்லாம் அடங்கி நின்றன. ஐந்து பொறி அறிவையும் கண்களே கொண்டன. பின்பு அடுத்தபடியாக அவருடைய அந்தக்கரணம் வேலை செய்யத் தொடங்கியது. மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்று அந்தக்கரணம் நான்கு வகைப்படும். இவற்றில் ஒன்றைப் பற்றிக் கொள்ளும் தன்மை உடையது சித்தம். அதனை சிந்தை என்றும் சொல்வார்கள். அந்தக்கரணத்திலுள்ள ஏனைய மூன்று பகுதிகளும் அடங்கி நிற்க, உறுதியாக ஒன்றைப் பற்றிக் கொள்ளும் சித்தம் மாத்திரம் தன் வேலையைச் செய்தது. நடராசப் பெருமானைக் கண்கள் காண, அதனாலே எழுந்த உணர்ச்சி உரம்

பெற்று உறுதியாகச் சிந்தை மட்டும் தொழிற்பட்டது. பின்பு மூன்று குணங்கள் அமைந்திருந்த மனத்தில் ஏனைய குணங்கள் அடங்கி நிற்க, சத்துவ குணம் மாத்திரம் மலர்ந்து நின்றது. கண் வாயிலாகச் சென்ற காட்சி அந்தக்கரணத்தினூடே சென்று உறுதியை உண்டாக்கி, மற்றக் குணங்கள் தாழ்ந்து சத்துவம் தலை யெடுக்கச் செய்யவே, அப்போது ஆனந்தக் கிளர்ச்சி உண்டாயிற்று.

முன்பு சொன்ன பாட்டிலே இந்த அநுபவத்தைத்தான் சேக்கிழார் சொன்னார். மற்றவர்கள் எல்லாம் காணுகின்ற காட்சி போன்றது அன்று இது. காட்சி வாயிலாகவும், கருத்து இடைகழி யாகவும், அநுபவம் உள் அறையாகவும் இருக்கிற நிகழ்ச்சி இது. கண்ணினால் கண்டு, பின்பு உள்ளே சென்று கருத்தினால் மொண்டு, பின்பு அதற்கும் உள்ளே சென்று உயிரினால் உண்ண வேண்டும். கண் என்பது வாயில். உள்ளம் என்பது இடைகழி. உயிர் என்பது கடைசி அறை. கண்ணிலே காட்சியாகத் தோற்றி யது ஓர் அநுபவம். கருத்திலே இது உணர்ச்சியாக மாறி உயிரிலே ஆனந்தமாகக் கனிந்துவிடும். இதற்கு வாயில் கண்; வழியாக இருப்பது கருத்து; முடிவாக இருப்பது உயிர். அருணகிரிநாதப் பெருமான் இந்த மூன்றையும் சொல்கிறார். காணுதல் ஒன்று. அண்டி மொள்ளுதல் ஒன்று. உண்டு இருத்தல் ஒன்று. காணுதல் அன்பர்களுக்கே உரியது. அண்டின பிறகு மொள்ளுதல் தீவிரமாக உள்ள அன்பர்களுக்குரிய செயல். பின்பு உண்ணுதல் அநுபவி களுக்குரிய செயல். அப்படி உண்ணும் அநுபவம் மாறாமல் இருக்க வேண்டும்.

கண்டு அண்டி மொண்டு உண்ணுதல்

முருகப்பெருமானுடைய திருவடியைத் தொண்டர்கள் காண் கிறார்கள். பின்பு அதை அண்டி மொண்டு உண்டு இருக்கிறார் களாம். காணும்போது புண்டரிகமாகக் காட்சி தருகிறது; அண்டும் பொழுது தண்டையம் புண்டரிகமாகக் காட்சி தந்து, மொள்ளும் போது ஞானமாகக் காட்சி தந்து, உண்டு இருக்கும்போது சுத்த ஞானமாகக் காட்சி தருகிறது. ஞானம் என்பது சத்துவமான அறிவு. சுத்த ஞானம் என்பது ஞானமே அநுபவமான நிலை. அதை ஞானானந்தம் என்று பேசுவார்கள். ஞாதுரு ஞான ஞேயம் என்ற திரிபுடி நிலையில் உள்ள ஞானம் வேறு; லட்சியமான ஞானா

னந்தம் வேறு. சத், சித், ஆனந்தம் என்று சொல்கிற முறையில் சித் என்பது ஒன்று; அது ஞானம். அதுவும் அநுபவந்தான். அந்த அநுபவப்பொருளைப் பிரக்ஞானம் என்று மகா வாக்கியம் கூறுகிறது.

புண்டரிகம்

முருகப்பெருமானுடைய திருவடி கண்ணிலே காணும் போது தாமரையைப் போன்ற தோற்றத்தை அளிக்கிறது. தாமரை மலர்களிலெல்லாம் மிகச் சிறந்தது. நல்ல மலர்களைக் கண்ணாலே கண்டால் கண்ணுக்கு நல்லது என்று சொல்வார்கள். அந்த மலரை அண்டிக் கண்டால், கண்ணில் ஒற்றிக் கொண்டால், கண்ணிலுள்ள வெதுப்புப் போகும். தொண்டர்கள் முருகப் பெருமானுடைய திருவடியைப் புண்டரிகமாகக் கண்டு போற்றுவார்கள். அது அன்பு நிரம்பிய உள்ளமாகிய பொய்கையில் பூப்பது. ஞான மணம் கமழ்வது. வேதம் என்னும் வண்டு ஓலம் இடுகின்ற மலர் அது. இவ்வாறு பக்தர்கள் அந்தத் தாமரையைப் பாராட்டுகிறார்கள்.

தண்டையம் புண்டரிகம்

அது தண்டையை அணிந்து விளங்குகிறது. சேற்றிலே பூக்கிற வெறும் தாமரையைப் போலில்லாமல் அது நடக்கும் தாமரையாக இருக்கிறது. தாமரை நடக்காதே! ஓரிடத்தில் நிலையாகத்தானே இருக்கும்? இதுவோ நடக்கிற தாமரை. ஆண்டவன் தண்டை அணிந்த திருவடி உடையவன். தண்டை என்ற அணி தன்னை யணிந்த திருவடியின் இளமையைக் காட்டுகிறது. முருகன் இளம் குழந்தை. பார்க்கப் பார்க்க இன்பம் தரும் தளர் நடையிட்டு வரும் அழகான திருவடி அவன் திருவடி. மெத்தென்ற தளர்நடையிட்டுப் பக்தர்களுடைய உள்ளத்தில் உலாவரும் சீறடி. அதை நோக்கும் போது கண்ணுக்குத் தாமரை போல எழில் தருவதோடு, அதில் உள்ள தண்டை காதுக்கு இனிய ஒலியைத் தரும்.

"திருவடியும் தண்டையும் சிலம்பும்"

என்று வேறு ஓரிடத்தில் சொல்கிறார்.

"தண்டையணி வெண்டையம் கிண்கிணி சதங்கையும்
தண்கழல் சிலம்புடன் கொஞ்சவேநின்"

என்று திருப்புகழில் அருணகிரியார் பாடுவார்.

காணுகின்ற அன்பர்களுக்கு முருகனுடைய திருவடி தாமரை மலராகத் தெரியும். கண்டு அண்டுகின்றவர்களுக்கு தாமரையாகக் கண்ணுக்குக் காட்சி தருவதோடு அதன் தண்டை ஒலியும் கேட்கும். சேரமான் பெருமாள் நாயனார் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவர். சுந்தரமூர்த்தி நாயனாருடைய நண்பர். அவர் நாள்தோறும் நடராசப் பெருமானைப் பூசிப்பது வழக்கம். அவர் இருந்த இடம் வஞ்சிமா நகரம். ஒவ்வொரு நாளும் பூசை முடிந்த தருணத்தில் நடராசப் பெருமானின் சிலம்பொலி கேட்குமாம். அப்படிக் கேட்டால் ஆண்டவன் தம் பூசையை ஏற்றுக் கொண்டான் என்று அவர் மன நிறைவு பெறுவார். ஒரு நாள் பூசை செய்யும் போது அந்த ஒலி கேட்கவில்லை.. சற்றே தாமதமாகக் கேட்டது. அவர் அப்போது, 'நாம் ஏதோ தவறு இழைத்துவிட்டோம். அதனால்தான் சிலம்பொலி கேட்க நேரம் ஆயிற்று' என்று வருந்தினார். அந்த வருத்தத்தைப் போக்க ஆண்டவன், 'தில்லையில் தரிசனம் பண்ணுவதற்குச் சுந்தரமூர்த்தி வந்திருந்தான். அதனால் இந்த ஒலி கேட்கச் செய்ய நேரம் ஆயிற்று' என்று அருளினானாம். சிறந்த நாயனாராகிய சேரமான் பெருமாள் நடராசப் பெருமானுடைய திருவடி தரிசனத்தைக் கண்டு, சிலம்பொலியையும் கேட்டார் என்று இந்த வரலாறு தெரிவிக் கிறது. நெருங்கின அன்பர்களுக்குப் பாதச் சிலம்பொலி கேட்கும் என்பதை இந்த வரலாற்றினால் உணர்ந்து கொள்ளலாம்.

ஞானமெனும் தண்டையம் புண்டரிகம்

எனவே, முருகப் பெருமானுடைய திருவடியைக் கண்டு அண்டுகிற தொண்டர்கள் தண்டையின் ஒலியையும் கேட்பார்கள். அந்தத் திருவடியை முதலில் கண்ணினாலே கண்டு, பின்பு அண்டி நின்று, கருத்தினாலே மொண்டு பார்க்கும் அன்பர்களுக்கு அது வெறும் தண்டையம் புண்டரிகமாகத் தோன்றாமல் ஞான மாகத் தோன்றும். ஞானம் பெற்றவர்கள் உலகத்திலுள்ள பொருள் களை முன் பார்த்த பார்வையும், இப்போது பார்க்கின்ற பார்வை யும் வேறாக இருக்கும். அகத்தில் கண் கொண்டு பார்க்கும் போது பொருள்களின் இயற்கை வடிவம் தோன்றும். இறைவனுடைய திருவடிகளாகிய தண்டையம் புண்டரிகத்தைக் கண்டு, அண்டி, மொண்டு நின்றால் அந்தப் புண்டரிகமே ஞானமயமாக நின்று

ஒளிவிடும். அப்போது எல்லாப் பொருள்களையும் தெள்ளத் தெளியத் தெரிந்து கொள்ளலாம்.

ஞான விளக்கு

மீனாட்சி அம்மை பிள்ளைத் தமிழில் குமரகுருபரர் இந்தக் கருத்தை வேறு ஒருவகையில் சொல்வார். எம்பெருமாட்டியாகிய மீனாட்சி அம்மையைத் தொண்டர்கள் தம் உள்ளத் தடத்தில் வைத்துக் கொள்கிறார்களாம். அவள் அங்கே விளக்காக இருக் கிறாள். விளக்கு, தன் ஒளியினால் தன்னைக் காட்டிப் பிற பொருள்களையும் காட்டும். விளக்கு இல்லாத இடத்தில் இன்ன பொருள் இருக்கிறது என்று தெரியாது. விளக்கை ஏற்றின பிறகு அங்கேயுள்ள பொருள்களும், சுற்றிச் சூழ இருக்கிற பொருள் களும் விளங்கும். அந்த வகையில் எம்பெருமாட்டியைத் தம் முடைய திருவுள்ளத்தில் அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுத்து வைத்துப் போற்றுகிறவர்களுக்கு இந்த உலகம் முழுவதும் நன்றாக வெளிச்சமாகத் தெரியும்.

"அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடுக்கும்
தொழும்பர் உளக்கோயிற் கேற்றும் விளக்கே"

என்று பாடுகிறார். இங்கேயோ, தண்டையம் புண்டரிகமாக இருக்கிற திருவடி உள்ளத் தடத்தில் ஞானத் திருவிளக்காக விளங்கும். அது பின்னும் உயிரோடு கலந்தால் சுத்த ஞான அநுபவமாக விளங்கும்.

தொண்டர் கண்டு அண்டி மொண்டு உண்டிருக்கும்
சுத்தஞானம் எனும், தண்டையம் புண்டரிகம்.

படிப்படியாக ஏறுதல்

கோயிலுக்குச் சென்று இறைவனுடைய திருவுருவத்தைக் காண்கிறோம். சிலர் கோயிலில் பிராகாரங்களை எல்லாம் கண்டு அங்கேயுள்ள நந்தவனத்தையும், சிற்பங்களையும், மண்டபத்திற்கு வரும் வழியையும் கண்ட அளவில் வந்துவிடுகிறார்கள். அவர் கள் கோயிலைப் பார்த்தார்களே யன்றி அதனால் உண்டாகும் பயனைப் பெறவில்லை. கோயிலைப் பார்த்த அளவில் நிற்பது பயன் அளிக்காது. கோயிலுக்குச் சென்று பார்ப்பதோடு அவற்

றுக்கு அப்பால் கர்ப்பக்கிருகத்தை அணுகி இறைவன் திருவுரு வத்தைத் தரிசிக்க வேண்டும். கோயிலை மாத்திரம் பார்த்து இறைவன் விக்கிரகத்தைக் காணாதவன் எப்படிப் பயனை விட்டவன் ஆகிறானோ அப்படியே கோயிலுக்குள் சென்று இறைவன் திருவுருவத்தைக் கண்டு அவன் அடியைப் பாராமல் இருக்கிறவனும் ஆவான். திருவடியைக் கண்டவன்கூட முழுப் பயனைப் பெற்றவன் என்று சொல்ல முடியாது. அந்தத் திரு வடியைக் காண்பது அன்பர்களுடைய நிலையின் முதல் படி. மற்றவர்கள் எல்லாம் வேடிக்கை பார்க்க வந்தவர்கள். இறைவன் திருவடியைக் காண முந்துகிறபோதுதான் அவர்கள் அநுபவ மாகிய எல்லையில் கால் எடுத்து வைக்க முயல்கிறார்கள். திருவடியைக் காணுவதுகூட முற்றிய நிலையாகாது. கண்டு அண்ட வேண்டும். பின்பு புறக் கண்ணினாலே கண்டதை அகக் கண்ணினாலே காண வேண்டும். அதுதான் மொள்ளும் நிலை. அப்புறம் அந்த நிலையினின்றும் பின்னும் உள்ளேபோய் உயிரோடு இணைந்து அநுபவம் பெற வேண்டும்.

கோயிலுக்குச் சென்று இறைவனைக் கண்டு அதனால் தம்மை மறக்கின்ற இன்பம் சுந்தரமூர்த்தி சுவாமிகள் அடைந்தார் என்றும், அவர் இந்த மூன்று நிலையையும் படிப்படியாகக் கடந்து இன்புற்றார் என்றும் தெரிந்து கொண்டோம். முருகப்பெருமான் தன் திருவடியை, நமக்குத் தண்டையம் புண்டரிகமாகக் காட்டி னால் போதாது; சுத்த ஞானமாகத் தர வேண்டும். அப்படித் தந்தால்தான் முடிந்த முடிபாகிய பேரின்ப அநுபவம் நமக்கு உண்டாகும். தொண்டர்கள் காணும் புண்டரிகம், கண்டு அண்டும் தண்டையம் புண்டரிகம், கண்டு அண்டி மொள்ளும் ஞானமெனும் தண்டையம் புண்டரிகம், கண்டு அண்டி மொண்டு உண்டிருக்கும் சுத்த ஞானமெனும் தண்டையம் புண்டரிகம் என்று படிப்படி யாகச் செயலும் அநுபவமும் ஏறிவரும் வகையில் பார்க்க வேண்டும்.

நிறையப் பணம் வைத்த பெட்டி ஒன்று நமக்குக் கிடைக் கிறது. அந்தப் பெட்டியை வீட்டுக்குக் கொண்டு வருகிறோம். மிக அதிக விலையுள்ள விற்பிடி மாணிக்கம் ஒன்று அந்தப் பெட்டியில் இருக்கிறது என்று அதைக் கொடுத்தவர் சொல்கிறார்.

பெட்டியைக் கொண்டு வந்து சாவி போட்டுத் திறக்கிறோம். அந்தப் பெட்டிக்குள் பல அறைகள் இருக்கின்றன. நடு அறை ஒன்று இருக்கிறது. அதையும் திறக்கிறோம். அதற்குள்ளேதான் ரத்தினம் ஒரு கிழியில் கட்டி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் துணியை எடுத்து, முடிச்சை அவிழ்த்துப் பின்பு ரத்தினத்தை எடுத்துக் கொள்கிறோம். பெட்டி ரத்தினம் உடையதாக இருந்தாலும் அதனைத் திறந்து, அறையையும் திறந்து, முடிச்சையும் அவிழ்த்த பிறகுதான் ரத்தினத்தைக் கையில் எடுத்துக் காண முடியும்.

அவ்வாறே, படிப்படியாக நம் சாதனம் உயர வேண்டும். கோயிலில் ஆண்டவன், திருவடியுடன் கூடிய உருவத்தோடு நமக்கு இன்பம் தருகின்ற நிலையில் விளங்கினாலும் அவனைத் தரிசிக்கும் முறையில் தரிசித்து இன்பம் அநுபவித்தவர்கள் சிலரே. கோயிலை மாத்திரம் தரிசித்து வருபவர்கள் பலர். கோயிலைத் தரிசித்து இறைவன் திருவுருவத்தையும் கண்டு வருகிறவர்கள் சிலர். திருவுருவத்தைப் பார்ப்பதோடு திருவடியைக் கண்டு வருகிறவர்கள் ஒன்றிரண்டு பேர்கள்தாம்! கண்டு, மொண்டு அகக்கண்ணிலே தேக்கிப் பேரின்ப அநுபவத்தைப் பெறுகிறவர் எங்கோ லட்சத்தில், கோடியில் ஒருவர். கோயிலுக்குப் போவது, திருவுருவத்தைப் பார்ப்பது, திருவடியைக் கண்டு தரிசிப்பது, திருவடியைப் புறக்கண்ணிலே காண்பதோடு அகக் கண்ணிலே காண்பது என்பவற்றில் ஒவ்வொன்றும் அடுத்ததற்குப் படியாக இருக்குமானால் அந்த முயற்சிக்குப் பலன் உண்டு.

அருணகிரிநாதப் பெருமான் முருகனிடத்தில் வேண்டுகிறார். ''எம்பெருமானே! எனக்குத் தொண்டர்கள் காணுகின்ற புண்டரிகத்தைத் தர வேண்டும். அவர்கள் கண்டு அண்டுகின்ற தண்டையம் புண்டரிகத்தைத் தர வேண்டும். கண்டு அண்டி மொண்டு இருக்கிற ஞானம் எனும் தண்டையம் புண்டரிகத்தைத் தர வேண்டும். கண்டு, அண்டிமொண்டு உண்டிருக்கும் சுத்த ஞானம் எனும் தண்டையம் புண்டரிகத்தைத் தரவேண்டும்'' என்று படிப்படியாக அடுக்கிக் காண்பதற்கு ஏற்றபடி பாடுகிறார்.

தொண்டர் கண்டு அண்டி மொண்டு உண்டு
இருக்கும் சுத்த ஞானம்எனும்
தண்டையம் புண்டரிகம் தருவாய்.

2

முருகன் வீரம்

முருகப் பெருமானுடைய பெரு வீரத்தைப் பின் இரண்டு அடிகளில் அருணகிரியார் சொல்கிறார். அவன் வேலைப் பிரயோகம் செய்வதற்கு முன்னால் சூரன் தேவலோகத்தை ஆக்கிரமித்துக் கொண்டு வந்தான். அவன் கொடுமையானவன். கொடிய தண்டனை செய்கின்ற தீய குணம் உடையவன்.

சண்ட தண்ட வெஞ்சூர்
மண்டலம் கொண்டுபண்டு அண்டர்
அண்டம்கொண்டு மண்டிமிண்டக்
கண்டுஉருண்டு அண்டர்விண்டு ஓடாமல்
வேல்தொட்ட காவலனே.

அவன் தேவலோகத்தை முற்றுகையிட்டு வட்டமிட்டான். அவன் மண்டலம் கொண்டானாம். அது பழைய கதை. தேவர்களுக்குரிய உலகத்தைத் தன்னுடையதாக்கிக் கொண்டு மேலும் மேலும் நெருங்கி வீறு பெற்று வந்தான். தேவலோகத்தை அவன் தன்னுடையதாகக் கொண்ட பிறகு தேவர்கள் பலர் அவனுக்கு அடிமையானார்கள். பலர் அவன் வருகிறான் என்று கண்டு ஓடினார்கள். ஓடும்போது கீழே வீழ்ந்து உருண்டார்கள். சூரபன்மாவினுடைய பெயரைக் கேட்ட மாத்திரத்தில் தேவர்களுக்கு அச்சம் உண்டாயிற்று. அப்போதே ஓடத் தொடங்கினார்கள். ஒருவர் மேல் ஒருவர் உருண்டு ஓடினார்கள். அவன் பிடிக்கு அகப்பட்டு விட்டால் நம்மைக் கொன்று விடுவானே என்ற அச்சத்தால் நான் முன், நீ முன் என்று ஓடிக்கொண்டே இருந்தார்கள். அந்த நிலையை முருகப் பெருமான் மாற்றினான். தன்னுடைய திருக் கரத்திலுள்ள வேலாயுதத்தை எடுத்து வீசிச் சூரனை அழித்தான்.

இருவகை அமைதி

தேவர்கள் மிகப் பழங்காலத்தில் அமைதியாக வாழ்ந்தார்கள். தங்கள் தங்கள் பதவியிலே பற்றை வளர்த்து, அந்தப் பதவியில் மோகம் வைத்துக் கடவுளை மறந்து வாழ்ந்தார்கள். தங்கள் நிலை என்றும் மாறாதது என்ற எண்ணம் கொண்டவர்

களைப் போல அவற்றையெல்லாம் தங்களுக்கு அளித்த இறைவனைக்கூட மறந்து இருந்தார்கள். செல்வச் செருக்கினாலும் ஆற்றலால் உண்டான ஆணவத்தாலும் அவர்கள் தங்களை மலை போல எண்ணிக் கொண்டு ஆடாமல் அசையாமல் இருந்தார்கள். அத்தகையவர்களுடைய செருக்கைப் போக்கும் பொருட்டு ஆண்டவன் சூரனை உண்டாக்கினான். பெரும் காற்று வந்தால் பிரளய காலத்தில் மலைகள் எல்லாம் உருண்டு ஓடும் என்று சொல்வார்கள். மற்றக் காலத்தில் காற்றைத் தாங்கிக்கொண்டு துளக்கமில்லாமல் இருப்பதனால் மலைக்கு அசலம் என்று பெயர். தேவர்கள் அப்படித்தான் சிறு சிறு துன்பங்கள் வந்தால் அவற்றைப் பொருட்படுத்தாமல் மலைபோல நிமிர்ந்து நின்றார்கள். அமராவதியையும், தேவலோகத்தையும் தமக்குரிய இடமாகப் பெற்று வாழ்ந்தார்கள். உலகத்தில் தம்மை வாழ்த்துகின்ற மக்களுக்கு நலம் செய்துகொண்டு எல்லோருக்கும் மேலானவர்களாகத் தங்களை எண்ணிக்கொண்டு வாழ்ந்தார்கள். அத்தகைய சமயத்தில் சூரன் தன்னுடைய கொடுமையைக் காட்டத் தொடங்கினான். பல படைகளை ஏவி அமரர்களுக்கு இடுக்கண் செய்தான். அசுரர் படைகள் தேவலோகத்தைச் சுற்றிச் சூழ்ந்துகொண்டு மண்டலம் இட்டன. அவை நெருங்கி வருவது தெரிந்து தேவர்கள் தப்பிப் பிழைப்பதற்கு எங்கே இடம் இருந்தாலும் அங்கே ஓடினார்கள். அவர்களுடைய உள்ளத்தில் அச்சம் மிகுந்தது. அதனால் ஓட்டத்தில் வேகம் மிகுதியாயிற்று. தடுக்கி விழுந்தாலும் உருண்டு ஓடினார்கள். இப்படிச் சூரனுக்குப் பயந்து ஓடி உருண்டு துன்புற்ற தேவர்களுக்கு மீட்டும் அமைதியை உண்டாக்கினான் முருகன்.

முன்னாலே இருந்த அமைதி அமைதியன்று. இறைவனுக்கு அஞ்சாமல் இருந்ததால் சூரனுக்கு அஞ்சி ஓடிய நிலை உண்டாயிற்று. இப்போதோ இறைவன் திருவருளினால் தமக்கு எமனாக வந்தவனை அழித்து நிலையாக நிற்கும் நிலை வந்தது. இதற்கு முன்பு அவர்கள் தங்களுக்குத் தாங்களே அரசர்கள் என்று தான்தோன்றித் தம்பிரான்களாக வாழ்ந்தார்கள். இப்போதோ சூரனை அழித்த வேலையுடைய முருகப் பெருமானைத் தங்களுடைய காவலனாக வாழ்த்திக்கொண்டு வாழ்கிற நிலை பெற்றார்கள். அமராவதியைக் காக்கும் தொழிலைப் பெயர்

அளவுக்கு இந்திரன் கொண்டிருந்தாலும் சூரனுக்கு எதிரே நின்று தேவர்களைக் காக்க அவனால் இயலவில்லை. அமரர்களையும், இந்திரனையும் சூரனுடைய அல்லல்களிலிருந்து காத்தவன் முருகப் பெருமான். வேலாயுதக் கடவுளாகிய அவனுடைய பாதுகாப்பில் இன்று தேவர்கள் யாவரும் சுகமாக இருக்கிறார்கள். இன்று பெற்று நிற்கிற அமைதிதான் உண்மையான அமைதி. அச்சத்தினால் உண்டான வேகம் அடங்கி அன்பினால் உண்டான அமைதியில் அவர்கள் வாழ்கிறார்கள். இப்போது அவர்களுக்கு உண்மை புலனாகியிருக்கிறது; யாவருமே ஆண்டவனுக்கு அடிமை என்ற எண்ணம் அவர்களுக்கு அநுபவத்தால் கிடைத்திருக்கிறது.

சூர சங்காரம்

அச்சுறுத்தலின் உருவமாகிய சூரன் நற்குணங்களுக்கு வடிவ மாகிய தேவர்களை ஓடச் செய்தான். அந்தச் சமயத்தில் அஞ் ஞானத்தைப் போக்குகின்ற ஞான சக்தியாகிய வடிவேலினை ஏவி முருகப்பெருமான் தேவர்களுக்கு நலம் செய்தான். அஞ்ஞானத்தையும் அச்சத்தையும் ஓட்டி ஞானத்தைத் தருகிறவன் அவன் என்பதைச் சூரசங்காரம் காட்டுகிறது. சுத்த ஞானம் எனும் புண்டரிகம் தருவாய் என்று முருகனைப் பார்த்து விண்ணப்பம் செய்து கொண்ட அருணகிரிநாதருக்கு, அதனையே பருப்பொருள் நிகழ்ச்சியாகக் காட்டிய சூரசங்காரம் உடனே நினைவுக்கு வந்தது. அவன் சூரனை வேல்கொண்டு அழித்துத் தேவர்களை ஓடாமல் வைத்தவன், அவர்களுக்குப் பெரும் காவலனாக இருப்பவன் என்ற நினைவு வரவே, அந்தச் செய்திகளைச் சொல்லி முருகனை விளித்தார்.

சண்ட தண்டவெஞ்சூர்
மண்டலம் கொண்டுபண்டு அண்டர்அண்
டம்கொண்டு மண்டிமிண்டக்
கண்டுஉருண்டு அண்டர்விண்டு ஓடாமல்
வேல்தொட்ட காவலனே.

பண்டு என்பது பழங்காலத்தில் என்னும் பொருள் உடையது. நமக்குத் தெரிந்த பெரும் போர்கள் இதிகாசங்களிலும், புராணங் களிலும் வருகின்றன. ராமாயணப் போரும், பாரதப் போரும்

மிகப் பெரிய போர்கள் என்று சொல்வார்கள். எல்லாவற்றுக்கும் மேலான பெரிய போர் தேவாசுரப் போர் ஆகிய சூரசங்காரப் போர். அது மிகப் பழங்காலத்தில் நடந்தது. அஞ்ஞான அழிவைக் காட்டுவதற்கு அது அடையாளமாக இருக்கிறது. ஆதலால் பண்டு அந்தக் காரியத்தைச் செய்த நீ இன்று அதன் கருத்தாகிய இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று இரண்டையும் சேர்த்து அருண கிரிநாதர் முருகப்பெருமானிடம் விண்ணப்பித்துக் கொள்கிறார்.

★

தொண்டர்கண்டு அண்டிமொண்டு உண்டுஇருக்
கும்சுத்த ஞானம்எனும்
தண்டையம் புண்டரி கம்தரு
வாய்சண்ட தண்டவெஞ்சூர்
மண்டலம் கொண்டுபண்டு அண்டர்அண்
டம்கொண்டு மண்டிமிண்டக்
கண்டுஉருண்டு அண்டர்விண்டு ஓடாமல்
வேல்தொட்ட காவலனே.

இந்தப் பாட்டில் சந்த நயம் நன்றாக அமைந்திருக்கிறது.

[அடியவர்கள் கண்ணால் தரிசித்து, நெருங்கி, உள்ளத்தால் மொண்டு, உயிரால் உண்டு அமைதி பெற்றிருக்கும் சுத்தஞானமென்னும் தண்டையை அணிந்த அழகிய தாமரை போன்ற திருவடியை அருள்வாயாக, கொடுமையையும் தண்டனை செய்யும் இயல்பையும் வெம்மையையும் உடைய சூரன் படை வியூகத்தைத் துணையாகக் கொண்டு பழங்காலத்தில் தேவர்களுடைய உலகத்தைக் கைப்பற்றிக்கொண்டு மேலும் நெருங்கி வந்து மிடுக்குடன் நிற்க, அதைக் கண்டு அஞ்சி அமரர்கள் உருண்டு தனித் தனியே பிரிந்து ஓடாத வண்ணம் வேலாயுதத்தை ஏவிய காப்பாளனே!

புண்டரிகம் – தாமரை. சண்டம் – கொடுமை. தண்டம் – தண்டனை. மண்டலம் – வட்டம்; இங்கே படையின் வியூகம். அண்டர் – தேவர். அண்டம் – வானுலகம். மண்டி – நெருங்கி. மிண்ட – மிடுக்குடன் இருக்க. விண்டு – பிரிந்து.]

உன்னுடைய திருவடியின்பத்தைத் தந்தருள்வாயாக என்பது கருத்து. இது கந்தர் அலங்காரத்தில் 92–ஆவது பாடல்.

வலம்புரியும் கிண்கிணியும்

அருணகிரி நாதர் முருகப்பெருமானுடைய திருக்கோலத்தைப் பலபடியாக நினைத்து நமக்கும் காட்டுகிறார். அந்தப் பெருமானுடைய திருமேனி உறுப்புகளின் நலன்களையும் பலவிடங்களில் சொல்லியிருக்கிறார். அவனுடைய வீரச் செயல்களையும், கருணைப் பெருக்கையும் நினைப்பூட்டியிருக்கிறார். சூரபன்மனோடு போர் செய்த கதை கந்த புராணத்தில் வருகிறது. ஆனால் அருணகிரியார் அதனைப் பலபல வகையில் எடுத்துக்காட்டி முருகப்பெருமானுடைய வீரத்தை விரிவாக எடுத்துச் சொல்கிறார். வள்ளியம் பெருமாட்டியைத் திருமணம் செய்துகொண்ட அற்புதத் திருவிளையாடல் அருணகிரியார் திருவாக்கில் வெவ்வேறு வகையில் சுவையூட்டுகிறது.

இளமைத் திருவிளையாடல்கள்

நாம் இப்போது பார்த்து வரும் கந்தர் அலங்காரத்தில் முருகப் பெருமானுடைய இளமைப் பருவத் திருவிளையாடல்கள் பலவற்றைப் பார்த்திருக்கிறோம். அருணகிரியார் முருகனது இளமைத் திருமேனியையும், அவன் தன் காலில் அணிந்திருக்கும் தண்டை, வெண்டையம், சிலம்பு முதலியவற்றையும் வருணித்திருக்கிறார். முன் ஒரு முறை இளமுருகனுடைய இடையில் அணிந்த கிண்கிணி ஓசை பற்றிய பாட்டு ஒன்றைப் பார்த்தோம்.

"ஒருவரைப் பங்கில் உடையாள் குமாரன் உடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி ஓசை படத்திடுக் கிட்டசுரர்
வெருவரத் திக்குச் செவிடுபட் டெட்டுவெற் புங்கனகப்
பருவரைக் குன்றும் அதிர்ந்தன தேவர் பயம்கெட்டதே."

இப்போது இந்தக் கிண்கிணி ஓசையைப் பற்றி வேறு ஒரு பாட்டு பாடுகிறார். இங்கே ஒப்பு நோக்கும் வகையில் முருகனது சிறப்பை எடுத்துச் சொல்கிறார்.

ஒப்பு நோக்குதல்

ஏதேனும் ஒரு பொருளின் உயர்வு தாழ்வைத் தனியே பார்ப்பதைக் காட்டிலும் வேறு ஒன்றை அருகில் வைத்துப் பார்த்தால் அதன் இயல்பு நன்றாகத் தெரியும். இலக்கணத்தில் தவறான கேள்வி என்று ஒன்று வருகிறது. ஒரு விரலைக் காட்டிப் பெரிதோ, சிறிதோ என்று கேட்பது தவறு என்று சொல்வார்கள். இரண்டு பொருள்களை வைத்தால்தான் இன்னது பெரிது, இன்னது சிறிது என்று தெரியவரும்.

மிகப் பெரிய வடிவத்தின் பரிமாணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் அதற்கு அருகில் ஒரு சிறிய உருவத்தை வைத்துப் படம் பிடிப்பார்கள். பெரிய யானையின் திருவுருவம் கல்லால் மகாபலிபுரத்தில் இருக்கிறது. அதைத் தனியே படம் எடுத்துப் பார்த்தால் அதன் பரிமாணத்தைத் தெளிவாக உணர்ந்து கொள்ள முடியாது. அதன் அருகில் ஓர் ஆட்டுக் குட்டியை நிற்கச் செய்து படம் எடுத்தால் கல் யானையினுடைய பெரிய அளவு நன்றாகத் தெரியும். இவ்வாறு ஒப்புநோக்குவதனால் பொருள்களின் திறம் நன்றாகத் தெரியவரும். இங்கே முருகப் பெருமானுடைய கிண்கிணி ஓசையையும், கண்ணபிரானுடைய சங்கத்தின் நாதத்தையும் ஒப்பு நோக்குகிறார் அருணகிரியார். மாமாவையும், மருகனையும் ஒருங்கே வைத்துப் பார்க்கிற கலையில் அருணகிரிநாதர் வல்லவர். முருகனுடைய சிற்றடியைச் சொல்ல வந்தவர் முன்பு ஒரு பாட்டில் திருமாலினுடைய பேரடியைப் பற்றியும் சொன்னார்.

"தாவடி யோட்டும் மயிலிலும் தேவர் தலையிலும்என்
பாவடி ஏட்டிலும் பட்டதன் றோபடி மாவலிபால்
மூவடி கேட்டன்று மூதண்ட கூட முகடுமுட்டச்
சேவடி நீட்டும் பெருமான் மருகன்றன் சிற்றடியே."

அந்த வகையில் முருகப்பெருமானுடைய திருவரைக் கிண்கிணி ஓசையையும், திருமாலினுடைய வலம்புரி ஓசையையும் இங்கே ஒப்புநோக்குகிறார்.

முருகன் சின்னஞ்சிறு வடிவம் உடையவன். இளமை மாறாப் பேரெழில் உடையவன். திருவரையில் அவன் கிண்கிணியை அணிந்திருக்கிறான். துள்ளித் துள்ளி அவன் விளையாடும்போது அது ஒலிக்கிறது. அந்த ஒலியினால் தேவர்கள் மகிழ்கிறார்கள்.

அது பெரிது அன்று. அதனைக் கேட்டு அசுரர்கள் திடுக்கிடுகிறார் கள். இதனை முன்னே காட்டிய பாட்டுச் சொல்லியது. அந்த ஒலி நெடுந்தூரம் கேட்டது என்பதை இங்கே சொல்ல வருகிறார். பதினான்கு உலகமும் கேட்டது என்று சொல்லும்போது, 'திருமால் ஊதின சங்கு அவ்வளவு தூரம் கேட்கவில்லை; மிகக் குறுகிய தூரத்திற்குத்தான் கேட்டது' என்பதையும் சொல்லி ஒப்பு நோக்கச் செய்கிறார்.

முருகனுடைய கிண்கிணி ஓசை நெடுந்தூரத்திற்குக் கேட்டது. அது கிண்கிணியின் பெருமையைக் காட்டுவது மட்டும் அன்று. அதனை அணிந்த பெருமானுடைய வலியையும் காட்டுவது. 'இராமன் வில்லை ஒடித்தான். அந்த ஓசை நெடுந்தூரம் கேட்டது' என்று பாடுகிறார் கம்பர். வில்லின் பெருமையோடு அதை ஒடித்தவனின் பெருமையும் அதில் இணைந்திருக்கிறது.

முதலில் மாமனாகிய திருமால் எழுப்பிய வலம்புரி ஓசையைப் பற்றிச் சொல்கிறார்.

மண்கமழ் உந்தித் திருமால் வலம்புரி ஓசை அந்த
விண்கமழ் சோலையும் வாவியும் கேட்டது.

இது பாகவதத்தில் வரும் கதை.

ஊடலும் கூடலும்

ஒருநாள் கண்ணபிரான் ருக்மிணியுடன் அமர்ந்திருந்தான். அப்போது அவன் ருக்மிணிப் பிராட்டியைப் பார்த்துப் புன்னகை பூத்தான். ''ஏன் நகைக்கிறீர்கள்?'' என்று பிராட்டி கேட்க, கண்ணன், ''உலகத்தில் அரசர் திலகமும் உயர்ந்த பெருமையோடு கூடியவனுமாகிய விதர்ப்ப மன்னனுடைய புதல்வி நீ. நானோ எனக்கென்று ஓர் அரசு இல்லாதவன். அதுவன்றி ஆயர் மத்தியில் வளர்ந்தவன். ஆயர்பாடியில் வெண்ணெய் முதலியவற்றைத் திருடினவன். சராசந்தனுக்கு அஞ்சி மதுரையை இழந்து துவாரகைக்கு வந்தவன். இப்படிப் பலவகையில் இழிவு பெற்ற என்னை நீ கணவனாகத் தேர்ந்தெடுத்தாயே! இது உன்னுடைய அறியாமையைக் காட்டவில்லையா?'' என்று கேட்டான். மேலும் பல வகையில் தன்னை இழிவாகக் கூறிக் கொண்டான்.

இது கேட்ட ருக்மிணிப் பிராட்டிக்கு மிக்க வருத்தம் உண்டாயிற்று. அதனால் மயங்கி வீழ்ந்தாள். அதைக் கண்ட கண்ணன்

அப்பிராட்டியை எடுத்து அணைத்துப் பன்னீர் தெளித்து உபசாரம் செய்தான். விழித்து எழுந்த ருக்மிணியைப் பார்த்து, ''உன் இயல்பைத் தெரிந்து கொள்வதற்காக நான் இப்படிப் பேசினேன்'' என்று சொல்லிச் சமாதானப்படுத்தினான். ''என் உயிர்த் துணை யாகிய உன்னை நான் கனவிலும் மறக்க மாட்டேன்'' என்று கண்ணன் சொல்ல, ''எம்பெருமானாகிய தங்களுடைய திருத்தாளை யன்றி வேறு எதையும் அறியாத ஏழையாகிய எள் உயிர் போகும் அளவுக்குத் துன்பத்தைத் தருகிற வார்த்தையை நீங்கள் சொன்னீர் களே!'' என்று கூறிப் பின்னும் சொல்ல ஆரம்பித்தாள்.

''தாங்கள் நல்ல உருவம் இல்லாதவர்கள் என்று சொன்னீர் கள். அப்படிச் சொன்னது உண்மை. தாங்கள் உருவம் கடந்த பெருமான். வேத நெறியைத் தப்பி ஒழுகியதாகக் கூறினீர்கள். தாங்கள் வேதத்திற்கு எட்டாத பரம்பொருள் என்பதை நான் உணர்வேன். வருணத்தில் தாழ்ந்த குலத்தினரோடு பயின்றேன் என்று சொன்னீர்கள். தாங்கள் அனந்தனாகையால் எல்லாக் குலத் திலும், எல்லாரிடமும் இருக்கிறீர்கள். என்னை யார் அறிவார்கள் என்று சொன்னீர்கள். தங்களை உணர்வதற்குரிய ஆற்றல் உள்ள வர்கள் யாரும் இல்லை. ஆகையால் தாங்கள் சொன்னவை எல்லாம் ஒரு வகையில் மெய்யே'' என்று புன்னகை பூத்தாள். பின்பு இருவரும் மகிழ்ந்திருந்தார்கள்.

நாரதர் செய்த கலகம்

விடிந்தது. அப்போது நாரத முனிவர் வீணையை இசைத்துக் கொண்டு அங்கே வந்து சேர்ந்தார். கண்ணபிரானும், ருக்மிணிப் பிராட்டியும் அவரை வணங்கி, அர்க்கிய பாத்திய ஆசமனீயம் அளித்து உபசாரம் செய்தார்கள். அப்போது அம்முனிவர் கண்ண பிரானுடைய கையில் பாரிசாத மலர் ஒன்றை அளித்தார். அதனைக் கண்ணபிரான் ருக்மிணியின் திருக்கரத்தில் ஈந்தான். ருக்மிணி அதனைத் தன்னுடைய குழலில் சூட்டிக்கொள்ள, அது கண்டு நாரத முனிவர், ''இந்தப் பாரிசாத மலர் இப்பெருமாட்டியின் கூந்தலில் சேர என்ன தவம் பண்ணியதோ?'' என்று பாராட்டினார். பின்பு கண்ணபிரானிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார்.

நாரதர் எப்போதும் கலகம் செய்கிறவர் என்பது புராணங்களை உணர்ந்தவர்களுக்குத் தெரியும். இப்போதும் ஒரு கலகத்தை

உண்டாக்க அவர் புறப்பட்டார். நேரே சத்திய பாமையின் அந்தப்புரத்துக்குப் போய்ச் சேர்ந்தார். சத்தியபாமை முனிவரைக் கண்டு உபசாரம் செய்து, ''இங்கே எழுந்தருளியது என்ன காரணம்?'' என்று கேட்டாள். நாரதர், ''கண்ண பிரானுடைய தேவியர்களுக் குள் உன்னை அல்லாமல் வேறு யாரிடத்திலும் மிக்க அன்பு அவனுக்கு இல்லை என்று எண்ணினேன். உனக்கும் அப்படியே அவன் சொல்லியிருக்கிறான் என நினைக்கிறேன். ஆனால் அவன் ருக்மிணியிடந்தான் பெருங்காதலுடன் இருக்கிறான். காந்தமும், ஊசியும் கலந்தாற்போல அவர்கள் இருவரும் இணைந்து வாழ் கிறார்கள். கிடைப்பதற்கரிய பாரிசாத மலரை ருக்மிணிதேவிக்கு அவன் இன்று ஈந்திருக்கிறான்'' என்றார். இவ்வாறு சொல்லி விட்டு அவர் வானுலகத்தை நோக்கிப் புறப்பட்டுவிட்டார்.

சத்தியபாமை அதனைக் கேட்டு மனம் கொதித்தாள். தன் னுடைய அணிகலன்களை எல்லாம் எடுத்துக் கழற்றிக் கீழே போட்டாள். கண்ணில் நீர் வார வெறுந்தரையில் கிடந்தாள். கண்ணபிரான் அவளுடைய அந்தப்புரத்திற்கு வந்தான். அவள் நிலையை அறிந்து அவளைத் தன் இரண்டு கையாலும் எடுக்கும் போது அவள் சீறினாள். ''மகளிரை ஏமாற்றுகின்ற கள்வர் தாங்கள் என்பதை நான் அறிந்து கொண்டேன். தாங்கள் என்னைத் தொட வேண்டாம்'' என்றாள். அதனைக் கேட்ட கண்ணன் அவளிடம் கோபத்துக்குக் காரணம் என்ன என்று கேட்டான். அவள் கூறிய வார்த்தைகளால் நாரதர் செய்த கலகம் இது என்பதை நன்கு உணர்ந்து, ''உனக்கும் பாரிசாத மலரைக் கொண்டு வந்து தரு கிறேன். ருக்மிணிக்கு நாரதர் கொடுத்த பாரிசாத மலரைத்தான் தந்தேன். உன் வீட்டு முற்றத்தில் பாரிசாதத் தருவையே கொண்டு வந்து பதிக்கின்றேன், பார்'' என்று சொல்லி அவளை மகிழ் வித்தான்.

''நாரத முனிவன் எய்தி நவின்றிடுங் கலகச் சொல்லால்
நேரிழை முனியேல் வானோர் உலகினில் இலங்கி நிற்கும்
பாரிசா தத்தை உன்றன் முன்றிலிற் பதிப்பேன் என்ன
ஆரியன் உரைத்து மார்பில் அணைத்தனன், தேவி தன்னை.''[1]

பின்பு இருவரும் மன மகிழ்ந்திருந்தார்கள்.

---

1. *ஐயங்கார் பாகவதம்*, பாரிசாதப்படலம், 34

பாரிசாதப் போர்

மறுநாள் காலை, கண்ணபிரான் எழுந்து நீராடி ஆடை அணிகள் அணிந்துகொண்டு பாரிசாதத் தருவைக் கொண்டு வரப் புறப்பட்டான். கருடனை நினைத்தவுடன் அவன் வர, அந்த வாகனத்தின்மேல் ஏறிக்கொண்டு தன் அருகில் சத்தியபாமையை வைத்துக்கொண்டு புறப்பட்டான். பாரிசாத மரம் தேவலோகத்தில் அமராவதியில் இருக்கிறது. கருட வாகனத்தின்மேல் சத்தியபாமையுடன் கண்ணபிரான் தேவலோகத்தை அடைந்தான். அவன் வருவதை அறிந்து இந்திரன் பலவகையான விருதுகளுடன் சென்று வரவேற்று உபசரித்தான். கந்தருவர், கின்னரர், இயக்கர், கிம்புருடர், வித்தியாதரர் முதலிய பலரும் வந்து வரவேற்றார்கள். நாரதர் முதலியவர்கள் வீணை வாசித்தனர். யாவரும் புகழ் சொல்லி ஏத்தினர். கண்ணபிரானை வரவேற்று அவனை வீதி வழியே வலமாக அழைத்துச் சென்று தன் அரண்மனையைச் சேர்ந்தான் இந்திரன். சத்தியபாமையை இந்திராணி தன் அந்தப் புரத்திற்கு அழைத்துச் சென்று நல்ல ஆதனத்தில் இருத்தி உபசாரம் செய்தாள்.

பின்னர் அவர்கள் இரண்டு பேரும் சொக்கட்டான் விளையாடினார்கள். அந்த விளையாட்டில் வெல்பவர்களுக்குத் தோற்பவர்கள் இன்னது கொடுக்க வேண்டுமென்று பணயம் வைத்தார்கள். ''நான் தோற்றால் பாரிசாத மலரைத் தருவேன்'' என்றாள் இந்திராணி. ''நான் தோற்றால் கண்ணபிரான் தந்த சமந்தக மணியை உனக்குத் தருவேன்'' என்று சத்தியபாமை சொன்னாள். இருவரும் உட்கார்ந்து சொக்கட்டான் பலகையை வைத்துக் காய்களை எறிந்து ஆடத் தொடங்கினார்கள். அந்த ஆட்டத்தில் இந்திராணி தோல்வி அடைந்தாள். சத்தியபாமை வெற்றி பெற்றாள். முன்னாலே பந்தயம் பேசிக்கொண்டபடி சத்தியபாமை தன்னைச் சார்ந்த சிலரை ஏவிப் பாரிசாத மலரைப் பறித்து வரும்படி அனுப்பினாள். ஆனால் பாரிசாத மரத்தைச் சுற்றிக் காவல் இருந்தவர்கள் இவர்களை மரத்தின் அருகில் போகவிடாமல் விரட்டி அடித்தார்கள். ''இந்திராணி சூடுகின்ற பாரிசாத மலரைப் பூவுலகத்தில் பிறந்தவர்கள் சூடிக்கொள்ள இயலுமோ?'' என்று கூறி விரட்டினார்கள். இவர்கள் திருப்பி வந்து சத்தியபாமையிடம் நடந்ததைச் சொல்ல, அப்பெருமாட்டி கண்ணபிரானை அழைத்து வரச் சொன்னாள்.

அதுகேட்ட கண்ணபிரான் மகிழ்ச்சி அடைந்தான். 'பாரிசாத மரத்தைப் பெயர்த்துச் சத்தியபாமையின் வீட்டு முற்றத்தில் நடுவதாக வாக்களித்து வந்தோம்; அதனைக் காரணம் இல்லாமல் செய்வது முறை அன்று. ஆகையால் இப்படி ஒரு நிகழ்ச்சி வந்து சேர்ந்தது நல்லதாயிற்று' என்று அவன் உவகை அடைந்தான். உடனே சத்தியபாமையை அழைத்துக் கொண்டு பாரிசாத மரம் இருந்த இடத்தை அடைந்தான். அங்கே காவல் இருந்த மகளிர்கள் எதிர்த்தார்கள். கண்ணன் மரத்தைப் பறித்து எடுத்துக் கொண்டு புறப்பட்டான். அவனை மேற்செல்லவிடாதபடி பலர் அவனைத் தடுத்துப் பொருதார்கள். எல்லோரும் ஆயுதங்களுடன் நின்று போர் செய்தனர். அவர்களுடன் ஆயுதம் தாங்கிப் போரிடுவது நல்லது அல்ல என்று எண்ணிய கண்ணன் தன்னுடைய கரத்தில் உள்ள வலம்புரிச் சங்கத்தை எடுத்து ஊதினான். சங்கம் வாத்தியமானாலும் திருமாலின் கையில் ஐந்து ஆயுதங்களில் ஒன்றாக அமைந்திருக்கிறது. ஆயுதம் பகைவர்களை மோதி வெற்றி பெறுவது. சங்கு ஊதி வெற்றி பெறுவது. கண்ணபிரான் தன் சங்கத்தை ஊதினவுடன் அந்த ஒலியினால் எதிர்த்தவர்கள் அத்தனைபேரும் மயங்கிக் கீழே விழுந்துவிட்டார்கள். கருட வாகனத்தின்மேல் மரத்தை வைத்துக் கொண்டு சத்தியபாமை யுடன் மீண்டும் துவாரகைக்கு வந்து சேர்ந்தான்.

'கடமுறு வெங்கரி இறையுடன் அமரர்கள் கணைகள்
பொழிந்திடமால்
படியுயர் மால்வரை திகழ வயங்கிய பணிலம் முழக்கிடவே
கடலர வம்திசை யுறுகரி யஞ்சின கமலன் நடுங்கினன்வான்
வெடிபடு காலம்இ தாமென விபுதர்கள் வெருவி
விழுந்தனரால்.''[1]

கண்ணன் தான் கொணர்ந்த பாரிசாத மரத்தைச் சத்திய பாமையின் மனையில் கொண்டுவந்து நட்டான். இதற்குமேலும் ஒரு கதையுண்டு. சத்தியபாமையின் முற்றத்தில் நட்ட அந்த மரம் நன்றாக வளர்ந்து பூத்துக் குலுங்கியது. ஆனால் அது சற்றே வளைந்து பூவையெல்லாம் ருக்மிணியின் மாளிகையில் உதிர்த்தது என்று சொல்வது உண்டு.

---

1. *ஐயங்கார் பாகவதம்*, பாரிசாதப்படலம், 67

இங்கே, பாரிசாத மரத்தை எடுத்து வந்த கண்ணனைத் தேவ லோகத்திலுள்ள பலரும் எதிர்த்தபோது அவன் தன்னுடைய வலம்புரியை முழக்கி அவர்களை எல்லாம் கீழே விழச் செய்தான் என்ற செய்தி நினைவில் கொள்வதற்குரியது. அதை அருண கிரியார் எடுத்துக் காட்டுகிறார். திருமால் என்று பாட்டில் கூறி னாலும் கண்ணபிரானாக அவதரித்தபோது நிகழ்ந்த நிகழ்ச்சியையே இது சொல்கிறது. அவன் திருக்கரத்திலுள்ள சங்கு வலம்புரிச் சங்கம். இடம்புரி என்பது சாதாரணமாக எங்கும் கிடைக்கிறது. வலப்பக்கமாகச் சுழித்திருப்பது வலம்புரிச் சங்கு. அது மிகவும் சிறந்தது. கண்ணன் கையிலுள்ள வலம்புரிச் சங்கத்திற்குப் பாஞ்ச சன்னியம் என்று பெயர். அது பெரு முழக்கம் செய்து தேவர் களை மயங்கி விழப் பண்ணியது. அதன் முழக்கம் அப்போது தேவலோகத்திலுள்ள சோலைகளிலும் வாவிகளிலும் கேட்டது. அதைத்தான் முதலில் அருணகிரியார் சொல்கிறார்.

மண்கமழ் உந்தித் திருமால் வலம்புரி ஓசை அந்த
விண்கமழ் சோலையும் வாவியும் கேட்டது.

அந்த ஓசையும் இந்த ஓசையும்

திருமாலினுடைய உந்தி மண்கமழ் உந்தி. அது மண் வாசனை வீசுகின்றதாம். அவன் நிறைய மண்ணைத் தின்றவன். திருமாலின் வயிற்றில் அண்டபிண்ட சராசரங்கள் எல்லாம் இருப்பதனால் அவனை மண்தின்றவன் என்று சொல்வது ஒரு வழக்கு. இங்கே அந்தச் செய்தியைச் சுவைபடச் சொல்கிறார் அருணகிரியார். ஒருகால் திருமால் வேறு எதையாவது தின்று ஊதியிருந்தால் பலமாக ஊதியிருப்பான். மண்ணைத் தின்று விட்டு ஊதியதால் அவனுக்குத் தொனி அதிகமாக வரவில்லை போலும் என்று நினைக்கும்படியாகச் சொல்கிறார்.

கண்ணன் இது செய்ய வேண்டுமென்று நினைத்து முயன்று ஊதியது வலம்புரியோசை. ஆனால் முருகப் பெருமான் திரு அரையிலுள்ள கிண்கிணியோ அவன் விளையாடும்போது தானே ஒலித்தது. கிண்கிணி ஓசையைவிட வலிந்து ஊதின வலம்புரி ஓசைதான் மிக வலிமையுடையதாக இருக்க வேண்டும். ஆனால் இங்கே, திருமால் முயன்று மூச்சைப் பிடித்து ஊதிய வலம்புரி

யோசை முருகப்பெருமானுடைய கிண்கிணி ஓசைக்குப் பக்கத் தில் வரமுடியாது என்று பாடுகிறார்.

தேவலோகத்தில் கற்பக மரச்சோலை ஒன்று இருக்கிறது. அந்தச் சோலையில்தான் பாரிசாத மரம் வளர்கிறது. அங்கிருந்து ஊதின அந்தச் சங்கின் ஓசை தேவலோகம் முழுவதும்கூடக் கேட்க வில்லை. அந்த மரம் மணம் வீசுகின்ற சோலையிலும், தேவர்கள் நீராடுகின்ற வாவிகளிலும் கேட்டது. ஆனால் முருகப்பெரு மானுடைய கிண்கிணி ஓசையோ சர்வலோகமும் கேட்டதாம். அதை அடுத்தபடி சொல்ல வருகிறார் அருணகிரியார்.

வேல் எடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளை திருவரையில்
கிண்கிணி ஓசை பதினா லுலகமும் கேட்டதுவே.

கிண்கிண் என்று ஒலி அமைவதனால் அந்த அணிகலனுக்குக் கிண்கிணி என்ற பெயர் வந்தது. நாம் சலங்கை என்று சொல் வதுதான் அது.

முருகன் திருவிளையாடல்கள்

முருகப்பெருமான் திருஅவதாரம் செய்தவுடன் தன்னுடைய பராக்கிரமத்தைக் காட்டுவதற்கு அவன் பலவகையான திருவிளை யாடல்களைச் செய்தான். அதனைக் கண்ட சூரன் முதலிய அசுரர்கள் நடுங்கினார்கள். கையில் வேலை எடுத்துக்கொண்டு அவன் ஓடியாடி விளையாடினான். அதனால் எட்டு மலைகளும் நடுங்கின. பூமி அதிர்ந்தது. இப்படி அவன் ஆடியதால் அவன் அரையிலுள்ள கிண்கிணி மிக்க ஓசையை உண்டாக்கியது.

முருகப்பெருமான் இவ்வாறு செய்த திருவிளையாடல் களைக் கந்தபுராணம் திருவிளையாடல் படலம் என்று ஒரு தனிப் படலமாகவே விரித்துச் சொல்கிறது. குலகிரிகளை எல்லாம் ஓரிடத்தில் கூட்டுவான். பிறகு அவற்றை எல்லாம் தலைகீழாகப் பூமியில் நாட்டுவான். அலைகடல்கள் எல்லாவற்றையும் ஒன்றாகக் கூட்டுவான். சக்கரவாளகிரியைக் கொண்டுவந்து ஆகாச கங்கைக்கு அணையாக அமைப்பான். பாதாளத்தில் இருக்கும் எட்டுப் பெரிய நாகங்களைப் பற்றிக் கொண்டுவந்து கயிற்றைப் போல மேரு முதலிய மலைகளில் சுற்றி இழுப்பான். இப்படி அவன்

பலபடியாக விளையாடலைச் செய்தாலும், எந்த உயிருக்கும் துன்பமே உண்டாகவில்லையாம்.

"குலகிரி அனைத்தும் ஓர்பாற் கூட்டிடும் அவற்றைப் பின்னர்த்
தலைதடு மாற்ற மாகத் தரையிடை நிறுவும் எல்லா
அலைகடல் தமையும் ஒன்றா ஆக்குறும் ஆழி வெற்பைப்
பிலனுற அழுத்தும் கங்கைப் பெருநதி அடைக்கும் மன்னோ."

"இருள்கெழு பிலத்துள் வைகும் எண்டொகைப் பணியும் பற்றிப்
பொருள்கெழு மேரு ஆதி அடுக்கலிற் பூட்டி வீக்கி
அருள்கெழு குமர வள்ளல் ஆவிகட் கூறின் றாக
உருள்கெழு சிறுதே ராக்கொண் டொல்லென உருட்டிச் செல்லும்"

என்று இத்தகைய விளையாடல்களைக் கச்சியப்ப சிவாசாரியார் கந்தபுராணத்தில் வருணித்துச் செல்கிறார். நம்முடைய பிள்ளைகள் பிறந்தவுடன் வீதியில் ஓடுவதற்குக்கூட ஆற்றல் இல்லாமல் இருக்கிறார்கள். வீதியில் காரின் குழல் ஊதினால் பயந்து ஓடி வருகிறார்கள். சூரபன்மாவைக் குலத்தோடு அழிக்க வந்த பெரு வீரனாகிய இந்தப் பிள்ளை விளையாடும்போதே வேலை எடுத்து விளையாடியது. அந்த வேல் அசுரர்களையும் அஞ்ஞானத்தையும் அழிக்கும் ஆயுதம்.

வேலெடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளை.

மலைகள் எளிதில் அசையாதவை. அதனால் அவற்றுக்கு அசலம் என்ற பெயர் உண்டாயிற்று. துளங்காமல் நிற்கும் மலைகளும் முருகப்பெருமான் பூமி அதிரும்படி விளையாடிய போது துளங்கின; சிந்தின.

உலகத்திற்கு எல்லையாக ஒவ்வொரு திக்கிலும் ஒவ்வொரு மலை இருக்கிறது என்று சொல்வது மரபு. ஆண்டவன் அந்த எல்லையைக் குலைக்கிறான். அவன் விளையாடல் உலகத்தின் எல்லைக்கும் மேல் போய்விடுகிறது. அவன் விளையாட்டு இட எல்லையைத் தகர்ப்பது என்ற கருத்தையே இது காட்டுகிறது. உயிர்களுக்கு ஊறு ஏற்படாமல் அவன் விளையாடினான் என்பதை நாம் நினைக்கும்படியாகச் சொல்கிறார் கச்சியப்ப சிவாசாரியார்.

உலகம் என்பது மயக்கம் நிறைந்தது. பிரபஞ்ச வாசனை ஒருவனுக்கு அமைந்தால் அவன் மேன்மேலும் துன்பத்தை

அடைகிறான்; மீட்டும் பிறப்பதற்குரிய வழியைத் தேடிக் கொள் கிறான். பிரபஞ்ச வாசனையை இறைவன் திருவருளால் நீக்கிக் கொள்ளும் ஆற்றலைப் பெற்றவன் பிறப்பு இறப்புகளிலிருந்தும் நீங்குகிறான். இதைத்தான் கந்தர் அலங்காரத்தின் முதல்பாட்டில் நினைப்பூட்டினார்.

"பிரபஞ்சம் என்னும் சேற்றைக் கழிய வழிவிட்டவா!"

ஐந்து பூதங்களினால் ஆன இந்தப் பிரபஞ்சம் எல்லைக்குள் அடங்கியது. சலனம் இல்லாத மலைகளை எல்லைகளாக எட்டுத் திக்கிலும் கொண்டு அது இருக்கிறது. முருகப் பெருமான் அந்த எட்டுக் குல மலைகளையும் தன் விளையாடலினாலே தகர்த்து விடுகிறான். மிக்க வீரம் உடையவர்களும், பெரு முயற்சி செய் பவர்களும் மக்களை அழிக்கலாம். மாளிகைகளை அழிக்கலாம். நாட்டை அழிக்கலாம். மலைகளை அழிக்க ஒண்ணா. முருகன் அந்த அரிய செயலைச் செய்கிறான்.

வினை என்பது போருக்குப் பெயர். வினையாலும் அசைக்க முடியாத மலைகளை ஆண்டவன் விளையாட்டினாலே அசைக் கின்றான். மலைகளை அசைத்தால் அதனால் உயிர்களுக்கு ஊறு பாடு விளையுமே என்று தோன்றும் அல்லவா? அவன் செய்கிற இந்த விளையாட்டு உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்கவில்லை. இது ஒரு சிறந்த உட்கருத்தை உடையது. பிரபஞ்சத்தின் எல்லை களை எல்லாம் அறுத்த அவனுடைய திருவிளையாடல்கள், தன்னைச் சார்ந்தவர்களுக்குப் பிரபஞ்சச் சேற்றையே போக்கி இன்பம் தருபவன் அவன் என்பதை நினைப்பூட்டுகின்றன.

அருள் விளையாடல்

விளையாடும் பிள்ளை

என்று சொல்கிறார். முருகப்பெருமான் செய்கிற காரியங்கள் அத்தனையும் விளையாட்டு. பொதுவாக, தெய்வங்கள் செய்வன வற்றைத் திருவிளையாடல் என்றே சொல்வார்கள். விளை யாட்டுக்கும் வினைக்கும் வேறுபாடு உண்டு. உலகத்தில் விளை யாட்டுக்கும் இரண்டு கட்சி உண்டு. வினைக்கும் இரண்டு கட்சி உண்டு. வினை முடிவில் தோல்வியும் துன்பமும் உறுவர் ஒரு கட்சியினர். வெற்றியும் மகிழ்ச்சியும் பெறுவர் மற்றொரு கட்சி

யினர். விளையாடலிலோ ஒரு கட்சி வென்றாலும், ஒரு கட்சி தோற்றாலும் முடிவில் இரண்டு கட்சியினருக்கும் இன்பம். இரண்டு பேர்களும் சேர்ந்து விருந்துண்பர். விளையாடலில் கட்சி அமைத்துக் கொண்டவர்கள் ஒருகால் வெற்றி, தோல்வி என்று சொன்னாலும் அதைப் பார்த்தவர்களுக்கு மகிழ்ச்சியே உண்டாகிறது.

ஆண்டவன் திண்கிரி சிந்த விளையாடினான். அந்த விளை யாடலால் உலகத்திற்கு இன்பம் உண்டானதேயன்றித் துன்பம் உண்டாகவில்லை. அவன் தன்னுடைய அருளை எல்லோரும் பெறுவதற்காகப் பலவிதமான விளையாடல்களைச் செய்கிறான். அவை வெவ்வேறு வகையாகத் தோன்றினாலும் முடிவில் இன்பத்தைத் தருவனவே. அவன் சூரபன்மனை எதிர்த்துப் போராடியதாகக் கந்தபுராணம் சொல்கிறது. அவ்வாறு செய்த போர்கூட அவனுடைய திருவிளையாடலில் ஒன்றுதான். சூரபன் மனை அழிக்க வேண்டுமென்பது அவன் நோக்கம் அன்று. முரு கனைப் பகைவன் என்று அந்த அசுரன் எண்ணினானேயொழிய, முருகன் சூரபன்மனை அவ்வாறு எண்ணவில்லை. பொல்லாத குழந்தையைத் தந்தை தண்டிப்பது போல, முருகன் அவனுடைய பொல்லாத்தனத்தைப் போக்குவதற்காகப் பல காலம் போர் செய்தான். என்றைக்காவது அவன் அறிவு பெற்றுத் தன் வலி யின்மையைத் தெரிந்துகொண்டு காலில் வந்து விழுவான் என்று எதிர்பார்த்தான். அவ்வாறு சூரன் செய்யாமையினால் கடைசியில் தன் திருவுருவத்தைக் காட்டினான். அந்தக் கோலத்தின் பேரெழி லில் மயங்கிய சூரன் உள்ளம் குழைந்து அடியாருடைய இயல்பைப் பெற்றான். அப்போது முருகப்பெருமான், 'இவன் உள்ளம் நையும் பண்பினனாக இருக்கிறான்; இவனை ஆட் கொள்ளலாம்' என்று கருதி அவன்மேல் வேலைவிட்டான். மாமரமாக நின்ற உருவம் பிளந்து இரண்டு பகுதிகளாக நிற்க, ஒரு பகுதி ஆண்டவன் வாகனமாகவும், மற்றொரு பகுதி சேவல் கொடியாகவும் ஆயின. சூரன் பெற்றது ஆண்டவனது வாகனமாக வும், கொடியாகவும் நிற்கும் பேறு. இது சங்காரம் ஆகுமா? இது ஒரு வகையான அருள்.

முருகப்பெருமான் சூரனுக்கு முன்னால் நின்று போர் செய் தது ஒரு வகையான அருள்தான் என்று சூரபன்மனே சொல் வதாகக் கந்தபுராணம் தெரிவிக்கிறது.

"அண்ணலார் குமரன் மேனி அடிமுதல் முடியின் காறும்
எண்ணிலா ஊழி காலம் எத்திறம் நோக்கி னாலும்
கண்ணினால் அடங்கா துன்னிற் கருத்தினால் அடங்கா
தென்பால்
நண்ணினான் அமருக் கென்கை அருளென நாட்ட லாமே"

என்று சொல்கிறார் கச்சியப்பர். சிறிதும் ஐயம் இல்லாமல் துணிவாகச் சொல்கிறான் என்பதைப் புலப்படுத்த,

"நாட்ட லாமே"

என்ற சொல்லை இங்கே அமைக்கிறார்.

அறுமுகன் ஆடல்

முருகப்பெருமான் வள்ளிநாயகியிடம் காதல் கொண்டான். அதுவும் ஒரு வகையான திருவிளையாடல்தான். உலகில் மக்கள் காமத்தினால் துன்புறுகின்ற நிலை அன்று அது. ஆண் பெண் உறவுக்கு முன்னாலே காதல் வயப்பட்டுத் துன்புறுகிற நிலைக்கும் இதற்கும் வேறுபாடு உண்டு. முருகப்பெருமான் வள்ளியம் பெருமாட்டியை ஆட்கொள்வதற்காக வேண்டி விளையாடினான். அதனைக் கச்சியப்ப சிவாசாரியார் 'அறுமுகன் ஆடல்' என்று சொல்வார்.

"உலைப்படும் மெழுக தென்ன உருகியே ஒருத்தி காதல்
வலைப்படு கின்றான் போல மறுகியே மாழ்கி நின்றான்
கலைப்படு மதியப் புத்தேள் கலங்கலம் புனலில் தோன்றி
அலைப்படு செய்கை யன்றோ அறுமுகன் ஆடல் எல்லாம்."

பெருமான் செய்கின்ற அத்தனையும் திருவிளையாடல்கள். விளையாட்டில் ஈடுபடுபவன் குழந்தை. குழந்தை எது செய்தாலும் அதனை விளையாட்டு என்றே சொல்வார்கள். ஆகவே உருவத்தாலும் குழந்தைத் திருமேனி கொண்ட எம்பெருமான் செய்யும் அத்தனையும் விளையாடல்களே என்பதில் சற்றும் ஐயமில்லை.

திண்கிரிகள் எல்லாம் சிந்த விளையாடுகின்ற முருகன் அந்த விளையாட்டினால் அடியார்களுக்கு நலமே செய்தான். இந்திராதி தேவர்கள் முதலில் அஞ்சினாலும், அவன் பெரு வீரம் உடைய

வன், நமக்கு நலம் செய்யத் திரு அவதாரம் செய்திருக்கிறான் என்று உணர்ந்த பிறகு மகிழ்ந்தார்கள். ஆனால் சூரன் முதலியோர் இப்படி ஒரு பிள்ளை தோன்றி இருக்கிறதே என்று உணர்ந்து நடுங்கினார்கள். தன்னுடைய சிறந்த வலிமையையும், அருளையும் புலப்படுத்த, முருகப்பெருமான் திரு அவதாரம் செய்தவுடன் இவ்வாறு பலவகைத் திருவிளையாடலில் ஈடுபட்டான் என்று கந்தபுராணம் பேசுகின்றது.

அப்படித் திண்கிரி சிந்த விளையாடும் பிள்ளை, குழவி உருவங்கொண்டு திருவரையில் கிண்கிணியை அணிந்திருக்கிறான். அவன் குதித்து விளையாடும்போது, தாவி விளையாடும் போது, மலைமேலே வேலை வீசி விளையாடும்போது, அந்தக் கிண்கிணி ஒலிக்கிறது. அந்த ஓசை எல்லா உலகமும் கேட்டதாம். மேல் ஏழு உலகமும், கீழ் ஏழு உலகமும் ஆகப் பதினான்கு உலகம் உண்டென்று சொல்வார்கள். அந்தப் பதினான்கு உலகங்களிலும் அந்த ஓசை கேட்டது.

விளையாட்டின் பயன்

முருகப்பெருமான் செய்த திருவிளையாடலின் பயன் ஓர் இடத்திற்கு மாத்திரம் அமைவது அன்று. எல்லா உலகங்களிலும் உள்ள உயிர்கள் அவன் செய்கிற திருவிளையாடல்களினால் இன்பம் பெறுவார்கள். இதனையே அழகாக, அவன் கிண்கிணி ஓசை பதினான்கு உலகமும் கேட்டது என்பதனால் பெற வைக்கிறார்.

கண்ணபிரான் தன்னுடைய மனையாட்டியின் நலம் கருதிப் பாரிசாத மரத்தைக் கொண்டு வர முயன்றான். அதற்காகத் தான் இருக்கும் இடத்திலிருந்து தேவலோகம் சென்று தேவர்களோடு போரிட்டான். முயன்று மூச்சைப் பிடித்து வலம்புரி ஓசையை முழக்கினான். அந்த ஓசை பாரிசாத மரம் வளர்ந்திருந்த சோலையிலும், அதன் அருகில் இருந்த வாவியிலும் மட்டும் கேட்டது. அதற்குமேல் அந்த முழக்கம் கேட்கவில்லை. முருகப் பெருமானோ சரவணப் பூம்பொய்கையில் திரு அவதாரம் செய்து கந்தகிரியைச் சுற்றி விளையாடினான். அவன் விளையாடலால் மலைகள் எல்லாம் அதிர்ந்தன. அவனுடைய அழகிய இடையில் அணிந்திருந்த கிண்கிணிகள் அசைந்தன. அந்த அசைவிலே உண்டான ஓசை பதினான்கு உலகமும் கேட்டு இன்பத்தைச்

செய்தது. ''கேட்டதுவே'' என்று மட்டும் இந்தப் பாடலில் அருணகிரியார் சொல்கிறார். ஆயினும், இந்தக் கிண்கிணி ஓசையைக் கேட்ட உயிர்கள் எல்லாம் நம்மைப் பாதுகாக்கும் நாயகன் வந்துவிட்டான் என்று எண்ணி உள்ளம் தளிர்த்தன என்பதை இதனால் பெறும் குறிப்பாகக் கொள்ள வேண்டும்.

முருகப்பெருமான் திரு அவதாரம் செய்தவுடனே தன்னுடைய வீரத்தையும் அருட் பெருக்கையும் காட்டிக் கொண்டான் என்பது இதன் கருத்து.

மண்கமழ் உந்தித் திருமால்
வலம்புரி ஓசைஅந்த
விண்கமழ் சோலையும் வாவியும்
கேட்டது; வேல்எடுத்துத்
திண்கிரி சிந்த விளையாடும்
பிள்ளை திருஅரையில்
கிண்கிணி ஓசை பதினா
லுலகமும் கேட்டதுவே.

[மண்வாசனை வீசுகின்ற திருவயிற்றை யுடைய திருமாலாகிய கண்ணபிரான் ஊதிய வலம்புரிச் சங்கின் முழக்கம் அந்த வானுலகமெல்லாம் மணம் கமழும் கற்பகச் சோலையிலும் வாவியிலும் கேட்டது; வேலைக் கையில் ஏந்தித் திண்மையான மலைகள் குலையும்படி திருவிளையாடல் புரிந்த இளங்குழந்தையாகிய முருகனது அழகிய இடையிலுள்ள கிண்கிணியின் ஓசை பதினான்கு உலகமும் கேட்டது.

உந்தி – வயிறு. விண் – தேவர் உலகம். பிள்ளை என்று பொது வகையிற் சொன்னாலும் வேலெடுத்து என்ற சிறப்பினால் முருகன் என்பது தெளிவாயிற்று. அரை – இடை]

இது கந்தர் அலங்காரத்தில் 93–ஆவது பாட்டு.

நல்ல வேட்கை

தாயும் குழந்தைகளும்

கருணைமிக்க ஒரு தாய்க்குப் பல குழந்தைகள் இருந்தார்கள். அந்தக் குழந்தைகளில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோயால் துன்புற்றது. சிறிய வியாதிகளும், பெரிய வியாதிகளும் அந்தக் குழந்தைகளுக்கு இருந்தன. சில குழந்தைகள் கண்வலியால் துன்புற்றன. வேறு சில பல்வலியால் துன்புற்றன. வயிற்று வலியால் அவதியுற்ற சில குழந்தைகள் உண்டு. வயிற்றில் கட்டி விழுந்து அதனால் துன்புற்ற குழந்தைகளே மிகுதி. ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனியே மருந்து வாங்கிக் கொண்டு வந்து அந்தக் குழந்தைகளில் ஒவ்வொன்றுக்கும் கொடுத்து, அவற்றிற்கு வேண்டிய பரிகாரம் செய்து வந்தாள் தாய்.

ஆனால் அவளுக்கு அடிக்கடி கட்டி வீழ்ந்த குழந்தைகளைப் பற்றியே நினைப்பே அதிகம். காரணம் : அந்த நோயினால் அவஸ்தைப்படுகிற குழந்தைகளே மிகுதியாக இருந்தன. ஆகையால் மருத்துவரிடம் போகும்போதெல்லாம் அதிக நேரம் கட்டி விழுந்த குழந்தைகளைப் பற்றியே பேசிவந்தாள். அந்தக் குழந்தைகளுக்காகவே பல மருத்துவர்களைத் தேடிச் சென்றாள். ஆகவே அவளுக்குக் கட்டியைப் பற்றி எண்ணமும் அதற்குரிய மருந்து வாங்கும் நினைப்பும் அடிக்கடி எழும்.

பெரிய நோய்

அருணகிரியார் அவளைப்போல இருக்கிறார். உலகில் மக்களிடம் பல வகையான குற்றங்கள் இருக்கின்றன. தீய குணங்கள் பல. காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்று சொல்லும் ஆறு பகைவர்களும் மக்களுடைய உள்ளத்தில் இருந்து மன அமைதி இல்லாமல் செய்கிறார்கள். இந்த ஆறிலும் காமமாகிய ஆசை எல்லாவற்றிலும் மீதூர்ந்து

நிற்கிறது. அந்த ஆசையும் மண், பெண், பொன் என்று மூன்று வகைப்படும். இந்த மூன்று ஆசைகளிலும் மிக விரிவாக, ஆழப் படர்ந்து நிற்கும் ஆசை பெண்ணாசை. பெண்ணாசையினால் துன்புறுகிறவர்கள் எல்லாக் காலத்தும் இருக்கிறார்கள். எப்போ தெல்லாம் தவம் குறைகிறதோ, மக்களுக்கு மன வலிமை குறைகிறதோ, அப்போதெல்லாம் அந்த ஆசை மீதூர்ந்து நிற்கும். பெரிய இதிகாசங்களில் வருகிற கேடுகளுக்கு மூல காரணம் காமமாக இருப்பதை நாம் பார்க்கிறோம். மனிதனைப் பீடிக்கும் அக நோய்களுக்குள் காமம் மிகமிக வலிமையானது; பெரும் பாலானவர்களைப் பீடிக்கும் வியாதி அது.

அருணகிரியார் மக்களிடம் உள்ள தீய குணங்களை மாற்று வதற்குரிய பரிகாரங்களை அங்கங்கே சொல்கிறார். ஒவ்வொன் றையும் பற்றித் தனித்தனியே சொன்னாலும் பெரிய நோயாகிய காமத்தைப் பற்றி அடிக்கடி சொல்கிறார்; மிகுதியாகச் சொல் கிறார். அப்படி மிகுதியாகச் சொல்வதற்குக் காரணம் அந்தத் தீய குணமே பெரும்பாலோரிடம் ஆழமாகப் பதிந்து இருப்பதுதான். அவர் பாடிய திருப்புகழ் முதலிய நூல்களிலுள்ள பாடல்களைக் கணக்கு எடுத்துப் பார்த்தால் காம நோய் பற்றியனவே மிகுதியாக இருப்பதைக் காணலாம். மக்களிடத்தில் கருணை கொண்ட மனத்தவர் ஆகையால், எந்த நோய் மிகுதியாக இருக்கிறதோ அதைப் பற்றி மிகுதியாகக் கண்டிக்கும் இயல்பு அவரிடம் இருந்தது.

கால நிலை

அருணகிரிநாதர் வாழ்ந்த காலத்தில் பெரிய மன்னர் யாரும் இல்லை. அங்கங்கே குறுநில மன்னர்கள் இருந்தார்கள். அவர் களுக்கு வரையறையான ஒழுக்கம் இல்லை. தங்களுக்குக் கிடைத்த பொருளைக் கொண்டு இந்த வாழ்வில் பெறுவதற்குரியது காம இன்பம் ஒன்றுதான் என்று எண்ணி அதில் ஈடுபட்டிருந்தார்கள். அதனால் எங்கே பார்த்தாலும் காமக் கேளிக்கைகளும், அதனைப் பாராட்டும் முயற்சிகளுமே நிறைந்திருந்தன. அந்தக் காலத்தில் பலவகையான பிரபந்தங்கள் காமத்தை உண்டாக்கும் முறையில் எழுந்தன. சிற்றரசர்கள் அப்படி வாழ்ந்ததனால் செல்வர்களும் அப்படியே வாழ்ந்தார்கள். ஒரு செல்வன் ஒரு மனைவியைத் திருமணம் செய்து கொண்டு வாழ்வதே முறை. அப்படியின்றிப்

பல மனைவிகளையும், பல காமக் கிழத்திகளையும் ஒவ்வொரு செல்வனும் பெற்றிருந்தான். அத்தகையவர்களையே பெரிய செல்வர்களாக மதிக்கும் அவல நிலை அப்போது இருந்தது.

இவற்றை எல்லாம் கண்ட அருணகிரியாருக்கு, உலகில் இந்தக் காம நோயாகிய தீ இப்படிப் பற்றியிருக்கிறதே, இந்த நோயைப் போக்க வேண்டுமே என்ற கவலை உண்டாயிற்று. அதனால் அடுத்தடுத்துப் பல வகைகளில் அந்த நோயைப் பற்றிப் பாடலானார். பிறரைப் பற்றிச் சொல்லப்போனால் அவர்களுக்குக் கோபம் வரும் என்று எண்ணிக் குற்றத்தைத் தம்மேலேயே ஏறிட்டுக் கொண்டு பாடினார். இது அவருடைய கருணைக்கு அடையாளம் என்பதைப் பலமுறை நாம் பார்த்திருக்கிறோம்.

வேட்டல்

இப்போது ஒரு புதிய முறையில் காமுகனுடைய நிலையைப் பாடுகிறார். தம்முடைய நெஞ்சைப் பார்த்து அறிவுறுத்தும் முறையில் இந்தப் பாட்டு அமைந்திருக்கிறது. 'நெஞ்சே, இன்னதை விரும்ப வேண்டும்; இன்னதை விரும்பக்கூடாது என்பதைத் தெரிந்துகொள்ளாமல் துன்பத்திற்குக் காரணமான பொருள்களை விரும்புகிறாயே!' என்ற முறையில் பாட்டு வருகிறது.

தெள்ளிய ஏனலிற் கிள்ளையைக் கள்ளச்
சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன் தாள்வேட் டிலைசிறு
வள்ளைதள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத் தோதகச்
சொல்லைநல்ல
வெள்ளிய நித்தில வித்தார மூரலை
வேட்ட நெஞ்சே.

வேட்டல் என்றால் விரும்புதல் என்று பொருள். நாம் மனைவியை விரும்பிக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டும். கலியாணத்திற்கு வேள்வி என்று ஒரு பெயர் உண்டு. வேட்டல் என்பதற்கே திருமணம் செய்தல் என்று பொருள். மனைவியைத் திருமணம் செய்துகொண்ட இடத்தை வேட்டகம் என்று சொல்கிற மரபு ஒன்று தமிழ்நாட்டில் உண்டு. அப்படியே விரும்பிச் செய்

கின்ற காரியம் வேள்வி. முனிபுங்கவர்கள் செய்கிற செயல் அது. நம்முடைய வாழ்நாளில் நலம் தருவதாகவும், மறுமைக்கு உறுதி தருவதாகவும் இருக்கும் செயல்களையே வேட்க வேண்டும், அல்லாதவற்றை வேட்டால் அவற்றால் துன்பமே உண்டாகும்.

அருணகிரியார் தம்முடைய நெஞ்சைப் பார்த்து இரங்குவது போலச் சொல்கிறார்; ''நெஞ்சமே, நீ எதை வேட்க வேண்டுமோ அதை வேட்கவில்லையே! ஒன்றையும் வேட்காமல் சும்மா இருந்தாலும் போதுமே! அப்படியின்றி எதை வேட்டால் உனக்கு உய்வு கிடைக்காதோ அதை வேட்கிறாயே!'' என்று சொல்கிறார். மனத்திற்கு ஆசைப்படுவது இயல்பு. ஒன்றைவிட்டு ஒன்றைப் பற்றி அதனைத் தன்னுடையது ஆக்கிக்கொள்ள வேண்டுமென்ற ஆசை மனிதனது உள்ளத்தில் நிகழும். இந்த ஆசைதான் பிறப்புக்கு மூல காரணம் என்று பெரியவர்கள் சொல்கிறார்கள். ஆனால் இந்த ஆசை நல்ல பொருள்களிடத்தில் சென்றால் அதன் பயனாக நன்மையே விளையும். ஐம்பொறிகளுக்குரிய நுகர்ச்சியைத் தரும் பொருளிடத்தில் ஆசை உண்டாகிறது. அதை நுகர்ந்தால் அந்த அளவில் ஆசை நிறைவேறாமல் மீட்டும் மீட்டும் வளர்ந்து வருகிறது. அதனால்தான் உலகில் மயலில் ஈடுபட்டவர்களுக்கு எந்தக் காலத்திலும் மன நிறைவு உண்டாவதில்லை. இறைவனுடைய திருவருளைப் பெற்ற பிறகுதான் மன நிறைவு ஏற்படும்.

ஆசையும் மன நிறைவும்

ஐம்பொறிகளும் தூராக் குழிகளாக இருக்கின்றன. உணவை வயிறார உண்பவனுக்கு அப்போதைக்கு உணவில் ஆசை இல்லாமல் இருக்குமேயொழிய, அடுத்த வேளை மீட்டும் அந்த ஆசை எழும். கண்ணால் பார்க்கும் காட்சியும், காதால் கேட்கும் ஒலியும், மூக்கால் மோந்து பார்க்கும் மணமும் போதும் என்ற அளவில் என்றைக்கும் நமக்குக் கிடைப்பது இல்லை. உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களையும் நுகர்ந்தாலும் அமர லோகத்திலுள்ள பொருள்களை நுகர வேண்டும் என்ற ஏக்கம் உண்டாகிறது. நூறு ஆண்டுகள் ஒருவன் வாழ்ந்து ஐம்பொறி களின் மூலம் இன்பங்களைப் பெற்றாலும் இன்னும் ஆயிரம் ஆண்டுகள் நமக்குக் கிடைக்கவில்லையே என்ற அவாத் தோன்றுகிறது. மன நிறைவு இல்லாதபோது எத்தனை இன்பம் கிடைத்தாலும் மேன்

மேலும் ஆசை எழுமேயன்றி அடங்காது. யாருக்கு மன நிறைவு உண்டாகிறதோ அவன்தான் இறைவனைக் காண முடியும். அப்படிச் சொல்வதைக் காட்டிலும் இறைவனுடைய திருவருளுக்காக ஆசைப்படுகிறவனுக்கு அந்த அருளிலேதான் நிறைவு உண்டாகும் என்று சொல்ல வேண்டும். இறைவனிடத்தில் ஆசைப்படுகிற காமம் சிவகாமம். அது பக்தி முறுகிய நிலை. மற்றப் பொருள்களிடத்தில் உள்ள காமம் அவகாமம். பருவத்துக்குரிய உணர்ச்சியால் மகளிரிடத்தில் மயல் கொண்டு தீய நெறியில் உள்ளம் செல்லுகிறது. தன்னுடைய மனையாளோடு வாழ்வது அறத்தின்பாற்படும். அப்படியின்றி மற்ற மகளிரைக் கண்டோ, பொது மகளிரிடத்தில் ஈடுபட்டோ உள்ளத்தைச் செல்லவிடுவது பொல்லாத காமமாகும். தன்னுடைய மனையாட்டியிடத்தில் காதல் செய்வதை அன்புள்ள காமம் என்றும் அல்லாதவற்றைத் தீய காமம் என்றும் சொல்வார்கள்.

மனையாட்டியிடத்தில் பெறுகின்ற இன்பமும் அறத்தோடு பொருந்தியது. பிறவிதோறும் தொடர்ந்து வருகின்றவர்கள் கணவன் மனைவி என்ற கொள்கையை உடையது இந்த நாடு. மனையாட்டியோடு வாழ்வது அறம் செய்வதற்காக. அந்த அறத்தில் மனம் ஈடுபடும் பொருட்டு அறத்தோடு இன்பத்தையும் துணையாக அமைத்திருக்கிறான் ஆண்டவன். அந்த இன்பம், அறத்தோடு பொருந்தி இருந்தால்தான் உறுதிப்பொருளில் ஒன்றாக இருக்கும். அவ்வாறின்றி வெறும் இன்பத்திற்காக மாத்திரம் ஆசைப்பட்டால் அதனால் விளைகிறது துன்பந்தான். அது அறத்தோடு சாராது; உறுதிப்பொருள் ஆகாது.

புறக்காட்சி

புறக்கண்ணினாலே புறப்பொருளைக் கண்டு ஆசைப்படும் இயல்பு எப்பொழுதும் தவறானது. அதனால் விளைவது வெறும் காமம். மனைவியும் கணவனும் உள்ளத்துள் அன்பு மிக்குப் பழகுவதனால் நாளடைவில் புற அழகு மறைந்தாலும் அக அழகு குறைவது இல்லை. புறக் கண்ணினால் கண்டு அடைகிற மோகம் பலகாலம் நில்லாது. முதலில் மோகம் உண்டானால் பிறகு அறத்தோடு பொருந்தும் இன்பம் உண்டாவது எளிதன்று. மனத்தில் தோன்றிய அன்பற்ற பற்று, மோகத்திற்குக் காரணமான

பொருள் இல்லாமல் போனால் மங்கிவிடும். அன்பு முன்னாலும், மோகம் பின்னாலும் வந்தால் அந்த மோகம் போனாலும் அன்பு நிலை நிற்கும்.

இளமை மணம்

இந்தத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டே இந்த நாட்டில் சின்னஞ்சிறு பிராயத்தில் திருமணம் செய்து வந்தார்கள். இப்போது அத்தகைய மணம் நடக்க வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றி இங்கே ஆராய்ச்சி செய்ய வேண்டியதில்லை. ஆனால் அந்தக் காலத்தில் இளம் பருவத்தில் மணம் செய்தது முறையாகுமா என்பதை மட்டும் இங்கே ஆராய விரும்புகிறேன். புறக் கண்ணைக்கொண்டு புற அழகில் ஈடுபட்டு மோகத்தை அடைகிற பருவம் காளைப்பருவம். அப்படியே மங்கைப் பருவம் உடையவர்கள் புற அழகைக் கண்டு மாத்திரம் மனத்தைச் செல்லவிடுகிறார்கள். பழங்காலத்தில் சின்னஞ்சிறு பிராயத்தில் மணம் செய்ததனால் அன்பை முதலில் உண்டாக்கினார்கள். இன்னாருக்கு இன்னார் மனைவி என்ற எண்ணம் மனத்தில் உண்டாகும்போது அவர்களுக்குள்ளே ஒருவகை உறவு இயல்பாகவே அமைந்துவிடுகிறது. பருவம் வராமையினால் பருவ உணர்ச்சியால் தோன்றும் குறைபாடுகள் உண்டாவதில்லை. கணவன் கறுப்பாய் இருந்தாலும் நம் கணவன் என்ற பக்தி உள்ளே வளர்ந்து வந்தது. அப்படியே மனைவி கறுப்பாக இருந்தாலும் இவள் நம் மனைவி என்ற உறவும் பற்றும் வளர்ந்து வந்தன. இந்தப் பிறவியிலே முதலில் தனித்தனியாக இருந்தாலும் மணமாகி ஒன்றுபட்ட பிறகு பிறப்பிலேயே இணைந்தவர்கள் போல ஆகிவிடுவார்கள். பேதைப் பரவத்தில், நெஞ்சில் இது நமக்குரிய பொருள் என்ற எண்ணம் பதிந்துவிட்டால் அதை எளிதில் மாற்ற முடியாது.

அதற்கு மாறாகப் புறத் தோற்றத்திலும் புற அழகிலும் மனிதன் ஈடுபடுமிடத்து, அந்த இரண்டும் குறையும் போது அந்த ஈடுபாடும் குறையும். அன்றியும் அந்த இரண்டும் பின்னும் மிகுதியாக உள்ள ஒரு பொருளைக் கண்டால் அங்கே மனம் தாவும். பருவம் வருவதற்கு முன் ஒருவரை ஏற்றுக்கொண்டு உள்ளத்தில் உறவை வளர்த்து வருவதனால் இத்தகைய அவல

நிலை ஏற்படுவது இல்லை. ''அவலட்சணமான கணவனை எப்படி மதிக்க முடியும்? அழகு இல்லாத மனைவியை எப்படிப் போற்ற முடியும்?'' என்ற கேள்வி எழலாம். 'இவன்தான் நமக்குக் கணவன்; இவள்தான் நமக்கு மனைவி' என்ற உறவு ஏற்பட்ட பிறகு அந்த உறவினால் பருவத்தில் தோற்றும் தோற்றத்திற்கு மதிப்பு இல்லாமல் போய்விடும். கறுப்பான தாய்க்கு ஒரு குழந்தை பிறந்தால் அவள் கறுப்பு என்பதற்காக அவள் என்னுடைய தாய் அல்ல என்ற எண்ணம் உண்டாவ தில்லை. முட்டாளாக இருந்தாலும் தன்னுடைய தாயைத் தாயாகவே நல்ல மகன் எண்ணுகிறான். அதுபோலவே அழகற்ற வனாக இருந்தாலும், அழகுள்ளவனாக இருந்தாலும், தன் னுடைய கணவன் என்கிற பக்தியும் மதிப்பும் இளம்பருவத்திலே தோன்றிவிட்டால் அவை எப்போதும் நிலைத்து நிற்கும். அதனா லேயே அவர்கள் கற்பு நெறி பிறழாமல், அன்பில் சிதைவு பெறாமல் வாழ்ந்து வந்தார்கள்.

இக்காலத்திலோ கண்டதும் காதல், கொண்டதும் கோலமாக இருக்கிறது. முன்பின் பாராதவர்கள் புறத் தோற்றத்தைக் கண்டு ஏமாந்து திருமணம் செய்து கொள்கிறார்கள். பழகும்போது அவர்களுடைய இயல்போ, மற்றவைகளோ தம் இயல்புக்கு ஏற்றனவாக இராமல் முரண்பட்டால் தம் கருத்தை வேறு இடங் களில் செலுத்துகிறார்கள். குடும்பம் பாழ்படுகிறது. வெளி நாட்டுக்குச் சென்று அங்கேயே திருமணம் செய்துகொண்டு திரும்புகிறவர்களுடைய வாழ்க்கை பெரும்பாலும் நல்லறமாக இருப்பதில்லை. ஏதோ மேல் பார்வைக்கு ஒற்றுமையாக இருப் பது போலத் தோன்றினாலும் உள்ளே கடல் குமுறும்.

கணவன் மனைவி என்ற உறவு மிகவும் தூயது என்பதை இந்த நாட்டில் பலகாலமாக வற்புறுத்தி வந்ததைப் போல வேறு எந்த நாட்டிலும் வற்புறுத்தவில்லை. அந்த உறவைக் கணவன் மனைவியாகிய இருவரும் பாதுகாத்ததோடன்றி உறவினரும் நாட்டினரும் பலவகையில் மதிப்புக் கொடுத்துப் பாதுகாத்தார்கள். 'கல்லானாலும் கணவன்: புல்லானாலும் புருஷன்' என்று சொல்லிக் கற்புணர்ச்சியை ஊட்டி வந்தார்கள். இந்த நிலை மாறுவதற்கு முக்கிய காரணம் பருவத்தினால் புறக்கண்ணுக்குத் தோற்றுகிற தோற்றத்தில் மனத்தை இழந்து நிற்பதுதான். எந்தப்

பொருளையும், புறத்தோடு அகத்தையும் பார்த்து எடை போடு பவர்கள் அறிவு உடையவர்கள். அழகு என்று புறத்தை மாத்திரம் பார்த்தால் ஏமாந்து போக வேண்டியதுதான்.

புறமும் அகமும்

ஒரு குழந்தை கூடத்தில் விளையாடிக் கொண்டிருக்கிறது. அப்போது அங்கே ஒரு பாம்பு படம் எடுத்து ஆடுகிறது. பள பளவென்ற படத்தைக் கண்ட குழந்தை அதன் அருகில் சென்று பிடிக்க முயல்கிறது. அப்போது திடீரென்று அந்தக் குழந்தையின் தாய் அங்கே வருகிறாள். பாம்பையும், குழந்தையையும் பார்த்த வுடன் ஐயோ என்று அலறிக்கொண்டு குழந்தையை அப்பால் எடுத்தோடுகிறாள். அவளும் அந்தப் பாம்பைப் பார்த்தாள். பாம் பின் படம் பளபளவென்றிருப்பதையும் பார்த்தாள். ஆனால் அதோடு அவள் நிற்கவில்லை. புறத்தில் தோன்றிய படத்தின் பளபளப்போடு அதன் அகத்திலுள்ள நஞ்சையும் அவள் நோக்கி னாள். அவள் புறக்கண் அதைச் சொல்லியது. புறக் கண்ணையும், அகக் கண்ணையும் நன்றாக இணைத்துப் பார்க்கும்போது பாம்பி னுடைய பளபளப்பும், அதனுடே கரந்து நிற்கும் நஞ்சும் அவளுக்குத் தெரிந்தன. நஞ்சினால் தன் குழந்தை இறந்துபடும் என்ற நினைவு வரவே, அதிலிருந்து பாதுகாப்பதற்காக அவள் தன் குழந்தையை எடுக்க ஓடினாள். அவள் கண்ட காட்சிதான் உண்மையான காட்சி. குழ்ந்தை கண்ட காட்சியின் போக்கிலே விட்டிருந்தால் அந்தக் குழந்தை பாம்புக்குப் பலியாகியிருக்கும். புறமும் அகமும் ஒத்துப் பார்க்கின்ற பார்வையினால் உண்மை யான பயன் உண்டாகிறது.

புறங்காணுதலும் அகங்காணுதலும்

இராமாயணத்தில் இராமனுடைய அருள் பெற்ற விராதன் அப்பெருமானுடைய பேருருவத்தைத் தரிசனம் செய்கிறான். இராமபிரான் அவனுக்குத் தன் விசுவரூபத்தைக் காட்டுகிறான். அந்தப் பெருமானுடைய திருவுருவத்தில் ஈடுபட்ட விராதன் அவனுடைய திருவடி முதல் திருமுடி வரைக்கும் பார்க்கிறான். ஆராத பெருங் காதல் மீதூர அந்த அழகில் சொக்கிப் போகிறான். உணர்ச்சி விஞ்ச இராமபிரானுடைய திருக்கோலத்தை எண்ணிப்

பாராட்டித் துதி செய்கிறான். ஒரு பாட்டில் இராமபிரானின் திருக்கண்களைப் பற்றிப் பேசுகின்றான்.

புறக்கண்கொண்டு புறத்தைப் பார்க்கிறவர்களுக்கும், அகக் கண்கொண்டு அகத்தைப் பார்க்கிறவர்களுக்கும் இன்பத்தைத் தருவன அக்கண்கள். புறத்தை மாத்திரம் பார்க்கிறவர்களுக்கு இராமபிரானுடைய திருவிழிகள் தாமரையைப் போலத் தோற்றுகின்றன. அதுவும் ஓர் அழகுதான். ஆனால் அகக் கண் கொண்டு பார்க்கிறவர்களுக்கு அந்தப் புறக் கண்ணின் வழியாக இராம பிரானுடைய அகத்தையும் காணும் ஆற்றல் உண்டாகிறது. அவன் திருவிழிகளின் மூலமாக அவனுடைய அகத்தைக் காணும்போது அந்த அகம் அருள் நிரம்பியதாக இருக்கிறது. உள்ளத்தில் நிரம்பி யிருக்கிற கருணை வழிந்து அவனுடைய திருவிழியிலே பொங்குகிறது. அந்தக் கண்களை மேலெழுந்தபடி பார்க்கிறவர்களுக்கு அது தெரியாது. ஊடுருவிப் பார்க்கிறவர்களுக்கு, அந்தக் கண் களின் வழியே அகத்தைப் பார்க்கிறவர்களுக்கு, இந்த உண்மை புலனாகும். இதை விராதன் சொல்கிறான்.

"புறங்காண அகங்காணப் பொதுமுகத்தின் அருணோக்கம்
இறங்காத தாமரைக்கண் எம்பெருமான் இயம்புதியால்"

என்று அவன் துதிக்கிறான். புறக் கண்ணுக்கு இராமபிரானுடைய கண் தாமரைக் கண்ணாக விளங்குகிறது. அகம் காணும்போதோ அந்தத் தாமரைக் கண் அருள் நோக்கம் சிறிதும் இறங்காத கண்ணாக இலங்குகிறது. புறம் காண்பாருக்கும் அகம் காண் பாருக்கும் பொதுவாக முகம் இருந்தாலும், அந்தக் கண்கள் புற அழகினால் தாமரையாகவும், அக அழகினால் அருள் நோக்க முடையனவாகவும் தோற்றுகின்றன. இந்த இரண்டையும் யார் காண்கிறார்களோ அவர்களே இராமன் கண்களை முழுமையாகக் கண்டவர்கள். புற நோக்கைக் கண்ட மாத்திரத்தில் தாமரை என்று கண்டு இன்புறலாம்; ஆனால் அது பாதியளவு கண்டது போன்றதுதான். எதைக் கண்டாலும் அதனிடையே உள்ள நுட்பத்தைக் காண்பது அறிவு. அதனால் கிடைக்கிறது பேரின்பம்.

ஒருவனுடைய முகம் அகத்தைக் காட்டும் கண்ணாடி போன்றது. அப்படியே அவனுடைய கண்ணும் கருத்தைக் காட்டுகின்ற வாயில். இந்த இரண்டையும் ஒருங்கே பார்க்கிறவன் பார்வை தான் மெய்ப்பார்வை. விராதன், அப்படிப் பார்க்கிறவர்களுக்கு

இராமனுடைய கண் தாமரையாகவும், அருள் நோக்கம் இறங்காத தாமரையாகவும் இருப்பதைத்தான் எடுத்துக் காட்டினான்.

''புறங்காண அகங்காணப் பொதுமுகத்தின் அருணோக்கம்
இறங்காத தாமரைக்கண் எம்பெருமான்''

என்றான். இப்படி அகமும் புறமும் ஊடுருவிப் பார்க்கின்ற மக்கள் உலகத்தில் மிகச் சிலர்.

''முகத்தில் கண்கொண்டு பார்க்கின்ற மூடர்காள்
அகத்தில் கண்கொண்டு பார்ப்பதே ஆனந்தம்''

என்று திருமூலர் சொல்வர்.

தூய நோக்கும் மாய நோக்கும்

அருணகிரி நாத சுவாமிகள் புறக் கண்ணால் புற அழகைப் பார்த்து மயங்குகின்ற நெஞ்சை நோக்கிச் சொல்கிறார். ஒரு பெண்ணைக் காணும்போது இரண்டுவகையாகப் பார்க்கலாம். அந்தப் பெண் எவ்வளவு அழகு உடையவளாக இருந்தாலும் அந்த அழகை இறைவன் படைப்பாகக் கொண்டு அதனைப் படைத்த பெருமானைப் பாராட்டலாம். அதனை நாம் நுகர வேண்டுமென்ற எண்ணத்தோடு நோக்குவது ஒரு வகை. முந்தியது தூய நோக்கு. பிந்தியது மாய நோக்கு. அழகைக் கண்டவுடன் அறிவுள்ள மனிதனுக்கு ஆசை எழுவது இயல்பு என்று சொல்வது தவறு. தம்முடைய மகளை அழகியாகக் காணுகின்ற தந்தையர்கள் இருக்கிறார்கள். தம்முடைய சகோதரிகள் அழகியராக இருப்பதைக் கண்டு தூய நெஞ்சத்தில் மகிழ்ச்சி அடைகிறவர்களும் இருக்கிறார்கள். அங்கே அழகைக் கண்கள் பார்க்கத்தான் பார்க்கின்றன. ஆனால் அந்தப் பார்வையில் களங்கம் இருப்பதில்லை. அவ்வாறின்றிப் பலர் அழகைக் கண்டு அதைத் தம் முடைய காமப் பசிக்கு உணவாகக் கொள்ள வேண்டுமென்று எண்ணுகிறார்கள். இத்தகைய எண்ணம் படைத்த நெஞ்சை நோக்கிச் சொல்வது போல அருணகிரியார் பாடுகிறார்.

ஒரு பொருளை முழுமையாகப் பார்த்து அதன் வழியே தொடர்புடைய மற்றப் பொருள்களை எண்ணி உண்மையை உணர்வது ஒருவகை. யானையை முழுமையாகப் பார்த்தவர்களுக்குத்தான் அதன் மேலேயுள்ள பாகனும் தோற்றுவான்.

ருடர்களாக இருந்தவர்கள் யானையைத் தொட்டுப் பார்த்த கதை நமக்குத் தெரியும். ஒவ்வொருவனும் தான் தான் தொட்டுப் பார்த்த அங்கத்தைப் பற்றிப் பேசினான். யாரும் யானையை முழுமையாகக் கண்டவர் அல்ல. உலகில் உள்ளவற்றின் முழு அழகைக் கண்டு அந்த அழகைப் படைத்த ஆண்டவனை எண்ணிப் பாராட்டலாம். நல்ல மலரைப் பூம்பொய்கையில் வைத்து அழகைப் பாராட்டுபவர்களே சிறந்தவர்கள். அதனைப் பறித்துப் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென்று எண்ணுகிறவர்கள் சிறந்த வர்கள் அல்ல. எந்த வகையில் அழகைக் கண்டாலும் அதன் வாயிலாக அதைப் படைத்தவனைக் காணுகின்ற திறமை நல்ல வர்களுக்கே உண்டாகிறது.

அருணகிரியார் இப்போது சொல்கிற நெஞ்சு அத்தகையது அன்று. அந்த நெஞ்சு எதனையும் முழுமையாகப் பார்க்கிறது அன்று. உயிருடைய உடம்பில் உயிர் இருக்கிறதே, உள்ளமும் இருக்கிறதே என்று நோக்குவது இல்லை. அந்த உடம்பில் உள்ள அங்கங்களைத் தனித் தனியே பார்த்து அவற்றின் அழகில் ஈடுபட்டு, மயலில் ஆழ்கிறது. முழுமையாக இருக்கும் பொருளைத் துண்டு பண்ணி ஒவ்வொன்றையும் தனித்தனியே சுவைப்பது புலால் உண்ணுகிறவர்கள் வழக்கம். அதுபோல் இந்த நெஞ்சு ஒருவகை யில் புலால் உணவை உண்ணுவது போலச் செய்கிறது. ஒவ்வோர் அங்கமாகக் கண்டு அதன் அழகில் ஈடுபட்டு மேலே செல்கிறது.

காளையின் கதை

ஓர் இளம் பிள்ளை, காளைப் பருவம் உடையவன், ஒரு பெண்ணைப் பார்த்தான். அவளுடைய மேனி அழகைப் பார்க்கிற போது முதலில் முகத்தில் பார்வை சென்றது. அந்த முகத்தில் கண்ணைக் கண்டான். கண்வழியே கண் விழியையும் கண்டான். அது இப்போது இருக்க வேண்டிய இடத்தில் இல்லை. மானைப் போன்ற மருண்ட பார்வையுடைய அது காது ஓரமாகப் போய்த் தேங்கி நின்றது. காதுக்கு வள்ளை இலையை உவமை சொல்வது ஒரு வழக்கம். வள்ளை என்பது தண்ணீரில் படரும் ஒருவகைக் கொடி. இந்தக் கண் கெண்டைபோல இருக்கிறது. எப்போதும் துள்ளித் துள்ளிக் குதிக்கிற கெண்டை போல அங்கும் இங்கும் பார்க்கிறது. சலனம் உள்ள பார்வை கெண்களுக்கு அழகு என்று

சொல்வார்கள். துள்ளிய கெண்டை போல இருக்கும் அந்தக் கண் இப்போது காதைப் போய் மோதுகிறது. சிறிய வள்ளை இலையின்மேல் துள்ளிப் பாய்கிற கெண்டை போல அந்தக் கண் மாறி மாறித் தாவுகிறது. அவன் அந்தக் காதைக் கண்டான். பின்பு அந்தக் கண்ணையும் கண்டான். கண்ட அளவில் நிற்கவில்லை. இத்தகைய பேரழகி நம்முடன் பேசுவாளா என்ற எண்ணம் தோன்றியது. நம்மைப் பார்ப்பாள் என்று எண்ணி அவள் கண்ணைக் கண்டான். அவள் பார்வையைச் சந்தித்த பிறகு, அவள் நம்முடன் பேசுவாளா என்று எண்ணினான். பேச்சு வருகிற இடம் வாய் அல்லவா? அவன் பார்வை அங்கே தாவியது. அவளுடைய வாயிதழ்கள் கோவைப் பழம்போல இருந்தன. கோவைக்குத் தொண்டை என்று பெயர்.

சிறு வள்ளை தள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையை.

அந்த வாயிலிருந்து ஒரு வார்த்தை வராதா என்று எண்ணினான். இப்படிப் பருவம் உள்ள ஒரு காளை தன்னை நின்று நிதானமாகப் பார்க்கும் வண்ணம் நாணம் உடைய பெண் நிற்பாளா? ஆனால் எதிரே அந்தப் பெண் நின்று கொண்டுதான் இருந்தாள். அவள் நாணத்தை நீக்கிய பெண். பிறருடைய மனத்தை ஈர்ப்பதற்காகவே தன்னுடைய அங்க லாவண்யத்தைக் காட்டி மயக்கும் தொழிலில் வல்லவள். தன்னை நாடி வந்தவனை எளிதில் பல வகையில் அலைக்கழித்து, அவனிடம் காமத் தீயை மூட்டி, பின்பு அவனிடமிருந்து பணம் பறிக்கும் தொழில் உடையவள். இப்போது அவள் மெல்லத் தன் இதழைத் திறந்தாள். அதற்காக ஏங்கிக் கிடந்த இளைஞன், அவள் என்ன சொல்வாளோ என்று ஆவலோடு கவனித்தான். அவள் பேசினாள். பிறவி பிறவியாகத் தொடர்ந்து வந்த காதல் உடையவர்கள் சந்தித்தால் முதலில் பெண் பேசுவது இல்லை. நாணம் மிக்கவள் ஆகையால் அவள் பேசுவதற்கு மிகவும் அஞ்சுவாள். அவள் பார்ப்பதுகூட இல்லை. முதலில் தலைவன் பார்க்கப் பின்பே அவள் பார்ப்பாள். அவன் தன்னுடைய உள்ளத்திலுள்ள அன்பைப் பல சொற்களால் வெளியிட, அவள் இறுதியாகப் பேசுவாள். ஆனால் இங்கோ காதல் ஏது? காமந்தான் இருக்கிறது. காமத்தை மூட்டிப் பொருள் பறிக்கும் தொழிலாளி இங்கே நிற்பவள். ஆகையால்

அந்தப் பெண் அவனை நோக்கி மெல்லப் பேசத் தொடங்கினாள். அவள் பேச்சு உள்ளன்புடைய பேச்சல்ல. பொருளில் நாட்டம் உடைய பேச்சு; வஞ்சகமான நஞ்சுப் பேச்சு; தோதகச் சொல். தோதகம் – வஞ்சகம். அதைக் கேட்டு இளைஞன் மயங்கிப் போனான்.

முதலில் அவளைப் பார்த்தான். தொடர்ந்து அவள் வாயைக் கண்டு மயங்கினான். இப்போது வாய்ச் சொல்லால் மயங்கி நிற்கிறான். அந்தச் சொல்லோடு நிற்கவில்லை. அவள் மயக்கும் தந்திரத்தில் வல்லவள். பேச்சில் இனிமை காட்டியதோடு புன்முறுவல் வேறு பூக்கிறாள். அது அவனை வலைபோட்டுச் சிக்க வைக்கிறது. அந்தப் புன்னகை முத்துவரிசை போலத் தோன்றி எத்தனையோ பொருளை அவனுக்குத் தெரிவிக்கிறது. அவள் பேசின பேச்சைவிட அந்தப் புன்னகையால் உண்டாகும் மயக்கம் மிகுதி. வலை சுருங்கிக் கிடந்தாலும் விரிக்கும்போது பெரிதாக விரிவது போல அவள் முறுவல் இருக்கிறது. பலபல சொற்களால் பேசுபவற்றை எல்லாம் சிறிய புன்முறுவலால் அவள் சாதித்துக் கொண்டாள். தோதகச் சொல்லைவிட அந்த வித்தார மூரல் அவனுக்கு நல்லது போலத் தோன்றுகிறது. அப்பால் அவளை மறக்க முடியுமா?

வள்ளையைப் போன்ற காதுகளையும், கெண்டையைப் போன்ற கண்களையும், கோவைப் பழம் போன்ற வாய் இதழ்களையும், உள்ளத்தை மயக்கும் சொற்களையும், நித்தில வித்தாரப் புன்முறுவலையும் எண்ணி எண்ணி ஏங்குகிறான். அவனுடைய நெஞ்சம் அலைகடல் பட்ட துரும்புபோலத் துள்ளித் துள்ளி யாடுகிறது. கண்ணும் கருத்தும் மயலிலே உழன்று அமைதியை இழந்து வாழ்வையெல்லாம் வீணாக்கிக் கொள்ளும் முயற்சியிலே தலைப்படச் செய்கிறது. இதற்குத்தானா அவன் கண் பெற்றான்? இதற்குத் தானா அவன் கருத்துப் பெற்றான்? அந்த நிலையில் இருக்கும் இளைஞன் தன் நெஞ்சைப் பார்த்துச் சொல்வது போல அருணகிரியார் பாடுகிறார்.

சிறு வள்ளைதள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத் தோதகச்
சொல்லை நல்ல
வெள்ளிய நித்தில வித்தர மூரலை வேட்ட நெஞ்சே!

நெஞ்சு கேட்கிறது; ''கண்ணாலே கண்டு, காதாலே கேட்ட வற்றை விரும்பாமல் வேறு என்ன செய்வது?'' என்று கேட்கிறது.

விரும்புவதற்கு உரியது

''நீ விரும்புவதற்குரிய வேறு பொருள் ஒன்று உண்டு. முருகப் பெருமானுடைய திருவடி அல்லவா உன் விருப்பத்துக்குரியது?'' என்கிறார் அருணகிரியார்.

''அவனை நான் பார்க்கவில்லையே; அந்தத் திருவடி எப்படி இருக்கிறதென்று கண்டால் அல்லவா அவன்பால் ஆசை உண் டாகும்?'' என்று நெஞ்சு சொல்கிறது.

''காணாத பொருளிடத்திலும் ஆசை செலுத்தும் பண்பு உனக்கு உண்டே. எத்தனையோ பொருள்களிடம் கேட்ட மாத் திரத்தில் நீ ஆசை கொள்கிறாயே!'' என்று அருணகிரியார் சொல் கிறார்.

மனம் கண்ட பொருளை மாத்திரம் எண்ணும் என்பது இல்லை. காதினாலே கேட்ட பொருளையும் எண்ணி ஆசைப்படுவது அதற்கு இயல்பு. இராவணன் முதலில் சீதையைக் காணவில்லை. சூர்ப்பணகை சீதையினுடைய அழகைப் பலபடியாக அவனுக்கு வருணித்துச் சொன்னாள். அவள் வருணித்ததைக் கேட்டுச் சீதையிடத்தில் ஆசை கொண்டான் அவன். காதினாலே கேட்ட பொருளின் மேல் ஆசை கொள்வதும் மனத்திற்கு இயல்புதான். அந்த வகையில் முருகப் பெருமானுடைய திருவடியைக் கண் ணாலே காணாமல் இருந்தாலும், அது மிகச் சிறந்த நன்மையைத் தருவது, இன்பத்தை உண்டாக்குவது என்பதைப் பல பெரியார் கள் சொல்லியிருக்கிறார்கள். அவனுடைய பெருமையையும் பலவாறாக நாம் கேட்டிருக்கிறோம். ஆகவே, 'காதினாலே கேட்ட அந்தப் பொருளிடத்தில் வேட்கையை உண்டாக்கிக் கொள்' என்று அருணகிரியார் அந்தத் திருவடியை உடையவனைப் பற்றி விரிவாகச் சொல்லத் தொடங்கினார்.

தடுத்தாட் கொள்பவன்

முருகப்பெருமான் கருணையில் சிறந்தவன். அவன் பரம கருணாநிதி. அவனைச் சார்ந்து நலம் பெறுவதற்கு ஆன்மாக்கள்

முயல்வது முறை. மிகுந்த பக்தியுள்ள ஆன்மாவைத் தான் சென்று பார்த்து கருணை செய்பவன் அவன். அவர்களை அவனே வலியச் சென்று தடுத்தாட்கொள்கிறான். அதுதான் வள்ளிநாயகியைத் திருமணம் செய்து கொண்ட திருவிளையாடலின் உண்மை. இந்தத் தத்துவத்தைப் பலமுறை முன்னாலே நாம் பார்த்திருக்கிறோம்.

வள்ளிநாயகி தினைப்புனத்தில் ஆலோலம் பாடிக் கொண்டிருந்தாள். தினைக்கதிர் முற்றி வந்தால் கிளிகள் வந்து கொத்தும். அந்தக் கிளிகளை ஓட்டுவதற்கு அவள் பாடுகிறாள். ஆனால் என்ன ஆச்சரியம்? கிளிகள் பின்னும் அதிகமாக வருகின்றன. காரணம் என்ன தெரியுமா? அவள் பேசுகின்ற பேச்சும், பாடுகின்ற பாட்டும் கிளியின் குரலைப் போல இருக்கின்றன. அங்கே நம்முடைய இனம் இருக்கிறதென்ற எண்ணத்தில் அந்தப் பாட்டைக் கேட்டுக் கிளிகள் வந்து கூடுகின்றன. அவள் நிறத்தாலும் குரலாலும் கிளியைப் போல இருக்கிறாள். தினைப் புனத்தில் கதிர்கள் நிறைந்து நிற்க, அதற்கு இடையில் அவள் நிற்பதால் பெரிய கிளி அமர்ந்திருப்பது போலத் தோற்றுகிறது. சில சமயங்களில் அவளே முற்றியிருந்ததினைக் கதிரை எடுத்துக் கையிலே நிமிண்டி உமியை ஊதிவிட்டுத் தெள்ளித் தின்கிறாள். அதை மாவாக்கித் தேனும் கலந்து உண்ணுகிறாள்; பிறரையும் உண்பிக்கிறாள்.

''வண்ணத் தினைமாவைத் தெள்ளியே – உண்ணும்
வாழ்க்கைக் குறக்குல வள்ளியே''

என்று காவடிச் சிந்தில் அண்ணாமலை ரெட்டியார் பாடுகிறார். தினை விளைகின்ற கொல்லையில் கிளியைப் போல எம்பெருமாட்டி வீற்றிருக்கிறாள்.

தெள்ளிய ஏனலில் கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை.

கள்ளச் சிறுமி

வள்ளிநாயகியைக் கள்ளச் சிறுமியென்று கூறுகிறார் அருணகிரியார். மலைப்பகுதியிலே வாழ்கிறவர்கள் குறவர்கள். குறவர்கள் திருடும் தொழில் உடையவர்கள். ஆகையால் அந்தக் குலத்தை எண்ணிக் கள்ளச் சிறுமி என்று கூறினார் என்று

சொல்லலாம். ஆனால் அதைவிடச் சிறந்த பொருள் ஒன்று உண்டு. மறைந்து நிற்பவர்களைக் கள்ளர் என்று சொல்வது ஒரு வழக்கம். திருமாலுக்குப் பெண்ணாகப் பிறந்தவள் வள்ளி. திருமால் முனிவராகவும், திருமகள் மானாகவும் வர இரண்டு பேர்களுக்கும் பெண்ணாகப் பிறந்து வள்ளிக்கொடிக்குப் பக்கத்தில் கிடந்த போதுதான் நம்பிராஜன் அக்குழந்தையை எடுத்துச் சென்றான். அவள் இப்போது வேடர்களுக்கு இடையில் மறைவாக இருக்கிறாள். வேடர் கூட்டத்தில் ஒருத்தியாகத் தன்னை எண்ணிக்கொண்டு வேட்டுவ மங்கை செய்யும் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறாள். முருகப் பெருமானிடத்தில் இயல்பாகவே குறக் குலத்தினருக்கு அன்பு உண்டு. அந்த வகையில் வள்ளியின் உள்ளத்தில் அன்பு இருந்தாலும், தனக்குள்ள உரிமையை எண்ணி அவனை அடைய வேண்டுமென்ற முயற்சி இல்லாமல் இருக்கிறாள். மறைவிலே வளர்ந்து வந்த வள்ளி எந்த இடத்தில் போய்ச் சேர வேண்டுமோ அந்த இடத்தில் சேராமல் தனித்து இருக்கிறாள். ஆகையால் அவள் கள்ளத்தனமாக ஓர் இடத்தில் வைக்கப்பெற்ற பொருளைப் போல விளங்குகிறாள்.

ஒரு பொருள் ஒருவனுக்குரியது. அது ஏதோ ஒரு காரணத்தினால் ஒருவரும் அறியாமல் வேறு ஓரிடத்தில் இருப்பதாக வைத்துக் கொள்வோம். அங்கே அந்தப் பொருள் இருக்கிறதென்று தெரிந்த பிறகு பொருளுக்குடையவன் சும்மா இருப்பானா? எப்படியாவது அதைப் போய்த் தன்னுடையதாக்கிக் கொள்ள வேண்டுமென்று முயல்வான். திருமாலினுடைய மகளாகிய வள்ளிநாயகி தன்னாலே ஆட்கொள்வதற்குரியவள் என்று முருகன் அறிவான். அந்தப் பொருள் மறைவாக வள்ளி மலையில் இருக்கிறதென்பதை நாரத முனிவர் வந்து சொன்னார். இந்த நாடகத்தில் திருட்டுப்போன பொருள் இன்ன இடத்தில் இருக்கிறதென்று கண்டு சொன்ன ஒற்றரைப் போல நாரதர் இருந்தார். முருகனுக்கு அது தெரியாதா? ஆனால் நாடகத்தை ஒழுங்காக நடத்த வேண்டும் அல்லவா? நாரத முனிவர் வள்ளியம் பெருமாட்டியின் பேரெழிலை வருணிக்க, அதனால் மிக்க காதல் உடையவன் போல வியாகுல மனத்தோடு வேட உருவம் தரித்து வள்ளி மலையை நாடிச் சென்றான். அவன் சென்றது, தனக்குரிய பொருள் இன்ன இடத்தில் இருக்கிறதென்று துப்புத் துலக்காமல்

வாடி நின்ற ஒருவன், அது இருக்கிற இடம் தெரிந்த பிறகு எப்படியாவது அதை அடைய வேண்டுமே என்ற கவலையோடு சென்றது போல இருந்தது.

வள்ளியை வேட்டவன்

தினைப்புனம் காக்கும் வள்ளியிடம் சென்று பலவகையான மாயங்களைச் செய்து அவள் உள்ளத்தைச் சோதனை செய்தான். அவளுடைய உறவை மீட்டும் இணைத்துக் கொள்ள விரும்பினான். வேட்பவனாக நின்றான். தன்னை அவள் வேட்பது முறையாக இருக்க, அவளைத் தான் வேட்டான். இது அவனுடைய பெருங் கருணையைக் காட்டுகிறது.

> தெள்ளிய ஏனலில் கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும்
> வள்ளியை வேட்டவன்

என்று முருகனைச் சொல்கிறார். வேட்டவன் என்பது திருமணம் புரிந்து கொண்டவன் என்ற பொருளை உடையது.

''மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன்''

என்று வேறு ஓரிடத்தில் சொன்னார். தானே அவளை ஆட்கொள்ள வேண்டுமென்று விரும்பி வந்தவன் ஆகையால், வேட்டவன் என்று சொன்னார். ஈகை மனிதனுக்குரிய சிறந்த பண்புகளில் ஒன்று. யாரேனும் ஒருவர் ஒரு பொருளைக் கேட்டால் அதைக் கொடுக்காமல் மறுக்கிறவன் – இல்லையென்று சொல்கிறவன் – அதமன். கேட்டவுடன் கொடுப்பவன் மத்திமன். ஆனால் கேட்பதற்கு முன்னால் அவனுக்கு இது வேண்டுமென்று அறிந்து தானே வலியச் சென்று கொடுக்கிறவன் உத்தமன். முருகப் பெருமான் உத்தமமான கருணையாளன். தன் கருணை எங்கே செல்ல வேண்டுமோ அதனை அறிந்து தானே வலியச் சென்று ஆட்கொள்பவன். இந்தச் சிறந்த பண்பை வள்ளி நாயகியிடம் முருகன் காட்டினான். அவள் தன்னை நாடி வருகிறவரைக்கும் காத்திராமல் அவள் உள்ள இடத்திற்கே சென்று அவளைத் தடுத்து ஆட்கொண்டு பழைய உறவை நிலைநாட்டிக் கொண்டான். கள்ளத்தனமாக இருந்த பொருளை எல்லோரும் காண நானே பெறுவேன் என்று சொல்லி ஏற்றுக் கொண்டான். 'அத்தகைய முருகனை நீ பணியவில்லையே! அவன் திருத்தாளில் விருப்பத்தை வைத்து வழிபாடு செய்யவில்லையே!' என்கிறார் அருணகிரியார்.

தெள்ளிய ஏனலிற் கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன் தாள் வேட்டிலை.

''புறக் கண்ணாலே புற அழகைக் கண்டு ஏமாந்து போகிற நெஞ்சமே, அகக் கண்ணினாலே அவன் திருவடியைக் கண்டு ஏத்துவாயாக. அந்தத் திருவடி தானே வலிந்து சென்று அருளைப் பில்கும் தன்மையுடையது. ஆகையால் நீ அதனை விரும்பினால் அது உன்னிடத்தில் வரும்'' என்று சொல்வாரைப் போல இந்தப் பாட்டைச் சொல்கிறார். அந்தத் தாளை நாம் வேட்க வேண்டியதுதான். அதனைப் போய் நாம் நாடிச் செல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆண்டவனுடைய திருத்தாள், விரும்புவாரை நாடி வருகிற தன்மை வாய்ந்தது. ஆகையால் நாம் செய்ய வேண்டியது, அதனைப் பெற வேண்டுமென்ற ஆர்வத்தை வளர்த்துக் கொள்வது ஒன்றுதான். அந்த வேட்கை மீதூர ஆண்டவன் தன்னுடைய திருவடியை நமக்குக் கொடுக்க வேண்டுமென்று ஓடி வருவான். இவற்றையெல்லாம் எண்ணி,

தெள்ளிய ஏனலில் கிள்ளையைக் கள்ளச் சிறுமியெனும்
வள்ளியை வேட்டவன்

என்று சொன்னார். அந்தக் குற வள்ளியை வேட்டு,

''சுனையோடு, அருவித் துறையோடு, பசுந்
தினையோடு, இதணோடு''

திரிந்த திருத்தாள் அல்லவா அது? ஆதலின் நீ விண்ணப்பம் மாத்திரம் போட்டு வைத்தால் அது உன்னை நாடிக்கொண்டு வரும் என்ற குறிப்போடு அதனைச் சொல்கிறார்.

★

தெள்ளிய ஏனலில் கிள்ளையைக்
கள்ளச் சிறுமிஎனும்
வள்ளியை வேட்டவன் தாள்வேட்
டிலைசிறு வள்ளைதள்ளித்
துள்ளிய கெண்டையைத் தொண்டையைத்
தோதகச் சொல்லைநல்ல
வெள்ளிய நித்தில வித்தார
மூரலை வேட்டநெஞ்சே.

[தெள்ளி யுண்ணும் தினை வளரும் கொல்லையில் கிளிபோல இருந்து காவல் செய்தவளும் கள்ளமுடைய குறக்குலச் சிறுமி என்று சுட்டும்வண்ணம் இருந்தவளுமாகிய வள்ளி நாயகியை விரும்பி வலிந்து சென்று திருமணம் புரிந்து கொண்ட முருகனுடைய திருவடியை விரும்பாமல் இருக்கிறாயே! சிறிய வள்ளையிலையைப் போன்ற காதை மோதித் துள்ளுகின்ற கெண்டையைப் போன்ற மாதர் கண்களையும், கோவைப் பழம்போன்ற இதழையும், வஞ்சகமான சொற்களையும், விரிவான முத்துப் போன்ற புன்னகையையும் விரும்பிக் காமம் கொண்டு நிற்கும் நெஞ்சமே!

தெள்ளுதல் – மாவைத் தெள்ளுதல். ஏனல் – தினைக் கொல்லை. கள்ளர் என்பது குறவருக்கு ஒரு பெயர். வள்ளை, கெண்டை, தொண்டை: உவம ஆகுபெயர்கள்; அவை முறையே பெண்களின் காதையும் கண்ணையும் வாயிதழையும் குறித்தன. தோதகம் – வஞ்சனை; ''மாதர்கள் தோதக லீலை நிரம்பி'' என்பது திருப்புகழ். வித்தாரம் – விரிவு. மூரல் – புன்னகை. 'நெஞ்சே வேட்டிலையே; இனி யான் என் செய்வேன்!' என்று இரங்கியபடி]

பெண்களை நிமிர்ந்து பார்த்துக் காமம் கொள்ளாமல் இறை வனைப் பணிந்து பார்த்துப் பக்தி கொள் என்பது கருத்து.

இது கந்தர் அலங்காரத்தில் 94–ஆவது பாடல்.

தனி வெளி

முகவுரை

இந்த ஆண்டு ஏப்ரல் மாதமும் ஜூன் மாதமும் இலங்கைக்குப் போயிருந்தேன். யாழ்ப்பாணத்திலும், கொழும்பு முதலிய பிற இடங்களிலும் பல சொற்பொழிவுகள் ஆற்றினேன். அங்குள்ள அன்பர்களின் முருக பக்தியை என்னென்று சொல்வது! யாழ்ப்பாணத்தில் எங்கே பார்த்தாலும் முருகன் கோயில்கள்; கந்தசாமி கோயில் என்றே அங்கே வழங்குகிறார்கள்.

இந்த வழக்கை அறிந்தபோதுதான் கந்தசாமி என்னும் திருநாமத்தின் பெருமையை நன்கு உணர்ந்தேன். வட மொழியில் ஸ்கந்த: என்று உள்ள சொல்லே தமிழில் கந்தன் என்று வந்தது. வட மொழியில் ஸ்கந்தோபநிஷத், ஸ்காந்த புராணம் என்று நூல்கள் இருக்கின்றன. தமிழிலும் முருகனுடைய வரலாற்றைச் சொல்லும் நூலுக்குக் கந்தபுராணம் என்று பெயர். முருகனுடைய அஷ்டோத்தரம் ஸ்கந்தாய நம: என்று தொடங்குகிறது.

இவை மட்டும் அன்று; முருகனுடைய திருவருளில் ஊறித் திளைத்து மற்றவர்களும் அதனைப் பெற வேண்டும் என்ற இணையற்ற கருணையினால் திருப்புகழ் முதலிய அற்புதமான நூல்களை வழங்கிய அருணகிரிநாத சுவாமிகள் கந்தர் அலங்காரம், கந்தர் அநுபூதி, கந்தர் அந்தாதி என்று தம்முடைய நூல்களுக்குப் பெயரிட்டிருக்கிறார்.

"வேலா யுதன்சங்கு சக்ரா யுதன்விரிஞ்
சன் அறியாச்
சூலா யுதன்தந்த கந்த சுவாமி"

என்று கந்தசுவாமி என்ற திருநாமத்தைக் கந்தர் அலங்காரத்தில் பதித்திருக்கிறார்.

இவற்றால் கந்தசாமி என்ற திருநாமத்துக்குத் தனிச் சிறப்பு உண்டென்பது புலனாயிற்று. அந்த எண்ணம், யாழ்ப்பாணத்தில் எங்கு நோக்கினும் கந்தசாமி கோயில்கள் இருப்பதைக் கண்டும், அவற்றை வேறுவிதமாகக் குறிக்காமல் கந்தசாமி கோயில் என்றே குறிப்பதைக் கேட்டும் வலிபெற்றது.

யாழ்ப்பாணத்துக்கு நான் செல்லும் போதெல்லாம் எனக்குத் தங்க இடம் அளித்து, உணவு வழங்கி, உபசாரம் செய்து என்னைத் தம் குடும்பத்தைச் சார்ந்த முதியவனாகவே எண்ணி நலம் செய்து வருகிறார் நீர்வேலியில் உள்ள ஓர் அன்பர். அவர் குடும்பத்தினர் அனைவரும் காட்டும் அன்புக்கு அளவே இல்லை. அவர் பெயர் ஸ்ரீ இராசேந்திர குருக்கள். அவர் அந்த ஊரிலுள்ள ஸ்ரீ கந்தசாமி கோயிலில் முருகனை முப்பொழுதும் திருமேனி தீண்டிப் பூசை செய்யும் அருளாளர். யாழ்ப்பாணம் என்றவுடன் நீர் வேலிக் கந்தசாமி கோயிலும், அங்கே பூசை செய்துவரும் குருக்கள் ஐயாவும் முதலில் என் நினைவுக்கு வருவதில் வியப்பு இல்லை. முதல் முதல் நான் இலங்கையில் கண்ட கந்தசாமி கோயில் அது.

இலங்கையன்பர்களுக்கு அருணகிரி நாதர் திருவாக்கில் மிகுதியான அன்பு. அலங்கார அநுபூதிப் பாடல்களுக்குப் பொருள் விரித்து உரைக்கும் போது தம்மையே மறந்து கேட்டு இன்புறு கிறார்கள்.

இந்தக் கந்தர் அலங்காரச் சொற்பொழிவு வரிசைகளைப் படித்து இன்புற்று, அதனால் என்னிடம் பேரன்பு பூண்ட அன்பர்கள் பலர் இலங்கையில் இருக்கிறார்கள். பணம் அனுப்பிப் புத்தகம் வருவிக்கும் முறை இலங்கையில் செல்லாது. மிக்க முயற்சியின் மேல்தான் இந்த நாட்டிலிருந்து அங்கே புத்தகம் செல்ல வேண்டும். அப்படியிருந்தும் பல இலங்கையன்பர்கள் இந்த அலங்கார வரிசை நூல்களை வாங்கிப் படித்து மகிழ் கிறார்கள் என்பதை அறிந்து, இவ்வாறெல்லாம் செய்விக்கும் முருகனுடைய திருவருளை இறைஞ்சுகின்றேன்.

தமிழ் நாட்டிலுள்ள முருகன் அடியார்கள் பலர் இந்த வரிசை விரைவில் நிறைவுற வேண்டுமென்று பேரார்வத்துடன் இருக் கிறார்கள் என்பதை நான் அறிவேன். பலர் அடிக்கடி கடிதம் எழுதி வருகிறார்கள். முருகன் திருவருள் அவர்கள் அவாவை நிறை வேற்றிக் கொடுக்கும் என்றே நம்புகிறேன்.

★

இந்தப் புத்தகம் அலங்கார வரிசையில் 18–ஆவது புத்தகம். 95 முதல் 100–ஆவது பாடல் வரையில் உள்ள ஆறு பாடல் களுக்கு இதில் விளக்கம் இருக்கிறது. பயனைச் சொல்லும் பாட்டு

ஒன்றும், அதிகமாகக் காணப்படும் பாடல்கள் ஆறும் இன்னும் எஞ்சியுள்ளன. கந்தர் அலங்காரச் சொற்பொழிவுகள் தேனாம் பேட்டை முருகன் கோயிலில் நிகழ்ந்தபோது, இந்த நூறு பாடல் களுக்கும் விளக்கம் சொல்லி, அதிகப் பாடல்கள் ஆறுக்கும் தொடர்ந்து விளக்கம் கூறி, கடைசியில் பயனாக உள்ள பாடலுக்கு விரிவுரை கூறினேன். அந்த முறையைப் பின்பற்றியே, இந்த 18-ஆவது புத்தகத்தில் நூறாவது பாடலோடு நிறுத்தி, அடுத்த புத்தகத்தில் அதிகப் பாடல்கள் ஆறின் விரிவுரையையும், பயனாக உள்ள பாடலின் விரிவுரையையும் வெளியிடலாம் என்று நினைக்கிறேன்.

இருபதாவது புத்தகத்தில் கந்தர் அலங்காரப் பாடல்கள் எல்லாவற்றிலும் காணப்படும் சொல், பொருள் முதலியவற்றைப் பற்றிய ஆராய்ச்சியைச் சிறிது விரிவாகவே எழுதலாம் என்று எண்ணியிருக்கிறேன். புத்தகம் முழுவதுமே ஆராய்ச்சியாக இருக்கும். முருகனுடைய புகழை அருணகிரியார் எடுத்துச் சொல்லும் முறை, அவனால் அவர் பெற்ற அநுபவங்களின் வகை, அவர் நமக்குக் கூறும் உபதேசங்கள், அவர் பாடல்களிலுள்ள சொல் நயம், பொருள் நயம், அரிய கருத்துக்கள், அவருக்கே உரிய தனி முறைகள், அவரிடம் உள்ள சிறப்பு இயல்புகள் ஆகிய பலவற்றை ஆராய்வதற்கு இடம் இருக்கிறது. முருகன் திருவருள் அந்த ஆராயச்சியையும் முற்றுவித்து இந்த அலங்கார வரிசையை நிறைவுறுத்தும் என்று நம்புகிறேன்.

★

இந்தப் பாடல்களில் முருகனை முன்னிலைப்படுத்திக் கூறும் பாடல்கள் இரண்டு (4, 5); மயிலை முன்னிலையாக வைத்துப் பாடியது ஒன்று (2); படர்க்கைப் பரவலாக உள்ளவை மூன்று (1, 3, 6).

முதல் பாட்டு, வேறுபாடற்ற உணர்வு வந்தால்தான் இறைவனுடைய அருளநுபவம் கிடைக்கும் என்பதைக் கூறுகிறது. மயிலின் பெருமையை இரு வேறு வகையில் அடுத்தடுத்து இரண்டு பாடல்கள் பாடுகின்றன. இரண்டு பாடல்கள் முருக னிடம் விண்ணப்பித்துக்கொள்ளும் உருவில் அமைந்துள்ளன. இறுதிப் பாடல் அவன் திருவருளால் பெற்ற நிரந்தர விடுதலை

யையும் அதற்குக் காரணமான அடியார் உறவையும் அழகாகச் சொல்கிறது.

அருணகிரியார் கூறும் அருளநுபவச் செய்திகள் மிகச் சிறப்புடையன. இதில் உள்ள முதற் பாட்டும் இறுதிப் பாட்டும் அதைச் சொல்கின்றன. யான், தான் என்று வேறுபாடு கண்டு உரைக்கும் நிலை யொழிந்து மோன நிலை பெற்றால் சான்று ஆரும் அற்ற தனி வெளியில் முருகனோடு ஒன்றி இன்புறலாம் என்று முதற் பாட்டுச் சொல்கிறது. இடம் கடந்த அந்த இடத்தை யும் அநுபவத்தையும், ''முருகன் க்ருபாகரன் சான்று ஆரும் அற்ற தனிவெளிக்கே வந்து சந்திப்பது'' என்று சொல்லுகிறார். இறுதிப் பாடல் ஜீவன் முக்த நிலையைச் சொல்கிறது. இறைவனுடைய அடியார்களோடு இணங்குவதனால் இருவினைப் பற்று அற, சரீர அபிமானம் நீங்க, என்றும் பிறவியே இல்லாத நிலையை முருகன் அருள் செய்தான் என்று அப்பாடல் கூறுகிறது. கந்தர் அலங்காரத் தின் இறுதிப் பாடலாகிய அது நிறைவைக் கூறுவதாக இருக்கிறது.

க்ருபாகரன், கந்தன், கொற்றவேள், செங்கோடை வெற்பன், பெருநிலம் சூகரமாய்க் கீன்றான் மருகன், மயில் வாகனன், முருகன், வேல் முருகன், வேலோன் என்றும் திருநாமங்கள் இந்த ஆறு பாடல்களில் வருகின்றன. முருகன் கிரௌஞ்ச மலையை அட்ட பராக்கிரமச் செயலை ஒரு பாடலில் காண்கிறோம்.

முருகனுடைய வாகனமாகிய மயிலின் பெருமையைத் தனியே கூறிப் போற்றுவது அருணகிரிநாதர் வழக்கம். இங்கே இரண்டு பாடல்கள் அதன் பெருமையை எடுத்துரைக்கின்றன. ஒரு பாட்டு மயிலையே முன்னிலைப்படுத்திப் பாடியது. மற்றொன்று படர்க்கையில் வைத்துப் பாடியது. ஒன்று, அது சுதந்திரமாய் இட எல்லை கடந்து நிற்பதை விரிக்கிறது. மற்றொன்று, ஆதிசேடன் அதனால் படும் பாட்டை ஒரு கற்பனைக் காட்சியாக அமைத்துச் சொல்கிறது. தடக்கொற்றவேள் மயில், செழுங்கலபி என்று இந்தப் பாடல்களில் அதனைப் பாராட்டுவதன்றி, வேறு ஒரு பாட்டில், 'தூவிக் குலமயில்' என்று சிறப்பிக்கிறார்.

திருமாலினுடைய வராகாவதாரச் சிறப்பை ஒரு பாட்டில் பார்க்கிறோம். 'தொல்லைப் பெரு நிலம் சூகரமாய்க் கீன்றானா'க அங்கே வருகிறார். 'காசினியைப் பாலிக்கும் மாயன்' என்று

ஓரிடத்தில் அறிமுகப்படுத்துகிறார். அவருக்குப் பாயலாக உள்ள அனந்தனையும், அவர் திருக்கரத்தில் படைகளாக உள்ள சங்கு சக்கரத்தையும் காண்கிறோம்.

உவமையாகவும் உருவகமாகவும் சிலவற்றை எடுத்தாண்டு கருத்துக்களைச் சுவைபட விளக்குகிறார் அருணகிரியார். ஒரு நாளைக்கு ஒரு நாள் மாறிக்கொண்டே வரும் இந்தப் பொய் வாழ்வை, "நதிதனையன்ன பொய்வாழ்வு" என்று உவமிக்கிறார். முருகன் திருவடியைக் கமலக் கழல் என்று பாடுவது புதியதன்று. துணையில்லாமல் வாடும் நிலைக்குக் கொழுகொம்பு இல்லாமல் வாடும் தனிக் கொடியின் நிலையை உவமையாக்குகிறார்; "தாவிப் படரக் கொழு கொம்பிலாத தனிக்கொடிபோல், பாவித் தனி மனம் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே" என்று கூறுகிறார்.

இந்த உடம்பை நரம்பாற் பொதிந்த பொதி என்று உருவகம் செய்கிறார். உடலைச் சிறையாகவும், பாச வினையை விலங்காக வும் சொல்லுகிறார்.

"சுதிதனை யொன்றையும் காண்கின்றி லேன்கந்த வேல்முருகா
நதிதனை யன்னபொய் வாழ்வில்அன் பாய்நரம் பாற்பொதிந்த
பொதிதனை யும்கொண்டு திண்டாடு மாறெறனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந் திங்கேயென் றன்மனம் வேகின்றதே"

என்ற பாட்டு, மாணிக்கவாசகர் பாடல் ஒன்றை நினைப்பூட்டு கிறது:

"செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த
பழுத்தமனத் தடியருடன் போயினர்யான், பாவியேன்
புழுக்கணுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா
அழுக்குமனத் தடியேன் உடையாய்நின் அடைக்கலமே."

பெரும் பொருள் பெற்றவர்களும், "கோடி கோடியாகப் பணம் படைத்துக் குபேரர்களைப் போல வாழ்கிறவர்கள் இருக்கிறார்களே! அப்படி எங்களுக்குக் கிடைக்கவில்லையே!" என்று சொல்வது உலக இயல்பு. அருள் பெற்றவர்களுக்குக்கூட இத்தகைய ஆராமை இருக்கும் போலும்!

இந்த ஆறு பாடல்களில் முதல் பாடலுக்கு உரை காணும் போது, "யான் தான் எனும் சொல் இரண்டும் கெட்டால் அன்றி"

என்ற தொடர் முதலில் சிறிது மயக்கத்தை உண்டாக்கியது. தான் என்பது அவன் என்னும் பொருளுடையது; அது இறைவனைச் சுட்டியது. யான் என்றது உயிரைச் சுட்டியது. 'உயிரும் இறைவனும் ஒருங்கே கெடுவதாவது!' என்று ஒரு மயக்கம் தோன்றியது. அப்பால் 'யான் தான் எனும் **சொல்**' என்பதில் வரும் **'சொல்'** என்னும் சொல்லில் அழுத்தம் இருப்பதை உணர்ந்தேன். யான், தான் என்று சொல்லும் நிலையை இழந்து, சொல்லிறந்து நிற்கும் மோன அநுபவத்தைச் சுட்டுவதாகத் தெளிந்தேன். இப்படித் தெளிவதற்கு உறுதுணையாக இருந்தது கந்தர் அநுபூதியில் வரும் பாட்டு ஒன்று.

''யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே''

என்ற அற்புதப் பாட்டே அது.

முதல் பாட்டில் 'கீன்றான்' என்ற சொல்லை ஆண்டிருக்கிறார். கீள் என்பதன் அடியாகப் பிறந்த கீண்டான் என்ற சொல்லே பயில வழங்குவது. அங்கே எதுகையை நோக்கிக் கீன்றான் என்றே பாடுகிறார். இப்படி அருணகிரிநாதர் படைத்துத் தந்த சொற்கள் வேறு பல உண்டு.

★

வழக்கம்போல் இந்தப் புத்தகம் வெளி வருவதற்கும் பேருதவி செய்தவர் அன்பர் சிரஞ்சீவி அனந்தன். சில சமயங்களில் ஒரு முறைக்கு இரு முறை தட்டெழுத்தில் பிரதி செய்து தரும் பணியை அவர் புரிந்திருக்கிறார். தெய்வ பக்தியும், தமிழார்வமும், தொண்டு மனப்பான்மையும், பண்பும் உடைய அவருக்கு முருகன் திருவருளால் எல்லா நலன்களும் நிரம்ப வேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

கி.வா. ஜகந்நாதன்
15.09.1962

தனிவெளி

இளம் பருவத்தில் ஒரு மனிதன் கல்வி கற்கிறான்; பல உறவினர்களோடு பழகுகிறான்; பொருளைச் சேர்த்துக் கொள்கிறான். பிற்காலத்து வாழ்க்கைக்கு ஏற்ற வகையில் அவன் கல்வி, செல்வம், ஆற்றல் முதலியவற்றைச் சேகரித்துக் கொள்கிறான். அந்த இளம் பருவத்திற்கும், பின்னாலே வருகிற பருவங்களுக்கும் தொடர்ச்சி இருக்க வேண்டும். ஒரு பருவத்திற்கும், மற்றொரு பருவத்திற்கும் தொடர்ச்சி இல்லாவிட்டால் அவனுடைய வாழ்க்கை நன்கு அமையாது. கண்ட கண்ட இடங்களில், கண்ட கண்டபடி எல்லாம் வாழ்கிறவர்களுக்கு நிலையான வாழ்க்கை இல்லை. வாழ்வில் பிற்காலம் நன்றாக அமைய வேண்டுமென்ற எண்ணத்தோடு, அறிவு வந்தது முதல் எவன் திட்டவட்டமாகத் தன்னுடைய செயல்களை வரையறை செய்துகொண்டு அதற்கேற்ற பயிற்சியை அமைத்துக் கொள்கிறானோ, அவன்தான் நன்கு வாழ முடியும். பிற்காலத்து வாழ்வுக்கு ஏற்ற திட்டங்களை வகுத்துக் கொள்கிறவர்கள் அந்த வாழ்க்கையின் பயன் இன்னது என்று முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். அதைத்தான் லட்சியம் என்றும் குறிக்கோள் என்றும் சொல்வார்கள். குறிக்கோளைப் பற்றிச் சென்ற பாட்டில் நாம் பார்த்தோம்.

வாழ்க்கையின் தொடர்ச்சி

இந்த வாழ்க்கையின் முடிவு எத்தகையது என்று நமக்கு ஓரளவு தெரியும். மரணத்தில் முடிகிறது இந்த வாழ்வு. நன்றாக வாழவேண்டுமென்ற ஆசை எல்லோருக்கும் இருக்கிறது. இளம் பருவத்தில் முயற்சி செய்கிறவன் அதனுடைய பயனைப் பின் பருவத்தில் பெறுகிறான். முன் பயிற்சி செய்த மனம் பின்னாலே தொடர்ந்து வருகிறது. என்ன என்ன வகையான பயிற்சி அவனுக்குக் கிடைக்கிறதோ, யார் யார் உறவு அவனுக்கு உண்டாகிறதோ அவற்றுக்கு ஏற்றபடி அவன் வாழ்வு ஆரம்பமாகிறது. இது ஒரு பிறவியில் அமைகிறது.

இது போலவே இந்த வாழ்க்கையில் நாம் ஈட்டிக் கொள்ளும் பண்புகள் இந்த வாழ்க்கைக்குப் பிறகும் தொடர்ந்து வரும். சின்னஞ்சிறு பிராயத்திலுள்ள உடம்பு இப்போது நமக்கு இருப்பது இல்லை. அது வளர்ந்தோ, குறைபட்டோ அமைகிறது. ஆனாலும் மன இயல்பு மாறுவது இல்லை. அது போல் இந்தச் சரீரம் போய் வேறு ஒரு சரீரம் மற்றொரு பிறவியில் கிடைத்தாலும், இப்போ துள்ள வாழ்வின் அம்சங்கள் அந்தப் பிறவியிலும் தொடர்ந்து வரும். அவற்றின் தொகுதியை வாசனை என்று சொல்வார்கள். மனத்தைப் பண்படுத்திச் சிறந்த வகையில் அமைத்துக் கொண்ட வன் அடுத்த பிறவியிலும் அந்த மனம் தொடர்வதால் இங்கே பாடுபட்டதன் விளைவை அந்தப் பிறவியிலும் பெறலாம்.

''ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து''

என்று திருவள்ளுவர் சொல்வர். ஆகையால் மனத்தோடு சம் பந்தப்பட்ட முயற்சிகள் பிறவிதோறும் தொடர்ந்துவரும் என்பது ஓர் உண்மை. இந்த நாட்டில் அதனைப் பலவகையில் வற்புறுத்தி யிருக்கிறார்கள். முன்னைப் பிறவியில் செய்த புண்ணிய பாவங் களின் பயன் அடுத்த பிறவியிலும் வரும் என்றும், முன் பிறவி களில் காதல் செய்தவர்கள் பின்பும் காதல் செய்யும் வாய்ப்புப் பெறுவார்கள் என்றும், முன் பிறவியில் கொண்ட ஆசை பின் பிறவிகளுக்கு ஏதுவாகும் என்றும் நூல்கள் சொல்கின்றன. உடம்பு வாழ்வு இந்தப் பிறவியோடு நின்றாலும் உயிர் வாழ்வு தொடர்ந்து வருகின்றது என்பதைக் காட்டும் ஆதாரங்கள் இவை.

உடம்பின் அளவுக்கு மாத்திரம் சாரும் செய்கையைச் செய் கின்றவனுக்கு இந்த உடம்பு போனால் அந்த முயற்சியினால் வருகிற பலன் இல்லையாகிவிடும். விரலில் மோதிரம் போட்டுக் கொள்கிறான் ஒருவன். அவனுக்கு அந்த விரல் போய்விட்டால் மோதிரத்தினால் பயன் இல்லை. அதுபோல் உடம்பு சம்பந்தமாக மட்டும் செய்கிற முயற்சிகள் இந்த உடம்பு போய்விட்டால் பயனைத் தருவது இல்லை. ஆனால் முயற்சியின் பயன் உள்ளத் தோடு சார்ந்திருக்குமானால் அடுத்த பிறவிகளில் வந்து பயனைத் தரும். உடம்பு வாழ்வு வேறு; உள்ள வாழ்வு வேறு; உயிர் வாழ்வு வேறு. உயிர் வாழ்வு எப்போதும் இருக்கிறது; உள்ள வாழ்வு பல

பிறவிகளில் தொடர்ந்து வருகிறது; உடம்பின் வாழ்வு ஒரு பிறவியோடு நின்றுவிடுகிறது.

இப்போதே வீடு

அறம், பொருள், இன்பம், வீடு என்கின்ற நாலு உறுதிப் பொருள்களில் வீடு என்பது உயிர் அடையும் இன்பம். வீட்டு நெறியிலே செல்வது உயிரை ஒட்டிய முயற்சி. வீட்டு நெறி வாழ்க்கை உடம்பையும் உள்ளத்தையும் பயன்படுத்திக்கொண்டு உயிருக்கும் நலம் தரும் வாழ்க்கை; ''என்றோ, எப்பொழுதோ வீடு கிடைக்கப் போகிறது. அதைப்பற்றி இப்போது என்ன பேச்சு?'' என்று யாரும் இந்த நாட்டில் இருப்பது வழக்கம் இல்லை. மூச்சுவிடுவது முதல் தூங்குகிற வரைக்கும் எல்லாமே வீட்டை லட்சியமாகக் கொண்டு அமைய வேண்டும் என்பது பெரியோர் கொள்கை. ஆகவே, இந்த வாழ்வில் நாம் அடைகின்ற இன்பங்களைக் கண்டு அதோடு நின்றுவிடாமல் இப்போது உண்டாகும் துன்பங்களை மாற்றுவதற்கும், மேலும் இன்பத்தை வளர்ப்பதற்கும் நிலையான காரியங்களைச் செய்ய வேண்டும். வாழ்வு தொடர்ந்து வரும் என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு, நல்ல காரியங்களை இந்த வாழ்வில் செய்ய வேண்டுமென்று நூல்கள் கூறும். ''அவற்றின் பயன் இந்த வாழ்வில் கிடைக்கவில்லையே! அடுத்த பிறவியில் கிடைக்கும் என்பது என்ன நிச்சயம்'' என்ற சந்தேகப் பேர்வழிகளுக்கு இந்த உண்மைகள் புலனாகா. தான் ஓய்வு பெற்ற பிறகு நலம் பெற வேண்டுமென்று சேமிப்புச் செய்கிறான். இதைப் போலத்தான் அடுத்த பிறவிகளுக்கு வேண்டுமென்று இப்போதே ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்தப் பிறவியிலேயே வீட்டு இன்பத்தைப் பெற முடியுமா? நாளடைவில் உயிர் தூய்மைபெற்று இறைவனோடு ஒன்றித் திருவருளைப் பெறுகிறது. மனிதனாகப் பிறந்த உயிர் இந்த ஒரு பிறவியினாலேயே அடைய வேண்டிய முழு இன்பத்தையும் அடைந்துவிடலாம் என்பது ஓர் உண்மை. இதையும்விட மிகவும் பெரிய உண்மை, இந்த உடம்பு இருக்கும்போது இந்த வாழ்விலேயே நாம் பெறவேண்டிய முழு இன்பத்தையும் பெற்று விடலாம் என்பது. இந்த நாட்டிலுள்ள பெரியவர்கள் இந்த

உண்மையை வற்புறுத்தியிருக்கிறார்கள். இறைவனுடைய திரு வருளைப் பெற்றவர்கள், செத்த பிறகு சிவலோகம், வைகுந்தம் சேருவது என்பது மட்டும் அல்ல; இம்மை வாழ்விலேயே அத னுடைய சுவையைப் பெறலாம் என்பதை சுருதி யுக்தி அநுபவங் களால் பெரியவர்கள் காட்டியிருக்கிறார்கள். இந்த உலகத்தில் வாழும்போது முக்தி இன்பத்தை நுகர்கிறவர்கள் சீவன்முத்தர்கள் என்று பெயர் பெறுவார்கள்.

சங்க காலத்திலேயே இப்படி ஒரு வாழ்க்கையைப் பற்றிய சிந்தனை மக்களுக்கு இருந்தது.

''தவம்செய் மாக்கள் தம்உடம்பு இடாஅது
அதன்பயம் எய்திய அளவை மான''

என்று பத்துப் பாட்டில் வருகிறது. ''தவம் செய்கின்ற பெரிய வர்கள் தம்முடைய உடம்பை விட்டுவிட்டு இறப்பதற்கு முன்னாலே தவத்தின் பயனாகிய சீவன் முத்த நிலையை அடைந்தது போல'' என்பது இதனுடைய கருத்து. ஆகையால் இந்த உடம்பு இருக்கும்போதே இறை அருள் இன்பத்தைப் பெறலாம் என்ற உண்மை அந்தப் பழங் காலத்து மக்களுக்கே புலனாகியிருந்தது என்று தெரியவருகிறது. தாயுமானவர்,

''இத்தேகமொடு காண்பனோ''

என்று சொல்வார்.

''சென்றாங் கின்பத் துன்பங்கள் செற்றுக் களைந்து பசையற்றால் அன்றே அப்போதே வீடு''

என்று நம்மாழ்வார் பாடுகிறார். இத்தகைய சீவன் முத்த நிலையை அடைவது எளிது அன்று. ஆனால் சாத்தியம். உபநிடதங்களும், சமய நூல்களும் இந்த நிலை மனிதனாலே அடைவதற்குரியது என்று சொல்கின்றன. அடைந்தவர்களும் தம்முடைய அநுபவத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அப்படி அடைந்தவர்களில் ஒருவர் அருணகிரிநாதர்.

அருணகிரியார் அறிவுரை

அவருடைய திருப்பாடல்களில் நம்மைப் போன்ற மக்களுக்கு அறிவுரை கூறும் பாடல்கள் பல. நம்முடைய துன்ப அநுபவங்

களைத் தம்முடையனவாக மேற்கொண்டு இறைவனிடம் விண்ணப்பம் செய்துகொள்வன பல. அவற்றையெல்லாம் நாம்கூடச் சொல்லிவிடலாமே என்று தோன்றும். ஆனால் ஆண்டவனின் திருவருள் அநுபவத்தைப் பற்றி அவர் சொல்கிற இடங்கள் அவருடைய உயர்வையும், சிறப்பையும் காட்டுகின்றன. சென்ற பாட்டில் தம்முடைய நெஞ்சைப் பார்த்து, ''மாதர் மயலில் அகப்பட்டாயே!'' என்று இரங்குவது போலப் பாடிய பெரியார் இப்போது நமக்கு உபதேசிக்கிறார். உலகத்தில் இருக்கும் போதே இறைவனுடைய அருள் இன்ப அநுபவத்தைப் பெறுவதற்கு எது வழி என்று சொல்கிறார்.

சிறிது நேரக் கிளுகிளுப்பு

சில சமயங்களில் நமக்கு இறைவனுடைய நினைவு வரும் போது ஒருவகைக் கிளுகிளுப்பு உண்டாகிறது. உபநிடதங்களைப் பற்றி ஒருவர் பேசுகிறார்; மிக உயர்ந்த நிலையில் பல தத்துவத்தை எடுத்துச் சொல்கிறார். 'சுக துக்கங்கள் இல்லாத நிலையே முத்தி. அந்த நிலையில் வெப்பம் இல்லை; குளிர்ச்சி இல்லை. காற்று இல்லை; ஆகாசம் இல்லை. பேச்சும் இல்லை; நினைப்பும் இல்லை. உடம்பினால் வருகிற இன்ப துன்பம் இல்லை. நாமே இல்லை. காலமும், இடமும் நின்றுவிடுகிற இடம் அது' என்று வரிசையாக வருணிக்கிறார். அவற்றை நாம் கேட்கும்போது உலகத்தில் உள்ள நினைவு மாறி எங்கேயோ போய் நிற்பது போன்ற ஓர் உணர்ச்சி தோன்றுகிறது. உடம்பு கனத்தை இழந்து மேலே பறப்பது போன்ற உணர்ச்சியும் உண்டாகிறது. ஆனால் அதைக் கேட்டுவிட்டு வெளிவந்து பழையபடி பிரபஞ்சச் சேற்றில் உழலும்போது நாம் பழையபடி ஆகிவிடுகிறோம். நீராடும்போது உடம்பு குளிர்ந்து பின்பு வெளியில் வந்தால் மறுபடியும் பழைய புழுக்கத்தை அப்பிக் கொள்வது போல நம்முடைய இயல்பான நிலை நம்மை வந்து சூழ்ந்து கொள்கிறது.

அந்த உயர்ந்த உண்மைகளைக் கேட்கும்போது ஓரளவு நமக்குப் புரிகிறது போல இருக்கிறது. சில சமயங்களில் பக்தர்கள் பஜனை செய்யும்போதும் இறைவனுடைய பெருங் கருணையைப் பற்றிச் சொல்லும்போதும் நம்முடைய உள்ளம் நெகிழும். மேலும் மேலும் அத்தகைய சங்கத்தில் சாரவேண்டு மென்ற ஆர்வம்

எழும். ஆனால் அந்தச் சங்கத்தினின்றும் பிரிந்து போனால் பழைய குருடி கதவைத் திறடி என்ற கதையாகி விடுகிறது.

அவ்வாறு உண்டாவதற்குக் காரணம் என்ன? நம்மிடத்தில் நல்ல இயல்பு ஒன்றும், கெட்ட இயல்பு ஒன்றும் இருக்கின்றன. நல்லவற்றை ஒருவர் சொல்லும்போது கேட்கத் தெரிகிறது. ஓரளவு விளங்குவது போலவும் இருக்கிறது. அத்தகைய அநுபவங்களை நம்முடைய முயற்சியே இல்லாமல் பிறர் நம்மிடம் சார்த்தினால் பெறுவதற்குச் சித்தமாக இருக்கிறோம். நாமாக முயன்று அதைப் பெறுவது இல்லை. பிறர் விளைவித்துத் தருகிற காய் கறிகளை நாம் பெற்று உண்பதற்குத் தயாராய் இருக்கிறோம். ஆனால் நாமே உழுது, உரம் போட்டு, செடிகொடிகளைப் பயிர் பண்ணி, பொறுமையாகக் காத்திருந்து அந்த முயற்சியால் வரும் பலனைப் பெற்று வாழ விரும்புவதில்லை.

நல்லோர் கூட்டுறவு

பூஜனை செய்கிறவர்களும், உயர்ந்த உண்மைகளை உபதேசிக்கின்ற பெரியவர்களும் உண்மையிலேயே சிறந்த பாகவதர்களாகவும், பக்தர்களாகவும் இருந்தால் அவர்களைச் சாரும்போது நமக்குக் கிளுகிளுப்பு உண்டாகிறது. அதற்குக் காரணம் நம்முடைய மனம் ஓரளவு அவற்றைப் புரிந்து கொள்கிற பக்குவத்தில் இருப்பது. அதைவிடப் பெரிய காரணம் அந்தப் பாகவதர்களும், பெரியவர்களும் பலகாலமாக முயற்சி பண்ணி, சாதனையை ஓரளவு பெற்று, பின்பு தம்மைச் சார்ந்தவர்களிடமும் ஒருவகை உணர்ச்சியை உண்டாக்கும் ஆற்றலைப் பெற்றிருப்பது தான். நாம் அவர்களைச் சார்ந்து சில மணி நேரம் ஒருவகையான கிளுகிளுப்புக்கு ஆளாகிறோம். அது நம்முடைய மனக் கவலையைப் போக்கி அமைதியான நிலையை உண்டாக்குகிறது என்பதை உணர்ந்துகொள்கிறோம். அத்தகைய பெரியவர்களுடைய சங்கத்திற் பழகியதற்குப் பயன் அப்போதைக்கு ஒருவகைக் கிளுகிளுப்பைக் கொள்ளுவது என்று நிற்கக் கூடாது. அது நீண்டு நிலைக்க வேண்டுமென்றும், அவர்களோடு சாராமலே நமக்கு அத்தகைய உணர்ச்சி எழவேண்டுமென்றும், நாளடைவில் நம்மைச் சார்ந்தவர்களுக்கும் அத்தகைய உணர்ச்சியை உண்டாக்க வேண்டுமென்றும் நாம் ஆசைப்பட வேண்டும். அந்த ஆசை

முறுக முறுக அதற்கேற்ற முயற்சி நம்மிடம் உண்டாகும். சாதனை வலுப்பெறும். சோதனைகளுக்கிடையே நம் சாதனை வெற்றி பெற்று முடிவில் அநுபவ உலகத்தில் அடி எடுத்து வைப்போம்.

இப்படி அமைதியாக வாழ்வதற்கு ஒரு வழி உண்டென்று, பெரியவர்களிடம் பழகுவதால் தெரிந்துகொள்ள வேண்டும். எப்போதும் கவலைப்படவும், பிறனுடைய உயர்வைக் கண்டு பொறாமைப்படவும் பிறனுடைய துயரைக் கண்டு இரங்காமல் இருக்கவும் நாம் பழகிக் கொண்டிருக்கிறோம். இதற்கு நேர் மாறாக, உலகம் எல்லாம் இறைவன் படைப்பு என்றும், சுகதுக்கங்கள் நம்முடைய மனம் காரணமாக வருவன என்றும் எண்ணி, நம்முடைய மனத்தை நடுநிலையில் வைத்துக் கொள்வதற்கு மெல்ல மெல்லப் பழகிக் கொள்ள வேண்டும். அந்தப் பழக்கம் எளிதில் வராது. பெரியவர்களுடைய சங்கத்தினால் அப்படி ஒன்று இருப்பதை முதலில் தெரிந்து கொண்டு, அதனால் நன்மை உண்டாகும் என்பதைத் தெளிந்து கொண்டு முயன்றால் அது நமக்கும் கிடைக்கும். நமக்கும் கிடைக்கும் என்ற நம்பிக்கையை முன்னால் பெற்றுப் பின்பு முயல வேண்டும். இதற்குத் தான் அடிக்கடி நல்லவர்களுடைய கூட்டுறவை வைத்துக்கொள்ள வேண்டும் என்று நூல்கள் கூறுகின்றன.

பருவத்துக்கு முன்னும் பின்னும்

ஒரு சிறுமி, தனக்கு மங்கைப் பருவம் வராவிட்டாலும் பருவம் வந்த பெண்கள் தங்கள் தங்கள் கணவர்களோடு பழகுவதைக் கண்டு தனக்கும் அப்படி ஒரு நிலை வேண்டுமென்று ஆசைப்படுகிறாள். பெண்களோடு சேர்ந்து பெண்களுக்கு உரிய விஷயங்களை எல்லாம் கற்றுக்கொள்கிறாள். பாடுவதும், ஆடுவதும், சமையல் செய்வதும், குழந்தைகளைப் பராமரிப்பதும் ஆகிய காரியங்களைப் பருவம் வராமல் உள்ள பெண்கள்கூடக் கற்றுக்கொள்கிறார்கள். இவற்றையெல்லாம் கற்றுக்கொண்டு, இல்வாழ்க்கைக்குரிய தகுதிகளையெல்லாம் பெற்றுப் பிறகு தனக்கென்று ஒரு கணவனை அடைகிறாள். பருவம் வந்த பிறகு அவனால் அடைகிற இன்பத்தைப் பெறுகிறாள். சமையல் செய்வதும், குழந்தைகளைக் காப்பாற்றுவதும், வீட்டைத் துப்புரவாக

வைத்துக் கொள்வதும், விருந்தினர்களுக்கு வேண்டியவற்றைச் செய்வதும் ஆகிய காரியங்களைப் பருவம் வராமலே செய்யலாம். பயிற்சி இருந்தால் போதும். ஆனால் பருவம் அடைந்தவுடன்தான் கணவனால் வரும் இன்பத்தை அடைய முடியும். இது அடிமரம் நன்றாக வலுத்து, கிளைகள் எல்லாம் விட்டு, மொட்டும் அரும்பின பிறகு மலர் தோன்றுவது போன்ற நிலை. மலர் தனியே தோன்றாது. அடிமரம் முதலிய உறுப்புகள் எல்லாம் மெல்ல மெல்ல வளர்ந்து அரும்பு தோன்றி அதிலிருந்து மலர் தோன்றும்.

முயற்சியும் அநுபவமும்

அப்படித்தான் இறைவன் அருள் அநுபவம் பெறுகின்ற மலர் கடைசியில் வரும். ஆனால் அதற்குமுன் உள்ளவற்றைப் பக்குவம் இல்லாதவர்களும் தெரிந்து கொள்ளலாம். நம்முடைய முயற்சி ஒரு பகுதி; அநுபவம் மற்றொரு பகுதி. முயற்சி இல்லாமல் அநுபவம் வராது. நம்முடைய நிலையில் செய்கிற முயற்சிகள் பல உண்டு. அவற்றுள் மிகவும் முக்கியமானது, நல்லவர்களுடன் சேர்ந்து உறவாடுவது. அப்படி உறவாடுவதால் முதலில் இறைவன் உண்டு என்பதும், அவன் திருவருளால் உயர்ந்த இன்பம் கிடைக்கும் என்பதும் உறுதியாக நம்முடைய உள்ளத்தில் தோன்றும். பெரியவர்களோடு சேராவிட்டால் அப்படி ஒன்று சாத்தியம் இல்லையென்ற ஐயமே தோன்றும்.

யாரோடு நாம் சேருகிறோமோ அதற்கு ஏற்றபடி நமது உள்ளத்தில் நினைப்புகள் உருவாகும். வியாபாரியோடு சேர்ந்தால் வியாபாரத்தைப் பற்றிய எண்ணங்களே உள்ளத்தில் வளரும். அறிவாளியோடு சேர்ந்தால் அறிவு பெறவேண்டுமென்ற ஆசை உண்டாகும். இறைவனுடைய அருள் நெறியில் செல்கிறவர்களோடு கொள்ளும் உறவு அருளநுபவம் பெறும் முயற்சிக்குத் தூண்டுகோலாக இருக்கும். அதுதான் உயிரோடு ஒட்டிய இன்பத்தைப் பெறுவதற்கு வழி.

நல்லவர்களுடைய கூட்டுறவினால், கல்வியினால் அறிந்து கொள்ளாத பல உண்மைகளைத் தெளியலாம்.

கல்வி

மனிதனுக்கு அறிவு இயல்பாக இருந்தும் அது சிறப்பது இல்லை; விளக்கம் பெறுவது இல்லை. அறிவு விளக்கம் பெறுவதற்குக் கல்வி தூண்டுகோலாக அமைகிறது. அறிவு கல்வியினால் விளக்கம் பெறும் என்பதை,

''தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு''

என்னும் குறள் சொல்கிறது. பல நூல்களைப் படித்துப் படித்துப் பலருக்கு ஐயங்கள் உண்டாவது உண்டு. கல்விக்குப் பிறகு கேள்வி என்ற படி இருக்கிறது. கேள்வியினால் ஐயம் தீரும். கல்வியைவிடக் கேள்வி சிறந்தது. நூல்களைப் படிக்கத் தெரியாதவர்கள்கூடக் கேள்வியினால் சிறந்த அறிஞர்களாகியிருப்பதைப் பார்க்கிறோம். பழங்காலத்தில் இந்த நாட்டுப் பெண்மணிகள் பலர், நூலைப் படித்து அறிய முடியாவிட்டாலும் கேள்வியினால் பல செய்திகளைத் தெரிந்துகொண்டிருந்தார்கள்.

கேள்வியின் சிறப்பு

ஓர் ஆண்டுக்கு முன்னால் அவரை காய்த்திருந்தது. காய்களைப் பறித்து வற்றல் போட்டு வைத்திருக்கிறோம். இந்த ஆண்டு அந்த வற்றலை வைத்துக் கொண்டு கூட்டு, குழம்பு முதலியவற்றைச் செய்கிறோம். ஆனால் இந்த ஆண்டும் நாம் அவரைக் கொடி போட்டிருக்கிறோம். முற்றத்திலுள்ள அவரைக் காயைப் பறித்து வந்து அவற்றைக் கொண்டு கூட்டு முதலியன செய்கிறோம். போன ஆண்டு பறித்து வற்றல் போட்டு வைத்திருந்த அவரைக் காயைக் கொண்டு கூட்டுச் செய்வதற்கும், இந்த ஆண்டு இன்றைக்கே தோட்டத்திற்குச் சென்று பச்சை அவரைக் காயைப் பறித்து வந்து கூட்டுச் செய்வதற்கும் வித்தியாசம் உண்டு. இன்று பறித்தவுடனே கூட்டுப் பண்ணியிருக்கும் அவரைக் காய்க்குச் சுவை மிகுதியாகவே இருக்கும். வற்றலைக் காட்டிலும் பச்சைக் காய் கறி சிறந்தது என்பதை நம்முடைய அன்றாட அநுபவத்தில் உணர்கிறோம். பல காலத்திற்கு முன்னால் பெரியவர்கள் நூல்களை எழுதியிருக்கிறார்கள். அவர்கள் எழுதிய நூல்களைப் படிக்கிறோம். அவை ஓரளவு பயன் கொடுக்கக் கூடியது

தான். ஆனாலும் அநுபவ அறிவிலே சிறந்தவர்களிடம் அவ்வப் போது நேரில் கேட்கும் கேள்விக்குக் கல்வியறிவு ஒப்பாகாது. பிறர் எழுதிய நூல்களைப் படிப்பது, வற்றலைக் கொண்டு கூட்டு முதலியன பண்ணுவது போலாகும். ஆனால் நேரில் நமக்கு உபதேசம் செய்து ஐயங்களை நீக்குபவர்களுடைய அநுபவம் நிறைந்த வார்த்தைகள் பச்சைக் காய்கறி போல இருக்கும்.

''கற்றிலன் ஆயினுங் கேட்க அஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை''

என்பது திருவள்ளுவர் வாக்கு. மனிதன் கற்க வேண்டியது இன்றி யமையாததே. கற்பதற்கு வாய்ப்பு இல்லை என்றாலும் கேள்வி இருக்க வேண்டும். கற்பதற்கு ஒரு பருவம் உண்டு. இளமைப் பருவத்தில் கல்லாதவர்கள் பிற்காலத்தில் கற்பது என்பது அரிது. அப்படியின்றி எல்லாக் காலத்தும் கேட்கலாம். கற்றவர்களிடத் தில் சென்று நமக்கு வேண்டியவற்றைக் கேட்டால் நம் நிலை அறிந்து எதைச் சொல்ல வேண்டுமோ அதைச் சொல்வார்கள். நாம் கேட்பவற்றில் ஐயம் இருந்தால் அவர்கள் அதைத் தெளி விப்பார்கள். ஔவைப் பாட்டி அதனால் தான், ''கேள்வி முயல்'' என்று சொன்னாள். கற்றவனும்தான் கற்ற கல்வியில் உண்டாகிற ஐயங்களைக் கேள்வியினால்தான் தீர்த்துக்கொள்ள வேண்டும். ஆகையால் கல்விக்கும் கேள்வி இன்றியமையாதது.

ஒருவனுக்கு காது நன்றாக இருக்கிறது. அவன் ஒன்றைக் கேட்டால் நன்றாகப் புரிந்து கொள்கிறான். காது செவிடாக இருந்தால் என்ன சொன்னாலும் காதில் விழாது. நல்ல விஷயங் களைச் சொல்பவர்கள் இருக்கும்போது, கேட்காமல் இருந்தால் நம் காது ஒலியைக் கேட்கும் காதாக இருந்தாலும் ஒருவகையில் செவிடுதான். இயல்பாக உள்ள காதுக்குப் பின்னும் கேள்வி என்ற சலாகை போட்டால் நல்ல காதாகும். விக்கிரகங் களைப் பண்ணுகிறவர்கள் காது, மூக்கு முதலிய வற்றைக் கடைசியில் சுத்தம் பண்ணுவதற்கு ஒரு சலாகையை எடுத்துக் குடைவார்கள். பிசிர் எல்லாம் போவதற்கு அப்படிச் செய்வது உண்டு. அப்படி நம்முடைய காதிலே ஒரு சலாகையைப் போட்டுக் குடைய வேண் டும். அது இரும்புச் சலாகையன்று. நல்லவர்களிடம் கேட்கும் கேள்வி என்னும் சலாகையினால் முன்னாலே துளையுள்ள காதைப் பின்னும் துளையிட்டுத் தூய்மைப்படுத்த வேண்டும்.

''கேட்பினும் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி.'' *(குறள்)*

வார்த்தைகளைக் கேட்கும் ஆற்றல் உடையவனானாலும் அறிந்தவர்பால் கேள்வி பெறாதவன் செவிடனுக்கு ஒப்பானவன்.

கேள்வியின் வகை

காதில் விழுகிறது எல்லாம் கேள்வி ஆகாது. செவிடன் ஒருவன் ஓரிடத்தில் நிற்கிறான். அப்போது வெடி ஒன்று வெடிக்கிறது. அவன் செவிடன் ஆகையால் வேட்டின் ஒலியை அவன் காது கேட்பது இல்லை. ஆனால் கண் உடையவன் ஆகையால் புகையைப் பார்க்கிறான். ''இது என்ன புகை?'' என்று கேட்கிறான். வெடி வெடித்தால் காதினாலே கேட்பதற்கு ஒலியும், கண்ணினாலே பார்ப்பதற்குப் புகையும் இருக்கின்றன. ஆகையால் அந்த வெடியின் அநுபவம் இரண்டு இந்திரியங்களைச் சாருகிறது. கண்ணும், காதும் நன்றாக இருப்பவன் வெடியின் அநுபவத்தை முழுவதும் பெறுகிறான். காது இல்லாதவன் அரைப் பாகத்தைப் பெறுகிறான். அதுமாதிரியே ஒலி மாத்திர மாக இருக்கிறவற்றைத் தெரிந்துகொள்ளும் காது பாதிக் காது. நல்லவர்களுடைய சிறந்த உபதேசங்களைக் கேட்கும் காது முழுக் காது. ஒருவன் பிரஞ்சு மொழியில் பேசுகின்றான். அது காதில் விழுகிறது. ஆனால் அதனால் என்ன பயன்? நம்முடைய காது அந்த ஒலியை மாத்திரம் கேட்கிறது. அதன் பொருளை நாம் தெரிந்து கொள்வது இல்லை. காதிலே ஒலி விழுவதனால் மாத்திரம் பயன் இல்லை. அதன் கருத்தை உணர்ந்து நாம் அறிவு பெற வேண்டும். அறிவு பெறுவதற்குரிய நல்லவற்றைக் கேட்பதுதான் கேள்வி; அதைச் செவிச் செல்வம் என்பார் திருவள்ளுவர்.

காது இருந்தும் புரியாத மொழியைக் கேட்டால் அது செவிட்டுக் காதுக்குச் சமானமாகிறது. செவிட்டுக் காதைவிட அது ஒரு பங்கு உயர்வானாலும் இரண்டுக்கும் வேறுபாடு சிறிதுதான். ஒன்று ஒலியையே கேட்பதில்லை. மற்றொன்று ஒலியை மாத்திரம் கேட்கிறது. இதற்கு அடுத்தபடி ஒன்று உண்டு. பொருள் தெரிந் தாலும் நமக்கு நலம் தருகிற பொருளைக் கேளாமல் வேறு எதையெதையோ கேட்டுக் கொண்டிருந்தால் நம் காது முழுப் பயனைப் பெற்றதாக அமையாது.

கற்க வேண்டும். கற்றபின் கேட்க வேண்டும். நல்ல கேள்வி என்பது உயிருக்கு நலம் தருகிற உபதேசங்களைக் கேட்பது. கல்வி கேள்வி ஆகிய இரண்டும் பெற்றவனுக்கு அறிவு சிறக்கிறது. நல்ல உபதேச நூல்களை நாம் கற்க வேண்டுமென்றும், அப்போது உண்டாகும் ஐயங்களைக் கேள்வியினால் போக்க வேண்டுமென்றும் சொல்வார்கள். கேட்ட பிறகும் கேட்டவற்றைச் சிந்தித்துத் தெளிந்து கொள்ள முயல வேண்டும். கற்றல், கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்று ஐந்து வகையான முயற்சிகள் படிப்படியாக உள்ளன.

கற்றல் என்பது அச்சில் இருக்கிற எல்லாவற்றையும் கற்பது ஆகாது. நம்முடைய லட்சியம் எதுவோ அதனை அடைவதற்கு உறுதுணையாக இருப்பனவற்றையே கற்க வேண்டும்.

"கல்வி கரையில கற்பவர் நாட்சில
மெல்ல நினைக்கிற் பிணிபல – தெள்ளிதின்
ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகில் தெரிந்து"

என்பது நாலடி. கல்விப் பரப்புக்கு எல்லையே இல்லை. நாம் எதனைத் தெரிந்து கொண்டால் முன்னேறலாம் என்பதை முதலில் தெரிந்துகொண்டு படிக்க வேண்டும். பழங்காலத்து நூலாசிரியர்கள் இன்ன நூலுக்கு இன்னவன் அதிகாரி என்று முன்னாலேயே சொல்லியிருப்பார்கள். வைத்திய வேலைக்கு வைத்திய நுல்களைப் படிப்பது பயன்; சோதிடம் படிப்பதனால் அந்த வேலைக்குப் பயன் இல்லை. எந்தத் துறையில் நம் வாழ்வை நாம் அமைத்துக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறோமோ அந்தத் துறைக்கு ஏற்ற நூல்களைக் கற்பதே நல்லது.

ஆகவே நமக்கு ஒரு லட்சியம் வேண்டும். அந்த லட்சியத்திற்கு ஏற்ற நூல்களைப் பயில வேண்டும். நூலறிவினால் தெளியாமல் உள்ள ஐயங்களைத் தக்கவர்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும். நல்லவர்களுடன் பழகுவதனால் அவர்கள் வாயிலாகப் பலவற்றைக் கேட்டு ஐயம் நீங்கித் தெளிவு பெறலாம்.

சிந்தித்தலும் தெளிதலும்

கேட்ட பிறகும் செய்ய வேண்டிய காரியம் உண்டு. கேட்டு அறிந்தவற்றை நாம் தனியே இருந்து சிந்திக்க வேண்டும்.

அப்படிச் சிந்திக்கச் சிந்திக்க நல்ல தெளிவைப் பெறுவோம். சிந்திப்பதன் பயன் தெளிவு. தெளிந்த பிறகு அந்தத் துறையில் நாம் முயற்சி செய்ய வேண்டும். கற்றலுக்கு அடுத்தபடி வருவது கேட்டல். கேட்டலுக்கு அடுத்தபடி வருவது சிந்தித்தல். சிந்தித்தலின் பயனாக வருவது தெளிதல். வெறும் அறிவு அநுபவத்தை உண்டாக்காது. தெளிதல் என்பது அறிவின் கொழுந்து. கற்கும் போது அறிவு உலகத்தில் காலை எடுத்து வைக்கிறோம். கேள்வியினால் சிறிது தூரம் பயணம் செய்கிறோம். சிந்தனையினால் பின்னும் உறுதி பெறுகிறோம். தெளிதல் வந்துவிட்டால் அறிவின் எல்லையை அணுகுகிறோம். அது போதுமா? ''இப்படி வியாபாரம் செய்தால் இன்ன லாபம் கிடைக்கும்'' என்று ஒருவன் தெளிந்து கொள்கிறான். அந்தத் தெளிவே அவனுக்கு லாபமாகாது. செய்கிற செயலைப் பற்றிய ஆணுக்கங்களை எல்லாம் தெரிந்துகொண்டு அப்பால் செயலிலே டு'க வேண்டும். நம்பிக்கை கொண்ட அளவில் பயன் வந்துவிடாது. அதற்கு அடுத்தபடி முயற்சி செய்ய வேண்டும். அப்போதுதான் பயன் உண்டாகும்.

முயற்சியின் அவசியம்

பலவற்றைக் கற்றும், பின்பு கேட்டும், அதற்கப்பால் சிந்தித்தும், அதன் பயனாக நல்ல தெளிவை அடைந்திருப்பவனுக்கு முயற்சி செய்யும் ஆர்வம் உண்டாகும். தெளிவு உறுதியாக இருந்தால் அந்த ஆர்வம் நிச்சயமாக எழும். அந்த ஆர்வத்தின் பயனாக முயற்சி உண்டாகும்; அதன் பயனாக அநுபவம் தலைப்படும். முயற்சியினிடையே உண்டாகும் தடைகளைக் குருநாதன் கிருபையால் போக்கிக் கொள்ளலாம்.

மெத்தப் படித்தவனுக்குப் படித்த அளவில் அறிவு உண்டாகிறது. ஆனால் அவனுடைய உள்ளத்தில் சில ஐயங்கள் இருக்கத்தான் இருக்கும். தத்துவ நூல்களைப் படித்துவிட்டு அதனால் ஓரளவு அறிவு பெற்று அந்த அறிவுதான் அநுபவம் என்று ஏமாந்து போகிறவர்கள் பலர் இருக்கிறார்கள். யாரேனும் பெரியவர் உயர்ந்த அநுபவத்தைப் பற்றிப் பேசுகிறபோது அவர் சொல்வது ஓரளவுக்கு நமக்கு அறிவு அளவில் விளங்குமானால் நாமும் அவரை ஒத்த நிலையில் இருப்பதாக எண்ணிக்கொண்டு விடுகிறோம். இது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது. அறிவு

அதிகமாக அதிகமாக நாம் இன்னும் தெளிவு பெறவில்லையே என்ற ஏக்கம் இருக்க வேண்டும். தெளிவு பெற்றவர்களோ இந்தத் தெளிவு இருந்தும் இன்னும் முயற்சி பண்ணவில்லையே என்ற ஏக்கத்தைப் பெறுவார்கள்.

கேள்வியினால் அநுபவம் வந்துவிடாது. சிந்தித்துத் தெளிய வேண்டும். தெளிவுக்குப் பிறகு அநுபவம் பெற வேண்டுமானால் நிட்டை கூட வேண்டும். பலபல பொருள்களை வாங்கி எடுத்துக் கொண்டு தெருத்தெருவாகச் சென்று விற்று, அதனால் கிடைத்த பணத்தைக் கொண்டுவந்து பாதி ராத்திரியில் யாரும் இல்லாத வேளையில் எண்ணிப் பார்த்து, தன் பெட்டியில் வைத்துப் பூட்டுகிறான் வியாபாரி. 'வீதியில் வியாபாரம் பண்ணினோமே, அந்தப் பணத்தை வீதியில் எண்ணிப் பார்க்கலாம்' என்று யாரும் எண்ணமாட்டார்கள். வியாபாரம் நாலு பேருக்கு தெரியப் பண்ணினாலும், அதன் பயனாகிய பணம் தனிமையில் எண்ணிப் பார்த்து மகிழ்வதற்குரியது. அப்படித்தான் கல்வி, கேள்வி ஆகியவை சத்சங்கத்தினாலும், பெரியவர்களுடைய தொடர்பினாலும் உண்டாவன. ஆனால் சிந்தனையும் தெளிவும் அநுபவமும் தனித்து நின்று பெறுவதற்குரியவை.

சார்பின் பயன்

கல்வி கற்றவர்கள் அந்தக் கல்வியினால் அநுபவம் பெற்றதாக எண்ணுவது ஏமாற்றம் என்று சொன்னேன். அதுபோலத்தான் கேள்வி கேட்டவர்களும் அந்தக் கேள்வி அளவில் அநுபவம் வந்துவிட்டதாக ஏமாறுவதும் உண்டு. பெரியவர்களிடையே சேர்ந்து இருந்தால் மாத்திரம் ஒருவனுக்கு எல்லாம் வந்துவிடாது. அவருடைய சார்பு இருக்கிறவரைக்கும் மனம் உயர்ந்த நிலையில் இருக்கும். அவ்வளவுதான். மங்கைப் பருவம் வராத பெண்ணுக்கு அந்தப் பருவம் வந்த பெண்களோடு பழகினால் அவர்கள் பேசுகின்ற பல இரகசியங்கள் தெரியலாம். ஆனால் அவற்றின் உண்மையை அநுபவித்துப் பார்க்கின்ற ஆற்றல் அவளுக்கு இல்லை. சத்சங்கத்தில் பழகுகிறவர்களுக்கு ஒரு நிலைவரைக்கும் மனம் உயர்ந்து வரும். அப்பால் அநுபவ உலகம் அவர்களுக்கு விளங்கவே விளங்கா. அநுபவிகளுடன் பழகுவதனால் அநுபவத்திற்குரிய பொருள் ஒன்று உண்டு என்று தெரியுமேயன்றி

அனுபவம் கிடைக்காது. பிறர் நமக்கு அரிசி தரலாம். நமக்காகச் சமையல் செய்யலாம். சாப்பாட்டை நம்முடைய இலையில் பரிமாறலாம். பின்னும் கருணை உடையவர்களானால் நம் வாயிலும் ஊட்டலாம். ஆனால் நமக்காக அவர்கள் விழுங்க முடியாது. விழுங்கும் முயற்சி இருந்தால்தான் சோறு நம் வயிற்றில் புகுந்து அதனால் வருகிற அனுபவம் நமக்குக் கிடைக்கும். சத்சங்கத்தில் சேர்ந்தால் வழி புலப்படுமேயன்றி அனுபவம் கிடைக்காது. தெய்வங்கூடக் காட்டுமேயன்றி ஊட்டாது.

தனிமை

ஆதலினால் முயற்சி செய்யும் ஆர்வம் வேண்டும். தனிமை வேண்டும். அதனால்தான், ''தனித்திரு, பசித்திரு, விழித்திரு'' என்று பெரியவர்கள் விதித்திருக்கிறார்கள். கல்வி, கேள்வி, சிந்தித்தல், தியானித்தல் ஆகிய படிகளை எல்லாம் கடந்து, நிஷ்டை கூடும் நிலைக்கு வர வேண்டும். தனிமையில் மனத்தைச் செலுத்தி, சிந்தித்து இறைவனுடைய அருளிலே ஈடுபட வேண்டும். அப்போது ஆண்டவன் நம்மைச் சந்திக்க வருவான். கூட்டத்தில் கூடி இருக்கும்போது அவனுடைய அருள் நமக்குக் கிடைக்கத் தான் கிடைக்கிறது. அது நாலுபேருக்கு நடுவில் தன்னுடைய நாயகன் கையிலுள்ள புத்தகத்தை நாயகி பெறுவது போன்றது.

நாயகன்தான் கொடுக்க வேண்டுமென்பது இல்லை. வேறு யார் வேண்டுமானாலும் கொடுக்கலாம். கணவனும், மனைவியும் கடைக்குப் போகிறார்கள். அங்கே நிறையச் சாமான் வாங்குகிறார்கள். கணவன் சுமையைத் தூக்க முடியாமல் ஒரு பாகத்தை நாயகியினிடம் கொடுக்கிறான். அப்போதும் அவனிடமிருந்து வாங்கிக் கொள்கிறாள். அவன் பழங்களை வாங்குகிறான். ஒன்றை நாயகிக்குக் கொடுக்கிறான். இவை எல்லாம் அந்த இரண்டுபேருக்குமிடையே நடந்தாலும் இந்தத் தகுதியை மற்ற வர்களும் பெறலாம். நாலுபேர் காணச் செய்கின்ற இத்தகைய காரியங்களை இரண்டு ஆடவர்கள் தங்களுக்குள் செய்யலாம். எந்த இரண்டு பேர்களாக இருந்தாலும் செய்து கொள்ளலாம். நாயகனிடம் இப்படி வாங்குவதில் நாயகிக்கு ஓர் இன்பம் இருக்கலாம். ஆனாலும் நாயகனைப் பெற்றதனால் அவள் அடைகிற தனி உரிமையான இன்பம் இது அன்று. அதனை அவள்

தனித்து இருந்து பெறுவாள். ஆண்டவனுடைய திருவருளால் நாம் இப்போது பெற்ற பலவகையான நலங்கள் பொதுவான அருள். கடைவீதியில் நாயகனும், நாயகியும் சந்தித்து ஒருவருக் கொருவர் உதவி செய்துகொள்வது போன்றது. ஆனால் அவனைத் தனியாகச் சந்திக்கின்ற சந்திப்பு, தனி உரிமை பெற்றது.

இறைவன் அப்படித் தனியே சந்திக்கின்ற நிலை உண்டு. தனி என்பது யாரும் இல்லாத இடம். யாரும் இல்லாத இடம் என்றால் இறைவன் இல்லாத இடம் அன்று. அவன் இல்லாத இடமே இல்லை. அவனை நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் நாம் தனியே இருந்து சந்திக்கிறது இல்லை. நாம் மனத் தோடு, உடம்போடு சந்திக்கிறோம். அதனால் அவனை நாம் இன்னும் கண்டுகொள்ள முடிவதில்லை. அவனும் நம்மோடு பழகினாலும் நாலு பேர்களுக்கு நடுவில் இருக்கிறானே என்று ஏதோ அயலான் போலவே பழகுகிறான். இப்படி உள்ள நாம் தனியாக வந்து அவனைச் சந்தித்தால் நம்மை அணைத்துக் கொள் வான். முத்தி இன்பம் தருவான். நம்மோடு பிறவிதோறும் வந் திருக்கிற பலவற்றை விட்டுவிட்டுத் தனியே செல்கிற பழக்கம் நமக்கு இல்லாமல் போயிற்று. ஆகையால் அவன் தொடர்பு நமக்கு இருந்தாலும் அவனைத் தனியே சந்திக்க இயலாமல் போகிறது. அதனால் வரும் இன்பமும் நமக்குக் கிடைப்பது இல்லை.

2

கல்வியினாலும், கேள்வியினாலும் ஆண்டவனைச் சந்திக்க முடியாது என்று அருணகிரியார் சொல்கிறார். யாரும் இல்லாத இடத்திலே என்னுடைய நாயகனைச் சந்திக்க வேண்டுமே என்று காதலி ஏங்குகிறாள். அவளைப் பார்த்து அவளுடைய தாய் சொல்கிறாள்; ''பெண்ணே, அவன் யாரும் உள்ள இடத்திலும் இருக்கிறான். யாரும் இல்லாத இடத்திலும் இருக்கிறான். யாரும் இல்லாத இடத்தைத் தெரிந்துகொண்டு போக வேண்டும். உன்னுடன் சில பேரை அழைத்துக்கொண்டு போனால் அவன் தனியாக இருந்தாலும் பயன் இல்லை. நீ யாரும் இன்றித் தனியே இருந்தால் உன்னிடம் அவனே வந்து சந்திப்பான். ஆகவே அவன்

தனியாக இருக்கிற இடம் எங்கே என்று ஆராய்வதில் பயன் இல்லை. நீ மற்றவருடன் உறவு இல்லாமல், தொடர்பு இல்லாமல், தனியாக இருக்கிறாயா என்று அவன் ஆராய்ந்து பார்க்கிறான். நீ தனி நின்றால் அவனே அங்கே வந்து இன்பம் தருவான்'' என்று சொல்வது போல அருணகிரியார் உபதேசம் செய்கிறார்.

தனிமைக்குத் தடை

''தனியாக இடம் ஒன்று இருக்கிறதா? அது எனக்குத் தெரியவில்லையே!'' என்றும், ''அந்த இடத்திற்கு எப்படிப் போவது?'' என்றும் நாம் கேட்கிறோம். அதற்கு விடை அளிப்பார் போல அருணகிரியார் சொல்கிறார். ''ஆம், அப்படி ஓர் இடம் இருக்கிறது. ஆண்டவன் தனி வெளியில் இருக்கிறான். அவனை நிச்சயமாகச் சந்திக்கலாம். ஆனால் அந்த இடத்திற்குப் போவதற்கு முன் நீ தனியாக வேண்டும். உன்னிடம் இரண்டு பேர் எப்போதும் கூட இருக்கிறார்கள்'' என்பது போல இந்தப் பாட்டைச் சொல்கிறார்.

வெளியில் நட்பாடுவதற்காக ஓர் அரசன் வந்து நிற்கிறான். வேறு ஒருவன் கோட்டைக்குள் இருக்கிறான். அவனை வெளியில் இருப்பவன், ''நான் உனக்கு நன்மை செய்கிறேன்'' என்று ஆர்வத்தோடு அழைக்கிறான். ஆனால் உள்ளே இருப்பவனுக்குத் தடையாகக் கோட்டையும் அதைச் சூழ்ந்த அகழும் இருக்கின்றன. இந்த இரண்டும் வெளியில் இருப்பவனையும் உள்ளே இருப்பவனையும் இணைய மாட்டாமல் தடுக்கின்றன. பூட்டிய கோட்டையும், பாலம் இல்லாத அகழியும் இருப்பதனால் அந்த இரண்டையும் அடியோடு தகர்த்தும், தூர்த்தும் வெளியில் இருப்பவன் உள்ளே போக வேண்டும்; அல்லது உள்ளே இருப்பவன் வெளியில் இருப்பவனோடு சேர வேண்டும். வெளியில் இருக்கும் மன்னனோடு உள்ளே இருக்கும் சிறைப்பட்ட மனிதன் சேர்ந்தால் இன்பம் உண்டாகும். சேருவதற்குத் தடை இரண்டு. அவன் எத்தனைதான் ஆர்வம் படைத்திருந்தாலும் வெளியில் உள்ளவன் எத்தகைய ஆற்றல் உள்ளவனாக இருந்தாலும் இந்த இரண்டு தடைகளும் நீங்காத வரையில் அவர்கள் சந்திக்க முடியாது.

இதில் சிறிதும் ஐயமில்லை. இது உண்மையானது. இது போல அருணகிரியார் சொல்கிறார்.

யான்தான் எனும்சொல் இரண்டும்கெட் டால்அன்றி
யாவருக்கும்
தோன்றாது சத்தியம்; தொல்லைப் பெருநிலம் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன் க்ருபாகரன் கேள்வியினால்
சான்றாரும் அற்ற தனிவெளிக் கேவந்து சந்திப்பதே

சந்திப்பது – சேர்தல்; ஒன்றுபடுதல். ஆண்டவனோடு ஒன்று படுகிற இன்பம் நமக்குக் கிடைக்க வேண்டுமானால் இரண்டு தடைகள் போக வேண்டும். "இரண்டும் கெட்டானன்றிச் சந்திப்பது, தோன்றாது" என்று முடிக்கிறார். இது சத்தியம் என்று வற் புறுத்திச் சொல்கிறார். வெறும் கேள்வியினால் இதைச் சாதிக்க முடியாதாம்.

தனிவெளி

அவன் எங்கே இருக்கிறான்? அவனை எங்கே சந்திப்பது? சான்று ஆரும் அற்ற தனிவெளியில் சந்திக்க வேண்டும். ஒரு சாட்சியும் இல்லாத பாழ்நிலம் அது. வேறு ஒரு சான்று இருந் தால் அது தனிமையாகாதே. நமக்கு இப்போது சரீரம், பொறி புலன்கள், உலகம், பூதங்கள் ஆகிய எல்லாம் சாட்சியாக இருக் கின்றன. இந்தச் சாட்சிகளெல்லாம் உடனிருக்கும் வரையில் அந்தத் தனிவெளிக்குப் போக முடியாது. ஆண்டவன் எல்லா இடங்களிலும் மறைந்து நின்றாலும் அவனை வெளிப்படுத்திக் காண வேண்டும். மற்றப் பொருள்கள் அவனை மறைத்து நிற் கின்றன. அவையற்ற பாழிடந்தான் தனிவெளி. அது மறைப்பு இல்லாத இடம். அங்கே போக வேண்டும். அந்த இடத்தில் அவனும் நாமுமே இருக்க வேண்டும். அது சாட்சி இல்லாத இடம். அது தனிவெளி. இந்தத் தனி வெளியைப் பற்றிக் கந்தர் அலங் காரத்தில் வேறு ஓரிடத்தில் அருணகிரியார் சொல்லியிருக்கிறார்.

"ஒளியில் விளைந்த உயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததோர் ஆனந்தத் தேனை அநாதியிலே
வெளியில் விளைந்த வெறும்பாழைப் பெற்ற வெறும்தனியைத்
தெளிய விளம்பிய வாமுகம் ஆறுடைத் தேசிகனே."

அதனை ஞான வெளி என்றும் சிதாகாசம் என்றும் பாழ் என்றும் பலவகையாகச் சொல்வார்கள்.

'அல்லும் பகலும் இல்லாச் சூதானது அற்ற வெளி''

என்று பிறிதோரிடத்தில் சொல்வார். அங்கே இரவு இல்லையாம். பகல் இலலையாம். அந்த இடம் ஒரு பூதர்க்கும் தெரியாதாம்.

''சூதான தற்ற வெளிக்கே ஒளித்துச் சும்மா இருக்கப்
போதாய் இனி மனமே தெரியாதொரு பூதர்க்குமே''

என்பர்.

''ஒரு பூதரும் அறியாத் தனிவீடு''

என்றும் அதையே சொல்வார்.

தெளிவும், அநுபவமும் இல்லாமல் இறைவனுடைய திருவருள் இன்பத்தைப் பெற இயலாது என்பதை வற்புறுத்திக் கூறவந்த அருணகிரிநாதர்,

கேள்வியினால்
சான்றுஆரும் அற்ற தனிவெளிக்கே வந்து சந்திப்பதே

என்றார். ஆண்டவன் தனி வெளியில் இருக்கும்போது அவனை அணுகினால் அவன் வேறு, நாம் வேறு என்ற எண்ணமே தோன்றாது.

யான் – தான்

யான், தான் என்ற இரண்டு சொல்லையும் ஒரு சேரச் சொல்லும்போது அந்த இரண்டு சொல்லுக்கும் உரிய பொருள் வெவ்வேறு என்று தோன்றும்.

''நான்வே றெனாதிருக்க நீவே றெனாதிருக்க'

என்று அருணகிரியார் திருப்புகழில் பாடுவார். கண்ணுக்குப் புறம்பே மையை வைத்திருந்தால் தனியே கண் மையைத் தெரிந்துகொள் ளும். கண்ணுக்கு இட்டால் அது தெரிவது இல்லை. இறைவனை விட்டுத் தனியாக இருக்கும்போது அவனும் நாமும் வேறு என்று தோன்றும். அவனோடு ஒன்றிக் கலந்த பிறகு யான், தான் என்ற சொற்கள் தோன்றாத அநுபூதி நிலை உண்டாகிறது. எனவே,

யான்தான் எனும் சொல் இரண்டும் கெட்டாலன்றி
யாவருக்கும் தோன்றாது

என்று சொன்னார். இதை விளக்கமாகப் புரிந்துகொள்ள ஓர் அநுபூதிப்பாட்டை இங்கே பார்க்க வேண்டும்.

"யான் ஆகிய என்னை விழுங்கி, வெறும்
தானாய் நிலைநின்றது தற்பரமே."

இங்கே இறைவனை 'வெறும் தான்' என்று சொல்கிறார். யான் என்பதற்கு இனமாகிய தான் என்பது வேறு, வெறும் தான் என்பது வேறு. தான் என்பதற்கு அவன் என்பது பொருள். அது படர்க்கைப் பெயர். யான், நீ, தான் என்பன முறையே மூன்று இடங்களுக்கும் உரிய சொற்கள். அங்கே தான் என்பது படர்க்கை; அவன் என்ற பொருளை உடையது. இந்த மூன்று சொற்களும் சொல்லும் நிலையில் மூன்று பொருள்களும் வேறாகத் தோன்றும். யான் என்பது கெட்டால் எல்லாச் சொல்லும் கெடும். தான் என்ற ஒன்றே நிலைநிற்கும். அப்போது அதனைச் சுட்டிக்காட்ட, தான் என்று சொல்லால் சொல்ல, யாரும் இல்லை. ஆகையால்,

"யானாகிய என்னை விழுங்கி வெறும்
தானாய் நிலை நின்றது தற்பரமே."

என்று அநுபூதியில் சொன்னார். இந்த அலங்காரத்தில்,

யான் தான் எனும் சொல் இரண்டும் கெட்டாலன்றி
யாவருக்கும் தோன்றாது சத்தியம்

என்று சொல்கிறார். யான் தான் என்னும் பொருள் இரண்டும் கெடுவது இல்லை. யான் கெட்டு, தானுடன் இசைய வேண்டும். அப்போது தான் என்று சொல்வதற்கு ஆளும் இல்லை; பேச்சும் இல்லை. பொருள்கள் இரண்டு ஒன்றாகும்போது சொல்ல ஆள் இல்லாத அநுபவ நிலை உண்டாகிறது. சொற்கள் இரண்டும் அப்போது இல்லை. பொருள் இரண்டைக் கண்டு இருவேறு சொல்லாகச் சொன்னாலும், பிறிதாக நிற்கும் ஒன்றை வேறாகக் கண்டு அதை மட்டும் சுட்டினாலும் பேதநிலைப் பேச்சுத்தான். இரண்டற்ற அத்துவித நிலை அன்று. இரண்டற்ற அத்துவித நிலையில் யான் தான் என்னும் சொல்லுக்கு இடம் இல்லை. எந்தச் சொல்லுக்கும் இடம் இல்லை. எங்கே சொல் நிற்கிறதோ அங்கேதான் அநுபவம் கிடைக்கிறது.

சொல் இறந்த நிலை

ஒருவனுக்கு மயக்க மருந்தைக் கொடுத்து அவன் உடம்பிலுள்ள புண்ணைக் கீறிச் சிகிச்சை செய்ய டாக்டர் முற்படுகிறார். மயக்க மருந்தைக் கொடுக்கும்போது அவனுக்கு உணர்ச்சி இருக்கிறதா இல்லையா என்று சோதிப்பதற்கு ஒன்று, இரண்டு, மூன்று என்று சொல்லிக்கொண்டே வரச் சொல்வார். அப்படிச் சொல்லி வரும்போது நோயாளி எப்போது எண்ணுவதை நிறுத்தி விடுகிறானோ அப்போது அவனுக்கு மயக்கம் நன்றாக ஏறி விட்டது என்று டாக்டர் தெரிந்து கொள்வார். அவன் மயக்கமுற்ற நிலை சொல் அடங்குவதனால் தெரிகிறது. சொல் அடங்கும் போது மனமும் நிற்கிறது.

அதுபோல் யான் தான் என்னும் சொற்கள் எப்பொழுது அடங்குகின்றனவோ அப்போது அநுபவம் தலைப்படும். அதனால், ''யான் தான் எனும் சொல் இரண்டும் கெட்டாலன்றித் தோன்றாது'' என்றார். கேள்வியினால் எல்லாவற்றையும் சாதிக்கலாம் என்று இருப்பவர்களுக்கு அநுபவம் வாராது. சொல் உள்ளவரையில் இன்ப அநுபூதி இல்லை. சுட்டு உள்ளவரையும் அந்த இன்பம் இல்லை. யான் தான் என்ற விவகாரம் இருக்கும் மட்டும் அநுபவம் தோன்றாது. இந்தச் சொல்லிறந்த அநுபவத்தையே முருகன் தனி வெளிக்கே வந்து சந்திப்பது என்று சொல்கிறார். தனி வெளி என்று சொன்னது பௌதிக ஆகாசத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக. ஆகாசங்களில் பலவகை உண்டு. பஞ்சபூதங்களில் ஒன்றான பௌதிக ஆகாசம் வேறு. தகராகாசம் வேறு. சிதாகாசம் வேறு – ஆண்டவன் ஞான வெளியாகிய சிதாகாசத்தில் இருக்கிறான். அங்கே போய் அவனைச் சந்திக்க வேண்டும். அப்படி ஒரு வெளி தனியாக இல்லை. நாம் உலகினின்றும் நழுவி எங்கே மனமற்று இருக்கிறோமோ அங்கே அந்த வெளி நமக்குக் கிடைக்கும். யான் தான் என்னும் இரண்டு சொல்லும் கெட்ட இடத்தில் அந்தத் தனி வெளி வந்து நிற்கும். அங்கே ஆண்டவனைச் சந்திக்கலாம்.

தனி வெளியில் சந்தித்தல்

சான்று ஆரும் அற்ற தனி வெளி

என்று சொன்னார். கல்யாணத்திற்குச் சாட்சி வேண்டும். ஆனால் கடிமணத்திற்குச் சாட்சி கிடையாது. கல்யாணத்தில் இரண்டு கட்சிச் சம்பந்திகளும் இருப்பார்கள். ஊர்க்காரர்கள் இருப்பார்கள். கல்யாணத்தின் பயனாகிய கடிமணத்திலே யாரும் இருப்பது இல்லை. எந்தச் சாட்சியும் தேவையில்லை. அப்போதும் சாட்சி வேண்டுமென்று யாராவது சொல்வார்களா? அதுபோல் இறைவனைத் தனி வெளியில் சந்திப்பதற்குரிய முயற்சியை நாம் செய்வதற்குப் பல நல்லவர்களுடைய தொடர்பு வேண்டும். சத் சங்கத்தில் பழகி நல்லவற்றைக் கேட்க வேண்டும். அவற்றினால் நாம் நம்முடைய நாயகனைத் தேடி அடைய வேண்டுமென்ற ஆசை நம் உள்ளத்தில் பிறக்கிறது.

அத்தகைய பழக்கத்தின் பயனாக எல்லோரையும் விட்டு நழுவித் தனியே நாயகனைச் சந்திக்க வேண்டுமென்ற ஆர்வமும் முயற்சியும் எழ வேண்டும். சான்று ஆரும் அற்ற தனி வெளியில் முருகனைச் சந்தித்தால் இன்பம் உண்டாகும்.

3

கிருபாகரன்

இனி அருணகிரியார் முருகனைப் பற்றிச் சொல்ல வருகிறார். முருகன் பெரும் கருணையாளன். அவன் கூட்டத்திலும் இருக்கிறான். தனியாகவும் இருக்கிறான். அவன் எந்தச் சமயத்திலும் நம்மிடம் தனியாக வந்து இன்பம் தரக் காத்திருக்கிறான். நாம் தாம் தனியாக இருப்பதில்லை. குழந்தை என்றும், குட்டி என்றும், படிப்பு என்றும், பாசம் என்றும் பற்றுக் கொண்டிருக்கிறோம். இவற்றையெல்லாம் உதறிவிட்டு நமக்காகத் தனியே நாயகன் காத்திருக்கின்றானே என்பதை எண்ணி நாம் அவனை நாடிச் செல்ல வேண்டும். நமக்கு அருள் செய்து இன்பம் தர வேண்டுமென்றே கருணைக்கு உறைவிட மான முருகன் காத்திருக்கிறான்.

முருகன் க்ருபாகரன்

திருமால் மருகன்

அருணகிரியார் முருகப்பெருமானோடு சேர்த்துப் பல மூர்த்திகளுடைய பெருமைகளையும் சொல்வது உண்டு. சிவபெருமான்

திருக்கோயிலில் திருமாலுக்கு இடமில்லாமல் இருக்கலாம். திருமாலின் திருக்கோயிலில் சிவபெருமானுக்கு இடமில்லாமல் இருக்கலாம். ஆனால் அருணகிரியார் இயற்றிய சொற்கோயிலில் எல்லா மூர்த்திகளும் வருவார்கள். இங்கே முருகப் பெருமானுடைய மாமாவை நினைக்கிறார். காரணம் இல்லாமல் நினைக்கவில்லை. அப்படி நினைப்பதிலும் ஒரு கருத்தைக் குறிப்பாக வைத்திருக் கிறார்.

முருகன் திருமாலின் மருகன். அதைச் சொல்ல வருகிறார்.

தொல்லைப் பெருநிலம் சூகரமாய்க் கீன்றான் மருகன்.

அடிமுடி தேடிய கதை

திருமால் ஒரு முறை வராகாவதாரம் எடுத்தார். பூமியை ஓர் அசுரன் சுருட்டிக் கொண்டு போக, ஆழ்கடலிலிருந்து அதனை மீட்பதற்காக வராகாவதாரம் எடுத்துத் தம்முடைய கொம்பினால் நிலமகளை மீட்டுக் கொண்டு வந்தார் என்பது ஒரு கதை. இது பாகவதத்தில் வருகிறது. சைவர்கள் ஒரு கதை சொல்வது உண்டு. திருமால் வராகாவதாரம் எடுத்ததற்குரிய காரணத்தை அந்தக் கதை சொல்கிறது. திருவண்ணாமலை சம்பந்தமான வரலாற்றில் அந்தக் கதை வருகிறது.

ஒரு முறை திருமாலுக்கும் பிரமனுக்கும் ஒரு வாதம் எழுந் தது. திருமால், ''நான் பெரியவன்'' என்றார். பிரமன், ''நான் தான் பெரியவன்'' என்றான். இந்த இரண்டு பேர்களுக்கு மிடையே தோன்றிய வாதம் முடிந்தபாடில்லை. அப்போது சிவபெருமான் தோன்றிப் பெருஞ்சுடராக நின்று, ''என்னுடைய அடியையும் முடியையும் யார் காண்கிறாரோ அவரே பெரியவர்'' என்று சொன்னார். அப்போது திருமால் பன்றி உருவம் எடுத்துப் பூமியைத் துளைத்துக் கொண்டு இறைவன் திருவடியைப் பார்க்கப் புறப்பட்டார். பிரமனோ அன்னப் பறவை உரு எடுத்துக் கொண்டு திருமுடியைப் பார்க்கப் புறப்பட்டான். இரண்டுபேரும் காண முடியாமல் திண்டாடினார்கள். அப்போது அவர்களிடத்தில் தோன்றிய அகந்தை மறைந்துவிட்டது. அப்படி உண்டான சுடர் தான் பின்பு அண்ணாமலையாகவும் சிவலிங்கமாகவும் விளங்கு கிறது என்று சிவபுராணம் சொல்கிறது. லிங்கோத்பவ மூர்த்தியின் வரலாறும் இதுதான்.

கதையின் கருத்து

இந்தக் கதையினால் இரண்டு மூன்று கருத்துக்களை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். கடவுள் சிவபெருமானாகவும், திருமாலாகவும் காட்சியளிக்கிறார். யார் யார் எந்தக் கோலத்தில் நினைக்கிறார்களோ அதற்கு ஏற்றபடி காட்சி கிடைக்கிறது. விஷ்ணுபுராணத்தைப் பார்த்தால் சிவனை ஏவலாளனாகவும், திருமாலைத் தலைவனாகவும் சொல்லி இருக்கும். சிவ புராணத்தைப் பார்த்தால் சிவன் பெரியவன் என்றும், திருமால் அடியான் என்றும் சொல்லியிருக்கும். இரண்டையும் பார்த்துச் சமாதானம் செய்துகொள்ள ஏதாவது வழியுண்டா? உண்டு.

ஒரு நாடகக் குழுவில் அண்ணன் தம்பி இரண்டு பேரும் மிகச் சிறப்பாக நடிக்கிறார்கள். அவர்களே அந்த நாடகக் குழுவின் தலைவர்கள். சிலநாள் அண்ணன் இராமனாக வேஷம் போட்டுக் கொள்வான்; தம்பி இராவணனாக வேஷம் போட்டுக் கொள்வான். சில நாள் தம்பி இராமனாகவும், அண்ணன் இராவணனாகவும் வேஷம் போட்டுக் கொள்வார்கள். எந்த வேஷம் போட்டாலும் வேஷத்திற்குத் தக்கபடி நடிப்பதில் அந்த இரண்டு பேரும் வல்லவர்கள். அதனால் அவர்களுக்குப் பெரும் புகழ் உண்டாயிற்று. முக்கியமாக இராவணன் வேஷம் போடும் போது அந்தச் சகோதரர்களுக்குப் பெருமை மிகுதியாயிற்று. ஏன் தெரியுமா? பார்த்தவர்கள் இராவணனைப் பாராட்டவில்லை; இராவணன் வேஷம் போட்டவரைப் பாராட்டினார்கள். இராவணன் வேஷம் போட்டு, பொல்லாதவனாக இருக்கக் கூடாது என்ற நீதியை மக்களுடைய உள்ளத்தில் வற்புறுத்தின்மையினால் அந்த வேஷத்திற்குச் சிறப்பு உண்டாயிற்று. இப்படிச் செய்ய வேண்டுமென்று சொல்வது ஒரு முறை; இப்படிச் செய்யக்கூடாது என்று சொல்லிக்காட்டுவது ஒரு முறை. வேதம் 'இன்னது செய்; இன்னது செய்யாமல் ஒழி' என்று சொல்கிறது. வாக்கினால், ''இது செய், இது செய்யக்கூடாது'' என்று சொல்வது ஒரு முறை; அதனை நாடகமாக்கி, ''இது செய்யக்கூடாது; இது செய்ய வேண்டும்'' என்று தெரிந்துகொள்ளச் செய்வது பிறிதொரு முறை.

திருமாலும், சிவபெருமானும் பலபல வடிவங்களில் இருந்து நாடகம் நடித்துக் காட்டினார்கள். சில சமயங்களில் சிவன்

பெரியவனாகவும், சில சமயங்களில் திருமால் பெரியவனாகவும் காட்டுவார்கள். நாடக வேஷத்தில் அப்படித் தோற்றுமேயொழிய உண்மையில் இருவரும் வெவ்வேறு அல்லர் என்ற உண்மையை எண்ணிச் சமரச உணர்ச்சி பெற வேண்டும். இது ஒரு கருத்து.

மற்றொன்று: திருமாலும், பிரமனும் தாமே பெரியவர் என்று அகங்கரித்தபோது முடிவு கட்டுவதற்குச் சிவபெருமான் சுடராக நின்றார். அந்தச் சுடரை அளவெடுக்க எண்ணிய இரண்டுபேரும் விலங்காகவும், பறவையாகவும் ஆனார்கள். செய்யத் தகாத ஒன்றை மிகச் சிறந்தவர் எண்ணினாலும் அப்போதைக்கு அவர் விலங்கின் நிலையை அடைகிறார் என்ற உயர்ந்த நீதி இதி லிருந்து கிடைக்கிறது. அகங்கரித்ததோடு நிற்காமல் அளவெடுக்கப் படாத ஒன்றை அளவெடுக்கப் புகுந்த அறியாமையினால் ஒருவர் பன்றியாகவும், மற்றொருவர் பறவையாகவும் ஆகிவிட்டார் அல்லவா?

மற்றொன்று: உயர்ந்தவர்கள் தாழ்ந்து போனாலும் அதிலே யும் ஓர் உயர்வு இருக்கும். திருமால், பிரமன் ஆகிய இரண்டு பேரில் திருமால் உயர்ந்தவர். ஆண்டவனது அடிமுடி காணும் முயற்சியில் சிறந்தது இறைவனுடைய அடியைக் காண்பது. திருமால் இயல்பாகவே உயர்வானவர். ஆதலின் உயர்ந்த செயலாகிய திருவடியைக் காணும் முயற்சியில் ஈடுபட்டார்.

பொருத்தம்

இனி இங்கே அருணகிரியார் இந்த வரலாற்றைச் சொல் வதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய வேண்டும்.

தொல்லைப் பெருநிலம் சூகரமாய்க்
கீன்றான்

என்று பாடுகிறார் அருணகிரியார். மிகப் பழைய பூமியைப் பன்றி உருவம் எடுத்துப் பிளந்து உள்ளே போனார் என்று சொல்கிறார். சிவபரஞ்சுடரின் திருவடியைக் காண்பதற்காகத் திருமால் செய்த காரியம் இது. ஏன் அப்படிச் செய்தார்? அவர் எவ்வளவு பெரியவராக இருந்தாலும், யான் என்னும் அகந்தை அவர் உள்ளத்தைக் கப்பிக் கொண்டது. அகங்காரம் யாருக்கு வந்தாலும் அதனால் அறியாமை மிகுமேயொழிய ஒளியைக் காணும் அறிவு

தட்டுப்படாது என்ற கருத்தைத் திருமால் நாடகம் போட்டுக் காட்டினார். யான் என்னும் அகந்தை போக வேண்டும், அதனால் தான் இன்பம் வரும் என்பதைச் சொல்ல வந்த இந்தப் பாட்டில், அந்த அகந்தையினால் உண்மையைக் காண முடியாமல் தடுமாறிய திருமாலின் கதையை எடுத்துச் சொல்வது பொருத்தம் அல்லவா? உயர்ந்தவர் குற்றம் பண்ணினாலும் அது குற்றமே என்பதைத் திருமால் தம்முடைய செயலால் காட்டினார்.

யான்தான் எனும்சொல் இரண்டும்கெட்
டால்அன்றி யாவருக்கும்
தோன்றாது; சத்தியம்; தொல்லைப்
பெருநிலம் சூகரமாய்க்
கீன்றான் மருகன் முருகன்
க்ருபாகரன் கேள்வியினால்
சான்றுஆரும் அற்ற தனிவெளிக்
கேவந்து சந்திப்பதே.

[பழைய பெரிய பூமியை வராக உருவம் எடுத்து இறைவனுடைய அடியைத் தேடிக்கொண்டு பிளந்து சென்ற திருமாலுக்கு மருகனும் முருகனுமாகிய அருளாளன் வேறு சாட்சியாக யாரும் இல்லாத தனிவெளிக்கு வந்து நம்மைச் சந்திப்பது, யான் தான் என்னும் வேறுபாட்டைக் காட்டும் இனச்சொற்கள் இரண்டும் கெட்டாலன்றி வெறும் கேள்வியினால் தோன்றாது.

கெட்டால் அன்றிச் சந்திப்பது கேள்வியினால் தோன்றாது.

யான் தான் என்னும் சொல் இரண்டும் இனமானவை. அந்தச் சொல்லைச் சொல்லும் நிலை பேதநிலை. சொற்கெட்டு யானும் தானும் ஒன்றாவதே லட்சியம். தோன்றாது என்பது சித்தியாது என்ற பொருளுடையது. தொல்லை – பழமையான. சூகரம் – பன்றி. கீன்றான் – கீண்டான்; அகழ்ந்த திருமால். சான்று – சாட்சி. ஆரும் அற்ற என்றாலும் ஒரு தத்துவமும் அற்ற என்பதே கருத்தாகக் கொள்க. தனிவெளி – சிதாகாசம்; இதையே பாழென்றும் சூனியமென்றும் சொல்வர்.]

அகந்தை உள்ள வரையில் அநுபவம் கிடைக்காது என்பது கருத்து.

இது கந்தர் அலங்காரத்தின் 95–ஆவது பாட்டு.

இடம் கடந்த மயில்

அங்கங்கள்

பழங்காலத்து அரசர்களைப் பற்றிச் சொல்லும்போது அங்கரங்க வைபவம் உடையவர்கள் என்று சொல்வது வழக்கம். பல வகையான அங்கங்களைக் கொண்டு தம்முடைய செல்வச் சிறப்பு விளங்கும்படியாக வாழ்வது அந்த அரசர்களுடைய இயல்பு. நாடு, ஊர், ஊர்தி, மாலை, ஆயுதம், சேனை, கொடி, முரசு, பேர், ஆணை ஆகிய பத்து அங்கங்களைத் தசாங்கங்கள் என்று சொல்வார்கள். சாங்கோபாங்கம் என்பது மற்றொரு மொழி. அங்கமும், உபாங்கமும் சேர்ந்து அமைந்தது என்பது அதற்குப் பொருள். அங்கங்கள் மூன்று வகைப்படும். அங்கம், உபாங்கம், பிரத்யங்கம் என்பன அவை. கை ஓர் அங்கம், கையிலுள்ள விரல் அங்கத்திற்கு அங்கம்; அல்லது உபாங்கம். ஒரு வரைக் கையால் அடிக்கிறோம். விரலினால் தொடுகிறோம். இவை அங்க உபாங்கங்களின் வேலை. வேறு சில சமயங்களில் தடியை எடுத்து அடிக்கிறோம். அந்தத் தடி பிரத்யங்கம்; அங்கத்திற்குப் பிரதிநிதியாக இருந்து உதவுவது. அரசன் பல அங்கங்களை உடையவனாக இருக்க வேண்டும்.

வாகனம்

சிறந்த அரசனுக்கு வாகனம் இன்றியமையாதது. அந்த வாகனத்திற்குத் தனிச் சிறப்பு உண்டு. பெரும்பாலும் தெய்வங்களுக்குத் தனித்தனியே வாகனங்கள் இருப்பதைப் புராணங்கள் சொல்கின்றன. சிவபெருமான் விடையின்மேல் வருபவர். திருமால் கருடன் மேல் வருபவர். பிரமனுக்கு அன்னம் வாகனம். இந்திரன் ஐராவதம் என்னும் வாகனத்தில் வருபவன். வருணன் மகர மீனை வாகனமாக உடையவன். இப்படியே அந்த அந்தத் தேவருக்கு ஏற்ற வாகனங்களைப் புராணக் கதைகள் சொல்கின்றன. முருகன் சிறந்த தலைவன். எல்லாத் தேவர்களுக்கும்

மேலான தெய்வம். அவனுக்கு வாகனம் இருக்கிறது. வெவ்வேறு சமயங்களில் வெவ்வேறு வாகனங்களில் அவன் வந்தாலும் அவனுக்கு முக்கியமான வாகனம் மயில். அவன் மயில் ஏறும் பெருமாள்.

இருவகைப் புகழ்

யாரேனும் ஒரு தலைவனைப் பாட வேண்டுமானால் அவனை மட்டும் பாடிக்கொண்டிருப்பது போதாது. அவனுடைய அங்கங் களைப் பாட வேண்டும். உபாங்கங்களைப் புகழ வேண்டும். பிரத்யங்கங்களைப் பாராட்டிப் பேச வேண்டும். அவனுடைய அங்க வகைகளை எல்லாம் பாராட்டுவது அவனைப் பாராட்டு வதற்குச் சமந்தான். இதை நினைத்தே அருணகிரியார் கந்தர் அநுபூதியின் முதல் பாட்டில்,

"ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

என்று வேண்டிக்கொண்டார். முருகனோடு தொடர்புடைய பொருள்களைப் பாராட்டும்போது அவற்றுக்குள்ள பெருமை யைத் தனியே சொல்வதில்லை. முருகனுடைய பெருமையையும் இணைத்துச் சொல்வார். பாலைத் தனியே உண்ணுகிறோம். பாலைக் கொண்டு செய்த பணியாரங்களை உண்ணும்போதும் பாலை உண்கிறோம். அப்படியே தலைவன் புகழை நேரே சொல் வது ஒரு வகை. அவனோடு சேர்ந்த பொருள்களைச் சிறப்பித்து அவனைப் புகழ்வது ஒரு வகை. இரண்டும் தலைவன் புகழைச் சொன்னவையே ஆகும்.

மயிற் பாட்டு

அருணகிரியார் முருகப்பெருமானுடைய மயிலையும், வேலையும், சேவலையும் பல இடங்களில் பாராட்டியிருக்கிறார். திருவகுப்பு என்னும் நூலில் வேலையும் மயிலையும் தனித்தனி வகுப்புகளால் பராட்டுகிறார். கந்தர் அலங்காரத்தில் மயிலைப் பாராட்டிய சில பாடல்களை முன்பு நாம் பார்த்திருக்கிறோம். இப்போது வேறு ஒரு மயில் பாட்டைப் பார்க்கலாம்.

இந்தப் பாட்டு மயிலையே முன்னிலைப்படுத்திப் பாடுவது. "மயிலே, உன்னுடைய மனம் போனபடி உன்னை விட்டுவிட்டால்

நீ இப்படி எல்லாம் செய்வாயே!'' என்று பாராட்டும் முறையில் இந்தப் பாட்டு அமைந்திருக்கிறது.

கொற்ற வேள் மயில்

எடுத்தவுடன்,

தடக் கொற்ற வேள் மயிலே!

என்று அழைக்கிறார். முருகப்பெருமானுக்கு உகந்த வாகனமாகிய மயில் அது. அப்பெருமான் எப்போதும் வெற்றியோடு இருப்பவன். அவன் வெற்றி விரிந்தது; விசாலமானது. தடக் கொற்றம் அது. அந்த வெற்றியில் அவனோடு சேர்ந்தவர்களுக் கும் பங்கு உண்டு. போரில் தலைசிறந்து நின்ற பகைவர்களை அழித்த முருகப்பெருமான் மயில் வாகனத்தின் மேலேறிச் சென்று அந்தக் காரியத்தைச் செய்தான். அப்போது பகைவர் அஞ்ச நடைபோட்டுச் சென்ற ஆற்றலுடையது அந்த மயில். 'தாவடியோட்டும் மயில்' என்று அந்த நிலையைத்தான் குறிப்பிட்டார். ஆகவே ஆண்டவன் பெற்ற வெற்றியில் மயிலுக்கும் பங்கு உண்டு. இதை நினைத்து, 'தடக்கொற்ற வேள் மயிலே' என்றார். விரிந்த கொற்றம் வேளுக்கும் உரியது; ஓரளவு மயிலுக்கும் உரியது. ஆதலின், தடக்கொற்ற வேள் என்று முருகனுக்கு அடையாகவும், தடக் கொற்ற மயில் என்று மயிலுக்கு அடையாகவும் இரண்டு வகையிலும் கூட்டிப் பொருள் கொள்ளலாம்.

மயில் அழகியது. பார்த்தவர்கள் கண்ணைப் பறிக்கும் பேரழகு பெற்ற பறவை அது. அதற்கு இயற்கையாகவே ஒரு கவர்ச்சி இருக்கிறது. முருகப்பெருமானுடைய சம்பந்தத்தால் அதனுடைய பெருமை பன்மடங்கு உயர்ந்துவிட்டது.

சேவல்

தொல்காப்பியத்தில் ஒரு சூத்திரம் வருகிறது. அது பறவைகளின் பெயர்களை வரையறுத்துச் சொல்வது. 'சிறகுடைய பட்சிகளில் ஆண்களுக்கு எல்லாம் சேவல் என்னும் பெயர் பொருந்தும். ஆனால் மயில் அல்லாத மற்றப் பறவைகளுக்குத் தான் அந்தப் பெயர் உரியது' என்று அச்சூத்திரம் சொல்கிறது.

''சேவற் பெயர்க்கொடை சிறகொடும் சிவணும்
மாயிருந் தூவி மயிலலங் கடையே''

என்பது அச்சூத்திரம். சேவல் என்ற சொல் வன்மையைக் காட்டுவது. மயிலோ மென்மையையுடையது. ஆண் மயிலாக இருந்தாலும் அதன் மென்மை மாறுவது இல்லை. அந்த மென்மையைக் கருதியே வன்மையைக் குறிப்பதாகிய சேவல் என்னும் சொல்லை அதற்குச் சொல்லக் கூடாது என்று வகுத்தார் தொல்காப்பியர். ஆனால் இந்தச் சூத்திரத்திற்கு உரை எழுத வந்த பேராசிரியர் ஒரு சிறிய விலக்கைச் சொன்னார். 'செவ்வேள் ஊர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும் படும்' என்று எழுதினார். மிக்க வீரமுடைய முருகப்பெருமான் ஊர்ந்து வரும் மயிலானால் சேவல் என்ற பெயரை அதற்கும் சொல்லலாம் என்பது பொருள். இதை மனத்தில் வைத்துக்கொண்டு சில உரையாசிரியர்கள் சேவற்கொடி என்று வரும்போது மயில்கொடி என்று பொருள் எழுதுவார்கள்.

வீர நடையும் ஈர நடையும்

முருகன் மயிலின்மேலே வீரச் செயல் செய்யும் போதும் ஊர்ந்து வருவான்; ஈரச் செயல் புரியும்போதும் ஊர்ந்து வருவான். மயிலுக்கு இரண்டு வகையான நடை உண்டு. அசுரர்களை அச்சுறுத்துகின்ற மிடுக்கு நடை உண்டு; தொண்டர்களுக்கு நலம் தரும் அழகு நடையும் உண்டு. போர்க்களத்தில் பகைவர்களைப் பொருது வெற்றி அடையச் செல்லும்போதும் ஆண்டவன் மயிலை ஊர்ந்து செல்வான்; தொண்டர்களுக்கு அருள் செய்யச் செல்லும் போதும் நீலச் சிகண்டியில் ஏறிச் செல்வான். ஆகவே வீர நடையும், ஈர நடையும் பொருந்தியது மயில் என்று தெரிந்துகொள்ள வேண்டும். இங்கே அதனுடைய வீரத்தை எண்ணி, 'தடக்கொற்ற வேள் மயிலே' என்றார்.

தொண்டர்கள் மயிலை அநுகூலமான தன்மையுடையது என்று பாராட்டுவார்கள்.

"திந்திதிமி தோதி தீதித் தீதி
தந்ததன தான தானத் தான
செஞ்சணகு சேகு தாளத்தோடு – நடமாடும்
செஞ்சிறிய கால்வி சாலத் தோகை
துங்கஅநு கூல பார்வைத் தீர
செம்பொன்மயில்"

என்று திருப்புகழில் வருகின்றது.

தோகையை விரித்து வருகின்ற மயில் ஓங்கார உருவத்தை நினைப்பூட்டுகின்றது. அதைக்கொண்டு,

''ஆன தனிமந்த்ர ரூப நிலைகொண்ட
தாடும்மயில் என்ப தறியேனே''

என்று அருணகிரியார் பாராட்டுவார்.

இப்போது பார்க்கப் போகும் பாடலில் அருணகிரியார் மயிலின் பெருமையை வேறு ஒரு விதத்தில் சொல்ல வருகிறார்.

''தடக்கொற்ற வேள்மயிலே, எல்லோருடைய இடர்களை யும் தீர்க்கும் இயல்பையுடைய உன்னை ஆண்டவன் மேலே ஊர்ந்து செல்லாமல் உன் விருப்பப்படியே விட்டுவிட்டால் நீ என்ன செய்வாய் தெரியுமா?'' என்று கேட்டு விடைசொல்வது போலச் சொல்கிறார்.

மேருவுக்கும் அப்பால்

தடக்கொற்ற வேள்மயிலே, இடர் தீரத் தனிவிடின் நீ.

அதற்கு மேல் என்ன நடக்கும் என்பதைத் தம்முடைய கற்பனையால் சித்திரித்துப் பார்க்கிறார். மயிலுக்கு ஆனந்தம் உண்டானால் அது முதலில் தனது தோகையை விரித்து நடமாடத் தொடங்கும். முருகப்பெருமான் ஏறும் மயிலோ மிக விரிந்தது. மிகப் பெரியது. அது தன்னுடைய தோகையை வட்டமாக விரித்து நின்றால் அந்தத் தோகையின் அகலம் வடக்கே உள்ள மேருமலையையும் தாண்டிச் செல்லுமாம்.

வடக்கில் கிரிக்கு அப்புறத்தும்
நின் தோகையின் வட்டமிட்டு.

பூமிக்கு நடுவில் இருப்பது மேரு கிரி, அது நம்முடைய நாட்டுக்கு வடக்கே இருக்கிறதாம். இப்படிப் புராணம் சொல் கிறது. பூமிக்கு ஓர் அச்சு வேண்டும் அல்லவா? அந்த அச்சுத்தான் மேரு. அதன் உச்சியில் தேவர்கள் வாசம் செய்வதால் அதனைச் சுராலயம் என்று சொல்வார்கள். மேரு மலையைச் சுற்றிச் சந்திரனும் சூரியனும் சுற்றுகிறார்கள் என்பது புராண வரலாறு. இவைகள் எல்லாம் பழங்காலத்தில் ஏதோ ஒரு கருத்தை உள்ளடக்கிச் சொன்ன செய்திகள். உலகத்துக்கு மையமாகவும்,

ஆகர்ஷண சக்திக்கு மூலமாகவும் உள்ளது மேரு. அதையே பொன்மலையாகக் கொண்டாடினார்கள். இப்போது மயிலைப் பாராட்ட வந்த அருணகிரியார் தம்முடைய கற்பனையால் அது மேரு மலைக்கு அப்புறமும் தன் தோகையை வட்டமாக விரித்துக் கொண்டிருப்பதைக் காட்டுகிறார்.

வடக்கில் கிரிக்கு அப்புறத்தும்
நின் தோகையின் வட்டமிட்டு,

பூமி முழுவதையும் தன்னுடைய தோகை நிழலால் அமைத்துக் கொண்டு, அதற்கு அப்பாலுள்ள மேருவையும் கடந்து அது நிற்கிறது. பூமிக்கு அப்பால் இருப்பது கடல். மயில் மேருவைக் கடந்து அதற்குமேலும் போகிறதாம். பூமியின் எல்லையாக உள்ள கடலையும் தாண்டி அதற்கு அப்பாலும் போகிறது. நமக்கு நிலமும் கடலுமே தெரிகின்றன. நாட்டைக் கடந்து, மேரு மலையைக் கடந்து, பூமியைக் கடந்து, அப்பாலுள்ள கடலையும் கடந்து சென்றுவிட்டது மயில். அதோடு அது நின்றுவிடுகிறதா? இல்லை. பூமியைக் கடந்து சென்றால் அதற்குப் பிறகு பல கோள்கள் உள்ளன. மயில் போகிற வேகத்தில் அந்தக் கோள்கள் எல்லாம் இடையில் நின்று விடுகின்றன. எல்லாக் கோள்களுக்கும் அப்பால் நெடுந்தூரத்தில் உள்ளது சூரியன். வெகுவேகமாகப் போன மயில் பூமியின் ஈர்ப்புச் சக்திக்கு அப்பாலே சென்று வெளியெல்லாம் கடந்து கதிரவனுக்கு அப்புறமும் சென்றுவிடுகிறதாம்.

சக்கரவாளம்

நாம் காணுகிற நட்சத்திரங்கள் எல்லாம் தனித் தனியே ஒவ்வொரு சூரியனாக இருப்பவை என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அகண்ட வெளியில் அந்தக் கோளங்கள் எல்லாம் பந்து களைப்போல மிதக்கின்றன. சூரியனை மையமாக வைத்துக் கிரகங்கள் அதைச் சுற்றிக் கொண்டே இருக்கின்றன. நாம் வசிக்கும் பூமி நாம் காணும் சூரியனைச் சுற்றி வருகின்ற உருண்டை. இது போலவே ஒவ்வொரு நட்சத்திரமும் ஒவ்வொரு சூரியனானால் அந்த அந்தச் சூரியனைச் சுற்றி உலவுகின்ற கிரகங்களும், கோளங்களும் பலப்பலவாக இருக்கும். இப்படியுள்ள அண்டங்

களை எல்லாம் கணக்கு எடுத்துப் பார்க்க முடியாது. விஞ்ஞானி கள் மிக நுட்பமான தொலைநோக்கிக் கண்ணாடிகளைக் கொண்டு பல நட்சத்திரங்களைக் கண்டுபிடித்த் திருக்கிறார்கள். ஆனால் அவற்றோடு நட்சத்திரக் கணக்குத் தீர்ந்தது என்று அவர்கள் சொல்வதில்லை. 'இன்னும் இந்தக் கூட்டங்களைப் போல எத்தனை எத்தனையோ நட்சத்திரங்கள் இருக்கலாம். அவற்றை எல்லாம் இப்போது காண முடியவில்லை' என்று சொல்கிறார் கள். அறிந்ததைவிட அறியாதன அதிகம் என்பது உண்மையான அறிவாளிக்குப் புலனாகிறது. அந்த வகையில் இன்று பல நட்சத் திரங்களைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகள் இன்னும் நுட்பமான கருவிகளை உண்டாக்க உண்டாக்க, இன்னும் பல நட்சத்திரங் களைக் காணும் வாய்ப்பு இருக்கிறது என்றே சொல்கிறார்கள்.

பூமி உருண்டையாக இருக்கிறது; எப்பொழுதும் சுழன்று கொண்டே இருக்கிறது. இதைச் சுற்றி நெடுந்தூரம் வரைக்கும் இதன் ஆகர்ஷண சக்தி உள்ளது. இப்படியே ஒவ்வொரு கிரகமும் அதனைச் சுற்றிப் படர்ந்திருக்கும் ஆகர்ஷண சக்தியோடு சுழன்று கொண்டிருக்கிறது. ஒன்றன் ஆகர்ஷண சக்தியின் எல்லையைக் கடந்தால் வேறு ஒன்றன் ஆகர்ஷண சக்தியில் அகப்படுவோம். இப்படி அமைந்திருக்கிற கிரகங்கள் எல்லாம் ஒரு பெரிய வெளியில் சுழலுகின்றன. எந்தக் கிரகத்தின் ஆகர்ஷண சக்தியும் இல்லாத ஒரு பெருவெளி உண்டு. அந்தப் பெருவெளியும் இந்தக் கிரகங்களைச் சுற்றி வட்டமாக இருக்கும். அதனை உலகப்புறச் சக்கரவாளம் என்று சொல்வார்கள். புராணம் அப்படி ஒரு மலை இருப்பது போலச் சொல்கிறது. எல்லாக் கிரகங்களுக்கும் அப்பாலே உள்ள வெளிவட்டம் எதுவோ அதுவே சக்கரவாளம் என்று கொள்ளலாம்.

மேருவைத் தாண்டிச் சென்ற மயில் கடலையும் தாண்டிச் சென்று, பிறகு கதிரவனையும் தாண்டிச் சென்றது. அப்பால் எல்லாக் கோளங்களுக்கும் சுற்று எல்லையாக உள்ள ஈர்ப்புச் சக்தியற்ற புறவெளியாகிய சக்கரவாளத்தை அடைந்தது. அதோடு நின்றதா? அதற்கு மேலேயும் அது போயிற்றாம்.

வடக்கில் கிரிக்கு அப்புறத்தும் நின் தோகையின் வட்டமிட்டுக்
கடற்கு அப்புறத்தும் கதிர்க்கு அப்புறத்தும் கனகசக்ரத்
திடர்க்கு அப்புறத்தும் திசைக்கு அப்புறத்தும் திரிகுவையே.

திசைக்கு அப்புறம்

எல்லைகள் இரண்டு வகைப்படும்; இட எல்லை, கால எல்லை என்று. இடத்திற்குக் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று நான்கு வேறுபாடுகள் உண்டு. இடம் உள்ள மட்டும் இந்தத் திசையின் பாகுபாடும் உண்டு. பூமியின் எல்லையைக் கடந்து, ஆகர்ஷண சக்தி கொண்ட பல கோளங்களின் எல்லை களையும் கடந்து புறவெளி மட்டும் சென்ற மயில் அந்த எல்லை யையும் கடந்து விடுகிறதாம். திசை என்ற வரையறை கொண்ட இடத்தையும் தாண்டிச் சென்றுவிடுகிறது.

திசைக்கு அப்புறத்தும் திரிகுவையே.

இடம் கடந்த இடம்

இப்படிச் சிறிய எல்லைகளை எல்லாம் கடந்து, பிறகு பெரிய எல்லைகளையும் கடந்து எல்லையிறந்த ஓரிடத்தில் நிற்கிறது. கோயிலுக்குள்ளிருந்து ஒருவன் வெளியில் வந்து, முதல் பிரா காரத்தைத் தாண்டி, இரண்டாம் பிராகாரத்தையும் தாண்டி, ஏழு திரு மதில்களையும் தாண்டி, கடைசியில் வெளியில் வந்துவிடு வதுபோல இந்த மயில் செய்கிறது. அதாவது இடம் கடந்த எல்லையில் அது திரிகிறதாம்.

தடக்கொற்ற வேள்மயி லேஇடர் தீரத் தனிவிடின் நீ
வடக்கில் கிரிக்குஅப் புறத்தும்நின் தோகையின் வட்டமிட்டுக்
கடற்குஅப் புறத்தும், கதிர்க்குஅப் புறத்தும் கனகசக்ரத்
திடர்க்குஅப் புறத்தும், திசைக்குஅப் புறத்தும் திரிகுவையே.

இப்படி அலங்காரமாக மயில் செய்வதை ஓர் ஓவியம் போலக் காட்டினார் அருணகிரிநாதர். இவ்வாறு கற்பித்துச் சொல்வதில் என்ன நயம் என்ற கேள்வி எழலாம். மயிலின் பெருமையைச் சொன்னதாக இந்தப் பாட்டு இருந்தாலும், இறைவனுடைய தொடர்பு உடையவர்களுக்கு எத்தனை ஆற்றல் உண்டாகும் என்பதை இது உள்ளுறையாகக் கொண்டிருக்கிறது.

இருவகை எல்லை

மயில் ஆண்டவனுக்கு வாகனமாக அவனோடு ஒட்டி நிற்பது. இறைவன் கால எல்லை, இட எல்லையாகிய இரண்டையும்

கடந்தவன். நாமோ அந்த எல்லைக்கு அகப்பட்டவர்கள். இடம் காலம் ஆகிய இரண்டின் எல்லைகளும் நமக்கு இப்போது புலப் படுவதில்லை. காலமும், இடமும்கூட எல்லை கடந்தவையே என்று நாம் நினைத்துக் கொண்டிருக்கிறோம். கடவுள் ஒருவன் தான் காலதேச பரிச்சின்னத்திற்கு அகப்படாதவன்; எந்தவிதமான எல்லையும் இல்லாதவன். காலத்திற்கும் எல்லை உண்டு; இடத்திற்கும் எல்லை உண்டு.

அந்த எல்லை நமக்கு எப்படித் தெரியும்? ஒரு வீட்டுக்கு உள்ளேயிருந்து பார்த்தால் அதன் புற எல்லை நமக்குத் தெரியாது. அந்த வீட்டை விட்டு வெளியே வந்தால் அதன் எல்லை நமக்குத் தெளிவாகத் தெரியும். கால எல்லைக்கும், இட எல்லைக்கும் அகப்பட்ட பிரபஞ்ச வாழ்விலே நாம் இருக்கும் மட்டும் அவற் றின் முடிந்த எல்லைகள் நமக்குப் புலப்படா. அந்த எல்லைை ச் கடந்து சென்றால் காலத்தின் எல்லையையும், இடத்தின் எல் ைல யையும் நாம் தெரிந்துகொள்ளலாம்.

எல்லை கடந்த இன்பம்

நாமாக முயன்று இந்த எல்லையைக் கடப்பது என்பது முடியாத காரியம். இந்த எல்லையைக் கடந்து நிற்கும் ஆண்ட வனைச் சார்ந்தால் நாமும் அவனோடு சேர்ந்து எல்லையைக் கடந்த இன்பத்தில் நிலை நிற்போம். ஒரு சிறிய பருக்கைக் கல்லை ஒரு குளத்தில் போட்டால் அது குளத்தில் ஆழ்ந்து விடுகிறது. இரண்டு டன் எடை உள்ள ஒரு பாறையை அந்தக் குளத்தின் மேல் மிதக்கவைக்க முடியுமா? முடியாது. ஆனால் அந்தக் காரியத்தையும் யாவரும் அதிசயிக்கும்படி செய்து காட்டலாம். எப்படி? தண்ணீர்மேல் மிதக்கின்ற ஒரு பெரிய கட்டையில் அந்தப் பாறையை வைத்தால் அது தண்ணீரின் மேல் மிதக்கும். சிறிய கல்கூடத் தண்ணீரில் அமிழும் போது அவ்வளவு பெரிய பாறை தண்ணீரில் மிதக்கிறதே என்று அறியாதவர்கள் ஆச்சரியப்படலாம். அந்தக் கல் தானாகவே மேலே மிதக்கவில்லை. தண்ணீரின் மேல் மிதக்கும் இயல்புடைய கட்டையைச் சார்ந்த தனால் அது மிதக்கிறது. அதுபோல் கால எல்லைக்கு, இட எல்லைக்கு அகபபட்ட நாம் இந்த இரண்டு எல்லைகளையும் தாண்ட முடியாது. அந்த எல்லைகளைக் கடந்து நிற்கும் ஆண்ட

வனை அடைந்தோமாயின் அவனுடைய சார்பினால் காலத்தை யும், இடத்தையும் வென்று அந்த எல்லைகளைக் கடந்த பெரு வெளியில் இன்பம் நுகர்ந்திருப்போம்.

கருத்து

இந்தக் கருத்தையே இங்கே மயிலின்மேல் வைத்து அருண கிரியார் சொல்கிறார். இறைவனுடைய சம்பந்தத்தால் மயில் இட எல்லையையும், கால எல்லையையும் தாண்டிற்று. மயில்மேல் ஏறும் பிரானை அறிந்தவர்கள் காலத்தை வென்றிருப்பார் என்று ஒரு பாட்டு முன்னே கந்தர் அலங்காரத்தில் வந்திருக்கிறது.

''நீலச் சிகண்டியில் ஏறும் பிரான்எந்த நேரத்திலும்
கோலக் குறத்தி யுடன்வரு வான்குரு நாதன்சொன்ன
சீலத்தை மெள்ளத் தெளிந்தறி வார்சிவ யோகிகளே
காலத்தை வென்றிருப் பார்மரிப் பார்வெறும் கர்மிகளே''

என்ற பாட்டு அது. இறைவனுடைய செயலை அறியும் யோகி களே காலத்தை வென்றிருப்பார்கள். பின்பு அவர்கள் கால எல்லையைக் கடந்து இன்பம் பெறுவார்கள். இதனைச் சொல்லும் போது முருகப்பெருமானை,

''நீலச் சிகண்டியில் ஏறும் பிரான்''

என்றார். காலங் கடந்தவன் எம்பெருமான். அவனைச் சார்ந்த நீலச் சிகண்டியும் காலம் கடந்தது. இங்கே அந்த மயில் இடமும் கடந்தது என்று சொல்ல வருகிறார். நாம் காணும் இடமாகிய நாட்டைக் கடந்து, பூமியைக் கடந்து, மேருவைக் கடந்து, பின்பு கடலைக் கடந்து, நாம் காணும் பொருளாகிய கதிரவனைக் கடந்து, நாம் காணாப் பொருளாகிய கனக சக்ரத்திடரையும் கடந்து, கடைசி எல்லையாகிய திசையையும் கடந்து நிற்கும் மயில் என்று சொல்கிறார்.

மயிலின்மேல் வைத்துச் சொன்னாலும், ஆண்டவன் திரு வருளைப் பெற்ற ஆன்மாக்கள் இட எல்லையைக் கடந்து இன்பத்தைப் பெறும் என்று சொன்னதாகவே இதற்குப் பொருள் கொள்ள வேண்டும். சின்ன இடத்தைக் கடந்தபிறகு பெரிய இடத்தைக் கடப்பது இயற்கைதான். அளவு படாத ஆண்டவனை அண்டின ஆன்மாவும் அளவுபடாத நிலையில் அளவுபடாத

இன்பத்தை அடையும். மயிலைப்போல அவனுடைய அணிமையைப் பெற்றால் காலம் கடந்து, இடமும் கடந்து நிற்கும் பேரின்ப நிலையை அடையலாம்.

★

தடக்கொற்ற வேள்மயி லேஇடர்
தீரத் தனிவிடின் நீ
வடக்கில் கிரிக்குஅப் புறத்தும்நின்
தோகையின் வட்டமிட்டுக்
கடற்குஅப் புறத்தும், கதிர்க்குஅப்
புறத்தும், கனகசக்ரத்
திடர்க்குஅப் புறத்தும், திசைக்குஅப்
புறத்தும் திரிகுவையே.

[விரிந்த வெற்றியையுடைய முருகப் பெருமானுக்குரிய வாகனமாகிய மயிலே, இடர் தீரும்படியாக உன்னைத் தனியே விட்டு விட்டால், நீ வடக்கில் உள்ள மேருமலைக்கு அப்புறத்தும் உன்னுடைய தோகையை விரித்து வட்டமிட்டுக் கடல்களுக்கு அப்புறத்தும், சூரியனுக்கு அப்பாலும், பொன்னிறமாகிய உலகப்புறச் சக்கரவாளகிரிக்கு அப்பாலும், திசைகளுக்கு அப்பாலும் சென்று திரிவாய்.

தட – விசாலமான. கொற்றம் – வெற்றி; அரசுரிமையும் ஆம். வடக்கில் கிரி – மேருமலை. தோகை – மயிலின் வால். கதிர் – சூரியன். திடர் – மேடு; இங்கே மலை. சக்ரத்திடர் – சக்கரவாள கிரி.]

மயில் இடங்கடந்து உலவும் தன்மையை உடையது என்பது கருத்து.

இது கந்தர் அலங்காரத்தில் 96–ஆவது பாட்டு.

சேடன் பட்ட பாடு

மயிலினது பெருமையைச் சொன்ன அருணகிரிநாதர் மறு படியும் ஒரு கற்பனைக் காட்சியைக் காட்டி, அதன் பெருமை யைப் பின்னும் விரிக்கிறார். அருணகிரிநாதருக்குத் திருச்செங் கோட்டில் ஒரு தனி அன்பு உண்டு. வேறு எந்தத் தலத்தையும் வைத்துப் பாடாத கந்தர் அநுபூதியில்,

''நாகாசல வேலவ''

என்று பாடினார். இதற்குரிய காரணத்தை முன்பு ஒரு சொற் பொழிவில் சொல்லியிருக்கிறேன். திருச்செங்கோட்டுக்கு, சர்ப்பகிரி, நாககிரி என்ற பெயர்கள் உண்டு. நெடுந்தூரத்தி லிருந்து பார்த் தால் ஒரு பாம்பு படுத்திருப்பது போலத் தோன்றும். அதற்கு அந்தப் பெயர் வந்ததற்கு அந்தத் தலத்தின் புராணம் ஒரு காரணம் சொல்கிறது.

புராண வரலாறு

ஒரு சமயம் வாயு பகவானுக்கும், ஆதிசேடனுக்கும் சண்டை உண்டாயிற்றாம். பாம்புக்குக் காற்றுத்தான் உணவு. அகங்காரம் வந்தால் உணவு கொடுப்பவரையும் பகைத்துக் கொள்ளும் நிலை உண்டாகும். இன்றைக்கு அப்படிப் பல கலகங்கள் நடப்பதைக் கண்கூடாகப் பார்க்கிறோம். எல்லாக் காலத்திலும் இத்தகைய கலகங்கள் நிகழ்வது வழக்கந்தான் போலும்! பாம்பு காற்றை உண்ணும் என்று சொல்வார்கள். ''காலே மிக உண்டு காலே இலாத கணபணம்'' என்று முன்பு அலங்காரத்தில் வந்திருக் கிறது. இப்போது பாம்பாகிய ஆதிசேடனுக்கும் வாயு பகவானுக் கும் சண்டை மூண்டது. யார் வன்மை உடையவர்கள் என்று சோதிப்பதற்கு ஒருவரோடு ஒருவர் மோதிக்கொண்டார்கள். காற்று வெகுவேகமாக வீசியது. ஆதிசேடன் தன்னுடைய படங் களை விரித்துக்கொண்டு சீறினான். என்ன இருந்தாலும் பாம்பின்

உணவாகவும் மூச்சாகவும் விளங்கும் வாயு தோல்வி அடை வானா? ஆதிசேடனின் படங்களை மோதிப் பல பகுதிகளாகப் பிய்த்து எறிந்தான். அவை வெவ்வேறு இடங்களில் விழுந்தன. திருக்கோணமலை, திருவேங்கடம், திருச்செங்கோடு முதலிய பல தலங்கள் அப்படி அமைந்தவை என்று புராணங்கள் சொல் கின்றன. அவ்வாறு ஆதிசேடனுடைய தலை விழுந்த இடங் களில் ஒன்று திருச்செங்கோடு. இதை நினைப்பூட்டுவதுபோல அங்கே அடிவாரத்தில் ஆதிசேடன் சிலை செதுக்கப்பட்டிருக் கிறது. அதற்கு அன்பர்கள் பூசை செய்வதுண்டு.

அந்த நாககிரியாகிய திருச்செங்கோட்டுக்கு அருணகிரியார் சென்று தங்கினார். பல காலம் அங்கே தங்கி யோகம் பயின்றார். ஒரு நாள் அந்த மலையைப் பார்த்தபோது ஆதிசேடன் உருவம் நினைவுக்கு வந்தது.அந்த எண்ணத்தில் இந்தப் பாட்டைப் பாடத் தொடங்கினார் போலும்!

குணசீலர் வரலாறு

நெடுந்தூரத்தில் இருந்து இந்த மலையைப் பார்த்தால் நாகத்தைப் போலத் தோற்றுகிறதை வைத்துக்கொண்டு எழுந்த பழைய வரலாறு ஒன்று உண்டு.

திருச்செங்கோட்டில் குணசீலர் என்னும் புலவர் ஒருவர் இருந்தார். அவர் முருகனிடத்தில் மிக்க பக்தி பூண்டு வாழ்ந்தார். சிறந்த புலவராகிய அவர் தம்முடைய கவிதையை வடிவேல் பெருமானுக்கன்றி வேறு ஒருவருக்கு அர்ப்பணம் செய்யக்கூடாது என்று விரதம் கொண்டிருந்தார். மிகவும் அடக்கமானவர்.

அந்தக் காலத்தில் தென்பாண்டி நாட்டில் ஆழ்வார் திருநகரி யில் பிரதிவாதி பயங்கரன் என்ற புலவன் இருந்தான். அவன் மிடுக்காகக் கவி பாட வல்லவன். அதைவிடக் கல்விச் செருக்கு நிரம்பியவன். தன்னுடைய புலமை மிடுக்கினால் தன்னினும் புலமை குறைந்த புலவர்களிடம் சென்று வாதிட்டு, ''நான் உனக்கு அடிமை'' என்று அவர்களிடமிருந்து முறி எழுதி வாங்குவது அவன் வழக்கம். இப்படியே அவன் பல இடங்களுக்குச் சென்று குறையாகப் படித்த புலவர்களை அடிமையாக்கிக் காண்டு வந்தான். எந்த ஊருக்குப் போகும் முன்பும் அந்த ஊரிலுள்ள புலவர்

களுக்கு அவன் ஓலை அனுப்புவான். முன்பு பலவிடங்களில் அவன் செய்த அட்டகாசத்தைக் கேட்ட புலவர்கள் அவனது ஓலை வந்தவுடனேயே, ''பிரதிவாதி பயங்கரனுக்கு அடிமை'' என்று முறி எழுதிக் கொடுத்துவிடுவார்கள்.

இப்படிப் பலர் அவனுக்கு அடிமையானதனால் அவன் கர்வம் மிக்கது. பாண்டி நாட்டை விட்டுச் சோழ நாட்டுக்கு வந்தான். அங்கங்கே இந்த மிண்டனோடு நமக்கு வாக்குவாதம் எதற்கு என்று சில புலவர்கள் அடிமை என்று எழுதிக் கொடுத்தார்கள். வேறு சிலர் எதிரிட்டுச் சொற்போர் புரிந்து தோல்வியுற்றனர். இப்படிச் சோழ நாட்டை ஒரு கலக்குக் கலக்கி விட்டுக் கொங்குநாட்டுக்கு வந்தான். திருச்செங் கோட்டுக்கு அருகில் வரும்போது அந்த ஊரில் குணசீலர் என்னும் புலவர் இருக்கிறார் என்று உணர்ந்தான். அவர் பெருமை அவனுக்குத் தெரியாது. எல்லோரையும் போல அவருக்கும் வழக்கமாக ஓலையை அனுப்பி வைத்தான்.

பிரதிவாதி பயங்கரனது ஓலையைப் பார்த்தவுடன் குண சீலருக்கு மிக்க வருத்தம் உண்டாயிற்று. இறைவன் துணையன்றி வேறு யார் துணையும் இல்லையென்ற உறுதியான எண்ண முடையவர் அவர். ஆகவே, திருச்செங்கோட்டு வேலனிடம் சென்று, ''எம்பெருமானே! நான் ஒரு பாவமும் அறியேன். ஏதோ ஓரளவு தமிழைக் கற்று, நான் கற்ற கல்வியை உனக்குத்தான் அர்ப்பணித்து வருகிறேன். நான் புலமை உடையவன் என்றோ, பிறரோடு போரிட்டு வெற்றி பெறுவேன் என்றோ ஒருநாளும் நினைத்தது இல்லையே! இப்படி இருக்க, என்னிடம் வம்புச் சண்டைக்கு ஒரு புலவன் வருகிறானே. நான் என்ன செய்வேன்! உன்னுடைய திருவருள்தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்'' என்று மனமுருகி விண்ணப்பம் செய்து கொண்டார். தமக்கு வந்த ஓலையை ஆண்டவனுடைய திருவடியில் வைத்துவிட்டுத் தம் வீட்டுக்குத் திரும்பிவிட்டார்.

குணசீலரிடமிருந்து பிரதிவாதி பயங்கரனுக்கு விடை ஒன்றும் வரவில்லை. அதனால் கோபமுற்ற அந்தப் புலவன் அவரோடு வாதிட்டு அவரைத் தோல்வியுறச் செய்ய வேண்டுமென்று எண்ணித் திருச்செங்கோட்டை நோக்கி வந்தான். சிவிகையில்

ஏறிக்கொண்டு மாணாக்கர்கள் தொடர்ந்து வர ஆடம்பரமாகத் திருச்செங்கோட்டை அணுகி வந்து கொண்டிருந்தான். அந்த மலையின் பக்கத்தில் அப்போது ஒரு சிறுவன் மாடு மேய்த்துக் கொண்டிருந்தான்.

அந்த இடத்திற்குப் புலவனும், அவனைச் சேர்ந்தவர்களும் வந்தார்கள். அங்கே இருந்த மலையைப் பார்த்தபோது அதன் பெயர் முதலியவற்றைக் கேட்க வேண்டுமென்ற எண்ணம் புலவனுக்கு உண்டாயிற்று. ''இது என்ன மலை?'' என்று அருகில் வந்தவர்களைக் கேட்டான். அவர்கள், ''இதுதான் திருச்செங்கோடு. சர்ப்பகிரி என்றும் சொல்வார்கள்'' என்றனர். அந்தப் புலவன் நன்றாக மலையை நிமிர்ந்து பார்த்தான். அது பாம்பு போல இருந்தது. அப்போது அவனுக்கு ஒரு யோசனை தோன்றியது. ''இது சர்ப்பமானால் இந்தப் பாம்பு ஆடாமல் ஏன் படுத்துக்கிடக்கிறது?'' என்ற கேள்வியைக் கேட்டான். பின்பு அதையே பாட்டாகப் பாடினான். பாதிப் பாட்டாக அந்தக் கேள்வியை வைத்துப் பாடினான்.

''சமர முகத்திருச் செங்கோடு சர்ப்ப சயிலமெனின்
அமரில் படம்விரித் தாடாதது என்னை?''

என்ற இரண்டு அடிகள் பாடினான். அவன் அந்தப் பாட்டை முடிக்க வேண்டுமென்றே தொடங்கினான். ஆனால் கேள்வி முடிந்தவுடன் மேற்கொண்டு அவன் அறிவு வேலை செய்யவில்லை. ''என்னை?'' என்பதற்குரிய விடையாகப் பாட்டின் பிற் பகுதி அமைய வேண்டும். திருப்பித் திருப்பி, ''என்னை? என்னை?'' என்று கேட்டான். மீட்டும் மீட்டும்,

''சமர முகத்திருச் செங்கோடு சர்ப்ப சயிலமெனின்
அமரில் படம்விரித் தாடாத தென்னை''

என்று சொன்னான். மேலே ஓடவில்லை. இதுகாறும் அத்தகைய கலக்கம் அவனுக்கு வந்ததே இல்லை. மௌனமாகச் சற்று யோசித்தான். பாட்டு நிறைவேறவில்லை. கையை ஆட்டினான். தலையை ஆட்டினான். ஆனால் அவன் அறிவு ஆடவில்லை. எடுத்த பாட்டை முடிக்காமல் திணறிக்கொண்டிருந்தான்.

அப்போது, ''அஃது ஆய்ந்திலையோ?'' என்ற குரல் அவன் காதில் விழுந்தது. இளங்குரலாக அது தோன்றியது. யாவரும் ஒலி

வந்த திசையைப் பார்த்தார்கள். அங்கே மாடு மேய்த்துக்கொண் டிருந்த இளைஞன் ஒருவன் தன் கைக்கோலை ஆட்டிக்கொண்டு பாட்டைச் சொல்லிக் கொண்டிருந்தான்.

''அஃது ஆய்ந்திலையோ?
நமரன் குறவள்ளி பங்கன் எழுகரை நாட்டுயர்ந்த
குமரன் திருமரு கன்மயில் வாகனம் கொத்துமென்றே''

என்று அந்தப் பாட்டின் பிற்பகுதியை இளைஞன் சொன்னான். எழுகரை நாடு என்பது திருச்செங்கோடு உள்ள சிறிய நாட்டுக்குப் பெயர். கொங்குநாட்டில் இத்தகைய நாடுகள் பல உண்டு. 'எழுகரை நாட்டிலுள்ள குமரப் பெருமானுடைய வாகனமாகிய மயில், நாம் படம் எடுத்து ஆடினால் கொத்திவிடுமே என்று அஞ்சி அந்தப் பாம்பு படம் விரித்து ஆடாமல் இருக்கிறது. இது உனக்குத் தெரியாதா?' என்ற கருத்து அந்தப் பாட்டின் பிற்பகுதியில் அமைந்திருக்கிறது. முன் அமைந்த கேள்விக்கு ஏற்றபடி இந்த விடை இருந்ததனால், கேட்டவர்கள் எல்லோரும் வியப்படைந்தார்கள். பிரதிவாதி பயங்கரனோ முகம் வெளுத்துத் தோல்வியுற்றவனைப் போலானான். 'இதுவரைக்கும் நான் பெரும் புலவன் என்று அகங்கரித்தேன். இந்த இளைஞன் நம்மைத் தோல்வியுறச் செய்துவிட்டானே! இவன் யார் தெரியவில்லையே!' என்று உள்ளம் மறுகினான். ''அவன் யார், என்று கேளுங்கள்'' என்று அருகிலுள்ள தன் மாணாக்கர்களுக்குச் சொல்ல, அவர்கள் கேட்டார்கள்.

அப்போது அந்த இளைஞன் சொன்னான்; ''நானா? இந்த ஊரில் குணசீலர் என்னும் புலவர் இருக்கிறார். சிறந்த புலமை யாளர். ஆனால் அவர் புலவர் என்பதை எளிதில் அறிய இயலாது. அடக்கம் மிகுந்தவர். தாம் பெரும் புலவர் என்பதைப் பிறர் காணத் தம்பட்டம் அடித்துக்கொள்ள மாட்டார். எல்லாம் இறைவன் திருவருள் என்று அடங்கியிருப்பார். முருகப் பெருமானிடத்தில் அவருக்குள்ள அன்புக்கு எல்லையே இல்லை. அந்தப் பெரு மானுடைய சந்நிதானத்தில் நின்று பொங்கும் வெள்ளம் போலப் பாடுவார்'' என்று இளைஞன் சொல்லிக்கொண்டு வந்தான். பிரதிவாதி பயங்கரனும் இதைக் கேட்டான். ''அது சரி; நீ யார் என்று கேட்டால் என்ன என்னவோ சொல்கிறாயே!'' என்று

இடைமறித்தான். ''அதுதான் சொல்ல வருகிறேன். நான் அந்தப் பெருமானிடம் பாடம் கேட்கச் சென்றேன். விரைவில் கவி பாடுவதற்குரிய பழக்கத்தை அவர் சொல்லித் தந்தார். என்னைப் போலப் பல மாணாக்கர்கள் அவரிடம் படித்துப் பெரும் புலவர்களாக இருக்கிறார்கள். ஆனால் எனக்கு விரைவில் கவி பாட வரவில்லை. 'நீ என்னிடம் படித்தது போதும், என் மாணாக்கனாக இருப்பதற்கு உனக்குத் தகுதி இல்லை' என்று சொல்லி என்னைத் துரத்திவிட்டார். பிழைக்க வேறு வழி இல்லாமையினால் இப்போது ஆடு மாடு மேய்த்துக் கொண் டிருக்கிறேன்'' என்று அவன் சொன்னான்.

அதைக் கேட்ட பிரதிவாதி பயங்கரத்தின் தலை சுழன்றது. துரத்திவிடப்பட்ட மாணாக்கனே தன்னைத் தோல்வியுறச் செய்து விட்டான் என்றால் அந்தப் பெரும் புலவருடைய புலமை எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்த்தான். நாம் அந்தப் பக்கமே போகக் கூடாது என்ற தீர்மானத்திற்கு வந்தான். 'இந்த அவமானமே நமக்குப் போதும். அங்கும் போய் அவமானப்பட வேண்டாம்' என்று நினைத்தவனாக அந்த மாட்டுக்காரச் சிறுவனிடம், ''அப்பா, என்னுடைய வணக்கத்தை அந்தக் குண சீலரிடம் போய்த் தெரிவி'' என்று சொல்லிச் சிவிகையைத் திருப்பிக் கொண்டு வந்த வழியே போய்விட்டான். முருகன் இப்படி ஓர் அற்புதத்தைச் செய்தான் என்ற கதை ஒன்று வழங்கு கிறது. அதனைக் கொங்குமண்டல சதகம் ஒரு பாட்டில் எடுத்துச் சொல்கிறது.

''பெருமை மிகும்அர வச்சிலம் பாமெனின் பெட்புறும்அவ்
வரவு படம்விரித் தாடாதது என்னென் றகத்துணுமோர்
கருவி வெருக்கொள ஆமேய்ப் பவனாக் கனிந்துதிரு
மருகன் மயில்கொத்தும் என்றெனச் சொல்கொங்கு மண்டலமே.''

இந்தக் கதை எனக்கு இங்கே நினைவுக்கு வந்ததற்குக் காரணம்: திருச்செங்கோடு ஆதிசேடனைப் போலத் தோற்றுவதும், அது மயிலைக் கண்டு அஞ்சுவதுமாகிய செய்திகள் இப்போது இங்கே பார்க்கப் போகிற கந்தர் அலங்காரப் பாடலிலும் வருவது தான். சாதாரண மயிலைக் கண்டாலே பாம்புக்குப் பயம். பாம்புக்கும் மயிலுக்கும் எப்போதுமே விரோதம். தான் படம்

விரித்து ஆடினால் முருகப் பெருமானுடைய வாகனமாகிய மயில் கொத்துமே என்று அஞ்சி, ஆடாமல் அசையாமல் ஆதிசேடன் திருச்செங்கோடு என்னும் மலையாகப் படுத்துக்கிடக்கிறான் என்று சமத்காரமாக மேலே சொன்ன பாட்டுத் தெரிவிக்கிறது.

அருணகிரிநாதர் ஒரு புதிய கற்பனை செய்கிறார். இது கந்தபுராணத்தில் இல்லாதது. திருச்செங்கோட்டுப் புராணத்திலும் இல்லாதது. அதை இப்போது பார்க்கலாம்.

ஆதிசேடன் கர்வம்

முருகப்பெருமான் தன்னுடைய மயில் வாகனத்தில் ஏறிக் கொண்டு உலா வந்தான். தன் மாமனாரைப் பார்த்துவிட்டு வரலாம் என்று திருவைகுந்தத்திற்கு எழுந்தருளினான். அப்போதுதான் திருமால் தம்முடைய மெத்தென்ற பாம்புப் படுக்கையின்மேல் படுத்துக் குறட்டை விட்டுக் கொண்டிருந்தார். ஆதிசேடன் தன் படங்களை விரித்துக் கொண்டு அந்தப் பெருமானுக்குக் குடை போல இருந்தான். அப்போது அவன் கண்களில் முருகப்பெருமான் வாகனமாகிய மயில் தென்பட்டது. பொதுவாகத் தன்னுடைய இனத்தினர் மயிலுக்கு அஞ்சித் துன்புறுவதை அவன் தெரிந்து கொண்டிருந்தான். 'இப்போது இந்த மயில் நம்மை என்ன செய்யும்?' என்ற கர்வம் அவனுக்கு உண்டாயிற்று. 'நாம் திருமாலினுடைய படுக்கையாக இருக்கிறோம். அந்தப் பெருமானுடைய சங்கும் சக்கரமும் நமக்குக் காவலாக இருக்கின்றன. இப்போது இது நம்மை என்ன செய்துவிடும்?' என்று அவன் நினைத்தான். உடனே ஆயிரம் படங்களையும் நன்றாக விரித்து அடித்துக் கொண்டு, ''மயிலே, மயிலே சௌக்கியமா?'' என்று கேட்டான். பின்பு சிறிதே ஏளனமாகச் சிரித்தான்.

மயிலின் கோபம்

மயில் ஒரு கணம் அப்படியே நின்று திரும்பிப் பார்த்தது. ஆதிசேடனுடைய உள்ளத்தில் ஓடுகின்ற செருக்கை அதனால் உணர்ந்துகொள்ள முடிந்தது. 'நம்மைக் கண்டு காத தூரம் ஓட வேண்டிய இவன் இங்கே திருமால் தன் மேலே படுத்துக் கொண்டிருப்பதனால் அல்லவா இத்தகைய கர்வத்தை அடைந்திருக்கிறான்? திருமால் நம் பெருமானைக் காண்பதற்கு வரும்

போது இவன் அங்கே வருவதில்லை, ''எம்பெருமான் வலிய இங்கே வந்திருக்கிறானே! அது அவன் பெருங்கருணையல்லவா?'' என்று எண்ணிப் பணிவாக இல்லாமல் என்னை எளிதாக எண்ணி நகைக்கிறான்' என்று மயிலுக்குக் கொஞ்சம் கோபம் உண்டாயிற்று.

மயில் தனியாகப் போயிருந்தால் அதற்குக் கோபம் வராது. இப்போது முருகப்பெருமானுக்கு வாகனமாக இருக்கிறது. ஒரு தலைவனுக்குப் பெருமை இருந்தால் அவனைச் சார்ந்த அங்கங் களுக்கும் பெருமை உண்டாகும். மற்றவர்கள் தலைவனிடத்தில் காட்டுகின்ற மரியாதையில் ஒரு பகுதியை, அவனைச் சார்ந்தவர் களிடத்திலும் காட்டினால்தான் தலைவனால் நன்மை கிடைக்கும்.

வாகனத்தின் பெருமை

இறைவனுடைய தொடர்பினால் அவன் வாகனங்களுக்கும் பெருமை உண்டென்பதைப் பல செய்திகளால் உணர்ந்து கொள்ள லாம். அருணகிரிநாதர், ஆடும் மயிலாகின்ற ஆண்டவனது வாகனத்தைப் பலபடியாகப் பாடியிருக்கிறார் என்பதைப் போன சொற்பொழிவில் சொன்னேன்.

ஒரு கோயிலைப் பார்த்தவுடனேயே அது இன்ன கோயில் என்று தெரிய வேண்டுமானால் அந்தக் கோயிலின் திருமதிலைப் பார்த்தால் தெரியும். அந்த மதிலின் மேல் உள்ளேயிருக்கும் மூர்த்தியின் வாகனத்தை அமைத்திருப்பார்கள். கோயிலுக்குள் புகுந்தால் கொடி மரத்தின் அருகில் அந்த வாகனத்தைப் பார்க்க லாம். அதை வணங்கிவிட்டே உள்ளே போவது ஒரு சம்பிரதா யம். திருமதிலின் மேலுள்ள அடையாளத்தைக் கண்டு அது இன்ன கோயில் என்று தெரிந்து கொள்ளலாம். இதைச் சொல்லும் போது எனக்கு ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது.

ஆசாரிய சுவாமிகள் திருவாய் மலர்ந்தது

ஒருநாள் இரவு ஒரு சிறிய கிராமத்தில் காமகோடி பீடாதி பதிகளாகிய ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளைத் தரிசித்தேன். சிறிது நேரம் அவர்களிடம் பேசி இன்புறும் பேறு எனக்குக் கிடைத்தது. அப்போது அவர்கள், ''திருப்பதி முருகன் தலமா? திருமாலின் தலமா?'' என்று கேட்டார்கள். ''இரண்டுக்கும் ஆதாரம் உண்டு'' என்று சொன்னேன்.

''என்ன என்ன காரணங்களினால் அதை முருகன் தலம் என்று சொல்கிறார்கள்?'' என்று அவர்கள் என்னைக் கேட்டார்கள். நான் பல ஆதாரங்களைச் சொல்லி, ''வட நாட்டார் பாலாஜி என்று அந்த ஆண்டவனை அழைக்கிறார்கள். பாலனாக இருப்பவன் முருகன்தான். வெள்ளிக்கிழமையன்று வில்வ அர்ச்சனை நடக் கிறது. மலைகளுக்கு எல்லாம் முருகன் தலைவன் என்பது ஒரு வழக்கு'' என்று நான் சொல்லிக் கொண்டு வந்தேன். பிறகு அவர்கள், ''உன்னுடைய கருத்து என்ன?'' என்று கேட்டார்கள். ''பழங்காலத்தில் அங்கே முருகன் கோயிலும், திருமால் கோயிலும் இரண்டும் இருந்திருக்க வேண்டும். திருமால் கோயி லுக்குச் சிறப்பு வரவர, முருகன் கோயில் மறைந்திருக்க வேண் டும் என்று நினைக்கிறேன்'' என்றேன்.

உடனே அவர்கள் ஒரு நுட்பமான கருத்தைச் சொன்னார்கள். ''ஏதோ ஒரு புராணத்தில் அங்கே இரண்டு சக்திகள் இருப்பதாகப் படித்திருக்கிறேன். கௌமாரி, வைஷ்ணவி ஆகிய இரண்டு சக்திகளும் அங்கே இருப்பதாக அந்த நூல் சொல்கிறது. நீ திருப்பதி போயிருக்கிறாயா?'' என்று கேட்டார்கள். நான் அங்கே போகாத காலம் அது. ஆகையால், ''இல்லை'' என்று சொன் னேன். ''போனால் அந்தக் கோயில் மதில் சுவரைப் பார். முருகன் கோயிலாக இருந்தால் மயில் வாகனம் இருக்கும். திருமால் கோயிலாக இருந்தால் கருட வாகனம் இருக்க வேண்டும். ஆனால் அங்கே என்ன இருக்கிறது தெரியுமா? சிங்க வாகனத்தைத்தான் காணலாம். அது சக்தியின் வாகனம். தொண்டை நாட்டிலும், அதற்கு வடக்கிலும் அம்பிகை கோயிலின் முன் வாகனமாகச் சிங்கத்தைத்தான் பார்க்கலாம். சோழ தேசத்தில் ரிஷபம் இருந் தாலும் தொண்டை நாட்டில் சிங்கத்தை வைத்திருப்பார்கள். தொண்டை நாட்டுக்கு வடக்கே யுள்ள திருப்பதியில் சிங்கம் திரு மதிலில் இருப்பதைக் கொண்டு, அது சக்தி க்ஷேத்திரம் என்பது விளங்குகிறது அல்லவா? இரண்டு சக்திகள் இருப்பதனால் முருகன் கோயில் என்றும், திருமால் கோயில் என்றும் சொல்கிறார்கள்'' என்று அருளினார்கள்.

பிறகு அங்கே இருந்த ஒருவரிடம், ''எனக்குத் திருப்பதியில் கொடுத்த பரிவட்டம் உள்ளே இருக்கிறது. அதைக் கொண்டுவா'' என்று பணித்தார்கள். அதை அவர் கொண்டு வந்து கொடுத்தார்.

அதை என்னிடம் கொடுத்து, ''அளந்து பார்'' என்றார்கள். திருப்பதியை அதுவரைக்கும் பாராதிருந்த எனக்குத் திருவேங்கட வனுடைய திருமேனியில் அணிந்த பரிவட்டம் என் கையில் பட்டவுடன் புளகாங்கிதம் உண்டாயிற்று. என் கையால் அதனை அளந்து முழம் போட்டேன். சரியாக முப்பத்தாறு முழம் இருந்தது.

''திருப்பதிப் பெருமாளுக்குத் தனியாகத் தறி போட்டு ஆடை நெய்வது வழக்கம். அதற்கென்று தனியே ஒரு கிராமம் இருக்கிறது. முப்பத்தாறு முழம் உள்ள பரிவட்டந்தான் பெரு மாளுக்கு அணிகிறார்கள். முப்பத்தாறு முழம் என்பதில் ஏதாவது உனக்குத் தோன்றுகிறதா?'' என்று ஸ்ரீ ஆசாரியாரவர்கள் கேட் டார்கள். எனக்கு ஒன்றும் தெரியவில்லை. சும்மா இருந்தேன். அவர்கள், ''பொதுவாக நம்மவர்களில் பெண்கள் பதினெட்டு முழம் கட்டுகிறார்கள். ஒரு பெண்ணுக்குப் பதினெட்டு முழம் என்றால் இரண்டு பெண்களுக்கு முப்பத்தாறு முழம் அல்லவா? இரண்டு சக்திகள் சேர்ந்த மூர்த்தி முப்பத்தாறு முழம் கட்டுவது பொருத்தந்தானே?'' என்றார்கள். இது சமத்காரமாகச் சொன்ன வார்த்தை. ஆனாலும் இரண்டு சக்திகள் சேர்ந்த மூர்த்தி அங்கே திருக்கோயில் கொண்டிருப்பதை அன்று அவர்கள் வாயிலாக உணர்ந்தேன். அதற்க ஆதரமாகத் திருவேங்கடம் கோயில் மதிலி லுள்ள வாகனம் சிங்கம் என்பதை மனத்தில் பதித்துக கொண்டேன்.

வாகன அடையாளம்

வாகனத்தைக் கோயிலுக்கு அடையாளமாக வைப்பது வழக்கம் என்பதற்காக இந்த நிகழ்ச்சியை இப்போது சொன் னேன். சிவன் கோயில் என்றால் திருமதிலின் மேல் ரிஷபம் இருக்கும். பிள்ளையார் கோயில் என்றால் மூஷிகம் இருக்கும். திருமால் கோயில் என்றால் திருமதிலின் மேல் கருடாழ்வார் இருப்பார். முருகன் கோயில் மதில்மேல் மயில் இருக்கும். ஒரே ஓர் ஊரில் மாத்திரம் இந்த அடையாளத்தைக் காண முடியாது. திருவாவடுதுறையிலுள்ள கோயிலின் மதில்மேலே இடபங் களைக் காண முடியாது. முன்பு இருந்தனவாம். திருமாளிகைத் தேவர் என்ற சித்தர் அந்த ரிஷபங்களுக்கு உயிர் உண்டாக்கிப் பகைவரிடம் போரிட அனுப்பி விட்டாராம். அந்த ஊர்த் திருமதில்மேல்தான் ரிஷபங்களைக் காண முடியாது.

மயிலின் சிறப்பு

எம்பெருமானை யாவரும் காணத் தன்மேலே ஏற்றிக் கொண்டு வருகிற வாகனம் மயில்.

''நீலங்கொள மேகத்தின் மயின்மீதே
நீவந்த வாழ்வைக்கண் டதனாலே
மால்கொண்ட பேதை''

என்று அருணகிரியார் திருப்புகழில் பாடுவார். எம்பெருமான் திருக்கோயிலில் இருந்தபடியே இருந்தால் பலர் அவனுடைய காட்சியைப் பெறுவதில்லை. ஆனால் நையாத மனத்தினரையும் நையும்படியாகச் செய்ய ஆண்டவன் மயில்வாகன மூர்த்தியாக எழுந்தருளுகிறான். அதனால் வீதியிலுள்ள மக்கள் அவன் தரிசனத்தைப் பெற்று இன்புறுகிறார்கள். முருகப் பெருமான் எந்தச் சமயத்திலும் அடியார்களுக்கு அருள் செய்வதற்காக நீல மயில் மேல் ஏறி வருகிறான்.

''நீலச் சிகண்டியில் ஏறும் பிரான் எந்த நேரத்திலும்
கோலக் குறத்தியுடன் வருவான்''

என்று அலங்காரத்தில் முன்பு வந்ததை நாம் கண்டோம். மயில் பிரணவத்தின் சொரூபம் என்பதையும் நாம் அறிந்திருக்கிறோம். அத்தகைய மயிலின் பெருமையை ஆதிசேடன் எண்ணிப் பார்க்க வில்லை. தான் மிக்க உயர்ந்த நிலையில் இருப்பதாக எண்ணித் தன் வைரியான மயிலுக்குத் தன் மிடுக்கைக் காட்ட வேண்டு மென்று தோன்றியது போலும்!

மயிலின் செயல்

மாப்பிள்ளைக்கு எவ்வளவு வயசானாலும் மாமனார் அவனுக்கு மரியாதை செய்ய வேண்டும். 'மாப்பிள்ளையிலும் எருமையிலும் கிழம் இல்லை' என்ற ஒரு பழமொழி வழங்கு கிறது. மாப்பிள்ளை வீட்டாரிடத்தில் மாமனார் வீட்டார்கள் மரியாதையோடு நடந்துகொள்ளாவிட்டால் கோபதாபங்கள் உண் டாகிவிடும். இங்கே மாப்பிள்ளைப் பெருமானாகிய முருகன் வரும்போது அவன் வாகனத்தை ஆதிசேடன் அலட்சியம் செய்து விட்டான். திருமால் நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கினார். தலைவர் கொஞ்சம் அசட்டையாக இருந்தாலும் உடன் இருக்கும்

ஏவலாளிகள் அதை மறைத்து மரியாதை செய்ய வேண்டும். அதற்கு மாறாக ஆதிசேடன் நடந்து கொண்டான். அவன் தன்னை அவமானம் செய்து விட்டான் என்பதை மயில் உணர்ந்தது. தன் தோகையைச் சர்ர் என்று ஒரு முறை அடித்துக் கொண்டது. அப்படி அடித்ததனால் ஒரு பெரும் காற்றுப் புறப்பட்டது. அந்த வேகத்தில் ஆதிசேடனுடைய படங்கள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டன. முன்னாலே காற்று மோதியதனால்தானே தலைகள் பிய்ந்து விழுந்தான் ஆதிசேடன்? இப்போது தலைகள் ஒன்றோடு ஒன்று மோதியதனால் படங்களில் இருந்த இரத்தினங்கள் பொல பொலவென்று உதிர்ந்தன. வாயில் அடித்தால் பற்கள் பொல பொலவென்று உதிர்வது போல, மயில் ஆரவாரித்துத் தோகையை அடித்துக் கொண்டதனால் ஆதிசேடனுடைய பணாமுடியிலுள்ள இரத்தினங்கள் உதிர்ந்துவிட்டன. பிறகு மயில் ஒரு கொத்துக் கொத்தியது. அந்தத் தாக்குதலைப் பொறுக்க முடியாத ஆதி சேடன், கிடந்த நிலையில் இல்லாமல் கொஞ்சம் புரளும்படியாக ஆகிவிட்டது. புரளவே, மேலே படுத்துக்கொண்டு உறங்கிய திருமால் கீழே விழுந்தார். தூங்கினாலும் அவர் திருக்கரத்தில் சங்கம் சக்கரம் இருந்தன. அவர் கீழே விழுந்தவுடன் சங்கு சக்கரங்கள் கையிலிருந்து நழுவி விழுந்துவிட்டன. இப்போது முருகப்பெருமானுடைய வாகனமாகிய மயிலின் அடியின் கீழே ஆதிசேடனுடைய தலைகளிலிருந்து உதிர்ந்த மாணிக்கங்களும், திருமாலின் கையிலிருந்த சக்கராயுதமும் சங்கமும் விழுந்து கிடக் கின்றன.

இத்தகைய காட்சி ஒன்றை அருணகிரியார் தம் கற்பனை யினால் அமைத்துக் காட்டுகிறார்.

சேலில் திகழ்வயல் செங்கொடை வெற்பன் செழுங்கலபி
ஆலித்து அனந்தன் பணாமுடி தாக்க அதிர்ந்துஅதிர்ந்து
காலில் கிடப்பன மாணிக்க ராசியும் காசினியைப்
பாலிக்கும் மாயனும் சக்ரா யுதமும் பணிலமுமே.

செங்கோட்டு வளம்

செங்கோடை என்பது திருச்செங்கோடு. அவர் காலத்தில் அங்கே வயல்கள் நிரம்பியிருந்தன. அந்த வயல்களில் நெல் இருக்கிறதென்று சொல்லலாம்; பசுமை இருக்கிறதென்று

சொல்லலாம். அருணகிரியார் சேல் மீன்கள் திகழும் வயல் என்று வருணிக்கிறார். வயல்களில் நீர் நிரம்பினால் சேல் மீன்கள் உலவும். சேல்கள் திகழும் என்றதனால் அங்குள்ள நீர்வளத்தைப் புலப்படுத்தினார். அதோடு மக்களுடைய நீர்மை வளமும் புலனாகிறது. அந்த மீன்கள் அவர்கள் வயிற்றில் போகாமல் குழந்தைகளைப் போல வயல்களில் துள்ளுகின்றன. இப்படிச் சொல்வது அருணகிரியாருடைய வழக்கம்.

''சேல்பட்டு அழிந்தது செந்தூர் வயற்பொழில்''

என்ற பாட்டில் அதனைப் பற்றி விரிவாக நாம் பார்த்தோம். திருச்செங்கோட்டைச் சொல்லும்போது,

''சேலார் வயற்பொழில்''

என்று சொல்லியிருப்பதையும் பார்த்தோம். இவற்றையெல்லாம் ஒப்ப,

சேலில் திகழ்வயல் செங்கோடை வெற்பன்

என்று இங்கே சொன்னார். அங்கே மலை வளமும் உண்டு; வயல் வளமும் உண்டு;

சேடன் பட்ட பாடு

முருகனுடைய மயிலைச் செழுங்கலபி என்று சொல்கிறார். செழுமையான கலாபத்தையுடையது என்று பொருள். கலாபத்தை யுடையது கலாபி. அது இங்கே செய்யுள் ஓசையை நோக்கிக் கலபி என்று ஆயிற்று. அது ஆரவாரித்து அனந்தனுடைய பணா முடியைத் தாக்கியதாம்.

ஆலித்து அனந்தன் பணாமுடி தாக்க.

அதனுடைய விளைவு என்ன என்பதைப் பின் இரண்டு அடிகளால் சொல்கிறார்.

அதிர்ந்துஅதிர்த்து
காலில் கிடப்பன மாணிக்க ராசியும் காசினியைப்
பாலிக்கும் மாயனும் சக்ரா யுதமும் பணிலமுமே.

அதிர்ந்து அதிர்ந்து மாணிக்க ராசிகளை எல்லாம் கக்கி விட்டான் ஆதிசேடன். அந்த மாணிக்கக் குவியல் மயிலின் காலடியில் விழுந்து கிடந்தது.

காலில் கிடப்பன மாணிக்க ராசியும்.

ஆண்டவனது காலில் விழவில்லை. மயிலின் காலில் அருச்சனை செய்த மாதிரி அவை கிடக்கின்றனவாம். ஆயிரம் மணிகள் மயிலின் காலில் கிடக்கின்றன. ஆயிரம் செம்மலரால் அருச்சனை செய்ததுபோல அது தோன்றும் அல்லவா? ராசி என்பது கூட்டம் என்னும் பொருளுடையது. ஆண்டவனுடைய வாகனமாகிய மயில் தன் தோகையை அடித்து ஆரவாரித்து ஆதிசேடன் பணா முடியைத் தாக்கியதனால் நிகழ்ந்த நிகழ்ச்சி இது. ஆதிசேடன் உடம்பை அடித்திருக்கலாம். அகங்கரித்து நிமிர்ந்தது பணாமுடி தானே? ஆகையால் அங்கே தாக்கியது. ஆதிசேடனை அழித்து விடாமல் இந்த அளவில் மயில் நிறுத்தியது. தலை நிமிர்ந்திருந்த ஆதிசேடன் மணிகளைக் கக்கிவிட்டுத் தலை பணிந்து புரண்டு விழுந்தான்.

பாம்புக்கு நஞ்சும் உண்டு, மாணிக்கமும் உண்டு. நஞ்சு இருக்கிறதென்று எண்ணினால் அது தன் தலையை நிமிர்த்தி வைத்துக்கொள்வதற்குக் காரணம் இல்லை. மாணிக்கம் இருக்கிறது என்ற செருக்கினால் அது தலை நிமிர்ந்து இருந்தது. அந்தச் செருக்குக்குக் காரணமான மாணிக்கத்தை இப்போது தகர்த்துக் கீழே விழச் செய்துவிட்டது மயில். ஆயிரம் மாணிக்கங்களும் உதிர்ந்து ஆதிசேடன் வெறும் பாம்பு போலக் கிடந்தான்.

சார்பினால் வந்த தீங்கு

அது மாத்திரமா? ஆதிசேடன் தவறு செய்தான். அதனால் தண்டனை பெற்றான். ஒரு தவறும் செய்யாத திருமாலும் ஏன் கீழே விழுந்தார்? நல்லவர்கள் பொல்லாதவர்களுடன் சேர்ந்தால் அவர்களுக்கும் துன்பம் உண்டாகும். அதுமாதிரி இங்கே காசினியைப் பாலிக்கும் மாயனாரும் கீழே விழுந்தார். அவர் கையிலுள்ள சங்க சக்கரங்களும் கீழே விழுந்தனவாம்.

எறிபத்த நாயனார் என்னும் அடியவர் ஒருவர் இருந்தார். சிவகாமி ஆண்டார் என்பவர் கையில் இருந்த ஒரு மாலையை மன்னனுடைய யானை பறித்துக் காலின் கீழே போட்டுத் துகைத்துவிட்டது. அதைக் கண்ட நாயனார் அதன் துதிக்கையை வெட்டினாராம். பின்பு அதன் மேலே இருந்த பாகனையும்

வெட்டினாராம். யானை தவறு செய்திருந்தாலும் அதனைச் சார்ந்ததனால் பாகனுக்கும் தண்டனை கிடைத்தது.

பெரிய காட்டுக்கு நடுவில் சந்தன மரம் இருந்தால் அந்தக் காட்டிலுள்ள முள் மரங்களுக்குக் கொள்ளி வைத்துச் சுடும்போது அவற்றோடு சேர்ந்து நடுவிலுள்ள சந்தன மரமும் எரிந்துதான் போகும். அதுபோல, சிற்றினத்தைச் சேர்ந்தால் எவ்வளவு உயர்ந்தவர்களாக இருந்தாலும் தீங்கே அடைவார்கள் என்பதை இந்தப் பாட்டுப் புலப்படுத்துகிறது.

இங்கே மற்றொரு சிறப்பு : மாணிக்க ராசியும் மாயனும் சக்ராயுதமும் பணிலமும் கிடந்தன என்று சொன்னார். கிடந்தன என்பது அஃறிணை. மாணிக்கக் கூட்டம் அஃறிணை. சங்கம் அஃறிணை. மாயனோ உயர்திணை. மயிலின் காலில் விழுந்து கிடக்கும்போது உணர்வற்ற அஃறிணை போலக் கிடந்தாராம். அதனால் அஃறிணைகளோடு சேர்த்துச் சொல்லிவிட்டார்.

இது ஒரு வகையாகக் கற்பனை பண்ணிய காட்சி. திருமாலை இழித்துச் சொல்ல வேண்டுமென்பது அருணகிரியாரின் நோக்கம் அல்ல. தான் கெட்டதல்லாமல் தன்பால் உறங்கிய பெருமாளுக்கும் தீங்கு உண்டாகும்படி செய்தான் என்றதனால், ஆதிசேட னுடைய அபசாரத்தின் மிகுதியைப் புலப்படுத்தினார்.

'மயில் வாகனத்தில் ஏறிக்கொண்டு முருகன் வைகுண்டத் திற்குப் போனானாம். திருமால் ஆதிசேடன் மீது படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். மயில்மீது தான் கொண்ட பகையின் காரண மாகச் சற்றே பராமுகத்தோடு நிமிர்ந்து பார்த்து, தன்னிடம் உள்ள மாணிக்கத்தை எண்ணிச் செருக்கிய ஆதிசேடன் மயிலைக் கண்டு ஏளனம் செய்தானாம். மயில் சினந்து தன் தோகையை அடித்துக் கொண்டு ஆதிசேடனுடைய படங்களோடு கூடிய முடியைத் தாக்கி மோத, அவற்றிலுள்ள மாணிக்கங்கள் சிதறி மயிலின் காலில் விழுந்து குவிந்தனவாம். இவற்றோடு திருமாலும் விழுந் தாராம். சங்கமும் சக்கரமும் விழுந்தனவாம்' என்று ஒரு காட்சியைக் கற்பனைசெய்து அருணகிரியார் வருணிக்கிறார்.

இப்படி எந்தப் புராணத்தில் வருகிறதென்ற கேள்வி எழலாம். இது எந்தப் புராணத்திலும் இல்லை. கந்தன் பெருமையைப் பல வகையான கற்பனைகளை அமைத்து அலங்காரமாகச் சொல்லிக்

கொண்டு வருகிற அருணகிரியார் இந்தக் காட்சியைத் தாமே படைத்து மொழிந்தார். மயிலின் பெருமையை இந்த வகையில் சொல்ல வேண்டுமென்று அவருக்குத் தோன்றியது.

★

சேலின் திகழ்வயல் செங்கோடை
வெற்பன் செழுங்கலபி
ஆலித்து அனந்தன் பணாமுடி
தாக்க அதிர்ந்துஅதிர்ந்து
காலில் கிடப்பன மாணிக்க
ராசியும் காசினியைப்
பாலிக்கும் மாயனும்
சக்ரா யுதமும் பணிலமுமே.

[சேல்மீன்களால் வளம் விளங்குகின்ற வயல்களையுடைய திருச்செங்கோட்டு மலைக்குரியவனாகிய முருகனது வாகனமாகிய செழிப்பான தோகையை உடைய மயில், ஆரவாரம் செய்து ஆதிசேடனது படங்களையுடைய தலையைத் தாக்க அதனால் அத்தலைகள் அதிர்ந்து அதிர்ந்து நடுங்க, அதுகாரணமாக அந்த மயிலின் காலில் கிடக்கும் பொருள்கள், மாணிக்கக் கூட்டமும், உலகைப் பாதுகாக்கும் திருமாலும், அவனுடைய, சக்கரப் படையும் சங்கும் ஆகியவை.

சேலின் – சேல் மீன்களால். செங்கோடை – திருச்செங்கோடு. வெற்பன் என்றது முருகனை. கலபி – தோகையையுடைய மயில். ஆலித்து – ஆரவாரம் செய்து. அனந்தன் – ஆதிசேடன். பணாமுடி – படங்களையுடைய தலை; பணம் – படம். ஆயிரம் படங்களாதலின் அதிர்ந்து அதிர்ந்து என்றார். காலில் – மயிலின் காலில். ராசி – கூட்டம். பாலிக்கும் – காப்பாற்றும். மாயன் – திருமால். பணிலம் – சங்கு.]

மயில் செருக்குடையவர்களை அடக்குவது என்பது கருத்து.

இது கந்தர் அலங்காரத்தில் 97–ஆவது பாட்டு.

கதியும் விதியும்

கணியன் பூங்குன்றனார் பாட்டு

தமிழ்நாட்டில் சொற்பொழிவு செய்கிறவர்கள், அதிலும் இலக்கியத் துறையில் சொற்பொழிவு ஆற்றுகிறவர்கள், அடிக்கடி சொல்கிற வரி ஒன்று உண்டு.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்''

என்ற அடியை எத்தனையோ இலக்கியச் சொற்பொழிவாளர்களிடம் நாம் கேட்டிருக்கிறோம். புறநானூறு என்ற சங்க நூலில் வரும் பாட்டு ஒன்றின் முதல் அடி அது. அதைப் பாடியவர் கணியன் பூங்குன்றன் என்ற சங்ககாலப் புலவர். பெரும்பாலும் அந்தப் பாட்டின் முதல் அடியை மாத்திரம் சொல்லி விட்டு விடுவார்கள். ''யாதும் ஊரே யாவரும் கேளிர், அடுத்த அடியை அப்பால் கேளீர்' என்ற முறையில் அதனை நிறுத்திவிடுவார்கள். ஆனால் அந்தப் பாட்டு உலகம் முழுவதும் ஒன்று என்ற நினைப்பை உண்டாக்குவதோடு, வேறு ஒரு கருத்தையும் வற்புறுத்துவதற்காக எழுந்தது. பாடினவர் சோதிடம் அறிந்தவர். கணி, கணியன் என்பன சோதிடனுக்குரிய பெயர். பூங்குன்றனார் என்ற அந்தப் புலவர் சோதிடம் நன்றாகத் தெரிந்தவர். முன்னை வினைப்பயனால் இந்தப் பிறவியில் வருகிற விளைவுகளை எல்லாம் ஒருவாறு தெரிந்து சொல்வது சோதிடம். ஆகவே சோதிட நூலுக்கு அடிப்படையாக நிற்பது விதி. விதியில் நம்பிக்கை இல்லாதவர்களுக்குச் சோதிடத்தில் நம்பிக்கை இராது. இந்திய நாட்டில் விதியின் வலிமையை வற்புறுத்திய பெரியவர்களில் திருவள்ளுவரும் ஒருவர். திருக்குறளில் ஊழ் என்று தனியே ஓர் அதிகாரம் வைத்திருக்கிறார். கணியன் பூங்குன்றனார் பாடிய பாட்டும் விதியை வற்புறுத்த வந்ததுதான். அவர் சொல்கிற கருத்தைக் கொஞ்சம் கேட்கலாம்.

உயிரும் விதியும்

"எமக்கு இதுதான் ஊர், இவர்தாம் சொந்தக்காரர் என்ற வேறுபாடு இல்லை. எல்லாம் எம் ஊரே. எல்லாரும் எமக்கு உறவினர்களே. யாம் பெறுகிற தீமையும், யாம் அடைகிற நன்மையும் பிறர் காரணமாக வந்தன என்று எண்ணுவது தவறு. யாம் வருந்துவதும் வருத்தம் தணிவதும் மற்றவர்களாலே வருவன அல்ல; அவற்றுக்குக் காரணம் வேறு ஒன்று. செத்துப் போவதுகூடப் புதிய காரியம் அன்று. அது இயற்கையாக அமைந்ததுதான். வாழ்வது மிகவும் இனிமை என்று எண்ணி மகிழ்ச்சி பெறும் இயல்பு எம்மிடம் இல்லை. ஏதாவது தீங்கு வந்துவிட்டால் கசப்புக்கொண்டு இது மிகவும் கெட்டது என்று சொல்லமாட்டோம். பெரியவர்கள் தம்முடைய அநுபவத்தினாலும், அறிவினாலும் நமக்குப் பலவற்றைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றில் மிகவும் முக்கியமானது விதி செய்யும் காரியம். அதுவே இன்பம் துன்பம், விருப்பு வெறுப்பு ஆகிய பல வகையான அநுபவங்களைப் பெறச் செய்கிறது. மலைப் பிராந்தியங்களில் மின்னல் மின்னி இடி இடித்துப் பெரிய மழை பெய்கிறது. அந்த மழை மலையிலிருந்து அருவியாக வந்து கரையை மோதிக் கொண்டு சம பூமியில் வந்து பெரிய ஆறாக ஓடுகிறது. புது வெள்ளத்தின் ஓட்டம் வேகமாக இருக்கிறது. அந்த ஓட்டத்தில் ஒரு தெப்பக் கட்டையைப் போட்டால் அது ஆற்றின் வழியே செல்லும். கொஞ்சம் வேகம் குறைந்தால் மெல்லப் போகும். வளைந்து போனால் வளைந்து போகும். எந்தத் திசையில் ஆறு போகிறதோ அந்தத் திசையில் புணை போகும். அது எதிர் நீச்சுப் போட்டுச் செல்வது கிடையாது. ஆற்று நீர் போகின்ற வழியே அந்தத் தெப்பக் கட்டையும் மிதந்து செல்லும். அதுபோல உயிரானது வாழ்க்கை என்னும் நதியில் விதி என்னும் ஓட்டத்திற்கு ஏற்பப் போய்க் கொண்டிருக்கிறது. அந்த விதிதான் எல்லாவற்றையும் செய்கிறது. இதனை அறிவுடையவர்களின் உபதேசங்களால் யாம் அறிந்திருக்கிறோம். ஆகவே, பெரியவர்களைப் பார்த்து, அவர்கள் மிகப் பெரியவர்கள், பெரிய காரியங்களைச் செய்தவர்கள் என்று யாம் வியக்க மாட்டோம். அது நியதி. ஒருகால் அவர்களை வியந்தாலும் சிறியவர்களைப் பார்த்து, அவர்கள் சிறிய செயல்களைச் செய்தார்கள்

என்று இகழ்வதை யாம் ஒருபோதும் செய்ய மாட்டோம். எல்லாவற்றுக்கும் மூலகாரணமான விதி ஓட்டத்தின் வழியே உயிர் இயங்குகிறது என்பதைத் திண்மையாகத் தெரிந்துகொண் டிருக்கிறோம்.''

இந்தப் பொருளை வைத்து அவர் பாடினார்.

''யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்னாது என்றலும் இலமே; மின்னொடு
வானம் தண்துளி தலைஇ ஆனாது
கல்பொருது இரங்கும் மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆர்உயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆகலின், மாட்சியின்
பெரியோர்ை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே.''

இந்தப் பாட்டில் உயிர்நாடியாக இருப்பது,

''பேர்யாற்று
நீர்வழி படூஉம் புணைபோல் ஆர்உயிர்
முறைவழிப் படூஉம்''

என்பதுதான். பெரிய ஆற்றினது நீர் ஓட்டத்தின் வழியே தெப்பக் கட்டை மிதந்து செல்வது போல, உயிரானது விதியின் வழியே தான் செல்லும் என்பது அதன் பொருள். இங்கே உயிரைத் தெப்பக் கட்டையாகச் சொன்னவர் விதியை நீரோட்டமாகச் சொன்னார். தண்ணீர் இல்லாமல் இருந்தால் ஆறாகாது. நீர் ஓட்டம் விதிக்கு ஒப்பானது. நீர் ஓட ஓட அது ஓர் வழியை வரையறுத்துக் கொள்கிறது. அதனால்தான் நதிக்கு ஆறு என்ற பெயர் வந்தது. விதி வாழ்க்கையை வரையறுக்கிறது.

இந்தப் பாட்டை இப்போது எண்ணியதற்குக் காரணம்: அருணகிரிநாத சுவாமிகள் இதுபோல் ஒரு பாட்டைக் கந்தர்

அலங்காரத்தில் சொல்கிறார். அவரும் விதியையும், நதியையும் எடுத்துச் சொல்கிறார். ஆனால் சற்றே வேறுபாடுள்ளது அந்தப் பாட்டு.

ஆற்றில் மிதப்பவன்

ஒருவன் ஒரு பெரிய மூட்டையைத் தலையில் சுமந்தபடியே நடந்து கொண்டிருந்தான். இருட்டில் நடக்கிறவனாகையால் இன்ன இடத்தின் வழியாகப் போகிறோம் என்ற நிதானம் அவனுக்குத் தெரியவில்லை. நடக்கிற இடம் சற்று மெத்தென்றும், தடையில்லாமலும் இருந்ததனால் போய்க் கொண்டே இருந்தான். அவன் போன இடம் ஒரு காட்டாறு. அந்த ஆற்றில் வெள்ளம் இல்லை. மணல் பரவியிருந்தது. அது மணல் பாதை என்று எண்ணி விட்டான். அப்போது திடீரென்று வெள்ளம் வந்தது. காட்டாறு ஆதலால் இன்ன சமயத்தில் வெள்ளம் வரும் என்று சொல்ல இயலாது. அது தோன்றிய இடத்தில் மழை அதிகமாகப் பெய்தமையினால் அங்கே உண்டான வெள்ளம் அவன் நடக்கும் இடத்திலும் வந்துவிட்டது. வேகமாக வெள்ளம் வரவே, பிரயாணி அதில் அகப்பட்டுக் கொண்டான். வெள்ளத்தின்மேல் மிதந்தான். வெள்ளம் வந்ததனால் நடப்பதற்கும், தலையில் மூட்டை இருந்ததனால் நீச்சல் அடிப்பதற்கும் வழியில்லை. எப்படியோ தட்டுத் தடுமாறித் தண்ணீரின் மேலே மிதந்து கொண்டிருந்தான்.

அவனிடமிருந்த மூட்டையின் பாரம் வேறு அமிழ்த்துகிறது. அலைமோதி அந்த மூட்டை நனைந்துவிட்டமையினால் அது முன்பு இருந்ததைவிடக் கனமாகத் தெரிகிறது. ஒன்று, அதைத் தூக்கி எறிந்துவிட்டு அவன் நீந்திப் போக வேண்டும்; அல்லது இறந்து போக வேண்டும். அவனோ அந்த மூட்டையை விட மனம் இல்லாமல் பற்றிக் கொண்டே இருக்கிறான். வெள்ளம் போய்க் கொண்டிருக்கிறது. அந்த வெள்ளத்தின் வழியே அவனும் போகிறான். மரங்களும், விலங்குகளும் அந்த வெள்ளத்தில் மிதந்து வருகின்றன. அவன் அவற்றின் மேல் மோதிக்கொள்கிறான். கரை எங்கே இருக்கிறதென்று தெரியவில்லை. இருட்டாகையால் திக்குத் தெரியவில்லை. ''எப்போது விடியும்? எப்போது கரையைக் காண்போம்?'' என்று ஏங்கிக் கிடக்கிறான்.

நதிக்குக் கரையிருக்கும். ஆனால் அது எங்கே இருக்கிறதென்று தெரிந்தால்தான் அதனைப் போய்ச் சேரலாம். தெரிந்தாலும் போதாது, முயற்சி பண்ணி அதை அடைய வேண்டும்.

அவனோ இருட்டில் இருக்கிறான். வெள்ளத்தில் மிதக்கிறான். போதாக் குறைக்குப் பெரும் மூட்டை அமிழ்த்துகிறது. முன் பின் போய்ப் பழகின ஆறாக இருந்தாலும், பழக்கத்தால் இன்ன இடத்தில் இருக்கிறோம் என்ற நினைவு இருக்கும். இதுவரைக் கும் போகாத இடம் அது. இப்போது அவன் என்ன செய்வான்? ''நான் எங்கே போய்க் கரை ஏறுவது என்று தெரியவில்லையே! கரை என்ற ஒன்று இருக்கிறதா இல்லையா என்றே தோன்ற வில்லையே!'' என்று கதறுகிறான். அந்த நிலையில் இருப்பவன் சொல்வதுபோல அருணகிரியார் இந்தப் பாட்டைப் பாடுகிறார்.

நதிதனை அன்ன வாழ்வு

நம்முடைய வாழ்வு பொய்யான வாழ்வு. பொய் என்பதற்கு இரண்டு பொருள உண்டு. உண்மை அல்லாதது, நிலையில்லாதது ஆகிய இரண்டையும் பொய் என்றே சொல்வார்கள். வடமொழி யில் மித்யை என்பதும் அதுதான். இந்த வாழ்வு நெடுங்காலம் நிலையாக நிற்பது அன்று. கணத்திற்குக் கணம் மாறுகிறது. ஒரே வகையான அநுபவமும், ஒரே வகையான செயல்களும் நமக்கு இருப்பது இல்லை. காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம், சார்புக்குச் சார்பு இவை மாறுகின்றன.

ஆற்றில் தண்ணீர் போய்க்கொண்டிருக்கிறது. எப்போதும் ஒரே அளவாகத் தண்ணீர் இருப்பது இல்லை. ஒரு கணம் பார்த்த தண்ணீர் அடுத்த கணத்தில் இருப்பது இல்லை. அது நெடுந்தூரம் போய்விடுகிறது. ஆனால் பொதுவாகப் பார்ப்பதற்கு நதியில் எப்போதும் ஒரே தண்ணீர் இருப்பது போலத் தோன்றுகிறது. ஏரியிலும், குளத்திலும் இருக்கும் தண்ணீர் அப்படி அப்படியே தேங்கி நிற்கிறது. ஆனால் ஆற்றில் இருக்கும் தண்ணீரோ அப்படியே இருப்பது இல்லை. ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருக்கும் தண்ணீர் அடுத்த கணத்தில் வேறு இடத்திற்குப் போய் விடுகிறது.

அதுபோல் வாழ்வில் நாளுக்கு நாள் அநுபவமும், பொருள் களும் மாறிக்கொண்டே இருக்கின்றன. நேற்றுப் பிறந்த அநுபவம் இன்று போய்விடுகிறது. புதியதாக அநுபவம் வருகிறது. கண நேரத்திற்கு முன்னால் தோற்றிய எண்ணம் அடுத்தகணம் நிலைத்து நிற்பது இல்லை. இப்போது புதிய எண்ணம் வந்துவிடுகிறது. நமது சிந்தனையும் கற்பனையும், விருப்பும் வெறுப்பும், இன்ப துன்பங்களும், நட்பும் பகையும், உணவும் உறக்கமும் கணத்திற்குக் கணம் மாறிக்கொண்டே போகின்றன. காலத்திற்குக் காலம் புதியனவாக வருகின்றன. கணந்தோறும் நம் வாழ்க்கை மாறிக் கொண்டிருக்கிறது. இந்த எண்ணத்தைக் கொண்டு பௌத்தர்கள் க்ஷணபவ பங்கம் என்ற கருத்தைச் சொன்னார்கள். 'உலகத்தில் எல்லாப் பொருள்களும் கணத்தில் தோன்றி மாறிவிடுகின்றன. வாழ்வும் அத்தகையதே' என்பதை எண்ணி அவர்கள் அப்படிச் சொல்லியிருக்க வேண்டும்.

ஏரியிலுள்ள தண்ணீர் நிலையாக நிற்பது போல நம் வாழ்வு நிற்பது இல்லை. ஆற்றிலுள்ள தண்ணீர் போய் விடுகிற மாதிரி நம் வாழ்க்கையும் போய்க்கொண்டிருக்கிறது. இந்த வாழ்வு ஆற்றுப் படுகை. விதி என்னும் நீர் ஓடுகிறது. அந்த நீரோட்டத்தில் நாம் ஆழ்ந்திருக்கிறோம். இரண்டு கரையும் நமக்குத் தெரியவில்லை. ஒரு கரை நல்ல கரை; மற்றொன்று தீய கரை. ஒரு கால் கரை யோரமாகப் போகிற வாய்ப்பு நமக்கு இருந்தாலும் அது தீய கரை யோரமாகப் போகிறதாகவே முடிகிறது. ஒரு கரையில் பூம் பொழில்கள் இருக்கின்றன; மற்றொரு கரையில் முள் புதர்கள் இருக்கின்றன. அந்தப் பூம்பொழிலே சொர்க்கம், நல்ல பிறவிகள்; முள் புதர்களாக இருப்பது தீய பிறவிகளும் நரகமும்.

இப்போதுள்ள வாழ்வில் நாம் செய்கிற காரியங்கள் மீண்டும் மீண்டும் இந்த வாழ்விலே நம்மை ஆழ்த்திவிடுகின்றன. ஒன்று நாம் கரையில் ஏற வேண்டும்; அல்லது சமுத்திரத்தில் போய்ச் சேர வேண்டும். நல்ல கரையில் சேர்ந்தால் நல்ல பிறப்புக் கிடைக்கும். தீய கரையில் சேர்ந்தால் தீய பிறப்புக் கிடைக்கும், இந்த இரண்டும் இல்லாமல், கரையைப் பற்றிய கவலையே இல்லாமல் இருக்க வேண்டுமானால் கடலைச் சார வேண்டும். அந்தக் கடல்தான் ஆண்டவன். கடலைப் போய்ச் சேர்ந்தபின் நதிக்கு ஓட்டம் இல்லை; கரையில்லை.

உடம்புப் பொதி

நீர் ஓடும் இடந்தான் நதி. மழைபெய்த தண்ணீர் வந்தால் ஆற்றுப்படுகை முழுவதும் பரந்து வெள்ளம் ஓடுகிறது. வெள்ள ஓட்டத்தில் அகப்பட்ட பிரயாணி பெரிய மூட்டையைச் சுமந்து கொண்டு வருந்துகிறான். அந்த மூட்டையே உடம்பு; பல வகையான நரம்புக் கட்டுகளால் அமைந்த உடம்பு, வாழ்க்கை என்னும் நதியில் நம்மை ஆழ்த்துகிறது. மிகவும் அருமையான பொருளை மடியில் வைத்துக்கொண்டு நடக்கிறவனுக்குத் தன் உடம்பின்மேல் காயம் பட்டாலும் கவலைப்படமாட்டான். அந்தப் பொருளுக்கு ஏதேனும் ஆபத்து வந்தால் அவன் அஞ்சுவான். அதுபோல் நாம் நம்முடைய உடம்புக்குத் தீங்கு ஏதாவது நேர்ந்தால் பதறிப்போகிறோம். இதனைப் பாதுகாப்பதில் நம் வாழ்நாளில் பெரும் பாகத்தைச் செலவழிக்கிறோம். அப்படிப் பாதுகாப்பதனால் இது நமக்கு நலம் செய்கிறதா என்றால், இல்லை. நம்மை வாழ்வில் ஆழ்ந்து போகுமாறு இது அமிழ்த்துகிறது. பெரிய மூட்டையாக, பாரம் பொருந்திய மூட்டையாக, இருந்து மீட்டும் மீட்டும் அச்சத்தை உண்டாக்கி இந்திரியங்களின் பசியை ஆற்றுவதற்குரிய செயல் செய்து பிறவியில் ஆழ்த்துகிறது.

இவ்வாறு வாழ்கிறோமே, இது நிலையான வாழ்வாக இருக்கிறதா என்றால் இல்லை; இது நிலையற்றது.

"நீரில் எழுத்தாகும் யாக்கை"

என்பர் குமர குருபரர். இது பொய் வாழ்வு. நதியிலுள்ள நீர் ஓரிடத்தில் நில்லாமல் ஓடிக்கொண்டிருப்பது போல இந்த வாழ்வு ஓடுகின்றது.

நதிதனை அன்ன பொய் வாழ்வில்

என்கிறார் அருணகிரியார்.

வாழ்க்கையில் பற்று

நதியில் அகப்பட்டுக் கொண்டவர்களுக்கு அந்த ஆற்றிலே அன்பு இருந்தால் பயன் இல்லை. ஒன்று, கரை சேர வேண்டுமென்ற எண்ணம் இருக்க வேண்டும்; அல்லது கடலைச் சார வேண்டுமென்ற எண்ணம் இருக்க வேண்டும். கடலைப் பற்றிய

எண்ணமே வருவதில்லை. கரையைப் பற்றிய எண்ணந்தான் இயல்பாக வரும். ஆனால் வாழ்க்கையில் ஈடுபட்ட மனிதனோ அடுத்த பிறவி நல்ல பிறவியாக வரவேண்டுமென்று எண்ணுவது இல்லை. பிறவியே இல்லாத கருணைக் கடலில் கலக்கவேண்டு மென்று எண்ணுவதும் இல்லை. இப்போதுள்ள வாழ்க்கையில் இன்னும் நெடுங்காலம் இருக்கவேண்டுமென்றே ஆசைப்படுகிறான்.

"நெடுநாள் இருந்த பேரும் நிலையாகவே இன்னும்
காயகற்பம் தேடி நெஞ்சுபுண் ஆவர்"

என்று தாயுமானவர் பாடுவார். இந்த வாழ்வில் அத்தனை அன்பு நமக்கு இருக்கிறது. உடம்பு எத்தனையோ துன்பத்தைத் தருவது, நோயைப் பெறுவது, பசி முதலிய குறைபாடுகளையுடையது. இது தெரிந்தும் இதனைப் போற்றி வாழ்கிறோம். நோய் வந்த உடம்பை விட்டுவிட்டு நீங்கிவிடலாம் என்ற எண்ணம் வருவது இல்லை. அழுகி ஒழுகும் உடம்பு உடையவர்களும், நினைத்தால் தற்கொலை செய்துகொள்வதற்குரிய வாய்ப்பு இருக்கவும், அவ்வாறு செய்வதில்லை. இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ என்ற அச்சமே காரணம்; அல்லது பழகின இந்த உடம்பிலுள்ள பற்று அவ்வாறு செய்ய விடுவதில்லை. இதையே நான் என்று நினைத்து வளர்த்து வருகிறோம். இப்படி அமைந்த உடம்பு நமக்கு நலம் செய்வதாக இருந்தால் குற்றம் இல்லை. இதுவோ நரம்பால் பொதிந்த பொதி. மாடு பொதி சுமந்தால் அதற்கு எந்தவிதமான லாபமும் இல்லை. பொதியினுடைய பாரம் கழுத்தை அமிழ்த்தும். அப்படித்தான் உயிருக்கு உடம்பு பெரும் துன்பத்தைத் தருகிறது. ஆனால் உடம்பைப் பாரம் என்றே நாம் எண்ணுவது இல்லை.

உடம்பில் அருவருப்பு

ஞானிகளுக்கு இந்த உடம்பே பெரிய பாரமாகத் தோற்றும்.

"ஊற்றைச் சரீரத்தை ஆபாசக் கொட்டிலை ஊன்பொதிந்த
பீற்றல் துருத்தியைச் சோறிடும் தோற்பையைப் பேசரிய
காற்றில் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல்செய்தே
ஏற்றுத் திரிந்துவிட் டேன்இறை வாகச்சி ஏகம்பனே"

என்று இந்தப் பாரம் தாங்காமல் பாடினார் பட்டினத்தார்.

உடற்பொறை என்று இதனைச் சொல்வார்கள். உயிருக்குப் பாரமாக இருப்பதனால் உயிர்ப்பாரம் என்றும் சொல்வது உண்டு. பரமன் இராமனைப் பிரிந்த ஏக்கத்தினால் இந்த வாழ்க்கையில் வெறுப்புக் கொண்டான். அவன் தன் உடம்பைப் பெரிய பாரமாகச் சுமந்தான்.

"உயிர்ப்பாரம் குறைந்து தேய"

என்று சொல்வதாகக் கம்பர் அமைக்கிறார்.

வாழ்க்கையில் இந்தச் சுமையைச் சுமந்து கொண்டுள்ள மனிதன் மீட்டும் மீட்டும் அந்த வாழ்க்கையில் அன்புடன் போய்க் கொண்டிருக்கிறான். சில சமயங்களில் அதனால் விளைகிற துன்பம் தெரிகிறது, அறிவாளிகளுக்கு. உண்மையான ஞானம் யாருக்குத் தலைப்படுகிறதோ அவர்களுக்கு முதலில் இந்த உடம்பிலே அருவருப்பு உண்டாகும். உயிர்க் கூட்டத்தினிடத்து அருவருப்பு அன்று; உலக வாழ்வில் அருவருப்பு.

அருணகிரிநாத சுவாமிகள் அந்த நிலையில் நிற்பவரைப் போலப் பேசுகின்றார்.

நதிதனை அன்ன பொய் வாழ்வில் அன்பாய் நரம்பால்
பொதிந்த
பொதிதனையும் கொண்டு திண்டாடுமாறு எனைப்
போதவிட்ட
விதிதனை நொந்து நொந்து இங்கே என்றன் மனம்
வேகின்றதே

என்கிறார்.

திண்டாட்டம்

இந்தப் பொய் வாழ்வில் உடம்பைச் சுமந்துகொண்டு போவதில் கொண்டாட்டம் இல்லையாம்; திண்டாட்டந்தானாம். பெரும்பாலும் உடம்பைச் சுமந்துகொண்டு பலர் கொண்டாட்டத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த உடம்பைப் பெருக்க வேண்டுமென்றும், இதன் கனம் ஏற வேண்டுமென்றும் ஆசைப்பட்டுக் கனம் ஏறிவிட்டால் கொண்டாட்டம் அடைகிறார்கள். அதிகமாகச் சுமையை ஏற்றிக் கொள்வதில் எந்த மாடாவது கொண்டாட்டத்தை அடையுமா? மாட்டுக்குள்ள அறிவுகூட நமக்கு

இருப்பது இல்லை. கனம் ஏற ஏற நமக்குக் கொண்டாட்டம் மிகுதியாகிறது. ஆனால் பெரியவர்களுக்கு இந்த உடம்பைக் கண்டு திண்டாட்டம் ஏறுகிறது. நரம்பால் பொதிந்த இந்த ஊற்றைச் சரீரத்தை அருவருக்கிறார்கள். பிறர் உடம்பில் நோய் வந்தால் அதைக் கண்டு அருவருக்கிறோம். மற்றவர்களுடைய உடம்பு அசுத்தமாக இருந்தால் அதைக் கண்டு அருவருக்கிறோம். ஆனால் அதே நோயும், அசுத்தமும் நம்மிடத்தில் இருக்கின்றன என்பதை மறந்துவிடுகிறோம். தோல் பளபளவென்று இருப்பதை மாத்திரம் கண்டு ஏமாந்து போகிறோம். சாக்கைத் திருப்பிப் போட்ட மாதிரி உடம்பின் உள்ளே இருப்பதை அறிவினால் திருப்பிப் போட்டு எண்ணிப் பார்த்தால் நம்மால் சகிக்க முடியாது. அந்த எண்ணம் யாருக்கு வருகிறதோ அவர்களுக்கு இந்த உடம்பினால் கொண்டாட்டம் உண்டாகாது; திண்டாட்டமே உண்டாகும். இத்தகைய திண்டாட்டம் நமக்கு ஏன் வந்தது? இந்த உலகத்தில் பிறந்ததனால். வாழ்க்கை என்னும் நதியிலே நாம் தத்தளிக்கிறோம். உடம்பாகிய சுமையைச் சுமந்துகொண்டு தத்தளிக்கிறோம். நமக்கு ஒரு புணையில்லை. கரையையும் காண வில்லை. இதிலே வந்து திண்டாடும்படியாக விட்ட காரணம் எது? அதுதான் விதி.

திண்டாடுமாறு எனைப் போதவிட்ட விதிதனை.

விதியை நோதல்

இந்த வாழ்வில் நாம் முன் செய்த நல்வினை, தீவினை ஆகியவற்றின் பலன்களை அநுபவிக்கிறோம். இந்த வாழ்க்கை ஓட்டத்தில் நம்மைப் புகுத்திவிட்டது விதி, அல்லது ஊழ். அந்த ஊழ்வினையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். எவ்வளவோ சமயங்களில் தலைவிதி என்று நாம் நொந்துகொள்வதில்லையா? நாம் ஏதேனும் துன்பம் அடைந்தால் அப்போதுதான் நொந்து கொள்கிறோம். துன்பம், இன்பம் என்ற இரண்டுமே இந்த உடம்பிலுள்ள ஐந்து இந்திரியங்களின் அநுபவங்கள். அந்த இரண்டையும் அடைகின்ற இந்திரியங்களும், அவற்றுக்கு இடமாகப் பெரிய சுமையாக இருக்கும் உடம்புமே விதியினால் வந்த விளைவு. இந்த உடம்பே இல்லாவிட்டால் துன்பமே இல்லை; இன்பமும் இல்லை. எல்லாவற்றுக்கும் மூலமாக, இடமாக

இருக்கிற இந்த உடம்பைத் தந்தது விதி. அதைத்தான் நொந்து கொள்ள வேண்டும்.

விதிதனை நொந்துநொந்து இங்கே
என்றன்மனம் வேகின்றதே.

வாழ்க்கையில் நாம் பிரயாணம் செய்து கொண்டிருந்தாலும் இறைவன் திருவருளால் நமக்கு அறிவு என்ற ஒன்று கிடைத் திருக்கிறது. முன்னாலே பட்ட துன்பத்தையும், அதைக் கொண்டு இனி வருகின்ற விளைவினையும் எண்ணிப் பார்க்க நமக்கு அறிவு இருக்கிறது. அந்த அறிவினால் எண்ணிப் பார்க்க வேண்டும். நம் முடைய துன்பங்களுக்கு யார் யாரோ காரணம் என்று எண்ணித் தடுமாறுகிறோம்; அது தவறு. யாரையும் நொந்து கொண்டு பயன் இல்லை.

புகலிடம்

இப்படியே போய்க் கொண்டிருக்கிற வாழ்க்கைக்குப் புகல் இடம் ஒன்று வேண்டும். 'விதியினால் நதி போன்ற வாழ்வில் நரம்புப் பொதியாகிய உடம்பைச் சுமந்து திண்டாடுகிற எனக்குக் கதி ஒன்று வேண்டுமே; எந்தக் கதியினையும் காணவில்லையே!' என்று சொல்கிறார் அருணகிரிநாதர்.

கதிதனை ஒன்றையும் காண்கின்றிலேன்.

கதி என்பது புகலிடம். நதியில் போகிற பொருளுக்கு மூன்று கதி உண்டு; இரண்டு கரைகள், முடிவிடம் ஆகியவை. நாம் பிறக்கும் பிறப்பு வகையைக் கதி என்று சொல்வார்கள். நல்ல கதி, கெட்ட கதி ஆகிய இரண்டும் கரைகள்; நல்ல பிறப்பு ஒரு கரை; கெட்ட பிறப்பு ஒரு கரை. இந்த வாழ்வுக்குப் பிறகு ஏதேனும் பிறப்பு எடுத்தால் இதிலும் உயர்ந்ததாக இருக்கலாம்; அல்லது இதிலும் தாழ்ந்ததாக இருக்கலாம். இந்த இரண்டு கரைகளையும் சாராமல் நேரே கடலில் போய்க் கலப்பதும் உண்டு. கடலில் கலந்தால் மீட்டும் திரும்புவது இல்லை. அப்படி இறைவனோடு ஒன்று கலந்த ஆருயிர் மீட்டும் இந்தப் பிறவியில் புகாது.

இப்படி மூன்று வகையான கதிகளும் உயிருக்கு உண்டு. பெரும்பாலான உயிர்கள் தாழ்ந்த பிறப்பை அடைகின்றன. சில உயிர்கள் உயர்ந்த பிறப்பை அடைகின்றன. மிகச் சில உயிர்களே

முடிந்த முடிபாக ஆண்டவனாகிய கருணைக் கடலோடு ஒன்றுபடுகின்றன.

கதிதனை ஒன்றையும் காண்கின்றிலேன்!

மூன்று கதியில் மிக உயர்ந்த கதி இறைவனோடு கலக்கிறது. 'அந்தக் கதி எனக்கு இப்போது தோன்றவில்லையே!' என்று புலம்புகிறார்.

கந்தா

முருகனை விளித்துப் புலம்புகிறார்; ''முருகா, நீ கந்தனாகத் தோன்றினவன் அல்லவா? கங்கையில் வந்த பிறகு, சரவணப் பூம் பொய்கையில் மிதந்து அங்கே திட்டில் பிரிந்து நின்ற திருமேனி ஆறும் ஒன்றாக உமா தேவியால் அணைக்கப் பெற்றுக் கந்தன் என்ற திருநாமத்தை அடைந்தவன் அல்லவா? ஆற்றில் வந்து, பொய்கையில் மிதந்து, மேட்டில் ஏறி உலகத்திற்கு நலம் செய்யும் ஒரு திருமேனியைப் படைத்த நீ, இந்தப் பொய் வாழ்வில் ஓடுகிற ஓட்டத்தைத் தடுத்து என்னையும் நிலையாக நிறுத்த வேண்டும்'' என்கிறார். இந்தக் குறிப்பை வைத்து,

கந்த

என்றார்.

வேல் முருகா

இருட்டில் ஆற்றில் நடக்கிறவன் அல்லவா இந்தப் பிரயாணி? அந்த இருட்டுப் போவதற்கு ஒளி வேண்டும். சூரியன் தோன்றினால் கரை கண்ணில் படும். அதை அடைய வேண்டும் என்ற எண்ணம் உண்டாகும். இப்போது இரவில் மிதந்து கொண்டிருக்கிறான். இரவு என்பது அறியாமை. 'நம் உடம்பு நமக்குச் சுமை; இந்த வாழ்வு நம்முடைய புண்ணிய பாவ வினைகளின் விளைவாக உண்டாக்கியது. இந்த வாழ்வுக்கு அப்பால் பிறப்பற்ற இன்பம் ஒன்று உள்ளது' என்ற எண்ணங்கள் அறிவு உடையவனுக்குத்தான் தோற்றும். இவற்றை எண்ணாமல் நாம் பெற்ற பொருளைப் பெரிதாக, நிலையுடையது போல, எண்ணச் செய்வது அறியாமை. அறியாமை நீங்கினால் நம் நிலை புலப்படும். துன்பப்படுகிறவனுக்கு, இன்பம் ஒன்று உண்டென்ற எண்ணம் வேண்டும். பின்பு அதை அடையும் முயற்சி வர வேண்டும்.

எல்லாவற்றுக்கும் மூலமாக, நம் நிலையை உணர்ந்து கொள்ளச் செய்யும் ஒளி வேண்டும். முருகன் அறியாமையாகிய இருளை நீக்குகின்ற ஞான ஒளியுடையவன். அவன் ஞான பண்டித சாமி. ஞானமே உருவமாக உள்ள வேலைத் தன் திருக்கரத்தில் வைத்திருக்கிறான். அது அடியார்களது உள்ளத்திலுள்ள அறியாமை இருளைப் போக்கி, நலம் செய்கிறது. ஆகவே இருட்டில் ஆற்றில் சுமையோடு மிதக்கின்ற மனிதன், மேட்டில் விளக்கை வைத்துக் கொண்டிருக்கும் பெரியவரைப் பார்த்து, ''அப்பனே, என்னைக் கரையேற்ற வேண்டும்; ஒளி காட்ட வேண்டும்'' என்று சொல்வதைப் போல,

கந்த, வேல்முருகா!

என்றார்.

வினையால் அமைந்த வாழ்க்கையில் இறுதியே இல்லாமல் பிரயாணம் செய்யும் ஆருயிர் அறிவு பெற்று, முதலில் உடம்பு பெரும் சுமை என்பதை உணர்கிறது. பின்பு இதற்கு முடிவு ஒன்று வேண்டுமென்ற எண்ணம் கொள்கிறது. தன் துன்பங்களுக்குக் காரணம் அயலார் என்ற எண்ணம் மாறி, விதி என்ற உண்மையைத் தெரிந்து கொள்கிறது. பின்பு இந்த நதி போய்ச் சங்கமம் ஆகும் இடமாகிய கடல் ஒன்று உண்டென்பதை உணர்ந்து அதனைச் சார்வதற்கு ஆசைப்படுகிறது. இந்த எண்ணங்களை இந்தப் பாட்டுச் சொல்கிறது.

★

கதிதனை ஒன்றையும் காண்கின்றி
லேன்கந்த! வேல்முருகா!
நதிதனை அன்னபொய் வாழ்வில்அன்
பாய்நரம் பால்பொதிந்த
பொதிதனை யும்கொண்டு திண்டாடு
மாறுஎனைப் போதவிட்ட
விதிதனை நொந்துநொந்து இங்கேஎன்
றன்மனம் வேகின்றதே.

[கந்த வேளே, வேலாயுதம் கொண்ட முருகப்பெருமானே, அறிவில்லாத யான் புகலிடம் எதனையும் அறிந்திலனே! ஆற்றைப் போன்ற

நிலையற்ற வாழ்க்கையிலே விருப்பம் உடையவனாய், நரம்பினால் கட்டியிருக்கும் உடம்பாகிய பாரத்தையும் சுமந்து கொண்டு அல்லற்படும் படி என்னைப் போகவிட்ட விதியைப் பலகால் நொந்துகொண்டு இவ்வுலகில் என் மனம் வருந்துகிறதே! இனி யான் என் செய்வேன்!

கதி – புகலிடம்; ''கதியாய் விதியாய்'' என்று அநுபூதியில் வருகிறது. காண்கின்றிலேன்; காணல் – இங்கே அறிதல். கந்தன்: பார்வதி தேவி முருகனுடைய உருவங்கள் ஆறையும் ஒன்றாக்கி அணைத்தாள். அப்போது கந்தன் என்னும் திருநாமம் முருகனுக்கு அமைந்தது.

"சரவ ணந்தனில் தனதுசேய் ஆறுருத் தனையும்
இருக ரங்களால் அன்புடன் எடுத்தனள் புல்லித்
திருமு கங்கள்ஓர் ஆறுபன் னிருபுயம் சேர்ந்த
உருவம் ஒன்றெனச் [illegible]னள் உலகம்ஈன் றுடையாள்."

"[illegible] கதிகள் உயிரெலாம் ஒடுங்குறும் எல்லை
முந்து போலஒன் றாகியே கூடிய முறைபோல்
அந்தம் இல்லதோர் மூவிரு வடிவும்ஒன் றாகிக்
கந்தன் என்றுபேர் பெற்றனன் கவுரிதன் குமரன்"

என்று கந்த புராணம் கூறும்.

பொதி – சுமை. அன்பு என்பதை வாழ்வுக்கும் ஆக்கலாம்; பொதிக்கும் சார்த்தலாம். திண்டாடுதல் – நிலையின்றி அலைந்து துன்புறுதல். போத – செல்ல. இங்கே – இவ்வுலகில். வேதல் – துன்பத்தால் புழுங்குதல்; அதனால் துன்பத்தைத் தாபம் என்று வடமொழியில் கூறுவர்.]

விதியின் விளைவாகிய வாழ்க்கையினின்றும் ஏறி இன்ப வாழ்வை அடைவதற்கு முருகனே புகலிடம் என்பது கருத்து.

இது கந்தர் அலங்காரத்தில் 98–ஆவது பாட்டு.

கொழு கொம்பு

கூடி வாழ்தல்

'மனம் வேகின்றதே' என்று வருந்திய அருணகிரி நாதர் மறுபடியும் தம்முடைய மனம் பதைக்கின்றதைப் பற்றிப் பாடுகிறார்.

உலகம் முழுவதும் மக்கள் கூடியிருக்கிறார்கள். எத்தனையோ விதமான கருவிகளை வைத்துக்கொண்டு அவர்கள் தங்கள் செயலைச் செய்கிறார்கள். கூட்டம் கூட்டமாக வாழ்வது மனிதர்களுக்கு இயல்பு. ஊர் என்றும், நாடு என்றும், சமுதாயம் என்றும் பெயர் சொல்லிக் கூடிக்கொண்டு வாழ்கிறார்கள். இடையிடையே சண்டை போட்டாலும் பெரும்பாலும் கூடிக்கொண்டுதான் எல்லாக் காரியங்களையும் செய்கிறார்கள். ஒருவருக்கு ஒருவர் துணை நின்று பல காரியங்களைச் செய்து கொள்கிறார்கள். இருவர் கூடியும், மூவர் கூடியும், பலர் கூடியும், ஆயிரக் கணக்கில் மக்கள் கூடியும், காரியத்திற்கு ஏற்றபடி துணையைப் பெற்று, உலகத்துச் செயல்களை எல்லாம் நிறைவேற்றிக் கொள்கிறார்கள். ஆகவே, எங்கே பார்த்தாலும் நாம் செய்யும் காரியத்திற்குத் துணையாக, நம்முடைய செயலுக்கு உதவி செய்பவராக, பலர் இருப்பதைக் காண்கிறோம். இவை எல்லாம் உலக வாழ்வுக்குச் சரிதான்.

பிறர் உதவி

சாப்பாடு சாப்பிட வேண்டுமானால் வேறு சிலரை நாடி அவர்களது உதவியைப் பெற்று உண்ணலாம். ஏதேனும் ஒரு சுமையைத் துக்கிக் கொண்டு போக வேண்டுமானால் இன்னும் இரண்டொருவரைப் பிடிக்கச் சொல்லித் தூக்கிக்கொண்டு போகலாம். ஆற்றுக்குப் பாலம் கட்ட வேண்டும்; காட்டுக்குப் பாதை போட வேண்டும்; வீடு கட்ட வேண்டும்; மதில் எடுக்க

வேண்டும்; கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்; கல்வி கற்க வேண்டும். – இப்படி வருகிற சமுதாய வேலைகளுக்குப் பலர் முயன்று பணம் திரட்டி, பல மனிதர்களையும் கூட்டி அந்த அந்த வேலைகளைச் செய்து மக்களை வாழ வைக்கிறார்கள். இவை யாவுமே உலகியல் வாழ்வு. இவற்றில் ஒருவர் மற்றொருவருக்கு உபகாரமாக இருந்து துணை செய்யலாம்.

ஆன்ம நெறி

ஆனால் உயிர் வாழ்வாகிய ஆன்ம நெறியில் தாம் தாமே முயன்றாலொழிய வேறு வகையில் நன்மை பெற இயலாது. தொண்டர் கூட்டத்தில் கலந்து அவர்களுடைய பழக்க வழக்கங்களைத் தெரிந்து கொள்வதனால் நமக்கு அறிவு விளக்கம் உண்டாகுமே யொழிய அநுபவம் வாராது. அதற்குச் சொந்த முயற்சி வேண்டும். இதனை முன்பும் பல முறை நாம் நினைவு படுத்திக்கொண்டிருக்கிறோம்.

உயிர் செல்லுகின்ற பயணத்தில் இந்த உடம்பு இருக்கிற வரைக்கும் சிலர் கூடி ஒன்றுபடலாம். ஆனால் இந்த உடம்பை விட்டு வேறு உடம்பை இந்த உயிர் எடுக்கும்போதும், நரகம் சொர்க்கமாகிய அநுபவங்களைப் பெறும்போதும் இப்போது நமக்கு யார் துணையாக இருக்கிறார்களோ அவர்கள் துணையாக இருக்க முடியாது. ஓரிடத்தில் துணையாக நிற்பவர் மற்றோரிடத்தில் துணையாக நிற்க இயலாது. சாலையில் மோட்டாரில் போகிற வரைக்கும் மோட்டாரோட்டி துணையாக இருப்பார்; ஆற்றில் அவர் துணை பயன்படாது; ஓடம் ஓட்டியின் துணை வேண்டும். எத்தனை பணம் இருந்தாலும், மனிதக் கூட்டு இல்லாமல் எத்தனை காரியங்கள் தடைப்பட்டிருக்கின்றன! அங்கே பணம் இருந்தாலும் மக்கள் இல்லாமையினால் குறை நேருகிறது. மனைவியினால் செய்வதற்குரிய காரியம் சில; மக்களால் செய் வதற்குரிய காரியம் சில; குருவினால் கிடைக்கிற நலம் சில. இப்படி ஒவ்வொரு காரியத்திற்கும், ஒவ்வோர் இடத்திற்கும், ஒவ்வொரு காலத்திற்கும் ஏற்றபடி துணைகள் அமைகின்றன.

பெரிய துணை

எல்லாக் காலத்துக்கும், எல்லா இடத்திற்கும், எந்த நிலைக் கும் ஒத்தபடி நம்முடைய உயிருக்குத் துணையாக யாரேனும்

வரக்கூடும் என்றால் அவர் நம்முடைய உயிரோடு ஒட்டியவராக இருக்க வேண்டும். இப்போது நம்முடைய உயிரோடு ஒட்டியது உடல் என்று தோன்றுகிறது. ஆனால் இந்த உடலையும் உதைத்து விட்டு உயிர் தனியே போய்விடுகிறது. அப்போது இந்த உடம்பி னால் நமக்குப் பயன் இல்லை. உயிரோடு என்றும் ஒட்டி, அது செல்லும் இடங்களில் எல்லாம் துணையாக நிற்பவர் யாரேனும் உண்டா என்று ஆராய்ச்சி செய்ய வேண்டும். உயிருக்கு உயிராக இருக்கும் இறைவனே அத்தகைய பெரிய துணையாக வருவான். அவன்தான் எல்லாக் காலத்தும், எல்லா இடத்தும், எல்லா உயிர்களுக்கும், எந்த நிலையிலும் துணையாக நிற்பவன். அவன் நம்மைப் பற்றிக் கொண்டிருக்கிறான். அது போதாது. நாம் அவனை இறுகப் பற்றிக்கொள்ள வேண்டும். அவனுடைய திருவடி யாருக்குத் துணையாகக் கிடைக்கிறதோ அவர்கள் என்றும் குன்றாத இன்பத்தை அடைவார்கள்.

ஆதாரமும் ஆதேயமும்

வேறு ஒருவரைத் துணையாக எண்ணி வாழ்ந்தால் அவருக்கு வலிமை குறையும்போது அவரால் ஒரு பயனும் இல்லாமல் போய்விடுகிறது. ஆதாரமாக இருக்கிற பொருள் பலம் அற்றுப் போனால் அதன்மேல் இருக்கும் ஆதேயப் பொருளுக்கும் ஆபத்து வந்துவிடும். மாடி மீது பொருள்களை நிரப்பி வைத்திருக்கி றோம். மாடித் தளம் இடிந்துவிட்டால் அந்தப் பொருள்கள் கீழே விழுந்து விடும். உலகத்திலுள்ள எல்லாவகையான துணைகளும் இப்படியே ஒரு காலத்தில் விழுந்துவிடும். ஆகையால் அழியாத் துணை எதுவும் இந்த உலகில் இல்லை. என்றைக்கும் அழியா மல் இருக்கிற சச்சிதானந்த சொரூபியாகிய ஆண்டவன் ஒருவன் தான் ஆருயிர்களுக்கு அழியாத் துணையாக இருக்கிறான். அந்தத் துணையைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு எல்லாக் காலத்திலும் இடர் இல்லாமல் வாழும் வாழ்வு கிடைக்கும்.

பக்தர்கள்

அத்தகைய துணையைப் பெற வேண்டும் என்ற ஆசை யையே பக்தி என்று சொல்வார்கள். ''உலகத்தில் வேறு யாரும் துணையில்லை; நீ தான் துணை'' என்று ஆண்டவனுடைய திருவடியைப் பற்றிக்கொள்கிறவர்கள் யாரோ அவர்களே பக்தர்கள்.

''நின் சரணல்லால் சரணில்லை''

என்று புகல் அடைந்தார்கள் ஆழ்வார்கள்.

இந்த எண்ணங்களை மனத்தில் வைத்துக்கொண்டு அருண கிரியார் தம் மனம் வாடிப் பதைப்பது போல ஒரு பாட்டைச் சொல்கிறார்.

★

அருணகிரியார் விண்ணப்பம்

துணை எதுவும் இல்லாமல் தன்னந் தனியாக நாம் நிற்கிறோம். துணை இல்லை என்று சொல்வதைவிடத் துணை இருப்பதை அறிந்துகொண்டு பற்றிக்கொள்ளவில்லை என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். அறிவு இல்லாதவன் என்று சொல்வதைவிட அறிவை வெளிப்படுத்திப் பயன்கொள்ளாதவன் என்று சொல்வது பொருத்தம். எல்லோரிடமும் அறிவு இருக்கிறது. ஆனால் அதை வெளிப்படுத்திப் பயன்கொள்பவர் சிலரே. கல்வி என்பது அந்த அறிவைத் தூண்டித் தீய குணங்களைக் களைந்து நற்குணங்களை மலரச் செய்கிறது. அதுபோலப் பக்தி என்ற உணர்ச்சி இறைவனுடைய அருள் துணையை விளக்க மாக்கி நலம் செய்கிறது. அந்த உணர்ச்சி இல்லாதவர்கள், ஒவ் வொரு துணையாக நம்பி வாழ்ந்து அந்தத் துணைகள் எல்லாம் இறுதியில் பயன் அற்றுப் போக, ''நான் துணையில்லாமல் நிற்கிறேனே!'' என்று வாடுவார்கள். அந்த நிலையில் இருந்து அருணகிரியார் பேசுகிறார். ''எம்பெருமானே, பற்றிக் கொள் வதற்கு எந்தத் துணையும் இல்லாமல் நான் வாடுகிறேன். தாவிப் படர்வதற்குக் கொழுகொம்பில்லாத கொடிபோல என் மனம் தள்ளாடி வாடிப் பதைக்கின்றது'' என்கிறார்.

தாவிப் படரக் கொழுகொம்பு இலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனம் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.

கொடியும் பந்தரும்

கொடி எப்போதும் படரும் தன்மையுடையது. அதற்கு ஆதாரமாக மண் இருந்தால் மாத்திரம் போதாது. அது வளர்ந்து

நிலத்தில் படர்ந்தால் நல்ல காய் காய்த்து வளப்பமாக இராது. அது மேலே பந்தலில் ஓடிப் படர வேண்டும். பந்தலில் நன்றாகப் படர்கிற கொடி கொத்துக் கொத்தாகக் காய் காய்த்து நல்ல பயனைத் தரும். பந்தருக்கும், கீழே உள்ள கொடிக்கும் இணைப்பாக இருப்பது கொழுகொம்பு. கொழுகொம்பைப் பற்றி மேலே மெல்ல ஏறி, பின்பு பந்தரில் படரும் கொடி மண்ணின் உரத்தை யும், காற்றின் வளத்தையும், கதிரவனின் சக்தியையும் ஏற்றுக் கொண்டு நன்றாகப் படர்ந்து பயனைத் தரும். அப்படியின்றிப் பந்தல் இருந்தாலும், வளம் பொருந்திய மண்ணில் கொடி தோன்றினாலும், பந்தருக்கும் பூமிக்கும் இணைப்பாக ஒரு கொழுகொம்பு இல்லாவிட்டால் கொடி கீழே படர்ந்து பலரால் மிதிக்கப்பெற்று அழிவுறும்.

மனம் உயர்தல்

மனம் கொடி போலப் பதைக்கிறது என்று சொன்னார். மனிதனுடைய மனம் வரவர உயர வேண்டும்.

"உள்ளுவ தெல்லாம் உயடர்வுள்ளல்"

என்று வள்ளுவர் சொன்னார். உயர்ந்த பொருளைப் பற்றிக் கொண்டு உயர வேண்டும். மேலுள்ள பொருளை நாடி நாம் மேலே ஏறுகிறோம். மாடியின் உச்சிக்கும், மலையின் மேலும் நாம் ஏறுவதற்குக் காரணம் நாம் இருக்கும் இடத்தைவிட உயர்ந்த இடத்தைப் போய் அடைய வேண்டுமென்ற ஆசைதான். அப்படி, மனம் மேலேயுள்ள பந்தரைப் போன்ற சிறந்த பொருளை அடையவேண்டுமென்று எண்ணி முயல வேண்டும். அந்த முயற்சிக்குக் கொழுகொம்புபோலப் பெரியவர்கள் வருகிறார்கள். குருவினுடைய உபதேசம் நமக்குப் பயன்படுகிறது. பந்தர் ஆண்டவனுடைய அருள் நலம் என்று சொன்னால் அந்தப் பந்தருக்குக் கொடியை ஏற்றிவிடுகின்ற கொழுகொம்பு நல்லவர் களுடைய உபதேசம் என்று சொல்லலாம்; அல்லது அடியார் களுடைய தொடர்பு என்று சொல்லலாம். அவை எல்லாம் இறைவனுடைய திருவருளால் வருவன. ஆண்டவனுடைய திருவருளால் அவனோடு இணைகின்ற இன்பம் கிடைக்கும். ஒருவகையில் பார்த்தால் அருளாகிய கொழு கொம்பைப் பற்றிக் கொண்டு இன்பமாகிய பந்தரில் படர வேண்டும்.

உள்ளத்துக்கும் உயிருக்கும் உள்ள ஒற்றுமை

மனத்திற்கும் உயிருக்கும் வேறுபாடு தோன்றுவது இல்லை. சில சமயங்களில் உயிர் என்ற பொருளில் உள்ளம் என்ற சொல்லைச் சித்தாந்த நூல் பயன்படுத்துகிறது. ''நான் பதைக்கிறேன்'' என்பதை, ''என் மனம் பதைக்கிறது'' என்று சொல்வதும் ஒரு சம்பிரதாயம். தனக்கும் மனத்திற்கும் இருக்கும் நெருங்கிய தொடர்பை யொட்டித் தன்னுடைய அநுபவங்களை மனத்தின் அநுபவமாக்கிச் சொன்னார் என்று சொல்லலாம்.

மேலே உயர்ந்திருக்கிற பந்தரில் கீழே வாடிப் பதைக்கின்ற கொடி தானாகவே ஏற முடியாது. பந்தருக்கும், பூமிக்கும் இணைப்புப் போல ஆண்டவனுடைய திருவருள் வரவேண்டும். ஆண்டவனுடைய திருவருளுருவமாக இருக்கிற திருவடியை எண்ணுகிறார். ஆண்டவனுடைய திருவடி, பூமியில் நடந்து இங்கேயுள்ள குழந்தைகளை எல்லாம் பற்றிக்கொள்ளச் செய்து மேல் நிலைக்கு ஏற்றுவது.

திருவடி

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருள்வாய்

என்று வேண்டுகிறார். ஆண்டவனுடைய செங்கமலப் பாதம் மக்களை உயர்ந்த நிலைக்கு ஏற விடுவது. பிறவிப் பெருங்கடலுக்குப் புணையாக உதவுவது அது. ஆண்டவனுடைய பாதம் பூமியில் பதிகின்றது. பொதுவாகத் தேவர்களுடைய பாதம் மண்ணில் பதியாது என்று சொல்வார்கள். அவர்கள் வானுலகத்தில் வாழ்கிறார்கள். இறைவனோ தேவர்களுக்கெல்லாம் பெரிய தேவன். அவனுக்கும் திருவடி நிலத்தில் பதியாமல் இருப்பதே இயல்பு. ஆனால் அவன் பூமியிலுள்ள உயிர்கள் வாழ வேண்டுமென்று கருதிப் பூமியில் திருவடி வைத்து நடக்கிறான். நமக்கு அவனுடைய திருவுருவம் முழுவதையும் கண்டு அறிவதற்குரிய ஆற்றல் இல்லை. நேரம் இல்லை. நமக்கு அண்மையில் இருப்பது அவன் திருத்தாள் தான்.

''வேதங்கள் அறைகின்ற உலகெங்கும் விரிந்தனநின்
பாதங்கள் இவைஎன்னில் படிவங்கள் எப்படியோ''

என்று கம்ப ராமாயணம் பாடுகிறது. இறைவன் திருவடி எங்கும் படர்ந்திருக்கிறது. நமக்கும் அந்தத் திருவடிக்கும் நெருக்கம் அதிகம். அப்படி நெருங்கிய திருவடியை மறந்து அதனோடு சாராமல் ஒதுங்கி நிற்கிறோம்.

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தாற் கல்லால்
மனக்கவலை மாற்ற லரிது''

என்று வள்ளுவர் சொன்னார். தனக்கு ஒப்பு இல்லாத ஆண்ட வனுடைய பாதாரவிந்தங்களைச் சேர்ந்தாலன்றி மனத்திலுள்ள கவலை யாருக்கும் போகாது என்பது பொருள். இங்கே, சேர்வது என்பதற்கு மனத்தில் தியானித்தல் என்று பரிமேலழகர் பொருள் எழுதுவார். ஆண்டவனை நாம் சார்ந்து நிற்பதாவது, நம்முடைய மனத்தில் அவன் திருத்தாளை எண்ணித் தியானம் செய்வது. அது கண்ணுக்குப் புலனாவது அன்று; கருத்துக்குப் புலனாவது.

கொழுகொம்பு இலாத தனிக்கொடிபோல்.

மனத்திற்கு, உயிருக்கு; கொழுகொம்பாக ஆண்டவன் கழல் விளங்குகிறது. அந்தக் கழல் நமக்கு அணிமையாக நின்றாலும் ஞானசொரூபமாக இருந்து பின்பு மோட்ச சாம்ராஜ்யமாக விளங்கும்.

''தொண்டர் கண்டு அண்டி மொண்டு உண்டிருக்கும் சுத்த
ஞானமெனும்
தண்டையம் புண்டரிகம்''

என்று அலங்காரத்தில் வருகிறது. அங்கே ஆண்டவனுடைய திருவடி ஞான மயமாக இருக்கும் என்று சொல்கிறார். ஞானந் தான் மோட்ச இன்பத்தைப் பெறுவதற்குரிய வழி. எது வழியாக இருக்கிறதோ அதுவே முடிந்த முடிபாக நிற்கிறது. இது ஆண்ட வனுடைய அருளால் விளைகிற ஆச்சரியம்.

''பொக்கக் குடிலிற் புகுதா வகை புண்டரீகத்தினும்
செக்கச் சிவந்த கழல்வீடு தந்தருள்''

என்பதில் பாதமே மோட்சமாக இருக்கும் என்று சொல்கிறார். உலகத்திலுள்ள உயிர்களுக்கு முதலில் தியானிப்பதற்குரிய பொருளாகிச் செந்தாமரை போல விளங்குவது ஆண்டவனுடைய திருத்தாள். அதுவே பிறகு அறியாமையைப் போக்கிப் பொருளின்

தன்மையை நன்றாகக் காட்டும் ஞானமாகவும் நிற்பது. அதற்கு மேல் பக்தர்களுக்கு அந்தப் பூங்கழலே மோட்சமாக உதவுவது. எனவே, பற்றிக் கொள்வதற்கும், மேல் ஏறுவதற்கும், மேலே போய்த் தங்குவதற்கும் வெவ்வேறு பொருள்கள் வேண்டாம். எது அடி நிலையில் நாம் பற்றிக் கொள்ளும் பொருளாக நிற்கிறதோ அதுவே நம்மை மேலே ஏற்றும் ஏணியாகவும், அப்பால் படுத்துறங்கும் படுக்கையாகவும் இருக்கிறது.

ஆண்டவனுடைய திருத்தாள் மனிதனுடைய தாளைப் போல ஊன் நிரம்பிய பொருளன்று. அது ஒரு தத்துவம். எல்லா வற்றுக்கும் மூலமாக நிற்பது அவன் தாள்தான். எல்லாவற்றுக்கும் முடிவாக நிற்பதும் அது. அந்தப் பொருள் எல்லாவற்றையும் தாங்குகிறது. எல்லாவற்றுக்கும் மேலே நிற்கிறது. அடி என்ப தற்கு அஸ்திவாரம் என்பது ஒரு பொருள். உலக தத்துவங்களுக்கு எல்லாம் மூலப் பொருளாகவும், அடியாகவும் நிற்பது ஆண்ட வன் திருத்தாள். அது அடியாக மாத்திரம் அன்று; மிக உயர்ந்த பொருளாகவும் நின்று நீண்ட கொம்பாக உதவுகிறது. அதைப் பற்றிக் கொண்டவர்கள் மெல்ல அதன் மேல் ஏறி உயர்ந்த இன்பத்தை அடைவார்கள். மற்றத் துணைகளை நம்பி அவற்றால் உயிருக்கு யாதொரு பயனும் இல்லாமல் சோர்ந்துபோய், என்றைக்கும் துன்பம் இல்லாமல் வாழவைக்கும் துணை எங்கே இருக்கிறதென்று தேடி, மனம் நைந்த பக்தர்களுக்கு, முருகன் திருவடி என்றைக்கும் மாறாத துணையாக வந்து நிற்கும்.

பிரபஞ்சச் சேறு

தள்ளாடி வாடிப் பதைக்கின்ற மனம் மேலே பரந்து நிற்கின்ற பந்தரில் ஏறுவதற்கு ஏற்ற கொழுகொம்பு இல்லாமல் அலைகிறது. பூமியில் வளருகின்ற கொடி கொழுகொம்பில் ஏறிப் பந்தரில் படராவிட்டால் நிலத்தில் படரும். மனம் எப்போதும் அலையும் தன்மை உடையது. ஒரு கணம்கூட நிலைத்து நில்லா தது. ஒரு கணத்தில் பதினாறாயிரம் எண்ணங்களை வளர்த்துக் கொண்டு சுழன்று திரிவது. உயர்ந்த எண்ணங்களை, மேலும் மேலும் நல்ல நிலை அடைவதற்குரிய சாதனைகளை, மனம் கொள்ளாவிட்டால் அது மண்ணோடு மண்ணாக நின்று சேற்றில் அளைந்து, புழுதியில் படர்ந்து, அழுக்கில் துளைந்து, எப்போ

தும் சுற்றிக்கொண்டிருக்கும். புழுதியில் படர்கிற கொடிபோலப் பிரபஞ்சச் சேற்றில் உழன்று திரியும். கொடி நிலத்திலே படர்ந்து வீணாகாமல், கொழுகொம்பின் வழியே ஏறிப் பின்பு பந்தலை அடைந்து அங்கே படர்ந்து பயன் தருவது போல, நம்முடைய மனம் உலகியல் பொருளில் படர்ந்து அதனால் அழுக்கு அடைந்து துன்பத்தையுற்று வெப்பம் பெற்று, தள்ளாடிப் பதைப்பதை விட்டு, ஆண்டவனுடைய திருவடியாகிய கொழுகொம்பைப் பற்றிக்கொண்டு மேலே போக வேண்டும். போய்ப் பேரின்பமாகிய பந்தரில் படர வேண்டும். அது தோன்றியது நிலமானாலும், பயன்தருவது மேல் நிலத்தில். திருக்குறளில் ஒரு பாட்டு வருகிறது.

''உரன்என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரன்என்னும் வைப்பிற்கோர் வித்து''

என்பது அது. இந்த உலகத்தில் ஐந்து பொறிகளாகிய யானையை அறிவாகிய அங்குசத்தால் அடக்கி ஆளுகிற ஞானி வீட்டு உலகத்திற்கு ஒரு வித்துப்போல நிற்கிறான் என்பது அதன் பொருள். இங்கே பரிமேலழகர், ''வீட்டு உலகத்தில் சென்று முளைத்தலினால் வித்து என்று சொன்னார்'' என்று பொருள் எழுதினார். வித்துப் போடுவது மண்ணில். ஆனால் அதன் விளைவு மேலே தோன்றுகிறது. இந்த உலகத்தில் இருக்கும் போது உலகத்துப் பொருள்களோடு ஒட்டி அழுக்கேறிப் படர்ந்து விடாமல் நம் முடைய எண்ணங்களை உயர்த்திக்கொள்ளப் பழகினால் மெல்ல மெல்ல மனம் நல்ல இடத்தில் படரும். இருப்பது மண்தானே என்று எண்ணி ஏங்கக் கூடாது. தாமரை சேற்றிலே முளைத்தாலும் அதன் மலர் சேற்றைக் கடந்து தண்ணீருக்கு மேலே மலர்கிறது. தண்ணீர் எவ்வளவு ஆழமாக இருந்தாலும் அதற்கு மேல் தலையை நீட்டி மலரும் தன்மையுடைது தாமரை.

''வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு''

என்பது திருக்குறள். அதுபோல் நல்லவர்களுடைய மனம் இந்தப் பூமியிலே, உலக வாழ்விலே, இருந்தாலும் மிகமிக உயர்ந்த இறைவனுடைய திருவடித் துணை பெற்று மேல் நிலையை அடைகின்றது. ''அத்தகைய நிலை எனக்கு வரவில்லையே!'' என்று அருணகிரியார் ஏங்குகிறார்.

அவன் திருவுள்ளம்

அந்த நிலை வரவேண்டுமானால் நாமாக முயன்று அடைய முடியாது. இறைவன் திருவருள் இருந்தாலன்றி அது நமக்குக் கிடைக்காது. நாம் அவனை அடைய வேண்டுமென்று நினைத்த அளவில் அது கைகூடுவது இல்லை. ஆண்டவன் நம்மைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று திருவுள்ளம் கொள்ள வேண்டும்.

''நினைப்பித்தால் நின்னை நினைப்பேன்''

என்று ஒரு பெரியவர் சொன்னார்.

''சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்குன்
மணிவார்த்தைக் கருக்கிஐம் புலன்க ளார வந்தனை''

என்று மணிவாசகப் பெருமான் சொல்வார். அவனை நாம் நினைப்பதற்கு அவன்தான் வந்து துணையாக நிற்க வேண்டும்.

''அவனரு ளாலே அவன்தாள் வணங்கி''

என்பது திருவாசகம். ''உன்னுடைய கமலக் கழலுடன் நான் சேர வேண்டுமென்று முயன்றால் பயன் இல்லை. என்னுடைய எல்லைக்குள் அகப்பட்டது அன்று அது. நீ உன்னுடைய கழலுடன் என்னைச் சேர்த்துக்கொள்வதற்குத் திருவுள்ளம் பாலிக்க வேண்டும்'' என்று அருணகிரியார் சொல்கிறார்.

''பாட்டுவித்தால் ஆரொருவர் பாடா தாரே
பணிவித்தால் ஆரொருவர் பணியா தாரே''

என்பது அப்பர் திருவாக்கு. நாம் அவனை நினைப்பதற்கு முன்னால் அவன் நம்மை நினைந்து தன்னிடத்தில் நமக்குப் பக்தியை உண்டாக்க வேண்டும்.

''என்னை நினைந்து அடிமை கொண்டென் இடர்கெடுத்துத்
தன்னை நினைக்கத் தருகின்றான்''

என்று நம்பியாண்டார் நம்பி பாடுகின்றார்.

ஆகவே, ஆண்டவன் நம்மிடத்திலுள்ள கருணையினால் நம் உள்ளத்திற்குள் கொழுகொம்பு நடுவது போலத் தன்னுடைய கமலக் கழலை நாட்டி அருள வேண்டும். கொடி தனக்கு

வேண்டிய கொழுகொம்பைத் தானே நட்டுக் கொள்ளாது. கொழு கொம்பு நட்டால் அதனைப் பற்றிக் கொண்டு படரும் ஆற்றல் அதற்கு உண்டு. நாம் மேலே ஏறுவதற்குரிய வழியை நினைக்கச் செய்து, தன் திருத்தாளைக் கொழுகொம்பாக நம்முள்ளத்தில் ஆண்டவனே பதித்து அருள வேண்டும்.

''உன்னுடைய காவிக் கமலக் கழலுடன் என்னைச் சேர்த்துக் காத்தருள வேண்டும். கொழுகொம்பில்லாமல் கீழே படர்ந்த கொடி ஆடுமாடுகளால் மிதிக்கப்பட்டுக் குலைவது போல நானும் பிரபஞ்சச் சேற்றிலே மிதியுண்டு அழிந்துவிடுவேன். உன்னுடைய கமலக் கழலாகிய கொழுகொம்பை என் உள்ளத்தில் நாட்டி அருள வேண்டும்'' என்று வேண்டுகிறார்.

காவிக் கமலக் கழலுடன் சேர்த்தெனைக் காத்தருளாய்;
தூவிக் குலமயில் வாகன னே,துணை ஏதுமின்றித்
தாவிப் படரக் கொழுகொம் பிலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனம் தள்ளாடி வாடிப் பதைக்கின்றதே.

மயில் வாகனன்

பிரபஞ்சத்தில் படர்ந்து பல வகையான அழுக்கு ஏறியிருக்கிற மனம் ஆண்டவனுடைய கழலாகிய கொழுகொம்பைப் பற்றி மேலே ஏறத் தொடங்கினால் அது பயன் அடையும். மண்ணிலே அது தோற்றியதாக இருந்தாலும் அழுக்குடையதாக இருந்தாலும் இறைவனுடைய கழலின் சார்பு பெற்றுவிட்டால் அதுவே நமக்கு நல்ல கருவியாக, துணையாக நிற்கும். இதற்கு முருகப் பெருமான் வரலாற்றில் ஒரு நல்ல சான்று இருக்கிறது.

ஆண்டவனது வாகனம் மயில். இயல்பாகவே பிரணவத்தை மயிலாகக் கொண்டவன் அவன். பிற்காலத்தில் சூரபன்மனோடு போர் செய்து அவனை வென்று, அவனை மயிலாகக் கொண்டு அவன்மேல் ஊர்ந்து வருகிறான். முப்பத்து முக்கோடி தேவர்களுக்கும், நல்லவர்களுக்கும் இடுக்கண் செய்து, ஆயிரத்தெட்டுக் கோடி அண்டங்களுக்குத் தனி நாயகனாக இருந்து ஆண்டு செருக்கு மிக்கு வளர்ந்தவன் சூரபன்மன். நம்மை எதிர்ப்பவர் யார், நமக்கு நிகர் யார் என்று தருக்கி நின்றான் அவன். தேவர்களுக்கு அச்சத்தை விளைவித்த பெரு வல்லமை உடைய அவனை

ஆண்டவன் சென்று பொருதான். இதற்கு முன்பு அசுரேந்திரனாக இருந்த அவன் இறைவனுடைய வேலினால் கிழிக்கப்பெற்று இரண்டு கூறாக ஆனான். ஒரு கூறு சேவலாகவும், மற்றொரு கூறு மயிலாகவும் ஆயின. மிகவும் கொடுமையான எண்ணமுடைய சூரன், பார்த்தாலே அஞ்சுவதற்குரியவனாகிய சூரன், எம்பெரு மானது வாகனமாகிவிட்டான். இறைவனது திருவடித் தொடர்பு பெற்றவுடன் அவன் வன்மை மாறிக் கொடுமையும் மாறி அசுரத்தனம் அடியோடு ஒழிந்து இறைவனுக்கு ஏற்ற வாகனமாகி விட்டான். அந்த வாகனம் தூயதாகி, தோகையுடையதாகி, அழகோடு நிற்கிறது. மிக உயர்ந்த பெருமையை அந்த மயில் பெற்றுவிட்டது. இயல்பாக அசுரேந்திரனாக இருந்தபோது சூரனுக்கு இத்தனை பெருமையில்லை; பழியே இருந்ததது. ஆண்டவன் கழலுடன் சேர்ந்த பிறகே இந்தப் பெருமை அவனுக்கு உண்டாயிற்று. மிகமிகக் கொடியவர்கள் அசுரர்கள். அந்தக் கொடியவர்களுக்குள்ளே தலைவன் சூரன். கொடியவர் களுக்குத் தலைவனாகிய அவன் ஆண்டவன் திருக்கழலுடன் சேரும் பேறு பெற்றதும் அவனுக்குரிய வாகனமாகிவிட்டான்.

''தீயவை செய்தா ரேனும் குமரவேள் திருமுன் புற்றால்
தூயவ ராகி மேலைத் தொல்கதி அடைவார் என்கை
ஆயவும் வேண்டும் கொல்லோ அடுசமர் அந்நாட் செய்த
மாயையின் மகனும் அன்றோ வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்''

என்று கச்சியப்ப சிவாசாரியார் பாடுகிறார். சூரன் கொடியவனாக இருந்தாலும் ஆண்டவனின் தொடர்பு பெற்றதால் அவன் தீமை மாறி உயர்ந்த பெருமையைப் பெற்றான். இறைவனோடு தொடர்பு பெற்றால் தீமை மாறி, அழுக்கு ஒழிந்து, மெய்யான பெருமையைப் பெற்று, இன்பத்தை அடைவார்கள். ஆகவே ஆண்டவன் கழலாகிய கொழுகொம்பில் ஏறினால் மிக உயர்ந்து படரலாம் என்பதற்கு மயில் சிறந்த சாட்சியாக நிற்கிறது. அந்த மயிலை உடையவனிடத்தில் விண்ணப்பித்துக் கொள்கிறார்.

தூவிக் குலமயில் வாகனனே!

தாவிப் படரக் கொழுகொம்பு இல்லாத தனிக் கொடிபோல உலகத்தில் உழல்கின்ற ஒருவர், துணை இல்லாமல் வாடித் தள்ளாடிப் பதைபதைத்து, ''எம்பெருமானே, உன்னுடைய

செந்தாமரைக் கழலாகிய கொழுகொம்பை நாட்டு. சூரனாகிய அசுரனை உன்னுடைய தொடர்பால் பெருமையுடைய மயில் வாகனமாகும்படி செய்த எம்பெருமானே, உன்னுடைய கமல பாதத்துடன் சேர்த்து, என்னைக் காத்து அருள வேண்டும்'' என்று வேண்டுவாரைப் போலப் பாட்டு அமைந்திருக்கிறது.

★

காவிக் கமலக் கழலுடன்
சேர்த்தெனைக் காத்தருளாய்;
தூவிக் குலமயில் வாகன
னே,துணை ஏதும்இன்றித்
தாவிப் படரக் கொழுகொம்
பிலாத தனிக்கொடிபோல்
பாவித் தனிமனம் தள்ளாடி
வாடிப் பதைக்கின்றதே.

[மெல்லிய இறகையும் சிறப்பையும் உடைய மயிலை வாகனமாகக் கொண்ட எம்பெருமானே, இவ்வுலகில் என் இடரை நீக்கி நலம் செய்யும் துணையாக எந்தப் பொருளும் எனக்கு இல்லாமல், தாவிப் பற்றி ஏறிப் படரத் துணையாகிய கொழுகொம்பு இல்லாமல் வாடும் தனிக்கொடியைப் போலப் பாவம் நிறைந்த என் மனம் தளர்ந்து அலைந்து வாட்டமுற்று அஞ்சிக் குலைகிறதே! நீ அடியேனை நின்னுடைய செந்நிறமான தாமரையைப் போன்ற திருவடியோடு சேர்த்துக் காத்தருள வேண்டும்.

காவிக் கமலம் – செந்தாமரை; காவி என்றது அதன் நிறமாகிய செம்மையைக் குறிக்க நின்றது. கழல் – திருவடி; ஆகுபெயர். சேர்த்தல் – இடைவிடாது பற்றிக் கொண்டிருக்கும்படி செய்தல். என்னைச் சேர்த்துக் காத்தருளாய். குலம் – மேன்மை. கொழுகொம்பு – கொடிபடர நடும் கொம்பு; கொள் கொம்பு என்றும் கூறுவார்கள். ''கொம்பரிலாக் கொடி போல் அலமந்தனன் கோமளமே'' என்பது திருவாசகம். பாவி என்பது மனத்துக்கு அடை; பாவியாகிய மனம்.]

உன் திருவடியைப் பற்றும் அன்பை அடியேனுக்கு அருள வேண்டும் என்பது கருத்து.

இது கந்தர் அலங்காரத்தில் 99–ஆவது பாட்டு.

விடுதலை

எந்தச் செயலைச் செய்யத் தொடங்கினாலும் அதைச் செவ்வனே முடிக்க வேண்டும். முடிவு மனநிறைவைத் தர வேண்டும். இனிய பாட்டுக் கச்சேரி நடக்கிறது. அது இனிது முடிந்ததென்பதற்கு என்ன அடையாளம்? ஏதோ பெரிய ஆனந்த வெள்ளத்தில் அமிழ்ந்தது போன்ற நிறைவு நம் உள்ளத்தில் உண்டாக வேண்டும். சிறந்த காவியம் ஒன்று இருக்கிறது. அதன் எடுப்பும் தொடுப்பும் முடிப்பும் முக்கியமானவை. எடுப்பும் முடிப்பும் மிகவும் முக்கியமானவை. முடிப்பு என்றும் மனத்தி லிருந்து நீங்காததாக இருக்க வேண்டும்.

எடுப்பும் முடிப்பும்

காவியங்களில் எடுப்பும் முடிப்பும் ஒன்றுபோல இருக்க வேண்டும். எந்தக் கருத்தைக் காவியம் முழுவதும் வற்புறுத்து கிறதோ, அதை ஆரம்பமே குறிப்பாகக் காட்ட வேண்டும்; முடிவில் அது தெள்ளத் தெளியப் புலனாக வேண்டும். சங்கீதக் கச்சேரியில் ஸா–பா–ஸா என்று முதல் நடு முடிவு சுவரங்களைக் கொண்டு சுருதி சேர்ப்பார்கள். ஸா என்ற சுவரத்தில் தொடங்கி அந்தச் சுவரத்தில் முடிப்பார்கள்.

வேதம் ஓம் என்று தொடங்கி ஓம் என்று முடிகிறது. இப்படி இருப்பது ஓர் அழகு; கலையழகு.

கந்தர் அலங்காரத்தின் இறுதிப் பாடலாகிய நூறாவது பாட்டை இப்போது பார்க்கப்போகிறோம். அதுதான் இந்த அற்புத ஞான நூலின் நிறைவு; இந்த அருமையான பக்தி இலக்கியத்தின் முடி; இந்த அருளநுபவ விருந்தின் இறுதி. அலங்காரத்தின் முதலும் முடிவும் அழகாக ஒரே சுருதியாக அமைந்திருக்கின்றன என்பதை நாம் அறிந்து மகிழ வேண்டும்.

அருணகிரியார் கருணை

அருணகிரி நாதர் அநுபூதிமான் என்பதுதான் அவருக்கு உள்ள சிறப்புகளில் தலையானது. மற்றவை யாவும் அதற்குப் பின் வருவனவே. அருளநுபவம் பெற்றதோடு பிறருக்குப் அத்தகைய அநுபவம் உண்டாக வேண்டும் என்ற கருணையுப் அவரிடம் நிறைந்திருக்கிறது. அதனால்தான்,

"கருணைக்கு அருணகிரி"

என்று ஒரு பழம்பாட்டுச் சொல்கிறது. மற்றவர்களிடத்திவ் அவருக்கு உள்ள கருணை அளவுக்கு மிஞ்சியது. தாய் தன் குழந்தைக்கு வேண்டிய பொருள்களை யெல்லாம் தருகிறாள். உணவு ஊட்டுகிறாள். உடை உடுத்துகிறாள். தாலாட்டி உறங்கச் செய்கிறாள். நல்ல உபதேசம் செய்கிறாள். இவை யாவும் அவளுடைய பேரன்பைக் காட்டுகின்றன. குழந்தை வளர்ந்து விடுகிறது. பள்ளிக்கூடத்துக்குப் போகும் பையனாக வளர்ந்து விட்டது. ஒரு நாள் அந்தப் பையன் வீட்டில் மைப்புட்டியைக் கொட்டிவிட்டான். அவனுயை தந்தை கோபக்காரர். அது தெரிந்தால் அவனுக்கு உதை கிடைக்கும். இது தெரிந்த தாய் என்ன செய்கிறாள்? அந்தக் குற்றத்தைத் தானே செய்ததாகச் சொல்கிறாள். தன் கணவன் வீட்டுக்கு வரும்போது, "அந்த மைப்புட்டியை நகர்த்தி வைக்கப் போனேன்; கைதவறிக் கொட்டி விட்டேன்" என்று சொல்கிறாள். அவள் சொல்வது பொய்தான். ஆனால் அது ஒரு நன்மையை விளைவிக்கிறது. பையனுக்குக் கடுமையான தண்டனை கிடைக்காமல் காப்பாற்று கிறது. பையன் அறிவாளியாக இருந்தால், தாயின் கருணையை நினைந்து உருகுவான். 'நாம் செய்த குற்றத்தைத் தான் செய்த தாகச் சொல்லுகிறாளே!' என்று வியப்பும் உருக்கமும் கொள் வான்; 'இனி இத்தகைய குற்றத்தை நாம் செய்யக் கூடாது என்று உறுதி பூண்பான்.

அந்தத் தாயைப் போன்ற கருணையை உடையவர் அருண கிரிநாதர். நமக்கு எத்தனையோ நல்ல உபதேசங்களைச் செய்கிறார். முருகன் பெருமையை வேறு யாரும் சொல்லாத வகையில் விரிவாக, நம் உள்ளம் உருகும்படி எடுத்துச் சொல்கிறார். அவனைப் பணிந்தால் கிடைக்கும் நன்மை இது என்று பாடு

கிறார். இன்ன இன்னபடி அவனை வணங்குங்கள், நல்ல காரி யத்தைச் செய்யுங்கள் என்று வழி காட்டுகிறார். இப்படியெல்லாம் செய்யாதீர்கள் என்று எச்சரிக்கிறார். இவையாவும் அவருக்கு நம்மிடம் உள்ள கருணையைப் புலப்படுத்துவனவே. இவற்றிற்கு மேலே, நாம் செய்யும் குற்றங்களைத் தாம் செய்ததாகப் பாடு கிறார்; இது அவருடைய பெருங் கருணையைக் காட்டவது

கந்தர் அலங்காரத்தில் மேலே சொன்னவற்றிற்கெல்லாம் உதாரணங்கள் உண்டு. திடீரென்று ஒருவர் கந்தர் அலங்காரத்தைப் பிரித்துப் பார்க்கிறார்.

"சிந்திக்கி லேன்நின்று சேவிக்க லேன்தண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேன்ஒன்றும் வாழ்த்துகி லேன்மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கி லேன்உண்மை சாதிக்கிலேன்
புந்திக்கி லேசமும் காயக் கிலேசமும் போக்குதற்கே"

என்ற பாடல் தென்படுகிறது. அல்லது இதைப் போல அருண கிரியார் தம்மை இழிவாக, குற்றமுள்ளவராக, கூறிக்கொள்ளும் பாடலை அவர் பார்க்கிறார். அருணகிரியாரைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்ளாத அவர் என்ன நினைப்பார்? 'இந்தப் பாடல் களைப் பாடினவர் நம்மைபோலக் குறைபாடுடையவர்போல இருக்கிறது' என்ற எண்ணம் தோன்றலாம்.

அநுபூதி அடையாளம்

உண்மையை உணரவேண்டுமானால் அலங்காரத்தின் முதலையும் முடிவையும் பார்க்க வேண்டும். அப்போது தெள்ளத் தெளிவாக அவருடைய நிலை தெரியும். அந்த இரண்டும் இரண்டு எல்லைக் கற்களைப் போல நிற்கின்றன. இரண்டும் அருணகிரி நாதர் அநுபூதிமான் என்பதை விளக்கும் அடையாளங்களாக உள்ளன. இடையிலும் அவருடைய அநுபவத்தை விளக்கும் பாடல்கள் இருக்கின்றன. அவற்றைத் தேடிப் பார்க்கப் பொறுமை இல்லாவிட்டால் முதலையும் முடிவையும் பார்த்தால் அவர் நிலை தெளிவாகும். எப்படித் தொடங்கினாரோ அப்படியே முடித்திருப்பதைக் காணலாம்.

ஆகவே, கந்தர் அலங்காரத்தின் முதலும் முடிவும் ஒத்து அழகாக நிற்பதோடு, அருணகிரியாரின் உண்மையான நிலையை

– அதாவது அவருடைய அநுபவச் சிறப்பை – எடுத்துக் காட்டுவனவாகவும் உள்ளன.

முதல் பாட்டிலும் முடிவுப் பாட்டிலும் இறைவன் அருளால் தாம் பெற்ற அநுபவத்தைச் சொல்லி, ''இந்த அற்புதத்தை என்பால் நிகழ்த்தினான் ஆண்டவன், அவன் அருளின் பெருமை இருந்தவாறு என்னே!'' என்று வியக்கிறார். அருணகிரியார் பாடல் களில் இந்த அநுபவ அதிசயப் பெருக்கைப் பல இடங்களிலே காணலாம்.

''அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே''

என்று மாணிக்கவாசகருக்கும் இந்த அதிசய உணர்ச்சி ஏற்பட்டது. அருணகிரியார், ''இப்படி நிகழ்ந்தது பெரிய ஆச்சரியம்!'' என்று சொல்வதில்லை; ''இப்படி நிகழ்ந்தவாறு என்னே!'' என்றுகூடச் சொல்வதில்லை. வியப்பில் மூழ்கியவர் தாம் சொல்ல வந்ததை முழுமையாகச் சொல்லாமல், கேட்பவர்கள் உய்த்துணரும்படி வைப்பது இயல்பு. அப்படி, ''நிகழ்ந்தவா!'' என்று சொல்லித் தம் அதிசய உணர்ச்சியைக் காட்டி நிறுத்துவது அருணகிரியாருக்கு வழக்கம். ஒரு வகையில் இப்படி வரும் இடங்கள் அருணகிரி யாரை இனம் கண்டு கொள்ளும் முத்திரை உள்ள பாடல்கள் என்று கூடச் சொல்லிவிடலாம்.

''தெளிய விளம்பியவா முகம் ஆறுடைத் தேசிகனே!'' *(8)*
''சும்மா இருக்கும் எல்லையுட் செல்ல எனைவிட்டவா!'' *(10)*
''புரையற்ற வேலவன் போதித்தவா!'' *(61)*

என்பன கந்தர் அலங்காரத்தின் இடையே வருவன.

''பிரமம் கெடமெய்ப் பொருள்பே சியவா'' *(8)*
''போகா வகைமெய்ப் பொருள்பே சியவா'' *(11)*
''உரிதா உபதே சம்உணர்த் தியவா'' *(20)*
''தாளைப் பணியத் தவம்எய் தியவா'' *(22)*

என்று கந்தர் அநுபூதியிலும் இவ்வாறே வியப்பைக் காட்டுகிறார்.

அநுபவாதிசயம்

இத்தகைய அநுபவாதிசயப் பெருக்கை அலங்காரத்தின் முதற்பாட்டும் நூறாவது பாட்டும் புலப்படுத்துகின்றன.

"பேற்றைத் தவம் சற்றும் இல்லாத என்னை ப்ரபஞ்சம் என்னும்
சேற்றைக் கழிய வழிவிட்டவா!"

என்று தொடங்குவது முதற் பாட்டு.

இடுதலைச் சற்றும் கருதேனைப் போதம் இலேனை அன்பால்
கெடுதல் இலாத் தொண்டரிற் கூட்டியவா!

என்பது இங்கே பார்க்கப்போகிற நூறாவது பாட்டு. அங்கே, ''வழிவிட்டவாறு என்ன வியப்பு!'' என்ற பொருள்படப் பாடினார். இங்கே, ''தொண்டர்களுடன் கூடும்படி செய்தவாறு என்ன ஆச்சரியம்!'' என்ற பொருளை அமைத்துப் பாடுகிறார்.

முதல் பாட்டில், ''என்னிடம் இரண்டு இயல்புகள் இல்லை; அவ்வாறு இருந்தும் நீ எனக்கு அருள் செய்தாய்'' என்று சொன்னவர் இங்கும் இரண்டு இயல்புகள் இல்லை என்றே தொடங்குகின்றார். அங்கே, ''எனக்கு முன் பிறவிலேயே செய்த நன்மையினால் கிடைக்கும் பயனாகிய பேறும் இல்லை; இந்தப் பிறவியிலே முயன்று செய்த தவமும் இல்லை'' என்கிறார். 'சேர்த்துவைத்த பணமும் இல்லை; இப்போது வேலை இல்லாமையால் வருவாயும் இல்லை' என்று ஏழை ஒருவன் வருந்திக் கூறுவதுபோல இருக்கிறது அது. இங்கே, ''தானம் செய்யவும் அறியேன்; ஞானமும் பெறவில்லை'' என்று இரண்டு குறைகளைச் சொல்லிக் கொள்கிறார்.

அங்கே ''பிரபஞ்சம் என்னும் சேற்றைக் கழிய வழி விட்டவா!'' என்றவர், ''அன்பால் கெடுதல் இலாத் தொண்டரிற் கூட்டியவா!'' என்கிறார். அங்கே பிரபஞ்சச் சேற்றினின்றும் விலகித் தூய்மைபெற ஆண்டவன் அருள் செய்தான் என்றார். தூயவர்களோடு கூட்டினான் என்று இங்கே சொல்கிறார். பிரபஞ்ச வாசனை கழிந்து, இந்திரியங்களின் வயப்பட்ட நிலை மாறி, இருவினை கழலச் சரீர அபிமானம் துறந்து ஜீவன் முக்தி பெற வேண்டும். அந்த முடிந்த நிலையாகிய விடுதலையை இந்தப் பாட்டில் சொல்கிறார். முக்தி என்பதற்கு விடுதலை என்பது பொருள். வீடு என்பதும் விடுதலை என்பதும் ஒரே பொருள் உடையன. இரண்டும் விடு என்னும் பகுதியடியாகப் பிறந்த சொற்களே.

''இம்மூன்றும் விட்டதே பேரின்ப வீடு''

என ஔவையார் பாட்டில் விடுவது வீடு என்ற விளக்கம் இருக்கிறது.

செய்யவேண்டிய சாதனங்களைப் பயிலாமல் இருந்தாலும் முருகன் பெருங்கருணையினால் பிரபஞ்சச் சேற்றை நீக்கினான் என்று முதல் பாடலில் பாச நீக்கத்தைச் சொன்னவர், எந்தவித மான தகுதியும் இல்லாத எனக்கு முருகன் பெருங் கருணை யினால் ஜீவன் முக்த நிலையை அருளினான் என்று கடைசிப் பாட்டில் சொல்லிக் கந்தர் அலங்காரத்தை நிறைவேற்றுகிறார். முதலிலும் முடிவிலும் பொதுவாக அமைந்திருப்பவை தம் தகுதி யின்மையும், இறைவன் பெருங்கருணையும், அதனால் விளைந்த அநுபவமும், அதுகண்டு பெற்ற வியப்பும் என்பனவாம். இனி அலங்காரத்தை நிறைவாக்கும் இந்த நூறாவது பாடலிலே புகுந்து பார்க்கலாம்.

மூன்று நிலை

இந்தப் பாட்டு மூன்று வேறு நிலைகளைக் காட்டுகின்றது. முன்னைய நிலை, இறைவன் அருளால் பெற்ற பயிற்சி நிலை, அதனால் விளைந்த விளைவு என்று அந்த மூன்று பகுதியையும் இந்தப் பாட்டில் பார்க்கலாம்.

இடுதலைச் சற்றும் கருதேனைப் போதம் இலேனை

என்பது முன்னை நிலை; இறைவன் அருள் பெறாத ஆன்மாவின் நிலை.

அன்பால் கெடுதல் இலாத் தொண்டரில் கூட்டியவா!

என்பது இரண்டாவது நிலை. இறைவன் காட்டிய வழியைத் தெரிவிப்பது இது. முன்பு காட்டியது தரையானால் இது மேலே ஏறுவதற்குரிய படி போன்றது. இயல்பு நிலை, சாதன நிலை என்று இவ்விரண்டையும் கூறலாம். அடுத்த நிலை,

பிறவி அற இச்சிறை விடுதலைப் பட்டது;
விட்டது பாச வினை விலங்கே

என்பது. இது பயன் அல்லது அநுபவம்; இது சாத்திய நிலை. படி களில் ஏறியவன் மேல்தளத்தை அடைந்துவிட்டது போன்றது இது.

இந்த மூன்றையும் அன்றி, தமக்கு அருள் செய்தவனை அடையாளம் காட்டும் பகுதியும் பாட்டில் இருக்கிறது.

கிரௌஞ்ச வெற்பை அடுதலைச் சாதித்த வேலோன்

என்பது அது; முருகனைச் சொல்லும் பகுதி. 'வேலோன் தொண்டரிற் கூட்டினான்; அதனால் விடுதலை கிடைத்தது; விலங்கு தறியுண்டது' என்று முழுப்பாட்டும் தொடர்புடைய பொருளோடு நிற்கிறது.

இடுதலைச் சற்றும் கருதேனைப், போதம் இலேனை, அன்பால்
கெடுதல் இலாத் தொண்ட ரிற்கூட் டியவா! கிரௌஞ்ச வெற்பை
அடுதலைச் சாதித்த வேலோன்; பிறவி அறஇச்சிறை
விடுதலைப் பட்டது; விட்டது பாச வினைவிலங்கே.

தொண்டரோடு சேர்தல்

'முருகன் எனக்குப் பிறவியினின்றும் விடுதலை உண்டாக வும், வினைநீக்கம் ஏற்படவும் வழிகாட்டினான்' என்று சொல் லும் இந்தப் பாட்டில் தொண்டர்களோடு சேர்ந்ததே அந்த வழி என்று சொல்கிறார். 'நானாகத் தொண்டரோடு கூடும் இயல்பு இல்லாதவன். முருகன் என்னை அவர்களோடு கூடச் செய்தான். அதன் பயனாக உடம்பினின்றும் விடுதலையும் பாச நீக்கமும் உண்டாயின' என்கிறார்.

தொண்டரோடு கூடுவதற்குச் சில தகுதிகள் வேண்டும். அந்தத் தகுதிகள் இருந்தால் தொண்டரோடு உறவாடும் இயல்பு தானே வந்து அமையும். அந்தத் தகுதி இன்மையால் அந்த இயல்பும் இல்லையாயிற்று. தொண்டர் கூட்டத்தைப் பற்றிக் கொள்ளாமைக்குக் காரணம் வேறு பற்றுக்கள்.

செல்வத்தைப் பற்றுதல்

நாம் இப்போது மிகவும் அதிகமாகப் பற்றிக் கொண்டிருக்கும் பொருள் செல்வம். எல்லாப் பொருள்களையும் பெறுவதற்குக் கருவியாக இருப்பது பணம். அதை எல்லாப் பொருள்களுக்கும் பிரதிநிதி என்று சொல்லலாம். வெவ்வேறு பண்டங்களிடத்தில் ஆசையுடைய மனிதன் வேண்டும்போது அவற்றை வாங்கிக் கொள்வதற்கு ஏற்ற கருவியாகிய பணத்தைச் சேகரித்து வைத்துக்

கொள்கிறான். மற்றப் பண்டங்களில் வைத்தற்குரிய பற்றை யெல்லாம் ஒரு சேரப் பணத்தின்மேல் வைக்கிறான்.

நாம் பணத்தை இறுகப் பற்றிக் கொண்டிருக்கும் பற்றுப் போக வேண்டும். காமினீ காஞ்சனம் என்னும் இரண்டிலும் உள்ள ஆசை போக வேண்டும் என்று இராமகிருஷ்ண பரம ஹம்ஸர் அடிக்கடி சொல்வார். பணத்தில் உள்ள பெரும் பற்றே உலோபம் என்பர்; அதைப் பற்றுள்ளம் என்றும் சொல்வதுண்டு. ஒரு விதத்தில் பெண்ணின் மீதுள்ள பற்றைவிடக் கொடியது செல்வத்தின்பால் உள்ள பற்று. பெண்ணாசை பருவம் வராதவர் களுக்கு இல்லை; பருவம் முதிர்ந்தவர்களுக்கும் வலிமையுடன் இருப்பதில்லை. பணப் பற்றோ எந்தப் பருவத்தினரிடமும் இருக்கிறது.

தியாகம்

பொருளிடம் பற்று ஒருவனுக்கு இல்லை என்பதை எப்படித் தெரிந்து கொள்வது? அதை அவன் தியாகம் செய்யத் தயங்க மாட்டான். கண்ணைக் கொடுத்தான் கண்ணப்பன். அவனுக்குச் சரீரத்தில் உள்ள பற்று அற்றுவிட்டது. பிள்ளையைக் கொடுத்தார் சிறுத்தொண்டர். மனைவியைக் கொடுத்தார் இயற்பகையார். இவர்களுக்கு மனைவி மக்கள் என்ற பற்று ஒழிந்தது. அவர்கள் செய்த தியாகத்தால் இந்த இயல்பு புலனாகிறது.

பற்று இல்லாதவர்கள் தியாகம் செய்வார்கள் என்பது உண்மை. நாமோ பற்றிலே ஆழ்ந்திருக்கிறோம். நாம் எப்படிப் பற்றை விடுவது? பற்று அற்றவன் செய்யும் காரியத்தை நாம் சிறிது சிறிதாகச் செய்து பழக வேண்டும். தியாக சீலத்தை வளர்க்க வேண்டும்.

பற்றுப் போகும் வழி

ஒருத்திக்கு அவள் கணவனிடம் மிகுந்த பற்று. அவன் இறந்து போனால் தான் உயிர் வாழ முடியாது என்று நினைக் கிறாள். துரதிருஷ்டவசமாக அவன் இறந்து விடுகிறான். அன்று அவள் படும் துயரத்துக்கு எல்லையே இல்லை என்று தோன்று கிறது. அடிக்கடி மூர்ச்சைபோட்டு விழுந்து விடுகிறாள். அன்று முழுவதும் அவள் உண்ணவே இல்லை. மறுநாள் அவளுடைய

தாய் அவளை அணுகி ஆறுதல் கூறுகிறாள். ''அவர் இறந்து விட்டார். நீயும் போய்விட்டால் குழந்தைகளுக்கு யார் இருக்கிறார்கள்? கொஞ்சம் சாப்பிடம்மா'' என்று நயந்து பேசி வற்புறுத்தி உணவு அளிக்கிறாள். வேண்டா வெறுப்பாக அதை அவள் உண்ணுகிறாள். ஒவ்வொரு நாளாகக் காலம் உருண்டு ஓடுகிறது. அவளுடைய துயரம் குறைந்துகொண்டே வருகிறது. ஒருவாறு ஆறுதல் பெறுகிறாள். அவளே சமாதானம் செய்துகொண்டு வேலைகளைக் கவனிக்கிறாள். குழந்தைகளை அரவணைக்கிறாள்.

இப்போது, கணவனிடத்தில் அவளுக்கு அன்பு உள்ளத்தில் இருக்கலாம். ஆனால் பற்று ஒழிந்துவிட்டது. காலன் அவள் பற்றிக் கொண்டிருந்த பொருளைக் கொண்டு போய்விட்டான்.

அவ்வாறே நம் மனத்திலே இறுகப் பற்றிக் கொண்டிருக்கிற பொருளைக் கொண்டுபோக ஒரு யமன் வந்தால் நமக்கும் பற்றுப் போகலாம். யமன் வராவிட்டாலும் நாமாக வருவித்துக் கொள்ளலாமே. கையிலுள்ள பொருளை நம்மிடமிருந்து போக்க ஒரு தந்திரம் செய்ய வேண்டும். அது ஒன்றும் பெரிய காரியம் அன்று. யாருக்காவது கொடுக்கலாம்; பணம் இல்லாமல் துன்புறுகிறவர்களுக்குக் கொடுக்கலாம். கையில் உள்ள பொருளைக் கொடுக்கும்போது முதலில் வருத்தந்தான் உண்டாகும். ஆனால் சிறிது துணிவோடு பழக்கம் செய்து கொண்டுவிட்டால் நாளடைவில் பணத்தினிடம் உள்ள பற்றுத் தேய்ந்துவிடும்.

ஆகவே, செல்வத்தைப் பிறருக்கு ஈவதனால் மெல்ல மெல்ல அதன்பால் நமக்கு உள்ள பற்றுக் குறைந்து கொண்டே வரும் என்பதை ஒருவாறு தெரிந்துகொண்டோம்.

ஈகை

இத்தகைய ஈகையினால் இருவகை நலங்கள் உண்டாகின்றன. பணக்காரனிடம் உள்ள செல்வம் சமுதாயத்தில் உள்ள ஏழை மக்களிடம் பரவலாகச் சென்று நல்ல பயனைத் தருகிறது. இது ஒரு நன்மை; சமுதாயத்துக்கு உண்டாகும் நலம். ஈபவனுக்கு மெல்ல மெல்லப் பற்றுக் குறைந்து வருகிறது. அது அவனுக்கு நலம். இயல்பாகப் பற்றை ஒழிக்க இயலாதவர்களுக்கு ஈகை என்பது அதற்குரிய பயிற்சிபோல உதவும்.

நன்றாகத் தூங்குவது நல்லது. குழந்தைகளுக்கு இயற்கையாகவே தூக்கம் வந்துவிடுகிறது; எந்த இடமானாலும் தூங்கிப் போகின்றன; படுக்கையோ, தலையணையோ எதையும் வேண்டுவது இல்லை. நாம் அப்படித் தூங்க முடிவதில்லை. இயற்கையாகத் தூக்கம் வருகிற நிலையிலிருந்து நெடுந்தூரம் விலகி வந்துவிட்டோம். ஆனாலும் நமக்குத் தூக்கம் இன்றியமையாதது. தூக்கம் வந்தால்தான் உடம்பிலும் உள்ளத்திலும் உள்ள சோர்வு போகும். அதற்காக நாம் செயற்கைச் சாதனங்களை மேற்கொள்கிறோம். இயற்கையாக அடைய முடியாததைச் செயற்கையாக அடைய முயல்கிறோம். மெத்தென்ற படுக்கை, தலையணை, திண்டு, மின்விசிறி – இப்படிப் பலவற்றை வைத்துக்கொண்டு நித்திரா தேவிக்கு வரவேற்புக் கூறுகிறோம்.

இவ்வண்ணமே பற்று அகற்றுவதிலும் செயற்கை முறை உண்டு. இயற்கையாக நம்மிடமிருந்து பற்றுப் போகவில்லை. செயற்கையாக அதைப் போக்க வேண்டும். பற்று அற்றவன் செய்யும் காரியத்தை நாம் செய்து பழக வேண்டுமம. பற்று அற்றவன் தனக்கென்று எதையும் வைத்துக்கொள்ளாமல் பிறருக்கு அளித்துவிடுகிறான். நாமும் அப்படியே கொடுத்துக் கொடுத்து மெல்ல மெல்லப் பற்றைக் குறைத்துக்கொண்டு வர வேண்டும்.

மனைவியை இழந்துவிட்டு ஒருவன் இருக்கிறான். மனைவியைத் துறந்துவிட்டு ஒருவன் வாழ்கிறான். இயற்கையாக ஞானம் படைத்தவன் மனைவி இல்லாமல் வாழத் தெரிந்து கொண்டிருக்கிறான். மனைவியை இழந்தவனோ முதலில் சில நாள் துன்பத்திற்கு உள்ளானாலும் போகப் போக அந்த நிலை பழகிப்போய், மனைவி இல்லாமலே வாழத் தெரிந்து கொண்டு விடுகிறான். ஒருவனுக்கு இயல்பாகவே பற்று அற்றுப் போகிறது. மற்றொருவனுக்கு அவசியத்தினால் அற்றுப் போகிறது. இரண்டாவதாகச் சொன்னதைத்தான் பற்று அறுவதற்குரிய பயிற்சி அல்லது சாதனம் என்று கொள்ள வேண்டும்.

'ஆண்டவனே, தொண்டருடைய கூட்டத்தில் நான் சேர வேண்டுமானால் அவர்களைப் போல நானும் இயற்கையாகப் பணத்தில் பற்று இல்லாதவனாக இருக்க வேண்டும். நான் அத்தகையவன் அல்லன். நான் பற்றிலே அமிழ்ந்தவன். ஆதலால் பற்று அறுவதற்குரிய பயிற்சியைச் செய்து பற்று நீங்கி நிற்க

வேண்டும். அப்படிச் செய்தால் தொண்டரோடு கூடலாம். அந்தப் பயிற்சியும் என்னிடம் இல்லை. அதாவது, நான் ஈகை இயல்பு உடையவன் அல்லன்' என்று எண்ணிய அருணகிரியார் அந்த எண்ணங்களையெல்லாம் சுருக்கி,

இடுதலைச் சற்றும் கருதேனை

என்கிறார். 'பிறருக்குக் கொடுக்க வேண்டும் என்பதை எள்ளள வேனும் கருதாதவன் நான்' என்று கூறுகிறார். முதல் பாட்டிலும் இந்தச் சற்றும் என்ற சொல் வருகிறது.

"பேற்றைத் தவம் சற்றும் இல்லாத என்னை"

என்று இருக்கிறது அல்லவா?

இடுதல் என்பது பெரும்பாலும் சோறு இடுவதையே குறிக்கும்.

"இருபிடி சோறுகொண்டு இட்டு உண்டு இரும்"

என்று ஒரு பாட்டில் வந்ததைப் பார்த்தோம். ஆனால் இங்கே இடுதல் என்பது எல்லாப் பொருளையும் கொடுக்கும் செயலைக் குறிக்க வந்தது. ஈதல் என்ற சொல்லின் பொருளிலேதான் இங்கே அச்சொல் அமைந்திருக்கிறது.

இங்கே, 'இடுதலைச் சற்றும் செய்யேனை' என்று அருண கிரியார் சொல்லவில்லை; 'சற்றும் கருதேனை' என்கிறார். கொடுக்க வேண்டும் என்ற நினைப்புக்கூட இல்லாதவன் என் பதில் பற்றுள்ளத்தின் கடுமை நன்றாகப் புலனாகிறது. அன்றியும் ஈகைக்கு வித்து மனத்திலே தோன்றுகிற எண்ணந்தான். அது தோன்றி வளர்ந்தால் பிறகு உறுதி பெற்றுச் செயலாக விளையும்; அதனால் ஔவைப் பிராட்டி,

"அறம் செய விரும்பு"

என்று மனத்தின் செயலாகிய விருப்பத்தைச் சொன்னாள். 'எனக்கு அந்த முதல் படிகூடத் தட்டுப்படவில்லையே!' என்று அங்க லாய்க்கிறார் அருணகிரியார்.

ஈகையின் வகை

ஈகை பல வகைப்படும். அறங்கள் முப்பத்திரண்டு என்று ஒரு கணக்கு உண்டு. காஞ்சீபுரத்தில் காமாட்சியம்மை முப்பத்

திரண்டு அறங்களையும் செய்தாளாம். பசுமாட்டுக்குப் புல் வாங்கிப் போடுவது ஓர் அறம். புல் விலைக்கு வாங்கிப் போட முடிய வில்லை என்றால், புல் உள்ள இடத்திற்கு மாட்டை ஓட்டிக் கொண்டு சென்று மேய்த்து வந்தாலும் புண்ணியம் உண்டு. பசுமாடு சொரிந்து கொடுப்பவர்களிடத்தில் வந்து நிற்கும்; தன் அலைதாடியைக் காட்டும். அதைச் சொரிந்து கொடுப்பது ஒரு தர்மம். பழங்காலத்தில் பசுமாடுகள் தினவு தீர உராய்ந்துகொள் வதற்குக் கல்தூண் ஒன்று நடுவது உண்டு. அதற்கு ஆவுறிஞ்சு தறி என்று பெயர். அதுவும் ஒரு தர்மம். எல்லோரும் செய்வதற்கு ஏற்றபடி அறங்களிற் பலவகை உண்டு.

''யாவர்க்கும் ஆம்இறை வற்கொரு பச்சிலை:
யாவர்க்கும் ஆம்பசு வுக்கொரு வாயுறை;
யாவர்க்கும் ஆம்உண்ணும் போதொரு கைப்பிடி;
யாவர்க்கும் ஆம்பிறர்க் கின்னுரை தானே.''

இது திருமூலர் திருமந்திரம். எவ்வளவு எளிதாகச் சொல்லியிருக் கிறார்! மனிதப் பிறவி எடுத்தவர் யாவராயினும் இந்தத் தர்மங் களைச் செய்ய முடியுமாம். நல்ல வார்த்தை சொல்வதுகூட ஒரு தர்மமாம்.

'இப்படி எத்தனையோ அறங்கள் இருக்கின்றனவே; அவற் றில் ஒன்றும் நான் செய்யவில்லை. என் பற்றுக் கெடுவதற்கு ஈகையே வழியென்று சிறிதளவாவது நான் சிந்திக்கவே இல்லையே!' என்கிறார்.

இடுதலைச் சற்றும் கருதேனை.

போதம் இன்மை

இப்படி ஒரு குற்றத்தைச் சுமத்திக்கொண்டார். அடுத்தபடி மற்றொன்றைச் சுமத்திக் கொள்கிறார்.

போதம் இலேனை.

போதம் – அறிவு. அதுவே ஞானம். நாம் யார், நமக்குப் பெரிய துன்பமாக உள்ள பிறப்பு எப்படி வந்தது, இந்தத் துன்பத்தைப் போக்குவது எப்படி, இறைவன் இயல்பை உணர்ந்து அவன் அருளைப் பெறுவது எவ்வாறு என்று இவை

போன்ற கேள்விகளை எழுப்பி ஆராய்ந்து உண்மை காண வேண்டும். இந்த ஆராய்ச்சிக்கு உறுதுணையாக இருப்பது போதம். குருநாதனுடைய கிருபையால் ஞானம் வரவேண்டும். பற்று ஒழிப்பவனுக்கு ஞானம் விளையும். ஞானம் உண்டாகி விட்டால் அவனுக்கு இறையருள் கிடைக்கும். யாருடைய உதவியும் அவனுக்கு வேண்டியதில்லை.

பொருளின்மேல் பற்று உள்ளவனுக்கு ஈகை வராது. அறியாமை உள்ளவனுக்கு ஞானம் உண்டாகாது. பற்றும், அஞ்ஞானமும் உடையவர்கள் நாம். இவை போனால்தான் அருளைப் பெறலாம். 'இந்த இரண்டு குற்றமும் நீங்காமல், ஈகையை மேற் கொள்ளாமல், போதம் உறாமல் இருந்தேன் அடியேன். அத் தகையவனுக்கு நீ நல்ல வழி காட்டினாய்' என்று சொல்கிறார்.

இடுதலைச் சற்றும் கருதேனைப் போதம்
இலேனை அன்பால்
கெடுதல் இலாத் தொண்டரிற் கூட்டியவா!

முருகன் செய்த தந்திரம்

நீந்தத் தெரியாதவர்களுக்கு நீச்சல் கற்றுக்கொடுக்க வேண்டுமானால் தரையில் இருந்தபடியே கற்றுக்கொடுக்க முடியாது. ஆழம் இல்லாத இடத்திலே கொண்டுபோய்த் தள்ளிவிட வேண்டும். அங்கே கொஞ்சம் காலையும் கையையும் அடித்துக் கொள்ளப் பழகினால் நாளடைவில் நீச்சல் தானே வந்துவிடும். நீந்தத் தெரிந்த பிறகுதான் தண்ணீரில் இறங்க வேண்டும் என்று இருப்பவனுக்கு ஒரு காலும் நீச்சல் வராது.

'முருகன் குறைபாடுடைய எளியேன் அருள்பெற ஒரு தந்திரத்தைச் செய்தான்' என்கிறார் அருணகிரியார். 'நான் தர்மம் செய்யவில்லை. ஞானோபதேசமும் பெறவில்லை. நல்ல குருநாதனைத் தரிசித்து ஞானம் பெறலாமென்றால் அதற்குத் தகுதி வேண்டும். அது இல்லாமையால் இந்தப் பிறவியில் ஒரு குருவை அடைவோம் என்ற நம்பிக்கையே இல்லை. இந்தப் பிறவி என்ன? இன்னும் பல பிறவிகள் எடுத்தாலும் அந்தப் பேறு கிட்டும் என்று தோன்றவில்லை. இடுதலும் ஞானமும் இல்லாத வெறும் ஆளாக இருந்தேன். அத்தகைய என்னையும் ஈடேறவைத்தான் முருகன். அது பெரிய ஆச்சரியம் அல்லவா?'

அவன் என்ன செய்தான்? 'முருகனுடைய திருவருளை நாடி வந்து கொண்டிருந்தது ஒரு கூட்டம்; பற்று அற்றவர்களாய், ஞானச் செல்வர்களாய், இறைவனுடைய திருவடியை அன்றி வேறு அறியாதவர்களாய், அவனை நினைத்து நினைத்து நெகிழ்ந்து நெகிழ்ந்து உருகுபவர்களாய் விளங்குபவர்கள். அந்தக் கூட்டத்தில் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டான். கங்கையிலே போய் விழுகிற சாக்கடையைப் போல நான் அவர்களோடு கலந்துவிட்டேன். பாலில் கலந்த தண்ணீரைப்போல அவர்களோடு வேறுபாடின்றி இணைந்துவிட்டேன்.

'என்னுடைய செயலின்படி நான் ஒழுகினால் தொண்டர் கூட்டத்துக்கும் எனக்கும் நெடுந்தூரம் இருக்கும். இனம் இனத்தோடே சேரும் என்பார்கள். இடுவதை அறியாத லோபிகளும் ஞானத்தை அறியாத அஞ்ஞானிகளுமே என்னுடைய கூட்டாளிகளாக இருந்தார்கள். என் இயல்புக்கு ஒத்த கூட்டமாக அவர்கள் கூட்டம் இருந்தது. அப்படி இருந்த என்னைத் தொண்டர் கூட்டத்தில் சேர்த்துவிட்டான் ஆண்டவன்.

'அதன் பின் அவர்கள் என்னைத் தள்ளிச் சென்றார்கள். முன்னேறாமல் நின்றால் கூட்டம் என்னை உந்தியது. நான் எவ்வளவு முயன்றாலும் பின்தங்க முடியாதுபோல் இருந்தது. வேகமான நீரோட்டத்தில் விழுந்துவிட்டால் அதன் போக்கிலே இழுத்துச் செல்லப்படுவதுதானே இயல்பு? அப்படி ஆகிவிட்டேன் நான்.

ஆச்சரியம்

'இதில் ஆச்சரியம் என்ன வென்றால், முன்பெல்லாம் முன்னேறுவ தென்பது இன்னது என்பதே தெரியாமல் இருந்த யான், பொல்லா இனத்தினின்றும் பிரிய வேண்டும் என்ற எண்ணமே அறியாத யான், இப்போது என்னையே அறியாமல் முன்னேறிக் கொண்டிருக்கிறேன். என் முயற்சி அன்று இது. நான் எந்தக் கூட்டத்தின் நடுவில் இருக்கிறேனோ அந்தக் கூட்டம் என்னைத் தள்ளிக் கொண்டே செல்கிறது; என்னை முன்னேற்றிக் கொண்டே போகிறது.'

வலியதும் எளியதும்

இரண்டு பொருள்கள் சேர்ந்தால் வலிய பொருள் எளிய பொருளைத் தன் வசம் ஆக்கிவிடும். எண்ணிக்கை எப்படியானாலும் உரத்தைப் பொறுத்து இந்த மாற்றம் நிகழும். ஒரு கலம் பாலில் சிறிதளவு மோர் கலந்தாலும் பால் முழுவதையும் திரியச் செய்துவிடும். பாலைவிட மோர் உரமுடையது. ஆனால் பாலில் நீர் கலந்தால் பாலாகவே நிற்கிறது. மனவலியுடையவர்கள் பெருங் கூட்டத்தைச் சேர்ந்தாலும் கூட்டம் முழுவதையும் தம் வயமாக்கி விடுவார்கள். நாம் மனத்திண்மை இல்லாதவர்களாதலின் சேர்ந்த இனத்திற்கு ஏற்ப மாறி விடுகிறோம்.

தொண்டர் கூட்டத்திற் சேர்ந்தால் அவர் போக்கை நாம் மாற்ற முடியாது. சாக்கடை கங்கையை அழுக்காக்க முடியுமானால், ஆனை கடலைக் கலக்க முடியுமானால், நாம் தொண்டர்களைக் குழப்பலாம்; மாற்றலாம். அதற்கு நம்மிடம் உரம் இல்லை. ஆகவே தொண்டர் கூட்டத்திலே சேர்ந்தவுடன் நம்மை அறியாமலே நம்மிடம் ஒரு மாற்றம் நிகழ்கிறது. நாம் பழைய இயல்பினின்றும் மாறித் தொண்டர்களின் நல்ல பண்புகளை மேற்கொள்கிறோம். இறைவன் திருநாமத்தைச் சொல்லும் பழக்கம் நமக்கு இல்லாவிட்டாலும் தொண்டர்கள், ''அரோகரா'' என்று முழங்கும்போது நாமும் முழங்குகிறோம். அவர்கள் அசைந்து ஆடும்போது நாமும் ஆடுகிறோம். அசையாமல் மௌனமாக இருக்கும்போது நாமும் அப்படியே இருக்கிறோம்.

'முன்பு நாம் இருந்த நிலைக்கும் இப்போது உள்ள நிலைக்கும், மலைக்கும் மடுவுக்கும் இடையே உள்ளது போன்ற வேறுபாடு இருக்கிறது. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, ''நாமா இப்படி ஆனோம்!'' என்ற வியப்பு உண்டாகிறது. நாம் ஆகிறதாவது! தொண்டர் கூட்டம் நம்மை அப்படி ஆக்கிவிட்டது. அந்தக் கூட்டத்தில் சேர நமக்குத் தகுதி இல்லாவிட்டாலும், முருகன் திருவருள் செய்தான்; தொண்டரோடு கூட்டுவித்தான். அப்படி அவன் செய்ததுதான் ஆச்சரியம்.' – இத்தகைய எண்ணங்கள் உள்ளத்தே பொங்கி வந்ததனால் அருணகிரியார்,

அன்பால் கெடுதல் இலாத் தொண்டரிற் கூட்டியவா!

என்று வியப்படைகிறார்.

தொண்டர்களின் இயல்பு

தொண்டர்களைச் சுட்டும்போது, 'அன்பால் கெடுதல் இலாத் தொண்டர்' என்று சொல்கிறார். அவர்களுக்கு எந்தவித மான கேடும் இல்லை. அவர்களிடம் உள்ள அன்பே அதற்குக் காரணம்.

"அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை"

என்று பெருமிதம் கொள்பவர்கள் அவர்கள். தனு கரணபுவன போகங்களை இறைவன் நமக்கு வழங்கியிருக்கிறான். அன்பு என்னும் பண்பு இருந்தால் இவ்வளவும் நமக்கு நலம் தரும். அது இல்லையானால் இவ்வளவும் நமக்கு மேலும் மேலும் ஆசையை உண்டாக்கிக் கேடு அடையச் செய்யும்.

"அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரம்தளிர்த் தற்று"

என்பார் திருவள்ளுவர். வாழ்க்கையில் பசுமை வேண்டுமானால் அன்பு வேண்டும். அன்பிலே சிறந்தது இறைவன்பால் கொண்ட அன்பு. அதுவே வாழ்க்கையின் மலர். அதன்பின் இறையருளநுபவ மாகிய கனியைப் பெற வேண்டும். உயிர் வாழ்க்கை வீணாகாமல் இருக்க வேண்டுமானால் அன்பு பெருக வேண்டும்.

"அன்பைப் பெருக்கிஎன் ஆருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே"

என்று தாயுமானவர் கூறினார். ஆருயிரைக் காக்கும் ஆற்றல் அன்புக்குத்தான் உண்டு. எல்லா வகையான கேடுகளும் அன்பு இன்மையால் உண்டாகின்றன. அன்பு பெருகினால் கெடுதல் இன்றி ஒழியும். ஆதலின் தொண்டர்களை,

அன்பால் கெடுதல் இலாத் தொண்டர்

என்று அருணகிரி முனிவர் சொன்னார்.

தொண்டர்கள் அன்பை வளர்த்துக் கேடுகளினின்றும் நீங்கின வர்கள். நாமோ அன்புக்கு மாறான பற்றையும் லோபத்தையும் வளர்த்து அஞ்ஞானிகளாக இருக்கிறோம். இரண்டு வகையின ருக்கும் எத்தனையோ காத தூரம். இரு வகையினரும் நேர் எதிர்

திக்கை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம். அவர்கள் வடக்கை நோக்கிப் போகிறார்கள்; நாம் தெற்கை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறோம். நமக்கும் அவருக்கும் இடையில் உள்ள தூரம் வரவர அதிகமாகிறதேயன்றிக் குறையவில்லை.

அப்படி உள்ளவரை முருகன் தொண்டரோடு கூட்டினான். அன்பை வளரச் செய்தான். பற்றுள்ளமும் அறியாமையும் மெல்ல மெல்லப் போகச் செய்தான். இவ்வாறு செய்தவன் எத்தகைய வன்?

கிரௌஞ்ச சங்காரம்

கிரௌஞ்ச வெற்பை அடுதலைச் சாதித்த வேலோன்.

ஆண்டவன் தன் திருக்கரத்தில் வேலை வைத்திருக்கிறான். அது ஞானசக்தி. ஞானம் அஞ்ஞானத்தைப் போக்கிவிடும். மலை உருவம் கொண்ட அசுரனை அந்த வேல் அழித்தது. கிரௌஞ்சம் என்பது அன்றிற் பறவைக்குப் பெயர். ஆணும் பெண்ணும் இணை பிரியாமல் வாழ்வது அன்றிலின் இயல்பு. அன்பின் உருவம் அது என்றே சொல்லிவிடலாம். அத்தகைய பறவையின் உருவத்தைக் கொண்டமையால் கிரௌஞ்ச கிரி என்று பெயர் வந்தது. ''குருகு பெயர்க் குன்றம்'' என்று தமிழில் பாடியிருக்கிறார்கள். உருவம் அன்புக்கு எடுத்துக் காட்டாகிய அன்றிலைப் போல இருந்தாலும் உள்ளம் கல் போன்றது; இரக்கம் இல்லாதது; மலைதானே? தாமரையைப் போலக் கல்லிலே வடித்து வண்ணம் தீட்டினால் அது கண்ணுக்குத் தாமரையாகத் தோற்றம் தரலாம். ஆனால் தொட்டுப் பார்த்தால் மென்மையாக இருக்குமா? பாறையைத் தொட்டால் எப்படி வன்மையாக இருக்குமோ அதே வன்மையைத் தான் அதிகம் உணரலாம். அன்றில் உருவம் கொண்ட அசுரன் கல்லாக, மலையாக அன்பு இல்லாமல் இரக்கம் இல்லாமல் இருந்தான். அன்றிலைப் போலவே பறக்கும் ஆற்றல் அவனுக்கு இருந்தது. ஆனால் அந்த ஆற்றலால் அவன் செய்த கொடுமை மிகுதியாயிற்று. பறந்து சென்று திடீரென்று எங்கேனும் இறங்கி அங்குள்ள மக்களையெல்லாம் அழுத்தி அழித்து விடுவான். பசுத்தோல் போர்த்த புலியைப் போலக் கொண்ட வேடத்துக்கு மாறான கொடுமைகளைப் புரிந்தான். அவனை முருகன் வேல்

எறிந்து கொன்றான். கொடுமையையும் அன்பின்மையையும் வேல் அழித்தது.

'பொல்லாதவர்களை அழிப்பதற்கென்றே கையில் வேலை ஏந்தி நிற்கிறவன் முருகன். நான் பொல்லாதவனாக இருந்தும் அதைப் பொருட்படுத்தாமல் என்னை நல்ல வழியில் சேர்த்து விட்டான். இதுவும் ஓர் ஆச்சரியந்தான்.

'என்னை நானே திருத்திக் கொண்டிருக்கலாம். அது எளிய காரியம் அன்று என்று எண்ணி, எனக்கு எந்தப் பொறுப்பும் இல்லாத வகையில், எனக்கு நன்மை வரும்படி அருளிவிட்டான். என்னைத் தொண்டர் கூட்டத்திற் சேர்த்துவிட்ட பிறகு என் முன்னேற்றத்தைப் பற்றி நான் கவலைப்பட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. ஒருவர் இருவரானால் அவர்களை விட்டு விலகிப் போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. பெருங்கூட்டத்துக்கு நடுவே இழுத்துப் பொருத்திவிட்டமையால், எப்படி விலகிச் செல்ல முடியும்?'

சத்சங்கம்

அடியார் கூட்டுறவு எளிதிலே நம்மை உய்விக்கும்.

''சூரில் கிரியில் கதிர்வேல் எறிந்தவன் தொண்டர்குழாம்
சாரில் கதியன்றி வேறிலை காண்''

என்று முன்பும் இந்தச் சத்சங்கத்தைப் பற்றி அருணகிரியார் சொல்லியிருக்கிறார். அடியார் நடுவே இருக்கும் பேறு கிடைத்து விட்டால் பக்குவ வகைகள் யாவும் ஒவ்வொன்றாக நம்மை வந்து அடையும்.

''உடையாள் உன்றன் நடுஇருக்கும்;
உடையாள் நடுவுள் நீஇருத்தி;
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால், அடியேன்உன்
அடியார் நடுவுள் இருக்கும்அரு
ளைப்புரி யாய்;பொன் னம்பலத்தெம்
முடியா முதலே, என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே.''

என்பது திருவாசகம். தாயுமானவரோ,

''அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே.''

என்று வேண்டுகிறார்.

'இந்த அரிய சேர்க்கையை முருகன் செய்வித்தான். நானே முயலாமல், அவனே என்னைக் காப்பாற்ற இதுதான் வழி யென்று திருவுள்ளங்கொண்டு சேர்ப்பித்தான். அதன் பயன் என்ன தெரியுமா?' தொண்டர் கூட்டத்தினால் விளைந்த பயனை மேலே சொல்லுகிறார்.

சிறையினின்றும் விடுதலை

பிறவிஅற, இச்சிறை விடுதலைப் பட்டது;
விட்டது பாச வினைவிலங்கே.

சிறையில் ஒருவன் அடைபட்டிருக்கிறான். அவன் கால்களில் தளை பூட்டியிருக்கிறார்கள். எப்போதுமே ஒரே சிறையில் அவனை வைத்திருப்பதில்லை. ஆறு மாதம், ஒரு வருஷம், இரண்டு வருஷம் என்று வெவ்வேறு சிறைக்கு மாற்றிக் கொண் டிருக்கிறார்கள். இடம் மாறினாலும் சிறை வாழ்க்கை மாறுவ தில்லை. சிறை வாசத் தண்டனைக் காலத்தில் காலிலும் கையிலும் விலங்குகளுடனும் பல சிறைகளை அவன் பார்த்துவிட்டான்.

அவனுக்கு விடுதலை கிடைக்கிறது. முதலில் அவனுடைய தளைகளை அகற்றி விடுகிறார்கள். பிறகு சிறையினின்றும் வெளியே அனுப்பிவிடுகிறார்கள். இனிமேல் வேறு எந்தச் சிறைக் கூடத்துக்கும் போக வேண்டியதில்லை.

அவனோடு பழகியவன் ஒருவன் அவனைச் சந்திக்கிறான். அவன் சிறையில் வாடியதை அறிந்தவன் அவன். ''என்ன அப்பா, சமாசாரம்?'' என்று வியப்புடன் சிறையில் இருந்தவனை அவன் கேட்கிறான். அவன், ''எனக்கு விடுதலை கிடைத்துவிட்டது'' என்று சொல்கிறான்.

''சென்னைச் சிறையில் இருந்தாயே!'' என்று பழகியவன் கேட்கிறான்.

''அதை விட்டு வெளியே வந்துவிட்டேன்'' என்கிறான்.

''பாவம்! உன் கையில் விலங்கு போட்டிருந்தார்களே!'' என்று வெளியில் வாழ்பவன் கேட்கிறான்.

''ஆம் ; விலங்குகளை எடுத்துவிட்டார்கள்'' என்று மகிழ்ச்சியுடன் சொல்கிறான்.

விலங்கை எடுத்ததும் சிறையினின்றும் வெளிவிட்டதும் விடுதலைக்குரிய செயல்கள். ''விலங்கைத் தறித்தார்கள்; இந்தச் சிறைக்கு வெளியே கொண்டு வந்தார்கள்; 'இனி இந்த விடுதலை உனக்கு நிரந்தரமானது; வேறு சிறைக்குப் போக வேண்டாம்' என்று சொல்லிவிட்டார்கள்'' என்று சொன்னால் நிகழ்ச்சிகள் நடந்த முறையில் சொல்வதாக இருக்கும். அவனோ நிரந்தர விடுதலையை அடைந்த மகிழ்ச்சியில் அதையே முதலில் சொல்கிறான்.

சொல்லும் முறை

ஒருவனுக்குப் பல இடங்களில் கடன் இருந்தது. சில்லறையாகவும் பெருந்தொகையாகவும் பல பேரிடம் கடன் வாங்கியிருந்தான். அதனால் மிகவும் இடர்ப்பட்டான். எப்படியோ முயற்சி செய்து தொழில் நடத்தி வெவ்வேறு யுக்தி செய்து கடனை எல்லாம் அடைத்து விட்டான். அவன் இடர்ப்பட்ட போது பார்த்த நண்பன் வேற்றூர் சென்று பல ஆண்டுகளுக்குப் பின் ஊர் வந்தான்; ''இப்போது எப்படியப்பா இருக்கிறாய்?'' என்று கேட்கிறான். அவன், ''கடனை யெல்லாம் தீர்த்து விட்டேன்'' என்று தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வான். பிறகே கடனினின்றும் விடுதலை அடைவதற்கு முன் நிகழ்ந்த வற்றை ஒவ்வொன்றாக எடுத்துச் சொல்வான்.

இந்தப் பாட்டில் அருணகிரியார் தமக்கு உண்டான இன்பத்தை, தாம் பெற்ற பேற்றை, இவ்வண்ணந்தான் சொல்கிறார். காரணத்தை முதலில் சொல்லிப் பிறகு காரியத்தைச் சொல்வது பெரும்பாலான முறை. மகிழ்ச்சி நிறைவில் இந்த முறை மாறும். காரியத்தை அல்லது விளைவை முன்பு சொல்லிப் பிறகு காரணத்தைச் சொல்லத் தோன்றும். ஒரு கோயிலுக்குள் போவதற்கு முன் முதலில் திருவாசலும், பிறகு மகா மண்டபமும், பிறகு அர்த்த மண்டபமும், அப்பால் கர்ப்பக் கிருகமும் தோன்றும். உள்ளே

போனவன் திரும்பிப் பார்த்தால் முதலில் கர்ப்பக்கிருகமும், பிறகு அர்த்த மண்டபமும், பின்பு மகா மண்டபமும், அப்பால் திருவாசலும் தோன்றும். அடைய வேண்டிய இடத்தை அடைந்த அருணகிரிநாதர் இப்போது திரும்பிப் பார்த்துச் சொல்கிறார்.

நிகழ்ந்த முறை என்ன? முதலில் விலங்கு போயிற்று; பிறகு சிறை விட்டது; அப்பால் எந்தச் சிறையிலும் வாசம் செய்யாத நிலை வந்தது, இதுதான் நிகழ்ந்த முறை, கூறும் முறையோ ஆனந்தாதிசயப் பெருக்கினால் நேர்மாறாக இருக்கிறது. சிறை வாசமே அற்றுப் போனதைச் சொல்லி, அதற்குமுன் இருந்த சிறையை விட்டதை அப்பால் சொல்லி, விலங்கு அறுந்ததைக் கடைசியில் சொல்கிறார்.

பிறவி அற, இச்சிறை விடுதலைப் பட்டது;
விட்டது பாச வினைவிலங்கே.

பிறவி அற்றது, சிறைவாசம் நிரந்தரமாக நீங்கிய இன்பம்; முடிந்த முடிபு. இச்சிறை விடுதலைப்பட்டது, கடைசியாக இருந்த சிறையினின்றும் வெளிப்பட்டது. பாச வினைவிலங்கு விட்டது என்பதே தளை அற்ற நிலை.

இனிமேல் பிறவாத நிலைதான் மோட்சம்.

''மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே''

என்று மாணிக்கவாசகர் பாடுகிறார். கள்ளப்புலக்குரம்பை என்றது இப்போது நாம் வாழும் உடம்பு. இதுபோன பிறகு மறுபடியும் இங்கு வாராத நிலை வரவேண்டும். பிறவிகள் மேலும் மேலும் உண்டாவதற்கு வினையே காரணம். வினைபோக, உடல்போக, பிறவி போக வேண்டும். தொண்டர் கூட்டத்தில் முருகன் கூட்டுவித்ததனால் இவை நிகழ்ந்தன.

வினை நீக்கம்

முதலில் பாசத்தினால் உண்டான வினைகள் ஒழிந்தன. வினைகள் இரண்டு வகையானாலும் வினை என்னும் பொதுமை யினால் 'விட்டது' என்று ஒருமையாகச் சொன்னார். தொண்டர் கூட்டத்தின் முதல் விளைவு இது.

விட்டது பாச வினைவிலங்கே.

இரு வினைகளும் பிறவிக்குக் காரணமாக இருப்பவை. தீவினை இரும்பு விலங்கு போன்றது; நல்வினை பொன்விலங்கு போன்றது. வினையே பாசக் கட்டில் நம்மை இருக்கச் செய்கிறது. பாசமும் விலங்கு; வினையும் விலங்கு. ஒன்றனோடு ஒன்று நெருங்கிய தொடர்புடையது. இருவினை ஒப்பு உண்டானால், உடனே மலபரிபாகம் ஏற்படும். பாசம் என்பதும் மலம் என்பதும் ஒன்றே. பாசத்திற்குட்பட்டுச் செய்யும் வினையாதலின் பாசவினை என்றார்.

''தறுகட் பாசக் கள்ளவினை''

என்பது திருவிளையாடற் புராணம்.

தேகம் என்னும் சிறை

''வினைப்போகமே ஒரு தேகங் கண்டாய் வினை
தான் ஒழிந்தால்
தினைப்போ தளவும் நில்லாது கண்டாய்''

என்று பட்டினத்தார் கூறுவார். வினைவிலங்கு ஒழிந்தால் தேகம் என்னும் சிறை நில்லாது. வினையென்னும் விலங்கு விட்டதன் பின் நடந்ததைச் சொல்கிறார்.

இச்சிறை விடுதலைப் பட்டது.

இச் சிறை என்றது இந்த உடம்பை. இருவினையின் விளைவாக வருவது இது. காரணமாகிய வினை அற்றபோது காரியமாகிய உடம்பும் அற்றுவிடும்.

''ஏழையின் இரட்டைவினை ஆயதொர் உடற்சிறை
இராமல் விடுவித்தருள் நியாயக்காரனும்''

என்று திருவகுப்பில் இதை விளக்கிச் சொல்லியிருக்கிறார். குற்றம் செய்தவனை இன்ன இன்ன குற்றத்துக்காக இத்தனை காலம் சிறையில் இருக்க வேண்டும் என்று தண்டிக்கிறார்கள். நாம் பாவம், புண்ணியம் என்ற இரண்டு குற்றங்கள் செய்ததனால் இந்த உடம்பாகிய சிறையில் இறைவன் தள்ளியிருக்கிறான்.

உடம்பை உயிர் வாழும் வீடு என்று சொல்லாமல் சிறை யென்று சொல்வது பொருந்துமா? வீட்டுக்கும் சிறைக்கும் தோற்றத்தில் பலவகை ஒற்றுமைகள் உண்டு. இரண்டும் கட்டிடங்களே. இரண்டிலும் கதவும் வாசலும் சன்னலும் அறை களும் சுவர்களும் உண்டு. ஆனால் வீட்டிலே சுதந்தரம் உண்டு. சிறையிலே அது இல்லை. நாம் வேண்டியபோது வீட்டுக்குள் சென்று கதவைச் சாத்திக் கொள்கிறோம். சிறையிலோ குற்றவாளி யின் விருப்பத்துக்கு மாறாக அவனை உள்ளே தள்ளி வெளியிலே பூட்டுப் போடுகிறார்கள்.

உடம்பில் வாழ்வதும், இதிலிருந்து போவதும் நம்முடைய கையில் இல்லை. அதற்கு நம்மிடம் சுதந்தரம் இல்லை. இறைவனே நம் வினைக்கு ஏற்ப உடம்பைத் தருகிறான். வினை ஒழிந்தால் விடுதலை செய்கிறான். அதனால்தான் இதைச் சிறை என்றார். சிறையில் இருப்பவனுக்குத் துன்பந்தான் உண்டாகும். இந்த உடம்பில் வாழ்பவர்களுக்கும் துன்பமே கிடைக்கிறது.

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்"

என்பது மணிமேகலை.

வினைவிலங்கு விட்டவுடன் இந்த உடம்பாகிய சிறை யினின்றும் விடுதலை உண்டாயிற்று.

இச்சிறை விடுதலைப் பட்டது.

பிறவி அறுதல்

இந்தச் சிறை வாழ்வினின்றும் விடுதலை பெறும் பேறு கிடைத்தது. இது தொண்டர் கூட்டத்திற் சார்ந்தமையினால் கிடைத்த இரண்டாவது விளைவு. இந்த உடம்பு போனால் போதுமா? இனி வேறு ஓர் உடம்பிலே புகக் கூடாது. கட்டிப் போட்டிருந்த ஆட்டை அவிழ்த்துவிடுகிறான் ஒருவன். அது விடுதலை பெறுவதாக எண்ணுகிறது. ஆனால் அவிழ்த்து விட்ட வன் அதைக் கசாப்புக் கடைக்கு ஓட்டிச் செல்கிறான். அதை அவிழ்த்துவிட்ட போது அப்போதைக்கு கொண்ட மகிழ்ச்சியி னால் பயன் உண்டோ? அதுபோல இந்த உடம்புச் சிறை யினின்றும் விடுதலை கிடைத்தால் மட்டும் போதாது. எப்போதுமே எந்தச் சிறைக்கும் போகாமல் இருக்க வேண்டும். அதுவே

இடையீடு படாத பேரின்பம். அடுத்தடுத்துச் சிறை போன்ற உடம்பில் புகுவதைத்தான் பிறவி என்று சொல்கிறோம். இந்த உடம்பாகிய சிறை போனதோடு நிற்கவில்லை; இனி வேறு உடம்புகளில் புகும் பிறவித் துன்பமே அற்று விட்டதாம்.

''பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்''

என்பது மணிமேகலை. அந்தப் பேரின்ப நிலையே முடிந்த முடிபு. அது கிடைத்துவிட்டது.

பிறவி அற.

வினைகள் போயின; அதன் பயனாக உடம்பென்னும் சிறை விட்டது; அப்பால் பிறவியே அடியோடு இல்லையாயிற்று. இது காரண காரிய முறை. இதை மாற்றி ஆனந்தத்தினால் உண்டான வியப்புணர்ச்சியில் மூழ்கிய அருணகிரியார் காரியத்தை முன் வைத்துக் காரணத்தைப் பின்வைத்துக் காரியகாரண முறையில் சொல்கிறார்.

பிறவி அற, இச்சிறை விடுதலைப் பட்டது;
விட்டது பாசவினை விலங்கே.

இலக்கண சமாதானம்

''இந்தப் பாட்டை இந்த உலக வாழ்வில் இருந்து கொண்டே பாடினார் அருணகிரிநாதர். 'உடம்பாகிய சிறை விட்டுவிட்டது' என்று சொல்கிறாரே! அது எப்படிப் பொருந்தும்?'' என்ற ஐயம் இங்கே தோன்றலாம். துணிவு பற்றி எதிர்காலத்தை இறந்த காலத்தில் கூறும் வழக்கு ஒன்று தமிழில் உண்டு. ''அங்கே போனாயோ, தொலைந்தாய்'' என்று சொல்வதைக் கேட்டிருக் கிறோம். இது எதிர்காலத்தில் நிகழப் போவது துணிவு என்பதை எண்ணிச் சொல்வது. அப்படி வினைவிலங்கு விடுவதும், உடற் சிறையினின்றும் விடுதலை பெறுவதும், பிறவி அறுவதும் உறுதியானமையால் இப்படிச் சொன்னார் என்று, இலக்கணத்தை ஆதாரமாகக் காட்டிச் சமாதானம் சொல்லிவிடலாம்.

ஜீவன் முக்தி

இந்த இடத்தில் அப்படிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. முக்தியின்பத்தை இந்த உடம்போடு வாழும் போதே

பெறலாம் என்பது, இந்த நாட்டிலுள்ள பெரியோர்களின் துணிபு. அந்த நிலையை ஜீவன் முக்தி என்று சொல்வார்கள். இந்த உடம்பில் இருந்து வாழ்ந்தாலும் சரீராபிமானம் இல்லாமல் வாழும் நிலை அது. புளியங்காயில் ஓடு வேறு காய் வேறு என்று பிரித்துப் பார்க்க முடியாது. உள்ளே உள்ள பகுதியும் மேற் பகுதியும் இணைந்து ஒட்டியே இருக்கும். காய் பழுத்துப் பழம் ஆனால் ஓட்டுக்குள்ளே பழம் இருந்தாலும் இரண்டுக்கும் ஒட்டுறவு இராது. தேங்காயில் நீர் வற்றி உள்ளே உள்ள பருப்பு நன்றாகக் காய்ந்து கொப்பரையாகிவிட்டால் ஓட்டுக்கும் அதற் கும் சம்பந்தமே இராது. ஆட்டிப் பார்த்தால் கொப்பரை தனியே குடுகுடுவென்று ஆடும் ஒலி கேட்கும். ஜீவன் முக்தர்கள் இந்த உடம்பில் ஒட்டாமல், இந்திரிய வசப்படாமல், தாமரை இலைத் தண்ணீர்போல் இருப்பார்கள்.

இந்த உடம்பில் இருக்கும்போதே அவர்கள் வினைவிலங்கு தறிக்கப் பெற்றவர்களாய், சரீர அபிமானம் போனவர்களாய், இனிமேல் பிறவியே இல்லாதவர்களாய்விடுகிறார்கள். விடுதலை பெற்றவன் தளை நீங்கித் தன் அறையிலிருந்து புறப்பட்டு வருகிறான். இன்னும் அவன் சிறையின் புறவாசலை அடைய வில்லை; சிறைக் கட்டிடத்துக்குள்தான் இருக்கிறான். ஆயினும் அவன் விடுதலை பெற்றவனே. அந்த நிலையில் இருப்பவர்களே ஜீவன் முக்தர்கள்.

சத்சங்கமும் ஜீவன் முக்தியும்

இறைவன் திருவருளைப் பெற்றவர்கள் அதனால் விளைந்த பெருவிளைவாக ஜீவன் முக்தி நிலையை அடைவார்கள். அருண கிரிநாதர் சிறந்த ஜீவன் முக்தர். இறைவன் சத்சங்கத்தைச் சேரும் படி தம்மைச் செலுத்தினான்; அதனால் ஜீவன் முக்தி கிடைத்தது என்று இந்தக் கவியில் சொல்கிறார். இதே கருத்தை ஆதிசங்கரர் பஜகோவிந்தத்தில் அருளியிருக்கிறார்.

"ஸத்ஸங் கத்வே நிஸ்ஸங் கத்வம்
நிஸ்ஸங் கத்வே நிர்மோ ஹத்வம்
நிர்மோ ஹத்வே நிச்சல தத்வம்
நிச்சல தத்வே ஜீவன் முக்தி."

என்பது அவர் திருவாக்கு. ''அன்பர்களின் உறவினாலே தனிமை கிடைக்கும்; அதனால் மோகம் அற்ற நிலை உண்டாகும்; அதனால் சலனமற்ற மோன நிலை சித்திக்கும்; அதனால் ஜீவன் முக்தி கிடைக்கும்'' என்பது இதன் கருத்து. சத்சங்கமாகிய தொண்டர் உறவு ஜீவன் முக்தி யென்னும் கனியாகக் கனிந்து நலம் தரும். அருணகிரி நாதரும் தொண்டரிற் கூட்டிய பேரருளி னால் பிறவியறும் நிலை வந்ததென்று சொன்னார்.

நிறைவு

இந்த நூறாவது பாட்டு எவ்வளவு நிறைவாக அமைந் திருக்கிறது! பிறவி அறுவது என்பதுதான் அந்த நிறைவு. பிரபஞ்சச் சேறு கழிந்ததை முதல் பாட்டில் சொன்ன அருணகிரி நாதர், பிறவிப் பிணி நீங்கிய பேரின்பத்தை இறுதிப் பாட்டில் சொல்லித் தம் மன நிறைவை வெளியிடுகிறார். வேறு எந்த நிறைவும் அப்போதைக்கு நிறைவு போலத் தோன்றிப் பின்பு குறைவுபடும். வயிறு நிறையச் சாப்பிடுகிறோம். ஆனால் சில மணி நேரங்களில் அந்த நிறைவு இருப்பதில்லை. இந்திரிய சுகங்கள் யாவுமே முழு நிறைவை அடைவன அல்ல. இறைவன் குறைவிலா நிறைவானவன். அவனோடு ஒன்றுவதே என்றும் குறையாத, என்றும் மாறாத, நிறைவான வாழ்வு. அதுதான் பரமசுகம்.

''ஏக போகமாய் நீயும் நானுமாய்
இறுகும்வகை பரமசுகம் அதனையருள்''

என்பது திருப்புகழ். அந்தப் பரமானந்த நிறைவைச் சொல்லி அருணகிரி நாதர் என்னும் பரமோபகாரி இந்த அற்புதமான நூலை நிறைவு செய்கிறார்.

★

இடுதலைச் சற்றும் கருதேனைப்
போதம் இலேனை அன்பால்
கெடுதல் இலாத்தொண்ட ரிற்கூட்
டியவா! கிரௌஞ்சவெற்பை

அடுதலைச் சாதித்த வேலோன்;
பிறவி அறஇச்சிறை
விடுதலைப் பட்டது; விட்டது
பாச வினைவிலங்கே.

[கிரௌஞ்ச மலையை அழிக்கும் காரியத்தை நன்கு நிறைவேற்றிய வேலாயுதக் கடவுள், பிறருக்கு ஈவதைச் சிறிதளவேனும் எண்ணாதவனும், அறிவு இல்லாதவனுமாகிய அடியேனை, அன்பினால் யாதொரு கெடுதலும் இல்லாத அன்பர்களிலே ஒருவனாகச் சேர்ப்பித்தது என்ன ஆச்சரியம்! அதனால் பிறவியே அடியோடு அறும்படியாக, இந்த உடம்பாகிய சிறையில் வாழும் வாழ்வு விடுபட்டது; அதற்கு முன் பாசத்தால் அமைந்த இரு வினைகளாகிய விலங்குகளும் நெகிழ்ந்து போயின.

இடுதல் – ஈதல். போதம் – ஞானம்; அறிவு. அன்பு காரணமாகக் கெடுதலே இல்லாமல் செய்துகொண்ட தொண்டர். அன்பால் இலா என்று கூட்டுக. தொண்டரின் – தொண்டரோடு. கூட்டியவா – கூட்டியவாறு என்ன வியப்பு. இறைவன் என்பால் உள்ள அன்பினாலே கூட்டினான் என்ற பொருள் பெறும் வகையில், 'அன்பால் கூட்டியவா' என்றும் கூட்டிப் பொருள் கொள்ளலாம். இச்சிறை என்பது உடம்பில் வாழும் வாழ்வை. விடுதலைப்பட்டது – விடுபட்டது, பாசத்தால் அமைந்த வினை. விட்டது: சாதி ஒருமை.

பின்னாலே உண்டான பெரு விளைவுகளை எண்ணும்போது அவற்றுக்குக் காரணமாக அமைந்த நிகழ்ச்சி பெரு வியப்பை உண்டாக்கியது.

பிறவி அற: அற என்ற எச்சம் காரியப்பொருட்டு. இச்சிறை விடுதலைப்பட்டது காரணம்; பிறவி அற்றது காரியம்.]

தொண்டர்களின் உறவு ஜீவன்முக்தி நிலைவரையில் நம்மைக் கொண்டு சேர்க்கும் என்பது கருத்து.

இது கந்தர் அலங்காரத்தில் நூறாவது பாட்டு.

உள்ளம் குளிர்ந்தது

முன்னுரை

கருணைக் கடலாகிய முருகப்பெருமான் திருவருளால் இந்தப் புத்தகத்தோடு கந்தர் அலங்கார விரிவுரைகள் நிறைவி பெறுகின்றன. அலங்காரம் என்ற பெயரோடு முதல் புத்தகம் மலர்ந்தது; உள்ளம் குளிர்ந்தது என்ற பத்தொன்பதாம் புத்தகமாகிய இதனோடு விரிவுரை முடிகிறது. இனி இருபதாவது புத்தகத்தில் கந்தரலங்காரம் முழுவதையும் ஒருங்கே பார்த்துத் தோன்றும் கருத்துக்களையும், அருணகிரியாருடைய சொல்லமைப்பிலும் பொருளமைப்பிலும் உள்ள சிறப்புக்களையும், அவர் சுவையாகக் கருத்தைச் சொல்லும் முறைகளையும், பிறவற்றையும் எழுதலாம் என்று எண்ணியிருக்கிறேன். ஒருவகையில் அந்தப் புத்தகம் முழுவதும் கந்தர் அலங்காரத்தின் ஆராய்ச்சியாக அமைய வேண்டும் என்பது எளியேன் ஆசை. முருகன் திருவருள் நன்கு நிறைவேற்றுமென்று நம்புகிறேன்.

இந்தப் புத்தகத்தை வெளியிடுவதற்குமுன் நிகழ்ந்த துயர நிகழ்ச்சி ஒன்றைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. 17-ஆம் மலராகிய 'இரு விலங்கு' என்பதன் முகவுரையில், சிறந்த அநுபூதி மானாகிய ஸ்ரீ வடகுமரை அப்பண்ண சுவாமிகளைப் பற்றி எழுதி யிருந்தேன். அவர்கள் மிக்க ஆர்வத்தோடு இந்த விரிவுரைகளைப் படித்து இன்புற்று ஆசி கூறுவார்கள்; வாயார வாழ்த்துவார்கள். ஆகவே இந்த வரிசை நிறைவேறுவது கண்டு மிகவும் ஆனந்தம் அடைவார்கள் என்று நம்பியிருந்தேன். ஆனால் இறைவன் திருவுள்ளம் வேறாக இருக்கிறது. அவர்கள் சென்ற 1962-ஆம ஆண்டு செப்டம்பர் மாதம் 28-ஆம் தேதி இறைவனோடு இரண்டறக் கலந்தார்கள்.

நல்ல பாட்டு, நல்ல உரை, நல்ல பண்டம் ஆகியவற்றில் அவர்களுக்கு ஈடுபாடு அதிகம். எல்லோரிடமும் எளிமையாகப் பழகும் அவர்களிடம் குழந்தைத் தன்மை மலர்ந்திருக்கிறது. எத்தனை சமயங்களில் வஞ்சகமின்றி, "இந்த விளக்கம் அருமை யாக இருக்கிறது," "இந்த உவமை அற்புதமாக இருக்கிறது,"

"இந்த நுட்பத்தை மிகவும் தெளிவாக விளக்கியிருக் கிறீர்கள்" என்று பாராட்டிப் பேசுவார்கள்! எழுதுவார்கள்! அருளநுபவத்தில் கனிந்த அவர்கள் அருள்மயமாக விளங்கினார்கள். சோதியை உள்ளே வைத்து வழிபட்ட அவர்கள், "ஓங்காரத்து உள் ஒளிக் குள்ளே முருகன் உருவங்கண்டு தூங்கார்" என்பதைக் கேட்டால் போதும்; தம்மை மறந்து அமர்ந்துவிடுவார்கள். சிலசமயம் அலங்காரப் பாடல்களைக் கேட்டு ஆனந்தக் கண்ணீர் சொரி வார்கள். திடீரென்று எதையோ கண்டவர்கள் போல வாய்விட்டு ஹஹ்ஹஹ்ஹா என்று சிரிப்பார்கள். அந்த மாதிரிச் சிரிப்பை எங்கும் கேட்க முடியாது. அவர்கள் உள்ளத்தில் படர்ந்த ஒளி அவர்களுடைய கண் வழியே சுடர்விடும். அந்தக் கண்களைக் கண்டு அடிமையானவர் பலர். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையவர்கள் அவர்களுடைய குழந்தைத் தன்மையைக் கண்டு சில கீர்த்தனங்களைப் பாடித் தந்திருக்கிறார். கவியுள்ளம் அறிந்து இன்புறும் ஆற்றல் அவர்களிடம் பொருந்தி யிருந்தது. வண்டின் ரீங்காரம், குயிலின் இன்னிசை, பறவைகளின் ஒலி இவற்றைக் கூர்ந்து கவனித்து இன்புறுவார்கள். அழகிய மலரும் அழகிய வானமும் அவர்களுடைய உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். அவற்றிலே இறையொளியைக் கண்டு கூத்தாடுவார்கள்.

அவர்கள் திவ்யப் பிரபந்தப் பாடல்களை இசையுடன் சொல்லிக் கேட்டவர்களும், அபிராமி அந்தாதியை உரத்த குரலோடு உலகன்னையிடம் முறையிடுவதைப் போலவே எண்ணிப் பாடுவதைக் கேட்டவர்களும் அந்தக் குரலில் இழைந்த உணர்ச்சியை உணர்ந்து தாமும் அந்த உணர்ச்சியிலே கரைவார்கள். அந்த உணர்ச்சியை ரசிகருடைய உணர்ச்சியென்று சொல்வதா? அழகுணர்ச்சி என்பதா? அருளுணர்ச்சி என்பதா?

ஒன்றை நல்லதென்று எண்ணினால் அதை வாயாரப் பாராட்டும் வள்ளலாக அவர்கள் விளங்கினார்கள். நல்லதை நல்ல தென்று சொல்லத் தயங்கும் லோபத் தன்மை அவர்களிடம் அணு வளவும் இல்லை. நல்ல பாட்டைக் கண்டால் அதைச் சுவைத்துச் சுவைத்துத் தாம் சுவைத்த முறையைச் சொல்வார்கள்; கடிதத்தில் எழுதுவார்கள்.

இப்போது–?

இதுதான் உலகம்!

இந்தப் புத்தகத்தைக் காண அவர்கள் இல்லை. பாடல்களின் விளக்கவுரைகள் முடிந்ததற்காக வாழ்த்துக் கூற அவர்கள் இல்லை, ஆனாலும் எளியேனுடைய உள்ளத்தில் அவர்கள் இருக்கத்தான் இருக்கிறார்கள். இதோ அவர்கள் கண்ணொளி சுடர் வீசுகிறது. இதோ அவர்கள் சிரிப்பொலி கேட்கிறது. ஆம்! அவர்கள் ஆசி எப்போதும் என் உள்ளத்தை நிறைவாக்கி வைக்கும் என்பதில் ஐயம் இல்லை.

★

கந்தர் அலங்காரம் நூறு என்று வரையறை இருந்தாலும் ஏட்டுச் சுவடிகளில் அதிகமாக ஆறு பாடல்கள் கிடைத்தனவென்று இந்நூலை முதலில் அச்சிட்ட காலம் தொடங்கியே சொல்லி அவற்றையும் சேர்த்தே பதிப்பித்து வந்திருக்கிறார்கள். இந்த ஆறு பாடல்களின் சொற்பொருளமைதி, இவையும் அருணகிரியார் வாக்கு என்பதைப் புலப்படுத்துகின்றன. இவற்றின் விளக்கச் சொற்பொழிவுகள் இந்தப் புத்தகத்தில் உள்ளன. நூறு பாடல்கள் ஆனவுடன் காணப்படும் பயனுக்கு, இந்த ஆறு பாடல்களுக்குப் பின்னே விளக்கம் கூறியிருக்கிறேன். காப்பு, நூல், அதிகப் பாடல்கள், பயன் ஆகிய எல்லாம் சேர்ந்து ஓர் அழகிய கணக்காக அமைந்திருக்கின்றன. நூற்றெட்டுப் பாடல்களாக இருப்பது பாராயணம் செய்பவர்களுக்கு அஷ்டோத்தர சத நாமங்களை நினைவூட்டும் அல்லவா?

★

பயனைத் தவிர மற்ற ஆறு பாடல்களில் மூன்று முன்னிலைப் பரவலாகவும் மூன்று படர்க்கைப் பரவலாகவும் உள்ளன. முருகன் திருவுருவம் உள்ளத்தில் குதி கொண்டதை ஒரு பாடலும் (1), அத்தோற்றமே எந்த இடத்திலும் வெளியே தோற்றுவதை ஒரு பாடலும் (3) சொல்கின்றன.

"–அவ்விடத்தில்
பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்தோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும் – கச்சைத்
திருவரையும் சீறடியும் செங்கையும் ஈரா

றருள்விழியும் மாமுகங்கள் ஆறும் – விரிகிரணம்
சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற''

என்று கந்தர் கலிவெண்பாவில் குமரகுருபரர் விண்ணப்பித்துக் கொள்கிறார். அருணகிரி நாதரோ, ''எங்கே நினைப்பினும் அங்கே என் முன் வந்து எதிர் நிற்பனே'' என்று அந்த அநுபவம் தமக்குக் கைவந்ததென்று சொல்கிறார். யமன் வந்தாலும் அஞ்சாமல் நிற்கும் உறுதிப்பாடு தமக்கு இருப்பதை ஒரு பாட்டில் சொல்கிறார் (6). அந்தப் பாடல் இறுதிப் பாடலாக அமைந்திருப்பது ஒரு வகையில் பொருத்தமாக இருக்கிறது. இப்படி மூன்று பாடல்கள் அருண கிரிநாதர் பெற்ற உயர்ந்த அநுபவத்தைப் பேசுகின்றன (1, 3, 6). மற்ற மூன்று பாடல்கள் நமக்காகப் பாடியவை; நாம் இறை வனிடம் விண்ணப்பித்துக் கொள்ள வேண்டியவை. 'இராப்பகல் அற்ற இடம் காட்டி அருள வேண்டும்.' 'ஆவிக்கு மோசம் வரும் என்பதை உணர்ந்து நின் திருவடியைச் சேவிக்க வேண்டும்.' 'உள்ளத்துயரை ஒழித்தருள வேண்டும்' என்று அந்த மூன்று பாடல்களிலும் மூன்று வகை வேண்டுகோள்கள் இருக்கின்றன (2, 4, 5).

முருகன் திருவடியில் தண்டையும் சிலம்பும் ஒளிர்கின்றன. குராமலரையும் அத் திருவடிகள் புனைந்திருக்கின்றன. அவை அருள் மயமாக உள்ளன. அவனுடைய தடம்புயங்கள் ஆறிரண் டிலும் கடம்பமாலை புரள்கின்றது. அந்தப் பன்னிரு தோள்களும் வரிசையாக இருபக்கங்களிலும் இருக்கின்றன. அவனுடைய திருக்கை ஒன்று அபயத்தைக் காட்டுகிறது. ஒரு கை வேலைப் பற்றியிருக்கிறது. அந்த வேல் மலையை ஊடுருவப் பொருத வடிவேல்; பராக்ரமவேல்; சிவந்த நிறம் வாய்ந்த சினவடிவேல். அவனுடைய திருமுகங்கள் ஆறும் மணம் வீசுகின்றன. கண்கள் தாமரை மலரைப் போல் ஒளிலங்குகின்றன.

முருகன் குருவடிவாய் வருகிறவன்; திருமால் மெச்சும் வீரம் உடையவன்; நிருதசங்கார பயங்கரன்; சேவல் கொடி உடையவன்; அமரசிகாமணி; வீரமுடைய சேவகன்; வள்ளிக்கு வாய்த்தவன்; மயிலேறிய மாணிக்கம்; சிவ குமாரன்; ஆறுமுகவன்; நம்பின வருக்கு மெய்த்துணையாக வருபவன்.

இந்தப் பாடல்களில் திருச்செங்கோடு, திருத்தணிகை, திருச்செந்தில் என்னும் மூன்று தலங்களைப் பற்றிய செய்திகள் வருகின்றன. பதுமமலர் வாசனையையும் முத்துக்களையும் சொரியும் காட்சியைத் திருச்செங்கோட்டில் வைத்துக் காட்டுகிறார். திருத்தணிமாமலையில் வாவித் தடவயல் சூழ்ந்திருப்பதைச் சொல்கிறார். திருச்செந்தூர்க் கடல் ஒரு கோடி முத்தம் தெள்ளிக் கொழிப்பதைப் பாடுகிறார்.

திருமால் கசேந்திரன் அழைக்க முதலையைக் கொன்று அதற்கு அருள் செய்தவராக நிற்கிறார். சிவ பெருமான் கடல் மீது எழுந்த ஆலம் குடித்த பெருமானாக விளங்குகிறார்.

பயபக்தி என்ற தொடருக்குப் பொருள் விளக்குவது போல அமைந்திருக்கிறது, ''ஆவிக்கு மோசம் வருமா றறிந்துன் அருட்பதங்கள், சேவிக்க என்று நினைக்கின்றிலேன்'' என்பது. ''திருவடியும் தண்டையும்'' என்று தொடங்கும் பாடல் முருகனை உள்ளக்கிழியில் உருவெழுதிப் பார்ப்பதற்கு ஏற்ற வகையில் அமைந்திருக்கிறது. நம் உள்ளத்துககு உறுதியை ஊட்டி அஞ்சா மையை ஒழிக்கும் மந்திரமாக விளங்குகிறது. ''சூலம் பிடித்து'' என்று வரும் பாடல்.

★

வழக்கம் போல இந்தப் பாடல்களை வைத்துக்கொண்டு உரையாற்றும் போது சுருதி, யுக்தி, அநுபவம் என்ற மூன்றையும் பயன்படுத்திக் கொண்டிருக்கிறேன். பழைய அருளாளர்களின் திருவாக்குகள், பல நுட்பங்களை விளக்க ஒப்புமையாக வந்து உதவுகின்றன. உலகவாழ்வில் நாம் கண்ட அநுபவங்களிலிருந்து ஊகித்து யுக்தியினால் பல செய்திகளை உணர முடிகிறது. அத்தகைய இடங்களில் உவமைகளும் உதாரணங்களும் கருத்துக் களைத் தெரிந்துகொள்ள உதவியாக இருக்கின்றன. முருகனை நம்பி வாழும் எளியேன் வாழ்வில் பெற்ற சில அநுபவங்களை இடையிலே சொல்லிச் சில கருத்துக்களை விளக்க முயன்றிருக் கிறேன்.

இந்தப் பத்தொன்பது புத்தகங்களில் நூற்றெட்டுப் பாடல் களின் விரிவுரையும் நிறைவேற அருள் பாலித்த சண்முகநாதன் கருணையை என்னென்பது! அருணகிரியாருடைய அருள்வாக்குத்

தொட்ட தொட்ட இடமெல்லாம் இனிப்பது. அவர் பாடிய பாடல்களின் ஆழம் முழுவதையும் காண முடியுமா? முழுவதும் கண்டால் சொல்லத்தான் முடியுமா?

"அவ்வா றறிவார் அறிகின் றதலால்
எவ்வா றொருவர்க் கிசைவிப் பதுவே"

என்று கரைந்து நிற்கத்தான் தோன்றும்.

இவற்றை உருவாக்கியதற்குத் துணையாக இருந்தவர் அன்பர் சிரஞ்சீவி அனந்தன்; புத்தகமாக்க உதவிர் அன்பர் ஸ்ரீ ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன் அவர்கள். இந்த இருவருடைய உதவியையும் எளியேன் பெற வைத்தது ஆண்டவன் அருள். அந்த அருள் வாழ்க!

கி.வா. ஜகந்நாதன்
01.11.1963

உள்ளம் குளிர்ந்தது

கந்தர் அலங்காரம் நூறு பாடல்களை உடையது என்று அதன் நூற்பயன் சொல்கிறது. ஆனாலும் மேலே ஆறு பாடல்கள் கந்தர் அலங்காரப் பிரதிகளில் சேர்ந்தே எழுதப்பட்டிருக்கின்றன. அந்தப் பாடல்களின் சொல்லமைப்பு, பொருள் அமைப்பு முதலிய வற்றைப் பார்த்தால் அவைகளும் அருணகிரியாரின் திருவாக்கு என்று தோன்றுகிறது. கந்தர் அலங்காரத்தோடு சேர்த்து அந்தப் பாடல்களையும் பாராயணம் பண்ணுவது தமிழ் நாட்டில் வழக்கமாக இருக்கிறது. இதுவரையில் நாம் கந்தர் அலங்காரம் நூறு பாடல்களைப் பார்த்தோம். இனிமேல், பொங்கி வழிந்து ததும்பும் ஆறு பாடல்களையும் பார்த்துவிட்டு, பிறகு கடைசியில் உள்ள நூற்பயனைப் பார்க்கலாம் என்று நினைக்கிறேன்.

உண்முக தரிசனம்

இப்போது பார்க்கப் போகிற பாட்டு ஒரு வகையில் நமக்கு இடையறாது வழிகாட்டும் பாட்டு. இறைவனுடைய திருவருளில் ஈடுபடுகிற முயற்சி நம்மிடத்தில் இருக்க வேண்டும். எத்தனை தான் நாம் உடம்பினால் வணங்கி வாயினால் பேசினாலும், மனம் இறைவனுடைய வசம் ஆகாதவரையில் அநுபவம் என்பது துளியும் கிடைக்காது. கண் முதலிய இந்திரியங்களால் இறை வனுடைய திருத்தொண்டுகளில் ஈடுபடுவதன் பயன், நம் மனம் அவனோடு ஒன்றுபடுவதுதான். இறைவனை மனத்தில் நினைப் பதைத் தியானம் என்று சொல்வார்கள். உள்முகத்தில் தியானம் பண்ணப் பண்ண உள்ளொளி உண்டாகும். புறத்தில் லட்ச தீபம் போட்டுக் கண்டாலும் அதனால் அப்போதைக்கு ஒரு கிளுகிளுப்பு உண்டாகுமேயன்றித் தனித்துக் கண் மூடிக் கண்டால் இருட்டுத் தான் உண்டாகும். கூட்டத்தில் கூடி நின்று இறைவனைக் காணும்போது, சிறிது கண்மூடி அவன் உருவத்தை உள்ளே காணப் பயில வேண்டும். அப்பால் உள்ளத்தில் அவன் அவன் உருவத்தைத் தனித்து இருந்து காணப் பழகினால் உள்ளொளியைத்

தரிசித்து அதனிடையே இறைவன் திருவுருவத்தை காணலாம். இப்படிப் பல காலம் பயிற்சி செய்தாலன்றிக் கண்ணை மூடிய வுடன் இறைவன் திருவுருவம் காண முடியாது. உள்முகமாக இறைவன் திருவுருவத்தைப் பார்ப்பதுதான் இறைவனோடு நாம் ஒன்றுபட வழியாகும். அதற்காகவே ஆண்டவனை உருவம் உடையவனாகத் தியானிக்கிறோம். மனம் எதையாவது நினைக்க வேண்டுமானால் அதற்கு ஏதேனும் உருவம் இருக்க வேண்டும். உருவம் இல்லாத பொருளை மனம் பற்றிக்கொள்ள இயலாது. ஆண்டவன் பல வடிவங்களை எடுத்துக்கொண்டு அருள் செய் வதற்குக் காரணம், அடியார்கள் மனத்தில் புக வேண்டும் என்பது தான்.

உருவமும் பாடலும்

அருணகிரியார் முருகனுக்கு அன்பு செய்து அவனுடைய திருவுருவத்தை நன்கு தரிசித்தவர். வெளியே தரிசித்த திருவுரு வத்தை, உள்ளே கண்டு அதன் பெருமையை உணர்ந்து இன்புற்றவர். நாம் அந்த நிலையை அடைய வேண்டுமானால் மெல்ல மெல்லச் சாதனை செய்து பயிற்சி பெற வேண்டும். இறைவனுடைய திருவுருவத்தை நன்றாக உள்ளத்தில் உணர வேண்டும். அப்படி உணர்வதற்கு நமக்கு உபயோகமாக இருப்பவை இரண்டு பொருள்கள். ஒன்று இறைவனுடைய திருவுருவம்; மற்றொன்று அந்தத் திருவுருவத்தைப் பற்றிச் சொல்லும் பாடல். ஒரு குழந்தையைத் தினந்தோறும் பார்த்துக் கொண்டிருந்தால் அந்தக் குழந்தையின் உருவம் நம் மனத்தில் பதியும். குழந்தை ஊருக்குப் போய் இருக்கும்போது அதனை நினைத்தால் அதன் உருவம் உள்ளத்தில் வரும். அதுபோல இறைவனுடைய உருவங்களைக் கோயில்களில் பார்க்கிறோம்; படத்தில் பார்க்கிறோம். அவற்றை எல்லாம் நெஞ்சில் நிறுத்திக் கண் மூடித் தியானம் செய்து பழகியிருக்கிறோம். அந்த உருவம் உள்ளத்தில் நன்கு பதிந்து நிற்க, திருப்பித் திருப்பி அந்த உருவத்தை உள்ளத்தில் கொண்டு வந்து நிறுத்த முயல வேண்டும். பெரியவர்களுடைய பாடல் களில் ஆண்டவனுடைய திருவுருவத்தை வருணிக்கும் இடங் களை நினைவுபடுத்திக் கொண்டு, அவற்றைச் சொல்லிக் கொண்டே வந்தால் அப்போது ஆண்டவனுடைய வடிவத்தை உள்ளத்தில் ஓரளவு பதித்துக் கொள்ளலாம்.

மந்திர உபதேசம் செய்து கொள்கிறவர்கள் அந்த மந்திரத்தின் தேவதையைத் தியானம் செய்வதற்கு உதவியாக ஒரு சுலோகம் இருக்கும். அதைத் தியான சுலோகம் என்று சொல்வார்கள். மந்திரம் எந்த மூர்த்தியைக் குறிக்கிறதோ அந்த மூர்த்தியின் உருவத்தைத் தியான சுலோகம் வருணிக்கும். தியான சுலோகத்தைச் சொல்லிக்கொண்டு அந்த வடிவத்தை மெல்ல மெல்ல உள்ளத்தில் பதித்துக் கொள்ள வேண்டும். அப்படிப் பதித்துக் கொண்டு மந்திரத்தை ஜபித்தால் மெல்ல மெல்ல ஒளி பரவி அந்தத் திருவுருவமும் ஒருவாறு உள்ளத்தே நிலை கொள்ளத் தொடங்கும். இந்த அநுபவத்தில் வல்லவராகிய அருணகிரியார் தம்முடைய அநுபவம் நமக்கும் வரவேண்டுமென்ற கருணையினால் நமக்கு வழி காட்டத் தொடங்குகிறார்.

அருணகிரிநாதர் முருகனைக் குருவாகக் கொண்டவர். முருகன் குருவாய் எழுந்தருளி அவ்வப்போது அவருடைய பக்குவத்திற்கு ஏற்றபடி பல்வேறு உபதேசங்கள் செய்தான் என்பதை அவருடைய பாடல்கள் நமக்குக் காட்டுகின்றன.

குருவின் பெருமை

எந்தக் காரியமானாலும் குரு இல்லாமல் கைகூடாது. வித்தியாகுரு, ஞானகுரு என்று குருநாதர்களை இரண்டுவிதமாகப் பிரிப்பார்கள். கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியரை வித்தியா குரு என்றும், ஞான உபதேசம் செய்கின்றவரை ஞான குரு என்றும் சொல்வது வழக்கம். கல்வி கற்பிக்கும் ஆசிரியர்கள் எப்படி வெவ்வேறாக இருக்கிறார்களோ, அதுமாதிரியே ஞான உபதேசம் செய்யும் குருமார்களும் படிப்படியாக பலர் இருப்பது உண்டு. பழைய காலத்தில் ஒரே ஆசிரியரிடம் எல்லா நூல்களையும் கற்றுக் கொள்ளும் வழக்கம் இருந்தது. அதேபோல் ஒரு ஞான குருவை அண்டி நல்லுபதேசம் பெற்றுச் சாதனம் செய்து அதனால் அநுபவம் பெற்றவர்கள் பலர்.

இறைவனுடைய திருவருளைப் பெற விரும்புகிறவர்கள் அதற்கு முன்பு குருநாதனுடைய திருவருளைப் பெற வேண்டும். குருநாதன் அருள் இல்லாமல் இறைவன் அருள் கிட்டாது. சூரிய காந்தமும், சூரியன் ஒளியும், பஞ்சும் சேரும்போது சூரியகாந்தம் பஞ்சைச் சுட்டுவிடுகிறது. சூரிய காந்தத்திற்குப் பஞ்சைச் சுடும்

ஆற்றல் இருந்தாலும் சூரியனுடைய சந்நிதியில்தான் அது சுடும். வீட்டுக்குள்ளே பஞ்சை வைத்துக் கொண்டு அதற்கு அருகில் மணிக்கணக்காகப் பூதக் கண்ணாடியை வைத்தாலும் அது சுடாது. இறைவன் ஆருயிர்களுக்கு அருள் செய்கிறான். பாசத்தை நீக்கி என்றும் பொன்றாத பேற்றை அருளுகிறான். ஆயினும் குருநாத னுடைய கிருபையினால்தான் ஆன்மாக்கள் இறைவனுடைய திருவருளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். சூரியனுடைய் கதிர்களால் சூரிய காந்தத்தின் ஆற்றல் பஞ்சை எரிப்பதற்குப் பயன்படுவதுபோல், குரு நாதனுடைய உபதேசத்தால் இறை வனுடைய திருவருள் ஆன்மாக்களுக்குப் பலிக்கிறது.

அநுபவமும் குருவும்

அநுபவம் உடையவர்கள் குருநாதர் ஆகிறார்கள். அநுபவம் என்பது காலத்தினால் முதிர்வது. மனிதன் வளர வளர அவ னுடைய அநுபவம் மிகுதியாகிறது. மனித வாழ்க்கையில் ஒரு காலம் வரையில் வளர்ச்சியும், அப்பால் தளர்ச்சியும் உடலுக்கு உண்டாகும். ஆனால் அறிவுக்கோ நாளாக நாளாக வளர்ச்சியே உண்டாகிறது. இளமை உடையவர்களிடத்தில் பலமும், முதுமை உடையவர்களிடத்தில் அறிவும் சிறந்து நிற்கும். பிராயத்தில் முதிர்ந்தவர்களாக மாத்திரம் இருப்பதில் பயன் இல்லை; அறி விலும் முதிர்ந்தவர்களாக வேண்டும். அதனால் வயோ விருத்தர், ஞான விருத்தர் என்று இருவேறு வகையாகச் சொல்வது வழக்கம். சிறிய பிள்ளையாக இருந்தாலும் ஞானத்தில் சிறந்திருந் தால் அவன் கும்பிடத் தகுந்தவன்.

பொதுவாக ஆசிரியர்களாக இருப்பவர்கள் மாணாக்கர்களை விட வயசு முதிர்ந்தவர்களாக இருப்பது உலக வழக்கம். பல காலம் கல்வித் துறையில் ஈடுபட்டுப் பலவற்றைத் தெரிந்து கொண்டு ஞான அநுபவத்தைப் பெற்ற பிறகே மற்றவர்களுக்குப் போதிக்கும் ஆற்றலைப் பெறுகிறார்கள் ஆசிரியர்கள். அதனால் பிறருக்குப் பயிற்றுவிக்கும் தகுதியைப் பெறுவதற்குப் பலகாலம் ஆகிறது. அவர்கள் பெரியவர்களாக, வயதில் மிகுந்தவர்களாக இருக்கிறார்கள். சில துறைகளில் வயசானவர்களே சிறப்படை வார்கள். காரணம்: வெறும் படிப்பு மாத்திரம் போதாது; அநுபவம் உடையவராக இருக்க வேண்டுமென்பதுதான். பால ஜோஸ்யன்,

விருத்த வைத்தியன் என்ற பழமொழியுண்டு. நீண்டகால அநுபவம் உடைய வைத்தியர்கள் மருந்து கொடுத்தால் நோயாளிக்கு நன்மை உண்டாகும். வெறும் வைத்திய நூல் படிப்பு மாத்திரம் இருந்தால் அவனால் நன்மை உண்டாகாது. ஆகையால், கல்வி அறிவோடு அநுபவம் வேண்டு மென்று கருதி விருத்த வைத்தியனாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள்.

உடலுக்கு வரும் நோயைத் தீர்ப்பதற்கு அநுபவ முதிர்ச்சி இருக்க வேண்டும் என்று சொன்னால், அதைவிட அவசியம் உள்ளத்தின் நோயைத் தீர்ப்பதற்குரிய தகுதி. உள்ள மயக்கத்தை நீக்கி ஞானத் தெளிவு அடையச் செய்யும் ஆசிரியர்கள் பல காலம் பல நூல்களைப் பயின்று, பலர் வாயிலாகக் கேள்வி பெற்று, பல சாதனைகளைப் புரிந்து, தம்முடைய அநுபவத்திலும் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டும். கல்வி, கேள்வி ஆகிய இரண்டும் அநுபவத்தினால்தான் நிறைவு பெறும். கல்வி, கேள்வி இல்லாத வர்களும் அநுபவத்தினால் சிறந்து நிற்பதைப் பார்க்கிறோம். மகா ஞானியாகத் திகழ்ந்த இராமகிருஷ்ண பரமஹம்சர் கல்வி கேள்வி மிக்கவர் அல்லர். ஆயினும் அவருடைய அற்புதமான உபதேசங்கள் வேதாந்த உண்மைகளை மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. அவை அநுபவத்தால் உணர்ந்தவை.

ஆகவே ஞானோபதேசத்திற்கு அடிப்படையாக நிற்பது அநுபவம். அந்த அநுபவம் எளிதில் மனிதனுக்கு வராது. பல காலம் சாதனம் செய்து இடையிலே வரும் தடைகளை வென்று வென்று தெளிவு பெற்று அப்பால் பெற வேண்டும். அநுபவம் பெறாதவர்கள் குருவாக இருந்தால் மாணாக்கர்களுக்கு ஐயம் நிகழும்போது அதைத் தீர்க்கும் வன்மை அவர்களுக்கு இராது. அநுபவம் உள்ளவர்களாலேயே எல்லா வகையான ஐயத்தையும் போக்க முடியும். அநுபவம் என்பது பல கால முயற்சியின் பயனாக வருவது. அதனால் சிறந்த ஆசிரியர்கள் பலகாலம் சாதனை செய்தவர்களாக, வயசில் மிகுந்தவர்களாக இருப்பது இயற்கை.

தெய்விகக் குருநாதர்

இது உலக இயலோடு ஒட்டிய குருமார்களுக்கு அமைந்தது. ஆனால் தெய்விகக் குருநாதர்களுக்கு இந்த விதி ஒவ்வாது. தட்சிணாமூர்த்தியைக் குருமூர்த்தி என்று சொல்வார்கள். பொது

வாகக் குரு என்று சொன்னால் அது தட்சிணாமூர்த்தியைத் தான் குறிக்கும். தட்சிணாமூர்த்தியைப் பற்றி ஒரு சுலோகம் வட மொழியில் உண்டு. 'ஆல மரத்தினடியில் தேசு நிறைந்த திருமுகத்துடன் தென்முகக் கடவுள் வீற்றிருக்கிறார். அவருக்குக் கீழ் நான்கு மாணாக்கர்கள் அமர்ந்திருக்கிறார்கள். என்ன ஆச்சரியம்! குருநாதர் இளையவராக இருக்கிறார்; மாணாக்கர்கள் கிழவர்களாக இருக்கிறார்கள்!' என்று அந்தச் சுலோகம் சொல் கிறது. உலக இயலுக்கு மேற்பட்ட அநுபவத்தில் சிறந்த முனி வர்கள் மாணாக்கர்களாகவும் இளமையுடைய தட்சிணாமூர்த்தி குருநாதனாகவும் இருப்பதைக் காண்கிறோம். தோற்றத்தில் தட்சி ணாமூர்த்தி இளமை உடையவரானாலும் அவர் காலம் கடந்த பேராளர். அவர் தோற்றத்தில் இளமையுடையவர்; அநாதி கால மாக இளமையோடு இருக்கிறவர் அவர்.

குமர குருபரன்

அத்தகையவனே முருகப் பெருமானும். அவன் பின்னும் இளமையுடையவன். சின்னஞ்சிறு வடிவுடன் மெய்ஞ்ஞான உபதேசம் செய்கின்ற குருமூர்த்தி. குருநாதர்களுக்குள் சிறந்த குருநாதன். ஆகையால் அவனைக் குருபரன் என்று சொல்வார் கள். பரன் என்பது மேலானவன் என்னும் பொருளை உடையது. எல்லாக் குருநாதர்களுக்கும் மேலான குருநாதனாகையால் அவன் அந்தத் திருநாமத்தைப் பெற்றான். குமர குருபரன் என்று நாம் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கிறோம். அந்தக் குமர குருபரனே அருணகிரியாருக்கு உபதேசம் செய்தான். பிராயத்தில் முதிர்ந்த குருநாதர்கள் நிதானமாக மெல்ல மெல்ல உபதேசம் செய்வார் கள். அவர்கள் மாணாக்கனை நோக்கி வரும்போது நிதானமாக வருவார்கள். இங்கே குழந்தைக் குருநாதனாகிய முருகன் அருண கிரியார் திருவுள்ளத்தில் கருணை வேகத்தோடு வந்து குதித்தா னாம். அவனுடைய திருவுருவம் எளிதிலே உள்ளத்தில் வந்து நின்றதாம்.

குருவடிவாய் வந்து என் உள்ளம்
குளிரக் குதிகொண்டவே

என்று பாடுகிறார்.

உள்ளம் குளிர்தல்

முருகப் பெருமானுடைய உருவம் திருவுள்ளத்தில் வந்து நின்றவுடன் மனத்தில் ஒரு குளிர்ச்சி உண்டாயிற்று. மழை பெய்தால் உடனே வெப்பம் மாறிக் குளிர்ச்சி உண்டாவது போல், கருணையே உருவாகிய முருகப் பெருமான் மனத்தில் வந்து காட்சி கொடுத்தவுடன் அங்கேயுள்ள தாபங்கள் மாறி ஒரே குளிர்ச்சி உண்டாகிவிட்டது. மனத்தில் மூன்று வகையான தாபங்கள் உண்டு. அவற்றைத் தாபத்திரயம் என்று சொல்வார்கள். ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதெய்விகம் என்பவை அவை. இறைவனுடைய திருவுருவம் உள்ளத்தில் குதிகொண்டவுடன் அங்கே அருள் மழை பொழிந்தது. அதனால் தாபங்கள் எல்லாம் போய்விட்டன.

"திருவீழி மிழலைவீற்றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந்தனவே"

என்று திருவிசைப்பாவில் ஒரு பாட்டு வருகிறது.

திருவடி

முருகப் பெருமான் குருநாதனாக எழுந்தருளினான் என்று சொல்லும்போது அவன் அடையாளங்களை விரிவாகச் சொல்ல வருகிறார் அருணகிரியார். திருவடிமுதல் திருமுடிவரையில் சொல்வதைப் பாதாதிகேசம் என்று சொல்வார்கள். மனிதர்களை வருணிக்கும்போது கேசாதி பாதமாக வருணிப்பதும், தெய்வங்களை வருணிக்கும்போது பாதாதிகேசமாக வருணிப்பதும் முறை. அந்த வகையில் இங்கே குமரகுருபரனுடைய பாதாதிகேச வருணனையைச் செய்கிறார்.

தெய்வத்தையும் பெரியவர்களையும் காணும்போது அவர்கள் முன் விழுந்து திருவடியைப் பற்றிக் கொள்ள வேண்டும். குழந்தை தாயோடு விளையாடும்போது பலவகையில் விளையாடும். தாயின் முகத்தோடு முகம் சேர்த்து விளையாடும். கழுத்தைக் கட்டிக் கொண்டு விளையாடும். சில சமயங்களில் தோளில் ஏறும்; இடுப்பிலும் ஏறும். ஆனால் அதற்குப் பசி மிகும்போது அதனுடைய நோக்கம் எல்லாம் பால் தரும் அவயத்தில் இருக்கும்.

அதுபோல் இறைவனுடைய அருளுக்காகப் பசித்த அடியார்கள் அவனுடைய திருவடியைப் பற்றிக் கொண்டிருப்பார்கள். இறைவனுடைய திருவுருவப் பேரழகு முழுவதையும் கண்டு இன்புற்றாலும், நம்மை ஆட்கொள்ளும் புகலிடம் அவனுடைய திருவடியே என்பதைக் கருதி அதையே முதலில் பற்றிக் கொள்ள வேண்டும்.

தண்டையும் சிலம்பும்

அருணகிரிநாதப் பெருமான் முதலில் முருகனுடைய திருவடியைக் காட்டுகிறார். அந்த அடி சின்னஞ்சிறு குழந்தையின் அடி. அதனை எப்படித் தெரிந்துகொள்வது? அடுத்தபடி சொல்லும் அடையாளத்தால் அது புலனாகும்.

திருவடியும் தண்டையும் சிலம்பும்.

முருகப்பெருமானுடைய திருவடி தண்டையும், சிலம்பும் அணிந்திருக்கிறது. குழந்தைத் திருவுருவத்தில் எழுந்தருளுவான் அவன். ஆதலின் அந்த அணிகள் அமைந்திருக்கின்றன. நடராஜப் பெருமானுக்கும் சிலம்பு உண்டு. அவன் நடனம் ஆடுகின்றவன்; ஆகையினால் அதற்கேற்றபடி தாளம் அமைவதற்குச் சிலம்பை அணிந்திருக்கிறான்.

"மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்"

என்பது பெரியபுராணம். அடியார்களுக்கு அருள் வழங்கும்போது தான் இருக்கும் இடத்தைக் காட்டுவதற்கு அடையாளமாகச் சிலம்பை அணிந்திருக்கிறான். காதினால் ஒலியைக் கேட்டு, அது எங்கிருந்து வருகிறதென்று ஆராய்ந்த பிறகு திருவடியைக் காணலாம். அதுபோல் முருகன் எழுந்தருளும்போது, "யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே" என்பது போலத் தண்டையும் சிலம்பும் ஒலிக்கின்றன. அந்த ஒலி எம்பெருமான் எழுந்தருளுகிறான் என்பதைக் காட்டி, அவன் திருவடி எங்கே என்ற ஆராய்ச்சியை உண்டாக்குகிறது.

இறைவனுடைய திருவடியில் தண்டையாகவும், சிலம்பாகவும் இருப்பது வேதந்தான். இறைவனைக் காட்டுவதற்கு அநாதிகாலமாக நமக்கு உதவியாக இருக்கும் நூல் வேதம். அது நேர்முகமாகக் காட்டாவிட்டாலும் உண்மையான தத்துவத்தை எடுத்துச் சொல்லும் அரிய நூல். எல்லா நூல்களுக்கும் ஆதியாக

வும், தனக்கு ஆதி இல்லாததாகவும் இருப்பது வேதம். ஆண்டவனுடைய திருவடியைக் காட்டுவதற்கு அது நமக்குத் துணை செய்கிறது. இறைவனுடைய திருவடிக்கு அணியாக நின்று தம் முடைய ஒலியினால் தண்டையும் சிலம்பும் அந்தத் திருவடியைக் காட்டுகின்றன. வேதம் செய்கிற காரியத்தைக் காலில் அணிந் திருக்கும் அவ்விரண்டும் செய்கின்றன; ஆகை யினால் வேதமே தண்டையாகவும், சிலம்பாகவும் இருக்கின்றது என்று சொல் வார்கள்.

இறைவனுடைய திருவடியைக் கண்ட பிறகு நம்முடைய பார்வை மேலே எழும்புகிறது. மனிதனுடைய பார்வை வரவர மேலே போக வேண்டும். முறையாக அடியிலிருந்து போனால் தான் உச்சி வரையில் எட்டும். ஆண்டவனுடைய திருவடி எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருப்பது.

"பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்"

என்று மணிவாசகப் பெருமான் பாடுவார். எல்லாவற்றையும் திருவடி தாங்கிக் கொண்டிருக்கிறது என்று திருமுருகாற்றுப்படை சொல்கிறது. எல்லாவற்றுக்கும் ஆதாரமாக இருந்தாலன்றித் தாங்குவது என்பது அமையாது. ஆகையால் பிரபஞ்சத்தில் உள்ள எல்லாவற்றையும் தனக்கு மேல் வைத்துத் தான் எல்லாவற்றுக் கும் கீழாக நின்று தாங்கும் திருவடி அது. அப்படியுள்ள ஆதாரப் பொருளை முதலில் கண்டு, அப்பால் நம் கண்ணையும் கருத்தை யும் மேலே எழுப்ப வேண்டும்.

வடிவேல்

முதலில் திருவடியைக் கண்டு, பின்பு ஒலியை விளைவிக் கும் தண்டையையும் சிலம்பையும் கண்டு நிற்கும் நாம், அந்தத் திருவடிக்கு அருகில் வேலின் ஒரு முனை அமைந்திருப்பதைப் பார்க்கிறோம். முருகப் பெருமானது திருக் கையில் ஞான சக்தியாகிய வேல் இருக்கிறது. அது அவனுடைய திருவுருவத்தை ஒட்டி அமைந்து விளங்குகிறது. திருவடி முதல் திருமுடிவரையில் அது செல்கிறது. அது அவன் திருவுருவ எல்லையைக் காட்டு கிறது. வேலையே ஏணியாகக் கொண்டு நம்முடைய கண் மெல்ல மெல்ல ஏறினால் முருகப்பெருமான் திருவுருவம் முழு வதையும் ஒருவாறு பார்த்துவிடலாம்.

இதுவும் ஒரு குறிப்பை உடையது. வேலே ஞானம் என்று சொல்வார்கள். இறைவனுடைய தரிசனம் பெற வேண்டுமானால் ஞானத்தை அடைய வேண்டும். ஞானம் என்பது ஒரே மாதிரி இருப்பது அல்ல. வரவர அறிவு மிகுதியாகும்போது தெளிவும் மிகுதியாகிறது. தெளிவு என்பது பொருள்களைப் புலப்படுத்தும். ஐயம் நீங்கிப் பொருள் புலப்படும் தெளிவு மிகுதியாக ஆக இறுதியில் எல்லா ஐயங்களும் நீங்கிப் பொருள்கள் யாவும் தெளிவாகும்; முடிந்த முடிவில் கடவுளைத் தெளிந்து அநுபவிக்கும் நிலை வரும். அதுவரைக்கும் ஞானம் படிப்படியாக ஏறி வரும். ஞான சக்தியாகிய வேலைக் காணும் போது நாம் மெல்ல மெல்லக் கீழே இருந்து படிப்படியாக ஏறுகிறோம். ஆண்டவனுடைய திருவடியை ஆதாரமாகக் கொண்டு, பிறகு ஞானம் என்னும் ஏணியில் மெல்ல மெல்ல ஏறுகிறோம். இறைவனுடைய திருவடியே ஞானமாக நிற்பதுதான். அது ஞானப் பொய்கையானால் வேலை ஞான ஆறு என்று சொல்லலாம்.

"தொண்டர்கண்டு அண்டிமொண்டு உண்டு இருக்கும்
சுத்த ஞானம் எனும், தண்டையம் புண்டரிகம் தருவாய்"

என்று கந்தர் அலங்காரத்தில் வந்ததை நாம் முன்பு பார்த்தோம்.

முருகப் பெருமானுடைய திருவடியைத் தரிசித்து, அதன் அருகில் தோன்றும் வேலைப் பற்றிக் கொண்டு மெல்ல நம் முடைய கண்ணையும் கருத்தையும் ஏறவிடுவோம். அதன் வழியே செல்லும் கண் முதலில் அவன் திருவடியைக் கண்டு, பின்பு அவன் இடையைக் கண்டு, பின்பு அவன் திருக்கரத்தில் வந்து நிற்கும். முருகன் எப்பொழுதும் வேலைத் தன் கையில் பற்றியிருக்கிறான்.

"வேலே விளங்கு கையான்."

கிரௌஞ்ச வதம்

அவன் திருக்கரத்தில் பற்றிக்கொண்டிருக்கும் அந்த வேலைப் பார்க்கும்போது பழைய கதை நினைவுக்கு வருகிறது. அதே திருக்கரத்தினால் முருகப் பெருமான் வேலை ஓச்சிப் பல பராக்கிரமச் செயல்களைக் காட்டினான். அவற்றுள் அருணகிரியார் இங்கே ஒன்றை நினைப்பூட்டுகிறார்.

சிலம்பு ஊடுரவப் பொரு வடி வேலும்.

முருகப்பெருமான் வேலினால் அசுரர்களை மாய்த்தான். கிரௌஞ்சாசுரன் என்பவன் மலை வடிவில் இருந்தவன். அவன் சூரனுக்குப் பக்கபலமாக இருந்து தேவர்களுக்குப் பல துன்பங்களைச் செய்தவன். அசலமாக இருக்கும் மலை அன்று அது. இறகுகளைக் கொண்டு பறந்து கொண்டே இருந்தது அது. அதனால் அசலம் என்றும் பெயர் கிரௌஞ்ச கிரியைப் பொறுத்தவரையில் செல்லாது. பல இடங்களுக்குப் பறந்து சென்று அங்கங்கே திடும் எனக் கீழே வந்து படிந்து, அடியில் அகப்பட்டுக் கொண்ட மக்களை எல்லாம் நசுக்கி நாசம் செய்கின்ற கடுமையான செயலைக் கிரௌஞ்சாசுரன் செய்து வந்தான். அந்தச் சிலம்பை முருகப்பெருமான் திருக்கையில் உள்ள வடிவேல் பொடியாக்கி விட்டது.

சூரபன்மா அகங்கார மயமானவன். அவனுக்கு உறவாகிய கிரௌஞ்சாசுரன் மமகார மயமானவன். மலை போல நின்று எல்லா வளங்களும் தன்னுடையன என்று செருக்கு அடைவது மக்களுடைய இயல்பு. சூரனும் ''நான்'' என்ற உணர்வோடு கிரௌஞ்சாசுரனைத் தனக்குக் கவசமாகக் கொண்டிருந்தான். இறைவன் முதலில் மமகாரத்தைப் போக்கிப் பின்பு அகங்காரத்தைப் போக்குவான்.

''எல்லாம் அற என்னை இழந்த நலம்''

என்று கந்தர் அநுபூதியில் வந்த பாட்டுக்கு, மமகாரம் அற்று, அகங்காரம் அற்ற நிலை என்று பொருள் கொள்ள வேண்டும். சூரபன்மாவை இறைவன் முதலில் அழிக்கவில்லை. அவனோடு தொடர்புடைய படைகளையும், பின்பு அவனுடைய தம்பிமார்களையும், கிரௌஞ்சாசுரனையும் முன்னே அழித்துவிட்டு அப்பால் தனியாக நின்ற சூரனை அழித்தான். கப்பும் கிளையுமாக இருக்கும் மரம் சாலையில் நிற்கும்போது அதை வெட்டவேண்டுமானால் முதலில் கிளைகளை வெட்டிவிட்டு அப்பால் மரத்தை வெட்டுவது வழக்கம். அதுபோல் படர்ந்திருக்கும் மமகாரத்தைப் போக்கி, அது கிளைத்தற்கு மூலமான அகங்காரத்தை இறைவன் போக்குவான். இதைத்தான் அந்தச் சங்காரமுறை காட்டுகிறது. முருகன் மமகாரத்தைப் போக்குவான் என்பதை உணர்த்துவதற்கு,

சிலம்பு ஊடுருவப் பொரு வடிவேலும்

என்று சொன்னார் அருணகிரியார்.

பழைய வரலாறு

மற்றொரு செய்தியும் இங்கே நினைப்பதற்குரியது. நாம் படிக்கிற கந்தபுராணத்தில் கிரௌஞ்சாசுரன் மலைவடிவாக இருந்தான் என்பதும், தேவர்களுக்குப் பல துன்பங்களைச் செய்தான் என்பதும் வருகின்றன. பழைய வரலாறு ஒன்று உண்டு. அதை முன்பும் நாம் நினைப்பூட்டிக் கொண்டிருக்கிறோம். சூரபன்மாவுக்குக் கிரௌஞ்சம் என்ற மலை அரணாக இருந்தது என்றும், அது பறக்கும்போது அவன் உள் இருந்தான் என்றும், முருகப்பெருமான் வேலை ஓச்சியபோது அந்த வேல் கிரௌஞ்ச மலையை ஊடுருவி அதன் உள்ளே இருந்த சூரனையும் ஊடுருவிக் கொன்றது என்றும் பழைய காலத்தில் வரலாறுகள் வழங்கி வந்தன. தக்கயாகப் பரணியில் அதனை ஒட்டக்கூத்தர் பாடுகிறார்.

"ஒருதோகை மிசையேறி உழல்சூரும் மலைமார்பும் உடனூடறப்
பொருதோகை சுரராச புரமேற விடுகாளை புகழ்பாடுவோம்"

என்பது அந்தப் பாட்டு. அருணகிரிநாதப் பெருமானும் இந்த வரலாற்றைப் பலவிடங்களில் சொல்லியிருக்கிறார்.

"கிளைபட்டு எழுசூர் உரமும் கிரியும்
தொளைபட்டு உருவத் தொடுவே லவனே"

என்பது கந்தர் அநுபூதி. ஆகவே இங்கே, 'சிலம்பு ஊடுருவப் பொருவடிவேலும்' என்று சொன்னாலும் சிலம்புக்குள் இருந்த சூரனையும் ஊடுருவிப் புகுந்து அழித்தது வேல் என்ற பொருளும் குறிப்பாக இருக்கிறதென்று கொள்ளலாம். கிரௌஞ்சாசுரனுக்குள் சூரன் மறைந்திருப்பது போல, சிலம்பு ஊடுருவப் பொருவடி வேல் சூரனையும் ஊடுருவிக் கொன்றது என்பது இதில் மறைந்திருக்கிறது என்று கொள்ளலாம்.

இப்போது நாம் ஆண்டவனுடைய திருக்கரத்தையும், அது பற்றியிருக்கும் வேலையும் பார்த்தோம். ஆண்டவன் பெருவீரம் உடையவன். வேலாயுதம் அவனுடைய வீரத்தினால் சிறப்பு அடைகிறது.

''வீரவேல் தாரைவேல் விண்ணோர் சிறைமீட்ட
தீரவேல்''

என்று வேலைச் சொல்வது வழக்கம்.

என்ன இருந்தாலும் வேல் கருவிதான். அதனை உடைய வனுக்கு வீரம் இருந்தாலன்றிப் படைக்கலம் வீரம் உடையது ஆகாது.

''வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு''

என்பது குறள். படையை யார் விடுகிறார்களோ அவர்களுடைய வீரத்தைப் படையின்மேல் ஏற்றிச் சொல்வது வழக்கம். அதை இலக்கணை என்று சொல்வார்கள். அந்த வகையில் வேலை வீரவேல் என்று சொல்வர். முருகன் வீரர்களில் சிறந்த வீரன். அவனுடைய கைப்பட்டது எதுவும் பெருமை அடைகிறது. ஆயுதங்களில் சிறந்ததாகிய வேல் வீரர்களில் சிறந்தவனாகிய முருகன் திருக்கரத்தில் இருந்து மிக்க புகழை அடைந்தது.

கடம்பும் தடம்புயமும்

பொதுவாக வீரனைப் பற்றிச் சொல்லும்போது அவன் தோள் வலியை உடையவன் என்பார்கள். தோள், ஆண்மைக்கு இருப்பிடம்.

''நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே''

என்று கம்பன் இராமனுடைய வீரத்தைப் புலப்படுத்துகிறான்.

முருகப்பெருமானுடைய வீரத்துக்கு அடையாளமாக இருப் பன அவனுடைய திருத்தோள்கள். அந்தத் திருத்தோளுக்கு அலங் காரமாக இருப்பது கடம்பமாலை. அந்த இரண்டையும் இப் போது நமக்குக் காட்டுகிறார்.

கடம்பும் தடம்புயம் ஆறிரண்டும்.

முருகனுக்குக் கடம்ப மலர் மிகவும் பிரியமானது. அவன் திருத் தோளில் கடம்ப மலர் மாலை இருக்கிறது. அவன் கடம்ப மலரில் இருக்கிறான். கடம்ப மரத்தின் அடியிலும் அவன் எழுந் தருளியிருப்பான். திருமுருகாற்றுபடை,

''புதுப்பூங் கடம்பும்''

என்று முருகன் இருக்கும் இடங்களில் கடம்ப மலரையும் ஒன்றாகச் சொல்கிறது.

''கடம்பமர் காளை''

என்பது தேவாரம். முருகன் அணிகின்ற மலர்களில் சிறந்தது கடம்ப மலர். அதனால் கடம்பன் என்ற திருநாமத்தைப் பெற்றான்.

'காரலர் கடம்பன்''

என்று மணிமேகலையில் வருகிறது. அதனை எப்போதும் அவன் அணிந்து கொண்டிருக்கிறான். அது போகத்திற்குரிய மாலை என்று நச்சினார்க்கினியர் திருமுருகாற்றுபடை உரையில் எழுது கிறார். போர் செய்யும்போது அணிகின்ற மாலை வேறு. மற்றக் காலங்களில் அணிகின்ற மாலை வேறு. முருகன் போர் செய்யும் காலத்தில், காந்தளை அணிவான். அது அவனுக்குரிய கண்ணி. மற்றச் சமயங்களில் கடம்ப மாலையை அணிந்து கொள்வான்.

தண்டையின் ஒலியைக் கேட்டுத் திருவடியைக் கண்டது போலக் கடம்ப மலரின் மணத்தை நுகர்ந்து அப்பால் தோளை நாம் காண்கிறோம். முருகப்பெருமான் பன்னிரண்டு தோள்களை உடையவன்.

''முன்பு செய்த பழிக்குத் துணை அவன் பன்னிரு தோளும்''

என்று அந்தப் பன்னிரு தோள்களைத் துணையாக ஒரு பாட்டில் சொன்னார்.

இறைவனுடைய புஜபல பராக்கிரமம் ஆருயிர்க்கூட்டங்களுக்கு பகையானவர்களை மாய்ப்பதற்காக அமைந்தது. முருகனுக்கு என்று பகை யாரும் இல்லை. எல்லோரும் நண்பர்கள், அல்லது குழந்தைகள். ஆயினும் நல்லவர்களுக்குத் தீங்கு செய்யும் பொல்லாதவர்களை அவன் தண்டித்து ஒறுக்கிறான். ஒரே தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகள் தமக்குள் சண்டை பிடிக்கும்போது, கொடியவனாக இருக்கும் பிள்ளையைத் தந்தை ஒறுத்து அடக்குவதுபோல, முருகன் சுரர்களுக்கும் மனிதர்களுக்கும் தீங்கு புரிந்த அசுரர்களை அடக்கி ஒடுக்கினான். அப்படி ஒடுக்கும் போது அவனுடைய புய வலிமை பயன்பட்டது. தன்னுடைய பகையை மாற்றுவதற்காக அந்த வலிமையை அவன் கொள்ள

வில்லை. தன்னுடைய குழந்தைகள் பகை தீர்ந்து இன்பத்தோடு வாழவேண்டுமென்பதற்காக அவன் பன்னிரு தோள்களை உடையவனாக இருக்கிறான். இரண்டு தோள்களை உடையவர்களுக்கு ஆண்மை உண்டு. பன்னிரண்டு தோள்களை உடையவன் எல்லோரிலும் பேராண்மை உடையன் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. தோள் வீரத்திற்கு அடையாளமானால் மிகுதியான தோள் மிகுதியான வீரத்திற்கு அடையாளம் என்பதில் ஐயம் ஏது?

கண்ணபிரான் கீதையில், ''வீரர்களுக்குள் நான் முருகனாக இருக்கிறேன்'' என்று சொல்லியிருக்கிறான். அவனுடைய வீர மிகுதியை, வீரத்தின் இருப்பிடமாகிய பன்னிரண்டு தோள் களும் விளக்குகின்றன. அவற்றையும் தரிசித்தோம்.

ஆறுமுகம்

தோள்களைக் கண்ட பிறகு அடுத்தபடி நம்முடைய பார்வை உயர்ந்தால் அவனுடைய திருமுகங்கள் ஆறும் தோன்றும். அந்த ஆறு முகங்களும் மணம் பொருந்திய தாமரை போல ஒளிர்கின்றன. மணம் மனத்தை லயப்படுத்தும். அதனால்தான் பூசை செய்கிறவர்கள் மெல்லிய மணமுள்ள ஊதுவத்தியை ஏற்றி வைத்துக் கொள்கிறார்கள். நெடியான மயக்க மருந்தால் மனம் நின்று விடுகிறது. மென்மையான மணத்தினால் மனம் அமைதி பெறுகிறது. முருகப் பெருமானுடைய திருமுகம் மனத்தில் அமைதியை உண்டாக்கும் மணம் பொருந்தியது.

மருவடிவான வதனங்கள் ஆறும்.

மருவைப் பெற்ற வடிவையுடைய ஆறுமுகங்களும் என்று பொருள் கொள்ள வேண்டும்.

கண்கள்

திருமேனியில் முகம் முக்கியமானது. ஆண்டவனுடைய திருவடியைப் பற்றிக் கொண்டு மெல்ல மெல்ல நம்முடைய பார்வையை உயர்த்தி ஏற்றிக்கொண்டு வந்தோம். இப்போது திருமுகத்தில் வந்து நிற்கிறோம். முகத்தில் முக்கியமானது கண். இறைவனுடைய அருளைப் புறப்படவிடுகின்ற பொய்கைகள் அவை. அவனுடைய திருக்கண் பார்வை பட்டால் நம்முடைய தீங்குகள் எல்லாம் அழியும். அருள் கொப்புளிக்கும் திருக்கண்

களைப் பார்த்த பிறகு வேறு எதையும் பார்க்க முடிகிறது இல்லை. நம்முடைய கண்ணும், அவனுடைய கண்ணும் ஒன்றுபட்டால் பேரின்பம் தானே வந்து அமையும். காதலனும் காதலியும் ஒருவரை ஒருவர் நோக்குவார்கள் என்றும், கண்வழி உள்ளே புகுவார்கள் என்றும் காவியங்கள் பாடுகின்றன.

"கண்ணொடு கண்இணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல."

என்பது திருக்குறள். கண்ணும் கண்ணும் பார்ப்பதில் மிக்க இன்பம் உண்டாகுமாம்.

இங்கே ஆண்டவனுடைய திருவிழிகளை நம்முடைய கண்கள் பார்க்கின்றன. அப்போது உண்டாகும் இன்பம் எல்லா இன்பங்களையும்விடப் பெரிதாக இருக்கும். முருகப் பெருமானுடைய கண்கள் தாமரை மலரைப் போல அமை கின்றன. அவற்றில் விரிவு உண்டு; ஒளி உண்டு.

குரு வடிவு

திருவடி முதல் மலர்க்கண்கள் வரையிலுள்ள உறுப்புக்களையுடைய திருக்கோலத்தோடு முருகனே குருவாக எழுந்தருளினான் என்று அருணகிரியார் கூறுகிறார். நாம் பற்றிக் கொள்வதற்கு ஆதாரமாகத் திருவடி தோன்றியது. பின்பு மெல்ல மெல்லத் தெளிவு பிறக்கும் வண்ணம் ஞான சக்தியாகிய வேல் தோன்றியது. அப்பால் நம்முடைய துன்பங்களை எல்லாம் போக்கிக் கொள்வதற்கு முருகப் பெருமானுடைய வீரத்தை வெளிப்படுத்துகிற திருத்தோள்கள் தோன்றின. பிறகு நம்முடைய உள்ளம் அமைதி அடையத் திருமுகம் தோன்றியது. பின்பு திருவருள் அநுபவத்தை உண்டாக்கும் திருக்கண்கள் தோன்றின. இப்படிப் படிப்படியாக முருகப் பெருமானுடைய திருவுருவத் தோற்றம் ஆனந்த அநுபவத்தை உண்டாக்கியது. இவை எல்லாம் சேர்ந்து உள்ளத்தில் புதைந்து அறியாமையைப் போக்கவும் மெய்ஞ்ஞானத்தை வளர்த்து என்றைக்கும் மாறாத பேரின்பத்தை அநுபவிக்கவும் உதவின. இறைவனே குருவாக எழுந்தருளி அருள் புரிந்தான். அருணகிரியார் இதனை அநுபவத்தில் கண்டவர் ஆதலின், நாமும் முருகப் பெருமானைத் தியானம் பண்ணும் வகையில் இந்தப் பாடலைச் சொன்னார்.

முன்பு சொன்னபடி, பாடலைப் படிப்பவர்கள் உறுப்பைச் சுட்டும் சொற்கள் வரும்போதெல்லாம் அந்த அந்த அங்கத்தை மனத்தில் நிறுத்தித் தியானம் பண்ண வேண்டும். திருவடியும், தண்டையும் என்று சொல்லும்போது நமக்கு அவை அகக் கண்ணில் வரவேண்டும். தண்டையின் ஒலியும், சிலம்பின் ஒலியும் காதில் கேட்க வேண்டும். இப்படி நிறுத்திப் பயின்றால் இந்தப் பாடல் நம் மனத்தை ஒருமுகப்படுத்தித் தியானம் செய்ய உதவும் என்பது உறுதி.

★

திருவடி யும்தண்டை யும்சிலம்
பும்சிலம்பு ஊடுருவப்
பொருவடி வேலும் கடம்பும்
தடம்புயம் ஆறிரண்டும்
மருவடி வான வதனங்கள்
ஆறும் மலர்க்கண்களும்
குருவடி வாய்வந்தென் உள்ளம்
குளிரக் குதிகொண்டவே.

[முருகப்பெருமானுடைய திருவடிகளும், அவற்றில் அணிந்த தண்டையும் சிலம்பும், கிரௌஞ்சமாகிய மலையை உள்ளே புகுந்து உருவும்படி போர் செய்த கூர்மையான வேலும், கடம்ப மாலையும், விசாலமான தோள்கள் பன்னிரண்டும், மணத்தையுடைய வடிவமாக உள்ள திருமுகங்கள் ஆறும், தாமரை போன்ற கண்களும் ஒன்றுபட்டுக் குருவடிவாக எழுந்தருளி அடியேனது உள்ளம் தாபங்கள் அற்று அமைதியான குளிர்ச்சியைப் பெறும்படியாக வந்து குதித்தன.

பொரு – போர் செய்யும்]

முருகனுடைய திருவுருவத் தியானம் செய்யச் செய்ய அவனே குருவாகி வந்து உண்மையை உணர்த்தியருளினான் என்பது கருத்து.

இராப்பகல் அற்ற இடம்

1

அநுபவமும் கருணையும்

கந்தர் அலங்கார மாலையின் குஞ்சமாக ஆறு பாடல்கள் கிடைத்திருக்கின்றன. அவற்றையே இப்போது நாம் பார்க்கிறோம். அதன் முதல் பாடல் எம்பெருமானுடைய சொரூபத் தியானத்திற்கு ஏற்றதாக அமைந்திருக்கிறது. அதைப் பார்த்தோம். அருணகிரிநாதப் பெருமான் தம்முடைய அநுபவமாக அதைச் சொன்னார். அவனுடைய திருவடி முதலியன தம்முடைய உள்ளம் குளிரக் குதிகொண்டன என்று சொன்னார். அப்படிச் சொன்னவுடன் திரும்பிப் பார்த்தார். ஆயிரக்கணக்கான மக்கள் எம்பெருமானுடைய நிலையை உணராமல் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலபேர் அவனுடைய திருவடித் தியானம் கைகூட வேண்டுமென்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்; எது வழி என்று தெரியாமல் திண்டாடுகிறார்கள். அதைப் பார்த்தவுடன் அவர்களுக்கு வழி சொல்லிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. 'நாம் பெற்ற இன்பத்தை மாத்திரம் சொல்லி அந்த எக்களிப்பில் பேசிக் கொண்டிருக்கிறோம். இவர்களுக்கு வழி காட்ட வேண்டாமா?' என்ற நினைவு வந்தது. அந்தக் கருணையினால், ''இறைவனே, உன்னுடைய அற்புதமான வடிவத்தை உள்ளத்தில் வைத்துத் தியானம் பண்ணுவதற்கு எனக்கு ஆசையாக இருக்கிறது'' என்று நினைக்கிறவர்களுக்கு ஏற்றபடி ஒரு விண்ணப்பத்தை அமைத்தார். அதுதான் இப்போது பார்க்கப் போகிற பாட்டு. ''எம் பெருமானே, உன்னுடைய அழகிய உருவத்தை நல்ல வகையில் இருந்து தியானம் பண்ணுகின்ற பக்குவத்தை எனக்குத் தா'' என்ற வேண்டுகோளை உடையது இந்தப் பாட்டு.

இராப்பகல் அற்ற இடங்காட்டி யான்இருந் தேதுதிக்கக்
குராப்புனை தண்டையந் தாள்அரு ளாய்கரி கூப்பிட்டநாள்
கராப்படக் கொன்றக் கரிபோற்ற நின்ற கடவுள்மெச்சும்
பராக்ரம வேல நிருதசங் கார பயங்கரனே.

இது இறைவனுடைய தியானத்தில் ஈடுபட வேண்டுமென்ற ஆசை உடையவர்களுக்குச் சொல்கிற பாட்டு. அவர்களே பக வானிடத்தில் சொல்லி வேண்டிக் கொள்வது போல அருணகிரி நாத சுவாமிகள் இந்தப் பாட்டை அமைத்திருக்கிறார்.

தராசின் நிலை

எம்பெருமானுடைய திருவுருவத் தியானம் செய்வதானால் மனத்திற்கு ஒரு பக்குவம் வேண்டும். தராசின் நிலைபோல அந்தப் பக்குவம் இருக்கும். தராசில் இரண்டு பக்கமும் தட்டுகள் இருக்கும். நுட்பமான பொருள்களை நிறுக்க வேண்டுமானால் நுட்பமான தராசில் நிறுக்கிறோம். தங்கம் வைரம் முதலிய வற்றைச் சின்ன தராசில் வைத்து நிறுப்பார்கள். நிறுப்பதற்கு முன்னால் தராசைத் தூக்கிப் பார்ப்பார்கள். அது சமமாக இருக் கிறதா என்று தெரிந்து கொண்ட பிறகே நிறுக்கத் தொடங்கு வார்கள். இதை வள்ளுவர் சொல்கிறார்;

"சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்"

என்று உவமையில் வைத்து அந்த வழக்கத்தைக் காட்டுகிறார். போட்ட பொருளின் எடையைச் சரியானபடி காட்ட வேண்டுமா னால் எடையைப் போடுவதற்கு முன்பு தராசைத் தூக்கினால் இரண்டு பக்கத்துத் தட்டும் சமமாக இருக்க வேண்டும். முதலில் சமமாக இருக்கிறதா என்று பார்த்த பிறகே பொருளையும் எடையையும் போட்டு நிறுப்பார்கள். அதுபோல் இறைவனுடைய திருவருளை நம் உள்ளத்தில் தாங்கிக் கொள்ள வேண்டுமானால் நம்முடைய உள்ளம் நடுநிலையில் இருக்க வேண்டும். பிற பொருள்களை நாடி அலைந்து கொண்டிருந்தால் இறைவனுடைய உருவத்தைப் பதித்துக் கொள்ள முடியாது.

சுவரும் சித்திரமும்

அழுக்கு அடைந்த சுவரில் சித்திரங்களைத் தீட்ட முடியாது. ஓவியர்கள் முதலில் சுவர் முழுவதும் சுண்ணாம்பு அடிப்பார்கள்.

சுவர் ஒரே வெள்ளையாக ஆன பிறகு அதில் தாம் எழுத வேண்டிய வண்ணச் சித்திரங்களை எழுதுவார்கள். நம்முடைய மனமாகிய சுவரில் இறைவனுடைய திருவுருவத்தை எழுத வேண்டுமானால் முதலில் அங்குள்ள அழுக்கைப் போக்கிக் கொள்ள வேண்டும்.

"துணிவெளுக்க மண்உண்டு
எங்கள் முத்து மாரியம்மா
தோல்வெளுக்கச் சாம்பல்உண்டு
எங்கள் முத்து மாரியம்மா
மணிவெளுக்கச் சாணையுண்டு
எங்கள் முத்து மாரியம்மா
மனம்வெளுக்க வழியில்லை
எங்கள் முத்து மாரியம்மா"

என்று சொல்வார் பாரதியார். நம்முடைய மனத்தில் எத்தனையோ நிறங்கள் ஏறியிருக்கின்றன. சிவப்பும், கறுப்பும் நடமாடிக் கொண்டிருக்கின்றன. சிலருடைய மனத்தில் பச்சைவண்ணம் நிரம்பியிருக்கும். மனத்தில் தோன்றுகிற எண்ணங்களுக்கு வண்ணம் உண்டென்று மேல் நாட்டினர் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதைப் பற்றி விவரமான புத்தகம் ஒன்றை அடையாற்றில் வெளியிட்டிருக்கிறார்கள். மனம் வண்ணங்கள் நிறைந்ததாக இருந்தால் புதிய சித்திரத்தை எழுத முடியாது. எழுதினாலும் மங்கிப் போய்விடும். ஆதலால் முதலில் மனத்தை எந்த வண்ணமும் இல்லாமல் சுத்த சத்துவமாக அமையும்படி வெள்ளை அடிக்க வேண்டும். வெள்ளை அடிப்பதாவது என்ன? மனம் விருப்பு வெறுப்பு இல்லாமல், எதனையும் சாராமல் அமைதியாக, மௌனமாக, நடுநிலையில் இருக்க வேண்டும்.

சுகமும் துக்கமும்

இப்போது நம்முடைய மனம் சுகம் வந்தால் துள்ளிக் குதிக்கிறது; துக்கம் வந்தால் சோர்ந்து விடுகிறது. ஒரு நாள் மிகவும் உற்சாகமாகவும், மற்றொரு நாள் மிகவும் வாட்டமாகவும் இருக்கிறோம். இப்படி இருப்பதற்குக் காரணம் மனந்தான். சுகமும் துக்கமும் மாறி மாறி வரும் உலகத்தில் நம்முடைய

மனம் அலைபோல அலைகிறது; மேடுபள்ளத்தோடு இருக்கிறது. ஏழையானாலும், பணக்காரனானாலும் சுகதுக்கம் என்பவை பொதுவானவையே. மனம் அந்த இரண்டுக்கும் ஏற்றபடி மேலேறிக் கீழே இறங்குகிறது. இப்படி இரண்டுவிதமான அலைகள் மனத்தில் மிதந்து கொண்டிருக்கின்றன. கிளர்ச்சியும் தளர்ச்சியும் இல்லாமல், அலையற்ற கடல்போல மனம் அமைந்து கிடக்க வேண்டும். அப்போதுதான் இறைவனுடைய திருவுருவத்தை எழுதலாம்.

''உயிரா வணம்இருந் துற்று நோக்கி
உள்ளக் கிழியின் உரு எழுதி''

என்று பாடுகிறார் அப்பர்.

நடுநிலை

பெரியவர்களுக்கு மனம் நடுநிலையில் நிற்கும். அலையற்ற கடல்போல அமைதியாக இருக்கும். ஒருவன் பாட்டுப் பாடிக் கொண்டிருக்கிறான். உச்ச ஸ்தாயியில் பாடுகிறான். பின்பு கீழ் ஸ்தாயியில் பாடுகிறான். அவன் எப்படிப் பாடினாலும் அந்தப் பாட்டுச் சுதியோடு ஒட்டியிருக்கும். ஆரோகணம், அவரோகணம் ஆகிய இரண்டுக்கும் பொதுவாக ஓடிக் கொண்டிருப்பது சுருதி. ஞானிகளுடைய மனம் எப்போதும் சுருதி போடுவது போல இறைவனை நினைத்துக் கொண்டிருக்கும். அவர்கள் நம்மைப் போலவே பல காரியங்களைச் செய்தாலும் மனம் நடுநிலையிலிருந்து மாறுவது இல்லை. இறைவனுடைய நினைப்பு எல்லாக் காலத்திலும் சுருதி போட்டுக் கொண்டிருக்கும். அந்த நிலையைச் சமநிலை என்று சொல்வார்கள். அது வரவேண்டுமானால் எத்தனையோ காலம் சாதனம் செய்ய வேண்டும்.

''எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும்
முத்தர் மனமிருக்கும் மோனத்தே – மெத்தனமாய்க்
காதிவிளை யாடிஇரு கைவீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்''

என்று ஞானிகளுடைய மன நிலையைப்பற்றி ஒரு பாட்டு வருகிறது. கிராமங்களில் குளத்திற்கோ, ஆற்றுக்கோ சென்று தாய்மார்கள் நீர் எடுத்து வருவார்கள். தலையின் மேலே ஒரு

குடமும், அதன் மேல் ஒரு தோண்டியும், அதன் மேல் ஒரு செம்பும், இடையில் ஒரு குடமும் வைத்துக் கொண்டு வருவதைப் பார்க்கலாம். இடுப்பிலே இல்லா விட்டாலும் தலையில் ஒன்று இரண்டு வைத்துக்கொண்டு வருவார்கள். இப்படி நாலு பேர் சேர்ந்து வரும்போது சும்மா வர முடியுமா? ஊர் விவகாரங்களை எல்லாம் பேசிக் கொண்டு வருவார்கள்; கையை வீசிப் பேசுவார்கள். அப்படி அவர்கள் கையை வீசிக் கொண்டும், பேசிக் கொண்டும் வந்தாலும் தலையில் இருக்கும் குடத்தை மறந்து விட மாட்டார்கள். அது கீழே விழும்படி தலையை அசைக்க மாட்டார்கள். அவர்களுடைய நடையிலே ஒரு நிதானம் இருக்கும். நமக்கு அது தெரியாது. ஞானிகளுடைய மனம் அப்படித் தான் நடுநிலையில் இருக்குமாம். உலகத்தில் மற்றவர்களைப் போல ஒரு தொழில் செய்து வந்தாலும் அவர்கள் உள்ளம் சம நிலையிலிருந்து ஏறாமல் இறங்காமல் நிற்குமாம். இது ஒரு நாள் இரண்டு நாளில் உண்டாகிற நிலை அன்று. பல பிறப்புக்களிலே முயன்று கிடைக்க வேண்டிய அமைதி. ஒரு பிறவியால் ஒருவன் ஞானியாகிவிடலாம் என்று எண்ண முடியாது. அந்த நிலை வருவதற்கு முன் ஜன்மங்களில் அவன் உழைத்திருக்க வேண்டும். அந்த உழைப்பின் நிறைவை அவன் இந்த ஜன்மத்தில் அடைவான். அப்படி வருகிறவர்களை யோகப் பிரஷ்டர்கள் என்று சொல்வார்கள். அவர்களுடைய உள்ளம் துலாக்கோலைப் போலவே இருக்கும்.

நம்முடைய உள்ளமோ அதற்கு நேர்மாறாக ஒரேயடியாக மேலே போகிறது; அல்லது ஒரேயடியாகக் கீழே போகிறது.

அக இருளும் புற இருளும்

நம் முன்னால் எத்தனை பொருள்கள் இருந்தாலும் அந்தப் பொருள்களின் வண்ணத்தையும், வடிவத்தையும் காணாமல் மறைப்பது இருள். கண் இருந்தாலும், ஒளி இருந்தாலன்றி அதனால் பார்க்க முடியாது. இருட்டு, கண்ணைப் பயனற்றதாகச் செய்கிறது. பொருள் இன்ன இடத்தில் இருக்கிறது, இன்ன வண்ணத்தோடு இருக்கிறது என்று தெரிந்துகொள்ள முடியாமல் செய்வது இருட்டு. புறத்தில் உள்ள இந்த இருள் வெளியில் உள்ள பொருள்களை அறிந்துகொள்ள முடியாமல் செய்வது போல,

அகத்தில் உள்ள இருள் பொருள்களின் உண்மை நிலையைக் காணாமல் செய்கிறது. அந்த இருளுக்கு அறியாமை என்று பெயர். மனத்தில் தெளிவு இல்லாதபடி செய்து, எந்தப் பொருள் எப்படி இருந்தாலும் அதன் உண்மையான உருவத்தைத் தெரிந்து கொள்ள முடியாமல் செய்துவிடுகிறது. அறியாமையை இருள் என்று சொல்வது வழக்கு. இருட்டில் இருப்பவர்களுக்குத் தம் முன் உள்ள பொருள்களின் நிலை தெரியாதது போல அறியாமை உடையவர்களுக்குப் பொருள்களின் உண்மையான நிலை தெரியாது. புறத்தில் உள்ள இருளைப் போக்கி, பொருள்களின் வண்ணம் வடிவம் முதலியவற்றைத் தெரிந்துகொள்ளக் கருவி களாக இருப்பவை சூரியன், சந்திரன், அக்கினியாக மூன்றும். உள்ளே இருக்கிற இருளைப் போக்குவதற்கு இறைவனுடைய அருள்தான் வன்மையுடையது.

மூன்று மன நிலை

நாம் விழித்துக் கொண்டிருக்கிறோம்; அல்லது தூங்கு கிறோம். தூங்கும்போது இரண்டு நிலை நமக்கு வருகின்றன. ஒன்று சொப்பன நிலை; மற்றொன்று எல்லா வற்றையும் மறந்து தூங்கும் தூக்க நிலை. விழித்துக் கொண்டிருப்பதுதான் ஜாக்கிரம். சொப்பனம் காண்பது கனவு நிலை அல்லது சொப்பனாவதஸ்தை. நன்றாக அயர்ந்து தூங்குவது சுஷுப்தியவஸ்தை. இந்த மூன்று நிலைகளிலும் நாம் தடுமாறிக் கொண்டிருக்கிறோம். நமக்குப் பகல் நேரத்தில் விழித்துக் கொண்டிருக்கத் தெரியும். இரவு நேரத் தில் தூங்கத் தெரியும். தூக்கத்தில் சொப்பனம் காணவும் தெரியும்.

இராத்திரி பகல் ஆகிய இரண்டுக்கும் நடுவில் சாயங்காலம் இருக்கிறது. அதுபோல் விழிப்பு நிலைக்கும் தூக்க நிலைக்கும் நடுவில் கனவு நிலை இருக்கிறது. கனவிலே காண்பது முற்றும் உண்மை அன்று. ஆனால் உண்மையாக நடந்தால் எவ்விதம் இன்ப துன்ப உணர்ச்சி உண்டாகுமோ அதுபோன்ற அநுபவத்தை அப்போதைக்குப் பெறுகிறோம். புலி வருவது போலக் கனவிலே காண்கிறோம். அதன் பயனாக உண்மையிலேயே உடம்பில் வேர்வை வருகிறது. தூக்கத்தில் குழந்தைகள் பயந்து கொண்டு சிறுநீர் விட்டுவிடுவதைப் பார்க்கிறோம்.

சாயங்கால வேளையில் ஒளியும் இருளும் கலந்திருக் கின்றன. அதுபோல் கனவில் பொய்யான நிகழ்ச்சியும் மெய்யான அநுபவமும் கலந்திருக்கின்றன. அந்தக் கனவு விழிப்பு நிலையும் அன்று; தூக்க நிலையும் அன்று. தூங்கினால் எல்லாவற்றையும் மறந்து தூங்குகிறோம். விழித்தால் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அப்படி விழித்துக் கொண்டு பார்க்கிற பார்வை உண்மையான பார்வை என்று சொல்ல முடியாது. கண்ணால் காண்பது எல்லாம் மெய் அல்ல; காதால் கேட்பது எல்லாம் உண்மை அல்ல என்ற பழமொழி உண்டு.

சினிமாவும் மனநிலையும்

ஒரு சினிமாப் படத்தைப் பார்க்கிறோம். பல பேர்கள் பல விதமாக ஓடியாடிக் காரியங்கள் செய்வதைக் காண்கிறோம். நாம் பார்க்கும் ஆளுக்கு உயரம், பரிமாணம் எல்லாம் இருப்பது போலத் தோன்றுகிறது. ஆனால் உண்மையில் அங்கே பரிமாணமோ கனமோ இல்லை. அகல நீளம் மாத்திரம் இருக்கின்றன. திரையில் படம் ஓடிக் கொண்டிருக்கும்போது பரிமாணம் உள்ள பொருள்களைப் போலவே எல்லாம் தோன்றுகின்றன. ஆனால் அந்த ஆட்டம் நின்றவுடன் விளக்குப் போட்டால் நிற்கிறது வெறும் திரைதான் என்பது தெரிய வரும். படம் ஓடும்போதுகூட அகல நீளப் படந்தான் இருக்கிறதே தவிரப் பரிமாணப் படம் இல்லை. தோற்றம் மாத்திரம் பரிமாணத்துடன் தோன்றுகிறது. சினிமாப் படம் ஆரம்பிப்பதற்கு முன்பு ஒருவர் திரையைப் பார்த்தால் படம் ஓடிக் கொண்டிருக்கிறபோது திரையில் நடக் கிறது தோற்றந்தான் என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அல்லது படம் முடிந்த பிறகு பார்த்தாலும் திரைதான் உண்மையாக இருக்கும் பொருள் என்று தெரிய வரும். உலகத்திற்கு ஆதியும் அந்தமும் ஆகிற நிலையில் யாராவது இருந்து பார்த்தால் மற்றவை எல்லாம் சினிமா ஓட்டம் போலப் பொய்யானவை என்று தெரிய வரும்.

கானல் உவமை

உலகம் தோற்றுகிற தோற்றத்திற்குக் கானல் நீரை உவமை யாகச் சொல்வது வழக்கம். வெப்பம் மிகுந்து இருக்கும் போது

அலை அலையாக நீர் ஓடுவது போலத் தோற்றும்; அதுதான் கானல். கானலைப் பார்க்கிறவர் இரண்டு வகையினர் இருக்கிறார்கள். கானலை நீராகக் கண்டு ஏமாந்து போகிறவர்கள் ஒரு வகை; அது கானல்தான் என்று தெரிந்து கொண்டபிறகும் அதைப் பார்க்கிறவர்கள் ஒரு வகையினர். இரண்டு பேருக்கும் கானல் தோற்றம் இருக்கும். அவர்கள் கண் பார்வையில் வேறுபாடு இல்லை. ஆனால் அவர்களுடைய கருத்தில்தான் வேறுபாடு இருக்கிறது. கானல் என்று உணராதவன் நீர் என்று எண்ணிப் பார்த்துக் கொண்டிருப்பான். கானல் என்று தெரிந்து கொண்டவன் அது வெறும் கானல் என்பதை உணர்ந்திருப்பான். இரண்டு பேருடைய கண்ணுக்கும் தோன்றும் தோற்றம் ஒன்றுதான். ஆனால் உணர்விலே வேறுபாடு உண்டு. அதுபோல் உலகத்தில் வளைய வருகின்ற நமக்கு நடக்கின்றன எல்லாம் உண்மை என்று தோற்றும். அதே உலகத்தில் இருக்கும் ஞானிக்கும் அந்தத் தோற்றம் உண்டு. ஆனால் அவை யாவும் வெறும் தோற்றந்தான் என்ற தெளிவு அவனிடம் இருக்கும்.

மெய்யும் பொய்யும்

நாம் ஒரு சினிமாப் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். சினிமாக் கதையில் சண்டை நடக்கிறது. அதைப் பார்த்துக் குழந்தை வீல் என்று அழுகிறது. யாரோ கதையில் இறந்து போகிறாள். நாலு பேர் சேர்ந்து அழுகிறார்கள். நமது குழந்தையும் அழுகிறது. அதற்கு அங்கே நடப்பது வெறும் தோற்றம் என்ற அறிவு இல்லை. நமக்கோ அது நன்றாகத் தெரியும். சண்டை நடந்தாலும், சாவு நடந்தாலும் நாம் அஞ்சுவதும் இல்லை; அழுவதும் இல்லை. நாம் எப்பொழுதும் போலவே அமர்ந்திருக்கிறோம். உலக இயலில் குழந்தையைப் போல இருப்பவர்கள் நாம். பெரியவர்களைப் போல இருப்பவர்கள் ஞானிகள். அவர்கள் எப்போதும் நடுநிலையில் இருப்பார்கள்.

அறிவும் அறியாமையும்

நாம் தூங்கும்போது ஒன்றும் அறியாமல் தூங்குகிறோம். விழித்திருக்கும்போது எல்லாவற்றையும் கண்டு உவகையால் துள்ளி, துக்கத்தால் சாம்பிக் கொண்டிருக்கிறோம். ஞானிகளுக்கோ

தூக்கம், விழிப்பு இரண்டும் ஒன்றுதான். தூக்க நிலையைக் கேவலம் என்றும், விழிப்பு நிலையைச் சகலம் என்றும் சொல்வார்கள். அவர்கள் இந்த இரண்டு அவஸ்தைகளையும் கடந்தவர்கள். தூக்கத்தில் எப்படி இந்திரியங்கள் எல்லாம் அடங்கி நாம் தூங்குகிறோமோ அப்படி அவர்கள் விழித்துக் கொண்டிருக்கும்போது இருக்கிறார்கள். விழித்திருந்தாலும் அவர்கள் மனம் அலையாது. அவர்களுக்குத் தூக்கமும் இல்லை; விழிப்பும் இல்லை. இரவும் இல்லை; பகலும் இல்லை.

அறிவு, அறியாமை என்ற இரண்டு வேறுபாடுகள் நம்மிடத்தில் இருக்கின்றன. இந்திரியங்களால் ஒன்றை அறிந்து கொள்வது கூட ஒரு வகை அறிவுதான். அறிவும் அறியாமையும் அற்ற இடத்தில் இருப்பவர்கள் பெரியவர்கள்.

''அறிவு அற்று அறியாமையும் அற்றதுவே''

என்று கந்தர் அநுபூதியில் அருணகிரியார் பாடுகிறார். அறிவு என்பது சகலம்; அறியாமை என்பது கேவலம். அறிவு என்பது பகல்; அறியாமை என்பது இரவு. அறிவு என்பது தெளிவு; அறியாமை என்பது மயக்கம். இந்த இரண்டும் இல்லாத நடு நிலை இரவும், பகலும் அற்ற நிலை. அந்த நடு நிலையில்தான் மனம் அடங்கி இருக்கும். கடவுளுடைய திருவுருவம் நன்றாகப் பதியும். 'அத்தகைய இடம் ஒன்றை எனக்குக் காட்டி, தியானம் பலிக்கும்படியாகச் செய்ய வேண்டும்' என்ற விண்ணப்பத்தை அருணகிரியார் சொல்கிறார்.

இராப்பகல் அற்ற இடம் காட்டி யான் இருந்தே துதிக்கக்
குராப்புனை தண்டையந் தாள் அருளாய்.

இரண்டு விதத் தடை

தியானம் பண்ண உட்கார்ந்தால் நமக்கு இரண்டுவிதமான தடைகள் வரும். பெரும்பாலான தடை புறத்திலிருந்து வருவது. பூசை பண்ண உட்காருவான். வாசலில் செருப்புத் தைக்கிறவன் பேசுகிற பேச்சும், உள்ளே குழந்தை விளையாடுகிற விளையாட்டு ஒலியும், அழுகைச் சத்தமும் வந்து பாதிக்கும். அது ஏன், இது ஏன் என்று கேட்டுக் கொண்டே ஜபம் செய்வான். புறத்திலிருந்து வருகிற ஒலிகள் நம்முடைய மன ஒருமைப் பாட்டைக்

குலைக்கும். இவைகள் எல்லாம் காதில் படாமல் ஏதாவது ஒரு தனி அறையில் போய் உட்கார்ந்தால் அப்போது பல நினைவுகள் உள்ளிருந்து தோன்றும். மனம் எங்கேயாவது போய் நிற்கும். யாரோ ஒருவரிடம் கடன் வாங்கினது அப்போதுதான் நினைவுக்கு வரும். பத்து வருஷங்களுக்கு முன்பு நிகழ்ந்த நிகழ்ச்சி திடீ ரென்று வந்து நிற்கும். முதல் நாள் போயிருந்த வீட்டின் முற்றத் தில் போய் மனம் நிற்கும். இப்படிப் புறத்திலிருந்தும், உள்ளத் திலிருந்தும் பலபல தடைகள் வந்து தாக்கும். மனம் ஒருமைப் படுவது மிகவும் அருமையாக இருக்கும்.

தூக்கம்

எப்படியோ இந்த எண்ணங்களை எல்லாம் மாற்றி, காதில் சப்தம் விழுந்தாலும் கேட்காதபடி மனத்தை ஒருமைப்படுத்து கிறோம். அப்போதும் ஓர் ஆபத்து இருக்கிறது. மனம் ஒருமைப் படுவது போலத் தோன்றிப் பிறகு தூக்கம் வந்துவிடும். தூங்குகிற வனுக்கு எந்தவிதமான சப்தமும் கேட்காது. உட்கார்ந்தபடியே தூங்கத் தலைப்பட்டால் தியானம் எங்கே உருப்படப் போகிறது? ஆண்டவனுடைய திருவுருவத்தைப் பற்றிக் கொண்டு மற்றவற்றை எல்லாம் மறந்து நின்றால் மட்டுமே எவ்விதத் தடையும் வராது; தூக்கமும் வராது. ஆனால் அந்த நிலை வருவது மிகவும் கடின மானது. பல பல எண்ணங்களை எண்ணுவதும், புறத்திலிருந்து வருகிற ஒலிகளைக் கேட்பதும் ஆகிய இவைகள் உள்ள நிலை ஜாக்கிர நிலை. தூக்கம் வருவது கேவல நிலை. இந்த இரண்டையும் சகலகேவலம் என்று சொல்வார்கள். ஒன்றையே பற்றி நின்று தியானிக்கும்போது சகல கேவலம் அற்ற நிலை உண்டாகும். அதையே இரவு பகல் அற்ற இடம் என்று அருண கிரியார் சொல்கிறார். அந்த இடத்தில் வெளியிலிருந்து வரும் தடைகளும் இரா. உள்ளே இருந்தும் எந்தத் தடையும் வராது. தூக்கமும் வராது. மனம் ஒருமைப்பட்டு இறைவனுடைய திரு வருள் தியானத்தில் ஈடுபட்டால் தூக்கத்திற்கு இடம் இல்லை.

சகல கேவலம் அற்ற நிலை

அந்த மாதிரி ஒரு நிலையை எதையேனும் உபமானம் சொல்லி விளக்க முடியாது. அதை அநுபவித்துத்தான் தெரிந்து

கொள்ள முடியும். ஒரு பெரிய சொத்தை எளிதில் பெற்றவனுக்கு இராத்திரியில் தூக்கம் வருவது இல்லை. ஆனால் அவன் மனம் மிகவும் உற்சாகத்தோடு இருக்கும். அதைப் போன்ற நிலை என்று சொல்லலாம். ஆனால் அதுகூடச் சரியான உபமானமாகாது. மன நிறைவு பெற்ற போது அதிக அலைச்சல் இல்லாத நிலையில் மனம் இருக்கும். அது போன்றது என்று சொல்லலாம். அதுகூடச் சரியான உவமையாகாது. மனம் அலையாமல், எதையும் நினை யாமல், தூக்கம் கொள்ளாமல் ஒன்றையே பற்றிக் கொள்ளும் நிலை அது. இரவு பகல் அற்ற அந்த இடத்தை நீ எனக்குக் காட்ட வேண்டுமென்று அருணகிரியார் பிரார்த்திக்கிறார்.

இராப்பகல் அற்ற இடம் காட்டி,

துதித்தல்

அந்த இடத்தை அவன் காட்டினால் போதுமா? அந்த இடத்தில் நின்று என்ன செய்ய வேண்டும்?

யான் இருந்தே துதிக்க.

இரவும் பகலும் அற்ற இடத்தைக் காட்டி, நான் அந்த இடத் தில் இருந்து உன்னைத் துதிக்கும்படியாகச் செய்ய வேண்டும் என்கிறார். இறைவன் திருவருளால் கிடைக்கிற இரவும் பகலும் அற்ற இடத்தில் மயக்கம் இராது. புற எண்ணங்கள் மோதா. சகல கேவலம் கடந்த நிலை உண்டாகும். அந்த இடத்தில் நாம் நிற்க வேண்டுமானால் எதையாவது பற்றிக் கொள்ள வேண்டும்.

பற்றுக்கோடு

இராப்பகல் அற்ற இடம்காட்டி
யான்இருந்தே துதிக்கக்
குராப்புனை தண்டையந் தாள் அருளாய்

எம்பெருமானுடைய திருவடியைப் பற்றிக் கொண்டால் இராப்பகல் அற்ற இடத்தில் நெடுநேரம் இருக்கலாம்.

முருகனுடைய பாதம் குரா மலரையும், தண்டையையும் அணிந்திருக்கிறது. குரா முருகப் பெருமானுக்குரிய மலர். தண்டை உமா தேவியார் தன் குழந்தைக்கு அணிந்த ஆபரணம். அவன் தன்னுடைய அன்னை சூட்டிய தண்டையை மாத்திரம்

அணிந்திருக்கவில்லை; அதோடு அன்பர்கள் பூசிக்கின்ற குரா மலரையும் அணிந்திருக்கிறான். அன்னை புனைந்த தண்டை மிகச் சிறந்தது. அதனுடன் அன்பர் புனைந்த குரா மலரையும் அணிந்திருக்கிறான். அத்தகைய திருவடியை நீ தரவேண்டு மென்று பிரார்த்திக்கிறார்.

அந்தத் திருவடி எதற்காக? மனம் பற்றிக் கொள்வதற்காக. மனம் ஓரிடத்தில் நிற்க வேண்டும். எதையும் பற்றிக் கொள்ளா மல் அது நிற்காது. ஒன்றையும் பற்றிக் கொள்ள முடியவில்லை யென்றால் தூக்கம் வந்துவிடும். அல்லது பலவற்றைப் பற்றிக் கொண்டு வீதியில் போய்க் குறும்பு செய்யும். இந்த இரண்டு நிலையும் இல்லாமல் கட்டுப்பட வேண்டுமானால் அதை ஒன்றோடு சேர்க்க வேண்டும். அது ஆண்டவனுடைய திருவடி. ''உன் திருவடியை என் உள்ளத்தைக் கட்டும் தறியாக ஆக்கிக் கொள்ள வேண்டும்'' என்பது போலச் சொல்கிறார்.

இராப்பகல் அற்ற இடம் கிடைத்தால் மட்டும் போதாது. அங்கே இருக்க வேண்டும். இருப்பதாவது உடம்பும் உள்ளமும் அலையாமல் அமைந்திருப்பது. பின்பு துதிக்க வேண்டும். இங்கே, துதித்தல் என்பது தியானத்தைக் குறிப்பது. அமைதியாக இருந்து தியானம் செய்ய வேண்டும். அப்படித் தியானம் செய்வ தற்கு ஒரு பற்றுக் கோடு வேண்டும்.

நல்ல இடத்தில் உட்கார வைத்து, அமருவதற்கு ஏற்ற வசதி யும் செய்து, துதிப்பதற்கு முயற்சியும் செய்யச் செய்துவிட்டால் பயன் இல்லை. இவ்வளவுக்கும் லட்சியமாகிய அல்லது பற்றுக் கோடாகிய ஒரு பொருள் வேண்டும். அதுதான் குராப்புனை தண்டையந்தாள்.

நான் இருந்தே துதிக்க

என்று சொல்கிறார். இருத்தல் என்பதற்கு உடம்பு அசையாமல் இருப்பது என்பது மாத்திரம் பொருள் அன்று. மனத்தாலும் சஞ்சாரம் செய்யாமல் அமைதியாக இருத்தல் என்று பொருள் கொள்ள வேண்டும்.

''மனம் அடங்கும் திறத்தினில் ஓரிடத்தே இருந்தறியேன்''

என்று இராமலிங்க சுவாமிகள் இந்த நிலையைச் சொல்கிறார்.

மனம் அடங்கும் வகையில் ஏதாவது ஓரிடத்தில் அமர்ந் திருக்க வேண்டும். அட்டாங்க யோகத்தில் மூன்றாவது பயிற்சி யாக ஆசனத்தைச் சொல்வார்கள். இயமம், நியமம், ஆசனம் என்று வரும். மனம் சூட்சுமமாக இருப்பது. அதைப் பக்குவப் படுத்தி ஒரு நிலையில் வைப்பதற்குச் சாதனம் செய்ய வேண்டும். அமைதியாக அமர்ந்து பயிற்சி செய்ய வேண்டும்.

தாள் அருளாய்

குழந்தையிடத்தில் காகிதம் கொடுத்தாலும் கிழித்து எறிந்து விடும்; நூறு ரூபாய் நோட்டைக் கொடுத்தாலும் கிழித்துவிடும். வெறும் காகிதத்திற்கும், நூறு ரூபாய் நோட்டுக்கும் உள்ள வேறுபாடு அதற்குத் தெரியாது. இரண்டுக்கும் உள்ள வேறுபாடு தெரிந்து நூறு ரூபாய் நோட்டின் மதிப்பை உணரச் செய்த பிறகு கொடுத்தால் அது அதனை மிகவும் அக்கறையோடு பாதுகாக்கும். அவ்வாறு, அமைதியற்ற மனத்தோடு இருக்கும்போது இறைவன் திருத்தாளைக் கொடுத்தால் அதனால் பயன் வராது. அந்தத் தாளின் மதிப்பை உணர்ந்து பயன்படுத்திக் கொள்ளாமல் போய் விடுவோம். ஆகவே, முதலில் மனத்தில் அமைதியைத் தந்து அப்புறம் இறைவன் திருத்தாளைத் தர வேண்டும். அமைதி உண்டாகக் கூடிய இடந்தான் இராப்பகல் அற்ற இடம். அதனைத் தந்து, பின்பு அமைதியாக இருந்து துதிக்கச் செய்து, அப்புறம் தண்டையந் தாள் தரவேண்டுமென்று முறைப்படுத்தி விண்ணப்பம் செய்கிறார்.

''என் மனம் நடுநிலையை அடைந்திருக்கும் இராப்பகல் அற்ற இடத்தை நீ காட்ட வேண்டும். இடம் காட்டினால் மட்டும் போதாது. அந்த இடத்தில் செய்வதற்குரிய செயல் வேண்டும். அந்தச் செயலுக்குப் பற்றுக் கோடாக உன் திருவடியையும் நீ தந்து அருள வேண்டும்'' என்கிறார்.

இவ்வாறு சகல கேவல நிலையின்றி அமைதியான பாங்கில் ஆண்டவனைத் தியானித்து அவன் திருவடியைப் பற்றிக் கொள்ளு தல் பேரின்பத்திற்கு வாயில். இதனைப் பெற வேண்டுமென்று பிரார்த்தித்த அருணகிரியார் அடுத்தபடியாக முருகப் பெருமானைப் புகழ்கிறார்.

2

திருமால் முருகனைப் புகழ்தல்

கரி கூப்பிட்ட நாள்
கராப்படக் கொன்று அக் கரி போற்ற நின்ற
கடவுள்மெச்சும்
பராக்ரம வேல, நிருத சங்கார, பயங்கரனே!

ஆண்டவனைத் தரிசனம் பண்ணப் போகிறார் அருணகிரியார். அங்கே ஒரு தனிக் கோயிலில் முருகன் எழுந்தருளியிருக்கிறான். அவர் கோயிலுக்குள் நுழையும்போது உள்ளே இருந்து பேச்சுக்குரல் வெளியே கேட்கிறது. அது அவர் காதிலும் விழுகிறது. 'நமக்கு முன்னே யாரோ ஒருவர் வந்து எம்பெருமானுடன் பேசிக் கொண்டிருக்கிறார்கள் போல இருக்கிறது' என்று சற்றுத் தயங்கித் தயங்கி நிற்கிறார். உள்ளே குரல் கேட்கிறது, ''எம்பெருமானே, உலகத்தினர் விஷயம் தெரியாமல் உலகத்தை எல்லாம் காப்பாற்றுகிறவன் நான் என்று என்னைப் புகழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆதிமூலமே என்று கதறிய யானைக்கு நான் உயிர்ப் பிச்சை அளித்தேன் என்று அந்த உலகத்தார் சொல்கிறார்கள். அந்த யானை என்னை நினைந்து அழுதது. என் பெருமையைவிடப் பெரியது உன் பெருமை என்று எனக்குத் தெரியாதா? இன்று மூன்று உலகமும் நிலைபெற்று நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கிறதென்றால் அது உன் பராக்கிரமச் செயலால் அல்லவா? நானும், பிரம்மாவும், மற்றவர்களும் சூரபன்மனுக்கு வரம் கொடுத்து அவனைப் பலசாலியாக்கினோம். பின்பு அவன், தீட்டிய கட்டையிலேயே கூர் பார்க்கிறது போல, எங்களையே எதிர்த்தான். இந்திரன் நடுநடுங்கிப் போனான். எங்களால் அவனைக் காப்பாற்ற முடியவில்லை. நீ உன்னுடைய பெரு வீரத்தினால் சூரபன்மனைச் சங்காரம் செய்து மீட்டும் அமராவதியை அமராவதியாக்கினாய். இமையவர் நாட்டினில் நிறைகுடி ஏற்றி உன் வெற்றிக் கொடியை நாட்டினாய். இந்தப் பெருமையை நான் அறியமாட்டேனா?'' என்று சொல்லிக் கொண்டிருக்கிறார். அவர் சொல்கிற வார்த்தையிலிருந்து உள்ளே இருக்கிறவர் திருமால் என்று தெரிகிறது. தம்முடைய மாப்

பிள்ளையை அவர் நன்கு அறிந்து புகழ்ந்து கொண்டிருக்கிறார். அந்தத் திருமால் எத்தகையவர்?

திருமாலின் பெருமை

கரி கூப்பிட்ட நாள்
கராப்படக் கொன்று அக் கரிபோற்ற நின்ற கடவுள்.

திருமால் மிகச் சிறந்தவர். உலகத்திற்கு ஆதியாகிய கடவுள் யார் என்ற கேள்விக்குத் திருமால் என்று சிலர் விடை சொல்வார்கள். சிவபெருமான்தான் என்று வேறுசிலர் சொல்வார்கள். ஆதி மூலமே என்று அழைத்த யானைக்கு முன்னே திருமால் வந்து நின்றார். அவரே எல்லாவற்றுக்கும் மூலமான பரம்பொருள் என்று கசேந்திரன் கதையைச் சொல்லித் திருமாலின் பெருமையை எடுத்துக் காட்டுவார்கள். 'யானையே சாட்சி சொல்லியிருக்கிறதே; ஆதிமூலமே என்று அது கூறும்போது பிரம்மா காப்பாற்ற வந்தானா? ருத்திரன் வந்தானா? அந்தப் பெயருக்கு உடையவன் நான்தான் என்று திருமால் எழுந்தருளிக் காப்பாற்றினார். அவரே எல்லோருக்கும் மூலக் கடவுள்' என்று பக்தர்கள் சொல்கிறார்கள். இதைக் கம்பன் பாடுகிறான்.

"கடுத்தகராம் கதுவநிமிர் கையெடுத்து மெய்கலங்கி
உடுத்ததிசை அனைத்தினுஞ்சென் றொலிகொள்ள
உறுதுயரால்
அடுத்தபெருந் தனிமூலத் தரும்பரமே பரமே என்று
எடுத்ததொருவா ரணம் அழைப்ப நீயோவந் தேனென்றாய்."

"ஒரு வாரணம் அழைப்ப நீ தானே வந்தாய்?" என்று கேட்கிறார். இப்படி விராதன் துதித்ததாகக் கம்ப ராமாயணத்தில் வருகிறது. யானையின் புலம்பல் எட்டுத் திசைகளிலும் எதிரொலித்ததாம். எல்லாத் தேவர்களுடைய காதிலும் கேட்டிருக்கும். ஆனாலும் அப்போது வந்து காப்பாற்றினவர் திருமாலே. இந்தக் கதையை மனத்தில் கொண்டு,

கரி கூப்பிட்ட நாள்
கராப்படக் கொன்று

என்று அருணகிரியார் சொல்கிறார். அதனைக் காப்பாற்றிய திரு மாலை நன்றி உணர்வு பொங்க அந்த யானை போற்றி நின்றதாம்.

அது போற்றும்படி செய்து உலகத்திற்குக் கருணை புரிந்து நிலை நிற்கிற கடவுள் திருமால்.

அக் கரி போற்ற நின்ற கடவுள்.

கசேந்திரன் வரலாறு

அந்த யானை எது தெரியுமா? பாண்டி நாட்டில் திருமாலிடத்தில் பக்தி உடையவனாக இந்திரத்யும்நன் என்ற அரசன் இருந்தான். அவன் அகத்தியர் சாபத்தால் யானையானான். ஒவ்வொரு நாளும் ஆயிரம் தாமரையைப் பறித்து வந்து திருமாலை வழிபடும் வழக்கம் உடையது அந்த யானை. அதற்குத் திருமாலை வழிபட வேண்டுமென்ற அறிவு இருந்தது. அதனை முதலை பற்றிக் கொண்டவுடன் திருமாலை எண்ணி ஆதி மூலமே என்று கூப்பிட்டது. அப்போது திருமால் ஓடி வந்தார். முதலையைச் சங்கரித்து யானையை மீட்டார். முதலையின் வாயிலிருந்து விடுதலை பெற்ற யானை திருமாலைத் தோத்திரம் செய்தது. இப்படி ஆபத்தில் இருந்த யானையைக் காத்து அது செய்த துதிகளைக் கேட்டுப் பெருமையோடு நிற்கிறவர் திருமால். ''அவ்வளவு பெருமையுடைய திருமாலே மெச்சும்படியாக விளங்குகிறவன் எங்களுடைய வேலாயுதக் கடவுள்'' என்று சொல்கிறார் அருணகிரியார்.

கரி கூப்பிட்ட நாள்
கராப்படக் கொன்றுஅக் கரிபோற்ற நின்ற கடவுள் மெச்சும்
பராக்ரம வேல!

படியின் மேற்படி

இங்கே அருணகிரியார் திருமாலின் புகழை இவ்வளவு சொல்கிறாரே; ஏன்? ஒருவனை லட்சாதிபதி என்று சொல்கிறோம். அதனால் அவன் புகழ் தெரிகிறது. அவன் பெருமையை முதலில் சொல்லிவிட்டு, ''அவனைவிட இவன் பணக்காரன்'' என்று இவனைச் சுட்டினால் பின்னும் இவன் பெருமை விட்டு விளங்கும். ஒரு பொருளின் உயர்வை மிகவும் எடுத்துச் சொல்லி, அதைவிட உயர்ந்தது இது என்றால் பின்னதன் உயர்வைச் சொல்லாமலே தெரிந்து கொள்ளலாம். இது ஒருவகையான உத்தி. கம்பர் இந்த உத்தியைப் பல இடங்களில் ஆளுகிறார். கோசலை

யின் பெருமையைக் குகன் தெரிந்துகொள்ள வேண்டுமென்று பரதன் பேசுகிறான். 'உலகம் பெரியது. அதை உண்டாக்கிய பிரமன் அதைவிடப் பெரியவன். அந்தப் பிரமனைத் தந்த திருமால் அவனைவிடப் பெரியவன். அவனைப் பெற்ற கோசலை பின்னும் பெரியவள்'' என்று அடுக்கடுக்காகச் சொல்கிறான்.

''கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல்தேவி, மூவுலகு மீன்றானை
முன்னீன் றானைப்
பெற்றத்தாற் பெறுஞ்செல்வம் யான்பிறத்த
லால்துறந்த பெரியாள்.''

பல பெரிய பொருள்களை முதலில் காட்டி அவற்றுக்கெல்லாம் மேலான பெருமை உடையவள் என்று பரதன் குறிப்பிக்கிறான். இவ்வாறு படியின் மேல் படியாக உயர்த்தி வைத்துக் காட்டுவது ஓர் அழகு. அந்த வகையில் அருணகிரியார் திருமாலின் பெருமையைக் கூறி அதற்குமேல் ஒரு படி கட்டி, முருகப் பெருமானுடைய புகழை வைத்துக் காட்டுகிறார்.

ஏதேனும் ஒன்றைப் பாராட்ட வேண்டுமானால் அந்தத் துறையில் வல்லவர்கள்தாம் பாராட்ட வேண்டும். சங்கீதம் தெரியாதவன் கழுத்துச் சுளுக்குத் தலையை ஆட்டினாலும் அதனால் பயன் இல்லை. உண்மையாக இசையின் சுவை தெரிந்தவன் நயம் தெரிந்து தலையை ஆட்டினால் அதற்குப் பொருள் உண்டு. கலைஞர்களுக்கும் மகிழ்ச்சி உண்டாகும். முதலையைக் கொன்று கசேந்திரனைக் காப்பாற்றிய பெருவீரராகிய திருமால் முருகப் பெருமானுடைய பராக்கிரமத் தைப் போற்றுகிறார். இதனால் முருகப் பெருமானுடைய பராக்கிரமத்தின் பெருமை நன்கு விளங்குகிறது.

பராக்கிரமம்

இறைவனுக்கு இரண்டு வகை ஆற்றலுண்டு: அருள் நிரம்பிய பல திருவிளையாடல்களைச் செய்வது; வீரம் காட்டி அல்லாதவர்களை அழிப்பது. முதலில் சொன்னதைத் திருவிளையாடல் அல்லது லீலை என்றும், பின்னால் சொன்னதைப் பராக்கிரமம் என்றும் சொல்வார்கள். இரண்டும் ஆண்டவன் அருட் செயல்களே. ஆனால் முன்னது நயமாகத் தோன்றுகிறது; பின்னது பய

மாகத் தோன்றுகிறது. இரண்டையும் முறையே அறக் கருணை, மறக் கருணை என்று சொல்வார்கள். அறக் கருணை அநுக்கிரகம்; மறக்கருணை நிக்கிரகம். அநுக்கிரக நிக்கிரகமாகிய இரண்டும் ஒரு வகையில் இறைவன் பராக்கிரமத்தைச் சொல்லும். இங்கே முருகப்பெருமான் எல்லோரையும் விடச் சிறந்த பராக்கிரமம் உடையவனாக இருக்கிறான். அவன் கையில் அவன் பராக்கிரமத் திற்கு அடையாளமாக வேல் விளங்குகிறது.

நிருத சங்கார பயங்கரன்

அசுரர்களைச் சங்காரம் செய்தவன் அவன். அவர்களுக்குப் பயத்தைத் தோற்றுவிக்கிறவன். உலகத்தவருக்குப் பயத்தை உண்டாக்கி ஞானிகளுக்கும், தேவர்களுக்கும் துன்பத்தை அளித்தவன் சூரன். தன்னுடைய உறவினர்களாகிய அசுரர்களைப் படையாகக் கூட்டிக் கொண்டு எப்போதும் துன்பம் செய்து கொண்டிருந்தான். அவன் பேரைக் கேட்டாலே இந்திரன் முதலிய தேவர்கள் பயந்தார்கள். எல்லோருக்கும் பயத்தை உண்டாக்கித் தாம் மட்டும் பயப்படாமல் இருந்த நிருதர்களும் பயம் கொள்ளும்படி செய்தவன் முருகன்.

நிருதசங் கார பயங்கரனே!

''சிறந்த வீரராகிய திருமால் போற்றுகின்ற பெரு வீரனே, உண்மையான வீரத்தை உணர்ந்த அக் கடவுள் மெச்சிப் பேசுகின்ற பராக்கிரமத்தையுடைய வடிவேற் பெருமானே, அசுரர்கள் பயம் கொள்ளும்படியாகச் செய்து அவர்களைச் சங்காரம் செய்த பெருமானே, நீ எனக்கு இராப்பகலற்ற இடத்தைக் காட்டி நான் அமைதியாக இருந்து தியானம் செய்து உய்வதற்குரிய உன்னுடைய தண்டையந் தாளைத் தர வேண்டும்'' என்று இந்தப் பாட்டில் அருணகிரியார் பிரார்த்தனை செய்கிறார்.

★

இராப்பகல் அற்ற இடம்காட்டி
யான்இருந் தேதுதிக்கக்
குராப்புனை தண்டையந் தாள்அரு
ளாய்; கரி கூப்பிட்டநாள்

கராப்படக் கொன்றுஅக் கரிபோற்ற
நின்ற கடவுள்மெச்சும்
பராக்ரம வேல, நிருதசங்
கார, பயங்கரனே.

[இரவும் பகலுமாகிய சகல கேவலம் கடந்த நடுநிலையான இடத்தைக் காட்டி யான் அங்கே நிலையாக அமர்ந்து துதிக்கும் படியாகக் குராமலரை அணிந்த தண்டையோடு கூடிய அழகிய நின் திருவடியை அருள்வாயாக; ஆதிமூலமே என்று கசேந்திரன் அழைத்தபோது அதன் காலைப் பற்றி இழுத்த முதலையைக் கொன்று, அழைத்த கசேந்திரன் துதிக்கும் வண்ணம் அதன் முன்னே நின்று காட்சி தந்த கடவுளாகிய திருமால் புகழுகின்ற பராக்கிரமத்தை உடைய வடிவேற் பெருமானே, அசுரர்களைச் சங்காரஞ் செய்தவனே, அவர்களுக்குப் பயத்தை உண்டாக்குபவனே!

இராப்பகல்–சகல கேவல அவஸ்தைகள். இடம் என்றது நிலையை. இருந்து – அமைதியாக இருந்து. கரா – முதலை. பட – இறக்க. கடவுள் – திருமால். நிருதர் – அசுரர்.

வேல, சங்கார, பயங்கரனே, தாள் அருளாய் என்று முடித்துப் பொருள் கொள்க.]

முருகன் திருவருளால் தியானம் பலிக்க வேண்டும் என்பது கருத்து.

கண்ணாரக் காணும் காட்சி

நமக்காக அருணகிரிநாதர், ''நான் தியானம் பண்ணும்படி உன் திருவடியைத் தரவேண்டும்'' என்று பிரார்த்தித்த பாட்டைப் பார்த்தோம். மறுபடியும் அருணகிரியார் தாம் பெற்ற அநுபவத்தைச் சொல்ல வருகிறார். முதல் பாட்டில் இறைவன் கோலம் தம் உள்ளம் குளிரக் குதிகொண்ட அதிசயத்தைச் சொன்னார். அதற்கு மேற்பட்ட அநுபவம் ஒன்றை இப்போது சொல்லப் போகிறார்.

புறத்தோற்றமும் அகத்தோற்றமும்

நாம் கண்ட கண்ட பொருளைப் பாராமல் இறைவன் திருவுருவத்தைக் கண்ணால் நன்றாகக் காணவேண்டும். திருக்கோயிலுக்குச் செல்லும்போது இறைவனோடு தொடர்புள்ள பொருள்களைப் பார்க்கிறோம். புறத்தில் உள்ள தெய்வங்களைப் பார்த்துக் கொண்டு உள்ளே இருக்கும் மண்டபத்திற்குள் நுழைந்து, கடைசியில் இறைவன் திருமுன் நிற்கிறோம். அவனுடைய திருவுருவத்தைத் தீபாராதனை செய்யும்போது பார்க்கிறோம். அப்படிப் பார்க்கும்போது அந்த உருவம் நம்முடைய உள்ளத்தில் நிற்கும்படி பார்க்க வேண்டும். புறத்தில் காணும்போதே கண்ணை மூடிக் கொண்டு அந்த உருவத்தை உள்ளே பதித்துக் கொள்ளப் பழக வேண்டும். இப்படி நாளடைவில் பழகப் பழகக் கண்ணை மூடிக் கொண்டால் அந்தத் திருவுருவம் உள்ளே தோன்றும் நிலை உண்டாகும்.

ஏதோ ஒருநாள் பார்த்துவிட்டு வந்த மாத்திரத்தில் நம் உள்ளத்தில் அந்த உருவம் நில்லாது. நம்முடன் மிகவும் நெருங்கி வாழுகின்ற மனைவியைக்கூடத் தனியே இருந்து நினைத்தால் அவள் உருவம் அப்படியே தோன்றுவது இல்லை. மனத்திற்குத் தெளிவாகக் காணும் நிலை கிடையாது என்று சொல்ல முடியாது. கனவில் அதே மனம் பல பொருள்களைக் காணும்போது அவை

மிகத் தெளிவாகவே தோற்றுகின்றன. அதற்குக் காரணம் : மற்ற இந்திரியங்கள் வேலை செய்யாமல் மனம் அப்போது தனி நின்று காண்கிறது. அப்படித்தான் புறத்திலுள்ள ஒலி முதலியவற்றில் உள்ளத்தைச் செலுத்தாமல், மனத்திலே வேறு எண்ணங்களைக் கொள்ளாமல், புறத்தில் கண்ணால் கண்ட திருவுருவத்தை உள்ளத்தில் பதித்துக் கொள்ளப் பழக வேண்டும். அப்படிப் பழகினால் ஆண்டவன் கோயிலைவிட்டு வெளியே வந்து வேறு ஓரிடத்தில் தனியே உட்கார்ந்து கண்ணை மூடிக் கொண்டால், அந்த உருவத்தைப் பார்க்கலாம். பலகாலப் பழக்கத்தினால் உள்ளக் கிழியில் அந்தத் தோற்றம் வரும்படி செய்து கொள்ள லாம். அந்த நிலை வந்ததைத்தான், 'எம்பெருமான் தன்னுடைய திருவடி முதலியவற்றோடு வந்து குருவடிவாக என் உள்ளம் குளிரக் குதி கொண்டான்' என்று முதல் பாட்டில் சொன்னார். இது உள்முகத்தில் தோற்றுகின்ற தோற்றம். அந்தத் தோற்றம் வெளியிலும் தோற்றும் ஒரு தனி அநுபவத்தை இப்போது சொல்ல வருகிறார்.

அதைப் படித்தால் முதலில் நமக்கு விளங்காது. சில உதாரணங்களைக் கொண்டு பார்த்தால்தான் விளங்கும். பசி மிகுதியாக இருக்கிறவனுக்குக் கண் இருட்டிக் கொண்டு வருகிற தென்று சொல்கிறோம். இங்கே வெளியில் இருட்டு இல்லை; ஒளி நிரம்பியிருக்கிறது. இருந்தாலும் உடம்பில் உள்ள பலவீனம் மனத்திலுள்ள சோர்வு எல்லாம் சேர்ந்து வெளியில் உள்ள பொருள்கள் மறைந்து போகும்படி கண்ணில் வந்து தாக்கு கின்றன. வெளியில் ஒளி சூழ்ந்திருக்கும்போதுகூட உள்முகத்தில் ஏற்படும் மாறுதல்களினால் கண் மறைந்து வெளியில் இருள் கப்பிக் கொண்டிருப்பது போலத் தோற்றும். இப்படியே, வெளி யில் இருள் கப்பிக் கொண்டிருக்கும்போது சிலருக்குக் கருத்தில் உள்ள ஒளியினால் புறத்தில் எல்லாம் ஒளிமயமாகத் தோற்று வதும் உண்டு.

உருவெளித் தோற்றம்

ஏதாவது ஒரு பொருளிடத்தில் நமக்கு மிக்க ஆசை உண் டானால் அந்தப் பொருள் நம் மனத்தில் தோற்றும். அந்த ஆசை முறுகினால் மனத்திலே தோற்றுவதோடு நில்லாமல் புற வெளி

யிலும் தோற்றும். அப்படித் தோற்றும் தோற்றத்தை உருவெளித் தோற்றம் என்று புலவர்கள் சொல்வார்கள். அகத்தில் உள்ள காதல் மிகுதியாக ஆக அகத்தில் தோற்றும் தோற்றமே புறத்திலும் வந்து தோற்றுமாம்.

நாம்கூடச் சில சமயங்களில் சிலவகையான காட்சிகளைக் காணுகிறோம். சுவரில் ஏதாவது ஒரு மூளி இருந்தால் அந்த இடம் ஒட்டகமாகத் தோன்றும்; பெண் மாதிரித் தோன்றும். மற்றவர்களுக்கு அது தோன்றாது. ஓரிடத்தில் அழுக்குப் படிந்திருக்கும்; வட்டமாக இருக்கும். அதில் கண், காது, மூக்கு எல்லாம் நன்றாகத் தோன்றும்; ஒரு சித்திரம் போலவே தோற்றமளிக்கும். எல்லோருக்கும் அது தோன்றாது. நம்முடைய மனோபாவமே அப்படிக் காண்பதற்குரிய காரணம்.

காதல் மிகுந்தவர்களுக்கு உருவெளித் தோற்றம் தோன்றும் என்பதைப் பழைய இலக்கியங்கள் சொல்கின்றன. இணை பிரியாமல் வாழ்ந்த காதலனும், காதலியும் ஒருவரையொருவர் உருவெளியில் பார்க்கிறார்கள். காதலன் பொருளைத் தேடிக் கொண்டு போகிறான். அந்தக் காலத்தில் பிரிவினால் இரண்டு பேரும் வாடுவார்கள். காதலன் காதலியை நினைப்பான். காதலி காதலனை நினைப்பாள். அப்படி நினைக்கும்போது அவரவர்களுக்கு மற்றவரது உருவம் வெளியில் தோன்றுமாம்.

மனோ பாவம்

யாரோ ஒருவரை நாம் எதிர்பார்த்துக் கொண்டிருப்போம். வீதியில் நெடுந்தூரம் நம் பார்வையைச் செலுத்திக் கொண்டிருப்போம். யாரோ ஒருவர் வந்து கொண்டிருப்பார். அவருடைய தோற்றம் நாம் பார்க்கிற ஆசாமியே என்று நினைக்கும்படியாக இருக்கும். ஆனால் பக்கத்தில் வந்தால் உண்மை புலனாகும். நாம் யாரை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோமோ அவருடைய பாவம் நம் மனத்தில் உறைந்திருப்பதனால் நாம் நெடுந்தூரத்தில் பார்க்கிறவரை நம்முடைய அன்பராகக் காண்கின்ற நிலை உண்டாகிறது. மனத்தில் உள்ள பாவந்தான் அதற்குக் காரணம். அது போலவே பரிபூரண அன்பு இருக்குமானால் ஒன்றும் இல்லாத இடத்திலும் நம்முடைய அன்புக்குப் பாத்திரமானவருடைய

உருவம் தோன்றும். கம்ப ராமாயணத்தில் இப்படி ஒரு காட்சி வருகிறது.

இராமாயணக் காட்சி

சூர்ப்பணகையின் வாயிலாகச் சீதாபிராட்டியின் எழிலை இராவணன் கேட்டான். கேட்டவுடன் அந்தப் பிராட்டியிடம் ஆசை கொண்டான். அவன் சீதையைப் பார்த்ததில்லை. ஆனாலும் சூர்ப்பணகை வருணித்த வருணனையைக் கொண்டு எப்போதும் பிராட்டியின் நினைவாகவே இருந்தான். ஒரு நாள் அவனுக்குத் திடீரென்று வெளியில் ஒரு பெண்ணின் தோற்றம் தோன்றியது. அந்த அழகிய தோற்றத்தைக் கண்டவுடன், அவள்தான் சீதையாக இருக்க வேண்டுமென்று எண்ணினான். சீதையை நேரிலே கண்ட தன் தங்கையை அழைத்துக் காட்ட வேண்டுமென்று நினைத்தான். உடனே சூர்ப்பணகையை வரவழைத்தான். ''இவள்தான் நீ சொன்ன சீதையா? பார்'' என்று புற வெளியைக் காட்டினான். அங்கே இருந்தது வெறும் வெளிதான். ஆனால் அவனுடைய உள்ளத்தில் இருந்த முறுகிய காதலால் சீதையாகத் தோற்றியது. சூர்ப்பணகைக்கோ இராமன் மேல் நினைவு இருந்தது. அந்தப் பெருமானைக் கண்ணாரக் கண்டு அவனிடத்தில் முறுகிய ஆசையைக் கொண்டிருந்தாள். தன்னுடைய உள்ளத்தில் அவனுடைய உருவத்தை எப்போதும் எண்ணிக் கொண்டு அவன் அருள் கிட்டவில்லையே என்று வாடிக் கிடந்தாள். அவளை இராவணன் இப்படி அழைத்துக் கேட்டவுன், அவள் தன் உள்ளத்திலுள்ள பாவத்தின் விளைவாக, ''இவன்தான் அந்த வல்வில் இராமன்'' என்றாள். வெறும் வெளியில் அவரவர்களுடைய மனோபாவத்திற்கு ஏற்றபடி உருவம் தோன்றியது என்று கம்பர் பாடுகிறார்.

அருணகிரியார் அநுபவம்

உருவெளித் தோற்றம் என்பது காண்பவருடைய பாவத்தினால் உணர்வதேயன்றி உண்மையானது அன்று. உள்ளத்தில் தோற்றுகிற தோற்றம் எதுவோ, அதுவே ஆர்வம் முறுகியிருப்பதனால் புறவெளியிலும் தோற்றுகிறது. வெறும் காமத்திற்கே இப்படி உருவெளித் தோற்றம் என்றால், உயிரோடு ஒட்டிய அன்புக்கு அத்தகைய தோற்றம் வருவது வியப்பு அன்று. உள்ளத்

தில் எப்போதும் தியானம் பண்ணிக்கொண்டு இறைவனுடைய உருவத்தைக் காணும் இயல்புடைய பக்தர்களுக்குப் புறத்திலும் அந்தத் திருவுருவம் தோற்றும். இந்த அநுபவத்தைப் பெற்றவர் அருணகிரியார்.

மூன்று நிலை

இறைவனைத் தியானிப்பதில் மூன்று வகையான நிலை உண்டு. முதலாவது, இறைவனுடைய திருவுருவத்தைக் கோயிலில் காணும்போதே மனத்திலும் பதிவு கொள்ளும்படி காண்பது. அப்பொழுது கண்ணை மூடிக்கொண்டும் திறந்து கொண்டும் பார்ப்பதனால் இது சாத்தியமாகிறது. இது முதல் நிலை. அடுத்தது, கண்ணுக்கு முன்னால் எம்பெருமானின் திருக்கோலம் இல்லாதபோதும், கோயிலுக்குப் புறம்பே நெடுந்தூரத்தில் இருக்கும்போதும் கோயிலில் கண்ட திருவுருவத்தை அகக் கண்ணில் கண்டு நிற்பது. புறத்தில் முன்பு கண்ட திருவுருவமே இப்போது ஒளிபெற்று அகத்தில் தோற்றும். இது இரண்டாவது நிலை. பின்பு அகத்திலே கண்ட அந்த ஒளிமயமான திருக்கோலத்தை எங்கே நினைத்தாலும் அங்கே புறவெளியில் காண்பது. உள்ளத்தில் காணுகின்ற காட்சியே இப்போது புறத்திலும் தோன்றும். இது மூன்றாவது நிலை. இதைச் சொல்கிறார் அருணகிரிநாதர்.

செங்கேழ் அடுத்த சினவடி வேலும் திருமுகமும்
பங்கே நிரைத்தநல் பன்னிரு தோளும் பதுமமலர்
கொங்கே தரளம் சொரியும்செங் கோடைக் குமரன்என
எங்கே நினைப்பினும் அங்கேஎன் முன்வந்து எதிர்நிற்பனே.

''எங்கே நினைத்தாலும் அவன் என் முன்னால் வந்து நிற்பான்'' என்கிறார். முதல் பாட்டில் கூறிய அநுபவம்,

''என் உள்ளம் குளிரக் குதிகொண்டவே''

என்பது. அது உள்ளத்தில் தோன்றிய காட்சி.

எங்கே நினைப்பினும் அங்கேஎன் முன்வந்து
எதிர் நிற்பனே

என்பது புறத்தில் தோன்றிய காட்சி.

கனவுக் காட்சி

நமக்கோ உள்ளத்தில்கூடச் சரியானபடி காட்சி கிடைக்கிற தில்லை.. உள்ளத்தில் நினைந்து பழகினால் அது கனவில் மிகத் தெளிவாகக் காணும். ஆசார்ய சுவாமிகள் ஓரிடத்தில், ''ஆண்டவ னிடத்தில் பக்தி இருக்கிறதா என்பதைச் சோதித்துக் கொள்ளச் சொப்பனம் இருக்கிறது. சொப்பனத்தில் இறைவன் திருவுருவம் தோன்றினால் நம்முடைய பக்தி சிறந்தது என்று தெரிந்து கொள்ளலாம்'' என்று சொல்லியிருக்கிறார்கள். நிறையப் பணம் வைத்துக் கொண்டிருப்பவர்கள், ''எங்கே திருடன் வந்துவிடு வானோ?'' என்று பகல் எல்லாம் பயந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கனவில் திருடன் வருவான். எப்போதும் நினை வில் எது மிகுதியாக இருக்கிறதோ அது கனவில் வரும். அது போலவே எது இல்ல என்ற குறையுண்டோ அதுவும் கனவில் வரும். அதிகமாகப் பழகுகின்ற பொருளும் வரும்; எது கிடைக்க வில்லை என்று நினைந்து ஏங்கி இருக்கிறோமோ அதுவும் வரும்.

இந்த இரண்டு வகையினால் ஆண்டவனுடைய சொரூபத்தை நாம் கனவில் காணலாம். அடுத்தடுத்து அவன் திருக் கோயி லுக்குச் சென்று அவன் திருவுருவ தரிசனம் செய்திருக்க வேண்டும். அல்லது, ''எம்பெருமானே! உன்னுடைய திருவருள் கிடைக்க வில்லையே'' என்று ஏங்கிக் கொண்டிருக்க வேண்டும். அப்படிச் செய்தால் அவனுடைய காட்சி கனவில் தோன்றும். இவ்வாறு தோன்றுவது ஒரு வகை அநுபவம்.

இதை இராமலிங்க சுவாமிகள் ஒரு பாட்டில் சுட்டுகிறார்;

''பண்ணேறும் மொழிஅடியார் பரவி ஏத்தும்
பாதமலர் அழகினைஇப் பாவி பார்க்கின்
கண்ணேறு படும்என்றோ கனவி லேனும்
காட்டென்றால் காட்டுகிலாய்; கருணை ஈதோ!''

இதில் இராமலிங்க சுவாமிகள், ஏங்கினால் கனவில் காணலாம் என்ற உண்மையைப் புலப்படுத்துகிறார். நன்றாகக் கண்டு, நன்றாக உள்ளத்தில் வைத்துக் கனவிலும் கண்டு, பின்பு நினைக் கும்போது அதனைப் புறத்திலும் கண்டு ஆனந்தம் அடைவது சிறந்த பக்தர்களுடைய இயற்கை. மூன்றாவது நிலைதான் புறக் காட்சி. அதை இந்தப் பாட்டில் சொல்கிறார் அருணகிரியார்.

லிங்கமும் வேலும்

தன்னைக் கண்டு மனசில் கொள்ளவேண்டுமென்று கருதியே சிவலிங்கம் முதலிய எளிய உருவத்தை ஆண்டவன் ஏற்றருளியிருக்கிறான். இறைவன் திருக்கரத்தில் மானும் மழுவும், திருமுடியில் பிறையும் கங்கையும் கொண்ட திருக்கோலத்தைக் கண்ட பிறகு மனசில் நினைத்துப் பார்த்தால் எளிதில் அந்தக் கோலம் பதியாது. அப்படியின்றிச் சிவலிங்கத்தையே பார்த்தால் அது எளிதில் பதியும். அதனைச் சோதிமயமாகப் பார்க்கிற நிலை வந்துவிட்டால் பின்னும் சிறப்பாக இருக்கும். சிவலிங்கம் அருவுருவம் என்று சொல்வார்கள். அதாவது முழு உருவமும் அன்று; முழு அருவமும் அன்று. இரண்டு தன்மையும் ஒருங்கே கொண்டது என்று பொருள். கால், கண் முதலிய இல்லாமல் இருத்தலால் முழு உருவம் என்பதற்கில்லை; கண்ணால் காணும்படி இருப்பதனால் முழு அருவம் என்று சொல்வதற்கும் இல்லை. ஆகையால் இரண்டுக்கும் நடுவில் அருவுருவம் என்று சொல்கிறார்கள். அந்த லிங்கம் மிக எளிதில் தியானத்தில் வைப்பதற்குரியது.

அப்படி முருகப் பெருமானை வழிபடுகிறவர்களுக்குத் தியானத்திற்கு எளிதாக இருக்கிற பொருள் ஒன்று உண்டு. அவன் திருக்கரத்தில் மின்வெட்டைப் போலத் தோற்றும் வேல் இருக்கிறது. திருவடியிலிருந்து திருமுடி வரைக்கும் தொடர்புடையது அது. அது மிகவும் எளிதில் நினைப்பதற்குரியது. முதலில் நினைவுக்கு வருவது அதுதான். முதலில் அது தோன்றுகிறது என்று அருணகிரியார் பாடுகிறார்.

செங்கேழ் அடுத்த சின வடிவேலும்.

செங்கேழ் – செய்ய நிறம். அதனைக் கொண்ட சினம் பொருந்திய வேல் அது. முருகனுக்கு உள்ளதை வேலின் மேல் ஏற்றிச் சொன்னபடி. உலகத்தினருக்குத் துன்பத்தைத் தரும் அசுர சக்தியிடம் உள்ள கோபம் அது.

அப்படியின்றிச் சின்னமான வடிவேல் என்றும் பொருள் கொள்ளலாம். முருகப் பெருமானுக்குரிய சின்னமாக அமைகின்ற வேல் என்பது அதற்குப் பொருள். முருகப் பெருமானுக்குப் பிரதிநிதியாக எழுந்தருளுகிற சின்னம் வேல். வேலில் முருகனை

ஆவாகனம் பண்ணிப் பூசை பண்ணுவது பழங்கால முதல் உள்ள வழக்கம். இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் முருகனுடைய திருக்கோயிலை வேற்கோட்டம் என்று குறிப்பிடுகிறார். வேலையே முருகனாக வைத்துக் கும்பிடும் வழக்கத்தை அது காட்டுகிறது. இன்றும் யாழ்ப்பாணத்தில் சில கோயில்களில் வேலை நட்டு முருகனாக வழிபட்டு வருகிறார்கள்.

இப்படி எம்பெருமானுக்குச் சின்னமாக இருக்கும் ஞான சொரூபமாகிய வேலை, சிவந்த நிறத்தையுடைய வேலை, எளிதில் தியானப் பொருளாக நினைத்தால் அது உள்ளத்தில் வந்து தோன்றும். அந்த வேலைப் பற்றிக் கொண்டால் முருகனுடைய திருக்கோலம் தொடர்ந்து காட்சியளிக்கும். இவற்றை எல்லாம் நன்கு உணர்த்துவார்போன்று, புறத்தில் தோன்றும் காட்சியில் முதலில் தோற்றுவது வேல் என்று சொல்கிறார்.

செங்கேழ் அடுத்த சினவடி வேலும்

திருமுகம் முதலியன

பின்பு தோன்றுவது எது? முருகப்பெருமான் திருமுகம் தோன்றுகிறதாம்.

திருமுகமும்.

எம்பெருமான் ஆறு திருமுகம் உடையவன். அவை தோன்று கின்றன. அந்த முகங்களுக்கு இரண்டு பக்கமும் வரிசையாக உள்ள பன்னிரண்டு தோள்களும் தோன்றுகின்றன.

பங்கே நிரைத்தநல் பன்னிரு தோளும்-

எம்பெருமானுடைய வேல் தோன்றுகிறது. ஆறு முகங்களும் தோன்றுகின்றன. பின்பு பன்னிரு தோள்களும் தோன்றுகின்றன. ''எங்கே நினைப்பினும் இவைகள் எல்லாம் தோன்றுகின்றன'' என்கிறார்.

செங்கோட்டு வேலன்

அருணகிரிநாத சுவாமிகளுக்குத் திருச்செங்கோட்டு வேல னிடம் தனி அன்பு உண்டு. இதனை முன்பும் பல முறை பார்த் திருக்கிறோம். எந்தத் தலத்தையும் நினைக்காத அநுபூதியில்

'நாகாசல வேலவனை' நினைக்கிறார். 'செங்கோட்டில் உள்ள எம்பெருமானைக் காண்பதற்கு நான்முகன் நாலாயிரம் கண் படைத்திலனே' என்று குறைபட்டதையும் நாம் கேட்டோம். அந்தச் செங்கோட்டு வேலனை இப்போது சொல்கிறார். அவன் மனம் அந்தத் தலத்தில் மிகவும் ஈடுபட்டிருக்கிறது. 'செங்கோட்டிலே எழுந்தருளியிருக்கும் முருகனை எங்கே நினைத்தாலும் அவனுடைய வேல் முதலியன தோற்றும் என்று இந்தப் பாட்டில் சொல்கிறார்.

பதுமமலர்
கொங்கே தரளம் சொரியும் செங்கோடைக் குமரன்என
எங்கே நினைப்பினும் அங்கே என்முன் வந்து
எதிர்நிற்பனே.

திருச்செங்கோட்டைச் செல்லும்போது அங்கே நீர்வளமும், நிலவளமும் நிறைந்து நின்ற காட்சியையே சொல்கிறார். முன்பும் அப்படிச் சொல்லியிருக்கிறார். நீர்வளம் நிரம்பிய பொய்கையில் தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. முத்துக்கள் பிறக்கும் இடங்களில் தாமரையும் ஒன்று. கரும்பிலும், யானையின் தந்தத்திலும், சிப்பியிலும், மேகத்திலும் முத்துக்கள் தோன்றும் என்று சொல்வார்கள். முத்து வகைகளில் ஒன்று தாமரை மலரிலிருந்து தோன்றுவது. திருச்செங்கோட்டிலுள்ள பொய்கையில் தாமரையிலிருந்து முத்துக்கள் பிறக்கின்றனவாம்.

பதும மலர் கொங்கே தரளம் சொரியும் செங்கோடை.

கொங்கு – வாசனை. தரளம் – முத்து. தாமரை மலர்கள் வாசனையையும் முத்துக்களையும் சொரிகின்ற திருச்செங்கோடு என்கிறார். ஆண்டவனுக்கு முத்தையன், முத்துக் குமாரசுவாமி என்ற பெயர்கள் உண்டு. முத்துச் சொரியும் இடங்களில் எல்லாம் அவன் இருப்பான்.

''ஒருகோடி முத்தம் தெள்ளிக் கொழிக்கும்
கடற்செந்தில் மேவிய சேவகனே''

என்று பின்னே ஒரு பாட்டில் வருகிறது.

திருச்செந்தூரில் கடல் முத்துச் சொரிகிறது. திருச்செங்கோட்டிலோ பதும மலர் முத்தைச் சொரிகிறது.

கவிஞர் கற்பனை

''தாமரை மலர்களிலிருந்து முத்துக்கள் விழுவதாவது! அவற்றை அருணகிரியார் பார்த்தாரா?'' என்ற கேள்வி தோன்ற லாம். புலவர்கள் எதையேனும் சிறப்பிக்க வேண்டுமானால் அதைப் பெரிதாக்கிச் சொல்வது ஒரு சம்பிரதாயம். அருணகிரி நாதர் பெரும் புலவர். கற்பனையாகவும் மிகைப்படுத்தியும் சொல்வது அவருக்கு உரிமை. நாம் கண்ணிலே காணுகின்ற பொருளைவிட அவர் கற்பனையில் காணுகின்ற பொருள் பல காலத்திற்கு நிற்கிறது; சொல் வடிவிலே நிற்கிறது. தாமரை மலர்கள் முத்துக்களைச் சொரிகின்றன என்று சொல்வதனால் நாம் தெரிந்துகொள்ள வேண்டிய கருத்து என்ன? அங்கே நன்றாகத் தாமரை மலர்கள் மலர்கின்றன என்பதுதான். நீர்வளம் உடைய இடம் என்பதைக் கற்பனையால் சற்று உயர்த்திச் சொல்கிறார்.

'அங்கே குமரன் இருக்கிறான். தாமரை மலர் மலர்ந்த இடத்தில், செங்கோட்டின்மேல் மாரனைக் குற்சிதம் செய்யும் பேரழகுடைய முத்துக்குமாரன் எழுந்தருளியிருக்கிறான். அவனை அந்தக் கோயிலுக்குச் சென்று காண வேண்டுமென்பதே இல்லை. எங்கேயாவது தனியே ஆசனம் போட்டு நினைக்க வேண்டும் என்பதும் இல்லை. எந்த இடத்தில், எந்தக் காலத்தில் நினைத் தாலும் அங்கே வந்து என் எதிரிலே தோன்றுகிறான்' என்கிறார். பக்குவம் முதிர்ந்துவிட்டமையினால் முன்னாலே சொன்ன அப்பி யாசங்கள் இல்லாமலேயே, எங்கே நினைத்தாலும், எப்போது நினைத்தாலும் பார்க்குமிடம் எல்லாம் அவனைக் காண்கிறவர் அருணகிரி நாதர்.

அபிராமி பட்டர் அநுபவம்

இப்படி அருணகிரிநாத சுவாமிகள் மட்டும் சொன்னால் நம்மைப் போன்றவர்களுக்குக் கொஞ்சம் சந்தேகம் உண்டாகும். இந்த அநுபவம் உண்மையாக இருந்தால் வேறு பக்தர்களுக்கும் இது கிடைத்திருக்க வேண்டும். அப்படி யாராவது கிடைத்ததாகச் சொல்லியிருக்கிறார்களா? அநுபூதிமான்களுக்கு இந்த அநுபவம் கிடைக்கும். அப்படிப் பெற்ற அநுபூதிமான்களில் ஒருவர் அபிராமி

பட்டர். அவர் பார்க்கின்ற திசை எல்லாம் எம்பெருமாட்டியைக் காணும் அநுபவத்தைப் பெற்றவர். அவர்,

"பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும்
பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும் கரும்பும்என்
அல்லலெல்லாம்
தீர்க்கும் திரிபுரை யாள்திரு மேனியும்
சிற்றிடையும்
வார்க்குங் குமமுலை யும்முலை மேல்முத்து
மாலையுமே"

என்று பாடுகிறார். பாட்டுக்கு ஒரு முடிவு இருப்பதாகத் தோன்ற வில்லை. 'பார்க்கும் திசைகளில் எல்லாம் இப்படி இப்படி' என்று அலங்காரத்தோடு சொல்லிக்கொண்டே வருகிறார் அப்படியே மெய் மறந்து ஆனந்தவசப்பட்டு விடுகிறார். ஆனந்த அதிசயம் வரும்போது அப்படித்தான் வார்த்தை முடிவடையாமல் இருக்கும். 'ஒரு கையில் பாசம், ஒரு கையில் அங்குசம், ஒரு கையில் கரும்பு வில், ஒரு கையில் மலர்ப் பாணங்கள், என் மனத்தில் தோற்றுகிற துன்பங்கள் எல்லாவற்றையும் நீக்குகிற மகா சௌந்தர்யம் நிரம்பிய திருமேனி, சிறிய இடை, கச்சைக் கட்டிய நகில், திருமேனியில் தோன்றும் முத்து வடம் இவை எனக்குத் தோன்றுகின்றன" என்று சொல்ல வந்தவர், அப்படியே எம்பெருமாட்டியின் திருமேனி லாவண்யத்தில் சொக்கி வாக்கியத்தை முடிக்காமல் விட்டுவிடுகிறார்.

அவருக்குப் பார்க்கும் திசைதோறும் அபிராமியின் திருவுருவம் தோன்றியது.

செங்கோடைக் குமரன் என
எங்கே நினைப்பினும் அங்கேயென் முன்வந்து
எதிர்நிற்பனே

என்கிறார் அருணகிரிநாத சுவாமிகள்.

அநுபவம் வர வழி

இவர்கள் அநுபவிக்கின்ற அநுபவம் நமக்குக் கிடைக்கிறது இல்லையே, ஏன்? பார்க்கும் திசைதொறும் எம்பெருமாட்டியின்

எழில் உருவத்தைக் காண வேண்டுமானால் அதற்கு ஒரு பக்குவம் வேண்டும். அருணகிரிப்பெருமான், ''என் உள்ளம் குளிரக் குதிகொண்டவே'' என்று முன்பு சொன்னார். அந்த நிலையே நமக்கு வரவில்லை. அதற்கு மேற்பட்ட நிலையை அல்லவா இப்போது நாம் கேட்கிறோம்? இத்தகைய நிலைகள் நமக்கு வரவேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்? அதை அபிராமி பட்டர் வேறு ஒரு பாட்டில் சொல்கிறார்.

''வெளிநின்ற நின்திரு மேனியைப் பார்த்தென்
விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்ட தில்லை;
கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானந் திகழ்கின்றது; என்ன
திருவுளமோ;
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி
உறைபவளே.''

ஆகாசமாக இருந்த இடத்தில் உன் திருமேனி தோன்றியது. அதைக் கண்டு முதலில் என் விழியும், என் நெஞ்சும் நிரம்பி ஆனந்தம் பொங்கி வழிகிறது. அதற்கு எல்லையே இல்லை. அந்த ஆனந்த வெள்ளத்திற்குக் கரை கட்ட முடியவில்லை. நீ என் கருத்தில் நிறைந்திருந்தாய். இப்போது புறவெளி எல்லாம் காட்சி அளிக்கிறாய். அப்படி வெளி நின்ற திருமேனியைப் பார்க்கும் போது என் விழியும், நெஞ்சும் ஆனந்தம் நிரம்புகிறது. அந்த ஆனந்தத்திற்குக் காரணம் என்ன தெரியுமா?'

''கருத்தினுள்ளே
தெளிநின்ற ஞானம் திகழ்கின்றது; என்ன திருவுளமோ?''

என் மனத்திற்குள்ளே தெளிவுபெறுகின்ற ஞானம் விளங்குகிறது. புறவெளியில் உன் திருமேனி தோன்றுவதற்குக் காரணம் என்ன என்று பார்த்தேன்; என் உள்ளம் தெளிந்திருக்கிறது. இந்தத் தெளிவு ஞானத்தால் வந்தது. என் கருத்துத் தெளியும்படி ஞானம் உண்டாகச் செய்த உன் திருவருளை என்ன என்று சொல்வேன்!' இவ்வாறு அபிராமிபட்டர் அதிசயப்படுகிறார். ஒன்பது கோணங் களில் எழுந்தருளி நலம் செய்கின்ற பெருமாட்டியைப் பார்த்து அவர் பாடுகிறார்.

அருணகிரிநாத சுவாமிகளும், அபிராமிபட்டரும் அநுபூதியில் ஒரே நிலையில் இருந்தவர்கள்; உள்ளம் தெளிவு பெற்று, அந்த உள்ளத்தில் இறைவனுடைய திருவுருவத்தைக் கண்டு, பின்பு முறுகிய பேரன்பினால் உள்ளே கண்டதை வெளியில் காணப் பயின்றவர்கள்.

பிடித்த படமும் காட்டும் படமும்

ஓரிடத்தில் ஒருவன் இருந்து படம் பிடிக்கிறான். அப்படிப் பிடித்த படத்தைத் தனியாக வேறு ஓர் இருட்டறையில் கொண்டு வந்து கழுவுகிறான். கழுவின பிறகு படம் உருவாகிறது. அதன் பின்பு திரை கட்டி அந்தப் படத்தை வைத்துக் காட்டினால் திரையில் அந்த உருவம் தெரிகிறது. சினிமாத் திரையில் தெரிகிற உருவம், முன்னாலே தோன்றிய உருவத்தை எடுத்த பட வரிசையிலிருந்து விளைந்த விளைவு. நடித்த காட்சியை முதலில் படம் பிடிப்பது, அதன் பின்பு பிடித்த படத்தைக் கழுவித் தெளிவாக்குவது, பின்பு அந்தப் படத்திலிருந்து திரையில் காட்சியைத் தோற்றச் செய்வது ஆக மூன்று நிலையைச் சினிமாவில் பார்க்கிறோம். அவ்வாறே கோயிலிலே ஆண்டவனைக் காண்பது, பின்பு உள்ளத்தில் தெளிவாகக் காண்பது, பின்பு புறத்தில் காண்பது என்ற மூன்று நிலைகளை இங்கே பார்க்கிறோம். நாள்தோறும் ஆண்டவன் திருக்கோயிலுக்குச் சென்று ஒரு பயிற்சியும் இல்லாமல் கும்பிட்டு வருவதில் பயன் இல்லை. அந்தக் கோயிலையே உள்ளத்தில் கொண்டு வந்துவிட வேண்டும். நம் உள்ளத்தில் கர்ப்பக் கிருகத்தைச் சிருஷ்டி பண்ண வேண்டும். உள்ளம் எம்பெருமானுடைய தரிசனத்தில் ஈடுபட வேண்டும். இப்படிப் பலகாலம் பயின்று, எப்போது நினைத்தாலும் தெளிவாக அந்தத் திருவுருவத்தைக் காணும் நிலை வந்துவிட்டால், அதற்கப்பால் புறத்தில் காணும் நிலையும் உண்டாகும். இந்த அநுபவத்தை அருணகிரியாரும், அபிராமிபட்டரும் சொல்கிறார்கள்.

★

செங்கேழ் அடுத்த சினவடி
வேலும் திருமுகமும்
பங்கே நிரைத்தநல் பன்னிரு
தோளும் பதுமமலர்

கொங்கே தரளம் சொரியும்செங்
கோடைக் குமரன்என
எங்கே நினைப்பினும் அங்கேஎன்
முன்வந்து எதிர்நிற்பனே.

[செம்மையான நிறத்தைக் கொண்ட சினமுள்ள கூர்மையான முருகனது வேலும், அவனுடைய திருமுகங்களும், பக்கத்தில் வரிசையாக உள்ள நல்ல பன்னிரண்டு திருத்தோள்களுமாக, தாமரை மலரானது மணத்தையும் முத்தையும் சொரிகின்ற திருச்செங்கோட்டில் எழுந்தருளி யிருக்கும் குமரன் என்று எங்கே நினைத்தாலும் அங்கே அடியேனுடைய முன்னாலே வந்து எதிரே காட்சி தந்து நிற்பான்.

கேழ் – நிறம். அசுரரின் இரத்தம் தோய்தலால் செந்நிறம் பெற்றது. மாணிக்கம் பதித்த வேலாதலின் செந்நிறமுடையதாயிற்று என்பதும் ஆம். சினவடிவேல்: உடையானது சினம் கருவியின் மேல் ஏற்றப்பட்டது. சின்னமாகிய வடிவேல் என்றும் கொள்ளலாம். வடி – கூர்மை. பங்கு – பக்கம். நிரைத்த – வரிசையாக அமைந்த. பதுமமலர்: எழுவாய். 'பதும மலர்க் கொங்கே' என்றும் பாடம். கொங்கு – மணம்; பூந்தாதுமாகும். தரளம் – முத்து. செங்கோடை – திருச்செங்கோடு. எங்கே என்றது திருச் செங்கோடல்லாத பிற இடங்களை. எங்கே என்றதனோடு எப்பொழுது நினைத்தாலும் என்பதையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். நிற்பன் என்றது, மின்னலைப் போலே தோன்றி மறையாமல், நன்றாகத் தரிசித்து இன்புறும்படி நிற்பான் என்ற கருத்தை உடையது].

பய பக்தி

பக்தியைப் பற்றிச் சொல்லும்போது பயபக்தி என்ற தொடரை அடிக்கடி நாம் உபயோகிப்பது உண்டு. ஆனால் அதன் சரியான பொருள் இன்னதென்று பலருக்குத் தெரிவது இல்லை. யாரிடத்தில் பயம் உண்டாகிறதோ அவரிடத்தில் பக்தியும் உண்டாகவேண்டுமென்றே பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார் கள். தந்தையினிடம் பயபக்தியாக நடந்து கொண்டான் என்பது போல உதாரணத்தையும் காட்டுகிறார்கள். மேல்நாட்டு ஆராய்ச்சி யாளர் சிலர், கடவுளிடம் பக்தி கொண்டு வழிபடுவதற்கு மூல காரணம் பயம் என்று எழுதியிருக்கிறார்கள். ஆதி மனிதன் இடியைக் கண்டு பயந்தானாம். அதையே கடவுள் என்று போற்றி னானாம். இவ்வாறு பயமும் பக்தியும் ஒரே பொருளிடத்தில் இருப்பதாக நினைத்துக் கொண்டு பயபக்தி என்பதற்குப் பொருள் சொல்வார்கள். அது அவ்வளவு பொருத்தம் என்று எனக்குத் தோன்றவில்லை.

பயம் ஓரிடம் பக்தி வேறு இடம்

பயமுள்ள இடத்தில் போலிப் பக்தி தோன்றுமேயொழிய உண்மையான பக்தி தோன்றாது. முரட்டு ஆள் ஒருவன் நம்மை அடிக்க வருகிறான். அப்போது அவனிடத்தில் நாம் பயந்து போகிறோம். நயமாக அவனிடம் பேசுகிறோம். அந்தப் பயமும், நயமும் சேர்ந்து வருவதால் இரண்டும் உண்மையென்று எண்ணக் கூடாது. ஆள் முன்னால் இருக்கிற வரைக்கும் பயத்துடன் இருந்து நயந்து போவது போல் காட்டிக் கொள்வோம்.அவன் அந்தப்புறம் நகர்ந்த பிறகு சிரிப்போம். பயம் உள்ள இடத்தில் உண்மையான பக்தி இருப்பது மன இயல்புக்கு ஒத்தது அன்று.

பசியிடம் பயம் இருந்தால் சோற்றினிடம் பக்தி உண்டாகும். பூச்சாண்டியிடம் பயம் உண்டாகும் குழந்தைக்கு அம்மாவிடம் அன்பு உண்டாகிறது. நோயிடம் பயம் உண்டாகும்போது அதைத் தீர்க்கும் மருத்துவனிடம் பக்தி உண்டாகிறது. ஆகவே பயம்

ஓரிடத்திலும் பக்தி அதைத் தீர்க்கின்ற இடத்திலும் இருப்பது முறை. அந்த வகையில் பார்த்தால் இறைவனிடம் பக்தி வரும் போது அது பயபக்தியாக இருக்க வேண்டும். அதற்கு முன்பு பயம் உண்டாக வேண்டும்; அந்தப் பயம் வேறு ஓரிடத்தில் இருக்க வேண்டும்.

மரண பயம்

மனிதனுக்குப் பலவகையான நிலைகளில் பயம் உண்டாகிறது. வயிற்றுப் பசிக்குப் பயந்து சாகிறான். மானத்திற்குப் பயப்படுகிறான். வறுமைக்குப் பயப்படுகிறான். இந்தப் பயங்களை எல்லாம் பெரிய வள்ளல்களால் தீர்த்துக் கொள்ளலாம். யாரிட மேனும் சோறு வாங்கியுண்டு பசியினால் உண்டாகும் பயத்தைப் போக்கலாம். உழைத்து வேலை செய்து பணம் சம்பாதித்து வறுமையினால் வரும் பயத்தைப் போக்கிக் கொள்ளலாம். நல்ல மருத்துவரை அண்டி நோயினால் வரும் பயத்தைப் போக்கிக் கொள்ளலாம். திருடர்களால் வரும் அச்சத்தைக் காவலர்களாலும் விலங்குகளால் வரும் அச்சத்தை ஆயுதங்களாலும் போக்கிக் கொள்ளலாம். இப்படி உலகத்தில் மனிதனுக்கு உண்டாகும் அச்சங்கள் பலவாக இருப்பதுபோல அவற்றைப் போக்கிப் பாதுகாத்துக்கொள்ளும் உதவிகளும் பலவாக இருக்கின்றன. ஆனால் இப்படி வரும் பயங்களுக்கு எல்லாம் மேலான பயமாக, யாராலும் மாற்ற முடியாத அச்சமாக இருப்பது மரண பயம். யமனால் உண்டாகும் துன்பத்தை உலகிலுள்ள யாராலும் நீக்க முடியாது. தொல்காப்பியம்,

"மாற்றரும் கூற்றம்"

என்று யமனைச் சொல்கிறது. எதனாலும் மாற்ற முடியாத யமன் என்பது பொருள். இன்ன காலத்தில் இன்னவனுடைய உயிரை அவன் உடம்பினின்றும் பிரிக்க வேண்டுமென்ற வரையறையைச் செய்துகொண்டு அந்தக் காலத்தை எதிர்பார்த்துக் கொண்டிப்பதனால் கூற்றுவனுக்குக் காலன் என்ற பெயர் உண்டாயிற்று. அந்தக் காலத்திற்கு அணுவளவு முன்போ, பின்போ இல்லாமல் உயிரைப் பிரித்துக் கொண்டு போகிறவன் அவன். அவனால் உண்டாகும் பயத்தை உலகத்திலுள்ள யாராலும் தீர்க்க முடியாது. காலனுக்குக் காலனாக இருக்கும் ஒருவன்தான் போக்க முடியும். ஆகையால் காலனிடத்தில் பயமும், அது காரணமாகக் காலகாலனிடத்தில்

பக்தியும் உண்டாக வேண்டும். அப்படி உண்டான பக்திதான் பயபக்தி என்று சொல்லப் பெறுவது. அருணகிரியார் வேளைக் காரன் வகுப்பில்,

''ஆனபய பக்திவழி பாடுபெறு முத்தியது
வாகநிகழ் பக்தசன வாரக்காரனும்''

என்று பக்தர்களைப் பற்றிச் சொல்லும்போது பயபக்தி என்ற தொடரை ஆள்கிறார்.

'மரணம் வந்துவிடுமே' என்று பயந்து பக்தி செய்யும் நிலை மிகச் சிறந்தது. அப்போதுதான் அந்தப் பக்தி ஆழ்ந்து முறுகிய தாக இருக்கும். நாம் இறைவனிடத்தில் ஓரளவு பக்தி பண்ணு கிறோம். ஆனால் பயபக்தி செய்வதில்லை. மரணத்தில் நாம் உண்மையான பயத்தைக் கொள்ளவில்லை.

அறிவும் உணர்வும்

மரணம் துன்பமுடையது என்பதை நாம் அறிவோம். ஆனால் எவ்வாறு உணர வேண்டுமோ அப்படி உணருவது இல்லை. அமெரிக்க நாட்டில் நூறு வீடுகள் எரிந்து விட்டன என்று பத்திரிகையில் பார்க்கிறோம். அந்தச் செய்தி ஒரு கண நேரம் இரக்கத்தை உண்டாக்கினாலும் பின்பு வெறும் செய்தி அளவாக முடிகிறது. ஆனால் அடுத்த வீட்டில் தீப் பிடித்துக் கொண்டுவிட்டது என்று ஒருவன் சொன்னால் நாம் அதைச் செய்தியாகக் கேட்டு நின்றுவிடுவதில்லை. உடனே பரபரப்பு அடைந்து, 'நம் வீட்டுக்கும் அது வந்துவிடுமே!' என்று அஞ்சி நெருப்பை அணைப்பதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்ய ஓடுவோம். அதுதான் உண்மையான பயம். மரணத்தைப் பற்றிய செய்தி நமக்குத் தெரியும். ஆனால் அது நம்முடைய குலையில் ஊடுருவி அச்சத்தை உண்டாக்கவில்லை.

ஒரு மனிதன் ஓர் ஊரில் இருந்து மற்றோர் ஊருக்குப் பார வண்டியை ஏற்றிச் செல்கிறான். அதனால் வரும் கூலியினால் பிழைத்துக் கொண்டிருக்கிறான். அவன் வாரத்திற்கு ஒரு முறை தன்னுடைய மாடுகளைக் குளிப்பாட்டச் செல்வது வழக்கம். அப்படி ஒரு நாள் மாடுகளை ஓட்டிக் கொண்டு தண்ணீர்த் துறைக்குப் போய்க் கொண்டிருக்கிறான். அப்போது பல ஆண்டு களாகப் பாராமல் இருந்த மைத்துனன் அக்கரைச் சீமையிலிருந்து

வருகிறான். அவனைக் கண்டவுடன் காளை மாட்டுக்காரனுக்கு எல்லையில்லாக் களிப்பு உண்டாகிறது. பாதி வழியிலேயே மாடு களைத் திருப்பிக் கொண்டு வீட்டுக்குப் போய்க் கொட்டிலிலே கட்டிவிட்டு அவனோடு பேசப் போகிறான். அடுத்த வாரம் குளிப்பாட்டிக் கொள்ளலாமென்று நின்று விடுகிறான்.

மற்றொருவன் நாள்தோறும் நீராடும் பழக்கம் உடையவன். மூன்றாவது வகுப்பில் டெல்லிக்குப் பயணம் செய்கிறான். போகிற வழியில் நல்ல வசதி இல்லாமையினால் நீராட முடி கிறது இல்லை. ஏதோ கிடைத்ததைப் பசிக்கு உண்டு, இரண்டு மூன்று நாளைக் கழித்து டெல்லி போய் இறங்கின பிறகு நீராடுகிறான். இன்னும் ஒருவன் நாவல் படித்துக் கொண்டிருக் கிறான். அது துப்பறியும் நாவல். கதையிலே இன்னும் துப்புத் துலங்கவில்லை. துப்புத் துலங்கும் கட்டம் உள்ள அத்தியாயம் வருகிறது. அப்போது தாகமாக இருக்கிறது. தண்ணீர் குடிப்பதற் காக அருகில் உள்ள பையனைப் பார்த்து, 'நீர் கொண்டு வா' என்று சொல்கிறான். அவன் கொண்டு வந்து நிற்கும் போது இவன் அந்த அத்தியாயத்தை முடித்துவிடலாமென்று தலையைக் குனிந்தபடியே படித்துக் கொண்டிருக்கிறான். படித்து முடித்த பிறகே தலையை நிமிர்ந்து பார்த்துத் தண்ணீரை வாங்கிப் பருகு கிறான். இன்னும் ஒருவன் சாப்பிட்டுவிட்டுக் கையைக் கழுவப் போகிறான். இடையில் ஒரு தந்தி வருகிறது. அவனுக்கு மிக வேண்டிய நண்பன் ஒருவன் இறந்துவிட்டதாக அந்தத் தந்தி சொல்கிறது. அதைக் கண்டு கண்ணீர் விட்டுக் கொண்டு கையில் நீர்விட்டுக் கழுவாமல் அரைமணி நேரம் நிற்கிறான்.

இப்படி உள்ள அத்தனை பேர்களுக்கும் தண்ணீர் அவசியம். ஆனால் காளை மாட்டுக்காரனுக்கு ஒருவாரம் தண்ணீர் காத்திருக் கலாம். டெல்லி செல்கிறவனுக்கு மூன்று நாள் காத்திருக்கலாம். கை கழுவுகிறவனுக்கு ஒரு மணி நேரம் காத்திருக்கிறது. நீர் வேட்கை இருக்கிறவனுக்குக் கால் மணி நேரம் காத்திருக்கிறது.

வேறு ஒருவனுக்குத் தலையில் நெருப்புப் பிடித்துக் கொள் கிறது. ''ஐயோ தண்ணீர், தண்ணீர்!'' என்று ஓடுகிறான். அப்போது அவன் அருகில் ஒருவன் வந்து, ''உனக்கு அல்வா என்றால் பிரியம் ஆயிற்றே! இந்தா இதை உண்ணு'' என்றால் உண்ணு வானா? தண்ணீர் தண்ணீர் என்று கதறிக் கொண்டு ஓடுவான்.

அவனுக்கு அடுத்த கணத்தில் தண்ணீர் வேண்டும். அதுபோல் இறைவனிடத்தில் பக்தி உண்மையாக முறுக வேண்டுமானால் மரண பயம், தீப் பிடித்தவனுக்கு உண்டான உணர்ச்சியைப் போல இருக்க வேண்டும். உள்ளீரலில் அந்தப் பயம் பற்றிக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் இந்தக் கணத்திலேயே இதற்கு மாற்றுத் தேட வேண்டுமென்ற ஆர்வமும், வேகமும் உண்டாகும். நாமோ அப்படிக் கவலைப்படுவதில்லை. மரண பயத்தைப் போக்கும் வழியை நாடுவதில்லை. மாட்டு வண்டிக் காரனைப் போலவும் மற்றவர்களைப் போலவும் இருக்கிறோம்.

என்று வருமோ?

நாம் எவ்வளவு காரியங்களை மேற்போட்டுக் கொண்டிருக் கிறோம். அவற்றை எல்லாம் ஒருவிதமாகக் குறிப்பிட்ட காலத் தில் நிகழும்படி செய்யலாம். ஆனால் மரணம் என்பது எந்த நேரத்தில் நமக்கு வருமோ தெரியாது. யமனுடைய வாய் திறந்து கொண்டிருக்கிறது. எப்போது அதை மூடிப் பல்லால் உயிரைக் கடித்துத் துன்புறுத்துவானோ, தெரியாது.

''யார் அறிவார் சாநாளும் வாழ்நாளும்''

என்பர் ஞானசம்பந்தர். எந்தக் கணமும் நாம் இறந்து போகலாம். ஆகையால் ஒவ்வொரு கணமும் மரணத்தின் வாயிலில் இருப்ப தாக எண்ணி உணர்ந்து உண்மையான அச்சத்தை அடைய வேண் டும். அச்சத்தைப் போக்கும் பெருமான் முருகன். அவனுடைய திருவருளினால் மரண பயம் போகும் என்பதை நன்றாகத் தெளிந்து அவனை நம்பி அவன்பால் அன்பு செய்ய வேண்டும். இப்படி அன்பு கொண்டு அது முறுகினால் சிறந்த பக்தியாகும். இதையே அருணகிரியார் சொல்ல வருகிறார்.

''எம்பெருமானே, எத்தனையோ பேர் கோயிலுக்குச் சென்று உன்னைத் தொழுகிறார்கள். அவர்களில் பல வகையினர் இருக் கிறார்கள். பரம்பரையாக வந்த பழக்கம் என்று கருதிக் கோயி லுக்குப் போய் உன்னைத் தொழுவார் சிலர். கோயிலில் கிடைக் கும் பிரசாதம் முதலியவற்றை எண்ணித் தொழுபவர் சிலர். பிறர் செய்யும் நிர்ப்பந்தத்தினால் சென்று கோயிலில் தொழுவார் சிலர். இப்படி உன் அருள் நிறைந்த பாதங்களைக் கும்பிடுகிறவர்கள் பல வகையாக இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் உண்மையாக

உன்னைத் தொழுபவர்கள் ஆக மாட்டார்கள். இந்த உயிருக்கு ஒரு காலத்தில் மோசம் வந்துவிடும், நிச்சயமாக மரணம் என்று ஒன்று நம்மை அறியாமலே வந்து சேரும் என்ற பயத்தை உண்மையாக உணர்ந்து, உன்னுடைய பாதங்களை யார் தொழு கிறார்களோ அவர்களே மெய்யான பக்தி உடையவர்கள். அப்படி நான் செய்யவில்லையே! பயபக்தியுடன் உன் திருவடியைத் தொழ வேண்டுமென்ற நினைவுகூட எனக்கு இல்லையே!'' என்று இரங்குகிறார்.

ஆவிக்கு மோசம் வருமாறு அறிந்து உன்
அருள் பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றிலேன்

ஆவிக்கு மோசம்

பொருளுக்கு மோசம் வருமென்று, வீடு கட்டிக் கதவு அமைத்து அதற்குத் தாழ்ப்பாளும் போடுகிறோம். பெட்டி வாங்கிப் பூட்டுகிறோம்; பூட்டுக்கு மேல் பூட்டுப் போடுகிறோம்; ஒரு வீட்டுக்கு இரண்டு பூட்டுகள் போட்டுப் பாதுகாக்கிறோம். இவை போதாவென்று கருதி வீட்டில் நாயையும், காவல்காரனை யும் வைக்கிறோம். இவையும் போதா என்று கருதி ஊரில் போலீஸ்காரனை வைத்திருக்கிறோம். இவ்வளவும் நாம் சேமித்த பொருளுக்கு மோசம் வரக் கூடாது என்பதற்காகச் செய்யும் காரியங்கள். நாம் பெற்ற பொருள்களுக்குள்ளேயே மிகச் சிறந்தது உயிர். நம்மை நாமே இழந்துவிடக் கூடாது. இந்த உயிரினால் வருகின்ற நன்மைகளை எல்லாம் பெறாமல் உடம்பை விட்டுப் பிரிந்து போனால் உடம்பை எடுத்ததன் உண்மையான பயன் உண்டாகாது. மரணம் அடையும்போது, செய்ய வேண்டிய காரியங்களைச் செய்து விட்டோம் என்ற மன நிறைவு இருந்தால், துன்பம் வராது. ஆகவே உடம்பு இருக்கும்போதே மரண பயத்தைப் போக்குவதற்குரிய நெறியில் ஒழுக வேண்டும்.

ஆவிக்கு மோசம் வருமென்ற உணர்ச்சி வேண்டும். அதற்குப் பெரிய சாத்திரங்களைப் படிக்க வேண்டிய அவசியம் இல்லை. உலகத்தில் பிறந்த யாவருக்கும் இந்த உடம்பில் உயிர் நில்லாது என்ற உண்மை நன்றாகத் தெரியும். கடவுள் இல்லையென்று சொல்லுவார் இருக்கிறார்கள். சொர்க்க நரகங்கள் இல்லை யென்று சொல்கிறவர்களும் இருக்கிறார்கள். மோட்சம் இல்லை

யென்று சாதிப்பவர்கள் இருக்கலாம். புண்ணிய பாவம் தர்மம் முதலாயின இல்லையென்று சொல்கிறவர்களும் இருக்கலாம். ஆனால் உடலிலிருந்து உயிர் போகாது என்று சொல்கிறவர் யாரும் இல்லை. இது யாவரும் அறிந்த உண்மை. உயிர் போகும் போது நாம் தத்தளித்து மிகவும் வருந்துவோம். அத்தகைய வருத்தம் வரக்கூடாது என்று கருதி அதற்கு முன்பே இறைவன் திருவருளைப் பெற வேண்டுமென்ற உறுதியோடு பக்தி செய்ய வேண்டும். அந்தப் பக்திக்கு மூலமாய் இருப்பது, 'யமன் வந்து உயிரைக் கொள்ளை கொள்ளுவானே!' என்ற பயம். உயிருக்கு மோசம் வருமே என்ற பயம் அழுத்தமாக உண்டாகி, அதன் பயனாக இறைவனுடைய திருவடிகளைச் சேவிக்க வேண்டும். ''அப்படிச் சேவிப்பது ஒன்று உண்டு என்பதையே நான் நினைக்க வில்லை'' என்று அருணகிரியார் சொல்கிறார்.

முன்னை வினை

அதற்குக் காரணம் என்ன? நல்லதை நினைப்பதற்கும் ஒரு தவம் வேண்டும். பூர்வ புண்ணியம் இருந்தால்தான் நல்ல எண்ணங்கள் நமக்கு எழும்.

''தவமும் தவமுடையார்க் காகும்''

என்று திருவள்ளுவர் கூறுவர். இறைவனிடத்தில் அன்பு செய்வதற்குக் காரணமாக இருக்கும் பயம் நமக்கு உண்டாக வேண்டுமானால் அது பலகாலப் பழக்கத்தினால் வரவேண்டும். முன் செய்த பாவம் அத்தகைய பழக்கம் உண்டாகாமல் தடுக்கும். எனவே, ''உன்னிடத்தில் பக்தி செய்து நலம் பெறுவதற்குத் தடையாக இருக்கிற வினை, ஆவிக்கு மோசம் வரும் என்பதை அறியாமல் இருக்கும்படி செய்கிறது. அந்த வினையை நீ தீர்த்து அருள வேண்டும்'' என்று முருகனை வேண்டுகிறார்.

ஆவிக்கு மோசம் வருமாறு அறிந்து உன் அருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றிலேன்; வினைதீர்த்தருளாய்!

உயிருக்கு மோசம் என்பது யமனால் வரும் மரணம். அதனைத் தீர்ப்பது இறைவனுடைய பாதம். அது அருள் வடிவமாக இருக்கின்றது. இறைவனுடைய அருள் மருளைப் போக்கும். ஆவிக்கு வருகின்ற துன்பத்தைப் போக்கும். ஆகையால் மரண பயத்திற்குப் பாதுகாப்பான ஆண்டவனுடைய பாதங்களை அருள் பதங்கள் என்று சொன்னார்.

''சாகாது எனையே சரணங் களிலே
காகா நமனார் கலகம் செயும்நாள்''

என்று அநுபூதியில் பாடுகிறார்.

திருத்தணி

இப்போது நாம் பார்க்கும் விண்ணப்பத்தைத் திருத்தணியில் எழுந்தருளியிருக்கும் முருகப் பெருமானைப் பார்த்துச் சொல் கிறார் அருணகிரியார். அந்தத் திருத்தணி மாமலையில் என்ன வளம் இருக்கிறது என்பதையும் சொல்கிறார். அங்கே நீர் நிலை கள் பல உண்டு. வாபீ கூப தடாகங்கள் என்று சேர்த்துச் சொல் வார்கள். பல வாவிகள் அங்கே இருக்கின்றன. திருத்தணிக்குக் காவித் திருமலை என்று ஒரு பெயர். அங்குள்ள ஒரு வாவியில் காவி மலர் தினந்தோறும் பூக்குமாம். காவி மலருக்குக் 'கல்லாரம்' என்று ஒரு பெயர். காவி மலர் பூப்பதனால் கல்லார மலை என்று அதற்கு ஒரு பெயர் உண்டு. அதனால் அங்கே இருக்கிற பெருமானுக்குச் செங்கல்வராயன் என்று பெயர். செங்கல்வம் என்பது செங்கழு நீர்ப்பூவுக்கு ஒரு பெயர். அத் தகைய வாவி சிறந்து விளங்குவது திருத்தணி. அதோடு நில வளமும் பொருந்திய ஊர். ஆதலால் வாவிக்கு அருகில் விசால மான வயல்கள் ஊரைச் சுற்றி இருக்கின்றன.

ஆண்டவன் எழுந்தருளியிருக்கும் இடமாகையால் பல பெரியார்கள் வந்து அங்கே தங்குவார்கள். நல்ல எண்ணங்கள் அலை அலையாக எங்கும் சூழும்படியாக அவர்கள் தங்கியிருப் பார்கள். எண்ண அலைகள் சூழ்ந்த குளிர்ந்த சூழ்நிலை குளிர்ச்சியை உண்டாக்கும். கோபம் உள்ளவன் இருந்த இடத்தை அவன் எழுந்தவுடன் தொட்டுப் பார்த்தால் சுடும். அதுபோல் அன்பு உடையவர்களுடைய உடம்பு குளிர்ந்து இருக்கும். சிறந்த பெரியவர்கள் அன்பு உடையவர்களாக ஓரிடத்தில் தங்கியிருந் தால் அவர்கள் தங்கும் இடம் ஓரளவு குளிர்ச்சியுடையதாக இருக்கும். அவர்கள் மூச்சுக் காற்றில் வெப்பம் அதிகமாக இராது. அவர்களுடைய குளிர்ந்த எண்ண அலைகள் நம்மைச் சூழ்ந்தால் தண்மை உண்டாகும். இதனை இன்றும் உலகில் பிரத்தியட்ச மாகப் பார்க்கலாம். பசுமையே இல்லாத இடத்தில் சில பெரியவர்கள் வாழ்ந்திருப்பார்கள். அவர்கள் வாழும் சூழ்நிலை பசுமை நிரம்பியதாக இருக்கும்.

இவ்வாறு உள்ளம் குளிர்ந்து, கண் குளிர்ந்து, அன்பால் நிறைந்த பெரியவர்கள் முருகனைக் கும்பிட்டு வாழும் இட மாதலால் திருத்தணிகை ஈரம் நிரம்பியதாக இருக்கிறது. ஆதலால் மழை பொழிகின்ற மேகங்கள் அங்கே வரும். வந்து மழை பொழியும். மழை பொழிவதால் நீர் வளம் நிரம்பியிருக்கும். அதனால் வாவிகளும் வயல்களும் வளம் சிறந்து விளங்கும். அத்தகைய திருத்தணி மாமலையில் முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கிறான்.

துவஜம் கட்டினவன்

அவன் எந்தக் காரியத்தையும் நினைத்ததை நினைத்தபடி முடிக்கிறவன். ஒன்றை மனத்தில் சங்கற்பம் பண்ணிக் கொண்டு, 'இதை முடித்துத்தான் மறுகாரியம் பார்ப்பேன்' என்றால் அதற்கு இரண்டு அடையாளம் சொல்வது உண்டு. காப்புக் கட்டிக் கொண்டிருக்கிறான் என்றும், துவஜம் கட்டிக் கொண்டிருக்கிறான் என்றும் சொல்வதுண்டு. 'இந்தக் காரியத்தைச் செய்து விடுவேன்' என்று காப்புக் கட்டிக் கொண்டிருக்கிறான் என்றும், 'இதனை அடியோடு ஒழித்து விடுவேன்' என்று துவஜம் கட்டிக் கொண் டிருக்கிறான் என்றும் சொல்வது உலக வழக்கு. துவஜம் கட்டு வது என்பது பெரும்பாலும் பொல்லாததை அழிக்கும் வீரத்தைச் சுட்டி நிற்கிறது. முருகப்பெருமான் திருத்தணி மாமலையில் சேவல் கொடியைக் கட்டியிருக்கிறான். அடியார்களுக்குத் தீங்கு செய்பவர் யாராக இருந்தாலும் அவர்கள் யாவரையும் அழித்து விடுவேன் என்று துவஜம் கட்டிக் கொண்டிருக்கிறான். அந்தத் துவஜந்தான் சேவல். அதனுடைய பெருமையைக் கந்தர் அலங் காரத்தில் பல இடங்களில் நாம் பார்த்தோம்.

குக்குடத் துவஜன் ஆகிய ஆண்டவன் திருத்தணி மாமலை யில் வாழ்கிறான். பூவுலகத்தில் உள்ள மலையில் அவன் துவஜம் கட்டிக் கொண்டு வாழ்ந்தாலும் அவன் தேவலோகத்தி லுள்ள தேவர்களுக்கும் தலைவனாக இருக்கிறான். தேவர்கள் தம் முடைய தலையில் மாணிக்கத்தைப் போல அணிந்து வழிபடுகிற பெருமான் அவன். அப்படி இருந்தும் ஆருயிர்களைக் காப்பாற் றும் பொருட்டு இந்த உலகத்திற்கு எழுந்தருளி வந்து, குளிர்ந்த சூழ்நிலையை உடைய திருத்தணி மாமலையில் அவன் வாழ்கிறான்.

வள்ளியெம்பெருமாட்டியை மணந்து கொண்ட இடம் இந்தத் திருத்தணி மாமலை. மணத்திற்கு ஏற்ற வளமுடைய மலை அது. தேவர்களுக்குச் சிகாமணியாக இருக்கிற பெருமான், தேவலோகத்தில் ஒரு கல்யாணத்தைப் பண்ணிக் கொண்டாலும் அதைவிடச் சிறந்த கல்யாணம் ஒன்றைத் திருத்தணிகையில் பண்ணிக் கொண்டான். அது அவன் பெரும் கருணையைக் காட்டுகிறது. ''தேவர்களுக்கு எல்லாம் சிகாமணியாக இருக்கிறவனே, திருத்தணி மாமலையில் வாழும் சேவற் கொடி உடையானே, இந்த உயிருக்கு மோசம் வருமே, மரணம் வந்துவிடுமே என்று பயந்து, அது காரணமாக உன் திருவடிகளைச் சேவிக்கின்ற நினைப்பு இல்லாமல் இருக்கிறேனே! முன்னைப் பிறவியில் செய்த பாவந்தான் நான் இப்படி இருப்பதற்குக் காரணம். அந்தப் பாவத்தை நீ தீர்த்து அருள வேண்டும்'' என்று இந்தப் பாட்டில் நமக்காக அருணகிரியார் வேண்டிக் கொள்கிறார்.

ஆவிக்கு மோசம் வருமாறு
அறிந்துஉன் அருட்பதங்கள்
சேவிக்க என்று நினைக்கின்றி
லேன்வினை தீர்த்தருளாய்;
வாவித் தடவயல் சூழும்
திருத்தணி மாமலைவாழ்
சேவல் கொடிஉடை யானே,
அமரர் சிகாமணியே!

[உயிருக்கு நஷ்டம் வரும் வண்ணத்தை உணர்ந்து உன் அருள் வடிவான திருவடியைப் பணிய வேண்டும் என்று நான் நினைக்கவில்லை; இதற்குக் காரணமான பாவத்தைப் போக்கி அருள்புரிவாய்; பொய்கையோடு சேர்ந்த விசாலமான வயல்கள் சுற்றியுள்ள திருத்தணிகையென்னும் பெருமையையுடைய மலையில் வாழும், சேவற்கொடியை உடைய பெருமானே, தேவர்களுக்குச் சிகாமணி போன்றவனே!

வருமாறு – வரும் ஆற்றை. சேவிக்க என்று – நான் சேவிப்பேனாக என்று; சேவிக்க: வியங்கோள். வினை – பாவம். வாவித் தடவயல் – வாவியோடு கூடிய தடவயல். சிகாமணி – முடியின் மேல் அணியும் மணி; என்றது சென்னியால் வந்திக்கும் உயர்வுடையாய் என்றபடி.]

மரணத்திலே பயமும் அது காரணமாக அதைப் போக்கிக் கொள்ள முருகனிடத்தில் ஆழ்ந்த பக்தியும் உண்டாக வேண்டும் என்பது கருத்து.

இருதலைக் கொள்ளி எறும்பு

வாழ்க்கைச் சித்திரம்

சில பத்திரிகைகளில் குழந்தைகளுக்காகச் சில சித்திரங்கள் வரும். சுற்றிச் சுற்றி வருகின்ற சில கோடுகளைப் போட்டு, உள்ளே இருக்கும் ஒருவன் கோட்டையைத் தாண்டி வெளி வருவதற்கு வழி கண்டுபிடியுங்கள் என்று போடுவார்கள். ஐந்தாறு வழிகள் வெளியே வருவதற்கு இருப்பது போலத் தோன்றும். ஆனால் ஒரு வழியைத் தவிர மற்றவையெல்லாம் எங்கோயாவது ஓரிடத்தில் போய் நின்றுவிடும்படி அமைந் திருக்கும். சரியான வழி, பலவிடங்களில் சுற்றிச் சுற்றிப் போய்க் கடைசியில் வெளியில் வரும்படி அமைந்திருக்கும். அத்தகைய சித்திரத்தைப் பத்திரிகைகளில் பார்த்திருக்கிறோம்.

மனிதன் வாழ்நாள் ஒரு வகையில் அந்தச் சித்திரத்தைப் போன்றதுதான். அந்தச் சித்திரத்திலே வெளியில் வருவதற்கு ஒரு வழியாவது இருக்கும். ஆனால் நம் வாழ்க்கைச் சித்திரத்தில், வெளியில் வர வழியே இல்லை. வெளியில் வர வேண்டுமென்ற ஆசை உடையவனுக்குக்கூட வழி தெரியாமல் சுழன்று சுழன்று வரும்படியாக அமைந்திருக்கிறது இந்தச் சித்திரம். அதற்குக் காரணம் நம் மனந்தான். போன போன இடங்களில் எல்லாம் பதிந்து கொண்டு எந்த இடத்தில் இருந்தும் மீள ஒட்டாமல் மனம் பற்றை வளர்த்துக் கொள்கிறது.

நட்பும் பகையும்

நாம் வாழ்கின்ற காலம் மிகக் குறைவு. அந்தக் காலத்திற் குள் நாம் தெரிந்து கொள்ளும் செய்திகள் பல. எதனைத் தெரிந்து கொண்டாலும் தெரிந்து கொள்ளாவிட்டாலும் நம்முடைய முடிந்த முடிபாகிய லட்சியத்திற்கு அநுகூலமான வழியைத் தெரிந்து கொள்ள வேண்டும். ரெயில் வண்டியில் ஏற வந்தவன் ரெயில்வே

ஸ்டேஷனில் கண்ட நண்பனோடு பேசிக் கொண்டே இருந்தால், வண்டி வந்து நிற்பதுகூட மறந்துவிடும். வண்டி நிற்கிற வரைக்கும் அவனோடு பேசலாமே என்று ஆரம்பித்தவன் வண்டி புறப்பட்ட பிறகும் பேச்சுச் சுவாரசியத்தில் அதை மறந்து நிற்பான். இப்படித்தான் இந்த உலகத்தில் தோன்றிய மனிதன் இருக்கிறான். தன்னுடைய சரீரத்தைக் காப்பாற்றுவதற்குப் பலபேருடைய துணையை நாடுகிறான். இதனை வளர்ப்பதற்கும் சுகம் பெறுவ தற்கும் பல செயல்களைச் செய்கிறான். நாளுக்கு நாள் பல பேருடைய தொடர்பும் ஏற்படுகின்றது. இந்தத் தொடர்பினால் நட்பும் பகையும் விளைகின்றன. நட்புக் காரணமாக மகிழ்ச்சி யும், பகை காரணமாக அச்சமும் துன்பமும் அடைகிறான். ''உலகத்தில் இருக்கும்போது ஏதாவது செயல் செய்யத்தானே வேண்டும்? மற்றவர்களோடு பழகத்தானே வேண்டும்?'' என்ற கேள்விகள் எழலாம். பழகுவது வேறு, பதிவது வேறு. பிள்ளைப் பூச்சி சேற்றிலே பல காலம் ஊர்ந்து கொண்டிருந்தாலும் சேறு ஒட்டாமலே வளைய வருகிறது. அதுபோல் நாம் எல்லாவற் றோடும் பழகிக் கொண்டிருந்தாலும் அவற்றோடு ஒட்டாமல் வாழப் பழக வேண்டும். நம்முடைய லட்சியம் இன்னதென்று தெரிந்து வாழ வேண்டும்.

பற்றின்றி வாழ்தல்

சமுதாயத்திற்கு வேண்டிய காரியங்களைச் செய்து கொண்டு, அவ்வப்போது நமக்குத் துணையாகின்றவர்களோடு அன்பு செய்து வாழ்வது தவறு அன்று. ஆனால் அப்படி வாழ்கின்ற இடத்திலும், பழகுகின்ற மனிதர்களிடமும் பற்று வைத்து, எந்தக் காலத்திலும் பிரியாமல் இருக்க வேண்டுமென்ற உணர்ச்சியைக் கொள்வது ஆபத்தை உண்டாக்கும். நம்மோடு பிறப்பிலே தொடர்ந்து வந்து இறக்கும் வரைக்கும் இருக்கும் இந்த உடம்பே வாழ்நாள் முடிந்தவுடன் நம்மைப் பிரிந்து விடுகிறது; அல்லது நாம் இதைப் பிரிந்து விடுகிறோம். அப்படி இருக்க, பிறந்த பிறகு தொடர்ந்த தொடர்புகள் நம்மோடு ஒட்டிக் கொண்டிருக்குமா? ஒட்டிக் கொண்டிராதவற்றை மனத்திலே பற்றிக் கொள்வதுதான் பற்று. அப்படிப் பற்று வளர்வதனால் மனத்திலே துயரம் மிகு திறதேயன்றி அமைதி உண்டாவதில்லை.

"யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்"

என்பது திருக்குறள். பல வகையான பற்றுக்களை உள்ளத்தில் ஏற்றிக் கொண்டு எந்தப் பக்கம் திரும்பினாலும் சேற்றிலே அமிழ்வது போலப் பாசத்திலே அமிழ்ந்து கொண்டிருக்கிறோம். என்றைக்காவது சிறிது உணர்வு வந்து அவற்றிலிருந்து விடுபட வேண்டுமென்றால் முடிவதில்லை; எந்தப் பக்கத்திலும் நம்மை அழுத்துகின்ற பாசம் இருப்பதைப் பார்க்கிறோம். பாசத்தைவிட்டு நீங்குவதற்கு ஒரு சிறிய வழிகூடக் காணாமல் திண்டாடுகிறோம்.

பற்றினால் அமைதியின்மை

கல்யாணம் பண்ணிக்கொண்டு மனைவியோடு வாழ்கிறவன் சிறிது நேரம் கடவுளை எண்ணலாம் என்றால், மனைவியோடு பேசிவிட்டு அவள் தூங்கும்போது எண்ணலாம் என்ற நினைவு வருகிறது. மனைவியோடு பேசி அவள் தூங்கின பிறகோ, 'நாமும் தூங்கிவிடலாம்; நாளைக்குத் தியானம் பண்ணிக் கொண்டால் போகிறது' என்ற நினைவு வருகிறது. மறுநாள் எழுந்தாலோ கடைகண்ணிக்குப் போகிற வேலை முன்னாலே வந்து நிற்கிறது. 'இன்று இரவு அவசியம் நாம் தனித்திருந்து தியானம் பண்ண வேண்டும்' என்று நினைக்கிறோம். அந்த இரவு நமக்கு வேண்டிய நண்பர் ஒருவர் வந்துவிடுகிறார். 'அவர் தினந்தோறுமா வருகிறார்? இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வருகிறவரோடு பேசாமல் என்ன செய்வது? தியானம் எங்கே போகிறது? நாளைக்குப் பண்ணிக் கொள்ளலாம்' என்று மறுநாளைக்கு ஒத்திப் போடுகிறார். அடுத்த நாள் நமக்கு உடம்பு சரியில்லாமல் போய்விடுகிறது; சிறிது ஜுரம் வருகிறது. அன்றைக்கும் தியானம் செய்ய முடிவதில்லை. இப்படியாக ஒவ்வொரு நாளும் நாம் அமைத்துக் கொண்ட பற்றுகள் காரணமாகச் சிறிது நேரம் ஓய்வாகவும், அமைதியாகவும் இருக்க வழி பிறப்பது இல்லை. மற்றவற்றைத் தள்ளிப் போடுவதில்லை; இதை மாத்திரம் எளிதிலே தள்ளிப் போட்டுக் கொண்டே போகிறோம்.

இப்படியின்றி எந்தக் காரியம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இறைவனைத் தியானம் பண்ணுவது அவசியம் என்ற உணர்ச்சி இருந்தால் எப்படியாவது அந்த நேரத்தில் தனிமையை

நாடுவோம். வீட்டிலே தக்க இடத்தில் அமர்ந்து சுவையான உணவை உண்ணும் ஒருவன் கடுமையான வேலையில் ஈடுபட்டு வீட்டுக்குப் போக முடிவதில்லையானால், தான் பணிபுரியும் அந்த இடத்திற்குச் சோற்றை வருவித்து உண்ணுகிறான். வண்டியில் பயணம் செய்கிறவன் வண்டி ஓடும்போதே ஏதாவது வாங்கி உண்ணுகிறான். ஓட்டத்தில் இருக்கிறவன் ஓடும்போதே எதையாவது கிடைத்ததைக் கொண்டு வயிற்றை நிரப்புகிறான். மற்றக் காரியங்களில் ஈடுபடுகிறபோது உண்ண வேண்டிய அவசியம் இல்லையென்று அதை ஒதுக்க முடியாது. எப்படியாவது உண்ணுவதற்கும், உறங்குவதற்கும் நேரத்தைக் கண்டுபிடித்துக் கொள்கிறான். உண்ணுவது முயற்சியினாலே வருவது; உறங்குவது தானே வந்துவிடுகிறது. இறைவனைத் துதிப்பதற்கும், தியானம் செய்வதற்கும் ஒருவனுக்கு உண்மையான சிரத்தை இருந்தால் எந்த நிலையிலும் உணவைப் போகிற இடத்தில் பெற்று உண்ணுவது போல அவற்றைச் செய்துவிடுவான். அப்படிச் செய்யாமல் இருப்பதற்குக் காரணம் மற்றப் பொருள்களில் வைத்த பற்றுத்தான்.

பற்று வைத்தவன் சிறிதே உணர்வு வந்தபோது, எந்தப் பக்கம் வந்தாலும் அவன் வெளியே வர முடியாதபடி அந்தப் பற்று அவனுக்குத் தடையாக இருப்பதைக் காண்கிறான். இடப்பக்கம் போனால் மனைவி வந்து நிற்கிறாள். வலப் பக்கம் போனால் மக்கள் வந்து நிற்கிறார்கள். இவர்களுக்கு வேண்டிய வற்றைச் செய்வதையே கடமையாகத் தீரமானித்துக் கொண்டிருக்கிறான். அதனால் இறைவனைத் தியானிக்கும் கடமையைச் சற்றே தள்ளி வைக்கப் பார்க்கிறான். இப்படியேதான் பொழுது போய்க் கொண்டிருக்கிறது. துணிவு இல்லாமல், பற்றின பற்றை நழுவ விடுவதற்குரிய தைரியம் இல்லாமல், எந்த நிமிஷத்திலும் தனியாக வந்து அமர்ந்து கொள்வதற்குரிய பழக்கம் இல்லாமல் திண்டாடுகிறான்.

இருதலைக் கொள்ளி எறும்பு

இதற்கு எதையாவது உவமை சொல்லலாமே! இருதலைக் கொள்ளிக்கு இடையில் அகப்பட்ட எறும்பு திண்டாடுவது போல நாம் திண்டாடுகிறோம். இருதலைக் கொள்ளி எறும்பு போல என்பது ஒரு பழமொழி. இரண்டு பக்கமும் தீ எரிந்து

கொண்டிருக்கும் கொள்ளியினிடையே அகப்பட்ட எறும்பு எந்தப் பக்கமும் போக முடியாது. கீழே குதித்து விடலாம். ஆனால் ஒரு மூங்கிலில் இரண்டு பக்கமும் தீப் பிடித்துவிடுகிறது. அந்த மூங்கிலுக்குள்ளே ஓர் எறும்பு அகப்பட்டுக் கொள்கிறது. அப் போது இரண்டு பக்கத்திலும் போக முடியாது; தீ இருக்கிறது. வெளியில் குதிக்கவும் முடியாது; சுற்றிலும் மூங்கில் குழாய் இருக்கிறது. அந்த எறும்பு உய்வதற்கு வழியே இல்லை. அப்படித் தான் நம்முடைய பற்றுக்களை வளர்த்துக் கொண்டிருக்கிறோம்.

முத்தொள்ளாயிரப் பாடல்

இருதலைக் கொள்ளியினுள் அகப்பட்ட எறும்பைப் பல புலவர்கள் எடுத்து ஆளுகிறார்கள். முத்தொள்ளாயிரம் என்ற நூலில் ஒரு தலைவி தன் நிலையைப் பற்றிச் சொல்லுகிறாள். சோழன்மேல் காதல் கொண்டவள் அவள். அவனுடைய பேரழகைக் கண்டு தன் உள்ளத்தை இழந்தாள். அவனிடம் நேரே சென்று தன் காதலைச் சொல்லலாம் என்றாலோ நாணம் வந்து தடுக்கிறது. அவனை அடைந்து இன்புறா விட்டாலோ பெண்மைக்குரிய நலம் அழிந்து போய்விடும். இப்படி இரண்டு பக்கத்திலும் அவ ளுக்குச் சங்கடம் இருக்கிறது. எதையும் செய்ய முடியாமல் திண் டாடுகிறாள். இரவு முழுவதும் இருதலைக் கொள்ளி எறும்பு போலவே இரண்டு தலையிலும் உள்ள துன்பத்தை எண்ணி அவள் நெஞ்சு சுழலுகிறது. இரண்டு தலைப்பிலும் கொள்ளியாக இருக்கும் மூங்கில் குழாய்க்குள் அகப்பட்ட எறும்புபோலத் தன்னுடைய நெஞ்சம் அங்கும் இங்கும் போய்த் திறந்த வழி காணாமல் திண்டாடுகிறதாக அவள் சொல்கிறாள்.

''நாண்ஒருபால் வாங்க நலன்ஒருபால் உள்நெகிழ்ப்பக்
காமருதோட் கிள்ளிக்கென் கண்கவற்ற – யாமத்து
இருதலைக் கொள்ளியின் உள்ளெறும்பு போலத்
திரிதரும் பேருமென் நெஞ்சு.''

மணிவாசகர் வாக்கு

இந்த உவமையையே மணிவாசகப் பெருமான் ஆளுகிறார். இறைவனைப் பிரிந்து பிரபஞ்சம் என்னும் சேற்றுக்குள் சுழன்று எந்தப் பக்கமும் போய் விடுதலையைப் பெற முடியாமல்

நிற்கிறோம். அதற்கு இருதலைக் கொள்ளியின் உள்ளே உள்ள எறும்பை உவமிக்கிறார். ''எம்பெருமானே, இருதலைக் கொள்ளியின் உள்ளே இருக்கும் எறும்பு போல, உன்னைப் பிரிந்து எந்தப் பக்கமும் செல்ல முடியாதபடி நான் துன்புறுகின்றேன். என்னை இப்படி விட்டுவிட்டிருக்கலாமா?'' என்று அலறுகிறார்.

''இருதலைக் கொள்ளியின் உள்ளெறும் பொத்து நினைப்பிரிந்த
விரிதலை யேனை விடுதிகண்டாய்; வியன் மூவுலகுக்கு
ஒருதலை வா,மன்னும் உத்தர கோசமங் கைக்குஅரசே,
பொருதுஅலை மூவிலை வேல்வலன் ஏந்திப் பொலிபவனே.''

அருணகிரியார் பாடல்

இவற்றை எல்லாம் இப்போது மனத்தில் பதித்துக் கொண்டால் அருணகிரி நாதப் பெருமான் சொல்கிற ஒரு பாட்டுக்கு விளக்கம் பெற உதவியாக இருக்கும். அவரும் இருதலைக் கொள்ளி எறும்பைச் சொல்கிறார். ஆனால் அந்த இரு தலையும் இன்னவை என்று சுட்டிக் காட்டவில்லை. 'இருதலைக் கொள்ளியின் நடுவிலுள்ள எறும்பு போல நான் குலைந்து கொண்டிருக்கிறேன்; அதனால் எனக்கு உண்டான துயரம் வளர்ந்து வருகிறது. அதனை ஒழிக்க வேண்டும்' என்று முருகனிடத்தில் பிரார்த்திக்கிறார்.

கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையும் என்றன்
உள்ளத் துயரை ஒழித்து அருள்வாய், ஒருகோடி முத்தம்
தெள்ளிக் கொழிக்கும் கடல் செந்தில் மேவிய சேவகனே!

இந்த உவமையைச் சற்றே விரித்துப் பார்க்க வேண்டும். இரண்டு பக்கமும் கொள்ளி உள்ள ஓரிடத்தில் எறும்பு நிற்பது போல நான் நிற்கிறேன் என்று சொல்கிறார். அந்த இரண்டு தலைகள் எவை? பலவற்றைச் சொல்லலாம்.

இரு தலை

இறப்பு பிறப்பு என்ற இரண்டும் நம்முடைய வாழ்க்கையின் இரண்டு தலைப்பிலும் உள்ளவை. கொள்ளியின் ஒரு தலைப்பாகிய பிறப்புத் துன்பத்திலிருந்து வெளிப்பட்டு வந்திருக்கிறோம். மறுபக்கத்தில் இறப்பு என்னும் துன்பம் இருக்கிறது

இந்த இரண்டுக்கும் நடுவில் உள்ள வாழ்க்கையில் நின்று குலை கிறோம். இப்படி ஒரு பொருள் சொல்லலாம்.

சென்ற பிறவியில் நாம் செய்திருக்கும் புண்ணிய பாவங்கள் இந்தப் பிறவியில் வந்து பயனைத் தருகின்றன. இவற்றை ஊழ் வினை என்றும் பிராரப்தம் என்றும் சொல்வார்கள். அதன்படி நம்முடைய அநுபவங்கள் அமைகின்றன. ஆனால் இந்த வாழ்க்கை யில் நமக்குரிய கருவி கரணங்களை எல்லாம் கொண்டு பல செயல்களைச் செய்கிறோம். முன்னைப் பிறவியில் நாம் செய்த செயல்களின் விளைவாகப் புண்ணிய பாவங்கள் நமக்குக் கிடைத்தன. அவற்றின் பயனைச் சுகமாகவும் துக்கமாகவும் இந்தப் பிறவியில் அடைகிறோம். முன்னை வினையின் விளைவு இது. இந்த அநுபவம் அன்றி, புதிய செயல்களைச் செய்கிறோம். அந்தச் செயல்களின் பயன் அடுத்த பிறவியில் கிடைக்கும். எனவே இந்தப் பிறவியில் முன்னை வினைப் பயனால் வரும் அநுபவமும், புதுச் செயல்களினால் வரும் புண்ணிய பாவங் களும் இருக்கின்றன. இந்த இரண்டுக்கும் நடுவில் நாம் குலைந்து நிற்கிறோம்.

அநுபவம் இப்படி வருகிறதே என்று பார்த்தால் அதற்கு மூலகாரணம் முன்னை வினை என்று தெரிகிறது. அந்த அநு பவத்தை மாத்திரம் அநுபவித்துச் செயல் இல்லாமல் இருக்க லாமே என்றால், நம்முடைய மன நிலை அதற்கு அமைந்ததாக இல்லை. ஏதாவது செய்து கொண்டே இருக்கிறோம். இப்படி முன்னை வினையின் விளைவுக்கும், இப்போது செய்யும் செயலுக்கும் இடையில் நின்று திண்டாடுகிறோம். இதுவும் இருதலைக் கொள்ளி எறும்பின் நிலைதான்.

நம்முடைய வாழ்க்கையில் நமக்கே சில சமயங்களில் சில எண்ணங்கள் தோன்றுவது உண்டு. வேறு சிலருடைய அறிவுரை களையும் ஏற்றுக் கொள்கிறோம். திண்மையான மனம், தன னுடைய எண்ணத்தில் சிறந்தன இருந்தாலும் பிறர் உபதேசங் களில் சிறந்தன இருந்தாலும் ஏற்றுக் கொள்ளும். அது இல்லாத வனுக்குப் பிறர் உபதேசம் செய்கிறபோது நல்லதாகத் தோற்றும். அடுத்தபடி அதற்கு மாறாகத் தன் எண்ணமே சிறந்ததாகத் தோற் றும். இப்படி நம்முடைய அறிவுக்கும், பிறருடைய உபதேசத்

திற்குமிடையே நின்று இதுவோ அதுவோ என்று சந்தேகப் பிறவிகளாகத் திண்டாடுகிறோம். ஒரு பக்கத்தில் நம்முடைய எண்ணங்கள் இருக்கின்றன. மற்றொரு பக்கத்தில் பிறருடைய உபதேசம் இருக்கிறது. இருதலைக் கொள்ளியிடை எறும்பு போல, இன்னதுதான் செய்வது என்று தெரியாமல் அப்போது திண்டாடுகிறோம். எண்ணத்தில் திண்மை இல்லாமையினால் வந்த விளைவு இது. இப்படியும் இருதலைக் கொள்ளி எறும்பு நிலை ஒன்று உண்டு.

இறைவனுடைய திருவருளைப் பெற வேண்டுமென்று முயலும் போதுகூடப் பல சமயங்களில் இப்படி இரண்டு வேறு எண்ணங்கள் வந்து மோதுகின்றன. இறைவனுடைய திருநாமத்தைச் சொல்லித் திருவுருவத்தைக் கண்டு பக்தி செய்ய வேண்டுமென்று நம்முடைய பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். நாம் அதை நம்பி வருகிறோம். ஆனால் ஒரு சாரார், இறைவன் குணம் குறி கடந்தவன், அவனுக்கு விக்கிரகம் கூடாது என்று சொல்லுகிறார்கள். நம்முடைய முன்னோர்கள் சென்ற நெறியும், புதிய அறிவாளிகள் சொல்லும் நெறியும் ஒன்றுக்கொன்று மாறுபாடாகத் தோற்றுகின்றன. அவற்றின் நடுவில் நின்று இன்னது செய்வது என்று தெரியாமல் நாம் திகைக்கிறோம். இது ஒருவகை இருதலைக் கொள்ளி எறும்பின் நிலை.

தர்ம சங்கடங்கள்

உலக வாழ்க்கையில் எத்தனையோ தர்ம சங்கடங்கள் உண்டாகின்றன. இரண்டு வகையான தர்மம் ஒன்றுக் கொன்று எதிராக நிற்கும்போது தர்ம சங்கடம் எழுகிறது. ஒரு பாம்பு இரையை உண்ண வருகிறது. அப்போது பாம்பை அடித்தால் அதைக் கொன்றவர் ஆகிறோம். அடிக்காமல் இருந்தால் இரையாகிற பிராணியைக் கொலை செய்தது போன்ற துயரம் வருகிறது. இந்த இரண்டுக்கும் நடுவில் நின்று திகைக்கிறோம். தர்ம சங்கடமான நிலை அப்போது வருகிறது.

இப்போது எங்கே பார்த்தாலும் விஞ்ஞானத்தைப் பற்றிய பேச்சாக இருக்கிறது. மனிதன் வாழ வேண்டுமானால் விஞ்ஞானத்தின் முயற்சியும், தொழில் முயற்சியும் சிறந்து நிற்க வேண்டுமென்று அரசியல் தலைவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

வாழ்க்கை நன்றாக முன்னேறினால்தான் சமுதாயம் முன்னேற முடியும் என்பதை அவர்கள் வற்புறுத்துகிறார்கள். அதே சமயத்தில் நம்முடைய ஞான நூல்கள், ஒவ்வொருவனுக்கும் தன்னுடைய ஆன்மா கடைத்தேறும் வழியைப் பார்க்க வேண்டுமென்று சொல்கின்றன. விஞ்ஞானம் மெய்ஞ்ஞானம் ஆகிய இரண்டும் ஒன்றுக்கொன்று போட்டியாக நிற்கின்றன என்று தோன்றுகிறது. இந்த இரண்டுக்கும் நடுவில் இன்னது செய்வது என்று தெரியாமல் திண்டாடுகிறோம்.

பல இரட்டைகள்

இப்படியல்லாமல் வேறு இரட்டைகளும் மோதுவது உண்டு. இரண்டு பேரை ஆசிரியராகக் கொண்டாலும், இரண்டு பேரை மனைவிகளாகக் கொண்டாலும், இரண்டு கடையில் கணக்கு வைத்துக் கொண்டாலும், இரண்டு பேரைத் துணையாகக் கொள்ள நேர்ந்தாலும், இரண்டு வீட்டுக்கு விருந்து சாப்பிட வருவதாகச் சொன்னாலும், இரண்டு பேரின் உரைகளைப் பார்த்துக் கொண்டிருந்தாலும் எதை மேற்கொள்வது என்ற திண்டாட்டம் வரும். இவைகளும் ஒருவகையில் இருதலைக் கொள்ளியினிடையே உள்ள எறும்பு போன்ற நிலையை உண்டாக்குகின்றன. இப்படிப் பார்த்தால் எறும்பின் நிலை பல பலவாக வருகின்றதைப் பார்க்கலாம். வாழ்வு முழுவதும் சில இரட்டைகளுக்கு நடுவில் நின்று திண்டாடுகிறோம். எப்படியோ நமக்கு இந்தத் திண்டாட்டம் விடுவதே இல்லை. இது போக வேண்டுமானால் நம் மனம் திண்மையுடன் இருக்க வேண்டும்.

இறைவனுடைய திருவடிப் பற்று ஒன்றுதான் அந்தத் திண்மையை உண்டாக்கும். எந்த வேலையைச் செய்தாலும் திருடனுக்குத் திருட்டிலே கண் இருப்பது போலவும், யாரிடம் காதல் செய்தாலும் பரத்தையர்களுக்கு வருமானத்தில் ஆசை இருப்பது போலவும், எத்தனைதான் பேசிக் கொண்டு வந்தாலும் கார் ஓட்டுகிறவனுக்குக் கைச் சக்கரத்தில் நோக்கம் இருப்பது போலவும், உலகில் எப்படி வளைய வந்தாலும் எத்தனை பேர்களிடம் பழகினாலும் எத்தனை முயற்சியில் ஈடுபட்டாலும் நாம் ஆன்ம விடுதலை என்ற குறிக்கோளை மறந்துவிடாமல் இருக்க வேண்டும். இல்லையானால் பற்றுக்களில் ஆழ்ந்து

துன்புற நேரும். அப்போது கொள்ளித் தலையில் எறும்பு போன்ற நிலை நமக்கு வரும். அப்படி வந்த பிறகு அதை மாற்ற வேண்டு மானால் மனத்தைத் துயரம் இல்லாமல் வைக்க வேண்டும். அதற்குத் தக்க வழி இறைவனுடையதிருவருளை எண்ணி ஏங்கு வதுதான். இறைவனை உறுதியாக உள்ளத்தில் நட்டுவிட்டால் வேறு வகையான பற்றுகள் அங்கே வந்து துன்பத்தைத் தாரா.

பற்று நீங்க வழி

நாம் இறைவனை அடைய வேண்டும். பற்றுக்கள் எல்லாம் அற்றால் இறைவனை அடைய முடியும்.

"அற்றது பற்றெனில் உற்றது வீடு"

என்று ஆழ்வார் சொல்வார். பற்றோ அறுவதாக இல்லை. என்ன செய்வது? பற்றுக்கள் அறுவதற்கும் இறைவனைத் தியானம் பண்ண வேண்டுமென்று வள்ளுவர் சொல்கிறார். பற்று அறுவ தற்கு இறைவனைப் பற்றிக் கொள்வது ஒன்று. பற்று அற்றபின் இறைவன் அருள் அநுபவம் உண்டாவது வேறு.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

என்பது திருக்குறள். சமுத்திரத்தில் அலை ஓய்ந்த பிறகு நீராடுவோம் என்று இருந்தால் என்றைக்கும் நீராட முடியாது. அதுபோல் பற்று எல்லாவற்றையும் அறவே விட்டுவிட்டு இறைவனைப் பற்றிக் கொள்ளலாம் என்றால் அது நடவாத காரியம். கங்கையில் போய் நீராடுகிறவனுக்கு அழுக்கான வேட்டி இருக்கிறதே என்ற கவலை வேண்டுவதில்லை. அங்கே போய் வேட்டியையும் துவைத்துக் கொள்ளலாம்; நீரிலும் ஆடலாம்; தாகத்தையும் தணித்துக் கொள்ளலாம். ஆற்றங்கரைக்குச் சென்று தண்ணீர் குடிக்க எண்ணும் ஒருவன் சேற்றுக் கையோடு போகி றான். அந்தக் கையினாலே தண்ணீரைக் குடிக்க முடியாது. ஆகை யால் முதலில் அந்தத் தண்ணீரில் கையைக் கழுவிக் கொள் கிறான். பின்பு அந்தத் தண்ணீரை அருந்துகிறான். அதுபோல் இறைவனைப் பற்றிக் கொள்வதனால் சேறுபோல் இருக்கிற பற்று முதலில் போகும். பின்பு அவனோடு ஒன்றுபடலாம். இந்த எண்ணத்தோடுதான்,

''பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''

என்று சொன்னார். பற்று இல்லாமல் வாழ்கிறவர்களுக்குப் பற்றைப் பற்றிக் கவலை இல்லை. நாள்தோறும் பற்றுக்களைப் பெருக்கிக் கொண்டு தொட்ட தொட்ட இடங்களில் எல்லாம் மனத்தைப் பதித்து ஒன்றிலிருந்தும் பிரிய முடியாது வாழ்கின்ற நமக்கு அந்த நிலையினின்றும் மீள்வதற்கு வழி ஒன்றே ஒன்று தான். அது இறைவனைப் பற்றிக் கொள்வது.

ஆகையால் அருணகிரிநாதர், ''இருதலைக் கொள்ளி எறும்பு போல இருக்கும் என்னை நீ வந்து காப்பாற்ற வேண்டும்; என் உள்ளத் துயரத்தை நீக்க வேண்டும்'' என்று இறைவனைப் பற்றிக் கொண்டு வேண்டுகிறார்.

கொள்ளித் தலையில் எறும்பது போலக் குலையும் என்றன
உள்ளத் துயரை ஒழித்தருள்வாய்

திருச்செந்தூர்

இந்த விண்ணப்பத்தை அவர் திருச்செந்தூரில் உள்ள எம்பெருமானிடத்தில் சமர்ப்பிக்கிறார். திருச்செந்தூரை எண்ணும் போது அதன் கடற்கரை நினைவுக்கு வருகிறது. எப்போதும் அலை மோதுகின்ற கடற்கரையில் செந்தில் ஆண்டவன் எழுந்தருளியிருக்கிறான். அந்த ஊருக்கே அலைவாய் என்று பெயர். அங்குள்ள கடற்கரை அழகியது. முத்துக்களை அலைகள் கொண்டு வந்து கொழிக்கின்றன. கோடிக்கணக்கான முத்தங்களை அங்கே கொண்டு வந்து சேர்க்கின்றன. திருச்செந்தூரில் எம்பெருமானுடைய சந்நிதானத்தில் நின்ற அருணகிரிநாதப் பெருமானுக்கு இப்படி ஒரு கற்பனை தோன்றுகிறது.

ஒரு கோடி முத்தம்
தெள்ளிக் கொழிக்கும் கடல் செந்தில் மேவிய சேவகனே!
வள்ளிக்கு வாய்த்தவனே! மயில் ஏறிய மாணிக்கமே!

எம்பெருமான் வீரனாக வேலாயுதத்தைக் கையில் வைத்திருக்கிறான். சூரபன்மனைச் சங்காரம் செய்வதற்காகத் திருச்செந்தூரிலிருந்து வீரவாகு தேவரைத் தூது அனுப்பினான். அங்கே

படைவீடு கொண்டான். அங்கே இருந்துதான் யுத்தத்திற்குப் புறப் பட்டான். ஆகவே அவன் அங்கே போர் வீரனாக எழுந்தருளி யிருந்தான். பின்பு வெற்றி யபிஷேகமும் அங்கே நடைபெற்றது. ஐயத்தைக் கொண்டாடியமையால் ஜயந்தி என்ற பெயர் அதற்கு உண்டாயிற்று. முருகன் வீரனாக, சேவகனாக அங்கே எழுந்தருளி யிருக்கிறான்.

தெள்ளிக் கொழிக்கும் கடல்செந்தில் மேவிய சேவகனே!

அலைகள் முருகப் பெருமானுக்குக் கோடிக்கணக்காக முத்தங்களைக் கொண்டு தருகின்றனவாம். கடற்கரையில் அலை மோதும்போது கரை குலைவதை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் இங்கே அருணகிரிநாதப் பெருமான் அதைச் சொல்ல வில்லை. அலைகளால் நலம் விளைகிறது என்று சொல்கிறார். அலைகள் கோடிக்கணக்கான முத்தங்களை கொண்டு வந்து சேர்க்கின்றனவாம். நம்முடைய உள்ளத்தில் கூடத் துயர் அலை மோதும்போது நாம் கவலை அடைகிறோம். மணல் கரையாக நம் உள்ளம் இருப்பதுவே காரணம். அப்படியின்றி இறைவனுடைய திருக்கோயிலாக இருக்குமானால் உலக வாழ்க்கையில் வந்து வந்து மோதுகின்ற சுக துக்கமாகிற அலைகளிலிருந்து கிடைக் கின்ற அரிய முத்தங்களாகிய உண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம்.

சேவகன்

அங்கேயுள்ள எம்பெருமான் சேவகனாக, பெரு வீரனாக இருக்கிறான். வீரம் உடையவனை அழகிய பெண்கள் நாடி வருவார்கள். வீரம் உடையவனைக் காதல் செய்ய விரும்புவது அழகிகளின் இயல்பு. இங்கே வீரத்தினால் சூரபன்மாவை அழித்த எம்பெருமான் வள்ளி நாயகனாக விளங்குகிறான். வீரரில் சிறந்த வீரனாகிய ஆண்டவன் பேரழகு உடையவன். அவனுக் குள்ள செல்வத்துக்குக் குறைவு இல்லை. அவனே அறிவிற் சிறந்த ஞான மூர்த்தியாக இருக்கிறான். ஆடவருக்கு வேண்டிய எல்லா நலங்களும் ஒருங்கே பொருந்திய அந்தப் பெருமானை மணவாளனாக அடைய வேண்டுமென்றால் எத்தனையோ தவம் செய்திருக்க வேண்டும். வள்ளியம் பெருமாட்டி அந்தத் தவம் உடையவள். அவளுக்கு அவன் காதலனாக வாய்த்தான். பேரழகி யாகிய வள்ளி பெருங் கருணையுடைய எம்பெருமானை அடைந்

தது நமக்குத் தைரியம் ஊட்டுகின்ற செயல். வீரத்தினால் சிறப்புப் பெற்ற செந்தூர் ஆண்டவன், காதலுடைய வள்ளிக்கு மணவாளனாகி, மயில்மேல் ஏறி ஒளி வீச வருகிறான். மயிலேறிய மாணிக்கமாக விளங்குகிறான். அவனுடைய திருக்கோலம் அவனுடைய வெற்றிச் சிறப்பையும் காதல் சிறப்பையும் பேரழகையும் காட்டுகிறது.

கடல் செந்தில் மேவிய சேவகனே!
வள்ளிக்கு வாய்த்தவனே! மயில் ஏறிய மாணிக்கமே!

மாணிக்கம்

மாணிக்கம் தானே ஒளி வீசும்; அது சுயம்பிரகாசமானது. ஆண்டவன் என்றைக்கும் மாறாத தேசு உடையவன். அவன் செக்கச் செவேல் என்று இருக்கிறான். மாணிக்கம் பச்சையின் நடுவில் இருந்தால் பின்னும் ஒளி விட்டு விளங்கும். இங்கே முருகப் பெருமான் பசுந்தோகை மயில்மேல் ஏறி வருகிறான். மரகதத்தில் மாணிக்கம் பதித்தது போல இருக்கிறது அந்தக் காட்சி. மயிலேறிய மாணிக்கமாக அவனைப் பார்க்கும்போது அவன் அழகு நம் கண்ணை விட்டு மறைந்துவிடாமல் நம் மனத்திலும் நிற்கிறது. அந்தப் பெருமானைப் பார்த்து, ''எம்பெருமானே, என் உள்ளத் துயரை ஒழித்தருள வேண்டும்'' என்று வேண்டுகிறார் அருணை முனிவர்.

பல அலைகள் மோதினாலும் திண்மையான அலைவாயில் திருக்கோயில் கொண்டு எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறான். அதுபோல் அவன் திருவடியைப் பற்றிக் கொண்டால் ஆயிரம் ஆயிரம் துயர் அலைகள் வந்து மனத்தில் மோதினாலும் சற்றும் தளர்ச்சி அடையாமல் இருக்கலாம். இந்த இரண்டையும் ஒருங்கே நினைத்து இணைத்ததைப் போல இந்தப் பாட்டைப் பாடுகிறார்.

★

கொள்ளித் தலையில் எறும்பது
போலக் குலையும்என்றன்
உள்ளத் துயரை ஒழித்துஅரு
ளாய்ஒரு கோடிமுத்தம்

தெள்ளிக் கொழிக்கும் கடல்செந்தில்
மேவிய சேவகனே!
வள்ளிக்கு வாய்த்தவ னே!மயில்
ஏறிய மாணிக்கமே!

[இருதலைக் கொள்ளிக்கு நடுவான இடத்தில் அகப்பட்ட எறும்பைப் போல இன்ன நெறியில் செல்வது என்று தெரியாமல் மனம் குலையும் அடியேனுடைய உள்ளத்திலுள்ள துயரத்தை நீக்கி நின் திருவருளை வழங்க வேண்டும்; ஒரு கோடி முத்துக்களை அலைகள் எடுத்து வந்து குவிக்கும் கடலின் கரையில் உள்ள திருச்செந்தூரில் விரும்பித் தங்கும் பெருவீரனே! வள்ளிக்கு உரிய காதலனாக வாய்த்த பெருமானே! மயிலின்மேல் ஏறிப் பவனி வரும் ஒளியும் சிவப்பும் உள்ள மாணிக்கம் போன்றவனே!

கொள்ளித் தலையில் என்பது இருதலைக் கொள்ளியிடையே என்ற பொருளைக் குறிப்பால் புலப்படுத்தியது. எறும்பது; அது, பகுதிப் பொருள் விகுதி. குலையும் என்பது என் என்பதனோடும் சேரும்; உள்ளம் என்பதனோடும் சேரும். ஒரு கோடி என்பது அளவில்லாததைச் சுட்ட வந்த வாய்ப்பாடு. தெள்ளி – தெளிவாக எடுத்து. கொழிக்கும் – கொண்டு வந்து குவிக்கும். சேவகம் – வீரம். வள்ளிக்குத் தவப்பயனால் கிடைத்த வன், மற்றவருக்குக் கிடைப்பதற்கரியவன் என்பதை 'வாய்த்தவன்' என்பது குறிக்கிறது. வள்ளிக்கு அதிருஷ்டம் அடித்தது என்று சொல்வது போலச் சொல்கிறார்.

மாணிக்கம் நவரத்தினங்களில் தலைமையானது. இயல்பான ஒளியை உடையது. திண்மையானது. சிவப்பானது. பல அணிகளினிடையே கலந்து நின்றாலும் தனிச் சிறப்புடன் விளங்குவது. எப்போதும் விலை மதிப்புக் குறையாமல் இருப்பது. மன்னரின் முடிமேல் சிறந்து நிற்பது. குப்பையில் கிடந்தாலும் மதிப்புக் குன்றாதது. இத்தனை இயல்புகளையும் முருகனோடு சார்த்தி உவமையை விரித்துச் சொல்ல இடம் உண்டு.]

மெய்த்துணை

அஞ்சாமையும் அச்சமும்

கோழைகள் எதற்கும் அஞ்சுவார்கள், வீரர்கள் எதற்கும் அஞ்சமாட்டார்கள் என்று பொதுவாகச் சொல்கிறோம். ஆனால், வீரர்களும் அஞ்சுகின்ற நிகழ்ச்சிகள் உண்டு. அஞ்சுவதற்கு உரியனவற்றைக் கண்டு அஞ்சுவது ஒரு நல்ல இயல்பு.

"அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்"

என்று வள்ளுவர் சொல்வார். வாழ்க்கையில் எத்தனையோ துன்பங்கள் வருகின்றன. அந்தத் துன்பங்களைக் கண்டு நாம் அஞ்சுகிறோம். துன்பங்கள் பலவானாலும் ஒருவாறு பசி, பகை, பிணி என்ற மூன்றுக்குள் அடக்கலாம். பழங்காலத்தில் மக்களைக் காப்பாற்றிய அரசர்கள் பகையும், பசியும், பிணியும் தவிர்ந்து குடி மக்கள் நல்வாழ்வு பெறும்படி செய்தார்களாம். நாம் அஞ்சுவதற்குரிய பொல்லாதவர்கள் யாராக இருந்தாலும் அவரைப் பகை என்பதில் அடக்கிவிடலாம். உடம்புக்கு வருகின்றது நோய். வயிற்றுக்கு வருகிறது பசி. பகையையும் நோயையும் இல்லாமல் பண்ணினாலும் பசியை இல்லாமல் பண்ண முடியாது. உடம்பு ஆரோக்கியமாக இருப்பதற்குப் பசி அறிகுறி என்று நினைக்கிறோம். பசியைப் போக்குவதற்கு உணவைத் தேட வேண்டியிருக்கிறது. இப்படி மனிதன் அஞ்சுவதற்குரிய பல நிகழ்ச்சிகள் வாழ்நாளில் இருந்து கொண்டிருக்கின்றன. அஞ்சாமல் வாழ்வதற்குரிய வகை இந்த மனித பிறவியில் இருப்பதாகத் தெரியவில்லை

அஞ்சுவதற்குரியன வந்தாலும் அஞ்சாமல் இருக்கும் மன நிலை உள்ளவர்களும் இருக்கிறார்கள். பகையைக் கண்டு அஞ்சாமல், தம்முடைய வீர மிடுக்கைக் காட்டுவதற்கு ஏற்ற வாய்ப்பு இது என்று எண்ணிக் கொதித்து எழுகின்ற வீரர்கள் இருக்கிறார்கள். பிணியைக் கண்டு அஞ்சாமல், அதனைப் போக்குவதற்குரிய மருத்துவர்கள் இருக்கிறார்கள் என்ற தைரியத்தில் வாழ்கின்றவர்

களும் இருக்கிறார்கள். ஆகவே அச்சத்தைத் தருவனவற்றைக் கண்டு அஞ்சாமல் இருப்பதற்கு, அவற்றால் வரும் துன்பத்தைப் போக்கிக்கொள்ள முடியும் என்ற மன நிலையே காரணம். ஞானம் பெற்ற ஜீவன்முக்தர்கள் எதற்குமே அஞ்சமாட்டார்கள்.

''அஞ்சுவது யாதொன்றும் இல்லை; அஞ்ச வருவதும் இல்லை''

என்பது அப்பர் திருவாக்கு.

மரணம்

எல்லாருமே அஞ்சுவதற்குரிய நிகழ்ச்சி ஒன்று உண்டு. அது தான் மரணம். மரணத்திற்கு மிகப் பெரியவர்களும் அஞ்சுவார்கள் என்பதை முன்பே சில முறை பார்த்திருக்கிறோம். இறைவனுடைய திருவருளைப் பெற்றவர்கள் மிகத் திண்மையான நெஞ்சு பெறுவார்கள். கடைசி அச்சமாகிய மரண பயம்கூட அவர்களுக்குப் போய்விடும். காரணம், மரணத்தினால் தமக்கு விடுதலை வரும் என்ற உறுதிப்பாடு இருப்பதுதான். இந்த உடம்பை விட்ட பிறகு இறைவனுடைய திருவடியை அடையும்படி சம்பவிக்கின்ற மரணம் மரணம் அன்று. வேறு உடம்பில் புகுவதற்கு இப்போது மரணம் நேருமானால் அதுதான் அஞ்சுவதற்குரியது. அதைத்தான் மரணம் என்று சொல்ல வேண்டும். மெய்ஞ்ஞானிகள் தாம் பெறவேண்டியதைப் பெற்று இனிப் பிறவி எடுக்காத வகையில் நின்றால், அவர்களுக்கு இந்த உடம்பிலிருந்து பிரியும் மரணம் விடுதலைக்கு வாசலாக உதவுவது. அது மரணம் ஆகாது. அவ்வாறின்றி உலகத்தில் பற்றுக்களில் ஆழ்ந்து இந்த உடம்பை விடுவதற்கு மிகவும் வருந்தி இறந்து போகிறவர்கள் வேறு பிறவியை எடுக்கிறார்கள். அவர்களுடைய இறப்புத்தான் மரணம் ஆகும். இந்த வேறு பாட்டைப் பற்றியும் முன்பு பல முறை சிந்தித்திருக்கிறோம்.

அருணகிரிநாதர் மரணத்தைக் கண்டு அஞ்சாதவர். அவருடைய உறுதிப்பாட்டைப் பலபடியாகக் கந்தர் அலங்காரத்தில் சொல்வதிலிருந்து தெரிந்து கொண்டிருக்கிறோம். ''எமனுக்கு நான் அஞ்சமாட்டேன்'' என்று சொல்வார். ''எமனே, நான் உனக்கு அஞ்சமாட்டேன்'' என்று வேறு வகையில் சொல்வார். ''எமனே, என் முன்னாலே வா; உன்னை என்ன செய்கிறேன் பார்'' என்று

அறைகூவும் முறையிலும் சொல்வார். இப்படிச் சொல்கின்ற வருடைய உள்ளம் எவ்வளவு உறுதியானது! பயத்தைப் போக்க வேண்டுமானால் நாமும் தைரியத்தோடு இருக்க வேண்டும்.

அஞ்சாமைப் பயிற்சி

என்னுடைய சிறு வயதில் ஒரு பெரியவர் எனக்கு நல்ல உபதேசம் செய்து வந்தார். அவர் பய உணர்ச்சியைப் பற்றிச் சில யோசனைகளை எனக்குச் சொன்னார். ''பயம் தோன்றும் போதெல்லாம் அந்தப் பயத்திற்கு மூலகாரணமான பொருளை நீ தொலைத்துவிடுவதாகப் பாவனை பண்ணிக்கொள். அப்போது பயம் போய்விடும்'' என்று சொன்னார். அந்த உபதேசத்தைக் கேட்ட காலத்தில் எனக்குப் பதினைந்து பிராயம் இருக்கும். பூச்சாண்டி, பேய், பிசாசு என்று கேட்டுக் கேட்டுப் பயம் கொள்ளும் பருவம் அது. அந்தப் பெரியவர் செய்த உபதேசத்தினால் எனக்கு ஒரு துணிவு எழுந்தது. அவர் சொல்கிற முறையைப் பரீட்சை பண்ணிப் பார்க்கலாம் என்று எண்ணினேன். பிசாசு வருவதாகப் பயம் வந்தால் கையில் ஒரு வாள் இருப்பதாக எண்ணி, அந்த வாளை எடுத்து அதை வெட்டுவதாக நான் பாவனை செய்வேன். இந்தப் பழக்கத்தினால் தைரியம் எனக்குச் சிறிது உண்டாயிற்று.

எங்கள் ஊரில் ஆற்றங்கரையில் மயானம் இருக்கிறது, அங்கே இரண்டு மூன்று பனைமரங்கள் நிற்கும். ஊருக்குப் புறம்பான இடம் அது. என்னுடைய தைரியத்தைச் சோதிப்பதற்காகப் பாதி ராத்திரியில் எழுந்து ஆற்றங்கரைக்குச் செல்வேன். முதலில் பயம் குடலைக் குழப்பும். பின்பு அந்தப் பனைமரங்களைப் பார்க்கும்போது பிசாசுகள் நெடிய உருவம் எடுத்து வந்து நிற்பன போலத் தோன்றும். ''உன்னைத் தொலைத்து விடுகிறேன் பார்'' என்று வெளிப்படையாக உரக்கச் சொல்லிக் கொண்டு, கையில் கத்தி இருப்பது போல எண்ணி, ''இதோ வெட்டி விட்டேன்'' என்று சொல்வேன். இப்படிப் பயிற்சி பண்ணினதால் என்னுடைய மனசுக்குத் தைரியம் மிகுதியாயிற்று.

அருணகிரியார் செய்த உபகாரம்

பெரியவர்கள் காலனால் வருகின்ற அச்சத்தைப் போக்குவதற்குக் காலகாலனைப் பற்றிக் கொள்ள வேண்டும் என்று

சொன்னதோடு, காலனால் எந்தப் பயமும் உண்டாகாது என்பதை வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். இத்தகைய பாடல்களை நாம் பல முறை பாராயணம் பண்ணியும், மனனம் செய்தும் சொல்லி வந்தால் நமக்கு மரண பயம் ஒருவாறு நீங்கும். புலி அடிப்பதைவிடக் கிலி அடிப்பது அதிகம் என்பது பழமொழி. யமன் வருவதற்கு முன்னாலேயே அவனை எண்ணிச் சாவதில் பயன் இல்லை. இறைவன் திருவருள் நம்மைக் காப்பாற்றும் என்ற தைரியத்தோடு, எமனை அறைகூவி அழைக்கும் பாடல் களையும் பயின்று வந்தால் நம் மனம் திண்மை பெறும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆகவே அருணகிரிநாத சுவாமிகள் நமக்குத் தந்த பெரிய வரம் இத்தகைய பாடல்கள் என்பதை நினைவு கொள்ள வேண்டும். அநுபவத்தில், பலமுறை சொல்லிப் பார்த்தால் இதனைத் தெரிந்து கொள்ளலாம்.

மன இயல் அறிஞர் கருத்து

இதை எழுதிய போது 'ரீடர்ஸ் டைஜெஸ்ட்' என்ற பத்திரிகையில் உள்ள கட்டுரை ஒன்றைப் படிக்க நேர்ந்தது. பாவனையினால் நலம் பெறலாம் என்பதை ஒரு மன இயலறிஞர் அந்தக் கட்டுரையில் சொல்லியிருக்கிறார். 'நான் அறிந்த சிறந்த மருந்து' என்ற தலைப்பிட்டு அந்தக் கட்டுரையை எழுதியிருக் கிறார்.[1] அவர் ஐந்து விதமான மனப் பயிற்சிகளைச் சொல்கிறார். (1) உன்னுள் மறைந்திருக்கும் சக்தியை உண்மையாகக் கருதி நம்பிக்கை வை; (2) அதனிடம் புகலடைவதற்கு விருப்பங் கொள்; (3) பிரார்த்தனை செய்; (4) அமைதியும் மௌனமும் பயில்; (5) நன்மை உண்டாகும் என்று பாவனை செய் என்பன அந்த ஐந்தும். ஐந்தாவதை 'ஆட்டோ ஸஜ்ஜெஷன்' (Auto suggestion) என்று சொல்வார்கள். இதனால் நன்மை உண்டாகும் என்பதை உதாரணங்களால் அவர் விளக்குகிறார். ''ஒரு சமயம் ஒரு வியாபார நிலையத்தில் விற்பனைக் கலைஞராக இருந்த இருவர் நம்பிக்கையினால் நலம் பெற்றது எனக்குத் தெரியும். இயல்பாகவே அவர் சங்கோசப் பிராணி. ஆனால் அவர் நல்ல பாவனை செய்யும் பழக்கத்தினால் ஆச்சரியமான நன்மையைப்

1. 'The best prescription I know' by Dr. Smiley Blanton in Reader's Digest for October, 1963, p. 132

பெற்றார். ஏதாவது ஒரு விஷயத்தில் அவர் சம்பந்தப்பட்டால் அவர் தம்முடைய உச்சுவாச நிச்சுவாசத்தை நிதானமாகக் கவனிப்பார். ஒவ்வொரு தடவையும் வெளியில் மூச்சு விடும் போது கெடுதலான பகுதிகளை வெளியே தள்ளிவிடுவதாகப் பாவனை செய்வார்; அப்படியே நல்லவற்றை உள்ளே இழுத்துக் கொள்வதாக எண்ணுவார். 'நான் சங்கோசத்தை வெளியே தள்ளி விடுகிறேன்; நம்பிக்கையை உள்ளே வாங்குகிறேன்' என்று சொல்லிக் கொள்வார்; 'பயங்கொள்ளித் தனத்தைத் தள்ளி விடு கிறேன்; உறுதியை உள்வாங்குகிறேன். தோல்வியைத் தொலைத்து விடுகிறேன்; வெற்றியை உட்கொள்கிறேன்' என்று தாமே சொல்லிக் கொள்வார்.

''அவர் உள் இழுத்ததும் வெளியில் விட்டதும் வெறும் மூச்சுக் காற்றுத்தான். ஆனால் அவருடைய அடிமனம், பேர் மனம் எண்ணிய இந்த எண்ணங்களை ஏற்றுக் கொண்டு அவர் விரும்பிய பண்புகளை மலரச் செய்தது'' என்று எழுதுகிறார்.

நம்முடைய பெரியவர்கள் நமக்கு உறுதிப்பாடு உண்டா வதற்காகப் பாடிய பாடல்கள் இத்தகைய பயிற்சியைச் செய்ய உதவுகின்றன. இந்தக் காலத்து மன விஞ்ஞானிகள் மனத்தின் இயல்புகளை எவ்வளவு நுட்பமாகத் தெரிந்து கொண்டிருக் கிறார்களோ அதைவிட நுட்பமாகத் அநுபூதிமான்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். விஞ்ஞானிகள் உண்மைகளைப் புதிது புதிதாகக் கண்டுபிடித்துச் சொல்லும்போது, நம் முன்னோர்கள் கூறிய கருத்துக்களுக்கு அவை விளக்கங்களாக இருப்பதைக் காண்கிறோம்.

காலன்

கந்தர் அலங்காரத்தில் நூறு பாடல்கள் அமைந்த பெரு மாலைக்குக் குஞ்சம் போல ஆறு பாடல்கள் இருப்பதைப் பார்த் தோம். அந்த ஆறு பாடல்களில் கடைசிப் பாடலை இப்போது பார்க்கப் போகிறோம். நம்முடைய வாழ்வின் கடைசிக்குப் பயன்படும் பாடலாகவும் அது இருக்கிறது. யம பயத்தைப் போக்குவதற்கு அமைந்த அற்புதமான பாட்டு அது. முருகப் பெருமானுடைய திருவருள் துணை நமக்கு இருக்கும்போது யமனுக்கு ஏன் அஞ்ச வேண்டுமென்ற உணர்ச்சியைத் தருவது

அது. ''ஆறு மகவன் வேலும், அஞ்சேல் என்ற திருக்கரமும் எனக்கு மெய்த்துணை. ஆகவே நான் காலனுக்கும் அஞ்சமாட்டேன்'' என்று அருணகிரிநாதர் இந்தப் பாடலில் சொல்ல வருகிறார்.

பயத்திற்குக் காரணமான காலனை வருணிக்கிறார். அஞ்சுவதற்குரிய ஆயுதங்களும், உருவமும் அவனிடம் இருக்கின்றன. அவன் சூலத்தை ஏந்தி வருகிறான். கள்ளனுக்குப் பயந்து ஓடி ஒளித்துக் கொள்ளலாம். காவலனுக்கும் பயந்து ஓடி ஒளித்துக் கொள்ளலாம். ஆனால் யமனுக்குப் பயந்து ஓடி ஒளித்துக்கொள்ள முடியாது. காற்றுக்குள் நுட்பமாக நுழைந்தாலும் அவன் அங்கே வந்து சேருவான். இப்படி நம்மைத் தொடர்ந்து வருகின்ற காலனுக்குப் பயப்படாத நிலை இறைவனுடைய திருவருளால் தான் உண்டாகும். ''நான் காலனுக்கு அஞ்சமாட்டேன்'' என்று அருணகிரி நாதர் சொல்கிறார்.

சூலம் பிடித்து எமபாசம் சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன்தனக்கு ஒரு காலும் அஞ்சேன்.

முன்பும் சூலத்தையும், பாசத்தையும் அருணகிரிநாதர் நினைப் பூட்டியிருக்கிறார். சூலத்தினால் குத்தி, பாசத்தினால் இறுக்கிக் கட்டிக்கொண்டு போகிறானாம். இறந்து போகின்றவன் துடிதுடித்து வாயில் நுரை கொப்புளிக்க, கண் பிதுங்க அவஸ்தைப்படுவதைப் பார்த்து, எமன் சூலத்தால் குத்தி, கயிற்றினால் கழுத்தில் சுருக்குப் போட்டு இழுக்கிறான் என்ற உருவகம் உண்டாயிற்று என்று தோன்றுகிறது. எப்படியானாலும் மரணத்துக்கு மூலகாரணமாக உள்ள சக்தியைக் காலன் என்று சொன்னார்கள். அதற்குச் சிறிதும் அஞ்சாமல், திருவருளைத் துணையாகக் கொண்டவர்கள் இருப்பார்கள்.

அஞ்சாமைக்குக் காரணம்

அருணகிரி நாத சுவாமிகள் அந்தத் தைரியத்தைக் கொண்டவர். காலனுக்கு அஞ்சேன் என்று சொன்ன பிறகு அதற்குரிய காரணம் இன்னது என்று சொல்ல வருகிறார். மற்ற இடையூறுகள் வரும்போது உலகியல் உள்ளவற்றைத் துணையாகக் கொள்ள முயல்கிறோம். அவை எல்லாம் மெய்த் துணையாக இல்லாமல் பொய்த் துணையாக மாறிவிடுகின்றன. அப்படியின்றி, பெரிய துன்பமாகிய மரண பயத்தைப் போக்குவதற்கு மெய்யான துணை

எனக்கு இருக்கிறது என்று சொல்கிறார். முருகப்பெருமானுடைய வேலும், அஞ்சேல் என்ற திருக்கரமும் மெய்த்துணையாக உள்ளன வாம். சூலமும், பாசமும் ஆகிய இரண்டையும் கொண்டுவரும் காலனுக்கு எதிரே வேலும், திருக்கரமும் ஆகிய இரண்டும் உதவு கின்றனவாம்.

ஆலம் குடித்த பெருமான்

முருகனைப் பற்றிச் சொல்லும்போது அவன் சிவகுமாரன் என்று சொல்கிறார். யமனாவது ஒவ்வோர் உயிரையும் தனித் தனியே வேறு வேறு காலத்தில் கொண்டு போகிறான். அன்று ஒரு நாள் பாற்கடலில் ஒரு பெரிய யமன் போன்ற பொருள் எழுந்தது. அதுதான் ஆலகால விஷம். அமுதத்தை உண்டு சாவாமல் வாழலாம் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்த தேவர்களுக்கு முன் அவர்களின் உயிரை ஒருங்கே குடிக்கும் நஞ்சு எழுந்தது. முப்பத்து முக்கோடி தேவர்களின் உயிரையும் ஒருங்கே போக்கும் வகையில் அது எழுந்தது. அந்தச் சமயத்தில் அந்த நஞ்சைச் சிவபெருமான் எடுத்து விழுங்கிவிட்டான். முருகப் பெருமான் அவனுடைய குமாரன். அந்தக் குடும்பம் முழுவதுமே உயிரைக் கொள்ளை கொள்ளும் பொருள்களை விழுங்கும் பேராற்றல் உடையது என்பதை இப்படிக் குறிப்பிடுகிறார். சிவன் நஞ்சை விழுங்கினான்; முருகன் யமனையே விழுங்கிவிடுவான்.

அறுமுகவன்

'பாற்கடலில் அன்று எழுந்த விஷத்தைக் குடித்த சிவ பெருமானுடைய குமாரன் இத்தகைய துணிவை எனக்குத் தரு கிறான்' என்று அருணகிரியார் சொல்கிறார். 'அவன் ஆறுமுகம் உடையவன். எந்தப் பக்கத்திலிருந்து எனக்குத் துன்பம் வந்தா லும் அந்தப் பக்கத்திலிருந்து எதிர்த்து எனக்கு நலம் செய்கின்ற வன். நான்கு திசைகளும், மேல் கீழ் என்ற திசைகளும் சேர்ந்து எப்படித் துன்பம் வந்தாலும், அந்தத் திசையை நோக்கியுள்ள அவனது திருமுகம் எனக்கு வரும் துன்பத்தை நீக்கிவிடும்' என்று நினைக்கும்படியாக அறுமுகவன் என்று சொல்கிறார்.

கடல்மீது எழுந்த
ஆலம் குடித்த பெருமான் குமாரன், அறுமுகவன்

வேலும் கையும்

அவனுடைய கையில் இருப்பது வேல். அதை வீசிக் காலனைச் சங்காரம் பண்ணிவிடுவான். 'வேல் நான் பயப்படுவதற்குக் காரணமாகிய காலனைக் கொல்லும். கையோ எனக்கு அஞ்சேல் என்று அபயத்தைக் காட்டும்.' பயப்படாதே என்று வாயினால் மாத்திரம் சொல்லிவிட்டு நம்மைக் காப்பாற்றுவதற்குரிய காரியங்களைச் செய்யாமல் இருக்கும் வார்த்தை வீரர்களைப் போன்றவன் அல்ல அறுமுகவன். அவன் ஒருகையால் அஞ்சேல் என்று சொல்லிக் கொண்டே மற்றொரு கையில் எல்லாப் பயத்தையும் போக்குகின்ற வேலாயுதத்தை வைத்திருக்கிறான்.

"பயந்த தனி
வழிக்குத் துணைவடி வேலும்செங் கோடன் மயூரமுமே"

என்று நமக்கு உறுதுணையாக ஒரு பாடலில் வேலையும் சொல்லியிருக்கிறார். அந்த வேல் நமக்கு வரும் பயத்தைப் போக்கி, நெஞ்சில் தைரியத்தைத் தரும்.

அந்த வேல் காலனைக் குத்த வேண்டும் என்பதுகூட இல்லை. அதற்கு அவசியமே இராது. நம் உள்ளத்தில் அறு முகவனுடைய வேலும், அஞ்சேல் என்ற திருக்கரமும் தியானத்தில் இருக்குமானால் நம் பக்கத்தில் காலன் வரமாட்டான். அந்தத் துணை இருப்பதனால் காலனால் உண்டாகின்ற அச்சமே நமக்கு வராது. நோய்க்கு மருந்து உண்பது வேறு; நோய் வராமல் காப்பாற்றுவதற்குரிய உணவுகளை அருந்துவது வேறு. முன்னையது நோய் நீக்கம்; பின்னையது நோய் வராமல் பாதுகாத்தல். இங்கே சொல்வது பாதுகாப்பு. 'காலன் என்னைச் சாட வரும்போது, முன்பு சிவபெருமான் காலால் அவனை உதைத்ததுபோல, ஆண்டவன் வேலால் சங்காரம் பண்ணுவான்' என்று எண்ணிச் சொன்னது அன்று இது. 'வேலையும், திருக்கையையும் நம்பி இருக்கின்ற என் நிலை அறிந்து காலன் என் பக்கம் வரமாட்டான். ஆகவே அவனுக்கு அஞ்ச வேண்டியதில்லை' என்ற குறிப்பையே இது கொண்டிருக்கிறது.

நமக்கு அச்சம் வராமல் காப்பாற்றி, நெஞ்சைத் திண்மையுடையதாக ஆக்கி, மேலும் மேலும் ஆண்டவனிடத்தில் நம்பிக்கையும் அன்பும் உறுதியாக உண்டாகும்படி செய்வன முருகப்பெருமா

னுடைய வேலும், திருக்கையும். அவை இரண்டும் நம்முடைய நல்வாழ்வுக்கு வகை செய்கின்றவை. ஆறுமுகத்தையும் வேலாயுதத்தையும் அபயகரத்தையும் தியானம் பண்ணப் பண்ண நம் மனத்திலிருந்து அச்சம் போய்விடும். காலனுக்கும் நாம் அஞ்சாத திண்மை உண்டாகும்.

★

சூலம் பிடித்துஎம பாசம்
சுழற்றித் தொடர்ந்துவரும்
காலன் தனக்குஒரு காலும்அஞ்
சேன்,கடல் மீதுஎழுந்த
ஆலம் குடித்த பெருமான்
குமாரன் அறுமுகவன்
வேலும் திருக்கையும் உண்டே
நமக்குஒரு மெய்த்துணையே.

[சூலத்தை ஒரு கையில் பற்றிக்கொண்டு, உயிரை உடம்பினின்றும் பிரித்துக் கொண்டு போவதற்காக அதனைத் தொடர்ந்து வருகிற காலனுக்கு ஒரு சமயத்திலும் அஞ்சமாட்டேன்; பாற்கடலின்மீது தோன்றிய ஆலகால நஞ்சை விழுங்கி அமரர்களைக் காப்பாற்றிய சிவபிரானுடைய திருக்குமாரனும் ஆறுமுகமுடைய பெருமானுமாகிய முருகனுடைய வேலாயுதமும், அஞ்சேல் என்று குறிக்கும் திருக்கரமும் அஞ்சுகின்ற அடியார்களாகிய நமக்கு ஒப்பற்ற மெய்த்துணையாக இருக்கின்றன.

ஒருகாலும் என்றது மரணம் வருவதற்கு முன்பும், அது வரும் போதும் என்று கொள்வதற்குரியது. கடல் – பாற்கடல். ஆலம் – நஞ்சு. அஞ்சாமையைச் சொல்லும் பாடலாதலின் திருக்கை என்பதற்கு அபய கரம் என்று பொருள் கொள்ள வேண்டும். வேலும் அதைப் பிடித்த கரமும் என்று கூறுவது அத்துணைச் சிறப்பன்று. இறைவனோடு சார்த்தப் பெற்றிருக்கும் வேலாயுதமும், அதனருகில் உள்ள அபயகரமும் என்று பொருள் கொள்ளலாம். நமக்கு என்றது கருணையினால் முன்னிலை யாராகிய நம்மையும் உளப்படுத்திச் சொன்ன உளப்பாட்டுத் தன்மை பன்மை. ஒரு – ஒப்பற்ற. வேலும் திருக்கையுமாகிய மெய்த்துணை உண்டு என்றும் கூறலாம். ஆறுமுகத் திருக்கோலத்தில் ஒரு வலக்கரத்தில் வேலும், மற்றொரு வலக்கரத்தில் அபயமும் இருக்கும்; ஆதலின் அறுமுகவன் வேலும் திருக்கையும் உண்டே என்றார்.]

பயன்

வாக்கினால் வரும் குற்றம்

வாக்கினால் உண்டாகின்ற குற்றங்கள் நான்கு வகை என்று சொல்லும், நீதி நூல். பிறருடைய உள்ளம் புண்படும்படி பேசுவது, உண்மை அல்லாததைச் சொல்வது, பிறர் இல்லாதபோது அவருடைய குறையை மற்றவர்களிடம் எடுத்துச் சொல்வது, எந்தப் பயனும் இல்லாமல் வீண் வார்த்தைகளைப் பேசுவது என்ற இந்த நான்குமே அந்தக் குற்றங்கள். இவற்றை முறையே இன்னா சொல்லுதல், பொய் பேசுதல், குறளை கூறுதல், பயனில சொல்லல் என்று சொல்வார்கள். இந்த நான்கையும் ஒழித்து நாம் பேச வேண்டும். மனிதன் மற்ற உயிர்களுக்குக் கிடைக்காத வாக்கைப் பெற்றிருக்கிறான். அதனால்தான் மற்றப் பிராணிகள் வாய் இல்லாத பிராணிகளாக இருக்க, அவன் வாய் உள்ள பிராணியாக நிற்கிறான். அந்த வாயைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டுமானால் அவன் குற்றம் இல்லாமல் பேசவேண்டும்.

வாக்கின் பெருமை

உலகம் முழுவதும் உள்ள மனிதர்கள் தங்கள் தங்கள் கருத்தைப் பிறருக்கு மொழிகளால் தெரிவிக்கிறார்கள். சில விலங்கினங்கள் தம்முடைய ஒலியினால் தம் கருத்தைத் தெரிவிக்கிறது உண்டு. விலங்கைவிடப் பறவைகள் இன்னும் சிறப்பாகத் தெரிவிக்கும். ஆனாலும் நுட்பமான கருத்துக்களை விரிவாகச் சொல்லுகின்ற ஆற்றல் மனிதனுக்குத்தான் அமைந்திருக்கிறது. சொற்களைச் சொல்வதற்கு ஏற்ற உறுப்புகள் அவனிடம் பொருந்தி இருக்கின்றன. எழுத்தொலி உண்டாவதற்கு இன்றியமையாத கருவிகள் இன்னவை என்று இலக்கண நூல்கள் கூறுகின்றன. மார்பு, கழுத்து, மூக்கு, தலை ஆகிய நான்கு இடங்களிலும் தோன்றி எழுத்துக்கள் இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய

கருவிகளால் வெவ்வேறு ஒலியாக வருகின்றன. இவைகள் எல்லாம் சொல்லின் ஒலியைப் பொறுத்த அமைப்புகள்.

மனிதன் உள்ளத்தில் நினைந்ததைச் சொல்லிலே சொல்லும் ஆற்றல் பெற்றிருக்கிறான். இது மிக அருமையாக வந்த ஒன்று. அருமையாகக் கிடைத்ததை நல்ல பயன் உள்ள காரியத்தில் ஈடுபடுத்த வேண்டும். பொற்கிண்ணம் ஒருவனுக்குக் கிடைத்தால் அதைப் போற்றிப் பாதுகாத்து அதில் பாலும் சோறும் இட்டு உண்பான்; அல்லது உயர்ந்த விலைக்கு விற்பான். அப்படியின்றி ஒரு சிறு குழந்தையின் கையில் அதைக் கொடுத்தால் பக்கத்து வீட்டுப் பையனுடன் விளையாடும்போது கோபம் வந்தால் அந்தக் கிண்ணத்தைத் தூக்கி எறியும். ஆண்டவன் திருவருட் பெருமையை நான் நன்கு தெரிந்து கொள்ளவில்லையென்று புலப்படுத்த வந்த மணிவாசகப் பெருமான்.

"மழக் கையிலங்குபொற் கிண்ண மென்றலால்
அரியை என்றுனைக் கருது கின்றிலேன்"

என்று சொல்கிறார். நமக்குக் கிடைத்த வாக்கு அல்லது பேச்சைப் பொற்கிண்ணத்தைப் போல, மாணிக்கத்தைப் போலப் பாதுகாக்க வேண்டும். அவைகளையாவது பணம் கொடுத்தால் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் மனிதப் பிறவி வாய்த்தும் ஊமையாகப் போய்விட்டால் அவன் பேச்சைப் பெறுவது இயலாத காரியம். இனி அடுத்த பிறவியில் பெற்றால்தான். இவ்வாறு அருமையாகக் கிடைத்த பேச்சை மிகச் சிறந்த பயன் உடையதாகவும், புண்ணியம் தருவதாகவும் செய்ய வேண்டும்.

பெரியவர்கள் திருவாக்கு

தினந்தோறும் பேசுகின்ற பேச்சே இப்படி இருக்க வேண்டுமென்று ஆன்றோர்கள் போதித்திருக்கிறார்கள். பல காலத்திற்குப் நிற்கின்ற சொற்களைச் சொல்லுகின்ற பெரியவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் பேசியவற்றைத்தான் இன்றைக்கு உபதேசமாகவும், நல்லுரையாகவும் கொள்கிறோம். ஞானசம்பந்தர் முதலிய பெருமக்கள் திருவாக்காக இன்று கிடைத்திருப்பன திருமுறைகள். பெரியவர்கள் பாடிய பாடல்களை அவர்களுடைய திருவாக்கு என்று சொல்கிறோம். திருவாசகம், திருவாய்மொழி என்ற

நூற் பெயர்கள் திருவாக்கு என்ற பொருளையே உடையவை. மற்றப் பேச்சைவிட அவர்கள் பாடிய பாடல்கள் மிகச் சிறந்த அமைப்பை உடையனவாகும். பலகாலம் நிற்கும் தன்மை உடையனவாகவும், பல்லாயிரக் கணக்கான மக்களுக்குக் காலம் கடந்து, இடம் கடந்து பயன் தருவனவாகவும் இருக்கும்.

திருவாக்கின் பயன்

அந்தப் பயன் இன்னது என்று அநுபவித்தவர்கள்தாம் உணர்வார்கள். ஆனாலும் இதனால் இன்ன பயன் என்று தெரிந்து கொள்வதற்குச் சில குறிப்புகளை ஆசிரியர்களே அமைப்பார்கள். நூலுக்குப் பொதுப் பாயிரம் என்றும் சிறப்புப் பாயிரம் என்றும் இரண்டு வகை உண்டு. அவற்றில் சிறப்புப் பாயிரம் என்பது குறிப்பிட்ட நூலைப் பற்றிய செய்திகளைத் தருவது. அது சிறப்பான எட்டுக் கூறுகளைச் சொல்வது; சிறப்பில்லாத மூன்றையும் சொல்வது உண்டு என்று இலக்கண நூல்கள் கூறுகின்றன. ஆக்கியோன் பெயர், நூல் வந்த வழி, நூல் வழங்கும் எல்லை, நூலின் பெயர், நூல் அமைந்த யாப்பு, நூலில் உள்ள பொருள், நூலைக் கேட்கும் தகுதி உடையோர், நூலால் உண்டாகும் பயன் என்பவை எட்டுச் சிறப்பான கூறுகள். நூல் உண்டானதற்குக் காரணம், நூல் அரங்கேற்றிய இடம், நூலின் காலம் என்பன சிறப்பு இல்லாதவை. சிறப்பான எட்டுக் கூறுகளில் கடைசியாக வைத்திருப்பது பயன். பொதுவாக எல்லா நூல்களுக்கும் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கையும் பெறுதல் பயன் என்று சொல்வார்கள். ஆனாலும் அந்தப் பயனுக்குவகையான சில பயன்கள் உண்டு. சட்ட நூலைக் கற்றவனுக்கு சட்ட அறிவு பெறுவது பயன். இசை நூலைக் கற்றவனுக்கு இசை பற்றிய அறிவு உண்டாவது பயன். அதுபோல் இறைவனுடைய துதி நூல்களைப் படிக்கின்றவர்களுக்குப் பக்தி உண்டாதல் பயன்.

இப்படி அந்த அந்த நூல்களுக்கு ஏற்ற பயன்கள் உண்டு. பாடம் சொல்பவர்கள் அவற்றைப் புலப்படுத்துவார்கள். நூலுக்குரிய பயன் இன்னது என்று அந்த நூலை இயற்றிய ஆசிரியரே சொல்வதும் உண்டு. இதனை வடமொழியில் பலசுருதி என்று சொல்வார்கள். கம்பராமாயணத்தின் பயனைச் சொல்ல வந்த கம்பர்,

''நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலைஇ ராமன் தோள்வலி கூறு வோர்க்கே''

என்று சொன்னார். தேவாரத்தில் ஞானசம்பந்தரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும் ஒவ்வொரு பதிகத்தின் இறுதியிலும், இந்தப் பதிகத்தைப் பாடினால் இன்ன பயன் உண்டாகும் என்று சொல்லியிருக்கிறார்கள். முதல் திருப்பதிகத்தில்,

''ஒருநெறியமனம் வைத்துணர் ஞானசம் பந்தன் உரைசெய்த
திருநெறியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்தல் எளிதாமே''

என்று பயனைச் சொல்கிறார் ஞானசம்பந்தர். ஒவ்வொரு பதிகத்தின் கடைசியிலும் உள்ள பயனைத் திருக்கடைக் காப்பு என்று சொல்வது வழக்கம். எல்லா நூல்களிலும் வெளிப் படையாகப் பயனைச் சொல்லாவிட்டாலும் அது குறிப்பாகப் பெறப்படும்.

அலங்காரத்தின் பயன்

அருணகிரிநாத சுவாமிகள் கந்தர் அலங்காரம் என்ற ஓர் அரிய மாணிக்க மாலையை நமக்குத் தந்தார். காப்புப் பாடல் ஒன்றும், நூலில் உள்ள பாடல் நூறும், பொங்கி வழிந்த பாடல் கள் ஆறும் ஆகிய நூற்றேழு பாடல்களை நாம் பார்த்தோம். இனி ஒரு பாடல் எஞ்சி நிற்கிறது. அதுவும் சேர்ந்தால் அழகான ஜப மாலையில் 108 ருத்திராட்ச மணிகள் அமைந்ததுபோல 108 பாடல்கள் அமைந்திருப்பதைக் காணலாம். இப்போது பார்க்கப் போகிற பாடல் கந்தர் அலங்காரத்தின் பயனாக உள்ளது.

கந்தர் அலங்காரத்தைப் படிப்பதனால் நமக்கு உண்டாகும் பயன் முருகப்பெருமானிடத்தில் பக்தி உண்டாகி உள்ளம் நெகிழ் வது, உள்ளத்தில் உள்ள தளர்ச்சி போய் உறுதிப்பாடு உண்டாதல், தமிழ் இன்பம் நுகர்தல் முதலியன என்று சொல்லலாம். இவற்றுக்கும் மேலே அருணகிரியார் வேறு சில பயன்களைச் சொல்கிறார். ''கந்தர் அலங்காரம் முழுவதும் படிக்க வேண்டும் என்பதில்லை. இந்த நூறு பாடல்களில் ஒரு பாட்டைப் படித் தாலே இன்ன இன்ன பயன் உண்டாகும்'' என்ற முறையில் இந்தப் பாட்டை அமைக்கிறார்.

மூன்று வகைப் பயன்

கந்தர் அலங்காரத்தைப் பாடியதற்கு மூன்று வகையான பயனைச் சொல்லலாம். ஒரு பயன் பாடியவரைச் சார்வது; மற் றொன்று பாட்டுடைத் தலைவனுக்குக் கிடைப்பது; பின்னும் ஒரு பயன் படிப்பவரைச் சார்வது. அரசர்களையும், பிறர் தலைவர் களையும் புகழ்ந்து பாடினால் பாடிய புலவனுக்கு ஊதியம் கிடைக்கும். பாடப்பெற்ற தலைவருக்குப் புகழ் கிடைக்கும். அதனைப் படிக்கிறவர்களுக்குத் தமிழ் இன்பம் கிடைக்கும்.

இங்கே கந்தர் அலங்காரத்தைப் பெற்றவன் முருகன். அவனுக்கு இந்த அலங்காரத்தால் ஏதேனும் பயன் உண்டா என்றால், அப்படி ஒன்றும் இருப்பதாகத் தோன்றவில்லை. அநாதி காலம் முதல் வேதம் முதலிய நூல்கள் எல்லாம் அவனுடைய புகழைச் சொல்கின்றன. அப்படிச் சொல்வதனால் அவனுடைய புகழ் புதிதாக விரியவில்லை. சொல்லாமல்விட்டால் அவன் புகழ் குறைந்து போவதும் இல்லை. முருகனைப் பற்றிய எண்ணம் பல மனிதர்களுக்கு உண்டாவதனால் முருகனுக்கு லாபம் எதுவும் இல்லை. அந்த மக்களுக்குத்தான் லாபம் உண்டு. ஆகவே பாட்டுடைத் தலைவனாகிய முருகனுக்குக் கந்தர் அலங் காரத்தால் பெரிய பயன் ஒன்றும் இல்லையென்றே சொல்லலாம்.

இந்த அற்புதமான நூலை இயற்றிய அருணகிரிநாதருக்கு ஏதேனும் பயன் உண்டா என்பதைப் பார்க்கலாம். அருணகிரி நாதர் இந்தப் பாடலைப் பாடி அதனால் முருகப் பெருமானுடைய திருவருளைப் பெற்றிருக்கலாம். ஆனாலும் பாடல் பாடாமலே அந்தப் பிரானுடைய திருவருளைப் பெறும் தகுதி அவருக்கு உண்டு. இந்தப் பாட்டைப் பாடினார் என்ற புகழ் அவருக்கு உண் டாவது ஒருவகை லாபந்தான். ஆனால் அதை அவர் எதிர் பார்க்கவில்லை. கந்தர் அலங்காரம் பாடின தன் முக்கியமான நோக்கம் தமக்குப் புகழ் வரவேண்டும் என்பது அன்று. அவர் புகழாசைக்கும் மேற்போனவர்.

நமக்குப் பயன்

கந்தர் அலங்காரம் பாடியதன் உண்மையான பயன் படிக் கின்ற நமக்குக் கிடைக்கும் நன்மைதான். வாயில்லாப் பூச்சி

களான மக்கள் இறைவனைத் தெரிந்து கொள்வதற்கும், தம் முடைய குறைகளைத் தெரிந்து கொள்வதற்கும் உரிய வல்லமை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்குத் தங்கள் குறைகளை எம்பெருமானிடம் எடுத்துச் சொல்வதற்குரிய ஆற்றல் இல்லை. ஆகவே இறைவனுடைய பெருமையை உணர்த்தி, மக்களுடைய குறைகளையும் எடுத்துச் சொல்லி, அவனிடத்தில் எப்படி அணுகி விண்ணப்பம் செய்வது என்பதையும் காட்டவேண்டுமென்ற நோக்கத் தில் பெருங்கருணை வள்ளலாகிய அருணகிரிநாதப் பெருமான் இந்த நூலை இயற்றினார். தம்முடைய உள்ளத்தில் கந்தப்பிரா னால் கிடைத்த இன்ப உணர்ச்சி பொங்கிவர, பரந்து நின்ற தம் அறிவு துணை செய்ய, இதைப் பாடினார் என்று சொல்லலாம். ஆனால் அதைவிட மக்களிடத்தில் உள்ள பெருங்கருணையினால் சொன்னார் என்பதே பொருத்தம். ஆகையால் இந்த நூலைப் பாடியதால் வரும் பயன் இன்னது என்பதைச் சொல்ல வந்தவர் முருகப் பெருமான் அடையும் புகழ் என்றோ, நான் இறை வனுடைய அருள் அநுபவம் பெற்றது என்றோ சொல்லவில்லை. இதனைப் படிக்கின்றவர்கள் இன்ன பயனைப் பெறுவார்கள் என்றே சொல்கிறார்.

அருணகிரியார் கால நிலை

அருணகிரியார் வாழ்ந்த காலத்தில் தமிழ் நாட்டில் முடி யுடைய மூவேந்தர்கள் ஆட்சி இல்லை. அவருடைய காலமாகிய பதினைந்தாவது நூற்றாண்டில் எங்கே பார்த்தாலும் சிற்றரசர்கள் வாழ்ந்தார்கள். சின்னச்சின்னத் தலைவர்கள் மகாராஜா என்ற பட்டம் போட்டுக் கொண்டு தம் ஆணையைச் செலுத்தி வாழ்ந் தார்கள். செல்வத்தால் உண்டாகும் போகங்களை அநுபவித்து இந்திரியங்களின் பசியைத் தீர்க்கவேண்டுமென்று அவர்கள் எண்ணியிருந்தார்கள். புகழுக்கு ஆசைப்பட்டார்கள். அதுகாரண மாகப் புலவர்கள் அவர்களை நச்சிப் பாடி இன்புற்றார்கள். இறைவனைப் பாடாமல் மனிதனைப் பாடும் துறையில் ஈடுபட் டிருந்தார்கள். பார காவியங்களைப் பாடும் ஆற்றல் இல்லாமல் சின்னச்சின்னப் பிரபந்தங்களைப் பாடிக் கொண்டிருந்தார்கள். பணம் பெருத்த இடத்தில் திருவருள் இல்லாவிட்டால் மற்றக் குறைபாடுகள் எல்லாம் தாமே வந்து சேரும். செல்வத்தைப் புலன் நுகர்ச்சியிலே செலவிடுவார்கள். ஆகவே, அரசர்கள் நீதி

முறைகளை மறந்து தம்முடைய ஆணையைப் பெருக்கினார்கள். தம்முடைய குடும்பத்தினர் சுகமாக இருக்க விரும்பினார்கள். நீதியை மறந்து, ஒழுக்கத்தை மறந்து எத்தனையோ தவறுகளைச் செய்தார்கள்.

வேந்தரால் வரும் அச்சம்

குடிமக்களுக்குப் பிறரால் வருகின்ற அச்சத்தைப் போக்குவது அரசர் கடமை. தம்மாலும், தம்முடைய உறவினர் களாலும், அதிகாரிகளாலும், விலங்குகளாலும், திருடர்களாலும், பகைவர் களாலும் வரும் பயத்தைப் போக்கிச் சமாதானத்தை நிலைநிறுத்த வேண்டும். அப்படி இல்லாமல் கொடுங்கோல் மன்னர்கள் தம்மைக் கண்டு எல்லோரும் அஞ்சும்படி செய்வார்கள். அதுமட்டுமன்று, சிற்றரசர்கள் அங்கங்கே வாழ்ந்து கொண்டிருந்தால் எப்போது பார்த்தாலும் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொண்டே இருப்பார்கள். ஒருவரைக் கண்டால் மற்றொருவருக்குப் பொறாமை. ஒரு நாட்டில் நடைபெறும் சண்டையினால் அந்த நாட்டிலுள்ள மக்களுக்கும் துன்பம் உண்டாகும். போர் நிகழும் காலத்தில் மக்களுடைய வாழ்வில் பலவகையான அவலங்கள் உண்டாவதை நாம் அநுபவத்தில் உணருகிறோம். ஒரு காரணமும் இல்லாமல் தங்களுடைய சொந்த நலனை எண்ணி அரசர்கள் பிற அரசர்களோடு போரிட்டுக் கொண்ட காலம் அது. எந்தச் சமயத்தில் எந்த மன்னன் எந்த மன்னனை அடிப்பானோ, எப்போது போர் வந்துவிடுமோ என்று மக்கள் அஞ்சி இருந்தார்கள். மன்னருக்கும் மன்னருக்கும் ஒற்றுமை வளரவில்லை. அவர்களுக்குள் எப்போதும் காழ்ப்பும், பொறாமையும் வளர்ந்து கொண்டே வந்தன. அதனால் அவர்கள் துன்பப்பட்டதோடு அல்லாமல் அவர்களுடைய ஆட்சிக்குக் கீழ் அடங்கிய மக்களும் துன்பப் படும்படி செய்தார்கள். வாழ்க்கை முழுவதுமே இத்தகைய பயத்தை வைத்துக் கொண்டு மக்கள் வாழ்ந்தார்கள். ஆகவே, குடிமக்களுடைய உள்ளத்தில் இருந்த அச்சங்களுள் பெரிய அச்சம் வேந்தருக்கு அஞ்சும் அச்சம். அத்தகைய அச்சத்தைக் கந்தர் அலங்காரம் படிக்கிறவர்கள் போக்கிவிடுவார்களாம். முதலில் இந்தப் பயனைச் சொல்கிறார் அருணகிரியார். 'தமக்குள்ளே கோபித்து பொருகின்ற வேந்தர்களுக்கும் அஞ்சமாட்டார்கள்' என்று தொடங்குகிறார்.

சலம் காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார்.

இறைவனுடைய திருவருளை நம்பி அவனைத் துதித்து வாழ் கின்றவர்களுக்கு உள்ளம் சாந்தி பெற்றிருக்கும் ஆதலின் அவர் களுக்கு இத்தகைய அச்சம் இராது.

மரண பயம்

இனி அடுத்தபடி, இம்மையின் முடிவாகிய நிலைக்கு வருகிறார். இந்த வாழ்வின் முடிவில்தான் நமக்கு மரணம் வரு கிறது. அதைப்பற்றித்தான் சென்ற பாட்டில் பார்த்தோம். கையில் ஆயுதங்களை ஏந்தியபடி எருமை மாட்டு வாகனத்தில் ஏறிக் கொண்டு நம்மோடு சண்டையிட வருபவனைப் போல எமன் வருகிறான். சண்டையிடும்போதுதான் ஆயுதங்களைப் பிடிப்பது வழக்கம். அவன் ஆயுதங்களைத் தூக்கி எறிந்துவிட்டு வந்தாலும் நாம் எதிர்க்கப் போவதில்லை. ஆனால் அவனோ சண்டைக்கு வருபவனைப் போலத்தான் வருகிறான். கந்தர் அலங்கார நூலைக் கற்றவர்கள் அருணகிரிநாத சுவாமிகளின் அற்புதமான பாட்டின் சிறப்பினால் எமனுக்கும் அஞ்சமாட்டார்கள்.

யமன் சண்டைக்கு அஞ்சார்

இம்மையின் இறுதியில் உண்டாகும் அச்சம் இது.

நரகத் துன்பம்

அடுத்தபடி மறுமையில் உண்டாகும் அச்சத்தைச் சொல்ல வருகிறார். இம்மை, மறுமை, வீடு என்று மூன்றைச் சொல்வார் கள். இம்மை என்பது இகவாழ்வு. மறுமை என்பது சொர்க்க நரக வாழ்வு. வீடு என்பது எல்லாவற்றையும் கடந்த, என்றைக்கும் மாறாத இன்ப வாழ்வு. மறுமையாகிய சொர்க்கமும் நரகமும் முறையே புண்ணியத்தாலும் பாவத்தினாலும் கிடைப்பன. சொர்க்க மாக இருந்தால் நமக்கு அச்சம் இல்லை. ஆனால் நரகமாயின் அச்சம் உண்டாகும். இந்த உடம்பை விட்டுச் சென்றால் எந்த நரகத்திற்குப் போவோமோ என்ற கவலை அலங்காரம் படிப்பவர் களுக்கு இல்லையாம். நரகத்தைக் குழி என்று சொல்வார்கள் அது தனக்குள் வீழ்ந்த ஆருயிர்களை அமிழ்த்தித் துன்புறுத் வதனால் அப்படிச் சொன்னார்கள். அது ஒரே இருளாக இருக்கு

நரகத்திற்கு இருள் என்றும் ஒரு பெயர் உண்டு. சொர்க்கமோ ஒளி மயமாக இருக்கும். சொர்க்க போகத்தை நுகர்பவர்கள் தேவர்கள். சொர்க்க லோகத்துக் குடிமக்களாகிய அவர்கள் ஒளிபடைத்த திருமேனியை உடையவர்கள். தேவர் என்ற சொல்லுக்கே ஒளி படைத்தவர் என்பது பொருள். சொர்க்கம் என்பது விளக்கத்தோடு இருக்கும். அங்கே இருளே இல்லை. அங்கு இருக்கும் தேவர்கள் இமைப்பது இல்லை; தூங்குவதும் இல்லை. ஆனால் நரகமோ அதற்கு நேர்மாறாக இருப்பது. அங்கே வெளிச்சமே இல்லை. இருள் மண்டிக் கிடக்கும். பள்ளங்கள் நிறைந்தது. எப்போதும் அழுகையும் துயரமும் இருட்டும் நிறைந்த இடம் அது. தண்டனையை அநுபவிக்கின்ற பெரிய நாடு அது. அது என்றைக்கும் துலங்காது. அத்தகைய குழிக்குப் பக்கத்திலேகூடப் போக மாட்டார்கள் அன்பர்கள்.

"நரகத்தில் இடர்ப்படோம்"

என்று அப்பர் சுவாமிகள் சொல்வார்

இந்த உலகத்தில் பல வகையான குற்றங்களைச் செய்து பாவத்தை ஈட்டியவர்களுக்குத்தான் நரகக்குழிக்குப் போகும் நிலை உண்டாகும். முருகப்பெருமானுடைய திருவருளால் தம் முடைய மனத்தை அமைதி பெறச் செய்து எண்ணங்களில் நன்மையும், உரையில் நேர்மையும், செயல்களில் தீங்கு இல்லாத் தன்மையும் பெற்றவர்களுக்கு இம்மை கடந்த மறுமையில் துன்பமே இல்லை. கந்தர் அலங்காரத்தைப் படிப்பவர்கள், அந்த வகையில் பயிற்சி பெறுவதால் அவர்களுக்கு இம்மை மாறி மறுமை வரும் போது நரகக் குழிக்குச் சென்று துன்புறுதல் இல்லை.

துலங்கா நரகக்குழி அணுகார்

இம்மையில் உள்ள பெரிய அச்சத்தையும், இம்மையின் இறுதியில் உள்ள மரண அச்சத்தையும் போக்கும் கந்தர் அலங் காரம் என்றார்.

நோயால் வரும் துன்பம்

இனி, இந்த வாழ்வில் எத்தனையோ துன்பங்கள் நமக்கு கின்றன. அவற்றை ஆதியாத்மிகம், ஆதி தெய்விகம், ஆதி

பௌதிகம் என்று சொல்வார்கள். தாபத்திரயம் என்று சொல்லுவதும் அவையே. பிற உயிர்களால் வரும் துன்பம் ஆதியாத்மிகம். உயிர் இல்லாத பொருள்களால் வருவது ஆதி பௌதிகம். இயற்கையாக வருவது ஆதி தெய்விகம். இந்தத் தாபத்திரயங்கள் இந்த உலக வாழ்வில் நம்மை அணுகா. முருகப்பெருமானுடைய திருவருள் கிடைக்குமானால் தாபத்திரயம் இல்லாத இகலோக வாழ்வு நமக்கு உண்டாகும். அந்த அருளைப் பெறுவதற்குரிய சாவியாக இருப்பது கந்தர் அலங்காரம். இந்த உடம்போடு இருக்கும்போது முக்கியமாக நமக்கு வேண்டியவைகள் செல்வம், நோய் அற்ற வாழ்வு.

''மதிவேண்டும், நின்கருணை நிதிவேண்டும், நோயற்ற
வாழ்வில் நான் வாழவேண்டும்''

என்று இராமலிங்க வள்ளலார் கந்தகோட்டத்து முருகனை வேண்டுவார். அருணகிரி நாதப்பெருமான் திருப்புகழில்,

''தருணமிதையாமிகுத்த கனமதுறு நீள்சவுக்கிய
சகல செல்வ யோகமிக்க பெருவாழ்வு''

வேண்டும் என்று சொல்கிறார். மனிதன் பெறுகின்ற பேறுகளில் நோய் அற்ற வாழ்வே தலை சிறந்தது. ஆகையினால் நோயினால் வருகின்ற அச்சம் கந்தர் அலங்காரத்தைப் பாராயணம் செய்கின்ற வர்களுக்கு வராது என்று அடுத்தபடி சொல்கிறார்.

துட்ட நோய் அணுகார்.

நோயில் எளிதில் தீருகின்ற நோய் உண்டு; தீராத வியாதியும் உண்டு. அசாத்திய ரோகம் என்று சொல்வன அவை. அவற்றையே 'துட்ட நோய்' என்று சொன்னார்.

விலங்கின் அச்சம்

பிற மனிதர்களால் வரும் துன்பம் இராது என்று சொல்வதற்கு, வேந்தரால் வரும் துன்பம் இராது என்று சொல்லி விட்டார். ஆகவே தனியாக வேறு மனிதர்களைச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. வேந்தர் என்றாலும் உபலட்சணத்தால் எல்லா வகையான மனிதர்களையும் கொள்ளலாம். விலங்கினங்களால் வரும் துன்பம் இல்லை என்பதை அடுத்தபடி சொல்ல

வருகிறார். காட்டில் வாழ்கின்ற விலங்கினங்களால்தான் மனிதர் களுக்குத் துன்பம் உண்டாகும். புலி, கரடி, யானை என்பவை மனிதனைத் துன்புறுத்தும் விலங்கினங்கள். கந்தர் அலங்காரத்தைத் தெரிந்து கொண்டவர்களுக்கு அந்த விலங்கினங்களாலும் துன்பம் இல்லையாம்.

கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும்

தமிழ் நாட்டில் சிங்கம் அதிகமாக இல்லையாதலால் அதைச் சொல்லாமல் புலி, கரடி, யானை என்று சொன்னார்.

கற்று அறிந்தவர்

இந்தப் பயனைப் பெறுகின்றவர்கள் யார்? கந்தர் அலங்காரத்தைப் படித்து, அதில் உள்ள செய்யுட்களை நன்றாக உணர்ந்து, அருணகிரியார் காட்டும் சாதனங்களைப் பயின்று, மனத்தை அடக்கி, பின்பு இறைவனுடைய திருவருளைப் பெற்ற வருக்கே இந்தப் பயன் வரும் என்று சொல்லவில்லை. அலங்கார நூற் கவிகளில் ஒன்றையாவது நன்கு கற்று அறிந்தவருக்குக்கூட இந்தப் பயன் உண்டாகும் என்று சொல்கிறார்.

கந்தன் நன்னூல், அலங்காரம் நூற்றுள் ஒரு கவிதான்
கற்று அறிந்தவரே.

கந்தனுடைய அலங்காரம், நல்ல நூலாகிய அலங்காரம். கந்தனைச் சொல்லாலே அழகு படுத்தும் நூலுக்குக் கந்தர் அலங்காரம் என்ற பெயர் வந்தது. இது நல்ல பயனைத் தரும். ஆதலால் நல்ல நூல் ஆயிற்று. இங்கே நூல் என்பது பனுவல் என்ற பொருளில் வந்தது. பழங்காலத்தில் நூல் என்பது இலக்கணம் ஒன்றுக்குத் தான் பெயராக இருந்தது. பிற்காலத்தில் எல்லா வகையான பனு வல்களுக்கும் வந்தது. அருணகிரியார் காலத்திலேயே நூல் என்ற பெயர் இலக்கண இலக்கியங்கள் எல்லாவற்றையுமே குறித்தத னால், இந்தப் பிரபந்தத்தை நூல் என்று சொன்னார்.

நன்னூல் என்று தம்முடைய நூலைத் தாமே சொல்லலாமா என்ற கேள்வி எழும். முருகப்பெருமானுடைய புகழைச் சொல் வதனால் இது நல்ல நூல் என்பதில் ஐயம் இல்லை. கங்கையில் உள்ள தண்ணீரை ஒரு மன்னன் தங்கக் கிண்ணத்தில் எடுத்து வருகிறான். வேறு ஒரு செல்வன் வெள்ளிக் கிண்ணத்தில் எடுத்து

வருகிறான். பின்னும் ஒரு வியாபாரி வெண்கலக் கிண்ணத்தில் எடுக்கிறான். ஓர் ஏழை மண் சட்டியில் எடுத்து வருகிறான். எடுக்கின்ற பாத்திரங்கள் வெவ்வேறாக இருந்தாலும் தூயனவாக இருந்தால் எடுத்துவரும் கங்கை எல்லாவற்றிலும் ஒன்றுதான். அதுபோல் பாடுபவர்களுடைய நிலை எப்படி இருந்தாலும் தூய்மையான மனத்தோடு பாடினால் கந்தப்பிரானுடைய புகழ் எப்போதும் நன்மையையே தரும். ஆகையால்,

கந்தன் நன்னூல் அலங்காரம்

என்று சொன்னார். தாம் பாடியதனால் நல்ல நூல் என்ற எண்ணத்தில் சொல்லவில்லை; கந்தனுக்கு அலங்காரமாக இருப்பதால் இது நல்ல நூல் ஆயிற்று என்று சொன்னார். இதனை நூறு என்ற வரையறையுடன் பாடினார். ஆகையால்,

நூற்றுள் ஒரு கவிதான் கற்று அறிந்தவரே

என்று பாராயணம் செய்பவருடைய முறையைச் சொல்கிறார். கற்றல் வேறு, ஓதுதல் வேறு, படித்தல் வேறு. ஒரு முறை படிப்பது படித்தல். பலமுறை படித்தல், ஓதுதல். பொருள் தெரிந்து படித்தல், கற்றல். பொருளில் உள்ள கருத்தை நன்கு உணர்ந்து, அதனைப் பிறருக்கும் சொல்கின்ற ஆற்றல் பெற்று, அதன்படி ஒழுகுகின்றவர்கள் அறிந்தவர்கள். இங்கே அறிந்தவர் என்பது ஓதி உணர்ந்தவர் என்றே பொருள் செய்வதற்குரியது. சர்க்கரையைப் பற்றித் தெரிந்து கொள்வது வேறு; அதன் சுவையை உணர்ந்து கொள்வது வேறு. அந்த வகையில் ஒரு கவியையாவது பலகாலம் படித்து அதன் பொருளை எல்லாம் நன்கு தெரிந்து, உள்ளத்தில் பதித்துத் தெளிந்து, பிறரையும் தெளிவிக்கும் ஆற்றல் பெற்று, அதனால் பெறக்கூடிய ஒழுக்கத்தில் நின்று பயன் பெறுவதையே கற்று அறிதல் என்று இங்கே சுருக்கமாகச் சொல்கிறார்.

ஒரு கவி

ஒரு பாட்டைக் கற்ற மாத்திரத்தில் இத்தகைய நற்பயன்கள் எல்லாம் எப்படிக் கிடைக்கும்? மனிதர்களுடைய வாழ்க்கையில் ஏதாவது ஒரு நல்ல குணத்தை மேற்கொண்டாலேயே மற்ற நல்ல குணங்கள் எல்லாம் அதனோடு சாரும் என்று பெரியவர்கள் சொல்வார்கள். மெய்யையே பேசிய அரிச்சந்திரனுக்குப் பிற

குணங்கள் எல்லாம் தாமே வந்து அமைந்தன. அகிம்சையை மேற்கொண்ட காந்தியடிகளுக்கு மற்றக் குணங்கள் எல்லாம் நிரம்பி இருந்தன.

''கொல்லாமை எத்தனை குணக்கேட்டை நீக்கும்''

என்று தாயுமானவர் சொல்கிறார். அருணகிரிநாதப் பெருமான் உலகத்தார் உய்யும்பொருட்டுப் பாடிய கந்தர் அலங்காரத்தில் ஒவ்வொரு பாட்டும் சிறந்த கருத்தைக் கொண்டது. மனிதர் களுடைய குற்றங்களை எடுத்துச் சொல்லி, இன்ன வகையில் அவற்றினின்றும் நீங்கி வாழ வேண்டுமென்பதைப் பல பாடல் கள் சொல்கின்றன. முருகப்பெருமானுடைய பெருமையைக் காட்டி அவனுடைய கருணைக்கு ஆளாகவேண்டுமென்ற எண்ணம் உண்டாகும்படி சில பாடல்கள் சொல்கின்றன. எந்தப் பாட்டைப் படித்தாலும் அந்தப் பாட்டில் நடுமணியாக ஒரு கருத்து இருப் பதைக் காணலாம். அந்தக் கருத்தையே நம்முடைய வாழ்நாளில் குறிக்கோளாகக் கொண்டு ஒழுகி வந்தோமானால் அது காரண மாக மற்றப் பண்புகளும் தாமே வந்து அமையும். ஆகையால் ஒன்று கற்றாலும் நன்கு கற்க வேண்டுமென்ற கருத்தோடு இப்படிச் சொல்கிறார்.

ஒரு கவி கற்றாலே போதும், மற்றவை வேண்டாம் என்பது இதன் பொருள் அல்ல. மிகப் பசித்தவன் தனக்குச் சோறு வேண்டுமென்று கேட்கிறான். ''ஐயோ, ஒரு கவளம் தாருங்கள்'' என்று சொல்கிறான். அளவு குறிப்பிட்டு அவன் சொன்னாலும் ஒரு கவளம் மட்டும் போதும் என்பது அவன் கருத்து அன்று. வயிறு நிறையச் சோறு போடுகிறேன் என்றால் அவன் மறுப் பானா? அப்படி ஒரு பாட்டுக்கே இத்தனை பயன் இருக்கும் போது நூறு பாடல்களையும் படிக்கிறவர்கள் பெரும் பயன் அடைவார்கள் என்பது சொல்லாமலே விளங்கும்.

முடிந்த பயன்

அந்தப் பெரும் பயன் என்ன? இந்தப் பாடலில் இம்மை வாழ்வில் குறைகள் நீங்கும் என்றும், எம பயம் நீங்கும் என்றும், மறுமை வாழ்வில் நரகம் அணுகாது என்றும் சொன்னார். ஆனால் அதற்கு மேற்பட்ட பெரும் பயனும் ஒன்று உண்டு. அதுதான் வீடு அடைதல். இந்தப் பாட்டில் அந்தப் பயனைச் சொல்லவில்லை.

இந்தப் பாட்டின் அமைப்புத் தனி முறையில் அமைந் திருக்கிறது. பயன் என்பது இது கிடைக்கும் என்று சொல்வது. ஆனால் இவை வாரா என்று அருணகிரியார் சொல்கிறார். குற்றம் நீங்கும், குணம் சாரும் என்று இரண்டையும் சேர்த்துச் சொல் வதும் உண்டு. இந்தப் பாட்டு முழுவதிலுமே இது வராது, அது வராது என்று சொல்கிறார். வேந்தர் அச்சம் போகும், எமனுடைய அச்சம் போகும், நரகக் குழி அச்சம் போகும், துட்ட நோய் அச்சம் போகும், விலங்குகளின் அச்சம் போகும் என்று ஐந்து அச்சத்தைச் சொல்கிறார். இவை போகும் என்பதைச் சொன்னவர் இன்னது வரும் என்று சொல்லவில்லை.

இருள் நிரம்பிய ஓரிடத்தில் இருக்கிறவனுக்கு இருள் போய் விடும் என்று சொன்னாலே போதுமானது. ஒளி வரும் என்பது அதற்குள் அடங்கிக் கிடக்கிறது. பசித்தவன் ஒருவனைப் பார்த்து உன் பசியைப் போக்குகிறேன் என்றால், சோறு தருகிறேன் என்பதுதான் பொருள். அப்படி அச்சம் நீங்கும் என்றால், அதி லிருந்து அச்சம் இல்லாத அநுபூதி கிடைக்கும் என்ற குறிப்புப் பொருளை நாம் தெரிந்துகொள்ள வேண்டும். உலக வாழ்வில் துன்புறுகிற மக்களுக்கு முதலில் துன்ப நீக்கம் வேண்டும். பின்பு இன்ப ஆக்கம் வேண்டும். துன்புறுகிறவர்களே மிகுதியாக இருக்கிற உலகத்தில், ''உனக்குத் துன்பம் போய்விடும்'' என்று சொல்ல வேண்டியதுதானே அவசியம்? இரக்கம் உடையவர்கள் முதலில் அதைத்தான் சொல்வார்கள்.

அபய வரதம்

ஆண்டவன் திருக்கரங்களில் இரண்டில் ஒன்று அபயத் தையும் மற்றொன்று வரதத்தையும் காட்டுகின்றன. வலக்கை அபயத்தையும், இடக்கை வரதத்தையும் காட்டுகின்றன. அபயம் என்பது அஞ்சேல் என்ற குறிப்புடையது; வரதம் என்பது என் திருவடியை அடைந்தால் அருள் பெறலாம் என்று காட்டுவது. அருள்தான் முக்கியம். ஆனால் மக்களுக்கு முதலில் அச்சம் போக வேண்டும். பின்புதான் அருளினால் பயன் உண்டாகும். வயிற்று வலிக்காரனுக்குச் சோற்றைக் கொடுத்தால் பயன் இல்லை. முதலில் வயிற்று வலியைத் தீர்த்துப் பின்பே உணவை அளிக்க வேண்டும். அச்சம் உடையவனுக்கு அரிய பொருள் கிடைத்தால்

அதன் பெருமை தெரியாமல் உதறித் தள்ளி விடுவான். அது குறித்தே முதலில் நாம் காண வலக்கையினால் அஞ்சேல் என்பதைக் காட்டுகிறான் இறைவன். வலக்கைதானே சிறந்த கை? அந்தக் கையை முதலில் பார்க்க வேண்டும். அதைப் பார்த்து அவனை அணுகினால் நம்முடைய அச்சத்தை அவன் முதலில் போக்கிவிட்டுப் பின்பு நாம் இன்பம் அடைகிற இடம் இங்கே இருக்கிறது என்பதைக் காட்டுவான். ஆண்டவனுடைய இடக்கை அவன் திருவடியைச் சுட்டிக்காட்டி, அதை அடைந்தவருக்கு அருள் செய்யும். அருள் செய்வது இடத் திருக்கரம். இடத் திருக்கரத்துக்கு முன்பே துன்பத்தினை நீக்கி முதலில் பயன் தருவது அபயம் காட்டும் திருக்கரம்.

இந்தப் பாட்டு நமக்கு அபயம் அளிக்கிறது. அஞ்சாமையைத் தருகிற கந்தப் பெருமானுக்குரிய அலங்காரமாகிய இந்த நூலைப் படிக்கிறவர்கள் அபயத்தைப் பெறுவார்கள். அதற்கு அடுத்தபடி அவர்களுக்கு வரதமும் கிடைக்கும் என்பதைக் குறிப்பால் பெறலாம்.

உண்மை நிகழ்ச்சி

இங்கே என்னுடைய சொந்த அநுபவம் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தப் பாட்டின் கடைசியில் உள்ள,

கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும்

என்பதற்கு விளக்கமாக அந்த நிகழ்ச்சி அமையும் என்று நினைக்கிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்னால் நான் இலங்கைக்குச் சென்றிருந்தேன். பலமுறை அந்த நாட்டுக்குப் போயிருக்கிறேன். இந்த முறை வேலணை என்ற இடத்தில் திருமுறை மகாநாடு நடந்தது; அதில் கலந்துகொள்ளப் போயிருந்தேன். பெரிய கூட்டம். வேலணை என்பது இலங்கையின் வடபகுதியாகிய யாழ்ப்பாணத்தில் இருப்பது. யாழ்பாணத்திலும், கீழ்மாகாண மாகிய மட்டக்களப்பிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள். இலங்கைத் தமிழர்களுக்குத் தமிழ் இலக்கியங்களிலும், திருமுறைகளிலும், இலக்கியச் சொற்பொழிவுகளைக் கேட்பதிலும் மிகுந்த ஆர்வம் உண்டு. திருமுறை மகாநாடு நடந்தபோது இலங்கை முழுவதிலு

மிருந்து பல அன்பர்கள் வந்து கலந்து கொண்டார்கள். மட்டக் களப்பில் உள்ள தமிழர்களும் வந்து விழாவில் நிகழ்ந்த சொற் பொழிவுகளைக் கேட்டு இன்புற்றார்கள்.

இலங்கைக்குச் செல்கிறவர்கள் பெரும்பாலும் யாழ்ப் பாணத்தில் பல சொற்பொழிவுகளை நிகழ்த்திவிட்டு இலங்கையின் தலைநகராகிய கொழும்புக்குச் சென்று வந்துவிடுவது வழக்கம். கிழக்குப் பகுதியில் உள்ள மட்டக் களப்புக்குப் போய் அங்குள்ள தமிழர்களைக் கண்டு சொற்பொழிவு ஆற்றி வருவது அரிது. ஆகையால் அங்குள்ள தமிழர்களுக்குக் கொஞ்சம் ஏக்கம் இருக் கும். மட்டக்களப்பாகிய கிழக்கு மாகாணத்தில்தான் திருக்கோண மலை என்ற பாடல் பெற்ற சிவத்தலம் இருக்கிறது.

திருமுறை விழா நடந்து கொண்டிருந்தபோது மட்டக் களப்பிலிருந்து வந்த தமிழர்கள் என்னை அணுகி, ''விழா முடிந்தவுடன் நீங்கள் எங்கள் ஊருக்கு வரவேண்டும்; வந்து சொற்பொழிவு ஆற்ற வேண்டும். அங்கே பாடும் மீன்கள் உள்ள வாவி இருக்கிறது'' என்றார்கள். நான் வருவதாக ஒப்புக் கொண்டேன். மட்டக்களப்பை முன்னாலே நான் பார்த்தது இல்லை. ஆதலால் அந்த இடத்தைப் பார்க்கும் பயனும் நமக்குக் கிடைக்கும் என்ற எண்ணத்தில் ஒப்புக்கொண்டேன்.

வேலணையில் திருமுறை விழா முடிந்த பிறகு ஒருநாள் புறப்படுவது என்று திட்டமாயிற்று. அன்று அமாவாசை. எனக்கு மிகவும் வேண்டியவரும் என்னுடைய இளைய சகோதரர்போல் இருப்பவரும் ஆகிய இராசேந்திர குருக்கள் என்பவர் யாழ்ப் பாண நகரத்திற்கு அருகில் நீர்வேலி என்ற ஊரில் வாழ்கிறார். எனக்குச் சொந்தமான வீடு ஒன்று அங்கே இருப்பது போலவே நான் கருதுகிறேன். அவரும் அவரது குடும்பத்தினரும் என்னை யும் தம் குடும்பத்தில் ஒருவனாக எண்ணி உபசரிக்கும் பேரன்பு உடையவர்கள். அமாவாசை அன்று அவர் வீடு சென்று நீராடித் தர்ப்பணம் செய்து உணவு கொண்டு அங்கிருந்து மட்டக் களப்புக்குக் காரில் புறப்படலாம் என்று நாங்கள் முடிவு செய்தோம். எங்களுடைய காரியாலயத்திலிருந்து இலங்கைக்கு ஓர் அன்பர் வந்திருந்தார். அவரையும் துணையாக அழைத்துக் கொண்டு போவதாக உத்தேசம் இருந்தது. குறிப்பிட்ட நாளில் உணவு

கொள்வதற்கு ஒரு மணி ஆயிற்று. அப்பால் மட்டக்களப்பு அன்பர்களும், நானும், என்னுடைய காரியாலய அன்பரும் ஒரு காரில் புறப்பட்டோம். எங்களுடன் திருவாளர் பொ. கிருஷ்ண பிள்ளை என்ற தமிழ்ப்புலவரும் வந்தார். அவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்.

பல ஊர்களைக் கடந்து பொலன்னருவா என்ற ஊருக்கு வந்து சேர்ந்தோம். பழங்காலத்தில் அரசர்கள் ஆண்ட இடம் அது. பல அருமையான சின்னங்களை இன்றும் அந்த நகரில் பாது காத்து வருகிறார்கள். அங்கே நாங்கள் வரும்போது மாலை நேரம் ஆகிவிட்டது. கதிரவன் மேல் திசையில் மறைந்தான். அப்போது கார் ஓட்டியவர் ஒன்று சொன்னார்; ''இங்கே தங்கி உணவு கொண்டு இரவு இங்கேயே உறங்கிவிடலாம். மிக விடியற் காலையில் எழுந்திருந்து இங்கேயிருந்து புறப்பட்டுப் போகலாம். இன்னும் நூறு மைல்களாவது போகவேண்டியிருக்கும்'' என்று சொன்னார். என்னுடன் வந்தவர்கள் அதற்கு இசையவில்லை. ''மட்டக் களப்பில் உள்ள நண்பர்கள், இவர்கள் வருவார்களோ, வரமாட்டார்களோ என்ற ஐயப்பாட்டில் இருக்கிறார்கள். அவர்களது ஆவல் கட்டுக்கடங்காமல் இருக்கும். இங்கே தங்காமல் எப்படியாவது அங்கே போய்விட்டால் ஒரேயடியாக இளைப்பாறிக் கொள்ளலாம்'' என்று வற்புறுத்தினார்கள். அது வும் சரி என்று நாங்கள் அங்கிருந்து புறப்பட்டோம்.

நாங்கள் உரையாடிக் கொண்டே போனோம். எங்களுடன் வந்த பண்டித கிருஷ்ணபிள்ளை நன்றாகப் படித்தவர். சிறந்த ரசிகர். அவர் பலவற்றைச் சொல்ல, நானும் தமிழ் சம்பந்தமான பல கருத்துக்களை சொல்லிக் கொண்டு வந்தேன். பின்பு திருப்புகழ் சில பாடினேன். கந்தர் அலங்கார நுட்பங்களைச் சொல்லத் தொடங்கினேன். சில பாடல்களில் உள்ள நயங்களைச் சொன்னவன், பேச்சில் பொழுதைக் கழிப்பதை விட்டுவிட்டுக் கந்தர் அலங்காரப் பாடல்களையே சொல்லலானேன். அந்தப் பாடல்களை வாய்விட்டுப் பாடத் தொடங்கியவுடனே எனக்கு உணர்ச்சி விஞ்சியது. மற்றவர்கள் கேட்கிறார்களோ, இல்லையோ என்பதைக் கவனியாமல் நான் உணர்ச்சி வசப்பட்டுப் பாடிக் கொண்டே இருந்தேன். நல்ல வேளை! மற்றவர்கள் அமைதி யாகக் கேட்டு வந்தார்கள்.

நாங்கள் பெரிய காட்டுக்கு நடுவில் போய்க் கொண்டிருந் தோம். இலங்கையில் உள்ள காடுகள் மைல் கணக்கில் நீண்டு இருக்கும். இரண்டு பக்கமும் மரங்கள் ஓங்கி உயர்ந்து சுவர் எடுத்தது போல வளர்ந்திருக்கும். அவற்றிற்கிடையில் சாலை செல்லும். வளைவே இல்லாமல் ஒரே நேர்கோட்டைப் போல அந்தச் சாலை இருக்கும். காடுகளில் யானைகள் சஞ்சாரம் செய் வது உண்டு. அமாவாசை இருளில் அத்தகைய சாலை வழியே நாங்கள் போய்க் கொண்டிருந்தோம்.

கார் போய்க்கொண்டிருந்தது. வரவர அதன் வேகம் மிகுதி யாயிற்று. கார் ஓட்டி ஏதோ முணுமுணுத்துப் பேசினார். நான் அதைக் கவனிக்கவில்லை. நான் அலங்காரப் பாட்டில் கருத்தாக இருந்தேன். அருணகிரிநாத சுவாமிகளுடைய திருவடியில் நின்று கந்தர் அலங்காரத்தில் உள்ளத்தைப் பறிகொடுத்துப் பாடிக் கொண்டிருந்தேன். கார் தலை தெறிக்கும் வேகத்தில் போய்க் கொண்டிருந்தது. என்னுடைய நண்பர்கள் ஏதோ பேசிக் கொண்ட தாக நினைப்பு இருக்கிறது. ஆனால் இன்ன பேசினார்கள் என்று தெரியவில்லை. நான் பாடப் பாட அவர்கள் கேட்டுக் கொண் டிருந்தார்கள்.

நெடுந்தூரம் போன பிறகு ஓர் ஊர் வந்தது. எதிரே வேறு ஒருவர் கார் ஓட்டிக்கொண்டு வந்தார். அவரிடத்தில் எங்களுடைய கார் ஓட்டி ஏதோ சொன்னார். வந்தவர் காரை மேலே ஓட்டாமல் நிறுத்திவிட்டார்.

கடைசியில் கார் மட்டக்களப்பை அடைந்தது. அங்கே உள்ள நண்பர்கள் நாங்கள் தங்குவதற்கு ஓர் அழகான இடத்தை ஒழுங்கு பண்ணியிருந்தார்கள். அங்கே சென்று கை காலைச் சுத்தி செய்து கொண்டு திருநீற்றை எடுத்து இட்டுக்கொண்டேன். கந்தர் அலங் காரம் சொல்லி வந்தமையினால் எனக்கு ஒருவகையான கிளர்ச்சி உண்டாகி இருந்தது. முருகா என்று சொல்லி நெற்றி நிறைய நீற்றை இட்டுக் கொண்டேன். அப்போது கார் ஓட்டி பணிவுடன் வந்து என் காலில் நெடுஞ்சாண் கிடையாக வீழ்ந்து வணங்கி னார்; எழுந்து, ''திருநீறு கொடுங்கள்'' என்று கையை நீட்டினார்.

''நான் துறவி அல்லவே! மடாதிபதியும் அல்லவே! ஆதி சைவராக இருந்தாலும் திருநீறு கொடுக்கலாம். நான் உங்களைப்

போன்ற சாமான்ய ஆசாமி. விபூதியை நீங்களே எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று விபூதிப் பையை அவரிடம் நீட்டினேன்.

அவர், ''இல்லை, இல்லை; உங்கள் கையினால் கொடுங்கள். அப்போதுதான் எனக்குத் திருப்தியாக இருக்கும்'' என்று சொன்னார்.

''ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''உங்கள் கையினால் வாங்க வேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. காரணம் இருக்கிறது, சொல்கிறேன். முதலில் கொடுங்கள்'' என்றார்.

அவர் விருப்பப்படியே அவருக்குத் திருநீறு கொடுத்து, பையைச் சுருட்டி வைத்துக் கொண்டேன்; ''என்ன சொல்ல வருகிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''அது பெரிய விஷயம்; கேளுங்கள்'' என்று அவர் ஆரம்பித்தார்.

''நாம் காட்டின் வழியே வரும்போது கார் மிகமிக வேகமாக வந்தது என்பதை நீங்கள் அறிவீர்களா?'' என்று அவர் கேட்டார்.

''கார் எங்கும் நிற்காமல் நல்ல வேகத்துடன் வந்ததாகத்தான் எனக்குத் தோன்றியது'' என்றேன்.

''நீங்கள் சரியாகக் கவனிக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். நான் இவ்வளவு வேகத்தில் எப்போதும் காரைவிட்டது இல்லை. அவசியமும் நேர்ந்தது இல்லை. இன்றோ உயிருக்குப் பயந்து இத்தனை வேகத்தில் விட்டேன்'' என்று அவர் சொன்னார்.

அப்படிச் சான்னவுடன் தான் ஏதோ அபாய நிகழ்ச்சி நிகழ்ந்திருக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்குத் தோன்றியது. ''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?'' என்று கேட்டேன்.

''இரண்டு இடங்களில் வந்த ஆபத்தினின்றும் நீங்கி நாம் உயிர் பிழைத்தோம். அதற்குக் காரணம் நீங்களே'' என்று அவர் சொன்னார்.

அப்போதும் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. ''சொல்லுங்கள்'' என்றேன்.

''நான் பொலன்னருவாவிலேயே சொன்னேன்; அங்கே தங்கி விட்டு விடியற்காலையில் போகலாம் என்றேன். இவர்கள் கேட்க

வில்லை. நாம் வந்த இடம் அடர்ந்த காடு. யானைகள் உள்ள இடம். அநேகமாக இரவில் யாரும் அங்கே காரை ஓட்டிக் கொண்டு போகமாட்டார்கள். யானைகள் கூட்டம் கூட்டமாகச் செல்வதும் உண்டு; தனியாகச் செல்வதும் உண்டு. அவசியம் நேர்ந்து காரை ஓட்டிக்கொண்டு செல்லும்போது, யானைகள் வருவது தெரிந்தால் காரின் விளக்கை அணைத்துவிட்டுக் காரை அங்கேயே நிறுத்திவிடுவார்கள். யானைக்கூட்டம் போன பிறகு தான் காரை ஓட்டிச் செல்வது வழக்கம். இவற்றை எல்லாம் அறிந்தே இப்போது போகவேண்டாம் என்று சொன்னேன்.''

''நடந்ததைச் சொல்லுங்கள்'' என்று நான் தூண்டினேன்.

''அதைத்தான் சொல்ல வருகிறேன். கார் வந்து கொண்டிருந்தபோது பக்கத்தில் டமுக் என்று ஒரு யானை ஒரு மரத்தின் கிளையை ஒடித்தது எனக்குக் கேட்டது. யானைதான் கிளையை ஒடிக்கிறது என்பதை நான் அனுபவத்தால் உணர்ந்தேன். என்ன செய்வது என்று சற்றே தடுமாறினேன். வண்டியை நிறுத்திவிட்டு யானை போன பிறகு ஓட்டலாமா என்ற எண்ணம் வந்தது. நீங்கள் அப்போது முருகனைத் துதித்துப் பாடிக் கொண்டிருந்தீர்கள். அந்தப் பாட்டு என் காதில் விழுந்து கொண்டிருந்தது. எல்லாவற்றையும் மறந்து நீங்கள் பாடும்போது எனக்கும் கொஞ்சம் உணர்ச்சி உண்டாயிற்று. முருகன் காப்பாற்றுவான், காரைச் செலுத்தலாம் என்று எண்ணி வேகமாக விட்டேன். ஒருவாறு அந்த இடத்தைக் கடந்து அப்பால் வந்துவிட்டேன். ஆனால் பின்னால் வருகிற ஆபத்து அப்போது தெரியவில்லை.''

''என்ன, மறுபடியும் ஆபத்தா?'' என்று நான் கேட்டேன்.

''ஆம். இது முன்னதைவிட மிகவும் கடுமையான ஆபத்து. ஆணும் பெண்ணுமாகிய இரண்டு யானைகள் சேர்ந்திருந்தால் அதைக் கலைக்கிறவனுக்கு உண்டாகும் ஆபத்தைச் சொல்ல முடியாது. அப்படி இரண்டு யானைகள் சாலைக்கு அருகில் மரத்துக்குப் பின்னாலே நின்று கொண்டிருந்ததை நான் வாசனையால் உணர்ந்தேன். இதுவும் எங்களுக்கு அநுபவம். இந்த முறை நிச்சயம் நம்முடைய காருக்கு ஆபத்து என்று எண்ணினேன். யானை தன்னுடைய காலால் பந்தைத் தள்ளுவதுபோலக் காரை உருட்டிவிடும். கார் வேகத்தைவிட உங்கள் பாட்டு வேகம்

மிகுதியாக இருந்தது. ஆண்டவன் உங்கள் வாயிலாக அப்போதும் எனக்குத் தைரியத்தைக் கொடுத்தான். என் உள்ளம் நடுங்கினாலும் கை நடுங்கவில்லை. இறுகச் சக்கரத்தைப் பிடித்தேன். உங்கள் பாட்டுக் காது வழியாகப் புகுந்து தைரியத்தை ஊட்டியது. எப்படியாவது இதைத் தாண்டிவிட வேண்டுமென்ற எண்ணத்தில், ஓட்ட முடியாத வேகத்தில் காரை ஓட்டினேன். நல்ல வேளையாக அக்கண்டத்தையும் தாண்டிவிட்டோம்.''

''ஏதோ ஓரிடத்தில் வேறு யாரிடமோ பேசினீர்களே!'' என்று கேட்டேன்.

''எதிரே ஒருவர் காரில் வந்தார். போகிற வழியில் யானை இருக்கிறது என்று எச்சரிக்கை செய்தேன்.''

''நீங்கள் ஏதோ அலியா என்றல்லவா சொன்னீர்கள்?'' என்று கேட்டேன்.

''சிங்களத்தில் அலியா என்றால் யானை என்று பொருள். இப்படி நம்முடைய பயணத்தில் உங்களால், உங்களுடைய பக்திச் சிறப்பினால், எனக்குத் தைரியம் உண்டாயிற்று. நாம் பிழைத்தோம்'' என்று சொல்லி முடித்தார் கார் ஓட்டி.

அவர் சொன்னதைக் கேட்டவுடன் என்னால் பேச முடியவில்லை. என் கண்களில் நீர் முட்டியது. தொண்டை அடைத்துக் கொண்டது. என்னுடைய உள்ளம் அருணகிரி நாதப் பெருமானுடைய பரம உபகாரத்தை எண்ணி உருகியது. உடனே பேச வேண்டுமென்று எண்ணியும் என்னால் பேச முடியவில்லை. சிறிது நேரம் கழித்துப் பேசினேன்; ''ஐயா, உங்களால் எனக்கும் அருணகிரிநாதப் பெருமானுடைய திருவாக்கின் சிறப்புப் புலனாயிற்று. கந்தர் அலங்காரத்தின் பயனைச் சொல்லும்போது,

கலங்கார் புலிக்கும் கரடிக்கும் யானைக்கும் கந்தன் நன்னூல்
அலங்காரம் நூற்றுள் ஒருகவி தான்கற் றறிந்தவரே

என்று சொல்லியிருக்கிறார். அதை வெறும் சொல்லளவில் நான் படித்துக் கொண்டிருந்தேன். ஆனால் அது எத்தனை பொருளுடையது என்பதை உங்கள் வாயிலாக இன்று அறிந்தேன். முருகனுடைய திருவருள் இன்று எனக்கு இந்த உரையை உணர்த்தியது. என்றைக்கும் இதை நான் மறக்கமாட்டேன்'' என்று சொன்னேன்.

வாழ்வில் அமையும் பயன்

இந்த அற்புதமான நிகழ்ச்சி அருணகிரிநாதப் பெருமான் பாடிய இந்தப் பாடலுக்கு ஒரு நல்ல விளக்கத்தைத் தந்தது என்று நான் சொல்வதைப் படிக்கிற அன்பர்கள் ஒப்புக்கொள்வார்கள் என்றே நினைக்கிறேன். இது கட்டுக்கதை அல்ல. அநுபவத்தில் நான் கண்டது. என்னுடன் வந்த அன்பர்களும் இதை உணர் வார்கள்.

தெய்வத் தன்மை நிறைந்த பெரியவர்களுடைய திரு வாக்கில் சொல்லுக்குக் காணுகிற பொருளைவிட அநுபவத்தில் காணுகிற பொருள்தான் சிறந்தது. மற்றவர்களின் பாடல்கள் எல்லாம் சொல்லுக்குரிய பொருளோடு அமைந்துவிடும். இன்னும் சற்றுச் சிறப்பாக நின்றால் அதற்குமேலே சற்று உணர்ச்சியைத் தரும். பின்னும் சென்று வாழ்க்கையில் சீரிய பயனைக் கொடுக்க வேண்டு மென்றால் அந்தச் சொல் மிகச் சிறப்பாக இருக்கவேண்டும். அப்போது அதற்குச் சொல் என்ற பெயர் இல்லை. அதுதான் மந்திரம். பாரதியார் கூட,

"மந்திரம்போல் வேண்டுமடா சொல்லின்பம்"

என்று சொல்லி இருக்கிறார் அல்லவா?

மந்திரம் என்ற சொல்லுக்குத் தன்னை நினைப்பாருடைய துன்பத்தைப் போக்குவது என்பது பொருள். இலக்கிய இன்பத் தோடு மாத்திரம் நில்லாமல், பக்தி உணர்ச்சியை வழங்குவதோடு அமையாமல், சிறந்த வள வாழ்க்கையையும் அருளாளர்களுடைய திருவாக்கு நமக்குக் கொடுக்கும் என்பதைத் திருமுறைகளைப் பாராயணம் செய்த பல பெருமக்கள் உணர்வார்கள். திருமுறை அருளிய அருளாளர்களைப் போலவே கந்தர் அலங்காரத்தை நமக்கு வழங்கிய அருணகிரிநாதப் பெருமானும் சிறந்த அவதார புருஷர். ஆகையால் அவருடைய திருவாக்கும் சொல் கடந்து, பொருள் கடந்து, உணர்ச்சி கடந்து, வாழ்க்கையில் நற்பயனைத் தருவதாக அமைந்திருக்கிறது. ஆகவே, அவர் பாடுகின்ற இந்த பயன், சொல்லளவில் நில்லாமல் நூற்றுக்கு நூறு உண்மை நிகழ்ச்சியாக அநுபவத்தில் காண்பதற்குரியது.

★

சலம்காணும் வேந்தா தமக்கும்அஞ்
சார்;யமன் சண்டைக்கு அஞ்சார்;
துலங்கா நரகக் குழிஅணு
கார்;துட்ட நோய்அணுகார்;
கலங்கார் புலிக்கும் கரடிக்கும்
யானைக்கும்; கந்தன்நன்னூல்
அலங்காரம் நூற்றுள் ஒருகவி
தான்கற் றறிந்தவரே.

[தமக்குள்ளே பகையை உண்டாக்கும் கொடுங்கோல் மன்னர்களுக்கும் அஞ்சமாட்டார்கள்; யமன் மரண காலத்தில் வந்து துன்புறுத்தும் சண்டைக்கும் அஞ்சமாட்டார்கள்; ஒளியற்ற நரகமென்ற துன்பக்குழியின் பக்கத்தில்கூடப் போகமாட்டார்கள்; தீர்வதற்கரிய கொடிய நோயை அடையமாட்டார்கள்; புலி, கரடி, யானை இவற்றுக்கும் கலங்க மாட்டார்கள்; கந்தனைப்பற்றிய நல்ல நூலாகிய இந்த அலங்காரத்தில் உள்ள நூறு கவிகளுக்குள் ஒரு கவியையேனும் கற்று அதன் வழி நிற்க அறிந்தவர்கள்.


சலம் – பகை. தமக்கும் என்றது உயர்வு சிறப்பும்மை, வேந்தருக்கே அஞ்சார் என்றால் மற்றவர்களுக்கு அஞ்சாமை சொல்லவேண்டியதில்லை. துலங்கா – ஒளியற்ற; துலக்கம் – ஒளி. நரகக்குழி: ''எரிவாய் நரகக் குழியும்'' என்று முன்பும் ஒரு பாட்டில் கூறினார். தான்: அசை.

அறிந்தவர் அஞ்சார், அஞ்சார், அணுகார், கலங்கார் என்று முடியும்.]

பிறருக்கு அச்சத்தை உண்டாக்கும் எதுவும் முருகனுடைய அடியார்களுக்கு அச்சம் விளைவிக்க முடியாது என்பது இதன் கருத்து.

இந்தப் பாடலோடு கந்தர் அலங்காரம் நிறைவேறுகிறது; பயனுள்ள நூலாக நிறைவேறுகிறது. நன்றாகத் தழைத்து வளர்ந்த பழமரத்தின் உச்சியில் கனி கனிந்து இலங்குவதைப் போல இந்த அருள் நூலில் முடிவில் நம்முடைய அச்சத்தைப் போக்குவதாகிய பயனைத் தரும் இப்பாடல் அமைந்திருக்கிறது.

இப்படிச் சொல்வதற்கு அருணகிரியாருடைய உள்ளத்தில் எத்தனை உறுதிப்பாடு இருக்க வேண்டும்! முருகன் நிச்சயமாக அருள் செய்வான் என்ற துணிவில் எழுந்த பாடல் இது. நமக்கும் அந்தத் துணிவு வர வேண்டும். ''துணிந்தவர் ஈசன் துறக்கமது ஆள்வார்'' என்பது திருமந்திரம்.



கி.வா.ஜ. அவர்களுக்கு சிறு வயதிலேயே தமிழ் இலக்கியங்கள் மீது பற்று ஏற்பட்டது. டாக்டர் உ.வே. சுவாமிநாதையர் அவர்களுயை தலை மாணாக்கராக இருந்து தமிழ் பயின்று, அவர்களது அருந்தமிழ் பணிக்கும் துணை நின்று, 'கலைமகள்' மாதப் பத்திரிகையின் ஆசிரியராக ஐம்பதாண்டுகளுக்கு மேல் பணி யாற்றியுள்ளார்.

தமிழ் ஆராய்ச்சி, இலக்கியம், பக்தி இலக்கியங்கள், கவிதைகள், நாடோடிப் பாடல்கள், பழமொழிகள் என இவரே எழுதியும், தொகுத்தும் அளித்துள்ள நூல்கள் இருநூற்றுக்கும் மேற்பட்டனவாகும்.

குறிப்பாக, இலக்கணத்துக்கு விளக்கம் தருவதில் வல்லவர். சிலேடையாய்ப் பேசுவதில் இவருக்கு நிகர் இவரே.

எந்த இலக்கிய நூலிலே சந்தேகம் ஏற்படினும் உடனடியாக விளக்கம் கி.வா.ஜ. அவர்களிடமிருந்து கிடைக்கும் என்பதைத் தமிழ் அறிஞர்கள் பலரும் அறிவர்.

இவர், பல காலமாக உள்ள ஐயங்களைப் போக்குகின்ற வகையில், 'கலைமகள்' மாத இதழில் பதிலளித்து வந்தார். இவை என்றென்றும் நமக்குப் பயன் விளைக்கக் கூடும்.